இலங்கை மத்திய வங்கி

ஒத்தோபர் 2021

# அண்மைக்கால பொருளாதார அபிவிருத்திகள்

## 2021இன் முக்கிய பண்புகளும் 2022இற்கான வாய்ப்புக்களும்



# அண்மைக்கால பொருளாதார அபிவிருத்திகள்

## 2021இன் முக்கிய பண்புகளும் 2022இற்கான வாய்ப்புக்களும்

இலங்கை மத்திய வங்கி
ஒத்தோபர் 2021

இலங்கை மத்திய வங்கியினால் வெளியிடப்பட்டது
30, சனாதிபதி மாவத்தை
கொழும்பு 01
இலங்கை.

எம்.டி. குணசேன பிறின்டேர்ஸ் (பிறைவேற்) லிமிடெட்டினால் அச்சிடப்பட்டது

ISBN 978 - 624 - 5917 - 04 - 4

# முதன்மைப் பொருளாதாரக் குறிகாட்டிகள்

## முதன்மைப் பொருளாதாரக் குறிகாட்டிகள்

| குறிகாட்டி | 2017 | 2018 | 2019 | 2020 (அ) | முதலரை (அ) 2020 | முதலரை (அ) 2021 |
|---|---|---|---|---|---|---|
| **குடித்தொகை** | | | | | | |
| நடுவாண்டு குடித்தொகை ('000 ஆட்கள்) (ஆ)(இ) | 21,444 (அ) | 21,670 (அ) | 21,803 (அ) | 21,919 | - | - |
| நடுவாண்டு குடித்தொகை வளர்ச்சி (%) (ஆ) | 1.1 (அ) | 1.1 (அ) | 0.6 (அ) | 0.5 | - | - |
| குடித்தொகை அடர்த்தி (ச.கீ.மீற்றருக்கு ஆட்கள்) (ஆ) | 342 (அ) | 346 (அ) | 348 (அ) | 350 | - | - |
| தொழிற்படை ('000 ஆட்கள்) (ஈ) | 8,567 | 8,388 | 8,592 | 8,467 | 8,469 | 8,594 |
| தொழிற்படை பங்களிப்பு வீதம் (%) (ஈ) | 54.1 | 51.8 | 52.3 | 50.6 | 50.6 | 50.4 |
| தொழிலற்றோர் வீதம் (தொழிற்படையின் சதவீதமாக) (ஈ) | 4.2 | 4.4 | 4.8 | 5.5 | 5.6 | 5.4 |
| **வெளியீடு (உ)** | | | | | | |
| நடைமுறைச் சந்தை விலைகளில் மொ.உ.உ. (ரூ. பில்லியன்) | 13,328 | 14,291 (ஊ) | 15,013 (அ) (ஊ) | 14,973 | 6,851 (ஊ) | 7,800 |
| நடைமுறைச் சந்தை விலைகளில் மொ.தே.வ. (ரூ. பில்லியன்) | 12,975 | 13,901 (ஊ) | 14,581 (அ) (ஊ) | 14,568 | 6,641 (ஊ) | 7,604 |
| நடைமுறைச் சந்தை விலைகளில் மொ.உ.உ. (ஐ.அ.டொ. பில்லியன்) | 87.4 | 87.9 (ஊ) | 84.0 (அ) (ஊ) | 80.7 | 36.9 (ஊ) | 39.7 |
| நடைமுறைச் சந்தை விலைகளில் மொ.தே.வ. (ஐ.அ.டொ. பில்லியன்) | 85.1 | 85.5 (ஊ) | 81.6 (அ) (ஊ) | 78.5 | 35.7 (ஊ) | 38.7 |
| நடைமுறைச் சந்தை விலைகளில் தலைக்குரிய மொ.உ.உ. (ரூ.) (எ) | 621,531 | 659,479 (ஊ) | 688,573 (அ) (ஊ) | 683,106 | - | - |
| நடைமுறைச் சந்தை விலைகளில் தலைக்குரிய மொ.தே.வ. (ரூ.) (எ) | 605,076 | 641,500 (ஊ) | 668,748 (அ) (ஊ) | 664,620 | - | - |
| நடைமுறைச் சந்தை விலைகளில் தலைக்குரிய மொ.உ.உ. (ஐ.அ.டொ.) (எ) | 4,077 | 4,057 (ஊ) | 3,852 (அ) (ஊ) | 3,682 | - | - |
| நடைமுறைச் சந்தை விலைகளில் தலைக்குரிய மொ.தே.வ. (ஐ.அ.டொ.) (எ) | 3,969 | 3,947 (ஊ) | 3,741 (அ) (ஊ) | 3,582 | - | - |
| **உண்மை வெளியீடு (சதவீத மாற்றம்) (உ)** | | | | | | |
| மொத்த உள்நாட்டு உற்பத்தி | 3.6 | 3.3 (ஊ) | 2.3 (அ)(ஊ) | -3.6 | -9.1 (ஊ) | 8.0 |
| மொ.உ.உற்பத்தியின் முக்கிய பொருளாதாரச் செயற்பாடுகள் | | | | | | |
| வேளாண்மை | -0.4 | 5.8 (ஊ) | 1.0 (அ)(ஊ) | -2.4 | -7.3 (ஊ) | 7.1 |
| கைத்தொழில் | 4.7 | 1.3 (ஊ) | 2.6 (அ)(ஊ) | -6.9 | -14.6 (ஊ) | 12.1 |
| பணிகள் | 3.6 | 4.6 (ஊ) | 2.2 (அ)(ஊ) | -1.5 | -5.2 (ஊ) | 5.1 |
| மொத்த தேசிய வருமானம் | 3.6 | 3.2 (ஊ) | 2.1 (அ)(ஊ) | -5.0 | -10.1 (ஊ) | 9.5 |
| **கூட்டுக் கேள்வியும் சேமிப்புக்களும் (மொ.உ.உ. இன் சதவீதமாக) (உ)** | | | | | | |
| நுகர்வு | 75.6 | 77.6 (ஊ) | 79.3 (அ)(ஊ) | 81.1 | 83.0 (ஊ) | 84.9 |
| தனியார் | 67.1 | 68.4 (ஊ) | 69.8 (அ)(ஊ) | 70.7 | 72.2 (ஊ) | 74.8 |
| அரசு | 8.5 | 9.2 (ஊ) | 9.4 (அ)(ஊ) | 10.4 | 10.8 (ஊ) | 10.1 |
| முதலீடு | 31.6 | 29.9 (ஊ) | 26.8 (அ)(ஊ) | 25.2 | 23.9 (ஊ) | 24.5 |
| பொருட்கள் மற்றும் பணிகளின் தேறிய ஏற்றுமதிகள் | -7.2 | -7.4 (ஊ) | -6.1 (அ)(ஊ) | -6.4 | -6.9 (ஊ) | -9.4 |
| பொருட்கள் மற்றும் பணிகளின் ஏற்றுமதிகள் | 21.8 | 23.0 (ஊ) | 23.1 (அ)(ஊ) | 16.6 | 17.3 (ஊ) | 18.2 |
| பொருட்கள் மற்றும் பணிகளின் இறக்குமதிகள் | 29.1 | 30.5 (ஊ) | 29.3 (அ)(ஊ) | 22.9 | 24.3 (ஊ) | 27.6 |
| உள்நாட்டுச் சேமிப்புக்கள் | 24.4 | 22.4 (ஊ) | 20.7 (அ)(ஊ) | 18.9 | 17.0 (ஊ) | 15.1 |
| வெளிநாட்டிலிருந்தான தேறிய முதலாந்தர மற்றும் இரண்டாந்தர வருமானம் | 4.6 | 4.3 (ஊ) | 4.0 (அ)(ஊ) | 5.0 | 3.9 (ஊ) | 5.3 |
| தேசிய சேமிப்புக்கள் | 29.0 | 26.7 (ஊ) | 24.7 (அ)(ஊ) | 23.9 | 20.9 (ஊ) | 20.3 |
| **விலைகளும் கூலிகளும் (சதவீத மாற்றம்)** | | | | | | |
| தேசிய நுகர்வோர் விலைச்சுட்டெண் (2013 = 100) - ஆண்டுச் சராசரி | 7.7 | 2.1 | 3.5 | 6.2 | 5.6 | 5.4 |
| தேசிய நுகர்வோர் விலைச்சுட்டெண் (2013 = 100) - ஆண்டுக்காண்டு (காலமுடிவில்) | 7.3 | 0.4 | 6.2 | 4.6 | 6.3 | 6.1 |
| கொழும்பு நுகர்வோர் விலைச்சுட்டெண் (2013 = 100) - ஆண்டுச் சராசரி | 6.6 | 4.3 | 4.3 | 4.6 | 4.7 | 4.1 |
| கொழும்பு நுகர்வோர் விலைச்சுட்டெண் (2013 = 100) - ஆண்டுக்காண்டு (காலமுடிவில்) | 7.1 | 2.8 | 4.8 | 4.2 | 3.9 | 5.2 |
| உற்பத்தியாளர் விலைச்சுட்டெண் (2013 நான்காம் காலாண்டு = 100) - ஆண்டுச் சராசரி | 17.0 | 6.3 | 2.9 | 5.8 | 3.8 | 7.8 |
| மொ.உ.உற்பத்திச் சுருக்கி (உ) | 7.3 | 3.8 (ஊ) | 2.7 (அ)(ஊ) | 3.4 | 2.5 (ஊ) | 5.5 |
| மொ.தே.வருமானச் சுருக்கி (உ) | 7.3 | 3.8 (ஊ) | 2.7 (அ)(ஊ) | 5.1 | 3.4 (ஊ) | 4.6 |
| அனைத்துக் கூலிநிர்ணய சபைகளின் வர்த்தகத்திலுள்ள தொழிலாளர்களுக்கான பெயரளவு கூலி வீதச் சுட்டெண் (1978 திசெ = 100) (ஏ) | 0.0 | 0.6 | 2.9 | 0.2 | 1.3 | 29.1 |
| அரசதுறை ஊழியர்களுக்கான பெயரளவு கூலி வீதச் சுட்டெண் (2016 = 100) (ஏ) | - | 0.2 | 4.7 | 9.2 | 10.6 | 2.8 |
| அரசதுறை ஊழியர்களுக்கான பெயரளவு கூலி வீதச் சுட்டெண் (2012 = 100) (ஏ)(ஐ) | 0.0 | 0.1 | 3.2 | - | - | - |
| முறைசாரா தனியார்துறை ஊழியர்களுக்கான பெயரளவு கூலி வீதச் சுட்டெண் (2012 = 100) (ஏ) | 9.5 | 13.2 | 6.2 | 3.3 | 4.0 | 4.1 |
| **வெளிநாட்டு வர்த்தகம்** | | | | | | |
| வர்த்தக நிலுவை (ஐ.அ.டொ. மில்லியன்) | -9,619 | -10,343 | -7,997 | -6,008 | -3,262 | -4,316 |
| ஏற்றுமதிகள் | 11,360 | 11,890 | 11,940 | 10,047 | 4,413 | 5,699 |
| இறக்குமதிகள் | 20,980 | 22,233 | 19,937 | 16,055 | 7,675 | 10,015 |
| வர்த்தக மாற்று விகிதம் (சதவீத மாற்றம்) | 1.2 | 0.02 | -1.6 | 2.5 | 4.7 | -8.0 |
| ஏற்றுமதி அலகுப் பெறுமதிச் சுட்டெண் (2010 = 100) (சதவீத மாற்றம்) | 2.4 | 4.2 | -6.3 | -6.8 | -3.7 | -0.8 |
| இறக்குமதி அலகுப் பெறுமதிச் சுட்டெண் (2010 = 100) (சதவீத மாற்றம்) | 1.2 | 4.1 | -4.8 | -9.1 | -8.0 | 7.9 |
| ஏற்றுமதி அளவுச் சுட்டெண் (2010 = 100) (சதவீத மாற்றம்) | 7.6 | 0.5 | 7.2 | -9.7 | -23.6 | 30.2 |
| இறக்குமதி அளவுச் சுட்டெண் (2010 = 100) (சதவீத மாற்றம்) | 8.1 | 1.8 | -5.8 | -11.4 | -13.1 | 21.0 |
| **வெளிநாட்டு நிதி (ஐ.அ.டொ. மில்லியன்)** | | | | | | |
| பணிகள் மற்றும் முதலாந்தர வருமானக் கணக்கு (தேறிய) | 984 | 1,381 | 388 (ஊ) | -1,282 | -372 | -408 |
| நடைமுறை தனியார் மாற்றல்கள் (தேறிய) | 6,316 | 6,155 | 5,757 | 6,194 | 2,573 | 3,184 |
| நடைமுறை அலுவல்சார் மாற்றல்கள் (தேறிய) | 11 | 8 | 9 | 13 | 7 | 3 |
| நடைமுறைக் கணக்கு நிலுவை | -2,309 | -2,799 | -1,843 (ஊ) | -1,083 | -1,054 | -1,536 |
| திரண்ட நிலுவை | 2,068 | -1,103 | 377 | -2,328 | -760 | -1,261 |
| நடைமுறைக் கணக்கு நிலுவை (மொ.உ.உ. இன் சதவீதமாக) (உ)(ஒ) | -2.6 | -3.2 | -2.2 | -1.3 | - | - |
| மொத்த வெளிநாட்டுச் சொத்துக்கள் (அதேயாண்டு இறக்குமதி மாதங்கள்) (ஓ) | 6.0 | 5.2 | 6.3 | 6.4 | 6.3 | 4.5 |
| மொத்த அலுவல்சார் ஒதுக்குகள் (அதேயாண்டு இறக்குமதி மாதங்கள்) | 4.6 | 3.7 | 4.6 | 4.2 | 4.5 | 2.6 |
| திரண்ட படுகடன் பணி விகிதம் | | | | | | |
| பொருட்கள் மற்றும் பணிகள் ஏற்றுமதியின் சதவீதமாக | 23.9 | 28.9 | 29.7 | 33.5 | 32.6 | 28.1 |
| நடைமுறைப் பெறுவனவுகளின் சதவீதமாக | 17.3 | 21.3 | 21.8 (ஊ) | 21.5 | 22.1 | 19.0 |
| மொத்த வெளிநாட்டுப் படுகடன் (மொ.உ.உ. இன் சதவீதமாக) (உ)(ஒ) | 59.0 | 59.5 (ஊ) | 65.3 (ஊ) | 60.9 | 62.7 | 60.4 |

(அ) தற்காலிகமானது
(ஆ) பதிவாளர் நாயகத் திணைக்களத்தினால் அறிவிக்கப்பட்டவாறு
(இ) குடித்தொகை மற்றும் வீடமைப்பு மதிப்பீடு - 2012இன் அடிப்படையிலானது
(ஈ) தொழிற்படையின் கணிப்பீட்டிற்கு 15 வயதும் அதற்கு மேற்பட்ட வயதுடைய குடியிருப்புக் குடித்தொகையும் கருத்திற் கொள்ளப்பட்டுள்ளது.
(உ) தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தின் மீள்தளப்படுத்தப்பட்ட மொ.உ.உ. மதிப்பீடுகள் (அடியாண்டு 2010) பயன்படுத்தப்பட்டுள்ளன
(ஊ) திருத்தப்பட்டது
(எ) அண்மைக்கால குடித்தொகைத் தரவுகளுடன் மதிப்பீடுகள் இற்றைப்படுத்தப்பட்டுள்ளன
(ஏ) ஆண்டுச் சராசரி சதவீத மாற்றம்
(ஐ) 2020 ஏப்ரலிலிருந்து முடிவுறுத்தப்பட்டது
(ஒ) ஐ.அ.டொலரிலான மொ.உ.உற்பத்தி மதிப்பீடுகளை அடிப்படையாகக் கொண்டது
(ஓ) வெளிநாட்டு நேரடி முதலீடுகள் மற்றும் வர்த்தகக் கொடுகடன் மற்றும் பெறப்பட்ட முற்பணங்களின் வடிவிலுள்ள வெளிநாட்டுச் சொத்துக்கள் நீங்கலாக

## முதன்மைப் பொருளாதாரக் குறிகாட்டிகள் (தொடர்ச்சி)

| குறிகாட்டி | 2017 | 2018 | 2019 | 2020 (அபி) | முதலரை (அ) 2020 | முதலரை (அ) 2021 |
|---|---|---|---|---|---|---|
| **செலாவணி வீதங்கள்** | | | | | | |
| ஆண்டுச் சராசரி | | | | | | |
| ரூ. / ஐ.அ.டொலர் | 152.46 | 162.54 | 178.78 | 185.52 | 185.68 | 196.45 |
| ரூ. / சி.எ.உ. (க) | 211.49 | 229.90 | 246.97 | 258.61 | 254.63 | 282.04 |
| பெயரளவுத் தாக்கமுள்ள செலாவணி வீதம் (2017 = 100) (24 - நாணயக் கூடை) (ங) | 100.00 | 94.05 | 88.17 | 85.93 | 86.73 | 78.81 |
| உண்மைத் தாக்கமுள்ள செலாவணி வீதம் (2017 = 100) (24 - நாணயக் கூடை) (ங)(ச) | 100.00 | 95.45 | 90.42 | 91.36 | 92.08 | 83.74 |
| ஆண்டு முடிவில் | | | | | | |
| ரூ. / ஐ.அ.டொலர் | 152.85 | 182.75 | 181.63 | 186.41 | 186.23 | 201.14 |
| ரூ. / சி.எ.உ. (க) | 217.69 | 253.51 | 251.17 | 268.48 | 256.20 | 286.91 |
| **அரச நிதி (மொ.உ.உற்பத்தியின் சதவீதமாக) (உ)(ஞ)(ட)** | | | | | | |
| அரசிறையும் கொடைகளும் | 13.8 | 13.5 | 12.6 | 9.2 | 4.4 | 4.3 |
| அரசிறை | 13.7 | 13.4 | 12.6 | 9.1 | 4.4 | 4.3 |
| *இதில் வரி அரசிறை* | 12.5 | 12.0 | 11.6 | 8.1 | 3.9 | 3.9 |
| கொடைகள் | 0.1 | 0.1 | 0.1 | 0.04 | 0.01 | ... |
| செலவினமும் தேறிய கடன்வழங்கலும் | 19.3 | 18.8 | 22.2 | 20.3 | 9.4 | 9.1 |
| மீண்டெழும் செலவினம் | 14.5 | 14.6 | 16.1 | 17.0 | 8.3 | 8.0 |
| மூலதனச் செலவினமும் தேறிய கடன்வழங்கலும் | 4.8 | 4.2 | 6.1 | 3.3 | 1.1 | 1.1 |
| நடைமுறைக் கணக்கு மீதி | -0.7 | -1.2 | -3.6 | -7.9 | -3.8 | -3.6 |
| ஆரம்ப மீதி | 0.02 | 0.6 | -3.6 | -4.6 | -1.7 | -1.7 |
| திரண்ட இறை மீதி | -5.5 | -5.3 | -9.6 | -11.1 | -4.9 | -4.7 |
| பற்றாகுறையை நிதியிடல் | 5.5 | 5.3 | 9.6 | 11.1 | 4.9 | 4.7 |
| வெளிநாடு | 3.3 | 2.3 | 3.6 | -0.6 | -1.0 | 0.1 |
| உள்நாடு | 2.2 | 3.1 | 6.0 | 11.7 | 5.9 | 4.6 |
| மத்திய அரச படுகடன் (ண) | 77.9 | 84.2 | 86.8 | 101.0 | - | - |
| வெளிநாடு | 35.4 | 41.7 | 41.3 | 40.4 | - | - |
| உள்நாடு (த) | 42.5 | 42.5 | 45.5 | 60.6 | - | - |
| **நாணயக் கூட்டுக்கள் (ஆண்டுக்காண்டு சதவீத மாற்றம்)** | | | | | | |
| ஒதுக்குப் பணம் | 9.8 | 2.3 | -3.0 | 3.4 | -0.6 | 22.6 |
| குறுகிய பணம் ($M_1$) | 2.1 | 4.7 | 4.2 | 36.0 | 24.7 | 29.1 |
| விரிந்த பணம் ($M_{2b}$) (ந) | 16.7 | 13.0 | 7.0 | 23.4 | 14.0 | 21.5 |
| வங்கித்தொழில் முறைமையின் தேறிய வெளிநாட்டுச் சொத்துக்கள் | 152.6 | -155.1 | 250.3 (ஊ) | -308.0 | -110.8 | -4,012.3 |
| வங்கித்தொழில் முறைமையின் தேறிய உள்நாட்டுச் சொத்துக்கள் | 9.8 | 16.3 | 4.6 (ஊ) | 27.8 | 15.9 | 27.1 |
| வங்கித்தொழில் முறைமையிலிருந்தான உள்நாட்டுக் கொடுகடன் | | | | | | |
| அரசு (தேறிய) | 10.0 | 16.1 | 11.1 (ஊ) | 62.7 | 34.9 | 44.3 |
| அரச கூட்டுத்தாபனங்கள்/அரசிற்குச் சொந்தமான வியாபார தொழில்முயற்சிகள் | 4.5 | 40.7 | 8.3 | 22.5 | 30.3 | 19.0 |
| தனியார்துறை | 14.7 | 15.9 | 4.2 (ஊ) | 6.5 | 4.2 | 12.9 |
| $M_{2b}$ இற்கான பணப் பெருக்கி (ஆண்டிறுதியில்) | 6.71 | 7.42 | 8.18 | 9.75 | 9.63 | 9.54 |
| $M_{2b}$ இன் சுழற்சி (ஆண்டுக்கான சராசரி) (உ) | 2.26 | 2.11 (ஊ) | 2.04 | 1.76 | - | - |
| **வட்டி வீதங்கள் (ஆண்டிறுதியில் ஆண்டொன்றிக்கு சதவீதம்)** | | | | | | |
| துணைநில் வைப்பு வசதி வீதம் (ப) | 7.25 | 8.00 | 7.00 | 4.50 | 5.50 | 4.50 |
| துணைநில் கடன்வழங்கல் வசதி வீதம் (ப) | 8.75 | 9.00 | 8.00 | 5.50 | 6.50 | 5.50 |
| வங்கி வீதம் (ம) | 15.00 | 15.00 | 15.00 | 8.50 | 9.50 | 8.50 |
| சட்ட வட்டி வீதம் / சந்தை வட்டி வீதம் (ய) | 7.06 | 9.08 | 11.50 | 11.64 | 11.64 | 10.12 |
| பணச் சந்தை வீதங்கள் | | | | | | |
| சராசரி நிறையேற்றப்பட்ட அழைப்புப் பண வீதம் | 8.15 | 8.95 | 7.45 | 4.55 | 5.52 | 4.93 |
| திறைசேரி உண்டியல் விளைவுகள் | | | | | | |
| 91-நாள் | 7.69 | 10.01 | 7.51 | 4.69 | 5.50 | 5.18 |
| 364-நாள் | 8.90 | 11.20 | 8.45 | 5.05 | 5.66 | 5.23 |
| வைப்பு வீதங்கள் | | | | | | |
| வர்த்தக வங்கிகளின் சராசரி நிறையேற்றப்பட்ட வைப்பு வீதம் | 9.07 | 8.81 | 8.20 | 5.80 | 7.38 | 4.87 |
| வர்த்தக வங்கிகளின் சராசரி நிறையேற்றப்பட்ட நிலையான வைப்பு வீதம் | 11.48 | 10.85 | 10.05 | 7.14 | 9.00 | 5.82 |
| வர்த்தக வங்கிகளின் சராசரி நிறையேற்றப்பட்ட புதிய வைப்பு வீதம் | 10.06 | 10.94 | 8.89 | 4.93 | 7.20 | 4.98 |
| வர்த்தக வங்கிகளின் சராசரி நிறையேற்றப்பட்ட புதிய நிலையான வைப்பு வீதம் | 10.65 | 11.27 | 9.17 | 5.08 | 7.37 | 5.10 |
| தேசிய சேமிப்பு வங்கியின் சேமிப்பு வீதம் | 4.00 | 4.00 | 4.00 | 3.50 | 4.00 | 3.50 |
| தேசிய சேமிப்பு வங்கியின் 12 மாத நிலையான வைப்பு வீதம் | 11.00 | 10.50 | 9.83 | 5.25 | 7.25 | 5.00 |
| கடன்வழங்கல் வீதங்கள் | | | | | | |
| வர்த்தக வங்கிகளின் சராசரி நிறையேற்றப்பட்ட முதன்மைக் கடன்வழங்கல் வீதம் - வாராந்தம் | 11.55 | 12.09 | 9.74 | 5.81 | 8.48 | 5.51 |
| வர்த்தக வங்கிகளின் சராசரி நிறையேற்றப்பட்ட கடன்வழங்கல் வீதம் | 13.88 | 14.40 | 13.59 | 10.29 | 12.64 | 9.50 |
| வர்த்தக வங்கிகளின் சராசரி நிறையேற்றப்பட்ட புதிய கடன்வழங்கல் வீதம் | 14.31 | 14.54 | 12.80 | 8.38 | 11.18 | 7.47 |
| **மூலதனச் சந்தை** | | | | | | |
| அனைத்துப் பங்கு விலைச்சுட்டெண் (1985 = 100) | 6,369.3 | 6,052.4 | 6,129.2 | 6,774.2 | 5,149.6 | 7,837.8 |
| எஸ் அன்ட் பீ எஸ் எல் 20 சுட்டெண் (2004 திசெ = 1,000) | 3,671.7 | 3,135.2 | 2,937.0 | 2,638.1 | 2,268.8 | 2,968.3 |
| வர்த்தகப்படுத்தப்பட்ட பங்குகளின் பெறுமதி (ரூ. மில்லியன்) | 220,591 | 200,069 | 171,408 | 396,882 | 104,405 | 460,947 |
| இலங்கையரல்லாதோரின் தேறிய கொள்வனவுகள் (ரூ. மில்லியன்) | 17,655 | -23,239 | -11,735 | -51,356 | -20,954 | -26,482 |
| சந்தை மூலதனமாக்கல் (ரூ. பில்லியன்) | 2,899.3 | 2,839.5 | 2,851.3 | 2,960.6 | 2,404.7 | 3,470.2 |

(க) பன்னாட்டு நாணய நிதியத்தின் அலகுக்கணக்கிற்கான சிறப்பு எடுப்பனவு உரிமை

(ங) செலவாணி வீதங்களானது சுட்டெண்களின் அடிப்படையில் வரைவிலக்கணப்படுத்தப்பட்டதனால் ஏனைய நாணயங்களுடன் ஒப்பிடும்போது ரூபாவின் பெறுமதி உயர்வு/ பெறுமதி தேய்வு என்பது பயனுறுதி வாய்ந்த செலாவணி வீதங்களின் சுட்டெண்களின் பெறுமதிகளின் உயர்ச்சி/ வீழ்ச்சியினைப் பிரதிபலிக்கின்றது.

(ச) உண்மைத்தாக்கமுள்ள செலாவணி வீதத்தைக் கணிப்பிடுவதற்காக கொ.நு.வி சுட்டெண் பயன்படுத்தப்பட்டது. உண்மைத்தாக்கமுள்ள செலாவணி வீதமானது கூடையில் உள்ளடக்கப்பட்ட நாணயங்களின் நாடுகளுடனான பணவீக்க வேறுபாடுகளை பெயரளவுத் தாக்கமுள்ள செலாவணி வீதத்தில் சீராக்குவதனூடாகக் கணிப்பிடப்பட்டுள்ளது.

(ஞ) 2021 மாச்சு 16இல் கிடைக்கக்கூடியதாகவிருந்த தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தினால் தயாரிக்கப்பட்ட 2018 மற்றும் 2019இற்கான திருத்தப்பட்ட மொ.உ.உ. இன் மதிப்பீடுகளை அடிப்படையாகக் கொண்டது

(ட) நிதி அமைச்சின்படி 2020இற்கான வரவு செலவுத் திட்டத்தில் அறிவிக்கப்பட்டவாறு 2019இன் சில இறைத்துறை புள்ளிவிபரங்கள் மீண்டும் எடுத்துரைக்கப்பட்டன.

(ண) 2014இல் பன்னாட்டு நாணய நிதியத்தால் வெளியிடப்பட்ட அரச நிதி புள்ளிவிபரவியல் கையேட்டிலுள்ள அரச படுகடன் புள்ளிவிபரங்களை தொகுப்பதற்கான வழிகாட்டுதல்களின்படி இலங்கை அரசாங்கத்தின் வெளிநின்ற இலங்கை அபிவிருத்தி முறிகள் மற்றும் வெளிநின்ற நாட்டிற்கான பன்னாட்டு முறிகளின் வதிவற்றோர் உடமைகள் வெளிநாட்டுப் படுகடனின் கீழ் வகைப்படுத்தப்பட்டதுடன் இலங்கை அரசாங்கத்தின் வெளிநின்ற இலங்கை அபிவிருத்தி முறிகள் மற்றும் வெளிநின்ற நாட்டிற்கான பன்னாட்டு முறிகளின் வதிவோர் உடமைகள் உள்நாட்டுப் படுகடனின் கீழ் வகைப்படுத்தப்பட்டுள்ளன.

(த) இலங்கை விமான சேவை மற்றும் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்கு வெளியிடப்பட்ட திறைசேரி முறிகளின் வெளிநின்ற மீதிகள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

(ந) 2015 இற்கான தரவுகளில் 2015 ஒத்தோபர் 01 இலிருந்து நடைமுறைக்கு வரும் வகையில் டிஎவ்சிசி வர்தன வங்கியுடன் ஒன்றிணைக்கப்பட்ட டிஎவ்சிசி வங்கி பிஎல்சி இன் சொத்துக்கள் பொறுப்புக்களை உள்ளடக்கியது.

(ப) 2014 சனவரி 02 இலிருந்து நடைமுறைக்கு வரும் வகையில் மீள் கொள்வனவு வீதம் மற்றும் நேர்மாற்று மீள் கொள்வனவு வீதம் என்பன முறையே துணைநில் வைப்பு வசதி வீதம் மற்றம் துணைநில் கடன் வழங்கல் வசதி வீதம் என மீள் பெயரிடப்பட்டன.

(ம) கடைசி கடன் வழங்குநனராக வங்கித்தொழில் நிறுவனங்களுக்கு மத்திய வங்கி முற்பணங்கள் வழங்கும் வீதம்.

(ய) சட்ட வீதமானது 1990ஆம் ஆண்டின் 06ஆம் இலக்க குடியியல் நடவடிக்கை முறைச் சட்டக்கோவை திருத்தச் சட்டத்தின் கீழ் வரைவிலக்கணப்படுத்தப்படுவதுடன் பணத்தொகையை மீட்டெடுப்பதற்கான எந்தவொரு சட்ட நடவடிக்கைகளுக்கும் இது பொருந்தும். சந்தை வீதமானது 1990ஆம் ஆண்டின் 02ஆம் இலக்க படுகடன் அறவீட்டு (சிறப்பு ஏற்பாடுகள்) சட்டத்தின் கீழ் வரைவிலக்கணப்படுத்தப்படுவதுடன் இணங்கப்பட்ட வட்டி வீதம் அல்லாத வர்த்தக கொடுக்கல்வாங்கல்களிலிருந்து எழும் ரூ.150,000 இற்கு அதிகமான படுகடனை மீட்டெடுப்பதற்காக கடன் வழங்கும் நிறுவனங்களால் நிறுவப்பட்ட எந்தவொரு சட்ட நடவடிக்கைகளுக்கும் இது பொருந்தும். மத்திய வங்கியின் நாணயச் சபை சட்டவீதம் மற்றும் சந்தை வீதத்தை தீர்மானிக்கின்றதுடன் அரசாங்க வர்த்தமானியில் ஒவ்வொரு ஆண்டுக்கானதும் திசெம்பர் மாதத்தில் வெளியிடுகின்றதுடன் எதிர்வரும் ஆண்டிற்கும் இது பிரயோகிக்கப்படும்.

# உள்ளடக்கம்

பக்கங்கள்

அத்தியாயங்கள்



| | | |
|---|---|---|
| 1. | பொருளாதாரத்தின் செயலாற்றம் மற்றும் தோற்றப்பாடு | 1 |
| 2. | தேசிய வெளியீடு, செலவினம் மற்றும் தொழில்நிலை | 21 |
| 3. | பொருளாதார மற்றும் சமூக உட்கட்டமைப்பு | 37 |
| 4. | விலைகள் மற்றும் கூலிகள் | 49 |
| 5. | வெளிநாட்டுத்துறை அபிவிருத்திகள் | 55 |
| 6. | இறைக்கொள்கையும் அரச நிதியும் | 65 |
| 7. | நாணயக்கொள்கை, வட்டி வீதங்கள், பணம் மற்றும் கொடுகடன் | 73 |
| 8. | நிதியியல்துறை செயலாற்றமும் முறைமை உறுதிப்பாடும் | 83 |
| | முக்கிய பொருளாதாரக் கொள்கை வழிமுறைகள் | 99 |
| | புள்ளிவிபரப் பின்னிணைப்பு | 129 |


1

# பொருளாதாரத்தின் செயலாற்றம் மற்றும் தோற்றப்பாடு

*இலங்கைப் பொருளாதாரம் 2020இன் கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்றினால் தூண்டப்பட்ட சுருக்கத்திலிருந்து வலுவாக மீளெழுச்சியடைந்திருக்கின்றது. பொருளாதாரத்தின் முக்கிய துறைகளின் பரந்துபட்ட மீட்சியினைப் பதிவுசெய்து உண்மைப் பொருளாதாரம் 2021இன் முதலரைப்பகுதியில் 8.0 சதவீதத்தினால் (ஆண்டுக்காண்டு) வளர்ச்சியடைந்தது. இம்மீட்சியானது அரசாங்கத்தினதும் மத்திய வங்கியினதும் பரந்தளவிலான வியாபாரங்களிற்கும் தனிநபர்களிற்கும் வழங்கப்பட்ட அசாதாரணமான கொள்கைத் தூண்டல்கள், நாடளாவிய ரீதியிலான தடுப்பூசி நிகழ்ச்சித் திட்டத்திற்கிசைவாக தெரிவு செய்யப்பட்ட நகர்வு மீதான கட்டுப்பாடுகளின் படிப்படியான தளர்த்தல் மற்றும் உலகளாவிய நடவடிக்கைகள் வழமைக்குத் திரும்புதல் போன்றவற்றினால் ஆதரவளிக்கப்பட்டுள்ளது. அரசாங்கமானது ஏனைய நேரடியான நிதியியல் ஆதரவிற்கு மத்தியில் தாழ்ந்த வரி முறைமையின் மூலமாக 2019இன் இறுதியில் அறிவிக்கப்பட்ட இறைத் தூண்டல் வழிமுறைகளைத் தொடர்ந்தது. வியாபாரங்களுக்கும் தனிநபர்களுக்கும் வழங்கப்பட்ட பாரியளவிலான படுகடன் சட்ட இசைவுத் தாமதம் 2021 காலப்பகுதியில் மேலும் நீடிக்கப்பட்டு அதன் மூலம் உலகளாவிய நோய்த்தொற்றின் பன்முக அலைகளுக்கு மத்தியில் ஆர்வலர்களினால் முகங்கொடுக்கப்பட்ட காசுப்பாய்ச்சல் இடையூறுகளின் தாக்கங்கள் சுமூகமாக்கப்பட்டன. மத்திய வங்கியினால் 2020ஆம் ஆண்டு காலப்பகுதியில் முன்னெப்பொழுதுமில்லாதவாறு நாணயக் கொள்கை ஆதரவு வழங்கப்பட்டமையினதும் 2021இன் சனவரி தொடக்கம் ஓகத்து நடுப்பகுதி வரை அது தொடரப்பட்டமையினதும் காரணமாக சந்தை வட்டி வீதங்கள் வரலாற்றிலேயே தாழ்ந்த மட்டங்களிற்கு வீழ்ச்சியடைந்து அதன் மூலம் வியாபாரங்களினதும் தனிநபர்களினதும் கொடுகடனுக்கும் பொருளாதாரத்தினை மீண்டெழச் செய்வதற்குத் தேவையான முதலீட்டினை குறைப்பு நிரப்புச் செய்வதற்கும் வசதியளிக்கப்பட்டது. உலகளாவிய நிதியியல் சந்தைகளுக்கான மட்டுப்படுத்தப்பட்ட அணுகுவழிக்கு மத்தியில் தாழ்ந்த வட்டி வீதச் சூழலானது இறைத்தொழிற்பாடுகளுக்கு நன்மையளித்தது. மேலும், உலகளாவிய நோய்த் தொற்றுக்கு மத்தியில் விரிவடைந்த நிதியிடல் இடைவெளியினை நிரப்புவதற்கு திறைசேரி உண்டியல்களினை கொள்வனவு செய்வதன் மூலம் மத்திய வங்கியானது அரசாங்கத்திற்கு பாரியளவிலான நிதிகளை வழங்கியது. எனினும், நடுத்தர காலத்தில் மித மிஞ்சிய பணவீக்க அழுத்தங்கள் கட்டியெழுப்பப்படுவதனை முற்கூட்டியே தடுக்கின்ற அதேவேளையில் வெளிநாட்டுத் துறையிலுள்ள சமநிலையின்மைகளைத் தீர்ப்பதற்குமாக மத்திய வங்கி 2021 ஓகத்து நடுப்பகுதியில் கொள்கைவட்டி வீதங்கள் மற்றும் நியதி ஒதுக்கு விகிதத்தை (2021 செத்தெம்பரிலிருந்து*

*நடைமுறைக்குவரும் வகையில்) உயர்த்தியதன் மூலம் நாணய இறுக்கமாக்கல் வழிமுறைகளை நடைமுறைப்படுத்தியது. வணிகப்பொருள் ஏற்றுமதிகள் உலகளாவிய நோய்த் தொற்றுக்கு முன்னைய மட்டங்களை அடைந்த வேளையில், வழமைக்குத் திரும்பும் நடவடிக்கைகள் அத்துடன் உலகளாவிய சந்தையில் அனைத்து முக்கிய பண்டங்களின் விலைகளின் உயர்வு என்பவற்றினைப் பிரதிபலித்து இறக்குமதிச் செலவினமும் உயர்வடைந்தது. உலகளாவிய நோய்த்தொற்று நிலைப்பாடுகளின் கீழ் மட்டுப்படுத்தப்பட்ட வெளிநாட்டுச் செலாவணி உட்பாய்ச்சல்களுக்கு மத்தியில் ஊக நடவடிக்கைகள் உள்நாட்டு வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையில் மேலும் அழுத்தத்தினைத் தோற்றுவித்து ஏற்றுமதிப் பெறுகைகள் மீதான கட்டாய மாற்றுதல் தேவைப்பாட்டினை விதித்தல், செலாவணி வீத வழிகாட்டலை வழங்குதல் மற்றும் இறுதியாக அத்தியாவசிய இறக்குமதிகளுக்கு ஆதரவளிப்பதற்காக திரவத் தன்மையை வழங்குதல் போன்றவற்றின் மூலம் தலையிடுவதற்கு மத்திய வங்கியினைத் தேவைப்படுத்தின. இதேவேளை, சுற்றுலாத் துறையின் தொடர்ச்சியான பின்னடைவினால் பணிகள் வர்த்தகத்தின் செயலாற்றம் தொடர்ந்தும் குன்றியதாகவேயிருந்தது. சுற்றுலாத் துறையானது உலகளாவிய பயண நடவடிக்கை மீளத்தொடங்குதல் மற்றும் கொவிட்-19 இற்கு எதிரான தடுப்பூசி வழங்கல் முன்னேற்றமடைதல் என்பவற்றுடன் விரைவாக மீண்டெழுமென எதிர்பார்க்கப்படுகின்றது. உலகளாவிய நோய்த்தொற்றுக்கு மத்தியில் தாக்குப்பிடிக்கும் தன்மையுடன் தொடர்ந்துமிருந்த தொழிலாளர் பணவனுப்பல்கள் நாட்டிற்கு வெளியிலிருந்தான பயணம் மீளத்தொடங்கப்பட்டமை, வெளிநாட்டு தொழிலுக்கான மந்தமான புறப்பாடுகள் மற்றும் வங்கித்தொழில் முறைமைக்கு வெளியிலிருந்து செலாவணி வீத நன்மையைப் பெற்றுக்கொள்வதற்கான தேடல் போன்றவற்றினை முக்கியமாகப் பிரதிபலித்து அண்மைய மாதங்களில் மிதமடைந்தன. வெளிநாட்டுத் துறையிலுள்ள உயர்வடைந்த குறுங்கால பாதிப்படையக்கூடிய தன்மைகள் மற்றும் மிதமடைந்த வெளிநாட்டுச் செலாவணி உட்பாய்ச்சல்களின் காரணமாக நிதியியல் துறையில் அவதானிக்கப்பட்ட அழுத்தங்கள் போன்றவை அரசாங்கத்தினதும் மத்திய வங்கியினதும் கூட்டிணைக்கப்பட்ட முயற்சிகளினால் தீர்க்கப்பட்டு வருகின்றன. வணிகப்பொருள் மற்றும் பணிகள் ஏற்றுமதிகளினதும் தொழிலாளர் பணவனுப்பல்களினதும் நியதிகளில் நாட்டின் வெளிநாட்டுச் செலாவணி வருவாய்களினை மேம்படுத்துவதற்கான ஒருங்கிணைக்கப்பட்ட வழிமுறைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இத்தகைய முயற்சிகளினால் ஆதரவளிக்கப்பட்டு நடுத்தரகாலத்தில் வெளிநாட்டு நடைமுறைக் கணக்கு நிலுவை மேம்படுவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. பாரியளவிலான செயற்றிட்டங்களுக்கான வெளிநாட்டு நேரடி முதலீடு, உபாயமற்ற சொத்துக்களைப் பணமாக்குதல் ஏனையவற்றிற்கு மத்தியில் கலந்துரையாடலிலுள்ள பல்வேறு நிரப்பு நிதியிடல் வசதிகளுடன் இணைந்து எதிர்வரும் காலப்பகுதியில் அரசாங்கத்திற்கான கணிசமான படுகடனை உருவாக்காத வெளிநாட்டு உட்பாய்ச்சல்களைக் கவர்ந்து அதன் மூலம் வெளிநாட்டு நாணயப் படுகடன் பணிக் கொடுப்பனவிற்கு வசதியளிக்கும். மொத்த அலுவல்கள் ஒதுக்குகள் குறுங்கால பாதிப்படையக்கூடிய தன்மைகளுக்குப் புறம்பாக எதிர்வரும் காலத்தில் போதுமான மட்டங்களிற்கு உயர்த்தப்படுவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. உண்மைத் தாக்கமுள்ள செலாவணி வீதச் சுட்டெண்களினால் பிரதிபலிக்கப்பட்டவாறு செலாவணி வீதம் போட்டித்தன்மை வாய்ந்ததாகத் தொடர்ந்துமிருக்கின்றது. வெளிநாட்டுப் படுகடன் பணிக்கொடுப்பனவு கடப்பாடுகளினைத் தீர்த்துக் கொள்வது தொடர்பில் இலங்கையின் இயலுமை தொடர்பில் நாட்டிற்கான பன்னாட்டுத் தரமிடல் முகவராண்மைகள் உள்ளடங்கலாக பல்வேறு தரப்பினரின் தேவையற்ற ஊகத்திற்குப் புறம்பாக அரசாங்கமானது அதன் அனைத்து வெளிநாட்டு நாணயப் பொறுப்புக்களினையும் பூர்த்திசெய்துள்ளது. இதேவேளை, உலகளாவிய நோய்த்தொற்றிற்கு மத்தியில் விரிவடைந்த அரசாங்க வரவுசெலவுத் திட்டப் பற்றாக்குறையானது நடவடிக்கைகள் வழமைக்குத் திரும்புதல் மற்றும் அரசாங்கத்தின் திட்டமிடப்பட்ட செலவினச் சிக்கனப்படுத்தல் வழிமுறைகளுடனும் நடுத்தரகாலத்தில் கட்டுப்படுத்தப்படுமென எதிர்பார்க்கப்படுகின்றது. இதேவேளை, உயர்ந்த உணவு விலைகள், நிருவாக ரீதியில் தீர்மானிக்கப்படுகின்ற பல்வேறு விலைகளின் மேல் நோக்கிய திருத்தங்கள் மற்றும் உலகளாவிய பண்ட விலைகளின் உயர்விற்கிசைவாக தெரிவுசெய்யப்பட்ட இறக்குமதிப் பண்டங்களின் விலைக் கட்டுப்பாடுகளின் தளர்த்துதல் போன்றவற்றின் முக்கிய காரணமாக முதன்மைப் பணவீக்கம் 4-6 சதவீத இலக்கிடப்பட்ட வீச்சின் மேல் எல்லையினை விஞ்சியுள்ளது. பொருளாதாரத்தில் வலுவடைகின்ற கேள்வி நிலைப்பாடுகளைக் குறித்துக் காட்டி மையப் பணவீக்கமும் ஒரு உயர்வினை அண்மையில் பதிவுசெய்தது. குறுங்காலத்தில் முதன்மைப் பணவீக்கம் இலக்கிடப்பட்ட மட்டங்களுக்கு மேலாகவிருக்கின்ற போதிலும் நெகிழ்ச்சித் தன்மை வாய்ந்த பணவீக்க இலக்கிடல் கட்டமைப்பின் கீழ் தேவையேற்படும் நேரத்தில் பொருத்தமான முற்கூட்டிய வழிமுறைகளுடன் நடுத்தர காலத்தில் முதன்மைப் பணவீக்கத்தை இலக்கிடப்பட்ட வீச்சில் பேணுகின்ற அதேவேளையில் உள்ளார்ந்த வாய்ப்பினைப் பொருளாதாரம் அடைந்துகெள்வதற்குத் தேவையான ஆதரவினை உறுதிப்படுத்திக் கொள்வதிலும் மத்திய வங்கி தொடர்ந்தும் அர்ப்பணிப்புடனிருக்கின்றது. உலகளாவிய நோய்த்தொற்றின் தாக்கத்திலிருந்து பொருளாதாரத்தினை ஸ்திரப்படுத்திக்கொள்வதற்கான வழிமுறைகளுக்கு மத்தியில் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு முதலீட்டாளர்களின் ஆதரவுடன் ஏற்றுமதி சார்ந்த உற்பத்திப் பொருளாதாரமொன்றினை உருவாக்கிக் கொள்வதனை நோக்கியதும் பொருளாதார நடவடிக்கைகளை பன்முகப்படுத்துவதற்குமான அரசாங்கத்தின் முயற்சிகள் நடுத்தரகாலத்தில் இலங்கைப் பொருளாதாரம் வளர்ச்சி உத்வேகத்தினைத் தக்கவைத்துக் கொள்வதற்கும் அதன் தாக்குப்பிடிக்கும் தன்மையை உயர்த்துவதற்கும் துணைபுரியுமென எதிர்பார்க்கப்படுகின்றது.*


நாளாந்தம் இனங்காணப்பட்ட நோயாளிகளின் எண்ணிக்கை
சனத்தொகையில் முழுமையாகத் தடுப்பூசியேற்றிக் கொண்ட பகுதியினர் (2021 ஒத் 29இல் 61.2%)
மொ.உ.உற்பத்தி (காலாண்டு, ஆண்டிற்காண்டு)
2019-கா4 1.6%
2020-கா2 -16.4%
2021-கா1 4.3%
2021-கா2 12.3%
மொத்த இணையத்தள இணைப்புக்கள் 55.2% ↑ (2021-யூன் இறுதியில், ஆண்டிற்காண்டு)
சரக்குக் கையாளல் 7.3% ↑ (2021-சன-செத், ஆண்டிற்காண்டு)
கொள்கலன் கையாளல் 3.5% ↑ (2021-சன-செத், ஆண்டிற்காண்டு)
அதிகரித்துவரும் உலகளாவிய வலு விலைகளுடன் இசைந்து செல்லும் விதத்தில் முக்கிய எரிபொருள் உற்பத்திகள் மற்றும் திரவப் பெற்றோலிய வாயு என்பவற்றின் விலைகள் மேல்நோக்கித் திருத்தப்பட்டன
GAS
பொருளாதாரத்தின் வளர்ச்சி சாத்தியப்பாடு மற்றும் உத்வேகம் என்பவற்றை மேம்படுத்துவதற்குப் பல்வேறுபட்ட வழிமுறைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன...
அதிவேக நெடுஞ்சாலைகள் மற்றும் வீதி உட்கட்டமைப்பிற்கான மேம்பாடுகளினூடாக கிராமிய-நகர இணைப்புக்களை மேம்படுத்தல்
கொழும்பு துறைமுக நகருடனும் பெற்றோலிய வளங்களைக் கண்டறிவதுடனும் தொடர்புடைய முக்கிய சட்டவாக்கங்களினூடாக வெளிநாட்டு முதலீடுகளுக்கான கவர்ச்சித்தன்மையினை மேம்படுத்தல்
இலங்கை ரூபா போட்டித்தன்மை வாய்ந்ததாகக் காணப்படுகின்றது...
செலாவணி வீதம் இல.ரூ./ ஐ.அ.டொ.)
உண்மைத் தாக்கமுள்ள செலாவணி வீதச் சுட்டெண் 24
பொருளாதாரமானது 2021இன் முதலரைப்பகுதியில் குறிப்பிடத்தக்க மீட்சியொன்றினை ஏற்படுத்தியிருந்த அதேவேளையில் கொவிட்-19 நோய்த்தொற்றிற்கு எதிரான துரித தடுப்பு மருந்து முன்னெடுப்பும் ஆதரவான இறை மற்றும் நாணயக் கொள்கை வழிமுறைகளின் காலங்கடந்த விளைவுகளும் வளர்ச்சி உத்வேகத்தினை வசதிப்படுத்துமென எதிர்பார்க்கப்படுகின்றது...
வணிக ஏற்றுமதிகள் 2021 யூன்-ஒகத்து காலப்பகுதியில் ஐ.அ.டொலர் 1 பில்லியனுக்கும் மேல் பதிவுசெய்யப்பட்டன
ஏற்றுமதிகள் (ஐ.அ.டொ. மில்)
937 952 1,094 818 892 1,007 1,104 1,100
1,592 1,524 1,926 1,707 1,607 1,659 1,710 1,687
இறக்குமதிகள் (ஐ.அ.டொ. மில்)
சன-21 பெப்-21 மாச்-21 ஏப்-21 மே-21 யூன்-21 யூலை-21 ஓகத்-21
2021-யூலையில் ஐ.அ.டொலர் 1 பில்லியன் நாட்டிற்கான பன்னாட்டு முறிக் கொடுப்பனவு
சீன மக்கள் வங்கியுடனான ஐ.அ.டொ. 1.5 பில்லியனுக்கு நிகரான நாணய பரஸ்பர பரிமாற்றல் மற்றும் வங்காளதேச வங்கியுடனான ஐ.அ.டொலர் 200 மில்லியன் நாணய பரஸ்பர பரிமாற்றல்
பன்னாட்டு நாணய நிதியத்திலிருந்து ஐ.அ.டொலர் 787 மில்லியனுக்கு நிகரான சிறப்பு எடுப்பனவு உரிமைகளின் ஒதுக்கீடு
தொழிலாளர் பணவனுப்பல்கள் (சன-செத்)
2020 ஐ.அ.டொ. 5.0 பில்
2021 ஐ.அ.டொ. 4.6 பில்
கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்றிற்கு மத்தியில் அதிகரித்த சவால்களுக்கு முகங்கொடுத்திருந்த வெளிநாட்டுத் துறையானது மத்திய வங்கி மற்றும் அரசாங்கம் என்பவற்றின் கொள்கை வழிமுறைகளுடன் எதிர்வரும் காலப்பகுதியில் வலுவாக மீட்சியடையும் என எதிர்பார்க்கப் படுகின்றது...
சுற்றுலாக் கைத்தொழில் துறையானது உலகளாவிய பயணங்களை மேம்படுத்தலுடனும் உலகளாவிய ரீதியாக கொவிட்-19 நோய்த்தொற்றிற்கு எதிரான வெற்றிகரமான தடுப்பு மருந்து முன்னெடுத்தலுடனும் உத்வேகத்தினை கொண்டிருந்தது
சுற்றுலாப் பயணிகளின் வருகைகள்
2021-சன 1,682
2021-பெப் 3,366
2021-மாச் 4,581
2021-ஏப் 4,168
2021-மே 1,497
2021-யூன் 1,614
2021-யூலை 2,429
2021-ஒகத் 5,040
21-செத் 13,547
மொத்த அலுவல்சார் ஒதுக்குகள்
2020 இறுதியில் ஐ.அ.டொ. 5.7 பில்
21-செத் இறுதியில் ஐ.அ.டொ. 2.7 பில்
வெளிநாட்டு நடைமுறைக் கணக்கு மீதி (சன-யூன்)
2021 ஐ.அ.டொ. -1.5 பில்
2020 ஐ.அ.டொ. -1.1 பில்
பொருளாதாரத்தின் தோற்றப்பாடு
இறைத் துறையின் செயலாற்றமானது முன்னோக்கிய காலப்பகுதியில் பொருத்தமான இறைச் சீராக்கங்கள் மற்றும் பொருளாதார நடவடிக்கைகள் வழமைக்குத் திரும்புதல் என்பவற்றுடன் முன்னேற்றமடையுமென எதிர்பார்க்கப்படுகின்றது...
முக்கிய இறை மீதிகள் (மொ.உ.உற்பத்தி %, சன-யூலை)
2021
2020
-4.7%
-4.6%
நடைமுறைக் கணக்கு மீதி
-2.3%
-1.9%
ஆரம்ப மீதி
-6.2%
-5.8%
திரண்ட இறை மீதி
மத்திய அரசாங்க மொத்தப் படுகடனில் வெளிநாட்டுப் படுகடனின் சதவீதம்
40.0% (2020 இறுதியில்)
38.4% (யூலை-21 இறுதியில்)
TAX
கொவிட்-19 நோய்த்தொற்றுடன் தொடர்புடைய செலவினங்கள்
அரசிறை (மொ.உ.உற்பத்தியின் % ஆக)
பொருளாதார நடவடிக்கைகள் இயல்புநிலைக்குத் திரும்புதல், விசேட பண்டங்கள் மற்றும் பணிகள் மற்றும் வரி மன்னிப்பின் கலப்பு வரியொன்றினை நடைமுறைப்படுத்தல் என்பவற்றுடன்
9.1% சன-யூலை 5.1% 2020
11.8% (மதிப்பிடப்பட்டது) சன-யூலை 4.9% 2021
செலவினம் (மொ.உ.உற்பத்தியின் % ஆக)
மீண்டெழும் செலவினத்தைச் சிக்கனப்படுத்துகின்ற அதேவேளை மூலதனச் செலவினத்தை முன்னிலைப்படுத்துவதனுடன்
20.3% சன-யூலை 10.9% 2020
21.4% (மதிப்பிடப்பட்டது) சன-யூலை 11.0% 2021
மூலம்: நிதி அமைச்சு


முதன்மை பணவீக்கமானது (கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண், ஆண்டிற்காண்டு) தொடர்ச்சியாக 12 ஆண்டுகளுக்கு மேலாக ஒற்றை இலக்க மட்டங்களில் காணப்படுகின்றது...
10%
1980 1984 1988 1992 1996 2000 2004 2008 2012 2016 2020
சன-20 ஏப்-20 யூலை-20 ஒக்-20 சன-21 ஏப்-21 யூலை-21 ஒக்-21
4% 6%
காத்திரமான கொள்கை வழிமுறைகளின் நடைமுறைப்படுத்தலுடன் பணவீக்கமானது நடுத்தர காலத்தில் 4-6 சதவீதத்தினுள் பேணப்படுமென எதிர்பார்க்கப்படுகின்றது...
உணவுப் பணவீக்கம் (ஆண்டிற்காண்டு)
12.8% கொ.நு.வி.சு 2021-ஒக்
10.0% தே.நு.வி.சு 2021-செக்
உணவல்லாப் பணவீக்கம் (ஆண்டிற்காண்டு)
5.4% கொ.நு.வி.சு 2021-ஒக்
3.0% தே.நு.வி.சு 2021-செக்
உலகளாவிய விலை அதிகரிப்புக்கள் (ஆண்டின் இன்று வரை, 2021-செக் இறுதியில்)
↑53.0% மசகெண்ணெய் (பிரெண்ட்)
↑45.5% திரவப் பெற்றோலிய வாயு
↑17.7% பால் மா (மொத்த விற்பனை)
பணநிரம்பல்-$M_{2b}$ (ஆண்டிற்காண்டு வளர்ச்சி)
7.0% 2019
23.4% 2020
21.0% 21-ஒக்த் இறுதியில்
ஓரிரவு பணச்சந்தை திரவத்தன்மை
2021-செக் இறுதியில் ரூ.-120 பில்
2020 இறுதியில் ரூ.207 பில்
நிரம்பல்பக்க இடையூறுகளினாலும் உலகளாவிய விலை அசைவுகளினாலும் முக்கியமாக உந்தப்பட்டு, கேள்வி அழுத்தங்களின் படிப்படியான திரட்சியினையும் பிரதிபலித்து பணவீக்கமானது அண்மைய மாதங்களில் மேல்நோக்கிய போக்கொன்றினைத் தொடர்ந்திருந்தது...
15.1% ஆண்டிற்காண்டு வளர்ச்சி 21-ஒக்த் இறுதியில்
6.5% ஆண்டிற்காண்டு வளர்ச்சி
4.2% ஆண்டிற்காண்டு வளர்ச்சி
2019 காலப்பகுதியில் ரூ.236 பில்
2020 காலப்பகுதியில் ரூ.374 பில்
2021-சன-ஒக்த் காலப்பகுதியில் ரூ.625 பில்
தனியார் துறைக்கான கொடுகடனின் வளர்ச்சி
2021 சன-ஒகத் காலப்பகுதியில் ரூ.135 பில்
2020 காலப்பகுதியில் ரூ.184 பில்
2019 காலப்பகுதியில் ரூ.63 பில்
அரசிற்குச் சொந்தமான வியாபாரத் தொழில்முயற்சிகளுக்கான கொடுகடனின் விரிவாக்கம்
2021 சன-ஒகத் காலப்பகுதியில் ரூ.1,134 பில்
2020 காலப்பகுதியில் ரூ.1,752 பில்
2019 காலப்பகுதியில் ரூ.279 பில்
தேறிய அரசிற்கான கொடுகடனின் விரிவாக்கம்
ஏராளமானது
2021 ஒகத்து நடுப்பகுதியில் சில அசாதாரண நாணயக் கொள்கை ஊக்குவிப்புக்களைப் புறக்கீடு செய்வதற்கான வழிமுறைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன...
9.00% 8.00% 6.00%
து.க.வ.வீ. து.வை.வ.வீ. நி.ஒ.வி.
2018 இறுதியில் 2019 இறுதியில் 2020 இறுதியில் 2021-செக் இறுதியில்
6.00% 5.00% 4.00%
2018-திசெ 8.95% ச.நி.அ.ப.வீ. (மாத இறுதியில்) 2021-செக் 5.94% 2020-ஒக் 4.53%
2018-திசெ 10.01% 91 நாள் தி-உண்டியல் (மாத இறுதியில்) 2021-செக் 6.70% 2020-செக் 4.51%
2018-திசெ 8.81% ச.நி.வை.வீ. 2021-செக் 4.75%
2018-திசெ 14.40% ச.நி.க.வ.வீ. 2021-செக் 9.37%
சவால்மிக்க உள்நாட்டு மற்றும் உலகளாவிய பேரண்டப் பொருளாதார நிலைமைகளுக்கு மத்தியிலும் நிதியியல் துறையானது தாக்குப்பிடிக்கக்கூடிய தன்மையினைக் கொண்டிருந்தது...
2021 முதலரை இறுதியில் துறைவாரியான கொடுகடன் வளர்ச்சி, ஆண்டிற்காண்டு
13.0% வேளாண்மை
9.2% பணிகள்
11.3% கைத்தொழில்
19.4% தனியாள் கடன்கள் மற்றும் முற்கொடுப்பனவுகள்
1.8% சொத்துக்கள் மீதான வருவாய் (வரிக்கு முன்னரான, (2021-ஒகத்து இறுதியில்)
4.7% மொத்த செயற்படாக் கடன் விகிதம் (2021-ஒகத்து இறுதியில்)
36.1% நியதி திரவச் சொத்து விகிதம் (உ.வ.து.பி., (2021-ஒகத்து இறுதியில்)
18.0% கொடுகடன் வளர்ச்சி (ஆண்டிற்காண்டு, (2021-ஒகத்து இறுதியில்)
20.6% வைப்பு வளர்ச்சி (ஆண்டிற்காண்டு, (2021-ஒகத்து இறுதியில்)
வங்கித்தொழில் துறை
உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள் துறை
16.7% மொத்த மூலதனப் போதுமை விகிதம் (2021-ஒகத்து இறுதியில்)
3.2% சொத்துக்கள் மீதான வருவாய் (2021-ஒகத்து இறுதியில்)
12.5% மொத்த செயற்படாக் கடன் விகிதம் (2021-ஒகத்து இறுதியில்)
கொழும்புப் பங்குப் பரிவர்த்தனையின் அனைத்துப் பங்கு விலைச் சுட்டெண் 2021-ஒக்தோபரில் வரலாற்றில் முதல் தடவையாக 10,000இனை விஞ்சியிருந்தது...
2021-ஒக் இறுதியில் 10,162.93
2018 இறுதியில் 6,052.37
2019 இறுதியில் 6,129.21
2020 இறுதியில் 6,774.22
மொத்த எழுதப்பட்ட கட்டுப்பண வளர்ச்சி (ஆண்டிற்காண்டு, 21-யூன்) 10.7%
இலாபம் (வரிக்கு முன்னரான) வளர்ச்சி (ஆண்டிற்காண்டு, 2021-யூன்) -20.1%
மொத்தச் சொத்துக்களின் வளர்ச்சி (ஆண்டிற்காண்டு, 2021-யூன்) 7.9%
காப்புறுதித் துறை

## 1.1 துறைசார் அபிவிருத்திகள்


### உண்மைத்துறையும் பணவீக்கமும்

இலங்கைப் பொருளாதாரமானது கடந்த ஆண்டின் ஒத்த காலப்பகுதியில் பதிவுசெய்யப்பட்ட உலகளாவிய நோய்த்தொற்றினால் தூண்டப்பட்ட குறிப்பிடத்தக்க சுருக்கத்திற்கு மேலாக 2021இன் முதலரைப்பகுதியில் வலுவான மீட்சியொன்றினை காண்பித்துள்ளது. தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தின் தற்காலிக மதிப்பீடுகளின்படி, பொருளாதாரமானது உண்மை நியதிகளில் 2020இன் தொடர்பான காலப்பகுதியில் ஆண்டுக்காண்டு அடிப்படையில் பதிவுசெய்யப்பட்ட 9.1 சதவீதம் கொண்ட சுருக்கத்துடன் ஒப்பிடுகையில், 2021இன் முதலரைப்பகுதியில் ஆண்டுக்காண்டு அடிப்படையில் 8.0 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்தது.

> *அரசாங்கம் மற்றும் மத்திய வங்கியின் முன்னொருபோதுமில்லாத கொள்கை ஆதரவுகள், கொவிட்-19 தடுப்பூசியேற்றலினை விரைவாக நடைமுறைப்படுத்தியதன் மூலமாக உலகளாவிய நோய்த்தொற்றினை துரிதமாகக் கட்டுப்படுத்தலுடன் இணைந்து பொருளாதார நடவடிக்கையின் விரைவான மீட்சிக்கு உதவியளித்தன...*

பொருளாதாரத்தின் அனைத்து முக்கியத் துறைகளும் கடந்த ஆண்டின் ஒத்த காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் 2021இன் முதலரைப் பகுதியில் வரவேற்கத்தக்க வளர்ச்சியொன்றினைப் பதிவுசெய்தன. வேளாண்மை, காடாக்கல் மற்றும் மீன்பிடி நடவடிக்கைகள் ஆண்டுக்காண்டு அடிப்படையில் 7.1 சதவீத கணிசமான விரிவாக்கமொன்றினைப் பதிவுசெய்தன. குறிப்பாக தேயிலை, எண்ணெய்ப்பசை கொண்ட பழவகைகள், இறப்பர் மற்றும் பழங்கள் ஆகியவற்றின் பயிர்ச்செய்கை நடவடிக்கைகள் இக் காலப்பகுதியில் அனுபவித்த சாதகமான வானிலை நிலைமைகள் காரணமாக விரிவடைந்தன. கைத்தொழில் தொடர்பான நடவடிக்கைகளின் பெறுமதி கூட்டல், முன்னைய ஆண்டின் தொடர்பான காலப்பகுதியில் பதிவுசெய்யப்பட்ட 14.6 சதவீதம் கொண்ட சுருக்கத்துடன் ஒப்பிடுகையில், 2021இன் முதலரைப்பகுதியில் ஆண்டுக்காண்டு அடிப்படையில் 12.1 சதவீதத்தினால் குறிப்பிடத்தக்களவில்

வரைபடம் 1.1
காலாண்டு உண்மை மொத்த உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சியின் பங்களிப்பு (ஆண்டுக்காண்டு)




*மூலம்:* தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்

வளர்ச்சியடைந்தது. நிலக்கரி மற்றும் சுத்திகரிக்கப்பட்ட பெற்றோலிய உற்பத்திகள் மற்றும் வடிகால், கழிவுச்சுத்திகரிப்பு மற்றும் அகற்றல் நடவடிக்கைகள் நீங்கலாக கைத்தொழிற்துறையின் அனைத்து துணை நடவடிக்கைகளின் வளர்ச்சிகளும் சாதகமாக காணப்பட்டன. கட்டடவாக்கம் மற்றும் சுரங்கமகழ்தல் மற்றும் கல்லுடைத்தல் துணைத்துறைகள் நகர்வு மீதான கட்டுப்பாட்டுத் தளர்வினால் ஆதரவளிக்கப்பட்டு 2021இன் முதலரைப்பகுதியில் ஆண்டுக்காண்டு அடிப்படையில் 9.9 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்தன. மேலும், புடவைகள் தயாரிப்பு, அணியும் ஆடை மற்றும் தோலுடன் தொடர்புடைய உற்பத்திகள், உணவு, குடிபானங்கள் மற்றும் புகையிலை உற்பத்திகள், இறப்பர் மற்றும் பிளாத்திக்கு உற்பத்திகள், தளபாடம் மற்றும் ஏனைய உலோகமல்லா கனிப்பொருள் உற்பத்திகள் ஆகிய துணைத்துறைகளினால் முதன்மையாக ஆதரவளிக்கப்பட்டு தயாரிப்பு நடவடிக்கைகள் 2021இன் முதலரைப்பகுதியில் ஆண்டுக்காண்டு அடிப்படையில் 14.0 சதவீத வளர்ச்சியினைப் பதிவுசெய்தன. பணிகள் துறையானது 2020இன் முதலரைப்பகுதியின் 5.2 சதவீதம் கொண்ட சுருக்கத்துடன் ஒப்பிடுகையில் 2021இன் முதலரைப்பகுதியில் ஆண்டுக்காண்டு அடிப்படையில் 5.1 சதவீதம் கொண்ட உண்மை வளர்ச்சியுடன் கூடிய ஆரோக்கியமானதொரு மீட்சியினைப் பதிவுசெய்தது. பணிகள் துறையின் வளர்ச்சியானது நிதியியல் பணிகள் மற்றும் துணை நிதியியல் பணிகள், களஞ்சியப்படுத்தல் உள்ளடங்கலாக பொருட்கள் மற்றும் பயணிகளின் போக்குவரத்து, மொத்த விற்பனை மற்றும் சில்லறை வர்த்தகம், குடியிருப்புக்களின் உடைமை உள்ளடங்கலாக உண்மைச் சொத்து நடவடிக்கைகள், ஏனைய தனியாள் பணிகள் நடவடிக்கைகள் மற்றும் தொலைத்தொடர்பூட்டல் பணிகள் என்பவற்றால் பிரதானமாக தூண்டப்பட்டது. இருப்பினும், நகர்வு மீதான கட்டுப்பாடுகளின் மத்தியில்

## முடக்கங்களின் பொருளாதாரத் தாக்கம்

சார்ஸ், எச்1என்1 அல்லது எபோலா போன்ற தொற்றுநோய்களின் முன்னைய நிகழ்வுகளைப் போலன்றி கொவிட்-19 நோய்ப்பரவல் குறுகிய காலத்தினுள் உலகளாவிய நோய்த்தொற்றொன்றாகத் துரிதமாக பரிணாமமடைந்தமையானது உலகெங்கிலுமுள்ள நாடுகள் முன்னெப்பொழுதுமில்லாத விதத்தில் முடக்கங்களினையும் ஏனைய வகையிலான நகர்வு மீதான கட்டுப்பாட்டினையும் அறிமுகப்படுத்துவதனைத் தேவைப்படுத்தியது. அவ்வாறான கட்டுப்பாடுகளின் தாக்கமானது பன்னாட்டு நாணய நிதியத்தின் மதிப்பீடுகளின் பிரகாரம் 2020இல் 3.1 சதவீத உலகப் பொருளாதாரச் சுருக்கத்தில் பிரதிபலித்திருக்கின்றது.

இலங்கையிலும் உலகளாவிய நோய்த்தொற்றினதும் அதனுடன் தொடர்புபட்ட முடக்கங்களதும் நகர்வு மீதான கட்டுப்பாடுகளதும் சமூகப்-பொருளாதார தாக்கங்கள் கணிசமானவையாகும். 2020 மாச்சு-மே காலப்பகுதியில் உலகளாவிய நோய்த்தொற்றின் முதலாம் அலை கடுமையான நாடளாவிய ரீதியான முடக்கமொன்றின் மூலம் கட்டுப்படுத்தப்பட்டு அதன்பின்னர் கட்டம் கட்டமாக தளர்த்தப்பட்டிருந்தது. நாடளாவிய ரீதியான முடக்கம் 2020இன் இரண்டாம் காலாண்டுப் பகுதியில் இலங்கைப் பொருளாதாரத்தின் ஆண்டிற்காண்டு 16.4 சதவீத சுருக்கத்திற்கு வழிவகுத்தது. 2020 ஒத்தோபர்-நவம்பர் காலப்பகுதியின் இரண்டாம் அலை தெரிவுசெய்யப்பட்ட முடக்கங்களினாலும் நகர்வு மீதான கட்டுப்பாடுகளினாலும் தீர்க்கப்பட்டமையானது பொருளாதாரப் பின்னடைவினை ஓரளவிற்குக் குறைத்தது. ஆயினும், மீட்புச் செயன்முறை சீர்குலைந்து காணப்பட்டதுடன் பொருளாதாரம் நான்காம் காலாண்டில் ஆண்டிற்காண்டு 1.3 சதவீத வளர்ச்சியொன்றினை மாத்திரமே பதிவுசெய்தது. இதற்கமைய, ஏறத்தாழ 5 சதவீத உண்மை மொத்த உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சியொன்றின் ஆரம்ப எதிர்பார்க்கைக்கு மாறாக இவை இலங்கை 2020இல் 3.6 சதவீதம் கொண்ட அதன் உயர்ந்தளவான பொருளாதார சுருக்கத்தினைப் பதிவுசெய்வதனை விளைவாக்கின. 2021 ஏப்பிறலிலிருந்தான உலகளாவிய நோய்த்தொற்றின் மூன்றாம் அலையானது இதுவரையான காலப்பகுதியில் அதன் மிகப் பெரிய அலையாகக் காணப்படுகின்றது. மூன்றாம் அலைக் காலப்பகுதியின் நகர்வு மீதான கட்டுப்பாடுகளும் தெரிவுசெய்யப்பட்டனவாகவே காணப்பட்டன.

உலகளாவிய நோய்த்தொற்றின் பரவலைத் தடுப்பதற்கு முடக்கங்களும் நகர்வு மீதான கட்டுப்பாடுகளும் அத்தியாவசியமாக அமைந்த வேளையில் பேரண்டப் பொருளாதாரம் தொடர்பிலான அவற்றின் தாக்கம் கடுமையானதாகும். 2019 ஏப்பிறலில் இலங்கை மத்திய வங்கியினால் மேற்கொள்ளப்பட்ட எறிவுகளின் பிரகாரம் இலங்கையின் பெயரளவு மொத்த உள்நாட்டு உற்பத்தி 2020இல் ரூ. 17.39 ரில்லியனாகவும் 2021இல் 19.17 ரில்லியனாகவும் எதிர்பார்க்கப்பட்டிருந்தது. இருப்பினும், உலகளாவிய நோய்த்தொற்றுடன் பொருளாதாரம் 2020இல் ரூ. 14.97 ரில்லியன் பெறுமதியான பெயரளவு மொத்த உள்நாட்டு உற்பத்தியொன்றினை மாத்திரமே பதிவுசெய்ததுடன் 2021இல் ரூ. 16.5 ரில்லியன் பெறுமதியான பெயரளவு மொத்த உள்நாட்டு உற்பத்தியொன்றினைப் பதிவுசெய்யக்கூடும். இது ஏறத்தாழ ரூ. 2.5 ரில்லியன் பெறுமதியான பெயரளவு நியதிகளில் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் திகைப்பூட்டும் ஆண்டு இழப்பொன்றினைக் குறித்துக்காட்டுகின்றது.

கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்று எவ்வித முக்கிய பொருளாதார துறையினையும் விட்டுவைக்காத வேளையில், வர்த்தக மற்றும் சுற்றுலாத்துறையுடன் தொடர்புடைய நடவடிக்கைகளைக் கொண்ட முக்கிய வெளிநாட்டுச் செலாவணி வருவாயீட்டும் துறைகள் உலகளாவிய நோய்த்தொற்றினால் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளன என்பதைக் குறிப்பிட வேண்டும். இதன் விளைவாக, இது நாட்டிற்கான வெளிநாட்டுச் செலாவணி உட்பாய்ச்சல்களில் வீழ்ச்சியினைப் பிரதிபலித்து அதன்மூலம் செலாவணி வீதத்தின் உறுதிப்பாடு மீது எதிர்க்கணியமாகப் பாதித்ததுடன் முதலீட்டாளர் நம்பிக்கை மீது எதிர்க்கணியக் கசிவுத் தாக்கத்தினை ஏற்படுத்தியது. இறைத்துறை தொடர்பில், பொருளாதார நடவடிக்கையின் மெதுவடைவு அதிகரித்துவரும் செலவினத்திற்கு மத்தியில் அரசிறையில் குறைப்பிற்குப் பங்களித்து அதன்மூலம் இறைத்துறையின் மீது குறிப்பிடத்தக்க அழுத்தங்களை ஏற்படுத்தியதுடன் மேலதிக கடன்பாடுகளைத் தேவைப்படுத்தியது.

முடக்கங்களதும் நகர்வு மீதான கட்டுப்பாடுகளதும் தாக்கத்தினை தொழிற்சந்தை அணுகுமுறையிலிருந்தும் மதிப்பிடப்படலாம். தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தினால் வெளியிடப்பட்ட 2020இன் நான்காம் காலாண்டிற்கான தொழிற்படை அளவீட்டுக் காலாண்டு அறிக்கையின் பிரகாரம் 8.03 மில்லியன் தொழில்புரியும் குடித்தொகையினரில் சுய தொழில்புரிவோர் மற்றும் குடும்பத் தொழில்புரிவோருக்குப் பங்களிப்போர் மற்றும் தனியார் துறையில் தொழில்புரிவோர் மொத்த தொழில்நிலையின் 82 சதவீதமாகக் காணப்படுகின்றனர். மேலும், 2019இற்கான தொழிற்படை அளவீட்டு ஆண்டறிக்கையின் பிரகாரம், முறைசாராத் துறை தொழில்நிலை மொத்த தொழில்புரிவோரில் 57.4 சதவீதமாக விளங்கியது. இது தொழிலில் ஈடுபட்டிருந்தவர்களுக்கு மத்தியிலும்கூட பெரும்பான்மையினர் அவ்வாறான இடையூறுகளில் பாதிக்கப்படக்கூடிய நிலையிலிருக்கின்றனர் என்பதனைக் காட்டுகின்றது. மேலும், போரின் முடிவிலிருந்து 4.4 சதவீத சராசரி தொழிலின்மையுடன் ஒப்பிடுகையில் உலகளாவிய நோய்த்தொற்றின் தோற்றத்திலிருந்து இலங்கை 5 சதவீதத்திற்கு மேலான தொழிலின்மை வீதங்களைப் பதிவுசெய்துள்ளது. இந்த வகையில், அவ்வாறான வாழ்வாதார இழப்புக்கள் குறிப்பாக வறுமைக் கோட்டிற்குச் சற்று மேல்நிலையிலுள்ளவர்கள் மற்றும் சமூக பாதுகாப்பு வலையமைப்பின் எல்லைக்கு வெளியிலுள்ளவர்கள் தொடர்பில் அதிகரித்த பாதிக்கக்கூடிய தன்மையினையும் அதிகரித்த வறுமையினையும் விளைவிக்கும்.

2021இன் முதலரைப்பகுதியில் அவதானிக்கப்பட்ட மீட்சியானது 2020 மாச்சில் உலகளாவிய நோய்த்தொற்றின் தோற்றத்திலிருந்து பல்வேறு வழிகளினூடாக பொருளாதாரத்தின் சகல ஆர்வலர்களுக்கும் மத்திய வங்கியினால் வழங்கப்பட்ட அசாதாரண ஆதரவின் பின்னணியில் அமைந்துள்ளது. இது தனியார் துறை, வங்கித்தொழில் துறை மற்றும் அரசாங்கத்திற்கான ஆதரவினை உள்ளடக்கியுள்ளது. நிதியியல் துறையும் கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்றுடன் தொடர்புடைய இடையூறுகளின் எதிர்க்கணிய தாக்கங்களைச் சீராக்குவதற்கு வியாபாரங்கள் மற்றும் தனிப்பட்டவர்கள் உள்ளடங்கலாக கடன்பாட்டாளர்களுக்குப் பரந்த அடிப்படையிலான ஆதரவினை வழங்கியுள்ளது. மத்திய வங்கி முறையற்ற தண்டங்களிலிருந்தும் வலிந்து கையகப்படுத்தல்களிலிருந்தும் பாதிக்கப்பட்ட வியாபாரங்களினையும் தனிப்பட்டவர்களினையும் பாதுகாப்பதற்கான படிமுறைகளையும் மேற்கொண்டது. இருப்பினும், அவ்வாறான தூண்டல்களை பாதகமான பேரண்டப் பொருளாதார எதிர்பாரா விளைவுகளும் நிதியியல் முறைமை உறுதிப்பாட்டுக் கரிசனைகளும் இல்லாமல் காலவரையறையின்றித் தொடர முடியாது. அதேவேளை, முன்னோக்கிச் செல்கையில் நிதியியல் நிறுவனங்கள் மற்றும் அவற்றின் வாடிக்கையாளர் குழுமம் என்பனவற்றிற்கிடையிலான உறவுமுறைகள் தொடர்பில் உலகளாவிய நோய்த்தொற்றின் தாக்கங்களை அடையாளங்காண்பது எதிர்காலத்தில் கொடுகடன் மதிப்பீட்டினை மேற்கொள்ளும் போது அத்தியாவசியமாகின்றது.

குறுங்காலத்தில் வியாபாரங்களிலும் குடியிருப்பாளர்களிலும் நீடித்த வடுத்தாக்கமொன்றினையும் அதன்மூலம் நடுத்தர காலத்தில் இலங்கைப் பொருளாதாரத்தின் ஒட்டுமொத்த வளர்ச்சி உத்வேகத்திலும் வாய்ப்புக்களிலும் நச்சு வட்டத் தாக்கமொன்றினை உருவாக்கக்கூடிய கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்றினையும் முடக்கங்களையும் மேற்கூறப்பட்டவை எடுத்துக்காட்டுகின்றன. முன்னோக்கிச் செல்கையில், அரசாங்கம் உலகளாவிய நோய்த்தொற்றின் மனித இழப்புக்களைக் குறைக்கும் வேளையில் நீண்டகாலமாக எதிர்பார்க்கப்பட்டதிலும் பார்க்க குறைந்தளவான வளர்ச்சியிலிருந்து மீட்சியடைவதற்கு ஏற்கனவே போராடிக்கொண்டிருந்த இலங்கைப் பொருளாதாரத்தின் மீது இச்சூழ்நிலைகளின் பொருளாதார செலவினைக் குறைத்தல் என்பனவற்றிற்கிடையில் தீவிரமானதும் முழுமையானதுமான சமநிலையொன்றினைத் தொடர்ந்தும் பேணுவது இன்றியமையாததொன்றாகும். அரசாங்கத்தினால் முன்னெடுக்கப்பட்டு தற்போது தொடரப்படுகின்ற கொவிட்-19 தடுப்பூசியேற்றும் செயற்றிட்டமானது இச்சமநிலையினைப் பேணுவதில் மிகவும் முக்கியமானதாகும். குறிப்பாக 2021 யூலையிலிருந்து அவதானிக்கப்படக்கூடிய மிகவும் பாராட்டத்தக்க முன்னேற்றமானது எதிர்வரும் காலப்பகுதியில் கொவிட்-19 நோய்த்தொற்றிலிருந்து தோன்றும் எவ்வித இடையூறுகளினையும் குறைக்குமென எதிர்பார்க்கப்படுகின்றது. இருப்பினும், பொதுமக்கள் விதித்துரைக்கப்பட்ட சுகாதார வழிகாட்டல்களை நெருக்கமாகப் பின்பற்றுவதும் பொருளாதாரத்தின் மீட்சிக்கு இன்றியமையாததாக அமையும். அப்போது மாத்திரமே இலங்கைப் பொருளாதாரத்திற்கான அனைத்தையுமுள்ளடக்கிய மற்றும் நீடித்துநிலைக்கக்கூடிய வளர்ச்சி உத்வேகமொன்றின் உருவாக்கத்திற்கு வழிவகுக்கும் விதத்தில் பேரண்டப் பொருளாதார உறுதிப்பாடு, மேம்பட்ட பொருளாதார வளர்ச்சி மற்றும் அதிகரித்த தாக்குப்பிடிக்கும் தன்மை என்பனவற்றின் ஒழுக்க விழுமிய சுழற்சியொன்றினை நிறுவ முடியும்.

சுற்றுலாத்துறை நடவடிக்கைகள் தளர்வடைந்ததன் காரணமாக தங்குமிடம், உணவு, மற்றும் குடிபானப் பணி நடவடிக்கைகள் 2021இன் முதலரைப்பகுதியில் ஆண்டுக்காண்டு அடிப்படையில் 13.4 சதவீத வீழ்ச்சியினைப் பதிவுசெய்தன.


இலங்கைப் பொருளாதாரமானது பெயரளவு நியதிகளில் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2021இன் முதலரைப்பகுதியில் 13.8 சதவீதத்தினால் விரிவடைந்தது. மொத்த உள்நாட்டு உற்பத்தி மதிப்பீடுகளின் செலவீன அணுகுமுறையின்படி, 2021இன் முதலரையின் பொருளாதார வளர்ச்சியானது முக்கியமாக நுகர்வுச் செலவினத்தின் விரிவாக்கத்தின் உந்துதலால் ஏற்பட்டதாகும். மொ.உ.உற்பத்தியின் 84.9 சதவீதத்திற்கு வகைகூறும் நுகர்வுச் செலவினம், முன்னைய ஆண்டின் தொடர்பான காலப்பகுதியின் 2.9 சதவீதம் கொண்ட சுருக்கத்துடன் ஒப்பிடுகையில் 2021இன் முதலரையில் 16.5 சதவீத வளர்ச்சியியொன்றினைப் பதிவுசெய்தது. இவ் விரிவாக்கமானது முக்கியமாக வீட்டுத்துறை செலவினத்தில் அவதானிக்கப்பட்டதுடன், இது முன்னைய ஆண்டின் ஒத்த காலப்பகுதியில் பதிவுசெய்யப்பட்ட 4.3 சதவீதம் கொண்ட சுருக்கத்துடன் ஒப்பிடுகையில் 2021இன் முதலரைப்பகுதியில் 17.9 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்தது. அரசாங்க நுகர்வானது 2020இன் முதலரைப்பகுதியில் பதிவுசெய்யப்பட்ட 6.9 சதவீத வளர்ச்சிக்கு மேலாக, 2021இன் முதலரைப்பகுதியில் 6.7 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்தது. 2020இன் முதலரையில் 11.4 சதவீதம் கொண்ட ஆண்டுக்காண்டு சுருக்கமொன்றினைப் பதிவுசெய்த முதலீட்டுச் செலவினமானது நிலையான மூலதனவாக்கத்தின் 17.3 சதவீத குறிப்பிடத்தக்களவு வளர்ச்சியின் காரணமாக, 2021இன் ஒத்த காலப்பகுதியில் ஆண்டுக்காண்டு அடிப்படையில் 16.7 சதவீதத்தினால் விரிவடைந்தது. பெயரளவு மொ.உ.உற்பத்தியின் சதவீதமாக முதலீடு முன்னைய ஆண்டின் தொடர்பான காலப்பகுதியின் 23.9 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2021இன் முதலரையில் 24.5 சதவீதமாக அதிகரித்திருந்தது. பொருட்கள் மற்றும் பணிகள் தொடர்பிலான தேறிய வெளிநாட்டுக் கேள்வி முன்னைய ஆண்டிலிருந்ததை விட 2021இன் முதலரைப்பகுதியில் தேய்வடைந்து காணப்பட்டது. நடைமுறை விலைகளில் பொருட்கள் மற்றும் பணிகள் ஏற்றுமதிகளில் ஆண்டுக்காண்டு அடிப்படையில் 19.1 சதவீத குறிப்பிடத்தக்க வளர்ச்சி காணப்பட்டபோதிலும், இறக்குமதி செலவினம் ஆண்டுக்காண்டு அடிப்படையில் 29.4 சதவீத துரித வேகத்தில் விரிவடைந்தது. இதன் விளைவாக, பெயரளவு மொ.உ.உற்பத்தியின் சதவீதமாக தேறிய வெளிநாட்டுக் கேள்வி 2020இன் முதலரையின் -6.9 சதவீதத்திலிருந்து 2021இன் ஒத்த காலப்பகுதியில் -9.4 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது.

உலகளாவிய நோய்த்தொற்றின் தாக்கத்தினைப் பிரதிபலிக்கும் விதத்தில் தொழிற்சந்தையில் தொடர்ச்சியான இடையூறுகள் அவதானிக்கப்பட்டு ஒப்பீட்டளவில் குறைந்த தொழிற்படை பங்கேற்பு வீதம் மற்றும் உயர்ந்த தொழிலின்மை வீதத்தினையும் விளைவித்தன. தொழிற்படை பங்கேற்பு வீதம் 2020இன் நான்காம் காலாண்டின் 50.1 சதவீதத்திலிருந்து 2021இன் முதற் காலாண்டில் 50.9 சதவீதத்திற்கு சிறிதளவில் அதிகரித்தது. இருப்பினும், உலகளாவிய நோய்த்தொற்றின் மூன்றாம் அலையின் தோற்றத்துடன் தொழிற்படை பங்கேற்பு வீதமானது 2021இன் இரண்டாம் காலாண்டில் 49.8 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது. அதேவேளை, தொழிலின்மை வீதம் உலகளாவிய நோய்த்தொற்று ஆரம்பித்த காலப்பகுதியிலிருந்து தொடர்ச்சியான ஆறு காலாண்டுகளிலும் 5 சதவீதத்திற்கு மேலாக காணப்பட்டதுடன், தொழிலின்மை வீதமானது 2021இன் முதல் காலாண்டிலும் இரண்டாம் காலாண்டிலும் முறையே 5.7 சதவீதம் மற்றும் 5.1 சதவீதமாக பதிவுசெய்யப்பட்டது. அதற்கமைய, 2021இன் முதலரைக்கான தொழிலின்மை வீதம் 5.4 சதவீதமாகக் காணப்பட்டது.

> *கொவிட்-19 நோய்தொற்றின் மூன்றாம் அலையின் போது ஏற்பட்ட வழங்கல் பக்க இடையூறுகளும் பாதகமான வானிலை நிலைமைகளும் உயர்ந்த உணவுப் பணவீக்கத்திற்கு வழிவகுத்தன...*

2021இன் முற்பகுதியில் தொடர்ந்தும் கட்டுப்படுத்தப்பட்டிருந்த பணவீக்கமானது உயர் உணவுப் பணவீக்கத்தின் தூண்டுதலால் அதன் பின்னரான காலப்பகுதியில் உயர்வடைந்து காணப்பட்டது. அதிகரித்த உலகளாவிய விலைகளுக்கு இசைவாக எரிபொருள் உட்பட பல்வேறு பண்டங்களின் நிருவாக ரீதியாக நிர்ணயிக்கப்பட்ட விலைகள் மேல்நோக்கி திருத்தப்பட்டதுடன் தெரிவுசெய்யப்பட்ட இறக்குமதிப் பண்டங்களின் மீதான விலைக் கட்டுப்பாடுகளும் நீக்கப்பட்டன. அதற்கமைய, கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணினால் (2013=100) அளவிடப்பட்டவாறாக முதன்மை பணவீக்கமானது அண்மைய மாதங்களில் உயர்வடைந்ததுடன் 2021 ஒத்தோபரில் விரும்பத்தக்க பணவீக்க வீச்சான 4-6 சதவீதத்தின் மேல் எல்லையை விஞ்சியது. தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண்ணினால் (2013=100) அளவிடப்பட்டவாறாக முதன்மை பணவீக்கமும் உயர்வடைந்து காணப்பட்டதுடன், இது உணவுப் பொருட்களின் மீதான அதிக நிறையிடலினால் தொடர்ந்தும் ஒப்பீட்டளவில் உயர்ந்த மட்டத்திலேயே

**வரைபடம் 1.2**
**முதன்மை மற்றும் மையப் பணவீக்கத்தின் அசைவுகள் (ஆண்டுக்காண்டு)**




*மூலம்*: தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்

காணப்பட்டது. கேள்வித் தூண்டலினாலான பணவீக்க அழுத்தத்தை அளவிடுகின்ற மையப் பணவீக்கமும் அண்மிய மாதங்களில் மிதமாக உயர்வடைந்து காணப்பட்டதுடன் பொருளாதார நடவடிக்கை படிப்படியாக வழமைக்குத் திரும்புவதுடன் பொருளாதாரத்தில் கேள்வி அழுத்தங்களின் உருவாக்கத்தைக் குறித்துக்காட்டுகின்றது.


### வெளிநாட்டுத் துறை

கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்றினால் தோற்றம்பெற்ற சவால்களினால் வெளிநாட்டுத் துறையின் பாதிப்படையக்கூடிய தன்மைகள் அதிகரித்தபோதிலும், அரசாங்கத்தினாலும் மத்திய வங்கியினாலும் பின்பற்றப்பட்ட உரிய நேரத்திலான வழிமுறைகள் 2021இல் இதுவரையில் வெளிநாட்டுத் துறையானது தாக்குபிடிக்கக்கூடிய தன்மையுடன் இருப்பதற்கு துணைப்புரிந்தன. வணிகப்பொருள் ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்களில் மீட்சி காணப்பட்டபோதிலும், இறக்குமதிகள் மீதான செலவினத்தில் குறிப்பிடத்தக்களவிலான அதிகரிப்பின் காரணமாக 2021 ஓகத்தில் முடிவடையும் எட்டு மாதங்களில் வர்த்தகப் பற்றாக்குறை விரிவடைந்தது. 2021 ஓகத்து வரையான எட்டு மாதங்களில் வர்த்தகப் பற்றாக்குறையானது 2020இன் ஒப்பீட்டுக் காலப்பகுதியின் ஐ.அ.டொலர் 3.8 பில்லியனுடன் ஒப்பிடுகையில் ஐ.அ.டொலர் 5.5 பில்லியனுக்கு விரிவடைந்தது. ஏற்றுமதிச் செயலாற்றமானது கைத்தொழில், வேளாண்மை மற்றும் கனிப்பொருள் ஏற்றுமதிகள் உள்ளடங்கலாக ஏறத்தாள அனைத்து துணைத் துறைகளினதும் ஆரோக்கியமான வளர்ச்சியொன்றினைப் பதிவுசெய்து எதிர்பார்த்ததை விடவும் விரைவான மீட்சியைப் பதிவுசெய்தன.

> *ஏற்றுமதிகளின் குறிப்பிடத்தக்களவான வளர்ச்சியினை அதிகரித்த இறக்குமதிகள் எதிரீடு செய்தமையினால் 2021இன் இதுவரையில் வர்த்தகப் பற்றாக்குறை விரிவடைந்துள்ளது...*


சில கட்டுப்பாடுகள் பேணப்பட்டபோதிலும், அதிகரித்த உள்நாட்டு நடவடிக்கைகள் மற்றும் அதிகரித்த உலகளாவிய விலைகளின் பெறுபேறாக இறக்குமதிச் செலவினமும் அதிகரித்தது. வெளிநாட்டு தொழில்வாய்ப்புகளுக்கான புறப்படுகைகளின் வீழ்ச்சி, உலகளாவிய பயண நடவடிக்கைகள் மீள ஆரம்பிக்கப்பட்டமை மற்றும் பணவனுப்பலுக்கு முறைசாரா ஊடகங்களை நோக்கிய சாத்தியமான மாற்றம் என்பவற்றுடன் தொழிலாளர் பணவனுப்பல்களின் வளர்ச்சி உத்வேகமானது மிதமடைந்தது. எவ்வாறாயினும், புலம்பெயர் வள நாடுகள் படிப்படியாக திறக்கப்பட்டதுடன் அண்மைய மாதங்களில் புலம்பெயர்வில் அதிகரிப்பொன்று அவதானிக்கப்பட்டது.

**வரைபடம் 1.3**
**வர்த்தக நிலுவை மற்றும் நடைமுறைக் கணக்கு நிலுவை**




*மூலம்*: இலங்கை மத்திய வங்கி

**வரைபடம் 1.4**
**மொத்த அலுவல்சார் ஒதுக்குகள் மற்றும் செலாவணி வீதம்**




*மூலம்*: இலங்கை மத்திய வங்கி

நேரடி முதலீட்டு நிறுவனங்களின் பங்கிலாபக் கொடுப்பனவுகள் மற்றும் அரசாங்க வெளிநாட்டுக் கடன்கள் மீதான வட்டிக் கொடுப்பனவுகள் என்பன 2020இன் முதலரைப்பகுதியுடன் ஒப்பிடுகையில் ஒப்பீட்டளவில் குறைவாக காணப்பட்டமையினால் 2021இன் முதலரைப்பகுதியில் முதனிலை வருமானக் கணக்கின் பற்றாக்குறை மிதமடைந்தது. உலகளாவிய நோய்த்தொற்றினால் கடுமையாக பாதிப்படைந்துள்ள சுற்றுலாத்துறையானது குறைவான எண்ணிக்கையிலான வருகையினை மாத்திரமே பதிவுசெய்தது. எவ்வாறாயினும், தகவல் தொழில்நுட்பம் மற்றும் வெளியிலிருந்து வியாபாரப் பணிகளைப் பெற்றுக்கொள்ளல் துறையானது ஆரோக்கியமான வளர்ச்சியுடன் பணிகள் துறைக்கு பங்களித்திருந்தது. 2021இன் முதலரைப்பகுதியில், உலகளாவிய மற்றும் உள்நாட்டு பொருளாதார நடவடிக்கைகளின் மீட்சிக்கு மத்தியில் மாற்றிக் கப்பலேற்றல் மற்றும் சரக்குக் கையாளல் நடவடிக்கைகளின் அதிகரித்த ஆதரவுடன் போக்குவரத்து துறையிலிருந்தான வருவாய்களும் அதிகரித்தன. நடைமுறைக் கணக்கானது 2020இன் முதலரைப் பகுதியின் ஐ.அ.டொலர் 1.1 பில்லியன் பற்றாக்குறையுடன் ஒப்பிடுகையில் 2021இன் முதலரைப் பகுதியில் ஐ.அ.டொலர் 1.5 பில்லியன் பற்றாக்குறையொன்றினைப் பதிவுசெய்தது. 2021இன் முதலரைப்பகுதியில் நிதியியல் கணக்கிற்கான உட்பாய்ச்சல்கள் மட்டுப்படுத்தப்பட்டளவில் காணப்பட்டன. 2020இன் முதலரைப்பகுதியில் நேரடி முதலீட்டு நிறுவனங்களுக்கான வெளிநாட்டுக் கடன்கள் உள்ளடங்கலாக வெளிநாட்டு நேரடி முதலீடு மந்தமாக காணப்பட்டது. ஒப்பீட்டு ரீதியில் குறைவான வெளிநாட்டு நேரடி முதலீட்டின் உட்பாய்ச்சல்கள் உலகளாவிய மற்றும் உள்நாட்டு ரீதியில் அவ்வப்போதான கொவிட்-19 நோய்ப்பரவலின் காரணமாக நிச்சயமற்றத்தன்மையினைப் பிரதிபலிக்கின்றன. ஆண்டின் முதலரைப்பகுதியில் நிதியியல் கணக்கிற்கான முக்கிய உட்பாய்ச்சலானது 2021 ஏப்பிறலில் சீன அபிவிருத்தி வங்கியிடமிருந்தான கூட்டுக்கடன் வசதியின் பெறுகையாகும். இத்தகைய உட்பாய்ச்சல்களுக்கு மேலதிகமாக, பன்னாட்டு நாணய நிதியத்திடமிருந்தான பன்னாட்டு நாணய நிதியத்தின் சிறப்பு எடுப்பனவு உரிமை ஒதுக்கீடு, பங்களாதேஷ் வங்கியுடனான பன்னாட்டு பரஸ்பர பரிமாற்றல் வசதி மற்றும் 2021 ஓகத்தில் சீன அபிவிருத்தி வங்கியிடமிருந்தான கூட்டுக்கடனின் நிலுவை போன்றவை நிதியியல் கணக்கிற்கான குறிப்பிடத்தக்க உட்பாய்ச்சல்களாகும். இதற்கு மேலதிகமாக, இலங்கை மத்திய வங்கியானது சீன மக்கள் வங்கியுடன் ஏறத்தாள ஐ.அ.டொலர் 1.5 பில்லியனிற்குச் சமனான பன்னாட்டு நாணய பரஸ்பர பரிமாற்றல் வசதியினைப் பெற்றுக்கொண்டது. இதன் பெறுகைகள் இதுவரையில் எடுப்பனவு செய்யப்படவில்லை. நிதியியல் கணக்கிலிருந்தான வெளிப்பாய்ச்சல்கள் 2021 யூலையின் ஐ.அ.டொலர் 1.0 பில்லியன் கொண்ட நாட்டிற்கான பன்னாட்டு முறியின் முதிர்ச்சி உள்ளடங்கலாக பாரியளவான வெளிநாட்டுப் படுகடன் தீர்ப்பனவு கொடுப்பனவுகளின் காரணமாக கணிசமானளவில் உயர்வடைந்து காணப்பட்டது. படிப்படியான வெளிநாட்டு முதலீட்டு வெளிப்பாய்ச்சல்கள் அரசாங்க பிணையங்கள் சந்தை மற்றும் கொழும்பு பங்குப் பரிவர்த்தனை ஆகிய இரண்டிலும் பதிவுசெய்யப்பட்டன. இதன் விளைவாக, 2021 செத்தெம்பரில் முடிவடையும் ஒன்பது மாத காலப்பகுதியில் சென்மதி நிலுவையின் திரண்ட நிலுவை குறிப்பிடத்தக்க பற்றாக்குறையினைப் பதிவுசெய்தது. உலகளாவிய நோய்த்தொற்றுக்கு மத்தியில் அரசாங்கத்திற்கான மட்டுப்படுத்தப்பட்ட வெளிநாட்டு செலாவணி உட்பாய்ச்சல்கள் மற்றும் தொடர்ச்சியான வெளிநாட்டு படுகடன் தீர்ப்பனவுக் கொடுப்பனவுகளினால் 2021 செத்தெம்பர் இறுதியளவில் மொத்த அலுவல்சார் ஒதுக்குகள் ஐ.அ.டொலர் 2.7 பில்லியனுக்கு வீழ்ச்சியடைந்தன. அதேவேளை, மொத்த அலுவல்சார் ஒதுக்குகள் மற்றும் வங்கித்தொழில் துறையின் வெளிநாட்டுச் சொத்துக்களை உள்ளடக்குகின்ற வெளிநாட்டுச் சொத்துக்கள் 2021 செத்தெம்பர் இறுதியில் ஐ.அ.டொலர் 6.1 பில்லியனாக கணக்கிடப்பட்டன. சந்தைப் பெறுமதியை அடிப்படையாகக் கொண்ட இலங்கையின் மொத்த வெளிநின்ற வெளிநாட்டுப் படுகடனானது இலங்கையின் வெளிநின்ற நாட்டிற்கான பன்னாட்டு முறிகளின் சந்தைச் விலைகளின் அதிகரிப்பிலிருந்து தோன்றிய மாற்றங்களின் முக்கிய காரணமாக ஆண்டின் ஆரம்பத்துடன் ஒப்பிடுகையில் 2021 யூன் இறுதியளவில் அதிகரித்தது.

> *மட்டுப்படுத்தப்பட்ட வெளிநாட்டு செலாவணி உட்பாய்ச்சல்களுக்கு புறம்பாக, இலங்கை அனைத்து வெளிநாட்டு படுகடன் கடப்பாடுகளையும் பூர்த்தி செய்தது....*

பாரிய வெளிப்பாய்ச்சல்களுக்கு மத்தியில் உள்நாட்டு வெளிநாட்டு செலாவணிச் சந்தைக்கு பற்றாக்குறையான உட்பாய்ச்சல்களின் காரணமாக இலங்கை ரூபா 2021இன் சனவரி தொடக்கம் ஏப்பிறல் காலப்பகுதியில் தேய்வடைந்தது. செலாவணி வீதமானது 2020 திசெம்பர் இறுதியில் ஐ.அ.டொலர் ஒன்றிற்கு ரூ.186.41 இலிருந்து 2021 ஏப்பிறல் இறுதியிலுள்ளவாறு ஐ.அ.டொலர் ஒன்றிற்கு ரூ.199.54 இனை அடைந்தது. அதனைத் தொடர்ந்து, வங்கிகளுக்கிடையிலான சந்தையில் நிறைவேற்றப்பட்ட சராசரி உடன் செலாவணி வீதம் அதிகளவான தார்மீகப் பொறுப்புடன் ஐ.அ.டொலர் ஒன்றிற்கு சுமார் ரூ.200 ஆக பேணப்பட்டது. 2021 ஒத்தோபர் 01ஆம் நாளன்று *'பேரண்டப் பொருளாதார மற்றும் நிதியியல் முறைமை*

*உறுதிப்பாட்டினை நிச்சயப்படுத்திக் கொள்வதற்கான ஆறு மாதகால வழிகாட்டலில்'* அறிவிக்கப்பட்டவாறு, அத்தியாவசிய இறக்குமதிகளுக்கான கொடுப்பனவினை செலுத்துவதற்கான திரவத்தன்மையை வழங்குகின்ற வகையில் இலங்கை மத்திய வங்கி அண்மையில் உள்நாட்டு வெளிநாட்டு செலாவணிச் சந்தையில் குறிப்பிடத்தக்களவில் தலையிட்டது. குறித்த தலையீடானது செலாவணி வீதத்தினை தற்போதைய மட்டமான ஐ.அ.டொலர் ஒன்றிற்கு ரூ.200 இல் உறுதிநிலைப்படுத்துவதற்கு உதவியது. ரூபாவானது ஆண்டின் ஆரம்பத்திலிருந்து 2021 ஒத்தோபர் இறுதிவரை ஐ.அ.டொலருக்கெதிராக 7.7 சதவீதத்தினால் தேய்வடைந்தது. 2021 ஒத்தோபர் இறுதியளவில், குறுக்கு நாணயச் செலாவணி வீத அசைவுகளைப் பிரதிபலித்து, இலங்கை ரூபாவானது ஸ்ரேலிங் பவுண், யூரோ, இந்திய ரூபா என்பவற்றுக்கு எதிராகவும் தேய்வடைந்த அதேவேளையில், யப்பானிய யென்னுக்கு எதிராக பெறுமதி உயர்வடைந்துள்ளது. கூடை நாணயங்களுக்கெதிராக இலங்கை ரூபாவின் அசைவுகளை அளவிடுகின்ற பெயரளவு தாக்கமுள்ள செலாவணி வீத சுட்டெண் மற்றும் உண்மைத் தாக்கமுள்ள செலாவணி வீதச் சுட்டெண் என்பன 2021 ஒத்தோபர் இறுதியில் முடிவடையும் பத்து மாதக்காலப்பகுதியில் வீழ்ச்சியடைந்தன. உண்மைத் தாக்கமுள்ள செலாவணி வீதச் சுட்டெண்கள் அடிப்படை ஆண்டு மட்டத்திற்கு கீழாக (2017=100) தொடர்ந்துமிருந்து செலாவணி வீதமானது போதியளவு போட்டித்தன்மை வாய்ந்ததாயிருப்பதை பிரதிபலிக்கின்றன.


## இறைத் துறை

இறைத் தொழிற்பாடுகள் முக்கியமாக உலகளாவிய நோய்த்தொற்றின் பாதகமான விளைவுகளைப் பிரதிபலித்து 2021 யூலையில் முடிவடைந்த ஏழு மாத காலப்பகுதியில் கணிசமான சவால்களுக்கு தொடர்ச்சியாக முகங்கொடுத்திருந்தன. அரச செலவினமானது 2021 யூலையில் முடிவடைந்த ஏழு மாத காலப்பகுதியில் ஆண்டிற்காண்டு அடிப்படையில் ரூ.1,814.4 பில்லியனுக்கு 10.8 சதவீதத்தினால் அதிகரித்திருந்த அதேவேளை அரசிறை மற்றும் கொடைகள் தொடர்புடைய காலப்பகுதியில் ஆண்டிற்காண்டு அடிப்படையில் ரூ.799.8 பில்லியனுக்கு 4.5 சதவீதத்தினால் மாத்திரம் அதிகரித்திருந்தன. வரவுசெலவுதிட்ட பற்றாக்குறையின் விரைவான விரிவாக்கமானது மத்திய அரசின் வெளிநின்ற படுகடனை அதிகரித்திருந்தது. குறிப்பாக வர்த்தக மூலங்களிலிருந்தான வெளிநாட்டு நிதியீட்டத்திற்கான அணுகலானது கட்டுப்படுத்தப்பட்டிருந்ததுடன் இது அரசாங்கத்தின் வெளிநாட்டு நாணய படுகடன் பணிக்கொடுப்பனவு மீதான அழுத்தங்களை ஏற்படுத்தியிருந்தது. இருப்பினும், அரசாங்கமானது மத்திய வங்கியின் உதவியுடன் அனைத்து முதிர்ச்சியடைந்த மத்திய அரச படுகடனையும் முழுமையாக மீள்கொடுப்பனவு செய்திருந்தது.

> *"மட்டுப்படுத்தப்பட்ட இறை இடைவெளிக்குப் புறம்பாக அரசாங்கத்தினால் அசாதாரணமான இறைத்தூண்டல் வழிமுறைகள் நடைமுறைப்படுத்தப்பட்டன....*

இத்தகைய சவால்களுக்கு புறம்பாக, அரசாங்கமானது தாழ்ந்த வரிக்கட்டமைப்பு மற்றும் சமூக நலன்புரித் திட்டங்களைத் தொடர்ந்திருந்த அதேவேளை உலகளாவிய நோய்த்தொற்றிற்கு மத்தியில் தனியாட்களுக்கு நேரடி நிதியியல் ஆதரவினை வழங்கியதனூடான அசாதாரணமான இறைத் தூண்டல்களை வழங்கியதன் வாயிலாக பொருளாதாரத்தின் மீதான உலகளாவிய நோய்த்தொற்றின் தாக்கத்தினை குறைப்பதற்கு துணை புரிந்தது. மேலும்,


**வரைபடம் 1.5**
**அரசிறைக்கெதிராக செலவினம் (அ)**




(அ) 2021இற்கான தரவுகள் மத்திய வங்கியின் மொ.உ.உற்பத்திக்கான எறிவுகளை அடிப்படையாகக் கொண்டவை.

*மூலங்கள்:* நிதி அமைச்சு
இலங்கை மத்திய வங்கி

**வரைபடம் 1.6**
**முக்கிய இறை மீதிகள் (அ)**




(அ) 2021இற்கான தரவுகள் மத்திய வங்கியின் மொ.உ.உற்பத்திக்கான எறிவுகளை அடிப்படையாகக் கொண்டவை.

*மூலங்கள்:* நிதி அமைச்சு
இலங்கை மத்திய வங்கி

அரசாங்கமானது தேசிய ரீதியில் கொவிட்-19 தடுப்பூசி நிகழ்ச்சித்திட்டத்தினை வெற்றிகரமாக ஆரம்பித்திருந்ததன் ஊடாக உலகளாவிய நோய்த்தொற்றை பாரியளவில் கட்டுப்படுத்தியிருந்த அதேவேளை பொருளாதாரத்தின் விரைவான மீட்சியையும் உறுதிப்படுத்தியிருந்தது.

2021 சனவரியிலிருந்து யூலை வரையான காலப்பகுதிக்கான அரசிறை சேகரிப்பு 2020இன் தொடர்பான காலப்பகுதியின் ரூ.763.2 பில்லியனிலிருந்து (மொ.உ.உற்பத்தியின் 5.1 சதவீதம்) ரூ.798.9 பில்லியனுக்கு (மதிப்பிடப்பட்ட மொ.உ.உற்பத்தியின் 4.9 சதவீதம்) அதிகரித்தது. முன்னைய ஆண்டின் அதேகாலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் 2021 யூலையில் முடிவடைந்த ஏழு மாதகாலப்பகுதியில் அரசிறையின் அதிகரிப்பானது பொருளாதார நடவடிக்கையின் மீட்சியைப் பிரதிபலித்து துறைமுக மற்றும் விமான அபிவிருத்தி தீர்வை, பெறுமதிசேர் வரி மற்றும் பண்ட ஏற்றுமதி உதவுதொகைத்திட்டத் தீர்வை என்பவற்றிலிருந்தான உயர்ந்த அரசிறை திரட்டுக்களிலிருந்து நன்மையடைந்திருந்தது. எனினும், அரசிறையின் தற்போதைய மட்டமானது உலகளாவிய நோய்த்தொற்றிக்கு முன்னரான மட்டங்களைக் காட்டிலும் கணிசமானளவு கீழாகக் காணப்பட்டுகின்றது.

அதேவேளையில், அரச செலவினம் மற்றும் தேறிய கடன் வழங்கல் 2020இன் தொடர்பான காலப்பகுதியின் ரூ.1,637.9 பில்லியனிலிருந்து (மொ.உ.உற்பத்தியின் 10.9 சதவீதம்) 2021 யூலையில் முடிவடைந்த ஏழு மாதகாலப்பகுதியில் ரூ.1,814.4 பில்லியனிற்கு (மதிப்பிடப்பட்ட மொ.உ.உற்பத்தியின் 11.0 சதவீதம்) அதிகரித்திருந்தது. இத்தகைய அதிகரிப்பானது, உலகளாவிய நோய்த்தொற்றுடன் தொடர்புடைய செலவினம் அதேபோன்று வட்டிக்கொடுப்பனவு, சம்பளங்கள் மற்றும் கூலிகளிலான அதிகரிப்பு என்பனவற்றின் காரணமாக அதிகரித்த மீண்டெழும் செலவினத்தைப் பிரதிபலிக்கின்றது. அரச முதலீடானது 2020இன் தொடர்பான காலப்பகுதியின் ரூ.192.3 பில்லியனிலிருந்து (மொ.உ.உற்பத்தியின் 1.3 சதவீதம்) 2021 யூலையில் முடிவடைந்த ஏழு மாதகாலப்பகுதியில் ரூ.242.7 பில்லியனுக்கு (மதிப்பிடப்பட்ட மொ.உ.உற்பத்தியின் 1.5 சதவீதம்) அதிகரித்திருந்தது. அரச செலவினத்தின் அதிகரிப்பானது அரசிறையின் பெயரளவு அதிகரிப்பினை எதிரீடு செய்து வரவுசெலவுத்திட்ட பற்றாக்குறையை 2020இன் தொடர்பான காலப்பகுதியின் ரூ.872.6 பில்லியனிலிருந்து (மொ.உ.உற்பத்தியின் 5.8 சதவீதம்) 2021 சனவரி தொடக்கம் யூலை வரையான ஏழு மாத காலப்பகுதியில் ரூ.1,014.5 பில்லியனுக்கு (மதிப்பிடப்பட்ட மொ.உ.உற்பத்தியின் 6.2 சதவீதம்) விரிவடைவதற்கு இட்டுச்சென்றிருந்தது. அரசாங்கத்தின் குறைசேமிப்பினை பிரதிபலிக்கின்ற நடைமுறைக் கணக்குப் பற்றாக்குறையானது 2020இன் தொடர்புடைய காலப்பகுதியில் பதிவுசெய்யப்பட்ட ரூ.694.5 பில்லியனிலிருந்து (மொ.உ.உற்பத்தியின் 4.6 சதவீதம்) 2021 யூலையில் முடிவடைந்த ஏழு மாதகாலப்பகுதியில் ரூ.779.1 பில்லியனுக்கு (மதிப்பிடப்பட்ட மொ.உ.உற்பத்தியின் 4.7 சதவீதம்) அதிகரித்திருந்தது. ஆரம்ப மீதியானது 2020இன் தொடர்புடைய காலப்பகுதியின் ரூ.288.9 பில்லியன் கொண்ட (மொ.உ.உற்பத்தியின் 1.9 சதவீதம்) பற்றாக்குறையிலிருந்து 2021 சனவரி-யூலை காலப்பகுதியில் ரூ.377.2 பில்லியன் (மதிப்பிடப்பட்ட மொ.உ.உற்பத்தியின் 2.3 சதவீதம்) பற்றாக்குறைக்கு அதிகரித்திருந்தது.

> ***மத்திய அரசின் வெளிநின்ற வெளிநாட்டுப் படுகடனின் சார்புப் பங்கானது 2020 இறுதியில் அவதானிக்கப்பட்ட மட்டங்களிலிருந்து 2021 யூலை இறுதியில் மேலும் வீழ்ச்சியடைந்திருந்தது.....***

நாட்டிற்கான தரமிடல் முகவர்களின் தரம் குறைப்புக்களுக்கு மத்தியில் பாரம்பரியமான உலகளாவிய சந்தைகளுக்கான அணுகுவழி தொடர்ந்தும் வரையறுக்கப்பட்டதாகவிருந்த வேளையில் நடுத்தர காலத்தில் வெளிநாட்டுப் பொறுப்புக்களில் தங்கியிருத்தலை குறைப்பதற்கான அரசாங்கத்தின் எதிர்பார்ப்புக்களை பிரதிபலித்து அரசாங்கமானது வரவுசெலவுதிட்ட பற்றாக்குறைக்கான நிதியீட்டத்தினை மேற்கொள்வதில் முழுமையாக உள்நாட்டு மூலங்களில் தங்கியிருந்தது. தேறிய உள்நாட்டு நிதியீட்டமானது 2020இன் தொடர்பான காலப்பகுதியின் ரூ.1,067.0 பில்லியனுடன் ஒப்பிடுகையில் 2021 யூலையில் முடிவடைந்த ஏழு மாதகாலப்பகுதியில் ரூ. 1,204.6 பில்லியன் பெறுமதியாகவிருந்த அதேவேளை வெளிநாட்டு நிதியீட்டமானது 2020இன் தொடர்பான காலப்பகுதியில் பதிவுசெய்யப்பட்ட ரூ.194.5 பில்லியன் பெறுமதியான தேறிய வெளிநாட்டு மீள்கொடுப்பனவுடன் ஒப்பிடுகையில் 2021 யூலையில் முடிவடைந்த ஏழு மாதகாலப்பகுதியில் ரூ.190.1 பில்லியன் தேறிய மீள்கொடுப்பனவினைப் பதிவு செய்திருந்தது. தேறிய உள்நாட்டு நிதியீட்டத்திற்கான மத்திய வங்கியின் பங்களிப்பானது கடந்த ஆண்டின் தொடர்பான காலப்பகுதியின் 17.5 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2021 யூலையில் முடிவடைந்த ஏழு மாதகாலப்பகுதியில் 45.6 சதவீதத்திற்கு அதிகரித்திருந்தது. மத்திய வங்கியானது அதிகரித்த செலவினம் மற்றும் படுகடன் பணிக்கொடுப்பனவுத் தேவைப்பாடு என்பவற்றை


பூர்த்திசெய்வதற்காக முன்னொருபோதுமில்லாத அளவிற்கு நிதியீட்டத்தை வழங்குகின்ற நியதிகளில் அரசாங்கத்திற்கு ஆதரவளித்திருந்தது. 2020இன் இறுதியில் ரூ.15,117.2 பில்லியனாக விளங்கிய மத்திய அரச படுகடனானது 2021இன் யூலை இறுதியில் ரூ. 16,751.7 பில்லியனுக்கு அதிகரித்திருந்தது. எனினும், வெளிநாட்டு படுகடனின் ஏனைய தேறிய மீள்கொடுப்பனவுகளுக்கிடையே முதிர்ச்சியடைந்த நாட்டிற்கான பன்னாட்டு முறிகளுடன் மத்திய அரச படுகடனின் வெளிநாட்டில் தங்கியிருத்தலானது வீழ்ச்சியடைந்திருந்தது.

### நாணயத்துறை

மத்திய வங்கி உலகளாவிய நோய்த்தொற்றினால் பாதிக்கப்பட்ட வியாபாரங்கள் மற்றும் தனிநபர்களுக்கு ஆதரவளிக்கும் அதேவேளையில், பொருளாதார மீட்சியினை வசதிப்படுத்தும் பொருட்டு 2020 ஆரம்பத்திலிருந்து 2021இன் பெருமளவான பகுதியில் நடைமுறைப்படுத்தப்பட்ட முன்னெப்பொழுதுமில்லாத நாணயத் தூண்டல் வழிமுறைகளைத் தொடர்ந்தது. உள்நாட்டு நாணயச் சந்தையில் காணப்பட்ட தாழ்ந்த வட்டி வீதங்களும் மிகையான

> *தாழ்ந்த கடன் வழங்கல் வீதங்களினால் ஆதரவளிக்கப்பட்டும் கொடுகடனிற்கான அதிகரித்த கேள்வியைப் பிரதிபலித்தும் தனியார் துறைக்கு வழங்கப்பட்ட கொடுகடன் 2021 சனவரி-ஓகத்து காலப்பகுதியில் குறிப்பிடத்தக்களவு விரிவடைந்தது....*

வரைபடம் 1.7
துணைநில் வீத வீச்சு மற்றும் தெரிந்தெடுக்கப்பட்ட சந்தை வட்டி வீதங்கள்




*மூலம்:* இலங்கை மத்திய வங்கி

அட்டவணை 1.1
அண்மைக்கால நாணயக் கொள்கை வழிமுறைகள்

| திகதி | வழிமுறைகள் |
|---|---|
| 2020 சன 30 | துணைநில் வைப்பு வசதி வீதம் மற்றும் துணைநில் கடன்வழங்கல் வசதி வீதமானது 50 அடிப்படைப் புள்ளிகளால் முறையே 6.50 சதவீதத்திற்கும் 7.50 சதவீதத்திற்கும் குறைக்கப்பட்டன. |
| 2020 மார் 17 | துணைநில் வைப்பு வசதி வீதமும் துணைநில் கடன்வழங்கல் வசதி வீதமும் 25 அடிப்படைப் புள்ளிகளினால் முறையே 6.25 சதவீதத்திற்கும் 7.25 சதவீதத்திற்கும் குறைக்கப்பட்டன. |
| 2020 மார் 17 | 2020 மார்ச் 16ஆம் நாளிலிருந்து ஆரம்பிக்கும் ஒதுக்குக் காலப்பகுதியிலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் 1.00 சதவீதப் புள்ளியினால் 4.00 சதவீதத்திற்குக் குறைக்கப்பட்டது. |
| 2020 மார் 27 | கொவிட்-19இனால் பாதிக்கப்பட்ட வர்த்தக முயற்சிகளுக்கு ஆதரவளிக்கும் வகையில் ஒன்றுசேர்ந்த தொகை ரூ. 50 பில்லியன் கொண்ட சௌபாக்கியா கொவிட்-19 புத்துயிரளித்தல் வசதி (பாகம் I - மீள்நிதியிடல் திட்டம்) 4.00 சதவீத வட்டியுடன் ஓர் சலுகை கடன் செயற்திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது. |
| 2020 ஏப் 03 | 2020 ஏப்பிறல் 03ஆம் நாளின் வியாபார முடிவிலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் துணைநில் வைப்பு வசதி வீதமும் துணைநில் கடன்வழங்கல் வசதி வீதமும் 25 அடிப்படைப் புள்ளிகளினால் முறையே 6.00 சதவீதத்திற்கும் 7.00 சதவீதத்திற்கும் குறைக்கப்பட்டன. |
| 2020 ஏப் 16 | வங்கி வீதமானது 500 அடிப்படைப் புள்ளிகளினால் 10.00 சதவீதத்திற்கு குறைக்கப்பட்டு +300 அடிப்படை புள்ளிகள் எல்லையுடன் துணைநில் கடன்வழங்கல் வசதி வீதத்துடன் இசைந்து செல்லும் விதத்தில் தன்னியக்கமாக சரிசெய்துகொள்ள அனுமதிக்கப்பட்டது. |
| 2020 மே 06 | 2020 மே 06ஆம் நாளில் வியாபார முடிவிலிருந்து நடைமுறைக்கு வரும் விதத்தில் துணைநில் வைப்பு வசதி வீதமும் துணைநில் கடன்வழங்கல் வசதி வீதமும் 50 அடிப்படைப் புள்ளிகளினால் முறையே 5.50 சதவீதத்திற்கும் 6.50 சதவீதத்திற்கும் குறைக்கப்பட்டன. வங்கி வீதமானது தன்னியக்கமாக 9.50 சதவீதத்திற்கு குறைக்கப்பட்டது. |
| 2020 யூன் 16 | 2020 யூன் 16ஆம் நாளிலிருந்து ஆரம்பிக்கும் ஒதுக்குக் காலப்பகுதியிலிருந்து நடைமுறைக்கு வரும் விதத்தில் நியதி ஒதுக்கு விகிதம் 2.00 சதவீதப் புள்ளியினால் 2.00 சதவீதத்திற்குக் குறைக்கப்பட்டது. |
| 2020 யூன் 16 | 2020 மார்ச் 27இல் கொவிட்-19இனால் பாதிக்கப்பட்ட வர்த்தக முயற்சிகளுக்கு ஆதரவளிக்கும் வகையில் அறிமுகப்படுத்தப்பட்ட 4.00 சதவீத வட்டியுடன் கூடிய ரூ. 150 பில்லியன் கொண்ட சலுகை கடன் செயற்திட்டம் (சௌபாக்கியா கொவிட்-19 புத்துயிரளித்தல் வசதி - பாகம் II) நீடிக்கப்பட்டது. |
| 2020 யூலை 09 | துணைநில் வைப்பு வசதி வீதமும் துணைநில் கடன்வழங்கல் வசதி வீதமும் 100 அடிப்படைப் புள்ளிகளினால் முறையே 4.50 சதவீதத்திற்கும் 5.50 சதவீதத்திற்கும் குறைக்கப்பட்டன. வங்கி வீதம் தன்னியக்கமாக 8.50 சதவீதத்திற்கு குறைந்தது. |
| 2021 ஓகத் 19 | துணைநில் வைப்பு வசதி வீதம் மற்றும் துணைநில் கடன்வழங்கல் வசதி வீதமானது 50 அடிப்படைப் புள்ளிகளால் முறையே 5.00 சதவீதத்திற்கும் 6.00 சதவீதத்திற்கும் அதிகரிக்கப்பட்டன. வங்கி வீதமானது தன்னியக்கமாக 9.00 சதவீதத்திற்கு அதிகரித்தது. |
| 2021 ஓகத் 19 | நியதி ஒதுக்கு விகிதம், 2021 செத்தம்பர் 01இல் ஆரம்பமாகும் ஒதுக்குக் காலப்பகுதியிலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் 2.00 சதவீதப் புள்ளிகளால் 4.00 சதவீதத்திற்கு அதிகரிக்கப்பட்டது. |

*மூலம்:* இலங்கை மத்திய வங்கி

*குறிப்பு:* இலங்கை மத்திய வங்கி வட்டி வீதங்கள் மற்றும் கடன்வழங்கல் இலக்குகள் மீதான எல்லைகளை பின்வருமாறு நடைமுறைப்படுத்தியது:

- 2020 ஏப் 27 : உரிமம் பெற்ற வங்கிகளின் அடகுபிடித்தல் முற்பணங்களின் மீது வட்டி வீத உச்ச எல்லைகள் விதிக்கப்பட்டன
- 2020 ஓக 24 : தேர்ந்தெடுக்கப்பட்ட கடன்வழங்கல் சாதனங்கள் மீதான வட்டிவீத எல்லைகள் இறுக்கப்பட்டன
- 2020 நவெ 26 : ஈட்டினால் உத்தரவாதமளிக்கப்பட்ட வீட்டு கடன்கள் மீது அதிகபட்ச வட்டி வீதங்கள் அறிமுகப்படுத்தப்பட்டன
- 2021 ஏப் 21 : உரிமம் பெற்ற வங்கிகளுக்கான நுண்பாக சிறிய மற்றும் நடுத்தரளவு தொழில்முயற்சித் துறை மீதான முன்னுரிமைத் துறை கடன்வழங்கல் இலக்குகளை அறிமுகப்படுத்தியது

## கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்றுக் காலப்பகுதியில் நாணய விரிவாக்கம்

கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்றின் பரவலும் பொருளாதாரங்கள் மற்றும் நிதியியல் சந்தைகளின் மீதான அதன் முன்னெப்பொழுதுமில்லாத தாக்கமும் உலகளாவிய ரீதியில் மத்திய வங்கிகளை அவற்றின் பொருளாதாரங்கள் மற்றும் நிதியியல் சந்தைகள் மீதான அதன் தாக்கத்தினைத் தணிப்பதற்கும் உலகளாவிய நோய்த்தொற்றினால் உந்தப்பட்ட நெருக்கடியினுள் சிக்குவதிலிருந்து அத்தகைய பொருளாதாரங்களைத் தடுப்பதற்கும் இணையற்றளவில் பாரம்பரியமற்ற கொள்கைகள் உள்ளடங்கலாக அசாதாரண நாணயக் கொள்கை வழிமுறைகளைப் பின்பற்றுவதற்குக் கட்டாயப்படுத்தின. இலங்கையின் விடயம் இதற்கு மாறுபட்டதாகக் காணப்படவில்லை. இலங்கையில் கொவிட்-19 நோய்த்தொற்றின் பரவல் 2020 மாச்சு- மே காலப்பகுதியில் நாடளாவிய முடக்கத்திற்கு வழிவகுத்து பொருளாதாரத்தின் சகல பிரிவுகளிலும் அதிர்வுகளை ஏற்படுத்தி, உலகளாவிய நோய்த்தொற்றின் மீளெழுச்சியுடன் அதன்பின்னரான பல்வேறு அலைகளில் பகுதியளவான முடக்கங்கள் மற்றும் நகர்வு மீதான கட்டுப்பாடுகளினைத் தொடர்ந்தமை மில்லியன் கணக்கானோரின் உயிர்களையும் வாழ்வாதாரங்களையும் பாதித்திருந்தன. நகர்வு மீதான கட்டுப்பாடுகள், தொழிற்சாலைகளை மூடுதல் மற்றும் உள்நாட்டு உற்பத்திகளை நிறுத்துதல் என்பன நிச்சயமற்றதன்மையினை அதிகரிக்கவும் உள்நாட்டுக் கேள்வியின் மீதான பாரிய அதிர்வொன்றினைத் தூண்டவும் வழிவகுத்தன. சந்தைகள் மற்றும் பொருளாதாரத்தின் மீதான அதிர்வுகளின் தாக்கத்தினைக் குறைப்பதற்குத் துரிதமானதும் கணிசமானதுமான கொள்கைத் தலையீடொன்று தேவைப்பட்டது.

இதற்கமைய, இலங்கை மத்திய வங்கி உலகளாவிய நோய்த்தொற்றின் ஆரம்பத்தில் கொள்கைத் தளர்த்தல் வழிமுறைகளின் தொடரொன்றினைப் பின்பற்றியது. கடன்பாடுகளின் செலவினங்களைக் குறைக்கும் நோக்குடன் மத்திய வங்கி அதன் முக்கிய கொள்கை வட்டி வீதங்களைக் குறைத்த வேளையில், வட்டிவீத உச்சங்களை விதித்தல் அதேபோன்று விசேட தாழ்ந்த வட்டி வீத கடன் செயற்றிட்டங்களை அறிமுகப்படுத்துவதனூடாக சிறப்பு கடன் வழங்கல் வீதங்களைக் குறைத்திருந்தது. மேலும், நியதி ஒதுக்கு விகிதத்தின் குறைப்பு, திறைசேரி முறிகளின் கொள்வனவினூடாக அரசாங்கத்திற்கு அவசியமான நிதியிடலை வழங்குதல் மற்றும் சௌபாக்கியா கொவிட்-19 புத்துயிரளித்தல் கடன் வசதி போன்ற சலுகைக் கொடுகடன் செயற்றிட்டங்களின் நடைமுறைப்படுத்தல் என்பன உள்நாட்டு நிதியியல் சந்தைக்குத் திரவத்தன்மையினை உட்செலுத்தியதுடன் அதன்மூலம் நிதியியல் சந்தைகளின் மீதான அழுத்தங்களைத் தளர்த்திய வேளையில் பொருளாதாரத்தின் தேவையுள்ள துறைகளுக்கு கடன் வழங்கலையும் ஊக்குவித்திருந்தது. மத்திய வங்கி பல்வேறு கொடுகடன் சட்ட இசைவுத்தாமத செயற்றிட்டங்களை நடைமுறைப்படுத்துவதனூடாக உலகளாவிய நோய்த்தொற்றினால் இடர்பாட்டிற்குள்ளான வியாபாரங்கள் மற்றும் பாதிக்கப்பட்ட தனிநபர்களுக்கு மேலதிக நிவாரணத்தினை வழங்கிய வேளையில் ஒழுங்குமுறைப்படுத்தல் சகிப்புத்தன்மையினூடாக நிதியியல் நிறுவனங்களுக்கும் ஆதரவளித்திருந்தது. மேலும், மத்திய வங்கி உள்நாட்டுப் பொருளாதாரத்தில் கொடுக்கல் வாங்கல்களினை வசதிப்படுத்துவதற்கான நாணய தேவைப்பாடுகளையும் உலகளாவிய நோய்த்தொற்றுடன் தொடர்புடைய நிச்சயமற்ற தன்மைகளுக்கு மத்தியில் நாணயத்திற்கான அதிகரித்த முன்னெச்சரிக்கைக் கேள்வியினைத் தொடர்ந்தும் பூர்த்திசெய்தது.

மத்திய வங்கியினால் நடைமுறைப்படுத்தப்பட்ட இவ்வாறான உறுதிப்பாட்டினை-மையப்படுத்தியதும் வளர்ச்சி-ஆதரவு வழிமுறைகளினாலும் வலுவூட்டப்பட்டு உள்நாட்டுப் பொருளாதாரம் பெரும் பொருளாதாரப் பேரழிவொன்றினைத் தவிர்த்து படிப்படியாக முன்னோக்கி நகர்ந்ததுடன் பொருளாதார நடவடிக்கையிலும் மனோபாவத்திலும் குறிப்பிடத்தக்கதொரு மீட்சியினைப் பதிவுசெய்தது. மேலும், பொருளாதாரத்தின் தேவையானதும் அதிக உற்பத்தித்திறன் வாய்ந்ததுமான துறைகளுக்குத் தாழ்ந்த செலவுக் கொடுகடன் வழங்கலில் குறிப்பிடத்தக்கதொரு அதிகரிப்பும் அவதானிக்கப்பட்டதுடன் அதன்மூலம் அதன் வளர்ச்சி வாய்ப்புக்களை மேலும் அதிகரித்தது. உலகளாவிய ரீதியான விரைவான கொள்கை ஆதரவு இல்லாதிருப்பின் உலகப் பொருளாதார சரிவின் தீவிரத்தன்மை குறைந்தது மூன்று மடங்கு அதிகமாயிருந்திருக்குமென பன்னாட்டு நாணய நிதியத்தின் உலக பொருளாதார தோற்றப்பாடு குறிப்பிட்டுள்ளமையானது கொள்கைத் தூண்டலின் முக்கியத்துவத்தினையும் அவ்வாறான கொள்கை ஆதரவு இல்லாதிருப்பின் ஏற்படும் சாத்தியமான பொருளாதார இழப்புக்களையும் எடுத்துக்காட்டுகின்றது.

கொள்கை ஊக்குவிப்பு மற்றும் கொவிட்-19 தடுப்பூசியேற்றும் செயற்றிட்டங்களின் வெற்றிகரமான முன்னெடுப்பினால் ஆதரவளிக்கப்பட்டு உலகளாவிய ரீதியில் பொருளாதார நடவடிக்கைகள் படிப்படியாக இயல்புநிலைக்குத் திரும்பலுடன் உலகெங்கிலுமுள்ள மத்திய வங்கிகள் உலகளாவிய நோய்த்தொற்றின் ஆரம்பத்திலிருந்து விரிவாக்கப்பட்ட ஆதரவினைப் புறக்கீடு செய்வதற்கு ஏற்கனவே மேற்கொள்ளப்பட்ட சில வழிமுறைகளுடன் நாணயக் கொள்கை இறுக்கமாக்கலுக்கான தேவைப்பாட்டினை சமிக்ஞை செய்துள்ளன. அதே பாணியில், இலங்கை மத்திய வங்கி உள்நாட்டுப் பொருளாதார நடவடிக்கையின் படிப்படியான வழமைக்குத்திரும்புதலின் விளைவாக எதிர்காலத்தில் கேள்வியினால் உந்தப்பட்ட பணவீக்க அழுத்தங்களின் கட்டியெழுப்பப்படுதல் என்பனவற்றினை கவனத்திலெடுத்து 2021 நடுப்பகுதியிலிருந்து நாணய நிலைமைகளை இறுக்கமாக்குவதற்கு அனுமதித்ததுடன் அதன் முக்கிய கொள்கை வீதங்களை அதிகரித்ததுடன் 2021 செத்தெம்பர் 01 இலிருந்து நடைமுறைக்கு வரும் வகையில் நியதி ஒதுக்கு விகிதத்தினை அதிகரித்து 2021 ஓகத்து நடுப்பகுதியில் அதனுடைய தளர்த்தப்பட்ட நாணயக் கொள்கை நிலைப்பாட்டினை முடிவுக்குக் கொண்டுவருவதற்கு சமிக்ஞை செய்தது. மேலும், அரச பிணையங்கள் மீதான முதலாந்தர ஏலவிற்பனைகளில் ஏற்புக்கான உயர்ந்தபட்ச விளைவு வீதமும் 2021 செத்தெம்பர் நடுப்பகுதியிலிருந்து நீக்கப்பட்டு அரச பிணையங்கள் மீதான விளைவுகளை சீராக்குவதற்கும் சந்தையினால் நிர்ணயிக்கப்பட்டதாக அமைவதற்கும் அனுமதித்த வேளையில் முதலாந்தர சந்தை ஏலவிற்பனைகளில் திறைசேரி உண்டியல்களின் மத்திய வங்கியின் கொள்வனவுகளுக்கான தேவையினையும் வரையறைசெய்தது. மேலும், மத்திய வங்கி தற்போது நிலவுகின்ற இறுக்கமான நாணய நிலைமைகளைப் பேணும் நோக்குடன் உள்நாட்டு பணச் சந்தையில் திரவ மட்டங்களில் பற்றாக்குறை காணப்பட்டமைக்கு மத்தியிலும் ஓரிரவு மற்றும் கால மீள்கொள்வனவு ஏலவிற்பனைகளைத் தொடர்ந்தும் நடத்தியது. இறுதியாக, உலகளாவிய நோய்த்தொற்றுக் காலப்பகுதியில் அரசாங்கத்திற்கு வழங்கப்பட்ட குறிப்பிடத்தக்க நிதியிடல் மட்டங்களைப் புறக்கீடு செய்வதற்கான தேவையினை அடையாளங்கண்டு, மத்திய வங்கி உள்நாட்டுப் பொருளாதாரத்தில் தற்போது தொடரப்படுகின்ற மீட்சியினைப் பாதிக்காது பேரண்டப் பொருளாதார மற்றும் நிதியியல் முறைமை உறுதிப்பாட்டினை பாதுகாக்கும் நோக்குடன் *'பேரண்டப் பொருளாதார மற்றும் நிதியியல் முறைமை உறுதிப்பாட்டினை நிச்சயப்படுத்துவதற்கான ஆறு மாத கால வழிகாட்டலில்'*, குறித்துரைக்கப்பட்டவாறு அத்தகைய நாணய ஊக்குவிப்புக்களை படிப்படியாக இல்லாதொழிப்பதில் ஈடுபடும்.

திரவத்தன்மை மட்டங்களும் தனியார் துறைக்கான கொடுகடனில் குறிப்பிடத்தக்க விரிவாக்கமொன்றினை விளைவித்தன. மேலும், பொருளாதாரத்தின் தேவைப்படுகின்ற மற்றும் உற்பத்தித் திறன்மிக்க துறைகளுக்கான மேலதிக உத்வேகத்தினை வழங்கும் நோக்குடன் 2021 ஏப்பிறலில் நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தரளவு தொழில்முயற்சிகளுக்குக் கடன் வழங்கல் தொடர்பில் உரிமம்பெற்ற வங்கிகளிற்கு முன்னுரிமைத் துறைக் கடன் வழங்கல் இலக்குகளை மத்திய வங்கி அறிமுகப்படுத்தியது. இதற்கமைய, தனியார் துறைக்கு வழங்கப்பட்ட கொடுகடன் 2021 ஓகத்து இறுதியில் ஆண்டிற்காண்டு 15.1 சதவீதத்தினால் குறிப்பிடத்தக்களவு விரிவாக்கமடைந்து அரச துறைக்கான கொடுகடனில் துரித விரிவாக்கத்துடன் விரிந்த பண நிரம்பல் ($M_{2b}$) 2021 ஓகத்து இறுதியில் ஆண்டிற்காண்டு 21.0 சதவீதத்தினால் வளர்ச்சியடைவதனை விளைவித்திருந்தது. இருப்பினும், உள்நாட்டு நிதியியல் சந்தைகளிலும் வெளிநாட்டுத் துறையிலும் சமநிலையின்மைகள் தோற்றம்பெற்றதன் காரணமாகவும் அதே வேளையில் பொருளாதாரத்திற்கு ஏற்கனவே வழங்கப்பட்ட பெருமளவான இறை மற்றும்

நாணயத் தூண்டலின் காலங்கடந்த விளைவுகளிலிருந்து பணவீக்க அழுத்தங்களின் சாத்தியமான கட்டியெழுப்புதலையும் கருத்திற்கொண்டு மத்திய வங்கி 2021 ஓகத்து நடுப்பகுதியில் நாணய இறுக்கமாக்கல் வழிமுறைகளை நடைமுறைப்படுத்தியது. இதற்கமைய, துணைநில் வைப்பு வசதி வீதம் மற்றும் துணைநில் கடன் வழங்கல் வீதம் ஆகிய முக்கிய நாணயக்கொள்கை வட்டி வீதங்கள் 50 அடிப்படைப் புள்ளிகளினால் முறையே 5.00 சதவீதத்திற்கும் 6.00 சதவீதத்திற்கும் உயர்த்தப்பட்டதுடன் நியதி ஒதுக்கு விகிதமானது 2 அடிப்படைப் புள்ளிகளினால் 4.00 சதவீதத்திற்கு உயர்த்தப்பட்டது. அசாதாரணமான நாணயத் தளர்த்தல் வழிமுறைகளின் ஊடுகடத்தலைப் பிரதிபலித்து 2020இன் ஆரம்பத்திலிருந்து குறிப்பிடத்தக்களவு வீழ்ச்சியடைந்த சந்தை வட்டி வீதங்கள் மத்திய வங்கியின் நாணய மற்றும் திரவத்தன்மை இறுக்கமாக்குதல் வழிமுறைகளுக்குப் பதிலிறுத்தத் தொடங்கின.

### நிதியியல் துறை

உலகளாவிய நோய்த்தொற்றினால் தோற்றம்பெற்ற சவால்மிக்க உலகளாவிய மற்றும் உள்நாட்டுப் பேரண்டப் பொருளாதார நிலைமைகளுக்கு மத்தியில் ஆய்வுக்குரிய காலப்பகுதியில் நிதியியல் துறை தொடர்ந்தும் தாக்குப்பிடிக்கக்கூடிய தன்மையினைக் கொண்டிருந்தது. வங்கித்தொழில் துறையின் சொத்துக்கள், அதிகரித்துவரும் இலாபத்தன்மையுடன் இணைந்து வளர்ச்சியடைந்தன. இருப்பினும், வீழ்ச்சியடைந்துவரும் வெளிநாட்டு நாணயத் திரவத்தன்மையும் மோசமடைந்துவரும் கொடுகடன் தரத்தினதும் காரணமாக வங்கித்தொழில் துறை சவால்களுக்கு முகம்கொடுத்தது. அதேவேளை, உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள் மற்றும் சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக் கம்பனிகள் துறை சொத்துத் தளத்தில் சிறிதளவான அதிகரிப்பொன்றினைப் பதிவுசெய்தது. செயற்படாக்கடன்களில் அதிகரிப்பானது கரிசனைக்குரியதாகக் காணப்பட்டதாயினும் சில உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள் மற்றும் சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக் கம்பனிகள் நட்டங்களை ஏற்படுத்தியதற்குப் புறம்பாக ஒட்டுமொத்தமாக துறையின் இலாபத்தன்மை அதிகரித்திருந்தது. இருப்பினும், உரிமம்பெற்ற வங்கிகள் மற்றும் உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளும் சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக் கம்பனிகளும் போதிய ஏற்பாடுகள், மூலதன மற்றும் திரவத்தன்மைத் தாங்கியிருப்புக்களை அறிக்கையிட்டதுடன் அதன்மூலம் அவற்றின் ஆற்றல்வாய்ந்த தன்மையினை நிச்சயப்படுத்தின. இத்துறையிலுள்ள நீடித்திருக்கும் பிரச்சனைகளைத் தீர்ப்பதற்காக நிதியியல் துறையின் ஒருங்கிணைப்பிற்கான முதன்மைத் திட்டத்தினை மத்திய வங்கி புதுப்பித்தது. இணைப்புக்கள் மற்றும் கையேற்புக்களுடன் துறைக்குப் புதிய மூலதனத்தை உட்புகுத்துவதனை ஊக்குவிப்பதனை இலக்காகக்கொண்டு ஒருங்கிணைத்தல் செய்முறை முன்னேற்றங்கண்டு வருகின்றது. காப்புறுதி, பங்குத்தரகர்கள், கூறு நம்பிக்கைகள் மற்றும் சேமலாப நிதியங்கள் போன்ற நிதியியல் துறையிலுள்ள ஏனைய துணைத்துறைகள் பரீசிலனையில் கொள்ளப்பட்ட காலப்பகுதியில் கலப்பான செயலாற்றமொன்றினைப் பதிவுசெய்திருந்தன. நிதியியல் சந்தைகளைப் பொறுத்தளவில் உள்நாட்டு பணச் சந்தையில் திரவத்தன்மையானது 2021 யூலையில் கணிசமானளவு வீழ்ச்சியடைந்ததுடன் 2021 ஓகத்தில் எதிர்க்கணியமாக மாற்றமடைந்து முக்கியமாக நாணயக் கொள்கை மற்றும் தொழிற்பாடுகளின் தாக்கங்களைப் பிரதிபலித்திருந்த வேளையில், உள்நாட்டு வெளிநாட்டுச் செலாவணிச் சந்தை அழுத்தங்களை எதிர்கொண்டமைக்கு மெதுவடைந்திருந்த உட்பாய்ச்சல்களுக்கு மத்தியில் பெருமளவான வெளிப்பாய்ச்சல்கள் காரணமாயமைந்தன. இருப்பினும், சில தளம்பல் நிலைகளுக்கும் வெளிநாட்டு முதலீட்டு வெளிப்பாய்ச்சல்களுக்கும் மத்தியில் பங்குச் சந்தை குறிப்பிடத்தக்க செயலாற்றமொன்றினைப் பதிவுசெய்தது. நிதியியல் உட்கட்டமைப்பானது கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்றின் காரணமாக நிச்சயமற்ற தன்மைகளை அதிகளவில் கொண்டிருந்த போதும் நிதியியல் துறையின் சீரானதொரு தொழிற்பாட்டினை நிச்சயப்படுத்தியிருந்தது.

## 1.2 பன்னாட்டுப் பொருளாதாரச் சூழல்

பொருளாதாரங்களுக்கிடையிலான குறிப்பிடத்தக்க ஏற்றத்தாழ்வுகளுக்கு மத்தியிலும் உலகப் பொருளாதாரம் உலகளாவிய நோய்த்தொற்றின் தாக்கங்களிலிருந்து படிப்படியாக மீட்சியொன்றினைப் பதிவுசெய்தது. 2021 ஒத்தோபரில் வெளியிடப்பட்ட பன்னாட்டு நாணய நிதியத்தின் உலகப் பொருளாதாரத் தோற்றப்பாட்டின் பிரகாரம் 2020இல் 3.1 சதவீதத்தினால் சுருக்கமடைந்த உலகப் பொருளாதாரமானது 2021இல் 5.9 சதவீதத்தினாலும் 2022இல் 4.9 சதவீதத்தினாலும் வளர்ச்சியடைவதற்கு எறிவுசெய்யப்பட்டுள்ளது. தடுப்பூசிக்கான அணுகல் மற்றும் கொள்கை ஆதரவிலான பாரிய ஏற்றத்தாழ்வுகள் பொருளாதார வாய்ப்புக்களின் மீதான அவற்றின் தாக்கம் காரணமாக முக்கிய கரிசனையொன்றாக தொடர்ந்துமிருக்கின்றன. முன்னேற்றங்கண்ட பொருளாதாரங்களுக்கான திரண்ட வெளியீடானது 2022இல் அதன் உலகளாவிய நோய்த்தொற்றிற்கு முன்னைய வளர்ச்சிப் பாதைக்கு மீளெழுச்சியடைவதற்கும் 2024ஆம் ஆண்டளவில் அதனை விஞ்சிச்செல்வதற்கும் எதிர்பார்க்கப்படுகின்ற வேளையில், தோற்றம் பெற்றுவரும் சந்தை மற்றும் வளர்ச்சியடைந்துவரும் பொருளாதாரங்களின் (சீனா நீங்கலாக) எறிவுசெய்யப்பட்ட வளர்ச்சியானது 2024இல் உலகளாவிய நோய்த்தொற்றிற்கு முன்னைய எதிர்வுகூறலின் கீழேயே காணப்படுமென

அட்டவணை 1.2

## தெரிந்தெடுக்கப்பட்ட மத்திய வங்கிகளின் கொள்கை வட்டி வீதங்களின் மாற்றங்கள்

%

| நாடு | முதன்மைக் கொள்கை வீதம் | 2018 முடிவில் | 2019 முடிவில் | 2020 முடிவில் | 2020 ஒத். 15 |
|---|---|---|---|---|---|
| இலங்கை | துணைநில் வைப்பு வசதி வீதம் | 8.00 | 7.00 | 4.50 | 5.00 |
| | துணைநில் கடன்வழங்கல் வசதி வீதம் | 9.00 | 8.00 | 5.50 | 6.00 |
| **தோற்றம்பெற்றுவரும் சந்தைப் பொருளாதாரங்கள்** | | | | | |
| இந்தியா | மீள்கொள்வனவு வீதம் | 6.50 | 5.15 | 4.00 | 4.00 |
| மலேசியா | ஓரிரவுக் கொள்கை வீதம் | 3.25 | 3.00 | 1.75 | 1.75 |
| தாய்லாந்து | 1-நாள் இருபுடை மீள்கொள்வனவு வீதம் | 1.75 | 1.25 | 0.50 | 0.50 |
| சீனா | 1-ஆண்டு கடன்வழங்கல் வீதம் | 4.35 | 4.15 | 3.85 | 3.85 |
| இந்தோனேசியா | 7-நாள் நேர்மாற்று மீள்கொள்வனவு வீதம் | 6.00 | 5.00 | 3.75 | 3.50 |
| பிலிப்பைன்ஸ் | ஓரிரவு நேர்மாற்று மீள்கொள்வனவு வீதம் | 4.75 | 4.00 | 2.00 | 2.00 |
| **முன்னேற்றங்கண்ட பொருளாதாரங்கள்** | | | | | |
| ஐக்கிய அமெரிக்கா | பெடரல் நிதிய வீதம் | 2.25-2.50 | 1.50-1.75 | 0.00-0.25 | 0.00-0.25 |
| ஐக்கிய இராச்சியம் | வங்கி வீதம் | 0.75 | 0.75 | 0.10 | 0.10 |
| ஐரோப்பிய மத்திய வங்கி | மீள்நிதியிடல் வீதம் | 0.00 | 0.00 | 0.00 | 0.00 |
| யப்பான் | ஓரிரவு அழைப்பு வீதம் | -0.10 | -0.10 | -0.10 | -0.10 |
| கனடா | ஓரிரவு வீதம் | 1.75 | 1.75 | 0.25 | 0.25 |
| அவுஸ்திரேலியா | காசு வீதம் | 1.50 | 0.75 | 0.10 | 0.10 |
| சுவீடன் | மீள்கொள்வனவு வீதம் | -0.50 | -0.25 | 0.00 | 0.00 |

*மூலம்:* தொடர்பான மத்திய வங்கிகளின் இணையத்தளங்கள்

எதிர்பார்க்கப்படுகின்றது. இதற்கமைய, முன்னேற்றங்கண்ட பொருளாதாரங்கள் 2021 மற்றும் 2022இல் முறையே 5.2 சதவீதத்தினாலும் 4.5 சதவீதத்தினாலும் வளர்ச்சியடைவதற்கு எறிவுசெய்யப்பட்டுள்ளன. ஐக்கிய அமெரிக்கா 2020இல் பதிவுசெய்த 3.4 சதவீத சுருக்கமொன்றுடன் ஒப்பிடுகையில் 2021இல் 6.0 சதவீதத்தினாலும் 2022இல் 5.2 சதவீதத்தினாலும் வளர்ச்சியடைவதற்கு எறிவுசெய்யப்பட்டுள்ளது. ஐரோப்பிய வலயத்தில் பொருளாதார நடவடிக்கை 2020இல் 6.3 சதவீத சுருக்கமொன்றிலிருந்து 2021இல் 5.0 சதவீத மற்றும் 2022இல் 4.3 சதவீத வளர்ச்சியொன்றிற்குக் குறிப்பிடத்தக்களவு அதிகரிப்பதற்கு எறிவுசெய்யப்பட்டுள்ளது. 2020இல் 2.1 சதவீதத்தினால் சுருக்கமடைந்த தோற்றம் பெற்றுவரும் சந்தை மற்றும் வளர்ச்சியடைந்துவரும் பொருளாதாரங்கள் 2021இல் 6.4 சதவீதத்தினாலும் அதனைத்தொடர்ந்து 2022இல் 5.1 சதவீதத்தினாலும் வளர்ச்சியடைவதற்கு எறிவுசெய்யப்பட்டுள்ளன. தோற்றம் பெற்றுவரும் மற்றும் அபிவிருத்தியடைந்துவரும் ஆசியாவிற்கான முறையே 2021 மற்றும் 2022இற்கு எறிவுசெய்யப்பட்ட 7.2 சதவீத மற்றும் 6.3 சதவீத வலுவான வளர்ச்சியானது முக்கியமாக சீனா மற்றும் இந்தியாவில் எதிர்பார்க்கப்படும் உயர் வளர்ச்சியினை அடிப்படையாகக் கொண்டுள்ளது. அரச முதலீட்டின் குறைப்பிற்கு மத்தியிலும் சீனாவின் பொருளாதாரமானது 2022இல் 5.6 சதவீதத்திற்கு மெதுவடைவதற்கு முன்னர் 2021இல் 8.0 சதவீதத்தினால் வளர்ச்சியடைவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. இந்தியாவிற்கான வளர்ச்சி வாய்ப்புக்கள் வலுவாகக் காணப்பட்டு பொருளாதாரமானது 2021இல் 9.5 சதவீதத்தினாலும் 2022இல் 8.5 சதவீதத்தினாலும் வளர்ச்சியடைவதற்கு எறிவுசெய்யப்பட்டுள்ளன.

பொருளாதாரங்களின் பணவீக்க வீதங்கள் 2021இல் இதுவரையான காலப்பகுதியில் துரிதமாக வளர்ச்சியடைந்து உலகளாவிய நோய்த்தொற்றிற்கு மத்தியில் பொருளாதார நடவடிக்கையின் வலுப்படுத்தலினாலும் அதேபோன்று உலகளாவிய நிரம்பல் சங்கிலி இடையூறுகளினாலும் பகுதியளவில் தூண்டப்பட்டிருந்தன. சில முன்னேற்றமடைந்த, தோற்றம் பெற்றுவரும் சந்தை மற்றும் அபிவிருத்தியடைந்துவரும் பொருளாதாரங்களில் நுகர்வோர் விலைகள் விரைவானதொரு கதியில் அதிகரித்து உலகளாவிய நோய்த்தொற்றினால் தூண்டப்பட்ட நிரம்பல் - கேள்விப் பொருத்தப்பாடின்மைகள், அதிகரித்துவரும் பண்ட விலைகள் மற்றும் சில நாடுகளில் கடந்த ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்ட தற்காலிக வரிக் குறைப்புக்களின் காலாவதியாதல் போன்ற கொள்கையுடன் தொடர்புடைய அபிவிருத்திகளின் ஒருங்கிணைந்த தாக்கத்தினைப் பிரதிபலித்திருந்தன.

சில முக்கிய மத்திய வங்கிகள் உலகளாவிய பண்ட விலைகளின் மீதான அழுத்தங்கள் முன்னர் எதிர்பார்க்கப்பட்டதிலும் பார்க்க நீடிக்கக்கூடுமெனக் கணிக்கின்றமையினால் உலகளாவிய பணவீக்கம் தொடர்பிலான நிச்சயமற்ற தன்மைகள் உயர்ந்தளவில் காணப்படுகின்றன. உயர் உணவு விலைகள், உயர் வலு விலைகளின் காலங்கடந்த விளைவுகள் மற்றும் மற்றையவற்றிற்கிடையில் நாணயத் தேய்மானம் என்பவற்றின் காரணமாக தோற்றம் பெற்றுவரும் சந்தை மற்றும் அபிவிருத்தியடைந்துவரும் பொருளாதாரங்களின் விலை அழுத்தங்களும் நீடித்திருப்பதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. இதற்கமைய, முன்னேற்றங்கண்ட பொருளாதாரக் குழுமத்தில் நுகர்வோர் விலைப் பணவீக்கமானது 2021இல் 2.8 சதவீதத்தில் எறிவுசெய்யப்பட்டுள்ள வேளையில், தோற்றம் பெற்றுவரும் சந்தை மற்றும் அபிவிருத்தியடைந்துவரும் பொருளாதாரங்களில் 2021இல் 5.5 சதவீதத்திலமையுமென எதிர்பார்க்கப்படுகின்றது. முன்னேற்றங்கண்ட பொருளாதாரங்களில் எதிர்பார்க்கப்படும் பொருளாதார மீட்சியுடன் எண்ணெய் விலைகள் 2021இல் 60 சதவீதத்தினால் அதிகரிப்பதற்கு எதிர்பார்க்கப்படுகின்றன. எண்ணெயல்லா பண்ட விலைகள், குறிப்பாக உலோக மற்றும் நுகர்வோர் உணவு விலைகளில் அண்மைய அதிகரிப்பினைப் பிரதிபலித்து, 2020இன் மட்டங்களிற்கு மேலாக ஏறத்தாழ 30 சதவீதத்தினால் உயர்வடைவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றன. இருப்பினும், மத்திய வங்கிகளின் முற்கூட்டிய நடவடிக்கைகளினாலும் அதேபோன்று

உலகளாவிய நிரம்பல் சங்கிலிகளில் எதிர்பார்க்கப்படும் மேம்பாடுகளினாலும் ஆதரவளிக்கப்பட்டு விலை அழுத்தங்கள் நடுத்தர காலத்தில் ஓரளவு இலகுவடைவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றன.

உலகளாவிய நோய்த்தொற்றின் பரிணாம வளர்ச்சி, பணவீக்கத் தோற்றப்பாடு மற்றும் உலகளாவிய நிதியியல் நிலைப்பாடுகளின் அசைவுகள் என்பவற்றுடன் இணைந்த குறிப்பிடத்தக்க நிச்சயமற்ற தன்மைகள் உலகளாவிய பொருளாதார மீட்சியின் தாக்குப்பிடிக்கக்கூடிய தன்மையினைத் தொடர்ந்தும் பாதிக்கக்கூடும். மேலும், தொடர்ச்சியான நிரம்பல் - கேள்விப் பொருத்தப்பாடின்மைகளும் விளைவான பணவீக்க அழுத்தங்களும் முன்னேற்றங்கண்ட பொருளாதாரங்களில் எதிர்பார்க்கப்பட்டதிலும் பார்க்க விரைவாக நாணயக் கொள்கை வழமைக்குத் திரும்புவதற்கு வழிவகுத்து உலகளாவிய நிதியியல் நிலைப்பாடுகளை இறுக்கமடையச் செய்யக்கூடும். மேலும், நிதியியல் சந்தைகளில் தளம்பல் நிலைகள், சில நாடுகளில் சமூக ரீதியான குழப்ப நிலை, பாதகமான காலநிலை அதிர்வுகள், இணையத்தள தாக்குதல்கள் மற்றும் வர்த்தக மற்றும் தொழில்நுட்ப பதற்றங்களின் தீவிரத்தன்மை போன்றன உலகளாவிய பொருளாதார மீட்சியினை பாதிக்கக்கூடும். இருப்பினும், தடுப்பூசியேற்றலின் முன்னெடுப்பினைத் துரிதப்படுத்தலும் தொழில்நுட்பத்தினால் உந்தப்பட்ட உற்பத்தித்திறன் வளர்ச்சியின் விரைவுத் தன்மையும் எதிர்வரும் காலப்பகுதியில் உலகளாவிய பொருளாதார மீட்சியினை வலுப்படுத்துவதற்குத் துணைபுரியும்.

## 1.3 எதிர்பார்க்கப்படும் அபிவிருத்திகள்

உலகளாவிய நோய்த்தொற்றினை விரைவாகக் கட்டுப்படுத்தல், தடுப்பூசியேற்றலின் துரித முன்னேற்றம் மற்றும் ஏற்றுமதியை மையமாகக் கொண்ட உற்பத்திப் பொருளாதாரத்தினை உருவாக்குவதற்கான தொடர்ச்சியான கொள்கை அர்ப்பணிப்பு ஆகியவை பொருளாதாரம் 2021இல் மீளெழுச்சியடைவதற்கும் அதன் பின்னர் உயர் வளர்ச்சிப்பாதையைப் பேணுவதற்கும் உதவுமென எதிர்பார்க்கப்படுகின்றது. நோய்த்தொற்றினைக் கட்டுப்படுத்துவதற்கு குறிப்பாக 2021 ஏப்பிறலிலிருந்து செத்தெம்பர் வரையான காலப்பகுதியில் நகர்வு மீதான கட்டுப்பாடுகளினை விதித்தமையின் காரணமாக ஏற்பட்ட பொருளாதார நடவடிக்கையின் மிதமான தன்மையின் காரணமாக 6.0 சதவீதத்தினை கொண்ட ஆரம்ப எறிவைக் காட்டிலும் கீழ்நோக்கித் திருத்தப்பட்டு பொருளாதாரமானது 2021இல் 5.0 சதவீதத்தினால் வளர்ச்சியடையுமென எதிர்பார்க்கப்படுகின்றது. இருப்பினும், 2020இன் முதலரைப்பகுதியில் விதிக்கப்பட்ட கடுமையான முடக்குதலுடன் ஒப்பிடுகையில் 2021இல் இதுவரையில் நகர்வு மீதான கட்டுப்பாட்டு வழிமுறைகள் கடுமை குறைந்ததாகவே காணப்பட்டன. மேலும், 2021இன் இறுதியளவில் 18 வயதிற்கு மேற்பட்ட அனைத்து பிரசைகளுக்கும் தடுப்பூசியேற்றலினை இலக்காகக் கொண்ட அரசாங்கத்தின் கொவிட்-19 தடுப்பூசியேற்றல் முன்னெடுப்பானது பொருளாதார நடவடிக்கையினை தொடர்வதற்கு மேலும் வசதியளிக்கும். அதேவேளை, 2021 ஒத்தோபர் 01 அன்று மத்திய வங்கியினால் அறிவிக்கப்பட்ட *'ஆறு மாத கால வழிகாட்டலில்'* குறுகிய காலத்திலும் மற்றும் நடுத்தர காலம் முதல் நீண்ட காலம் வரையான காலப்பகுதியிலும் பொருளாதாரத்தின் மீளெழுச்சியினை இலக்காகக் கொண்டு, பொருளாதாரத்தில் அனைத்து ஆர்வலர்களுடனும் கூட்டிணைந்து செயற்படுத்துவதற்கான பன்முக வழிமுறைகளை அறிமுகப்படுத்தப்பட்டதுடன் இதன்மூலம் அரசாங்கத்தினால் நடைமுறைப்படுத்தப்படும் வழிமுறைகள் நிறைவுசெய்யப்படுகின்றன. இவ்வழிமுறைகள், பேரண்டப் பொருளாதார மற்றும் நிதியியல் முறைமை உறுதிப்பாட்டினை மேம்படுத்துகின்ற அதேவேளை முதலீட்டாளர் நம்பிக்கையை அதிகரிக்கவும் வியாபாரம் செய்யும் சூழலினை மேம்படுத்தவும் உதவும்.

> ***பொருளாதாரத்தின் நடுத்தர காலம் முதல் நீண்ட காலம் வரையிலான வளர்ச்சிப்பாதையினை வலுப்படுத்துவதில் அமைப்பியல் சீர்திருத்தங்களின் நடைமுறைப்படுத்தலானது முக்கியமானதாகக் காணப்படுகின்றது...***

நடுத்தர கால வளர்ச்சிப்பாதையானது, பொருளாதார நடவடிக்கையின் பாரியளவிலான பன்முகப்படுத்தலுடன் ஏற்றுமதி சார்ந்த உற்பத்திப் பொருளாதாரத்தை உருவாக்குவதை நோக்கிய அரசாங்கத்தின் தொடர்ச்சியான உந்துதலை மையமாகக் கொண்டுள்ளது. கொழும்பு துறைமுக நகரச் செயற்றிட்டம் போன்ற பாரியளவான முதலீடுகள் மற்றும் அம்பாந்தோட்டை கைத்தொழில் வலயம் போன்ற கைத்தொழில் வலயங்களின் அபிவிருத்தி போன்றவை எதிர்வரும் காலப்பகுதியில் மிகவும் தேவைப்படும் வெளிநாட்டு மூலதனத்தை கவருமென எதிர்பார்க்கப்படுகிறது. அரசாங்கத்தின் பிராந்திய அபிவிருத்தி முன்னெடுப்புக்கள் நாட்டில் வருமான ஏற்றத்தாழ்வுகளைக் குறைக்கும் என்பதுடன் அனைத்தையுமுள்ளடக்கிய வளர்ச்சியை ஊக்குவிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. குறுங்கால

உறுதிப்பாட்டு குறிக்கோள்கள் அடையப்பட்டவுடன், உலகளாவிய நோய்த்தொற்றுக்கு பிந்திய பொருளாதாரத்தில் எதிர்பார்க்கப்படும் உயர் வளர்ச்சிப் பாதையானது அதிகரித்த தொழில்வாய்ப்புகள், உயர் வாழ்க்கைத் தரம் மற்றும் நீடித்துநிலைத்திருக்கும் வளர்ச்சிக்கு இட்டுச்செல்லுமென எதிர்பார்க்கப்படுகின்றது. இக்கொள்கை முயற்சிகளால் ஆதரிக்கப்படுவதன் மூலமாக, பொருளாதார வளர்ச்சியானது மீளெழுச்சியடையுமென எதிர்பார்க்கப்படுவதுடன் நடுத்தர காலத்தில் 5.0 சதவீதத்திற்கு மேல் நிலையாக முன்னேற்றமடைந்து இதன் மூலம் நாட்டில் வளர்ச்சியின் நன்மைகளின் பகிர்வை உறுதிசெய்யும். இருப்பினும், உலகளாவிய நோய்த்தொற்றுக்கு மத்தியில் காணப்பட்ட அதிகரித்தளவான பாதிக்கப்படக்கூடிய தன்மைகளினை நாடு வெற்றி கொள்வதற்கு நீண்டகாலமாக எதிர்பார்க்கப்பட்ட மற்றும் வளர்ச்சியைத் தூண்டும் அமைப்பியல் சீர்திருத்தங்களின் காத்திரமான நடைமுறைப்படுத்தலானது முக்கியமானதாக அமைகின்றது.

> *எதிர்பார்க்கப்பட்ட வெளிநாட்டு செலாவணி உட்பாய்ச்சல்கள் மற்றும் உறுதியான செலாவணி வீதம் என்பவற்றுடன் எதிர்வரும் காலத்தில் வெளிநாட்டுத்துறையின் தாக்குப்பிடிக்கும்தன்மை மேம்படுவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது...*

சுற்றுலாத்துறையின் மீட்சியுடன் ஏற்றுமதியை மேம்படுத்துவதற்கும் படுகடனை உருவாக்காத வெளிநாட்டு உட்பாய்ச்சல்களைக் கவர்வதற்கும் மேற்கொள்ளப்பட்ட வழிமுறைகளினால் ஆதரவளிக்கப்பட்டு வெளிநாட்டுத் துறையின் தாக்குப்பிடிக்கும்தன்மை மேம்படுமென எதிர்பார்க்கப்படுகின்றது. உள்நாட்டு நடவடிக்கைகளின் மீட்சி மற்றும் உள்நாட்டு இறக்குமதிச் சுருக்க வழிமுறைகளின் படிப்படியான தளர்த்தல்களுடன் இணைந்து உலகளாவிய பொருளாதார மீளெழுச்சி அத்துடன் வழங்கல் சங்கிலியின் இடையீறுகளினால் தூண்டப்படுகின்ற அதிகரிக்கும் வலு மற்றும் ஏனைய பண்டங்களின் விலைகள் எதிர்வரும் காலத்தில் இறக்குமதிச் செலவினத்தை அதிகரிக்கக்கூடும். இறக்குமதி மாற்றீட்டு உற்பத்திச் செயன்முறைகளில் அவதானிக்கப்பட்ட உயர்வானது இறக்குமதிச் செலவினத்தை ஓரளவிற்கு குறைப்பதற்கு ஆதரவளிக்கக்கூடும். எவ்வாறாயினும், 2021 இல் இதுவரையில் பதிவுசெய்யப்பட்ட வணிகப்பொருள் ஏற்றுமதிகளின் குறிப்பிடத்தக்களவான வளர்ச்சியானது எதிர்வரும் காலத்திலும் தொடருமென எதிர்பார்க்கப்படுவதுடன் அதன்மூலம் வர்த்தக பற்றாக்குறை ஓரளவிற்கு தணிக்கப்படும். சில கைத்தொழில்களை மேம்படுத்துவதற்கு அரசாங்கத்தின் வலியுறுத்தல்கள் எதிர்வரும் காலத்தில் ஏற்றுமதித் துறையில் வளர்ச்சி தூண்டுதலை தக்கவைத்துக்கொள்வதற்கு தேவையான தூண்டுதலை வழங்குமென எதிர்பார்க்கப்படுகிறது. வணிகப்பொருள் வர்த்தகத் துறைகளுக்கு மேலதிகமாக, அரசாங்கமானது பணிகள் வர்த்தகத்தையும் தொழிலாளர் பணவனுப்பல்கள் மீதான உட்பாய்ச்சல்களையும் முனைப்புடன் மேம்படுத்துவதற்கான செயன்முறையில் தீவிரமாக ஈடுபட்டுள்ளது. மேலும், தேசிய வர்த்தகக் கொள்கையின் அபிவிருத்தி, முன்னெடுக்கப்படுகின்ற உட்கட்டமைப்பு மேம்படுத்தல்கள், விசேட பொருளாதார வலயங்களின் நிறுவல்கள் மற்றும் முக்கிய வர்த்தக இணை நாடுகள்/பிராந்தியங்களுடன் பொருளாதார இராஜதந்திரங்களை வலுப்படுத்தல் என்பன நடுத்தரக்காலத்தில் இலங்கைக்கான ஏற்றுமதிகளின் வாய்ப்புக்களை விரிவுப்படுத்துமென எதிர்பார்க்கப்படுகின்றது.

உலகளாவிய பயணத்தின் மேம்பட்ட உத்வேகத்துடன் தேசிய தடுப்பூசியேற்றல் செயற்பாட்டின் வெற்றிகரமான நடைமுறைப்படுத்தல் மற்றும் நகர்வு மீதான கட்டுப்பாடுகளின் படிப்படியான நீக்கம் என்பவற்றுடன் சுற்றுலாத்துறையானது உறுதியான மீட்சியைப் பதிவுசெய்யுமென எதிர்பார்க்கப்படுகின்றது. அதிகரித்த உலகளாவிய பயணம் மற்றும் உலகளாவிய நடவடிக்கைகள் இயல்பு நிலைக்கு திரும்பியதற்கிணங்க தொழிலாளர்களுக்கான கேள்வி உறுதியடைதல் என்பவற்றுடன் வெளிநாட்டு தொழில்வாய்ப்பிற்கான புறப்பாடுகள் அதிகரிக்குமென்ற எதிர்பார்க்கைக்கிணங்க தொழிலாளர் பணவனுப்பல்கள் 2021 ஓகத்து மற்றும் செத்தெம்பரில் அவதானிக்கப்பட்ட மட்டங்களிலிருந்து மேம்படுமென எதிர்பார்க்கப்படுகின்றன. மேலும், உள்நாட்டு வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையில் செலாவணி வீதத்தின் உறுதிப்பாடு மற்றும் உத்தியோகபூர்வ மற்றும் உத்தியோகபூர்வமற்ற சந்தைகளுக்கிடையிலான செலாவணி வீதங்களின் வேறுபாடு குறுக்கமடைதல் என்பன முறைசார் ஊடகங்களினூடாக அதிகளவான வெளிநாட்டு பணவனுப்பல்களை கவர்வதற்கு ஆதரவு வழங்கும். குறிப்பாக துறைவாரியான செயலணிக் குழுக்களினூடாக வணிகப்பொருள் ஏற்றுமதி மற்றும் பணிகள் வர்த்தகத்தை மேம்படுத்துவதற்கான அரசாங்கத்தின் முயற்சிகளுடன் உண்மைத் தாக்கமுள்ள செலாவணி வீத சுட்டெண்களில் பிரதிபலிக்கப்பட்டவாறான இலங்கை ரூபாவின் அதிகரித்த போட்டித்தன்மை போன்றவற்றுடன் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சதவீதமாக வர்த்தக நிலுவை மற்றும் வெளிநாட்டு நடைமுறைக் கணக்கு நிலுவை என்பன நடுத்தரக்காலத்தில் மேம்படுமென எதிர்பார்க்கப்படுகின்றன.

> *மத்திய வங்கியினால் அண்மையில் அறிவிக்கப்பட்ட ஆறு மாத கால வழிகாட்டல்கள் பொருளாதாரத்தின் அனைத்து ஆர்வலர்களினதும் நம்பிக்கையினை மீட்டெடுக்கின்ற வேளையில், குறுங்காலத்திலிருந்து நடுத்தர காலத்தில் வெளிநாட்டுத் துறையின் உறுதிப்பாட்டினை வலுப்படுத்துவதற்கான தந்திரோபாயங்களைக் குறிப்பிடுகின்றது...*

பன்னாட்டு பரஸ்பர பரிமாற்றல் ஒழுங்குகள், வெளிநாட்டு நாணய தவணைக் கடன்கள், அரசாங்கத்திற்கான செயற்றிட்டக் கடன்கள் மற்றும் உபாயமல்லாச் சொத்துக்களின் பணமாக்கல் போன்ற வடிவங்களில் எதிர்பார்க்கப்பட்ட உட்பாய்ச்சல்களுடன் நிதியியல் பாய்ச்சல்கள் எதிர்வரும் காலத்தில் வலுப்படுவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. மேலும், பல்வேறு வெளிநாட்டு நேரடி முதலீட்டு செயற்றிட்டங்கள் தற்போது வரிசைப்படுத்தப்பட்டுள்ளதுடன் துரிதப்படுத்தப்பட்டும் வருகின்றன. சென்மதி நிலுவையில் எதிர்பார்க்கப்பட்ட முன்னேற்றங்கள் எதிர்வரும் காலத்தில் மொத்த அலுவல்சார் ஒதுக்குகளை அதிகரித்து செலாவணி வீதத்தின் உறுதிப்பாட்டினை வலுப்படுத்தும் அதேவேளையில், நாட்டினுடைய வெளிநாட்டு சொத்துக்களையும் பலப்படுத்தும். மொத்த அலுவல்சார் ஒதுக்குகள் 2021 இறுதியில் ஏறத்தாழ ஐ.அ.டொலர் 3.5 பில்லியனாகவும் 2022இல் சராசரியாக ஐ.அ.டொலர் 4.0 பில்லியனாகவும் இருக்குமென எதிர்பார்க்கப்படுகிறது.

உலகளாவிய நோய்த்தொற்றின் காரணமாக ஏற்பட்ட காசுப்பாய்ச்சல் இடையூறுகளின் மத்தியில் 2021இன் வரவுசெலவுத்திட்ட பற்றாக்குறையில் எதிர்பார்க்கப்பட்ட விரிவாக்கம் காணப்பட்டாலும், பொருத்தமான சீராக்கங்களுடன் இறைத் துறைச் செயலாற்றமானது நடுத்தர காலத்தில் மேம்படுமென எதிர்பார்க்கப்படுகின்றத. பொருளாதார நடவடிக்கை இயல்புநிலையை அடைவதுடன் அரசிறைச் சேகரிப்புக்கள் நடுத்தர காலத்தில் மேம்படுமென எதிர்பார்க்கப்படுகின்றது. மேலும், எதிர்பார்க்கப்படும் செலவனிச் சிக்கனப்படுத்தலானது நடுத்தர காலத்தில் உற்பத்தித்திறன் வாய்ந்த அரச முதலீட்டிற்காக மிகவும் தேவைப்படுகின்ற இறை இடைவெளியை உருவாக்குவதில் துணைபுரியம். அரசாங்கத்தின் நடுத்தர கால கொள்கைக் கட்டமைப்பில் குறித்துரைக்கப்பட்டவாறு, அரசாங்கத்தின் மேம்படுத்தப்பட்ட அரசிறை மற்றும் சிக்கனப்படுத்தப்பட்ட செலவினத்துடன் இசைந்து செல்லும் விதத்தில் வரவுசெலவுத்திட்ட பற்றாக்குறையானது நடுத்தர காலத்தில் படிப்படியாக குறைவடையுமென எதிர்பார்க்கப்படுகின்றது. வரவுசெலவுத்திட்ட பற்றாக்குறையின் குறைப்புடன் இசைந்து செல்லும் விதத்தில் நடைமுறை கணக்கு மற்றும் ஆரம்ப நிலுவைகள் நடுத்தர காலத்தில் மேம்படுமென எதிர்பார்க்கப்படுவதுடன் இது அரசாங்கத்தின் படுகடன் திரட்சி முயற்சிகளுக்கு ஆதரவளிக்கம். இதற்கமைய, மொத்த உள்நாட்டு உற்பத்தியில் வெளிநின்ற மத்திய அரசின் படுகடன் விகிதம் நடுத்தர காலத்தில் வீழ்ச்சியடையுமென எதிர்பார்க்கப்படுவதுடன் பொருளாதார வளர்ச்சியின் மேம்பாட்டுக்களினாலும் இது ஆதரவளிக்கப்படும். அரசாங்கத்தின் நிதியிடல் உபாயமானது அரச பொறுப்புக்களின் வெளிநாட்டில் தங்கியிருத்தலைக் குறைத்து இதன் மூலம் வெளிநாட்டு படுகடன் பணிக் கொடுப்பனவுகளுடன் தொடர்புடைய பாதிக்கப்படக்கூடிய தன்மைகளை குறைப்பதற்கு உதவுமென எதிர்பார்க்கப்படுகின்றது. நாட்டிற்கான பன்னாட்டு முறிகள் தொடர்பிலான வெளிப்படுத்துகை 2019 இறுதியில் பதிவுசெய்யப்பட்ட மொ.உ.உற்பத்தியின் 17.9 சதவீதத்திலிருந்து 2021 இறுதியில் மதிப்பிடப்பட்ட உள்நாட்டு உற்பத்தியின் 16 சதவீதத்திற்கு வீழ்ச்சியடையும் என எதிர்பார்க்கப்படுவதுடன் நடுத்தரக் காலத்தில் மொ.உ.உற்பத்தியின் ஏறத்தாழ 10 சதவீதத்திற்கு மேலும் வீழ்ச்சியடையுமென எறிவுசெய்யப்படுகிறது.

2021 ஓகத்தின் நடுப்பகுதியிலிருந்து இறுக்கமான நாணய மற்றும் திரவத்தன்மை நிலைமைகளை பிரதிபலித்து சந்தை வட்டிவீதங்கள் முன்னோக்கிய காலப்பகுதியில் உயர்ந்த மட்டத்தில் உறுதிநிலைப்படுமென எதிர்பார்க்கப்படுகின்றன. எனினும், நாணயக் கொள்கை நிலைப்பாட்டின் இறுக்கமடைதலானது முன்னைய காலத்தில் நிலவிய மிதமிஞ்சிய உயர்ந்த வட்டி வீதங்களுக்கு திரும்பும் என எதிர்பார்க்கப்படவில்லை. சந்தை கடன்வழங்கல் வீதங்கள், தனியார் துறைகளுக்கு நீடித்துநிலைத்திருக்கும் வகையில் கொடுகடன் பாய்ச்சல்களுக்கு ஆதரவளிப்பதற்காக போட்டித்தன்மை வாய்ந்த மட்டங்களில் இருக்மென எதிர்பார்க்கப்படுகின்ற அதேவேளை, வைப்பு வீதங்கள் சேமிப்பாளர்களுக்கு உண்மை விளைவுகளை வழங்குமென எதிர்பார்க்கப்படுகின்றது. சந்தை கடன்வழங்கல் வீதங்களில் அதிகரிப்பு இருந்தபோதும், கொடுகடன் விரிவாக்கத்திலுள்ள உத்வேகமானது பொருளாதாரத்தின் உற்பத்தித்திறன் வாய்ந்த மற்றும் தேவையான துறைகளுக்கான கொடுகடன் பாய்ச்சல்களின் அதிகரிப்புடன் முன்னோக்கிய காலப்பகுதியில் தொடருமென எதிர்பார்க்கப்படுகின்றது.

முக்கியமாக நிரம்பல்பக்க காரணிகளினாலும் உலகளாவிய பண்ட விலைகளின் அதிகரிப்பாலும் தூண்டப்படும் சில பண்டங்களின் சில்லறைச் சந்தை விலைகளின் மேல்நோக்கிய சீராக்கங்கள் குறுங்காலத்தில்

பணவீக்க அழுத்தங்களை அதிகரிப்பதற்கான வாய்ப்புள்ளதுடன் இலக்கு மட்டங்களிலிருந்தான முதன்மை பணவீக்கத்தின் விலகல்களிற்கும் இட்டுச்செல்லக்கூடும். இதற்கேற்ப, பின்னய காலத்தில் விரும்பத்தக்க 4-6 சதவீத மட்டத்திற்கு படிப்படியாக திரும்புவதற்கு முன்னர் எதிர்வரும் சில மாதங்களில் ஏறத்தாழ 8-9 சதவீதத்திற்குள் உயர்வாகக் காணப்படுமென எறிவு செய்யப்படுகிறது. குறுங்கால தற்காலிக நிரம்பல்பக்க அழுத்தங்களைத் தீர்ப்பதற்கு அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்படும் உரிய நேரத்திலான வழிமுறைகள் தேவைப்படுவதுடன் இதன் மூலம் இத்தகைய பணவீக்க அழுத்தங்களினால் நடுத்தர கால பணவீக்க எதிர்பார்ப்புக்கள் பாதிக்கப்படுவது தவிர்க்கப்படும். மத்திய வங்கியினால் மேற்கொள்ளப்பட்ட வழிமுறைகள் கேள்விப்பக்க பணவீக்க அழுத்தங்கள் கட்டியெழுப்பப்படுவதனை ஒழிப்பதுடன் மத்திய வங்கியானது தேவையேற்படுகின்ற போது முற்கூட்டிய வழிமுறைகளை மேற்கொள்வதன் மூலம் நெகிழ்ச்சித்தன்மை வாய்ந்த பணவீக்க இலக்கிடல் கட்டமைப்பிற்குள் நடுத்தர காலத்தில் 4-6 சதவீத வீச்சில் முதன்மை பணவீக்கத்தைப் பேணுவதற்கு தொடர்ந்தும் அர்ப்பணிப்புடனிருக்கின்றது.

உலகளாவிய நோய்த்தொற்றின் பாதகமான விளைவுகளிலிருந்தான புதிய இயல்பு நிலையொன்றினை நோக்கிய பொருளாதாரத்தின் படிப்படியான சீராக்கத்துடன் வங்கித்தொழில் துறை எதிர்வரும் காலப்பகுதியில் அதன் வளர்ச்சி உத்வேகத்தினைப் பேணுமென எதிர்பார்க்கப்படுகின்றது. படுகடன் சட்ட இசைவுத்தாமதத்தின் குறைப்பானது செயற்படாக் கடன்களைப் பாதிக்குமானாலும் வங்கித்தொழில் முறைமையின் திரவத்தன்மை மட்டங்களின் மீது நேர்க்கணியத் தாக்கத்தினை ஏற்படுத்தும். நாட்டின் வெளிநாட்டு ஒதுக்குகளை மேம்படுத்துவதற்கான வழிமுறைகளின் நடைமுறைப்படுத்தல் வங்கித்தொழில் துறையில் வெளிநாட்டு நாணயத் திரவத்தன்மை மீதான அழுத்தங்களைத் தளர்த்துமென எதிர்பார்க்கப்படுகின்றது. 2022 இறுதியில் அதிகரித்த குறைந்தபட்ச மூலதனத் தேவைப்பாடுகளைப் பூர்த்திசெய்வதற்கு இலாபங்களைப் பிடித்து வைத்தல் மற்றும் புதிய மூலதனங்களைத் திரட்டுதல் மூலம் வங்கித்தொழில் துறையின் உறுதிப்பாட்டினையும் தாக்குப்பிடிக்கக்கூடிய தன்மையினையும் மேம்படுத்துவதற்கு நடைமுறைப்படுத்தப்பட்ட வழிமுறைகள் வங்கிகளின் மூலதன மட்டங்களை மேம்படுத்துவதுடன் வங்கித்தொழில் துறையின் எதிர்கால வளர்ச்சிக்கான அத்தியாவசிய மூலதன தாங்கியிருப்புக்களை வழங்கும். வங்கியல்லா நிதியியல் நிறுவனங்கள் துறையில் பிணக்குத் தீர்வுக் கட்டமைப்பினை வலுப்படுத்தவும் குத்தகைக்குவிடும் வியாபாரங்களுடன் தொடர்புடைய சட்டங்களின் மீதான அதிகரித்த கரிசனைகளைத் தீர்ப்பதற்கும் நிதித்தொழில் சட்டமும் நிதிக்குத்தகைச் சட்டமும் திருத்தப்படுகின்றன. மேலும், சிறந்த ஆளுகையை ஊக்குவிப்பதற்கும் உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள் துறையினூடாக தொழில்நுட்பத்தினால் உந்தப்பட்ட நிதியியல் இடையீட்டினை வசதிப்படுத்துவதற்கும் ஒழுங்குமுறைப்படுத்தல் கட்டமைப்பு வலுப்படுத்தப்படும். ஒருங்கிணைப்பின் முதன்மைத் திட்டத்தின் வெற்றிகரமானதொரு நடைமுறைப்படுத்தல் உறுதியானதும் நிலையானதுமான 25 உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளைக் கட்டியெழுப்புமென எதிர்பார்க்கப்படுகின்ற வேளையில் நடுத்தர காலத்தில் துறையின் மூலதன மட்டங்களை வலுப்படுத்தும்.

> *உலகளாவிய நோய்த்தொற்றிற்குப் பின்னரான பொருளாதார மீட்சியானது புதிய இயல்பு நிலைக்கு விரைவாக இசைவடைகின்ற பொருளாதாரத்தின் இயலளவில் பெருமளவில் தங்கியிருப்பதுடன் இந்த இசைவானது பொருளாதாரத்தின் அனைத்து ஆர்வலர்களிடமிருந்தும் உறுதியான வழிமுறைகளைத் தேவைப்படுத்தும்...*

பொருளாதாரத்திற்கு வழங்கப்பட்ட அசாதாரணமான இறை மற்றும் நாணயக் கொள்கை ஊக்குவிப்பு கொவிட்-19 நோய்த்தொற்றிற்கு எதிரான தேசிய தடுப்பூசியேற்றல் செயற்றிட்டத்தின் துரித முன்னெடுப்பு மற்றும் உலகளாவிய பொருளாதார நடவடிக்கையில் எதிர்பார்க்கப்பட்ட மீளெழுச்சி என்பன இலங்கையின் குறுகிய கால வளர்ச்சி வாய்ப்புக்களுக்கு ஆதரவளிக்கக்கூடும். இருப்பினும், உலகளாவிய நோய்த்தொற்றிற்குப் பின்னரான எதிர்பார்க்கப்பட்ட பொருளாதார மீட்சி மற்றும் உயர்ந்தளவானதும் நிலைபெறத்தக்கதுமான வளர்ச்சிப் பாதையினை அடையும் அதே வேளையில், பேரண்டப் பொருளாதார மற்றும் நிதியியல் முறைமை உறுதிப்பாட்டினைப் பேணுதல் என்பன புதிய இயல்பு நிலைக்கு விரைவாக இசைவடைகின்ற பொருளாதாரத்தின் இயலுமையில் பெருமளவு தங்கியுள்ளன. இந்த இசைவானது பொருளாதாரத்தின் வினைத்திறன், உற்பத்தித்திறன் மற்றும் தாக்குப்பிடிக்கும் தன்மையை மேம்படுத்துவதனை நோக்காகக் கொண்ட சான்றுகளினடிப்படையிலமைந்த கொள்கைகளை விரைவாக நடைமுறைப்படுத்தும் பொருட்டு பொருளாதாரத்தினை இயலுமைப்படுத்துவதற்கு சகல ஆர்வலர்களிடமிருந்துமான உறுதியான வழிமுறைகளைத் தேவைப்படுத்தும். சீர்திருத்தக் கொள்கைகள் குறுகிய கால சீராக்கச் செலவினங்களை ஏற்படுத்தக்கூடியதாயிருப்பினும் பொருளாதாரத்திற்குக் கிடைக்கப்பெறும் பரந்தளவிலான நீண்ட கால நன்மைகள் அவ்வாறான குறுகிய கால செலவினங்களை விஞ்சிக் காணப்படும்.

# 2

# தேசிய வெளியீடு, செலவினம் மற்றும் தொழில்நிலை

இலங்கைப் பொருளாதாரம் கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்றின் புதுப்பிக்கப்பட்ட தோற்றத்தின் குழப்பத் தன்மைகளிலிருந்தான சவால்களுக்கு மத்தியில் 2020ஆம் ஆண்டின் தொடர்பான காலப்பகுதியில் பதிவுசெய்யப்பட்ட 9.1 சதவீதம் கொண்ட சுருக்க நிலைமையிலிருந்து மீட்சியடைந்து 2021இன் முதலரைப்பகுதியில் 8.0 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்தது. முதலரைப்பகுதியில் உயர்ந்த வளர்ச்சி பதிவுசெய்யப்பட்டமைக்கு, பொருளாதார நடவடிக்கைகளை தொடர்ந்து மேற்கொள்வதற்கு உரிய வசதிகளை வழங்கிய தகுந்த கட்டுப்பாட்டு வழிமுறைகளும் நாடளாவியரீதியில் விதிக்கப்பட்ட மிகக் கடுமையான இயக்கக் கட்டுப்பாடுகளின் காரணமாக 2020இன் தொடர்பான காலப்பகுதியில் ஏற்பட்ட கணிசமான பொருளாதாரச் சுருக்கத்திலிருந்து தோன்றிய சாதகமான தளத்தாக்கமும் பெருமளவு ஆதரவாக அமைந்தன. இதற்கிணங்க, 2021இன் முதலரைப்பகுதியில் மூன்று முக்கிய பொருளாதார நடவடிக்கைகளான கைத்தொழில், பணிகள் மற்றும் வேளாண்மை என்பன விரிவடைந்தன. மேலும், இக்காலப்பகுதியில் முதலீடு மற்றும் நுகர்வுச் செலவினம் இரண்டும் அதிகரித்த அதேவேளையில் தேறிய வெளிநாட்டுக் கேள்வி வீழ்ச்சியடைந்தது. 2020இன் தொடர்பான காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் 2021இன் முதலரைப்பகுதியில் பொருளாதார நடவடிக்கைகளில் ஏற்பட்ட அதிகரிப்பினைப் பிரதிபலிக்கின்ற விதத்தில் அநேக தொழிற்சந்தைக் குறிகாட்டிகளும் முன்னேற்றமடைந்து காணப்பட்டன.

## 2.1 வெளியீடு


உலகளாவிய நோய்தொற்றின் மூன்றாவது அலையிலிருந்து தோன்றிய இடையூறுகளுக்கு மத்தியிலும் 2020இன் தொடர்பான காலப்பகுதியில் பதிவுசெய்யப்பட்ட 9.1 சதவீதம் கொண்ட சுருக்கத்துடன் ஒப்பிடுகையில் 2021இன் முதலரைப்பகுதியில் பொருளாதாரம் 8.0 சதவீதம் கொண்ட ஆரோக்கியமானதொரு வீதத்தில் வளர்ச்சியடைந்தது. இவ் உயர்ந்த வளர்ச்சிக்கு 2021இன் முதல் காலாண்டுப்பகுதியில் பதிவுசெய்யப்பட்ட சாதகமான வளர்ச்சியும் இரண்டாம் காலாண்டுப் பகுதியில் பதிவுசெய்யப்பட்ட இரட்டை இலக்க பொருளாதார வளர்ச்சியும் தூண்டுதலாக அமைந்தன. ஆண்டின் முதலரைப்பகுதியில் கைத்தொழில் நடவடிக்கைகளின் முக்கியமான பங்களிப்புடன் அனைத்து மூன்று முக்கிய பொருளாதார நடவடிக்கைகளும் கணிசமான வளர்ச்சி வீதங்களைப் பதிவுசெய்துள்ளன. இதற்கிணங்க, இவ்வாண்டின் முதலரைப்பகுதியில் கைத்தொழில், பணிகள் மற்றும் வேளாண்மை நடவடிக்கைகள் முறையே 12.1 சதவீதம், 5.1 சதவீதம் மற்றும் 7.1 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்தன.

> ***ஆண்டின் முதலரைப்பகுதியில் பொருளாதாரத்திற்கு கைத்தொழில் நடவடிக்கைகள் உந்துதலளித்ததுடன் தொடர்ந்து பணிகள் மற்றும் வேளாண்மை நடவடிக்கைகளும் சாதகமான பங்களிப்பினை வழங்கின...***

### பணிகள்

நிதியியல் பணிகள், போக்குவரத்து, மொத்த விற்பனை மற்றும் சில்லறை வர்த்தகம், உண்மைச் சொத்து மற்றும் ஏனைய தனியாள் பணி நடவடிக்கைகளில் ஏற்பட்ட விரிவாக்கம் பணி நடவடிக்கைகளுக்கு பெருமளவிற்கு ஆதரவளித்தன. மேலும், தொலைத்தொடர்பூட்டல் மற்றும் தகவல் தொழில்நுட்ப நிகழ்ச்சித்திட்டப்படுத்தல் மற்றும் ஆலோசனைப் பணிகளும் இக்காலப்பகுதியில் சாதகமான இரட்டை இலக்க வளர்ச்சி வீதங்களைப் பதிவுசெய்தன. இருப்பினும், இவ்வாண்டின் முதலரைப்பகுதியில் தங்குமிடம், உணவு மற்றும் குடிபானப் பணிகள் சுருக்கத்தை பதிவுசெய்தன.

**வரைபடம் 2.1**
**நிலையான விலைகளில் (2010) முதலரை மொ.உ.உற்பத்தி (அ)**




(அ) தரவுகள் 2010 அடியாண்டிற்கான மொ.உ.உற்பத்தி மதிப்பீடுகளை அடிப்படையாகக் கொண்டது
*மூலம்*: தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்

> ***பணி நடவடிக்கைகளில் ஏற்பட்ட வளர்ச்சிக்கு நிதியியல் பணிகள், போக்குவரத்து மற்றும் மொத்த விற்பனை மற்றும் சில்லறை வர்த்தக நடவடிக்கைகள் முக்கிய தூண்டுதல்களாக அமைந்தன...***

மொத்த விற்பனை மற்றும் சில்லறை வர்த்தகம், போக்குவரத்து மற்றும் களஞ்சியப்படுத்தல், தங்குமிட வசதி, உணவு மற்றும் குடிபானப் பணி நடவடிக்கைகள் 2020இன் தொடர்பான காலப்பகுதியில் பதிவுசெய்யப்பட்ட 8.6 சதவீதம் கொண்ட சுருக்கத்துடன் ஒப்பிடுகையில் 2021இன் முதலரைப்பகுதியில் 3.7 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்தன. இவ்வளர்ச்சிக்கு 2021இன் முதலரைப்பகுதியில் 8.1 சதவீதத்தினால் களஞ்சியப்படுத்தல் உள்ளடங்கலாக பொருட்கள் மற்றும் பயணிகளின் போக்குவரத்து நடவடிக்கைகள் விரிவடைந்தமையே முக்கிய காரணமாகும். அதேவேளையில், இக்காலப்பகுதியில் மொத்த விற்பனை மற்றும் சில்லறை வர்த்தக நடவடிக்கைகளும் 2.3 சதவீதத்தினால் விரிவடைந்தன. இருப்பினும், உலகளாவிய நோய்த்தொற்றலைகளின் மீண்டெழும் தன்மையுடன் உலகளாவிய ரீதியில் சுற்றுலா நடவடிக்கைகளுக்கு காணப்பட்ட தொடர்ச்சியான இடையூறுகளின் காரணமாக 2021இன் முதலரைப்பகுதியில் தங்குமிட வசதி, உணவு மற்றும் குடிபான பணி நடவடிக்கைகள் 13.4 சதவீதத்தினால் சுருக்கமடைந்தன.

தகவல் மற்றும் தொடர்பூட்டல் நடவடிக்கைகள் 2020இன் தொடர்பான காலப்பகுதியில் பதிவுசெய்யப்பட்ட 13.4 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2021இன் முதலரைப்பகுதியில் 18.9 சதவீதமானதொரு உயர்ந்த வீதத்தினால் வளர்ச்சியடைந்தன. இவ்வுயர்ந்த வளர்ச்சிக்கு 2021இன் முதலரைப்பகுதியில் வீட்டிலிருந்து பணிபுரிதல் மற்றும் வீட்டிலிருந்து கற்றல் நடவடிக்கைகளின் தொடர்ச்சியால் தொலைத்தொடர்பூட்டல் பணிகளுக்கு ஏற்பட்ட பெருமளவு

கேள்வியின் ஆதரவுடன் தொலைத்தொடர்பூட்டல் நடவடிக்கைளில் பதிவுசெய்யப்பட்ட 19.3 சதவீதமான குறிப்பிடத்தக்க வளர்ச்சியே முக்கிய காரணமாக அமைந்தது. மேலும், 2021இன் முதலரைப்பகுதியில் தகவல் தொழில்நுட்ப நிகழ்ச்சித்திட்ட ஆலோசனை மற்றும் அவற்றுடன் தொடர்பான நடவடிக்கைகள் 19.9 சதவீதமானதொரு உயர் வீதத்தினால் வளர்ச்சியடைந்து தகவல் தொழில்நுட்பம்/ வெளியிலிருந்து பணிகளைப் பெற்றுக்கொள்கின்ற தொழிலின் தாக்குப்பிடிக்கும் தன்மையினை, குறிப்பாக புதிய வழமையின் கீழ் டிஜிட்டல் உருவாக்கத்தின் காரணமாக ஏற்பட்ட அதிகரித்த கேள்வியிலிருந்து கிடைத்த நன்மைகளைப் பிரதிபலித்தது.

நிதியியல், காப்புறுதி மற்றும் வதிவிட சொத்துரிமை உட்பட உண்மைச் சொத்து நடவடிக்கைகள் 2020இன் தொடர்பான காலப்பகுதிக்குரிய 1.3 சதவீதம் கொண்ட வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2021இன் முதலரைப்பகுதியில் 10.1 சதவீதம் கொண்ட உயர்ந்த வீதத்தில் வளர்ச்சியடைந்தன. இது, 2021இன் முதலரைப்பகுதியில் நிதியியல் பணி நடவடிக்கைகள் மற்றும் துணை நிதியியல் பணி நடவடிக்கைகளின் 13.8 சதவீதம் கொண்ட உயர் வளர்ச்சியினால் தூண்டப்பட்டது. மேலும், இக்காலப்பகுதியில் வதிவிடச் சொத்துரிமை உட்பட உண்மைச் சொத்து நடவடிக்கைகள் 4.6 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்தன.

2020இன் தொடர்பான காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் 2021இன் முதலரைப்பகுதியில் ஏனைய பணிகளுடன் தொடர்பான நடவடிக்கைகள், ஏனைய தனியாள் பணிகள், தொழில்சார் நிபுணத்துவப் பணிகள், பொது நிருவாகம், பாதுகாப்பு, கல்வி, சுகாதாரம் மற்றும் சமூகப் பணி நடவடிக்கைகள் வளர்ச்சியைப் பதிவுசெய்தன. இதற்கிணங்க, 2020இன் ஒத்த காலப்பகுதியில் கணிசமான சுருக்கமொன்றினைப் பதிவுசெய்திருந்த ஏனைய தனியாள் பணி நடவடிக்கைகளானது 2021இன் முதலரைப்பகுதியில் 2.2 சதவீத வளர்ச்சியைப் பதிவுசெய்தன. மேலும், சுகாதார நடவடிக்கைகள், வதிவிட நலக் கவனிப்பு மற்றும் சமூகப் பணி நடவடிக்கைகள் 3.6 சதவீதத்தினால் அதிகரித்த அதேவேளையில், இக்காலப்பகுதியில் கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்றினை முகாமைப்படுத்துவதில் அரசாங்கத்தின் ஈடுபாட்டின் ஆதரவுடன் பொது நிருவாகம் மற்றும் பாதுகாப்பு தொடர்பான பணிகள் 1.2 சதவீதத்தினால் அதிகரித்து 2020இன் முதலரைப்பகுதியில் காணப்பட்ட வளர்ச்சிப்போக்கைத் தொடர்ந்து பேணியன.

### கைத்தொழில்

கைத்தொழில் நடவடிக்கைகளில் ஏற்பட்ட விரிவிற்கு தயாரிப்பு நடவடிக்கைகளில் ஏற்பட்ட சாதகமான வளர்ச்சி தூண்டுதலாக அமைந்தது. அதேநேரம், கட்டடவாக்கம், சுரங்கமகழ்தல் மற்றும் கல்லுடைத்தல் நடவடிக்கைகளில் காணப்பட்ட மீட்சியும் கைத்தொழில் நடவடிக்கைகளின் ஒட்டுமொத்த வளர்ச்சிக்குப் பங்களித்தன.


> *தயாரிப்பு நடவடிக்கைகள், கட்டடவாக்கம் மற்றும் சுரங்கமகழ்தல் நடவடிக்கைகளில் காணப்பட்ட மீட்சியால் கைத்தொழில் நடவடிக்கைகளின் விரிவாக்கம் தூண்டப்பட்டது...*

கைத்தொழில் உற்பத்திச் சுட்டெண்ணின் ஆண்டுக்காண்டு வளர்ச்சியில் பிரதிபலிக்கப்பட்டவாறான கைத்தொழில் துறையின் செயலாற்றத்திற்கு பாரிய கைத்தொழில் நடவடிக்கைகளை தடங்கல்களின்றித் தொடர்வதற்கு அனுமதித்த 2021 ஏப்பிறல் இறுதிமுதல் விதிக்கப்பட்ட கடுமை குறைந்த இயக்கக் கட்டுப்பாட்டு நடைமுறைகள் பெருமளவிற்கு வசதியளித்தன. மேலும், நோய்த்தொற்றின் மூன்றாவது அலைக்கு மத்தியிலும் கைத்தொழில் நடவடிக்கைகள் தடங்கலின்றி தொடர்வதனை யூலையிலிருந்து விரைவுபடுத்தப்பட்ட கொவிட்-19 தடுப்புமருந்தேற்றுதல் செயற்றிட்டம் இயலுமைப்படுத்தியது.

கொவிட்-19 உடன் தொடர்பான இடையூறுகளுக்கு மத்தியிலும், 2021 பெப்புருவரி மற்றும் யூலை நீங்கலாக 2021 ஓகத்துடன் முடிவடைந்த எட்டு மாத காலப்பகுதியில் கைத்தொழில் உற்பத்தியானது ஆண்டுக்காண்டு அடிப்படையில் வளர்ச்சிப் போக்கொன்றினைக் காட்டியுள்ளது.

குறிப்பாக, கைத்தொழில் உற்பத்திச் சுட்டெண் ஆரம்பிக்கப்பட்டதன் பின்னர் முதல் தடவையாக 2021 மாச்சில் மிக உயர்ந்த பெறுமதியினைப் பதிவுசெய்தது. இதன்படி, 2021 மாச்சில் கைத்தொழில் உற்பத்திச் சுட்டெண் 119.6 ஆக விளங்கியது. கைத்தொழில் உற்பத்திச் சுட்டெண்ணிலுள்ள முக்கிய துறைகளில் அணியும் ஆடைகள் தயாரிப்பு மற்றும் புடவைகள் தயாரிப்புத் துறைகள் இக்காலப்பகுதியில் சுட்டெண்ணின்

வரைபடம் 2.2
கைத்தொழில் உற்பத்திச் சுட்டெண்




*மூலம்*: தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்


மேல்நோக்கிய போக்கிற்கு முக்கிய பங்காளர்களாக விளங்கின. ஒட்டுமொத்தமாக, உணவுத் தயாரிப்பு, நிலக்கரி மற்றும் சுத்திகரிக்கப்பட்ட பெற்றோலிய உற்பத்திகள், இறப்பர் மற்றும் பிளாத்திக்கு உற்பத்திகள் மற்றும் ஏனைய உலோகமல்லா கனிப்பொருள் உற்பத்திகளுடன் தொடர்புடைய ஏனைய முக்கிய வகைகளும் அவ்வப்போது ஏற்பட்ட சிறிய வீழ்ச்சிகளுக்கு மத்தியிலும் சாதகமான பங்களிப்பை வழங்கின.

2021இன் இதுவரையான காலப்பகுதியில் அரசாங்கம் கைத்தொழில் துறையினை மேம்படுத்துவதற்கு, குறிப்பாக பொருளாதாரத்தின் உற்பத்தியாக்க இயலளவிற்கேற்ப துறைகளின் பங்களிப்பினை மேம்படுத்துவது தொடர்பில் பல்முனைகளைக் கொண்ட பல முன்னெடுப்புக்களை மேற்கொண்ட வேளையில் ஏற்றுமதி தொடர்பிலான நடவடிக்கைகளையும் மேம்படுத்தியது. கைத்தொழில் துறையின் அபிவிருத்திக்கு அனைத்தையும் உள்ளடக்கியதும் பூரணத்துவம் வாய்ந்ததுமான கொள்கை ஆவணமொன்றின் தேவையை அங்கீகரிக்கின்ற விதத்தில் கைத்தொழில் அமைச்சு கைத்தொழில் அபிவிருத்திக்கான தேசிய கொள்கையினை உருவாக்குகின்ற முயற்சிகளைத் தொடங்கியிருக்கின்றது. இவ் ஆவணமானது அரச மற்றும் தனியார் கைத்தொழில்களுக்கான வழிகாட்டல் கட்டமைப்பொன்றாகப் பணியாற்றும் என எதிர்பார்க்கப்படுகின்ற அதேவேளையில், கைத்தொழில் அபிவிருத்திச் செய்முறைகள் அரசாங்கத்தின் தேசிய கொள்கைக் கட்டமைப்புடன் இசைவுப்படுத்தப்பட்டுள்ளமையினை உறுதிப்படுத்துவதுடன் நீடித்துநிலைத்திருக்கும் அபிவிருத்தி இலக்குகள் தொடர்பிலும் உரிய கவனத்தினைச் செலுத்தியிருக்கிறது.

கைத்தொழில் அமைச்சும் ஏற்றுமதி அபிவிருத்திச் சபையும் அரசாங்கத்தினால் அடையாளம் காணப்பட்ட கைத்தொழில்களை இலக்கு வைத்து கொள்கை முன்னெடுப்புக்களைத் தயாரிப்பதில் ஈடுபட்டு வருகின்றன.

**வரைபடம் 2.3**

**கைத்தொழில் உற்பத்தி சுட்டெண்ணின் ஆண்டுக்காண்டு மாற்றத்திற்கான பங்களிப்பு**




*மூலம்:* தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்

இது தொடர்பில், அமைச்சரவையினால் ஊர்திகள் தயாரிப்பு/பொருத்துதல் கைத்தொழிலுக்கும் உந்து ஊர்திப் பாகங்களைத் தயாரிக்கும் கைத்தொழிலுக்கும் உரிய நியம தொழிற்பாட்டு நடைமுறைகளுக்கு ஒப்புதல் வழங்கப்பட்டுள்ள அதேவேளையில் படகு கட்டும் தொழிலுக்கான ஒழுங்குமுறைப்படுத்தல் கட்டமைப்பினைத் தயாரித்தலுடன் தொடர்புடைய நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இலங்கையில் மின்னியல் மற்றும் இலத்திரனியல் கைத்தொழிலை அபிவிருத்தி செய்வதற்குத் தேவையான தேர்ச்சி இடைவெளிகளையும் பயிற்சியையும் அடையாளம் காண்பதற்கான முன்னெடுப்புக்களும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.


அண்மையில் நிறுவப்பட்டுள்ள தேசிய புத்தாக்க முகவராண்மை பொருளாதாரத்தின் அனைத்துப் பிரிவுகளையும் பயன்படுத்திக் கொள்வதனையும் வர்த்தக மயப்படுத்திக் கொள்வதனையும் இயலுமைப்படுத்துவதற்கு வரவேற்கத்தக்கதொரு முன்னெடுப்பாக விளங்குவதுடன், இது உலகளாவிய பெறுமதிச் சங்கிலியில் இலங்கையினைக் காத்திரமான விதத்தில் நிலைநிறுத்துவதற்கும் வழியமைக்கும்.

### வேளாண்மை

இவ்வாண்டின் முதலரைப்பகுதியில் வேளாண்மை நடவடிக்கைகளில் ஏற்பட்ட விரிவாக்கத்திற்கு முக்கியமாக தேயிலைச் செய்கை, விலங்கு வளர்ப்பு மற்றும் எண்ணெய்ப்பசை பழவர்க்கங்களின் (தெங்கு உட்பட) பயிர்ச்செய்கைகளில் ஏற்பட்ட அதிகரிப்புக்கள் தூண்டுதலாக அமைந்தன. மேலும், பழவர்க்கங்கள், இறப்பர், வாசனைத்திரவியங்கள், ஏனைய தானியங்கள், காய்கறிகளின் பயிர்ச்செய்கைகள் மற்றும் காடாக்கல் மற்றும் மரக்குற்றிகளாக்குதல் நடவடிக்கைகளில் காணப்பட்ட வளர்ச்சியும் ஒட்டுமொத்த வேளாண்மை நடவடிக்கைகளின் விரிவாக்கத்திற்குச் சாதகமாகப் பங்களித்தன. எனினும், இதே காலப்பகுதியில் அரிசி மற்றும் ஏனைய நீண்ட காலப் பயிர்களின் பயிர்ச்செய்கைகள் சுருக்கமடைந்தன.

நெல் உற்பத்தியானது அபரிமிதமான அறுவடை பதிவுசெய்யப்பட்ட முன்னைய பெரும்போகத்துடன் ஒப்பிடுகையில் 2020/21 பெரும்போகத்தில் 4.2 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது. மறுபுறத்தில், 2021 ஓகத்துடன் முடிவடைந்த எட்டு மாத காலப்பகுதியில் தேயிலை மற்றும் இறப்பர் உற்பத்திகள் குறிப்பிடத்தக்க மீட்சியைப் பதிவுசெய்தமைக்கு சாதகமான வானிலை நிலைமைகளும் கடந்த ஆண்டின் தாழ்ந்த தளத்தாக்கமும் ஆதரவாக விளங்கின. இதற்கிணங்க, ஆண்டுக்காண்டு அடிப்படையில்

**வரைபடம் 2.4**
**நெல் உற்பத்தி**





*மூலம்:* தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்

தேயிலை மற்றும் இறப்பர் உற்பத்திகள் 2021 சனவரி - ஓகத்து காலப்பகுதியில் முறையே 17.9 சதவீதத்தினாலும் 12.1 சதவீதத்தினாலும் வளர்ச்சியடைந்தன. 2021 ஓகத்துடன் முடிவடைந்த எட்டு மாத காலப்பகுதியில் அனைத்து மூன்று உயர வகைகளான உயர்நில, மத்தியநில மற்றும் தாழ்நில வளர் தேயிலைகளின் உற்பத்திகள் அதிகரித்து காணப்பட்டன. அதேவேளையில், உலகளாவிய சந்தையில் தேயிலை மற்றும் இறப்பர் விலைகள் உயர்வடைந்தமையின் காரணமாக தேயிலை மற்றும் இறப்பர் இரண்டினதும் கப்பல் ஏற்றுமதிக் கட்டண விலைகள் ஆண்டுக்காண்டு அடிப்படையில் அதிகரித்தன. 2021 சனவரி - ஓகத்து காலப்பகுதியில் தெங்கு உற்பத்தி 10.1 சதவீதத்தினால் விரிவடைந்தமைக்கு முன்னைய ஆண்டில் நிலவிய சாதகமான வானிலை நிலைமைகளின் காலங்கடந்த தாக்கம் ஆதரவாக விளங்கியது. இருப்பினும், கடல் மீன் உற்பத்தி 2.2 சதவீதத்தினால் குறைவடைந்தமையின் காரணமாக 2021 ஓகத்தில் முடிவடைந்த எட்டு மாத காலப்பகுதியில் மீன் உற்பத்தி ஆண்டுக்காண்டு அடிப்படையில் 0.2 சதவீதத்தினால் சிறிதளவு வீழ்ச்சியடைந்தது. குறிப்பாக, உலகளாவிய நோய்த்தொற்றின் இரண்டாம் அலைக் காலத்தில் கடல் மீன் வழங்கல் சங்கிலியில் ஏற்பட்ட இடையூறுகளும் கடல் வளங்களுக்குக் கடுமையான சேதங்களை ஏற்படுத்தக் காரணமாயிருந்த கொழும்பு கரையோரத்திற்கு அப்பால் தீப்பிடித்துக் கொண்ட பாரிய கப்பல் சம்பவமும் காரணங்களாக அமைந்தன. இருப்பினும், உள்நாட்டு நன்னீர் மீன்பிடி நடவடிக்கைகள் 2021 ஓகத்துடன் முடிவடைந்த எட்டு மாத காலப்பகுதியில் ஆண்டுக்காண்டு அடிப்படையில் 6.8 சதவீதம் கொண்ட வளர்ச்சியைப் பதிவுசெய்தன. 2021இன் முதலரைப்பகுதியில் காய்கறிகளின் உற்பத்தி சிறிதளவால் வீழ்ச்சியடைந்த போதும் ஏனைய களப்பயிர்களின் உற்பத்தி ஆண்டுக்காண்டு அடிப்படையில் 39.6 சதவீதத்தினால் விரிவடைந்தமைக்கு பெரிய வெங்காயம், சோளம், உழுந்து மற்றும் பயறு என்பனவற்றின் அதிகரித்த உற்பத்தியே காரணமாகும். 2021இன் முதலரைப்பகுதியில் பால், முட்டை மற்றும் கோழி இறைச்சி என்பனவற்றின் அதிகரித்த உற்பத்தியுடன் விலங்கு வளர்ப்புத் துறை சிறந்த செயலாற்றத்தை வெளிக்காட்டியது.

> ***தேயிலை மற்றும் விலங்கு உற்பத்தி நடவடிக்கைகளில் ஏற்பட்ட வளர்ச்சி வேளாண்மை நடவடிக்கைகளில் ஏற்பட்ட விரிவாக்கத்திற்கு முக்கிய தூண்டுதல்களாக அமைந்தன...***

இவ்வாண்டில் இது வரையான காலப்பகுதியில் கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்றிற்கு மத்தியிலும் வேளாண்மையாளர்களின் வாழ்வாதாரத்திற்கு ஆதரவளிப்பது தொடர்பில் உரிய பரிசீலனைகளைக் கவனத்தில் கொள்கின்ற அதேவேளையில் உணவுப் பாதுகாப்பினை உறுதிப்படுத்தவும் வேளாண்மையுடன் தொடர்பான நீண்டகாலச் சூழற் பிரச்சனைகளைக் கட்டுப்படுத்தும் வகையிலும் அரசாங்கம் பல்வேறு தலையீடுகளை மேற்கொண்டது. இது தொடர்பில் நீண்ட கால முன்னெடுப்புக்களிலொன்றான வேளாண்மையாளர்களுக்கு நியாயமான விலைகளை வழங்கும் பொருட்டு மேற்கொள்ளப்பட்ட நெல் கொள்வனவுத் திட்டமாகும். இத் திட்டத்தில் நாட்டரிசி கி.கிறாமிற்கு ரூ.50.00, சம்பா கி.கிறாமிற்கு ரூ.52.00, கீரி சம்பாவிற்கு கி.கிறாமிற்கு ரூ.55.00 என்ற உத்தரவாத விலைகளை விதித்தமையின் மூலம் தொடர்ந்தும் மேற்கொள்ளப்பட்டது. அதேவேளை, நெற் சந்தைப்படுத்தல் சபை உத்தரவாத விலையிலிருந்து கி.கிறாமிற்கு ரூ.8.00 குறைப்பை ஈர நெல்லிற்கான விலையாக விதித்தது. நெற் சந்தைப்படுத்தல் சபை 2020/21 பெரும்போக அறுவடையின் போது ஏறத்தாழ 45,000 மெ.தொன்கள் நெல் இருப்பினைக் கொள்வனவு செய்த வேளையில், 2021 சிறுபோகத்தில் ஏறத்தாழ 6,786 மெ.தொன்களை மாத்திரம் கொள்வனவு செய்யப்பட்டது. நெற் சந்தைப்படுத்தல் சபையின் குறைவான களஞ்சியசாலை வசதிகள், உலர்த்தும் வசதிகள் மற்றும் போக்குவரத்து வசதிகள் என்பன அரசாங்கத்தின் நெற் கொள்வனவு நிகழ்ச்சித்திட்டத்தினைப் பலவீனப்படுத்தி சந்தையில் அரசாங்கம் தலையிடுவதற்கான விலையினை நிர்ணயிப்பதற்கான இயலாற்றலையும் மட்டுப்படுத்தியது. சில ஆலையாளர்களிடம் மாத்திரம் சந்தைச் சக்தி குவிந்திருந்தமையின் காரணமாக அரிசிக்கான உயர்ந்தபட்ச

வரைபடம் 2.5
தேயிலை உற்பத்தி




*மூலம்*: இலங்கைத் தேயிலைச் சபை


சில்லறை விலைகள் விதிப்பு, அரிசி வழங்கலில் காணப்பட்ட பற்றாக்குறை மற்றும் கடுமையான விலை உயர்வுகள் என்பன உள்ளூர் சந்தைகளில் அவதானிக்கப்பட்டன. 2021 செத்தெம்பர் 02ஆம் நாளன்று சம்பாவிற்கு கி.கிராமிற்கு ரூ.103 இனையும் நாட்டரிசிக்கு கி.கிராமிற்கு ரூ.98.00 இனையும் உயர்ந்தபட்ச சில்லறை விலையாக விதிக்கின்ற விதத்தில் அதிவிசேட வர்த்தமானி விடுக்கப்பட்ட போதும், பற்றாக்குறையினைத் தவிர்ப்பதற்காகவும் தொடர்ச்சியான அரிசி நிரம்பலை உறுதிப்படுத்துவதற்காகவும் அவ்வர்த்தமானி செத்தெம்பர் இறுதியளவில் இரத்துச் செய்யப்பட்டது.

அரசாங்கத்தின் தேசிய கொள்கைக் கட்டமைப்பான *'பிரகாசமான சுபீட்சத்திற்கான நோக்கு'* கட்டமைப்புடன் இசைந்து செல்லும் விதத்தில் 2021 மேயில் இரசாயன வளமாக்கிகள் மற்றும் ஏனைய வேளாண் இரசாயனங்களின் இறக்குமதி மீது தடை விதிக்கப்பட்ட வேளையில் சேதன வேளாண்மையினை நோக்கி பொருளாதாரத்தினைத் திருப்பும் நோக்குடன் உள்நாட்டு சேதன வளமாக்கி உற்பத்தி ஊக்குவிக்கப்பட்டது. இதற்கமைய, சேதன வளமாக்கியைப் பயன்படுத்தி அவர்களது சொந்த நெற்செய்கையினை மேற்கொள்கின்ற வேளாண்மையாளர்களுக்கு 2021/22 பெரும்போகத்திலிருந்து உயர்ந்தபட்சமாக இரண்டு எக்டேயர்களுக்கு எக்டேயரொன்றிற்கு ரூ.12,500 கொண்ட ஊக்குவிப்பொன்று வழங்கப்படுமென்று தீர்மானிக்கப்பட்டது. இருப்பினும், நாட்டில் சேதன வளமாக்கியின் மட்டுப்படுத்தப்பட்ட கிடைப்பனவால் உணவு உற்பத்தியில் ஏற்படக்கூடிய இழப்பு, வேளாண்மையாளர்களுக்கான குறைந்த வருமானம், உணவு இறக்குமதிகளுக்காக ஏற்படக்கூடிய உயர்ந்த செலவுகள், வெளிநாட்டுச் செலாவணி வருவாய்களின் இழப்பு மற்றும் உணவுப் பாதுகாப்புப் பிரச்சனைகள் என்பன தொடர்பில் ஆர்வலர்களிடையே பரந்தளவில் காணப்பட்ட கரிசனைகளைப் பரிசீலனையில் கொண்டு அரசாங்கம் மேம்பட்ட வகையிலான சேதனமற்ற வளமாக்கிகள், கனிப்பொருள் வளமாக்கிகள் மற்றும் வேளாண் இரசாயனங்களை 2021/2022 பெரும்போகத்திலிருந்து நெல், தேயிலை மற்றும் தெங்கு போன்று பல்வேறு பயிர்களுக்கும் பயன்படுத்துவதற்காக இறக்குமதி செய்வதற்கு நடவடிக்கைகளை எடுத்திருக்கிறது. அதேவேளை, நீடித்துநிலைத்திருக்கக்கூடிய பசுமை வேளாண்மையினைப் பேணுதல், பல்வேறு பயிர்களுக்கும் பொருத்தமான சேதன வளமாக்கியை அடையாளம் காணுதல் மற்றும் பயிர்களின் தரத்தினை மேம்படுத்தல் மற்றும் பூச்சிக் கொல்லிகள், களைக் கொல்லிகளை உள்ளூரில் உற்பத்தி செய்தல் என்பனவற்றின் பொருட்டு முறையியல் சார்ந்த நிகழ்ச்சித்திட்டமொன்றினை உருவாக்குவதனூடாக சேதன வேளாண்மையினை ஊக்குவிக்கும் நோக்குடன் 2021 ஒத்தோபரில் பசுமை வேளாண்மைக்கான சனாதிபதி செயலணிக்குழு ஒன்று நியமிக்கப்பட்டது.

### கொள்வனவு முகாமையாளர் சுட்டெண் அளவீடுகளினால் பிரதிபலிக்கப்பட்டவாறான உற்பத்திப்பக்க அபிவிருத்திகள்

தயாரிப்பு நடவடிக்கைகளுக்கான கொள்வனவு முகாமையாளர் சுட்டெண்ணானது வழமையான பருவகாலத்தால் கேள்வி குறைவடைகின்ற மாதமான ஏப்பிறல் மற்றும் பொருளாதாரத்தினைப் பாதித்த உலகளாவிய நோய்த்தொற்றின் மூன்றாவது அலை தோன்றிய மே ஆகிய மாதங்கள் தவிர்ந்த ஆண்டின் முதலரைப்பகுதியில் குறிப்பிடத்தக்க அதிகரிப்புக்களைக் காட்டியது. ஆண்டின் முதலரைப்பகுதியில் தயாரிப்புக் கொள்வனவு முகாமையாளர் சுட்டெண்ணில் ஏற்பட்ட விரிவாக்கத்திற்கு உற்பத்தி மற்றும் புதிய கட்டளைகள் தொடர்பான துணைச் சுட்டெண்களிலிருந்து குறிப்பாக, உணவு மற்றும் குடிபானம், புடவை மற்றும் ஆடைத் துறைகளின் மாதத்திற்கு மாத விரிவாக்கங்கள்


வரைபடம் 2.6
கொள்வனவு முகாமையாளர் சுட்டெண் - தயாரிப்பு (அ)




(அ) கொ.மு.சுட்டெண்ணானது கடந்த மாதத்துடன் ஒப்பிட்டு மாதாந்த அபிவிருத்திகளை வெளிக்காட்டும் மனோபாவ அளவீட்டு அடிப்படையில் அமைந்ததாகும். இது ஓர் வியாபித்தல் சுட்டெண் (diffusion index) ஆவதுடன் 0 மற்றும் 100 இற்கு இடையிலான பெறுமதியை கொண்டிருப்பதோடு நடுநிலையான 50இற்கு மேலான சுட்டெண் பெறுமதி பொருளாதார நடவடிக்கைகளில் ஓர் விரிவாக்கத்தைக் குறிக்கும் அதேவேளையில் 50இற்கு கீழான சுட்டெண் பெறுமதியானது சுருக்கத்தினையும் குறிக்கின்றது.

*மூலம்*: இலங்கை மத்திய வங்கி

வரைபடம் 2.7
கொள்வனவு முகாமையாளர் சுட்டெண் - பணிகள் (அ)




(அ) கொ.மு.சுட்டெண்ணானது கடந்த மாதத்துடன் ஒப்பிட்டு மாதாந்த அபிவிருத்திகளை வெளிக்காட்டும் மனோபாவ அளவீட்டு அடிப்படையில் அமைந்ததாகும். இது ஓர் வியாபித்தல் சுட்டெண் (diffusion index) ஆவதுடன் 0 மற்றும் 100 இற்கு இடையிலான பெறுமதியை கொண்டிருப்பதோடு நடுநிலையான 50இற்கு மேலான சுட்டெண் பெறுமதி பொருளாதார நடவடிக்கைகளில் ஓர் விரிவாக்கத்தைக் குறிக்கும் அதேவேளையில் 50இற்கு கீழான சுட்டெண் பெறுமதியானது சுருக்கத்தினையும் குறிக்கின்றது.

*மூலம்*: இலங்கை மத்திய வங்கி

தூண்டுதலாக அமைந்தன. மூன்றாம் காலாண்டுப்பகுதியில், தயாரிப்பு கொள்வனவு முகாமையாளர் சுட்டெண் யூலை மாத காலப்பகுதியில் உயர்ந்த வீதத்தில் அதிகரித்தமைக்கு ஏற்றுமதிக் கட்டளைகளில் ஏற்பட்ட அதிகரிப்பின் நன்மை காரணமாக புடவை மற்றும் அணியும் ஆடைகள் துறையில் ஏற்பட்ட விரிவாக்கம் காரணமாக அமைந்தது. இருப்பினும், வைரஸ் பரவலின் காரணமாக ஓகத்தில் கொள்வனவு முகாமையாளர் சுட்டெண் சுருக்கமடைந்ததெனினும் புடவை மற்றும் அணியும் ஆடைகளின் தயாரிப்பு மற்றும் உணவு மற்றும் குடிபான துறைகளில் ஏற்பட்ட புதிய கட்டளைகளின் அதிகரிப்பின் காரணமாக நிலவிய சாதகமான தன்மைகளால் செத்தெம்பரில் மீண்டும் அதிகரித்து மாதாந்த அடிப்படையில் விரிவாக்கமொன்றினை எடுத்துக்காட்டியது. மேலும், செத்தெம்பர் மாத அளவீட்டின்படி அடுத்த மூன்று மாதங்களுக்கான தயாரிப்பு நடவடிக்கைகளுக்கான எதிர்பார்ப்பு தொடர்ந்தும் உயர்ந்த மட்டங்களைச் சுற்றிக் காணப்பட்டமையினால் கட்டுப்பாடுகளின் படிப்படியான தளர்வு மற்றும் நோய்த்தொற்று நிலைமை குறைந்து வருகின்றமை காரணமாக உள்நாட்டு ரீதியாகவும் உலகளாவிய ரீதியாகவும் பொருளாதார நிலைமைகள் மேலும் முன்னேற்றமடையுமென எதிர்பார்க்கப்படுகிறது.

> *ஏப்பிறல், மே மற்றும் ஓகத்து நீங்கலாக 2021இன் செத்தெம்பர் வரையான காலப்பகுதியில் தயாரிப்பு மற்றும் பணிகள் இரண்டினதும் கொள்வனவு முகாமையாளர் சுட்டெண்கள் விரிவடைந்த அதேவேளையில் எஞ்சிய ஆண்டிற்கான எதிர்பார்ப்புக்கள் சாதகமாக காணப்பட்டன...*

அதேவேளை, பணிகள் நடவடிக்கைகளுக்கான கொள்வனவு முகாமையாளர் சுட்டெண் ஆண்டின் முதலரைப் பகுதியில் அதிகரிப்புக்களைப் பதிவுசெய்தமைக்கு, வீழ்ச்சிகள் பதிவுசெய்யப்பட்ட ஏப்பிறல் மற்றும் மே மாதங்கள் தவிர்ந்த காலப்பகுதியில் பணிகள் நடவடிக்கைகளில் ஏற்பட்ட விரிவாக்கத்தினைப் பிரதிபலிக்கின்ற விதத்தில் புதிய வியாபாரங்கள் மற்றும் வியாபார நடவடிக்கைகளில் அவதானிக்கப்பட்ட விரிவாக்கங்கள் அதரவாகக் காணப்பட்டன. கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்றின் மூன்றாவது அலையின் தாக்கம் காரணமாக மாதத்தின் இறுதியில் விடுமுறைகள் அதிகரித்தமை ஏப்பிறல் மாதத்தில் வியாபாரத் துறையின் மிதமான தன்மைக்கு வழிவகுத்த அதேவேளையில், மேயில் அத்தியாவசியமற்ற பொருட்களுக்கான கேள்வி குறைவடைந்தமையும் கொவிட்-19 நோய்த்தொற்றின் பரவலைக் கட்டுப்படுத்துவதற்கான பயணக் கட்டுப்பாடுகளின் காரணமாக வியாபாரத் தொழிற்பாடுகளுக்கு ஏற்பட்ட இடையூறுகளும் பணிகள் நடவடிக்கைகளின் வளர்ச்சியைப் பாதிப்படையச் செய்தன. காலப்பகுதி முழுவதிலும் நிதியியல் பணிகள் ஆரோக்கியமான செயலாற்றத்தினைக் காட்டிய அதேவேளையில் போக்குவரத்து, ஏனைய தனியாள் பணிகள் மற்றும் மொத்த விற்பனை மற்றும் சில்லறை நடவடிக்கைகள் முதலாம் காலாண்டுப்பகுதியில் நிலவிய சாதகமான சூழ்நிலைகளிலிருந்து நன்மையடைந்தன. இரண்டாம் காலாண்டுப் பகுதியில், உலகளாவிய நோய்த்தொற்றின் மீண்டெழுகையுடன் சுகாதாரப் பணிகள் மேம்பட்ட வேளையில் போக்குவரத்து மற்றும் தங்குமிட வசதிகள் பாதிப்புக்குள்ளாகின. மூன்றாம் காலாண்டுத் தொடக்கத்தில் பயணக் கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டமையுடன் இசைந்து செல்லும் விதத்தில் பெரும்பாலான அனைத்துத் துணைத் துறைகளினதும் வியாபார நடவடிக்கைகள் அதிகரித்த அதேவேளையில் ஓகத்து மாதத்தில் மொத்த விற்பனை மற்றும் சில்லறை வர்த்தகம், உண்மைச் சொத்து, காப்புறுதி மற்றும் ஏனைய தனியாள் நடவடிக்கைகள் போன்ற பெரும்பாலான அனைத்துத் துணைத் துறைகளினதும் வியாபார நடவடிக்கைகள் கணிசமானளவிற்கு வீழ்ச்சியடைந்து அவர்களது வியாபாரத் தொழிற்பாடுகளின் மீது பயணக் கட்டுப்பாடுகள் கொண்டிருந்த மோசமான தாக்கத்தினை எடுத்துக்காட்டியன. எனினும், வெளிநாடுகளுக்கு சரக்கு அனுப்புதல் தொடர்பிலான போக்குவரத்து, நிதியியல் பணிகள், கல்வி மற்றும் தொலைத்தொடர்பூட்டல் துணைத் துறைகளில் அவதானிக்கப்பட்ட முன்னேற்றங்களுடன் பணிகள் கொள்வனவு முகாமையாளர் சுட்டெண் மீண்டும் விரிவாக்கப் பாதைக்குத் திரும்பியது. மேலும், அடுத்துவரும் மூன்று மாதங்களுக்கான வியாபார நடவடிக்கைகளுக்கான எதிர்பார்ப்புக்கள் செத்தெம்பரில் அதிகரித்து, ஆண்டின் நான்காம் காலாண்டுப் பகுதிக்கான சாதகமான தோற்றப்பாட்டினை எடுத்துக்காட்டுகின்றது.

## 2.2 செலவினம்

பொருளாதாரத்தின் நுகர்வு மற்றும் முதலீட்டுச் செலவினத்தின் கூட்டுத்தொகையான மொத்த உள்நாட்டுச் செலவினம் நடைமுறைச் சந்தை விலைகளில் 2020ஆம் ஆண்டின் தொடர்பான காலப்பகுதியில் பதிவுசெய்யப்பட்ட 5.0 சதவீதம் கொண்ட சுருக்கத்துடன் ஒப்பிடுகையில் 2021இன் முதலரைப் பகுதியில் 16.5 சதவீதம் கொண்ட உயர்ந்த வீதத்தினால் வளர்ச்சியடைந்தது. இவ்வளர்ச்சியானது 2020இன் தொடர்பான காலப்பகுதியில் 2.9 சதவீதம் கொண்ட சுருக்கத்தினைப் பதிவுசெய்த நுகர்வுச் செலவினத்தில் அவதானிக்கப்பட்ட 16.5 சதவீதம் கொண்ட விரிவாக்கத்தின் மூலம் பெருமளவிற்குத் தூண்டப்பட்டது. மேலும், முதலீட்டுச் செலவினமானது 2020இன் ஒத்த காலப்பகுதியில் பதிவுசெய்யப்பட்ட 11.4 சதவீதம் கொண்ட சுருக்கத்திலிருந்து மீட்சியடைந்து 2021இன் முதலரைப்பகுதியில் 16.7 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்து அடையப்பட்ட பொருளாதார வளர்ச்சிக்கும் எதிர்பார்க்கப்பட்ட பொருளாதார மீட்சிக்கும் சாதகமான பங்களிப்பை வழங்கியது. அதேநேரம், இக்காலப்பகுதியில் பொருட்கள் மற்றும் பணிகள் ஏற்றுமதிகளில் ஏற்பட்ட 19.1 சதவீதம் கொண்ட அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் பொருட்கள் மற்றும் பணிகள் இறக்குமதிகளில் 29.4 சதவீதம் கொண்ட உயர்ந்த அதிகரிப்பு ஏற்பட்டமையால் 2021இன் முதலரைப்பகுதியில் தேறிய வெளிநாட்டுக் கேள்வி 55.2 சதவீதத்தினால் குறிப்பிடத்தக்களவிற்குச் சுருக்கமடைந்தது. அதனைத் தொடர்ந்து, நடைமுறைச் சந்தை விலைகளில் மொ.உ.உற்பத்தி 2020இல் தொடர்பான காலப்பகுதியில் பதிவுசெய்யப்பட்ட 6.8 சதவீதம் கொண்ட சுருக்கத்துடன் ஒப்பிடுகையில் 2021இன் முதலரைப்பகுதியில் 13.8 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்தது.

> ***ஆண்டின் முதலரைப் பகுதியில் நுகர்வு மற்றும் முதலீடு இரண்டிலும் ஏற்பட்ட உயர்ந்த வளர்ச்சியுடன் மொத்த உள்நாட்டுச் செலவினம் விரிவடைந்த அதேவேளையில் தேறிய வெளிநாட்டுக் கேள்வி தேய்வடைந்தது...***


### வியாபாரத் தோற்றப்பாட்டு அளவீட்டினால் பிரதிபலிக்கப்பட்டவாறான கேள்விப்பக்க அபிவிருத்திகள்

இலங்கை மத்திய வங்கியினால் காலாண்டு அடிப்படையில் நடாத்தப்பட்ட வியாபாரத் தோற்றப்பாட்டு அளவீட்டின் பெறுபேறுகளின்படி, கேள்வி மற்றும் விற்பனை இரண்டின் மீதுமான அபிப்பிராயம் 2020இன் தொடர்பான காலப்பகுதிகளுடன் ஒப்பிடுகையில் 2021இன் முதற்காலாண்டிலும் அதேபோன்று இரண்டாம் காலாண்டிலும் விரிவாக்கத்தினைப் பதிவுசெய்தது. மேலும், விற்பனை மற்றும் கேள்வியில் ஏற்பட்ட அதிகரிப்புடன் இசைந்து செல்லும் விதத்தில் இயலளவுப் பயன்பாடு மற்றும் முதலீடு மீதான அபிப்பிராயம் 2020இன் தொடர்பான காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் 2021இன் முதலாம் காலாண்டிலும் இரண்டாம்

> ***வியாபாரத் தோற்றப்பாட்டு அளவீட்டின்படி, முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் ஆண்டின் முதலரைப்பகுதியில் முக்கிய கேள்விப்பக்க குறிகாட்டிகள் மேம்பட்ட அதேவேளையில் மூன்றாம் காலாண்டிற்கான வாய்ப்புக்களும் உயர்வடைந்து காணப்படுகின்றன...***

**வரைபடம் 2.8**

**நடைமுறை சந்தை விலைகளில் மொ.உ.உற்பத்தியின் வளர்ச்சிக்கான செலவின வகைகளின் பங்களிப்பு (அ)**





(அ) தரவுகள் 2010 அடியாண்டிற்கான மொ.உ.உற்பத்தி மதிப்பீடுகளை அடிப்படையாகக் கொண்டது

*மூலங்கள்:* தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்
இலங்கை மத்திய வங்கி

**வரைபடம் 2.9**


**கேள்வி மற்றும் விற்பனைச் சுட்டெண்கள் (அ)**




(அ) இச் சுட்டெண்கள் வியாபார தோற்றப்பாடு அளவீட்டிலிருந்து பெறப்பட்டதோடு 0 - 200 வரையிலான பெறுமதியை கொண்டிருக்கும், இதில் நடுநிலையான 100இற்கு மேலான சுட்டெண் பெறுமதி வியாபார மானோபாவத்தில் முன்னேற்றத்தைக் குறிக்கும் அதேவேளையில் 100இற்கு குறைவான பெறுமதி சரிவைக் குறிக்கின்றது.

*மூலம்:* இலங்கை மத்திய வங்கி

**வரைபடம் 2.10**
**முதலீடு மற்றும் கொள்ளளவுப் பயன்பாட்டு சுட்டெண்கள் (அ)**




(அ) இச் சுட்டெண்கள் வியாபார தோற்றப்பாடு அளவீட்டிலிருந்து பெறப்பட்டதோடு 0 - 200 வரையிலான பெறுமதியை கொண்டிருக்கும், இதில் நடுநிலையான 100இற்கு மேலான சுட்டெண் பெறுமதி வியாபார மானோபாவத்தில் முன்னேற்றத்தைக் குறிக்கும் அதேவேளையில் 100இற்கு குறைவான பெறுமதி சரிவைக் குறிக்கின்றது.


*மூலம்*: இலங்கை மத்திய வங்கி

காலாண்டிலும் மேம்பாடடைந்தது. இதற்கமைய, ஆண்டின் முதலரைப் பகுதியில் அடையப்பெற்ற உயர் பொருளாதார வளர்ச்சியை பிரதிபலிக்கும் வகையில் கேள்வி, விற்பனைகள், முதலீடு மற்றும் இயலளவுப் பயன்பாடு மீதான அபிப்பிராயம் மேம்பாடடைந்தது. இம் மேம்பாடானது 2020 உடன் ஒப்பிடுகையில் 2021இன் முதலாம் காலாண்டுப்பகுதியில் நிலவிய வலுவான பருவகாலக் கேள்வியினால் நன்மையடைந்த காரணத்தினாலும் நாடளாவிய முடக்கம் காரணமாக கேள்விப்பக்க குறிகாட்டிகள் மோசமாகப் பாதிக்கப்பட்ட கடந்த ஆண்டின் இரண்டாம் காலாண்டுடன் ஒப்பிடுகையில் 2021இன் இரண்டாம் காலாண்டுப்பகுதியில் பொருளாதாரத்தில் ஏற்பட்ட சாதகமான அபிவிருத்திகளின் காரணமாகவும் ஏற்பட்டதாகும். மேலும், கேள்வி, விற்பனைகள், முதலீடுகள் மற்றும் இயலளவுப் பயன்பாடு என்பன முன்னைய ஆண்டின் தொடர்பான காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் மூன்றாம் காலாண்டுப் பகுதியில் அதிகரிக்குமென எதிர்பார்க்கப்படுகிறது.

## 2.3 தொழில்நிலை

ஆண்டின் இரண்டாம் காலாண்டுப்பகுதியில் நோய்த்தொற்றின் மூன்றாவது அலையின் மீண்டெழுகையின் மத்தியிலும் 2020இன் தொடர்பான காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் 2021இன் முதலரைப்பகுதியில் பெரும்பாலான தொழிற்சந்தைக் குறிகாட்டிகள் முன்னேற்றங்களைக் காட்டியிருந்தன. இதற்கிணங்க, பொருளாதார ரீதியாக செயற்படுகின்ற குடித்தொகையான தொழிற்படை, 2020இன் முதலரைப்பகுதியில் பதிவுசெய்யப்பட்ட 8.469 மில்லியனிலிருந்து 2021இன் முதலரைப்பகுதியில் 8.594 மில்லியனுக்கு 1.5 சதவீதத்தினால் அதிகரித்தது. இருப்பினும், இரண்டாம் காலாண்டுப்பகுதியில் உலகளாவிய நோய்த்தொற்றின் மூன்றாவது அலையின் பரவல் காரணமாக தீவிரமாகத் தொழிலைத் தேடுவது குறைவடைந்தமையின் காரணமாக பொருளாதார ரீதியாகச் செயற்படாத குடித்தொகையும் முன்னைய ஆண்டின் தொடர்பான காலப்பகுதியில் பதிவுசெய்யப்பட்ட 8.272 மில்லியனிலிருந்து 2021இன் முதலரைப்பகுதியில் 8.466 மில்லியனுக்கு அதிகரித்தது. இதற்கிணங்க, 2021இன் முதலரைப்பகுதியில் வீட்டுத்துறை குடித்தொகைக்கான தொழிற்படையின் விகிதமாக விளங்கும் தொழிற்படைப் பங்கேற்பு விகிதம் 2020இன் முதலரைப்பகுதியில் பதிவுசெய்யப்பட்ட 50.6 சதவீதத்திலிருந்து 50.4 சதவீதத்திற்கு சிறிதளவால் வீழ்ச்சியடைந்தது. இருப்பினும் கூட, 2021இன் முதலரைப்பகுதியில் தொழில்புரியும் குடித்தொகை 2020இன் தொடர்பான காலப்பகுதியில் பதிவுசெய்யப்பட்ட 7.999 மில்லியனிலிருந்து 1.7 சதவீதத்தினால் 8.131 மில்லியனுக்கு அதிகரித்து, இக்காலப்பகுதியில் புதிய தொழில் வாய்ப்புக்களின் உருவாக்கம் மேம்பட்டமையினைப் பிரதிபலித்த போதும் நோய்த்தொற்றிற்கு முன்னரான மட்டத்திற்குக் கீழாகவே தொடர்ந்தும் காணப்பட்டது. இதன்விளைவாக, கொவிட்-19 மீண்டெழுகை மற்றும் பயணத்தடைகள் என்பனவற்றின் காரணமாக தொழில்புரியும் வயதினைக் கொண்ட குடித்தொகை தொழிற்படையிலிருந்து வெளிச்சென்றமையால் ஆதரவளிக்கப்பட்டு 2021இன் முதலரைப்பகுதியில் தொழிலின்மை வீதம் 2020இன் முதலரைப்பகுதியில் பதிவுசெய்யப்பட்ட 5.6 சதவீதத்திலிருந்து 5.4 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது. இதற்கிணங்க, 2021இன் முதலரைப்பகுதியில் தொழிலற்றவர்களின் குடித்தொகை 2020இன் முதலரைப்பகுதியில் பதிவுசெய்யப்பட்ட 0.471 மில்லியனிலிருந்து 0.463 மில்லியனுக்கு வீழ்ச்சியடைந்தது. 2021இன் முதலரைப்பகுதியில் அவதானிக்கப்பட்ட போக்கினைத் தொடர்ந்து, பொருளாதாரத்தில் எதிர்பார்க்கப்படும் வளர்ச்சியின் காரணமாக 2021இல் தொழிலாளர் சந்தை மேலும் மீட்சியடையுமென எதிர்பார்க்கப்படுகிறது.

**வரைபடம் 2.11**
**தொழிலின்மை வீதம்**




*மூலம்*: தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்

*முன்னைய ஆண்டின் தொடர்பான காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் 2021இன் முதலரைப் பகுதியில் தொழிற்படையும் தொழில்புரியும் குடித்தொகையும் அதிகரித்த அதேவேளையில் தொழிலின்மை வீதம் வீழ்ச்சியடைந்தது...*

2020இன் முதற்காலண்டுப்பகுதியில் பெரும் எண்ணிக்கையானவர்கள் தொழில் வாய்ப்பிற்காகப் புறப்பட்டுச் சென்றமையின் காரணமாக 2021இன் முதலரைப்பகுதியில், வெளிநாட்டுத் தொழில் வாய்ப்பிற்காகப் புறப்பட்டவர்களின் எண்ணிக்கை முன்னைய ஆண்டின் தொடர்பான காலப்பகுதியின் 40,581 இலிருந்து 30,797 இற்கு 24.1 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது. 2021இன் முதலரைப்பகுதியில் வெளிநாட்டுத் தொழில் வாய்ப்பிற்காகச் சென்றவர்களின் மொத்தத் தொகையில், வெளிநாட்டுத் தொழில் வாய்ப்பிற்காகச் சென்ற ஆண்கள் மற்றும் பெண்களின் தொகை முறையே 63.8 சதவீதத்திற்கும் 36.2 சதவீதத்திற்கும் பங்களித்தன. அதேவேளை, வெளிநாட்டுத் தொழில் வாய்ப்பிற்காகச் சென்றவர்களின் எண்ணிக்கையில் ஏற்பட்ட வீழ்ச்சியுடன் இசைந்து செல்லும் விதத்தில் 2020இன் தொடர்பான காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் 2021இன் முதலரைப்பகுதியில் தொழில்சார் நிபுணர்கள் வகை நீங்கலாக, மிகத் தேர்ச்சிபெற்ற வகைகளின் கீழ் மத்திய தரம், எழுதுவினைஞர் மற்றும் அதனுடன் தொடர்பானவர்கள், தேர்ச்சிபெற்றவர்கள், ஓரளவு தேர்ச்சிபெற்றவர்கள், தேர்ச்சி பெறாதவர்கள் மற்றும் வீட்டுப்பணிப்பெண் வகைகளின் கீழ் வெளிநாட்டுத் தொழில் வாய்ப்பிற்காகச் சென்றவர்களின் எண்ணிக்கை வீழ்ச்சியடைந்தது.

*முன்னைய ஆண்டின் தொடர்பான காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் 2021இன் முதலரைப் பகுதியில் வெளிநாட்டுத் தொழில் வாய்ப்பிற்கான புறப்படுகைகளில் மேம்பாடொன்று அவதானிக்கப்பட்ட போதிலும் நோய்த்தொற்றிற்கு முன்னரான மட்டத்திற்கு கீழாகவே காணப்பட்டது...*

அட்டவணை 2.1

வேளாண்மை உற்பத்திச் சுட்டெண் (2007-2010=100) (அ)

| விடயம் | 2020 முதலரை (ஆ) | 2021 முதலரை (இ) | மாற்றம் % |
|---|---|---|---|
| **வேளாண்மை மற்றும் மீன்பிடி** | **120.7** | **122.1** | **1.2** |
| 1. வேளாண்மை | **120.3** | **121.1** | **0.7** |
| 1.1 வேளாண்மை பயிர்கள் | 113.9 | 112.0 | -1.7 |
| நெல் | 171.0 | 163.7 | -4.2 |
| தேயிலை | 83.7 | 103.7 | 23.9 |
| இறப்பர் | 56.0 | 64.9 | 15.8 |
| தெங்கு | 95.3 | 105.3 | 10.5 |
| ஏனைய பயிர்கள் | 110.7 | 89.1 | -19.6 |
| இதில் மரக்கறிகள் | 150.1 | 144.8 | -3.6 |
| ஏனைய களப்பயிர்கள் | 168.6 | 214.0 | 27.0 |
| 1.2 கால்நடை வளர்ப்பு | 170.5 | 193.2 | 13.3 |
| 2. மீன்வளம் | **122.7** | **127.0** | **3.5** |

(அ) பழவர்க்க உபபிரிவு நீங்கலாக
(ஆ) திருத்தப்பட்டது
(இ) தற்காலிகமானது

*மூலம்:* இலங்கை மத்திய வங்கி

அட்டவணை 2.2

நெல் மற்றும் அரிசி உற்பத்தியின் போக்கு

| வகை | அலகு | 2020 முதலரை (அ) | 2021 முதலரை (ஆ) | மாற்றம் % |
|---|---|---|---|---|
| 1. நெல் உற்பத்தி | மெ. தொன் '000 | 3,197 | 3,061 | -4.2 |
| 2. அறுவடை செய்யப்பட்ட தேறிய நிலப்பரப்பு | எக். '000 | 663 | 682 | 2.8 |
| 3. எக்டேயர் ஒன்றிற்கான விளைச்சல் (இ) | கி.கி/எக். | 4,821 | 4,492 | -6.8 |
| | | **2020** சன-ஓகத் (அ) | **2021** சன-ஓகத் (ஆ) | மாற்றம் % |
| 4. நெல் விலை | | | | |
| சம்பா | ரூ./கி.கி | 49.07 | 60.58 | 23.5 |
| நாடு | ரூ./கி.கி | 46.84 | 52.75 | 12.6 |
| 5. அரிசி - சில்லறை விலை | | | | |
| சம்பா | ரூ./கி.கி | 101.97 | 132.20 | 29.6 |
| நாடு | ரூ./கி.கி | 99.20 | 112.72 | 13.6 |
| 6. அரிசி இறக்குமதி | மெ. தொன் '000 | 11 | 10 | -11.4 |

(அ) திருத்தப்பட்டது
(ஆ) தற்காலிகமானது
(இ) எக்டேயர் ஒன்றுக்கான விளைச்சலானது உற்பத்தியை தேறிய நிலப்பரப்பால் பிரிப்பதன் மூலம் கணிப்பிடப்பட்டது.

*மூலங்கள்:* தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்
ஹெக்டர் கொப்பேகடுவ விவசாய ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிலையம்
இலங்கைச் சுங்கம்

அட்டவணை 2.3

## தேயிலை, இறப்பர் மற்றும் தெங்கு உற்பத்தியின் போக்கு

| வகை | அலகு | 2020 சன-ஓகத் (அ) | 2021 சன-ஓகத் (ஆ) | மாற்றம் % |
|---|---|---|---|---|
| 1. தேயிலை | | | | |
| 1.1 உற்பத்தி (இ) | மில். கி.கி | 179 | 211 | 17.9 |
| உயர் நிலம் | மில். கி.கி | 41 | 47 | 14.4 |
| மத்திய நிலம் | மில். கி.கி | 31 | 37 | 18.8 |
| தாழ் நிலம் | மில். கி.கி | 107 | 127 | 18.9 |
| 1.2 சராசரி விலை | | | | |
| கொழும்பு ஏலம் | ரூ./கி.கி | 630.80 | 620.20 | - 1.7 |
| ஏற்றுமதி (க.ஏ.க) | ரூ./கி.கி | 858.25 | 925.90 | 7.9 |
| 2. இறப்பர் | | | | |
| 2.1 உற்பத்தி | ரூ./கி.கி | 50 | 56 | 12.1 |
| தட்டை இறப்பர் | ரூ./கி.கி | 25 | 28 | 12.1 |
| கிறேப் இறப்பர் | ரூ./கி.கி | 9 | 10 | 11.7 |
| ஏனையவை | ரூ./கி.கி | 16 | 18 | 12.3 |
| 2.2 சராசரி விலை | | | | |
| கொழும்பு ஏலம் (RSS 1) | ரூ./கி.கி | 309.24 | 448.60 | 45.1 |
| ஏற்றுமதி (க.ஏ.க) | ரூ./கி.கி | 347.09 | 511.46 | 47.4 |
| 3. தெங்கு | | | | |
| 3.1 உற்பத்தி (ஈ) | மில். காய்கள் | 1,848 | 2,035 | 10.1 |
| உலர்ந்த தேங்காய் துருவல் (உ) | மில். காய்கள் | 157 | 182 | 15.8 |
| தேங்காய் எண்ணெய் (உ) | மில். காய்கள் | 37 | 148 | 298.3 |
| வேர்ஜின் தேங்காய் எண்ணெய் (உ) | மில். காய்கள் | 124 | 130 | 4.4 |
| உலர்த்திய தேங்காய் (உ) | மில். காய்கள் | 5 | 2 | -64.1 |
| உடன் தேங்காய் (உ) | மில். காய்கள் | 11 | 9 | -18.3 |
| தேங்காய் களிம்பு, பால்மா மற்றும் பால் (உ) | மில். காய்கள் | 295 | 341 | 15.3 |
| உள்நாட்டு தேங்காய் (ஊ) | மில். காய்கள் | 1,218 | 1,223 | 0.4 |
| 3.2 சராசரி விலை | | | | |
| கொழும்பு ஏலம் | ரூ./காய் | 48.18 | 57.26 | 18.8 |
| சில்லறை விலை | ரூ./காய் | 70.20 | 84.74 | 20.7 |
| ஏற்றுமதி (க.ஏ.க) (எ) | ரூ./காய் | 49.69 | 66.45 | 33.7 |

(அ) திருத்தப்பட்டது
(ஆ) தற்காலிகமானது
(இ) உயர வகைகள் - தாழ் நிலம் - 0 - 610 மீற்றர்கள் சராசரி கடல் மட்டத்திற்கு மேல்
மத்திய நிலம் - 610 - 1,220 மீற்றர்கள் சராசரி கடல் மட்டத்திற்கு மேல்
உயர் நிலம் - 1,220 மீற்றர்கள் சராசரி கடல் மட்டத்திற்கு மேல்
(ஈ) மதிப்பீடு (இருப்புக்களில் ஏற்பட்ட மாற்றங்களுக்கு ஏற்ப சீராக்கம் செய்யப்பட்டமையினால் பகுப்புக்கள் மொத்த உற்பத்தியுடன் சேர்க்கப்படவில்லை)
(உ) காய்களுக்குச் சமமானவை பின்வருமாறு மாற்றப்பட்டுள்ளது,

| | |
|---|---|
| 1 மெ.தொன் உலர்ந்த தேங்காய்த் துருவல் | 8,960 காய்கள் |
| 1 மெ.தொன் தேங்காய் எண்ணெய் | 9,250 காய்கள் |
| 1 மெ.தொன் வேர்ஜின் தேங்காய் எண்ணெய் | 13,700 காய்கள் |
| 1 மெ.தொன் உலர்த்திய தேங்காய் | 5,500 காய்கள் |
| 1 மெ.தொன் தேங்காய் பால்மா | 16,000 காய்கள் |
| 1 மெ.தொன் தேங்காய் களிம்பு | 8,960 காய்கள் |
| 1 மெ.தொன் தேங்காய்ப் பால் | 4,000 காய்கள் |

(ஊ) 2010-2011 வரையான தலைக்குரிய நுகர்வு ஆண்டுக்கு 95.52 காய்கள் என மதிப்பிடப்பட்ட அதேவேளையில் 2012 இலிருந்து ஆண்டுக்கு 87.20 காய்களுக்குத் திருத்தப்பட்டது. (கைத்தொழில் பயன்பாடு நீங்கலாக)
(எ) மூன்று முக்கிய தெங்கு உள்ளீட்டு உற்பத்திகள் மட்டும்

*மூலங்கள்:* இலங்கை தேயிலைச் சபை
இறப்பர் அபிவிருத்தித் திணைக்களம்
தெங்கு அபிவிருத்தி அதிகாரசபை
தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்
கொழும்பு தேயிலை தரகர்கள் சங்கம்
சிலோன் வர்த்தகச் சபை
இலங்கைச் சுங்கம்
இலங்கை மத்திய வங்கி

அட்டவணை 2.4

மீன் உற்பத்தியின் போக்கு

| வகை | அலகு | 2020 சன-ஓகத் (அ) | 2021 சன-ஓகத் (ஆ) | மாற்றம் % |
|---|---|---|---|---|
| **உற்பத்தி** | மில். கி.கி | **283** | **283** | **-0.2** |
| **கடல்** | மில். கி.கி | **222** | **217** | **-2.2** |
| கரையோரம் மற்றும் களப்பு | மில். கி.கி | 126 | 117 | -7.2 |
| கடற்கரையிலிருந்து தொலைவில் | மில். கி.கி | 96 | 100 | 4.5 |
| **நன்னீர் மீன்பிடி** | மில். கி.கி | **61** | **65** | **6.8** |
| பிடிப்பு | மில். கி.கி | 50 | 53 | 4.5 |
| பண்ணை மீன் வளர்ப்பு | மில். கி.கி | 6 | 3 | -49.4 |
| இறால் வளர்ப்பு | மில். கி.கி | 4 | 9 | 115.1 |

(அ) திருத்தப்பட்டது
(ஆ) தற்காலிகமானது

*மூலம்:* கடற்றொழில் அமைச்சு

அட்டவணை 2.5

மரக்கறிகள், ஏனைய களப்பயிர்கள் மற்றும் சீனி உற்பத்தியின் போக்கு

| வகை | அலகு | 2020 முதலரை (அ) | 2021 முதலரை (ஆ) | மாற்றம் % |
|---|---|---|---|---|
| **1. மரக்கறிகள்** | | | | |
| 1.1 உற்பத்தி | மெ. தொன் '000 | 894 | 884 | 884 |
| 1.2 பயிரிடப்பட்ட நிலப்பரப்பு | எக். '000 | 68 | 67 | 67 |
| **2. ஏனைய களப்பயிர்கள்** | | | | |
| 2.1 உற்பத்தி | மெ. தொன் '000 | 421 | 587 | 587 |
| 2.2 பயிரிடப்பட்ட நிலப்பரப்பு | எக். '000 | 110 | 149 | 149 |
| **3. சீனி** | | | | |
| 3.1 உற்பத்தி | மெ. தொன் '000 | 32 | 28 | 28 |
| 3.2 பயிரிடப்பட்ட நிலப்பரப்பு | எக். '000 | 13 | 14 | 14 |

(அ) திருத்தப்பட்டது
(ஆ) தற்காலிகமானது

*மூலங்கள்:* தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்
லங்கா சீனிக் கம்பனி (தனியார்) லிமிடெட் - பெல்வத்தை அலகு
லங்கா சீனிக் கம்பனி (தனியார்) லிமிடெட் - செவனகல அலகு
கல்லோயா (ஹிங்குறான) சீனிக் கைத்தொழில் லிமிடெட்

அட்டவணை 2.6

கால்நடைத் துறை புள்ளிவிபரங்கள்

| துணைத்துறை | அலகு | 2020 முதலரை (அ) | 2021 முதலரை (ஆ) | மாற்றம் % |
|---|---|---|---|---|
| 1. தேசிய பால் உற்பத்தி | மில். லீற்றர்கள் | 199 | 218 | 9.5 |
| பசும்பால் | மில். லீற்றர்கள் | 174 | 187 | 7.5 |
| எருமைப்பால் | மில். லீற்றர்கள் | 25 | 31 | 23.3 |
| 2. தேசிய முட்டை உற்பத்தி | மில். | 1,161 | 1,534 | 32.1 |
| 3. தேசிய கோழி இறைச்சி உற்பத்தி | மெ. தொன் '000 | 102 | 113 | 10.8 |

(அ) திருத்தப்பட்டது
(ஆ) தற்காலிகமானது

*மூலம்:* கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார திணைக்களம்

அட்டவணை 2.7

கைத்தொழில் உற்பத்திச் சுட்டெண் (2015=100)

| விடயம் (அ) | முதலரை (2020) (ஆ) | முதலரை (2021) (ஆ) | மாற்றம் % | |
|---|---|---|---|---|
| | | | முதலரை 2019/20 (ஆ) | முதலரை 2020/21 (ஆ) |
| 1. உணவு உற்பத்திகளின் தயாரிப்பு (35.2%) | 106.8 | 105.9 | 3.4 | -0.9 |
| 2. குடிபானங்களின் தயாரிப்பு (3.8%) | 80.9 | 105.8 | -23.9 | 30.8 |
| 3. புகையிலை உற்பத்திகளின் தயாரிப்பு (1.7%) | 64.2 | 70.3 | -21.2 | 9.5 |
| 4. புடவைகளின் தயாரிப்பு (3.3%) | 77.4 | 127.7 | -24.9 | 65.0 |
| 5. அணியும் ஆடைகளின் தயாரிப்பு (19.8%) | 67.8 | 93.3 | -42.2 | 37.7 |
| 6. தோல் மற்றும் தொடர்பான உற்பத்திகளின் தயாரிப்பு (0.3%) | 55.4 | 79.5 | -49.2 | 43.6 |
| 7. தளபாடம் தவிர்ந்த மரம் மற்றும் மரசார் உற்பத்திகள், அடைப்பான்களின் தயாரிப்பு, வைக்கோல் பொருட்கள் மற்றும் பின்னல் பொருட்கள் தயாரிப்பு (0.2%) | 68.1 | 88.2 | -28.2 | 29.5 |
| 8. தாள் மற்றும் தாள் உற்பத்திகளின் தயாரிப்பு (1.7%) | 66.2 | 91.1 | -29.2 | 37.5 |
| 9. அச்சுப் பதிப்பு மற்றும் பதிவுசெய்யப்பட்ட ஊடகத்தின் மீள் தயாரிப்பு (1.4%) | 86.0 | 122.9 | -14.8 | 43.0 |
| 10. சுத்திகரிக்கப்பட்ட பெற்றோலிய உற்பத்திகளின் தயாரிப்பு (7.4%) | 82.5 | 66.5 | -20.3 | -19.3 |
| 11. இரசாயனம் மற்றும் இரசாயன உற்பத்திகளின் தயாரிப்பு (4.1%) | 78.8 | 89.2 | -22.5 | 13.2 |
| 12. அடிப்படை மருந்தாக்கல் உற்பத்திகள் மற்றும் மருந்தாக்கல் உற்பத்திகளின் தயாரிப்பு (0.1%) | 96.8 | 116.1 | 5.0 | 19.9 |
| 13. இறப்பர் மற்றும் பிளாத்திக்குப் பொருட்களின் தயாரிப்பு (5.7%) | 60.0 | 102.0 | -46.0 | 69.9 |
| 14. ஏனைய உலோகமல்லாத கனிப்பொருள் உற்பத்திகளின் தயாரிப்பு (7.8%) | 92.6 | 131.2 | -18.2 | 41.7 |
| 15. அடிப்படை உலோகங்களின் தயாரிப்பு (2.4) | 94.3 | 134.0 | -21.6 | 42.0 |
| 16. பொறி மற்றும் இயந்திரம் தவிர்ந்த உருவமைக்கப்பட்ட உலோக உற்பத்திகளின் தயாரிப்பு (1.3%) | 91.1 | 132.3 | -15.9 | 45.2 |
| 17. இலத்திரனியல் சாதனங்களின் தயாரிப்பு (2.0%) | 60.5 | 84.4 | -31.0 | 39.5 |
| 18. பொறி மற்றும் இயந்திர உற்பத்திகளின் தயாரிப்பு (0.7%) | 87.4 | 120.7 | -8.4 | 38.1 |
| 19. தளபாட உற்பத்தி (0.8%) | 59.6 | 79.7 | -37.0 | 33.8 |
| 20. ஏனைய உற்பத்திகள் (0.3%) | 56.6 | 69.6 | -10.2 | 23.0 |
| **கைத்தொழில் உற்பத்திச் சுட்டெண்** | **86.4** | **101.9** | **-19.0** | **18.0** |

(அ) ஒவ்வொரு பிரிவுகளுக்கும் பொருந்தக்கூடிய நிறையிடல்கள் அடைப்புக்குறிக்குள் உள்ளன

(ஆ) தற்காலிகமானது

*மூலம்:* தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்

குறிப்பு: தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தினால் 2015ஆம் ஆண்டை அடிப்படையாகக் கொண்டு கைத்தொழில் உற்பத்திச் சுட்டெண் தொகுக்கப்படுவதுடன் பன்னாட்டு நியம கைத்தொழில் வகைப்படுத்தல் திருத்தம் 4இற்கு அமைவாக வகைப்படுத்தப்பட்டுள்ளது

அட்டவணை 2.8

நடைமுறைச் சந்தை விலைகளில் மொத்த உள்நாட்டு உற்பத்தி மீதான செலவு (அ) (ஆ)

ரூ. மில்லியன்

| விடயம் | 2019 (இ) | 2020 | | 2021 | மாற்றம் % | |
|---|---|---|---|---|---|---|
| | | முதலரை (இ) | ஆண்டு | முதலரை | முதலரை 2019/20 (இ) | முதலரை 2020/21 |
| 1. தனியார் நுகர்வுச் செலவு | 10,485,180 | 4,949,351 | 10,589,745 | 5,837,538 | -4.3 | 17.9 |
| 2. பொது அரச நுகர்வுச் செலவு | 1,416,989 | 737,789 | 1,556,489 | 787,317 | 6.9 | 6.7 |
| 3. மொத்த உள்நாட்டு மூலதனவாக்கம் | 4,030,195 | 1,638,583 | 3,778,482 | 1,911,599 | -11.4 | 16.7 |
| 4. பொருட்களினதும் பணிகளினதும் ஏற்றுமதிகள் | 3,472,337 | 1,188,516 | 2,483,056 | 1,415,818 | -32.7 | 19.1 |
| 5. கழிக்குக: பொருட்களினதும் பணிகளினதும் இறக்குமதிகள் | 4,391,746 | 1,662,814 | 3,434,777 | 2,152,012 | -21.9 | 29.4 |
| **மொத்த உள்நாட்டு உற்பத்தி** | **15,012,953** | **6,851,425** | **14,972,995** | **7,800,259** | **-6.8** | **13.8** |

(அ) தரவுகள் 2010 அடியாண்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் மதிப்பீடுகளை அடிப்படையாகக் கொண்டவை

(ஆ) தற்காலிகமானது

(இ) திருத்தப்பட்டது

*மூலங்கள்:* தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்
இலங்கை மத்திய வங்கி

அட்டவணை 2.9

## தொழிற்படை, தொழில்நிலை மற்றும் தொழிலின்மை

| விடயம் | 2019 | 2020 | | 2021 (அ) | |
|---|---|---|---|---|---|
| | | முதலரை | ஆண்டு | முதலரை | ஆண்டு (எறிவுகள்) |
| குடும்ப அலகுகளின் குடித்தொகை, '000 | 16,424 | 16,741 | 16,739 | 17,060 (ஆ) | 17,066 |
| (15 வயதும் அதற்கு மேற்பட்டோரும்) | | | | | |
| தொழிற்படை, '000 | 8,592 | 8,469 | 8,467 | 8,594 | 8,576 |
| தொழிலிலுள்ளோர், '000 | 8,181 | 7,999 | 7,999 | 8,131 (ஆ) | 8,117 |
| தொழிலற்றோர், '000 | 411 | 471 | 468 | 463 (ஆ) | 458 |
| தொழிற்படை பங்கேற்பு வீதம் | 52.3 | 50.6 | 50.6 | 50.4 | 50.3 |
| (குடும்ப அலகு குடித்தொகையின் சதவீதமாக) | | | | | |
| தொழிலின்மை வீதம் | 4.8 | 5.6 | 5.5 | 5.4 | 5.3 |
| (தொழிற்படையின் சதவீதமாக) | | | | | |

(அ) தற்காலிகமானது
(ஆ) விசேட தரவுப் பரப்பல் நியமத்தின் அடிப்படையில் மதிப்பிடப்பட்டது

*மூலங்கள்:* தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்
இலங்கை மத்திய வங்கி

# 3

# பொருளாதார மற்றும் சமூக உட்கட்டமைப்பு

*தற்போதுள்ள கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்றினால் ஏற்பட்ட பெருமளவான பல சவால்களுக்கு மத்தியில் அரசாங்கம் பொருளாதார மற்றும் சமூக உட்கட்டமைப்பினை தொடர்ச்சியாக வழங்குவதற்கான அதன் முயற்சிகளைத் தொடர்ந்தும் மேற்கொண்டது. நிரம்பல் அதிகரிப்புகளின் போதாமைக்கு மத்தியில் உலகக் கேள்வியின் படிப்படியான மீட்சியுடன் உலகளாவிய சந்தைகளில் வலு விலைகள் உயர்வடைந்து ஒன்றரை ஆண்டுகளிற்கு மேலான இடைவெளியின் பின்னர் முக்கிய பெற்றோலிய உற்பத்திகளின் உள்நாட்டு விலைகளின் திருத்தமொன்றினை தேவைப்படுத்தியது. உள்நாட்டுப் பொருளாதார நடவடிக்கைகளின் மீட்சி முன்னைய ஆண்டின் இதே காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் 2021இன் முதலாம் அரையாண்டில் மின்வலுவிற்கான கேள்வியில் அதிகரிப்பொன்றினை விளைவித்தது. விலைகள் மற்றும் தீர்வைகளுக்கு சந்தையைப் பிரதிபலிக்கும் வகையிலான காலந்தவறாத சீராக்கங்கள் இல்லாமையினால் என்பதனால் இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் மற்றும் இலங்கை மின்சார சபை தொடர்ந்தும் நிதியியல் நெருக்கடிகளுக்கு முகங்கொடுத்தன. கொவிட்-19 நோய்த்தொற்றுடன் தொடர்புடைய கட்டுப்பாடுகளினால் ஏற்பட்ட பின்னடைவுகளிற்கு மத்தியிலும், கிராமிய-நகர இணைப்புக்களினையும் மக்களினது வாழும் சூழலின் தரத்தினையும் மேம்படுத்தும் நோக்குடன் அரசாங்கம் அதன் உட்கட்டமைப்பு முன்னெடுப்புக்களினை தொடர்ந்தது. கொழும்பு துறைமுக நகர செயற்றிட்டம் மற்றும் பெற்றோலிய வளங்களைக் கண்டறிவதுடன் தொடர்புடைய அண்மைய சட்டவாக்கங்கள் இவ்வாறான துறைகளில் மேம்பட்ட வெளிநாட்டு முதலீடுகளிற்கு வழிவகுக்குமென எதிர்பார்க்கப்படுகின்றது. சமூக உட்கட்டமைப்பு தொடர்பில், சுகாதாரத் துறை உலகளாவிய நோய்த்தொற்றின் பன்முக அலைகளைக் கட்டுப்படுத்துவதில் குறிப்பிடத்தக்க சவால்களிற்கு முகங்கொடுத்த போதும், அரசாங்கத்தின் செயல்த்திறன்மிக்க கொவிட்-19 தடுப்பூசி வழங்கல் நிகழ்ச்சித்திட்ட முன்னெடுப்புடன் நகர்வு மீதான கட்டுப்பாடுகளின் விதிப்பானது செத்தெம்பரின் பின்னைய பகுதியினை நோக்கிய கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்றின் மூன்றாம் அலையினைத் தளர்த்துவதற்குத் துணைபுரிந்தது. உலகளாவிய நோய்த்தொற்றின் ஆரம்பம் தொடக்கம் கல்விசார் செயற்பாடுகள் இலத்திரனியல் தளங்களினூடாக நிலைமாற்றமடைந்த போதும், தொழிற் சங்க நடவடிக்கைகளினால் ஏற்படுத்தப்பட்ட இடையூறுகளுடன் இணைந்த இவ்வாறான இணையவழி கல்விசார் நடவடிக்கைகளின் ஐயத்திற்குரிய செயற்றிறன் கல்விசார் பெறுபேறுகளில் நீடித்த விளைவுகளை ஏற்படுத்தக்கூடும்.*

### 3.1 வலுத்துறையின் செயலாற்றம்


#### மசகெண்ணெய் மற்றும் பெற்றோலிய உற்பத்திகள்

பெற்றோலியம் ஏற்றுமதி செய்கின்ற நாடுகளின் அமைப்பு மற்றும் அதன் நட்பு நாடுகளினால் பேணப்பட்ட நிரம்பல் நிலைகளுடன் கூடிய உலகளாவிய பொருளாதாரத்திற்கான சாதகமான கேள்வித் தோற்றப்பாடு உலகளாவிய மசகெண்ணெய் விலைகள் 2018 ஒத்தோபரிற்கு பின்னர் உயர்ந்த மட்டங்களிற்கு அதிகரிப்பதனை விளைவித்தது. 2021 செத்தெம்பரில் நிறைவடையும் ஒன்பது மாத காலப்பகுதியில் பீப்பாய் ஒன்றிற்கான சராசரி பிரன்ட் விலை ஐ.அ.டொலர் 67.80 இற்கு அதிகரித்து 2020இன் தொடர்பான காலப்பகுதியிலும் பார்க்க 58.3 சதவீத அதிகரிப்பொன்றினைப் பிரதிபலித்தது. உலகளாவிய சந்தைகளின் போக்கினைத் தொடர்ந்து, இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தினால் இறக்குமதி செய்யப்பட்ட மசகெண்ணெய்யின் சராசரி விலை 2020இன் தொடர்பான காலப்பகுதியில் பதிவுசெய்யப்பட்ட பீப்பாய் ஒன்றிற்கான ஐ.அ.டொலர். 45.31 சராசரி இறக்குமதி விலையுடன் ஒப்பிடுகையில் 2021 சனவரி தொடக்கம் செத்தெம்பர் வரையான காலப்பகுதியில் பீப்பாய் ஒன்றிற்கான சராசரி இறக்குமதி விலை ஐ.அ.டொலர் 66.96 இற்கு 47.8 சதவீதத்தினால் அதிகரித்தது. அதேவேளை, உலகளாவிய மசகெண்ணெய் விலைகளின் அதிகரிப்பிற்குப் பதிலிறுத்தும் விதத்தில் முக்கிய பெற்றோலிய உற்பத்திகளதும் உள்நாட்டு விலைகள் 2021 யூன் 12 ஆம் திகதி தொடக்கம் நடைமுறைக்கு வரும் விதத்தில் மேல்நோக்கி சீராக்கம் செய்யப்பட்டிருந்தன. இருப்பினும், மசகெண்ணெய்யின் உலகளாவிய விலைகளின் அண்மைய அதிகரித்துச் செல்லும் போக்கும் ஆண்டின் எஞ்சியுள்ள காலப்பகுதியில் இப்போக்கு தொடரக்கூடும் என்ற எதிர்வுகூறல்களும் இத்திருத்தமானது எதிர்வரும் காலப்பகுதியில் போதியதாக அமையாதிருக்கக்கூடும் என எடுத்துக்காட்டுகின்றன. இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் நிதியியல் ஆற்றலிற்கும் இதனால் வங்கித்தொழில் துறையின் உறுதிப்பாட்டிற்கும் ஓர் செலவைப் பிரதிபலிக்கக்கூடிய பொருத்தமான விலையிடல் பொறிமுறையொன்று அத்தியாவசியமாகும். அத்தகைய பொறிமுறையொன்று வெளிப்படைத்தன்மையினை மேம்படுத்தவும் அதன்மூலம் இத்தகைய இறக்குமதி செய்யப்பட்ட உற்பத்திகள் தொடர்பில் மிகவும் அவசியமான கிரமமான விலைத் திருத்தங்கள் தொடர்பில் பொதுமக்களின் ஏற்புத்தன்மையையும் மேம்படுத்தும். அதே வேளையில், முன்கூட்டி நிர்ணயிக்கப்பட்டதொரு சூத்திரம் உலகளாவிய சந்தைகளில் எவ்வித விலை வீழ்ச்சிகளதும் நன்மைகளினை விரைவாகக் ஊடுகடத்துவதற்கும் வழிவகுக்கலாம்.

> ***"இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் நிதியியல் ஆற்றலினையும் இதனால் வங்கித்தொழில் துறையின் உறுதிப்பாட்டினையும் உறுதிப்படுத்துவதற்கு பெற்றோலிய உற்பத்திகளுக்கான செலவைப் பிரதிபலிக்கக்கூடிய விலையிடல் பொறிமுறைகள் அத்தியாவசியமாகின்ற வேளையில், இது மிகவும் அவசியமான கிரமமான விலைத் திருத்தங்களின் வெளிப்படைத்தன்மையினையும் பொதுமக்களின் ஏற்பினையும் மேம்படுத்தும்...***


பெற்றோலிய உற்பத்திகளின் ஒட்டுமொத்த உள்நாட்டு விற்பனைகளையும் கருத்திற்கொள்ளும் போது 2021 ஓகத்தில் நிறைவடையும் எட்டு மாத காலப்பகுதியில் சிறிதளவானதொரு வளர்ச்சி மாத்திரம் காணப்பட்டது. இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் துறைசார் விற்பனைத் தரவுகள் போக்குவரத்துத் துறையிலிருந்தான கேள்வியில் மேம்பாடொன்றினை எடுத்துக்காட்டுகின்றன. இருப்பினும், வான்வழிப் போக்குவரத்துத் துறைக்கான இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் பெற்றோலிய உற்பத்திகளின் விற்பனைகள் 22.2 சதவீத ஆண்டிற்கு ஆண்டு வீழ்ச்சியினைப் பதிவுசெய்து உலகளாவிய ரீதியில் பயண மற்றும் சுற்றுலாத்துறையின் மிதமான செயலாற்றத்தினைப் பிரதிபலித்தன. மேலும், ஆய்வுக்குரிய காலப்பகுதியில் அதிகரித்த நீர்மின்வழு உருவாக்கத்தினால் வலு உருவாக்கத் துறையிலிருந்தான கேள்வி சுருக்கமடைந்தது.

**வரைபடம் 3.1**
**உலகளாவிய மசகெண்ணெய் விலைகளின் போக்குகள்**




*மூலம்:* புளும்பேர்க்

**வரைபடம் 3.2**
**மின்வலு உருவாக்கத்தின் கலவை**




*மூலம்*: இலங்கை மின்சார சபை

பெற்றோலிய வளங்கள் அபிவிருத்திச் செயலகம் எண்ணெய் மற்றும் எரிவாயு ஆராய்ச்சி முயற்சிகளை நோக்கி முனைப்புடன் தொழிற்பட்டமையினால் கரைகடந்த ஐதரோ காபன் ஆராய்ச்சி, அபிவிருத்தி மற்றும் உற்பத்தி தொடர்பிலான பல்வேறு மைல்கற்கள் 2021இல் அடையப்பெற்றிருந்தன. 2021 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க பெற்றோலிய வளங்கள் சட்டத்தின் சட்டவாக்கம் முக்கியமானதொரு அடைவாகக் காணப்பட்டது. இச்சட்டம் இலங்கைப் பெற்றோலிய அபிவிருத்தி அதிகாரசபையினை நிறுவுவதற்கும் மேல்நிலைப் பெற்றோலிய கைத்தொழில் மீதான தேசிய கொள்கையொன்றின் உருவாக்கத்திற்கும் வழிவகுக்கின்றது. மேலும், இது இலங்கையின் பெற்றோலிய வளங்களைக் கண்டறிதல், அபிவிருத்தி, உற்பத்தி மற்றும் முகாமைத்துவத்துடன் தொடர்புடைய சகல செயன்முறைகளதும் ஒழுங்குமுறைகளுக்கான சட்டக் கட்டமைப்பாகவும் தொழிற்படும்.

### மின்வலு

2021 ஓகத்தில் நிறைவடையும் எட்டு மாத காலப்பகுதியில் மொத்த மின்வலு உருவாக்கம் 10,946 கிவாம ஆக 5.2 சதவீத ஆண்டிற்கு ஆண்டு வளர்ச்சியொன்றினைப் பதிவுசெய்தமைக்கு 2020இன் தொடர்பான காலப்பகுதியின் தளத்தாக்கம் காரணமாயமைந்தது. முக்கியமாக, மொத்த வலு உருவாக்கத்தில் நீர்மின்வலுவின் பங்கு 2021இன் முதலரையினல் இறுதியை நோக்கிய பகுதியில் அதிகரித்தமைக்கு 2021 மே - யூன் காலப்பகுதியில் நீரேந்து பிரதேசங்களில் கிடைக்கப்பெற்ற அதிகளவான மழைவீழ்ச்சி துணையளித்தது. இதற்கமைய, 2021 ஓகத்தில் நிறைவடையும் எட்டு மாத காலப்பகுதியில் நீர்மின், எரிபொருள் எண்ணெய், நிலக்கரி மற்றும் மரபுசாரா மீள்புதுப்பிக்கத்தக்க சக்தி மூலங்கள் முறையே மொத்த மின்வலு உருவாக்கத்தின் 29 சதவீதம், 19 சதவீதம், 37 சதவீதம், மற்றும் 15 சதவீதம் ஆக விளங்கின.

இவ்வகையில், குறிப்பாக வரட்சியான காலநிலை நிலவும் மாத காலப்பகுதிகளில் நிலக்கரி அடிப்படையிலமைந்த வலு உருவாக்கத்தின் மீதான இலங்கை மின்சார சபையின் தங்கியிருப்பானது தொடர்பில் உலகளாவிய சந்தைகளில் அதிகரித்துச் செல்லும் நிலக்கரி விலைகளினால் பாதிக்கப்படும் சாத்தியமுள்ளது. இது மரபுசாரா மீள்புதுப்பிக்கத்தக்க சக்தி மூலங்கள் உள்ளடங்கலாக செலவுகுறைந்த சக்தி மூலங்களின் உருவாக்க இயலளவினை அதிகரிப்பதற்கான முயற்சிகளை நடைமுறைப்படுத்துவதற்கான அவசர தேவையினை எடுத்துக்காட்டுகின்றது.

## 3.2 ஏனைய பொருளாதார உட்கட்டமைப்பின் செயலாற்றம்

### போக்குவரத்து

ஒட்டுமொத்த அடிப்படையில் போக்குவரத்துத் துறை நடவடிக்கைகள் 2021இன் முதலரைப் பகுதியில் மெதுவடைவொன்றினை எடுத்துக்காட்டின. பொருளாதார நடவடிக்கைகளில் படிப்படியான மீட்சியொன்றினைப் பிரதிபலித்து உள்நாட்டுப் பொதுமக்கள் பயணிப் போக்குவரத்துக் குறிகாட்டிகள் 2021இன் முதலாம் காலாண்டுப் பகுதியில் மீட்சியின் சில அறிகுறிகளைக் காண்பித்த போதும், 2021 ஏப்பிறலின் பின்னைய பகுதியில் உலகளாவிய நோய்த்தொற்றின் மூன்றாம் அலையின் தோற்றத்துடன் இந்த போக்கானது தொடர்ந்த காலாண்டில் நேர்மாற்றமடைந்தது. 2020 மாச்சு நடுப்பகுதியிலிருந்து ஏப்பிறல் 2020 வரை விதிக்கப்பட்டதனைப் போன்ற நாடளாவிய ரீதியான முடக்கங்களேதும் காணப்படாத போதும் 2021இன் இரண்டாம் காலாண்டுப் பகுதியில் காணப்பட்ட இயக்கக் கட்டுப்பாடுகள் உள்நாட்டு பொதுமக்கள் பயணிப் போக்குவரத்துப் பணிகளின் தாழ்ந்த வழங்கலினை ஏற்படுத்தின. இலங்கைப் போக்குவரத்துச் சபை அத்தியாவசிய பணியாளர்களின் போக்குவரத்துடன் தொடர்புடைய வரையறுக்கப்பட்ட தொழிற்பாடுகளைத் தொடர்ந்தும் மேற்கொண்டமையினால் இலங்கைப் போக்குவரத்துச் சபையின் தொழிற்படுத்தப்பட்ட கிலோமீற்றர்கள் 2021இன் முதலரைப் பகுதியில் 0.7 சதவீதத்தினால் சிறிதளவு வீழ்ச்சியடைந்தது. தனியார் பேருந்துத் தொழிற்பாட்டாளர்களினால் பதிவுசெய்யப்பட்ட மெதுவடைவானது மிகவும் கடுமையாக அமைந்திருந்தத. இது 2021இன் முதலரைப் பகுதியில் தனியார் பேருந்துத் தொழிற்பாட்டாளர்களின் தொழிற்படுத்தப்பட்ட கிலோ மீற்றர்கள் 32.7 சதவீத ஆண்டிற்கு ஆண்டு வீழ்ச்சியினைப் பதிவுசெய்தது. அதேவேளை, இலங்கை புகையிரத சேவையின் தொழிற்படுத்தப்பட்ட கிலோமீற்றர்கள் 35.0 சதவீத கடுமையான வீழ்ச்சியினைப் பதிவுசெய்தன. வான்வழித் துறை தொடர்பில் சிறிலங்கன் எயார்லைன்ஸின்

**அட்டவணை 3.1**

**போக்குவரத்துத் துறையின் செயலாற்றம்**

| விடயம் | 2020 சன-யூன் (அ) | 2021 சன-யூன் (ஆ) | மாற்றம் % |
|---|---|---|---|
| **சாலை பயணிகள்** | | | |
| **இலங்கை போக்குவரத்துச் சபை** | | | |
| தொழிற்பட்ட கிலோமீற்றர்கள் (மில்லியன் | 137 | 136 | -0.7 |
| பயணிகள் கிலோ மீற்றர்கள் (மில்லியன்) | 4,324 | 4,345 | 0.5 |
| சொந்தமான பேரூந்துகளின் எண்ணிக்கை | 7,273 | 6,983 | -4.0 |
| தொழிற்பட்ட பேரூந்துகளின் எண்ணிக்கையின் சராசரி | 3,618 | 3,591 | -0.7 |
| **தனியார் துறை** | | | |
| தொழிற்பட்ட கிலோமீற்றர்கள் (மில்லியன்) | 454 | 305 | -32.7 |
| பயணிகள் கிலோ மீற்றர்கள் (மில்லியன்) | 23,042 | 15,554 | -32.5 |
| சொந்தமான பேரூந்துகளின் எண்ணிக்கை | 21,049 | 19,977 | -5.1 |
| தொழிற்பட்ட பேரூந்துகளின் | 15,097 | 10,072 | -33.3 |
| வழங்கப்பட்ட மாகாணங்களுக்கிடையிலான அனுமதிப்பத்திரங்களின் எண்ணிக்கை | 3,034 | 3,132 | 3.2 |
| வழங்கப்பட்ட மாகாணங்களுக்குள்ளேயான அனுமதிப்பத்திரங்களின் எண்ணிக்கை | 18,035 | 16,922 | -6.2 |
| **இலங்கை புகையிரதச் சேவை** | | | |
| தொழிற்பட்ட கிலோமீற்றர்கள் (மில்லியன்) | 3.7 | 2.4 | -35.0 |
| பயணிகள் கிலோ மீற்றர்கள் (மில்லியன்) | 1,980 | 1,211 | -38.8 |
| சரக்குத் தொன் கிலோ மீற்றர்கள் (மில்லியன்) | 42 | 57 | 33.8 |

(அ) திருத்தப்பட்டது
(ஆ) தற்காலிகமானது

*மூலங்கள்:* இலங்கை போக்குவரத்துச் சபை
தேசிய போக்குவரத்து ஆணைக்குழு
இலங்கை புகையிரதச் சேவை

பயணிகள் கிலோமீற்றர் தூரம் 2021இன் முதலரைப் பகுதியில் 81.8 சதவீதத்தினால் ஆண்டிற்கு ஆண்டு வீழ்ச்சியடைந்தமைக்கு எல்லைகளுக்கு இடையிலான இயக்கக் கட்டுப்பாடுகளும் பயணத்திற்கான குறைவடைந்த விருப்பும் காரணமாயமைந்தன.

அராங்கம் கிராமிய-நகர இணைப்புக்களை மேம்படுத்தும் எண்ணத்துடன் வீதி உட்கட்டமைப்பினை மேம்படுத்துவதற்கான முயற்சிகளைத் தொடர்ந்தும் மேற்கொண்டது. மேற்கொள்ளப்பட்ட பல்வேறு செயற்றிட்டங்கள் தற்போதுள்ள வீதி வலையமைப்பினை மேம்படுத்துவதனையும் புனரமைப்பதனையும் மாத்திரமன்றி புதிய உட்கட்டமைப்பினை நிர்மாணிப்பதனையும் நோக்காகக் கொணடிருந்தன. வீதி அபிவிருத்தி அதிகாரசபையினால் முன்னெடுக்கப்படும் செயற்பாட்டிலுள்ள முக்கிய செயற்றிட்டங்கள் ஒருங்கிணைந்த வீதி முதலீட்டுச் செயற்றிட்டம், தெற்கு வீதி இணைப்புச் செயற்றிட்டம், துறைமுக அணுகல் உயர்த்தப்பட்ட நெடுஞ்சாலைச் செயற்றிட்டம் மற்றும் புதிய களனிப் பாலச் செயற்றிட்டம் என்பனவற்றை உள்ளடக்கியுள்ளன. இச்செயற்றிட்டங்களின் நிறைவானது நெரிசலினை ஒழித்தல் மற்றும் போக்குவரத்து செலவினங்களில் குறைப்பு என்பனவற்றிற்கு வழிவகுத்து இத்துடன் குறிப்பாக பொது போக்குவரத்து முறைமையில் அததேநேர மேம்பாடுகள் மேற்கொள்ளப்பட்டால் பொருளாதாரம் முழுவதிலும் உற்பத்தித்திறன் மேம்பாடுகளினை ஏற்படுத்தம்.

### துறைமுகங்கள்


துறைமுகத்துறை சரக்குக் கையாளலுடனும் கொள்கலன் கையாளலுடனும் 2021 செத்தெம்பரில் நிறைவடையும் முதல் ஒன்பது மாத காலப்பகுதியில் முறையே 7.3 சதவீத மற்றும் 3.5 சதவீத ஆண்டிற்கு ஆண்டு வளர்ச்சி வீதங்களைப் பதிவுசெய்து மீட்சியின் அறிகுறிகளைக் காண்பித்த வேளையில் கப்பல் வருகைகள் 5.3 சதவீத ஆண்டிற்கு ஆண்டு சுருக்கமொன்றினை பதிவுசெய்தன. உந்து ஊர்திகளின் இறக்குமதி மீதான கட்டுப்பாடுகள் காணப்பட்ட போதும், அம்பாந்தோட்டை துறைமுகத்தில் ஊர்தி மாற்றுக்கப்பலேற்றிகளின் கையாளல் 90.9 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்தமையானது இலங்கைத் துறைமுகங்களில் மொத்த ஊர்திக் கையாளல் நடவடிக்கைகளில் 77.3 சதவீத ஒட்டுமொத்த ஆண்டிற்கு ஆண்டு வளர்ச்சியொன்றிற்கு வழிவகுத்தது.

> ***ஐக்கிய நாடுகளின் வர்த்தக மற்றும் அபிவிருத்தி அமைப்பின் துறைமுக பெரும் கப்பலேற்றல் இணைப்புச் சுட்டெண்ணில் 18 ஆம் நிலையில் தரமிடப்பட்ட கொழும்புத் துறைமுகம் மாத்திரமே முதல்தர 25 இடங்களுள் அமைந்த தென்னாசிய துறைமுகமென்ற சிறப்பியல்புடன் விளங்கி, ஏற்பாட்டு வசதிபெறுவதற்கான மையமாக நாட்டின் தோற்றத்தினை முன்னெடுத்துச் செல்வதற்கு பெருமளவு சாத்தியம் கொண்டுள்ளதென்பதனை...***

முக்கியமாக, இலங்கைத் துறைமுக அதிகாரசபை கிழக்கு கொள்கலன் முனையத்தின் அபிவிருத்திச் செயன்முறையில் தொடர்ந்தும் ஈடுபட்டுவரும் வேளையில், மேற்குக் கொள்கலன் முனையத்தினை அபிவிருத்தி செய்வதற்காக வெளிநாட்டு முதலீட்டாளரொருவருடனும் உள்நாட்டு முதலீட்டாளரொருவருடனும் இலங்கைத் துறைமுக அதிகாரசபையுடனும் கட்டடவாக்கல்-தொழிற்படுத்தல்-பரிமாற்றல் (Build-Operate-Transfer) உடன்படிக்கையொன்றில் கையொப்பமிட்டிருந்தது. இதற்கமைய கிழக்குக் கொள்கலன் முனையமும் மேற்குக் கொள்கலன் முனையமும் முறையே 2025 மற்றும் 2026இல் நிறைவடையச்செய்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

கொழும்புத் துறைமுகமானது ஐக்கிய நாடுகளின் வர்த்தக மற்றும் அபிவிருத்தி அமைப்பினால் தொகுக்கப்பட்டவாறு துறைமுகப் பெரும் கப்பலேற்றல் இணைப்புச் சுட்டெண்ணில்

வரைபடம் 3.3
துறைமுக நடவடிக்கைகளின் செயலாற்றம்




*மூலம்*: இலங்கை துறைமுக அதிகாரசபை

18ஆம் நிலையில் தரமிடப்பட்டது. தெற்காசியாவில் முதலாவதும் ஒரே ஒரு ஆழ் கடல் முனையுடன் காணப்படும் கொழும்புத் துறைமுகமானது முதல்தர 25 நிலைகளுள் சிறப்பியல்பினைப்பெறும் ஒரே தென்னாசிய துறைமுகமாகக் காண்பட்டு இது துறைமுகங்கள் துறையினுள் இலங்கையின் பயன்படுத்தப்படாத உள்ளார்ந்த ஆற்றலை எடுத்துக்காட்டுகிறது. கிழக்குக் கொள்கலன் முனையம், மேற்குக் கொள்கலன் முனையம் மற்றும் கொழும்பு துறைமுக நகர செயற்றிட்டங்களின் காலந்தவறாத அபிவிருத்தியும் நிறைவும் பிராந்திய துறைமுகங்களிலிருந்தான அதிகரித்துவரும் போட்டித்தன்மைக்கு மத்தியில் இலங்கையின் தற்போதுள்ளதும் அமையவிருக்கும் துறைமுக உட்கட்டமைப்பிலிருந்துமான நன்மைகளைத் முழுமையாக பெறுவதற்கான இலங்கையின் இயலுமையை உறுதிப்படுத்தும்.

### நகர அபிவிருத்தி

> *நாட்டிற்குள் மிகவும் அவசியமான வெளிநாட்டு முதலீடுகளைக் கவர்வதிலுள்ள அத்தியாவசியத்தன்மையினைக் கருத்திற்கொண்டு 2021ஆம் ஆண்டின் 11ஆம் இலக்க கொழும்பு துறைமுக நகர பொருளாதார ஆணைக்குழுச் சட்டத்தின் சட்டவாக்கமும் வரவேற்கத்தக்கதொரு அபிவிருத்தியாகும்.*


கொவிட்-19 நோய்த்தொற்றினால் ஏற்பட்ட இடையூறுகளிற்கு மத்தியில் அரசாங்கம் ஏனைய உட்கட்டமைப்பு அபிவிருத்தி செயற்றிட்டங்களைத் தொடர்ந்தும் முன்னெடுப்பதற்கு திடசங்கற்பம் பூண்டுள்ளது. கொழும்பு துறைமுக நகர செயற்றிட்டத்தின் அபிவிருத்தி அண்மைக்காலத்தில் குறிப்பிடத்தக்க மைல்கற்கலில் ஒன்றாக அமைந்துள்ளது. உள்ளக உட்கட்டமைப்பின் பெரும் பகுதி நிறைவடையும் நிலையில், கட்டம் I என்பது 2022 நடுப்பகுதியில் நிறைவுடையுமென எதிர்பார்க்கப்படுகின்றது. உல்லாசப்படகுகளுக்கான துறைமுக பகுதி மற்றும் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட கடற்கரை 2021இன் இறுதிப் பகுதிக்கு முன்னராக திறக்கப்படுமென எதிர்பார்க்கப்படுகின்றது. நாட்டிற்குள் மிகவும் அவசியமான வெளிநாட்டு முதலீடுகளைக் கவர்வதிலுள்ள அத்தியாவசியத்தன்மையினைக் கருத்திற்கொண்டு 2021ஆம் ஆண்டின் 11ஆம் இலக்க கொழும்பு துறைமுக நகர பொருளாதார ஆணைக்குழுச் சட்டத்தின் சட்டவாக்கமும் வரவேற்கத்தக்கதொரு அபிவிருத்தியாகும்.

மக்களின் வாழும் சூழலின் தரத்தினை மேம்படுத்துவதை நோக்காகக்கொண்டு தொடர்ந்தும் முயற்சிகளை அரசாங்கம் மேற்கொண்டு வருகின்றது. இதற்கமைய கொழும்பு நகர அபிவிருத்திச் செயற்றிட்டம், நீடித்து நிலைத்திருக்கும் குடியிருப்பு அபிவிருத்திச் செயற்றிட்டம், கொழும்பு நகரை அழகுபடுத்தும் செயற்றிட்டம் மற்றும் கைத்தொழில் பெருந்தோட்ட அபிவிருத்திச் செயற்றிட்டம் போன்ற நகர அபிவிருத்தி அதிகாரசபையின் முக்கிய செயற்றிட்டங்களும் ஆய்வுக்குரிய காலப்பகுதியில் மேற்கொள்ளப்பட்டு வந்தன. அரசாங்கம் நகர அபிவிருத்தி அதிகாரசபையினால் முன்னெடுக்கப்படும் கட்டுப்படியான வீடமைப்புத் திட்டம், சீனாவின் கொடையிலான வீடமைப்புத் திட்டம் மற்றும் கொழும்பு நகர மீளுருவாக்கச் செயற்றிட்டம் என்பனவற்றினூடாக தாழ்வான மட்டங்களில் காணப்படும் சமூகங்களுக்காகப் பொருத்தமான வீடமைப்பு வசதிகளின் வழங்கலுடன் தொடர்புடைய முயற்சிகளில் தொடர்ந்தும் கவனம் செலுத்தி வந்தது. மேலும், நகர அபிவிருத்தி அதிகாரசபை தனியார் காணி கையகப்படுத்தல், அரச காணிகளை உரிமை அறுதியுறச் செய்தல் மற்றும் காணி மற்றும் தொடர்புடைய சொத்துக்களின் மீள்நகர்த்தல் மற்றும் அகற்றலைக் கண்காணிக்கவும் பின்தொடர்வதற்குமான கணனிமயப்படுத்தப்பட்டதொரு "காணி மற்றும் சொத்து தகவல் முறைமையினை" அறிமுகப்படுத்துவதற்கான படிமுறைகளை ஆரம்பித்தது.

### தொலைத்தொடர்பூட்டல் பணிகள்

குறிப்பாக கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்றிற்கு மத்தியில் மிக முக்கியமான துறைகளில் மற்றுமொன்றான தொலைத்தொடர்பூட்டல் துறையானது இயக்கக் கட்டுப்பாடுகளுக்கு மத்தியிலும் தொடர்ந்ததனால் இணையதளத் தொடர்புகளும் முன்னைய ஆண்டிலும் பார்க்க 2021 யூன் இறுதியிலுள்ளவாறு 55.2 சதவீத குறிப்பிடத்தக்க ஆண்டிற்கு ஆண்டு வளர்ச்சியொன்றினைப்


வரைபடம் 3.4
அகலப்பட்டை தரவுப் பயன்பாடு




குறிப்பு: 1 பெடாபைட் = 1 பில்லியன் கிகாபைட்

*மூலங்கள்:* டயலொக் எக்சியாட்டா பி.எல்.சி
இலங்கை டெலிகொம் பி.எல்.சி
மொபிடெல் (தனியார்) லிமிடெட்
பார்டி எயார்டெல் லங்கா (தனியார்) லிமிடெட்

வரைபடம் 3.5
நீர் வழங்கலின் நிலைமை




*மூலம்:* தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபை

பதிவுசெய்திருந்தன. நாளாந்த நடவடிக்கைகளுக்கு இணையதளத்தின் மீதான அதிகரித்த தங்கியிருப்பானது 2021இன் முதலரைப் பகுதியில் தரவுப் பயன்பாட்டில்

> ***கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்றிற்கு மத்தியில் தொலைத்தொடர்பூட்டல் துறையினால் காண்பிக்கப்பட்ட இயக்கவாற்றல் வாய்ந்த தன்மை குறிப்பிடத்தக்கதாக அமைவதுடன் நிலையான மீட்புச் செயன்முறைக்கு இன்றியமையாததாகவும் காணப்படுகின்றது...***

தொடர்ச்சியான வளர்ச்சியினையும் பிரதிபலித்தது. மொத்த நிலையான தொடர்பு இணைப்புக்களும் செல்லிடத் தொலைபேசி இணைப்புக்களும் ஆண்டின் முதலரைக் பகுதியில் தொடர்ந்தும் வளர்ச்சியடைந்தது. உலகளாவிய நோய்த்தொற்றின் தனித்தன்மைவாய்ந்த சூழ்நிலைகளைக் கவனத்திற்கொண்டு தொலைத்தொடர்பூட்டல் வழங்குநர்கள் பணி, கல்வி மற்றும் மக்களின் பொழுதுபோக்குத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்குப் பல்வேறு புத்துருவாக்க பணப்பெறுமதிமிக்க சேவைத் தொகுப்புக்களை அறிமுகப்படுத்தி இணையவழித் தளங்களிற்கான பொருளாதார நடவடிக்கையின் ஒப்பீட்டுரீதியில் சீரான நிலைமாற்றமொன்றிற்குப் பெருமளவு வசதிப்படுத்திய வேளையில் சகலருக்குமான கட்டுப்படித்தன்மையையும் நிச்சயப்படுத்தியது. இலங்கைத் தொலைத்தொடர்பூட்டல் ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவினால் ஆரம்பிக்கப்பட்ட *கமட சன்னிவேதனய* எனும் செயற்றிட்டத்தின் கீழ் சகலருக்கும் இணையதள இணைப்பினை நிச்சயப்படுத்துவதற்கு நாடளாவிய ரீதியில் காணப்படும் பல்வேறு "செயற்பரப்பிலில்லாத இருண்ட புள்ளிகளில்" இணையதள செயற்பரப்பினை மேம்படுத்துவதற்காக பல்வேறு தொலைத்தொடர்பூட்டல் வழங்குநர்கள் அவர்களது உட்கட்டமைப்பினை தரமுயர்த்துவதிலும் முனைப்புடன் ஈடுபட்டிருக்கின்றனர். இலக்கத்தினை மாற்றஞ்செய்யாமல் தொலைத்தொடர்பூட்டல் சேவை வழங்குநரினை மாற்றுவதற்கு அண்மையில் வழங்கப்பட்ட சட்ட அங்கீகாரமானது துறையினுள் தரத்தினால் தூண்டப்படும் போட்டித்தன்மையினை மேம்படுத்துவதனை நோக்கிய வரவேற்கத்தக்கதொரு நகர்வாகும். இதற்கமைய இவ்வசதி 2022இல் பயன்படுத்துநர்களுக்கும் கிடைப்பனவாகவிருக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

## நீர் வழங்கல்

மக்களின் வாழ்க்கைத் தரத்தினை மேம்படுத்தும் பாகமாக 2025இல் ஒட்டுமொத்த சனத்தொகைக்கும் தூய மற்றும் பாதுகாப்பான குடிநீர் வழங்கலினை நிச்சயப்படுத்தும் அரசாங்கத்தின் இலக்குடன் இசைந்து செல்லும் விதத்தில் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை குழாய் நீரின் உள்ளடக்கத்தினை தொடர்ந்தும் விரிவுபடுத்தியது. 2021இன் முதலரைப் பகுதி இறுதியில் மொத்த குழாய் நீரின் செயற்பரப்பு 55.0 சதவீதமாக விளங்கிய வேளையில், இலங்கையில் பாதுகாப்பான குடிநீருக்கான அணுகல் குடித்தொகையில் 95.1 சதவீதமாக விளங்கியது. மேலும் நாடளாவிய ரீதியில் வருமானம்

*2025இல் ஒட்டுமொத்த சனத்தொகைக்கும் தூய மற்றும் பாதுகாப்பான குடிநீர் வழங்கலினை நிச்சயப்படுத்தும் அரசின் இலக்கினை எய்துவதற்கு பல நீர் வழங்கல் செயற்றிட்டங்கள் தொடர்கின்றன..*

உழைக்காத நீர்ப்பயன்பாட்டின் சதவீதம் 2021 இறுதியில் 24.6 சதவீதத்திலிருந்து 2021இன் முதலரைப் பகுதியின் இறுதியிலுல் 24.9 சதவீதத்திற்கு சிறிதளவு அதிகரித்தது. அதேவேளை, 2021 யூன் இறுதியளவில் குழாய்க் கழிவுநீரின் செயற்பரப்பு 2.05 சதவீதமாக விளங்கியது. ஆண்டுக்காலப்பகுதியில், தூய மற்றும் பாதுக்கபான நீரின் வழங்கலினை மேம்படுத்தும் அதே வேளையில் குழாய் நீரின் செயற்பரப்பின் மேம்படுத்தலிற்காக பல நீர் வழங்கல் செயற்றிட்டங்கள் தொடர்ந்தன. இது தொடர்பில் குறிப்பிடத்தக்க அபிவிருத்திகளில் பரந்த யாழ்-கிளிநொச்சி நீர் வழங்கல் செயற்றிட்டத்திற்குக் கீழ் அண்மைக்காலத்தில் முன்னெடுக்கப்பட்ட தாழையடி கடல் நீர் சுத்திகரிப்பு இயந்திரநிலையம் மற்றும் யாழ் நகர் நீர் விநியோக வலையமைப்பு உள்ளடங்கும்.


### 3.3 சமூக உட்கட்டமைப்பின் செயலாற்றம்

#### நலன்

உலகளாவிய நோய்த்தொற்றின் மூன்றாம் அலையில் கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்றின் முன்னைய அலைகளில் கண்டிறாத மட்டங்களிற்கு நோயாளர்களது எண்ணிக்கையும் இறப்புக்களும் உயர்வடைந்து குறிப்பிடத்தக்க சுகாதார செலவினை ஏற்படுத்தியது. இதற்கமைய, இலங்கையில் ஒரு மில்லியன் சனத்தொகைக்கான நாளாந்த புதிய உறுதிப்படுத்தப்பட்ட கொவிட்-19 இணங்காணப்பட்ட நோயாளிகளின் எண்ணிக்கை (சீராக்கப்பட்ட) 2021 ஏப்பிறல் 20 வரை 42 இனை விஞ்சிக் காணப்படாதபோதும் மூன்றாம் அலையின் உச்சத்தில் 2021 ஓகத்து இறுதியளவில் 277 இற்கு அதிகரித்திருந்தது.

2020 மாச்சு மற்றும் ஏப்பிறலில் உலகளாவிய நோய்த்தொற்றின் முதலாம் அலையேற்பட்ட காலப்பகுதியில் நடைமுறைப்படுத்தப்பட்ட நாடளாவிய ரீதியிலான முடக்கத்திற்கு வேறுபட்டு, அரசாங்கம் பொருளாதார நடவடிக்கைகளதும் வாழ்வாதாரத்தினதும் மீதான உலகளாவிய நோய்த்தொற்றின் கட்டுப்படுத்தல்

**வரைபடம் 3.6**
**கொவிட் - 19 தடுப்பூசி வழங்கலின் நிலைமை (2021 ஒத்தோபர் 22 இல் உள்ளவாறு நாளாந்த எண்ணிக்கை)**




*மூலம்:* சுகாதார மேம்பாட்டுப் பணியகம்

வழிமுறைகளின் தாக்கம் தொடர்பில் அதிகரித்த கவனத்தினைக்கொண்டு அதனைத் தொடர்ந்துவந்த அலைகளில் இயக்கக் கட்டுப்பாடுகளையே விதித்தது. மூன்றாம் அலையின் ஆரம்ப கட்டங்களின் போது இணங்காணப்பட்ட சகல நோயாளர்களும் வைத்தியசாலைகளில் அல்லது குறித்துரைக்கப்பட்ட நிலையங்களில் அனுமதிக்கப்பட்ட வேளையில் தொற்றுக்குள்ளான நோயாளர்களுடன் நேரடியான தொடர்புகளைப் பேணியோர் தனிமைப்படுத்தல் மையங்களில் அல்லது அவர்களது வீடுகளிலேயே தனிமைப்படுத்தப்பட்டனர். இருப்பினும், டெல்டா திருபுருவின் அதிகளவு தொற்றக்கூடிய தன்மையானது தொற்றுநோயின் சடுதியான பரவலிற்குக் காரணமாக அமைந்ததனூடாக 2021 யூலையின் இறுதி வாரத்திலிருந்து நாளாந்தம் அறிக்கையிடப்பட்ட இணங்காணப்பட்ட நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரித்தது. இது வைத்தியசாலைகளிலும் குறித்துரைக்கபட்ட தனிமைப்படுத்தல் முகாம்களிலும் கிடைப்பனவாகவிருந்த வளங்களின் மீது கடும் சுமையினை ஏற்படுத்தியது. அரசாங்கம் வைத்தியசாலைகளில் சனநெரிசலைக் கட்டுப்படுத்துவதற்கு முன்னுரிமையினடிப்படையில் கொவிட்-19 நோயாளர்களை வைத்தியசாலையில் அனுமதிப்பதற்குத் தீர்மானித்தது. இந்த விரைவான பரவல் 2021 ஓகத்து காலப்பகுதியில் இறப்பு வீதத்தில் குறிப்பிடத்தக்க அதிகரிப்பிற்குக் காரணமாயமைந்து உலகளாவிய நோய்த்தொற்றின் முகாமைத்துவத்திற்கும் இயக்கக் கட்டுப்பாடுகளுக்கான தீர்க்கமான படிமுறைகளுக்கும் ஒதுக்கப்பட்ட வளங்களில் அதிகரிப்பொன்றினை தேவைபடுத்தியது. இதற்கமைய, இக்காலப்பகுதியில் அத்தியாவசிய பொருளாதார நடவடிக்கைகள் அனுமதிக்கப்பட்ட போதும் 2021 ஓகத்து 21 தொடக்கம் செத்தெம்பர் இறுதி வரையான

காலப்பகுதியில் நாடளாவிய ரீதியான ஊரடங்கு பிறப்பிக்கப்பட்டிருந்தது. இக்கட்டுப்பாடுகளுடன் கொவிட்-19 தடுப்பூசி முன்னெடுப்புடன் இணைந்து 2021 செத்தெம்பர் நடுப்பகுதியிலிருந்து நோயாளர்களின் எண்ணிக்கையின் தொடர்ச்சியான வீழ்ச்சிக்குப் பங்களித்தன. ஒரு மில்லியன் சனத்தொகைக்கான நாளாந்த புதிய உறுதிப்படுத்தப்பட்ட கொவிட்-19 இணங்காணப்பட்ட தொற்றாளர்களின் எண்ணிக்கை (சீராக்கப்பட்ட) 2021 செத்தெம்பர் இறுதியில் 48 இற்கு குறைவடைந்ததுடன் 2021 ஒத்தோபர் நடுப்பகுதியில் 36 இற்கு மேலும் குறைவடைந்திருந்தது.

கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்றினால் சுகாதாரத்துறையின் மீதான அழுத்தங்கள் காணப்பட்ட போதும் யாவருக்கும் இலவச சுகாதார சேவை வழங்கலில் பல தசாப்த காலமாக மேற்கொள்ளப்பட்ட முதலீடுகள் உலகளாவிய நோய்த்தொற்றின் எதிர்க்கணியத் தாக்கத்தினைக் குறைப்பதில் முக்கிய வகிபாகத்தினைக் கொண்டிருந்தது என்பதனை அங்கீகரிக்க வேண்டும். பரீட்சிப்பு, சிகிச்சை மற்றும் தனிமைப்படுத்தல் உள்ளடங்கலாக கொவிட்-19 நோய்த்தொற்றுடன் தொடர்புடைய இலவச கவனிப்பினை உள்ளடக்கும் இலவச சுகாதார சேவை வழங்கலின் விரிவாக்கமானது ஏனைய பல்வேறு ஒத்த நாடுகளுடன் ஒப்பிடுகையில் உலகளாவிய நோய்த்தொற்றிற்குள்ளாகும் மனித பாதகங்களை கட்டுப்படுத்துவதற்குக் காரணமாயமைந்தது. 2021 ஒத்தோபர் நடுப்பகுதியில் உள்ளவாறு, ஆண்டு காலப்பகுதியில் உலகளாவிய நோய்த்தொற்றுடன் தொடர்புடைய அரசாங்கத்தின் செலவினம் ரூ. 134.8 பில்லியனாக விளங்கியது. இதில் தடுப்பூசியேற்றல், தனிமைப்படுத்தல் வசதிகள், சுகாதாரத்துறை உட்கட்டமைப்பு மற்றும் மருத்துவ பொருட்கள் போன்ற சுகாதாரத் துறையுடன் தொடர்புடைய செலவினங்கள் ரூ. 86.8 பில்லியனாக விளங்கின.

கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்றைக் கட்டுப்படுத்துவதில் கவனம் செலுத்தப்பட்டபோதும் நீண்ட கால அடிப்படையில் வைத்தியசாலைகளிலிருந்து கண்காணிப்பினையும் கவனிப்பினையும் பெற்றுக்கொண்டிருந்த நோயாளர்களுக்கு, பொது வைத்தியசாலைகள் குறிப்பாக தொலைபேசிகளினூடாக வைத்திய ஆலோசனைகளை வழங்குவதன் மூலம் நலக்கவனிப்புப் பணிகளை வழங்குவதற்கு முயன்றன. கொவிட்-19 நோய்த்தொற்றுடன் தொடர்புடைய பரீட்சிப்புக்கும் சிகிச்சைக்கும் மேலதிகமாக இடைநிலைக் கவனிப்பு மையங்களின் காலந்தவறாத வழங்கலினூடாக கொவிட்-19 நோய்த்தொற்றிற்கு எதிராகப் போரிடுவதில் தனியார் துறை நலக்கவனிப்புப் பணிகளும் இன்றியமையாத வகிபாகத்தினைக் கொண்டிருந்தன.

> *இலங்கையின் கொவிட்-19 தடுப்பூசி முன்னெடுப்பானது ஏனைய பெரும்பாலான நாடுகளை விட முன்னணியில் இருப்பதுடன் பெருமளவான பாராட்டினைப் பெற்றுள்ளது...*

நாடளாவிய ரீதியான கொவிட்-19 தடுப்பூசியேற்றும் செயற்றிட்டத்தினை முன்னேடுத்துச் செல்வதற்கு அரசாங்கத்தின் திடசங்கற்பம் கொவிட்-19 நோய்த்தொற்றிற்கு எதிராகப் போரிடுவதில் முக்கிய மைல்கல்லொன்றாகக் காணப்படுகின்றது. 2021 சனவரியில் ஆரம்பிக்கப்பட்ட நிகழ்ச்சித்திட்டம் சுகாதார அதிகாரிகள், முப்படையினர் மற்றும் ஏனைய பிராந்திய அரசாங்க உத்தியோகத்தர்களின் ஒருங்கிணைந்த முயற்சிகளின் விளைவாக மேற்கொள்ளப்பட்ட பாராட்டத்தக்க முன்னேற்றமென்பது உலகளவில் பெருமளவான பாராட்டினைப் பெற்றுக்கொண்டது. 2021 ஒத்தோபர் 22 இற்குள் 20 வயதிற்கு மேற்பட்ட சனத்தொகையில் 88% சதவீதமானோர் முழுமையாகத் தடுப்பூசியேற்றிக்கொண்டுள்ளதுடன் இச்சனத்தொகைப் பிரிவினரில் 100 சதவீதமானோர் ஒரு தடுப்பூசியையேனும் பெற்றுக்கொண்டுள்ளனர். மேலும், மொத்த சனத்தொகையில் 59.5 சதவீதமானோர் முழுமையாக தடுப்பூசியேற்றிக்கொண்டுள்ளனர். 2021 ஒத்தோபர் 22 இலுள்ளவாறு இலங்கையில் 100 ஆட்களுக்கு 129 கொவிட்-19 தடுப்பூசி மருந்துகள் வழங்கப்பட்டுள்ளதுடன் உலக சராசரியான 100 ஆட்களுக்கு ஏற்றப்பட்ட 87 கொவிட்-19 தடுப்பூசிகளை விட குறிப்பிடத்தக்களவு உயர்வாகக் காணப்படுகின்றது. இலங்கையின் தடுப்பூசியேற்றும் நிலை தென்னாசிய பிராந்தியத்தில் உயர் மட்டத்தில் காணப்படுகின்றது. கொவிட்-19 தடுப்பூசியேற்றும் நிகழ்ச்சித்திட்டம் தற்போது பாடசாலை மாணவர்களுக்கும் படிப்படியாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

### கல்வி

கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்றினால் கடுமையாகப் பாதிக்கப்பட்ட சமூக உட்கட்டமைப்பில் இன்னுமொரு முக்கிய அம்சமாக கல்வித் துறை காணப்படுகிறது. பாடசாலைகள், பல்கலைக்கழகங்கள் மற்றும் ஏனைய மூன்றாம் நிலைக் கல்வி நிறுவனங்கள் மூடப்பட்டிருந்த போதும் இணையவழித் தளங்களினூடாக கல்விசார் நடவடிக்கைகள் தொடரப்பட்டன. பாடசாலைகளும் பல்கலைக்கழகங்களும் கொவிட்-19 நோய்த்தொற்றின் மூன்றாம் அலையின் தோற்றம் வரை 2021 மாச்சு மற்றும் ஏப்பிறல் காலப்பகுதியில் குறுகியளவானதொரு காலப்பகுதிக்குத் திறக்கப்பட்டிருந்தன. இணையவழிக் கல்வித் தளங்களதும் கல்விசார் நிகழ்ச்சித்

## கொவிட்-19 நோய்த்தொற்றினால் சுகாதார மற்றும் கல்விசார் பெறுபேறுகளின் மறைமுகமான நீடித்த பாதிப்புக்கள்

### சுகாதாரம்

இலங்கை இயக்கக் கட்டுப்பாடுகளின் துரித மற்றும் உடனடியான அமுலாக்கம் மற்றும் குறிப்பாக அதன் உறுதியான நாடளாவிய ரீதியான தடுப்பூசி முன்னெடுப்பினூடாக கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்றினைக் கட்டுப்படுத்துவதில் பாராட்டத்தக்க முன்னேற்றத்தினை மேற்கொண்டுள்ளது. இருப்பினும், இலங்கை நீண்டகாலமாக சனத்தொகையில் மரண மற்றும் நோயுறும் பிரச்சனைகளின் முன்னணிக் காரணிகளாகவிருக்கும் சிறுநீரக நோய், நாற்பட்ட சுவாச நோய்கள், புற்றுநோய்கள் மற்றும் இருதய நோய்கள் போன்ற தொற்றா நோய்களின் சுமையுடன் போராடி வருகின்றது. இலங்கையில் உலகளாவிய நோய்த்தொற்றிற்கு முன்னர் 2019இல் 82.5 சதவீத இறப்புக்கள் தொற்றா நோய்களினால் நிகழ்ந்திருந்தன. கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்றுடன் தொற்றா நோய்களினால் பாதிக்கப்பட்டவர்களின் பாதிக்கப்படக்கூடிய தன்மையானது கொவிட்-19 நோய்த்தொற்றிலிருந்தான சிக்கல் தன்மைகளை அதிகரிக்கும் சாத்தியத்தை கொண்டுள்ளது என்பது மட்டுமின்றி அவர்களது கிரமமான மருத்துவக் கவனிப்பு சீர்குலைந்துள்ளமையினால் இவர்களது ஏய்துநிலை அதிகரித்துள்ளது. இவ்வாறான கவனிப்பின் செயல்திறன்வாய்ந்த தன்மையானது கேள்விக்குரியதாயிருப்பினும் கொவிட்-19 நோய்த்தொற்றின் எழுச்சியில், தொலைபேசி மருத்துவத்தினூடாகவும் அஞ்சல் பணிகளினூடாக வீட்டிற்கு வழமையான மருந்துகளை வழங்குவதனூடாகவும் அவ்வாறான நோயாளர்களின் தொடர்ச்சியான கவனிப்பை உறுதிப்படுத்துவதற்கு சில வழிமுறைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. மேலும், கொவிட் தொற்றிற்குள்ளான நோயாளர்களின் எண்ணிக்கையின் அதிகரிப்புடன் வைத்தியசாலைகளில் சனநெரிசலின் காரணமாக குறிப்பாக பரந்தளவில் பெரும் கடினத்தன்மையற்ற நோய்களையுடைய நோயாளிகள் வைத்தியசாலைகளுக்கு வருகைதருவதனையும் விரும்பாததனால் அவசரமற்ற அறுவைச் சிகிச்சைகளுக்கும் ஏனைய சிகிச்சை மருத்துவ நடைமுறைகளுக்கும் குறைந்தளவான முன்னுரிமை அளிக்கப்பட்டுவருகிறது. ஆதலால் அதன் நேரடியான தாக்கம் தொடர்பில் மாத்திரமன்றி தொற்றா நோய்களினால் பாதிக்கப்பட்டுள்ளவர்களின் மீதான அதன் மறைமுகமான தாக்கம் காரணமாகவும் கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்றைக் கட்டுப்படுத்துவதற்கும் அதன் பின்னரான கண்காணிப்பிற்கும் தொடர்ச்சியான அர்ப்பணிப்பு அத்தியாவசியமாகின்றது. அதேவேளை, மன அழுத்தம் பொதுவானதொன்றாகக் காணப்பட்டாலும் அடிக்கடி புறக்கணிக்கப்படுவதனைப் போன்ற உளநல ஆரோக்கிய பிரச்சனைகளுடன் உலகளாவிய நோய்த்தொற்றிற்கு முன்னைய நிலையிலும் பார்க்க இலங்கையில் தற்கொலை வீதங்கள் அதிகரித்துக் காணப்பட்டன. இயக்கக் கட்டுப்பாடுகளதும் சமூக தனிமைப்படுத்தலதும், குடும்ப உறுப்பினர்களின் சடுதியான இழப்பு மற்றும் பொருளாதார சரிவின் காரணமாக வாழ்வாதாரத்தின் இழப்பு என்பனவற்றின் நீடித்த தாக்கம் உலகளாவிய நோய்த்தொற்றினால் பாதிக்கப்பட்டவர்களின் உளநல ஆரோக்கியத்தின் மீதான நீண்ட கால தாக்கமொன்றினை ஏற்படுத்தக்கூடும். இடர்பாடான பணி நிலைமைகளின் கீழ் நாளாந்தம் மன உளைச்சலினையும் எதிர்கொள்கின்றன அதே வேளையில் நீண்ட காலத்திற்குக் கடும் அழுத்தத்தின் கீழ் பணிபுரியும் முன்னணிப் பணியாளர்களுக்கு மத்தியிலும் உளநல ஆரோக்கியப் பிரச்சனைகளுக்கான சாத்தியமுள்ளது. ஆதலால் உலகளாவிய நோய்த்தொற்றுக் காலப்பகுதியிலும் அதேபோன்று உலகளாவிய நோய்த்தொற்றிற்குப் பின்னைய காலப்பகுதியிலும் உளரீதியான நலனையும் நிச்சயப்படுத்துவதற்கு உலகளாவிய நோய்த்தொற்றினால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கும் முன்னணிப் பணியாளர்களுக்கும் உளநல ஆரோக்கிய ஆதரவினை வழங்குவதற்கான வழிமுறைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

### கல்வி

நாட்டின் கல்வி முறைமையில் காணப்படும் பல போதாமைகளும் சமமின்மைகளையும் கொவிட்-19 நெருக்கடி வெளிப்படுத்தியுள்ளது. கல்வி நடவடிக்கைகளின் இணையவழித் தளங்களுக்கான சடுதியான மாற்றத்திற்கு மத்தியிலும் வாய்ப்புக்களுடனும் சமூக இயக்கத்துடனும் தொடர்புடைய சமத்துவமின்மைகளுக்கு இவை வழிவகுக்கலாமென்பதனால் இணையவழிக் கல்விசார் பெறுபேறுகளின் வினைத்திறன் மற்றும் சமத்துவம் தொடர்பில் அவதானம் அத்தியாவசியமாகின்றது. இப்பெறுபேறுகளின் விளைவுகள் நீண்ட காலத்தில் பொருளாதார வளர்ச்சியினையும் சமூக பொருளாதார நலனையும் எதிர்க்கணியமாகப் பாதித்து சுழற்சியான சமமின்மைக்கும் வழிவகுக்கும். 2020 மார்சில் கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்றின் தோற்றத்துடன் பாடசாலைகளினதும் ஏனைய கல்விசார் நிறுவனங்களினதும் கலந்த கற்றல் அணுகுமுறைகளின் துரிதமான பின்பற்றலானது குறிப்பிடத்தக்கதாக அமைவதுடன் கடந்த ஒன்றரை ஆண்டு காலப்பகுதிக்கும் மேலான கல்விசார் நடவடிக்கைகளின் தொடர்ச்சிக்கு இன்றியமையாததாகவும் அமைகின்றது. இருப்பினும், உலகளாவிய நோய்த்தொற்றிற்கு முன்னர்கூட கல்விசார் உட்கட்டமைப்பின் பெருமளவு நகர்ப்புறங்களில் செறிவாக குறிப்பிடத்தக்க ஏற்றத்தாழ்வுகள் காணப்பட்டதுடன் கிராமப்புறங்களில் ஏனைய தொழில்நுட்பவியல் உட்கட்டமைப்பு வசதிகள் ஒருபுறமிருக்க போதிய ஆசிரியர்கள் உள்ளடங்கலாக அடிப்படையான உட்கட்டமைப்பு வசதிகளிலும்கூட பின்தங்கிய நிலையில் காணப்பட்டன. போதிய கல்விசார் பெறுபேறுகளை அடைவதற்கு அவசியமான உட்கட்டமைப்பின் பற்றாக்குறை பாடசாலை மட்டத்தில் மாத்திரமன்றி குடியிருப்பாளர் மட்டத்திலும் காணப்படுகின்றது. இது 2020இல் வெறும் 32.3 சதவீத கணனி அறிவு வீதத்திலும் 2020இல் குடியிருப்பாளர்களில் வெறும் 22.2 சதவீதத்தினருக்கு கணனி உடைமை என்பது மட்டுப்படுத்தி காணப்பட்டதில் பிரதிபலிக்கப்படுகிறது. நகர்ப்புறத் துறையில் 37.1 சதவீதத்துடன் ஒப்பிருகையில் பெருந்தோட்டத்துறைக்குச் சொந்தமான மேசைக்கணனி அல்லது மடிக்கணனியொன்றைக் குடியிருப்பாளர்களில் 3.8 சதவீதமானோர் மாத்திரம் கொண்டுள்ளனர் என்பதும் கணனி அறிவும் இலத்திரனியல் அறிவும் நகர்புறத்துறையிலும் பார்க்க பெருந்தோட்டத்துறையில் ஏறத்தாழ மூன்றிலொரு பங்காக காணப்படுகிறது. பெருந்தோட்டத்துறையிலும் பார்க்க கிராமியத் துறை சிறந்த நிலையில் காணப்படுகின்ற போதும் அதன் நகர்ப்புறத் தரப்பினருடன் ஒப்பிடுகையில் பின்தங்கிய நிலையில் காணப்படுகின்றது. பிராந்தியங்களுக்கிடேயயும் குறிப்பிடத்தக்க சமமின்மைகள் அவதானிக்கப்படுகிறன. இதற்கமைய, குறிப்பாக கல்விசார் நோக்கங்களிற்காக தொழில்நுட்பத்தின் மீதான அதிகரித்த தங்கியிருத்தலுடன் இவ்விலத்திரனியல் பிளவின் காரணமாக எதிர்வரும் காலப்பகுதியில் கல்விசார் பெறுபேறுகளில் குறிப்பிடத்தக்க ஏற்றத்தாழ்வுகளை உயர்ந்தளவில் ஏற்படுத்தக்கூடும் என்பதனூடாக பாதிக்கப்பட்டவர்களின் நீண்ட கால வருவாயீட்டும் உள்ளார்ந்த ஆற்றலிலும் வாழ்வாதார நியமங்களிலும் பாதகமான தாக்கங்களைக் கொண்டிருக்கும் என்பதனை இப்புள்ளிவிபரங்கள் எடுத்துக்காட்டுகின்றன. மேலும், மூன்று மாத காலங்களுக்கு மேலாக முன்னெடுக்கப்படும் ஆசிரியர்களின் ஆர்ப்பாட்டத்திற்கு மத்தியில், இணையவழி பிரத்தியேக வகுப்புக்களும் கட்டணம் அறவிடும் தனியார் பாடசாலைகளும் அவர்களது கல்விசார் நடவடிக்கைகளைத் தொடர்ந்தனர். தனியார் துறையினால் கல்விசார் பணிகளின் இத்தொடர்ச்சியான வழங்கலிற்கு மத்தியில் கல்விசார் பணிகளின் பொது வழங்கலில் அவதானிக்கப்பட்ட இடையூறுகள் இவ்விரண்டு மாணவக் குழுக்களின் கல்விசார் பெறுபேறுகளில் ஏற்றத்தாழ்வுகளிற்கு வழிவகுக்கும். இருப்பினும், தொலைக்காட்சி அலைவரிசைகளில் கல்விசார் நிகழ்ச்சித்திட்டங்களை ஒளிபரப்புவதற்கான கல்வி அமைச்சின் முயற்சிகளும் இணையதள செயற்பரப்பு மற்றும் "செயற்பரப்பில்லாத இருண்ட புள்ளிகள்" தொடர்பிலான பிரச்சனைகளைத் தீர்ப்பதற்கு இலங்கைத் தொலைத்தொடர்பூட்டல் ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவினாலும் டெலிகொம் சேவை வழங்குநர்களாலும் ஆரம்பித்துவைக்கப்பட்ட "கமட சன்னிவேதனய" நிகழ்சித்திட்டமும் அண்மைய மாத காலப்பகுதிகளில் கல்வித் துறையில் மேற்கொள்ளப்பட்ட சில குறிப்பிடதத்கக முயற்சிகளாகக் காணப்படுகின்றன. இச்செயற்றிட்டங்கள் கல்விசார் பெறுறேுகளில் சில பண்புசார் மேம்பாடுகளைத் தோற்றுவிக்குமென எதிர்பார்க்கப்படுகின்றன. இருப்பினும், துறையில் இவ்வாறான வேறுபட்ட சூழ்நிலைகளுக்கு மத்தியில் கல்விசார் பணிகளின் அனைத்தையுமுள்ளடக்கிய வழங்கலிற்கான முழுமையானதும் பன்முக அணுகுமுறையொன்றிற்குமான கடும் தேவை இன்னும் காணப்படுகின்றது. வெறுமனே விடயங்களை வழங்குவதைவிட மாணவர்களின் கற்றல் செயன்முறையை எவ்வாறு வசதியளிப்பது என்பதும் ஆதரளவளிப்தென்பதும் தொடர்பிலான ஆசிரியர்களுக்கான அதிகரித்த விழிப்புணர்வு மற்றும் பயற்சி என்பது அவசியமான கொள்ளைகளுக்குள் உள்ளடங்கும். இது கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்றிற்கு முன்னரும் அவசியப்பட்ட மேம்பாடுகளான பாடத்திட்ட மற்றும் போதனை முறை ஆகிய இரண்டிற்குமான மேம்பாடுகளைத் தேவைப்படுத்துகின்றது. இந்நிலையில் புதிய உள்ளடக்கத்தினை அபிவிருத்தி செய்வதற்கு முயற்சிப்பதினைவிட தற்போதுள்ள "திறந்த" உள்ளடக்கமானது தேசிய பாடத்திட்டத்திற்குத் துறைசார் நிபுணத்துவம் வாய்ந்தவர்களின் ஆலோசனையுடன் ஒழுங்குமுறைபடுத்தப்பட்டு சீரமைக்கப்படலாம். கல்விசார் கொள்கை வகுப்பாளர்களதும் கற்பிக்கும் ஆசிரியர்களதும் சிறிதளவாயிருப்பினும் காலந்தவறாத முயற்சிகள் நேருக்கு நேரான போதனை முறையிலிருந்து உயர்ந்தளவான நன்மைகளையீட்ட முனையும் குறிப்பாக விசேட தேவையுடைய இளவயதுப் பிள்ளைகள் மற்றும் மாணவர்கள் ஆகிய இரு சாராருக்கும் உலகளாவிய நோய்த்தொற்றிலிருந்து தோற்றம்பெறும் ஏதேனும் "கற்றல்சார் வறுமையினைக்" குறைப்பதற்கு மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தனவாகக் காணப்படுகின்றன.

திட்டங்களதும் அறிமுகத்திற்கு மத்தியிலும் குறைந்த வருமானமீட்டும் மாணவர்களின் கல்விசார் செயற்பாடுகள், குறைவான தொலைத்தொடர்பூட்டல் பணிகளைக் கொண்டுள்ள பிரதேசங்களிலுள்ள மாணவர்கள், விசேட தேவையினையுடைய பிள்ளைகள் மற்றும் பொதுவாக விசேட ஆசிரிய கவனம் தேவைப்படும் முன்பள்ளி மற்றும் ஆரம்பப் பள்ளி மாணவர்கள் குறிப்பிடத்தக்க இடையூறுகளை அனுபவித்திருக்கக்கூடும். இது அவர்களது கல்வித் தேர்ச்சியிலும் எதிர்கால பொருளாதார வாய்ப்புக்களிலும் நீடித்த தாக்கத்தினைக் கொண்டிருக்கும். 2020 திசெம்பரிலிருந்து பிற்போடப்பட்ட சாதாரண தரப் பரீட்சை 2021 சனவரியில் வெற்றிகரமாக நடைபெற்ற போதும் பொதுவாக ஓகத்தில் நடைபெறும் உயர்தரப் பரீட்சையும் புலமைப்பரிசில் பரீட்சையும் கொவிட்-19 நோய்த்தொற்றின் அண்மைய அலையின் காரணமாக இரண்டாவது தடவையாகவும் பிற்போடப்பட்டுள்ளன. இணையவழிப் பிரத்தியேக வகுப்புக்களதும் தனியார் பாடசாலைகளின் கட்டணம் அறவிடும் கல்விசார் நடவடிக்கைகள் தொடர்ந்த அதே வேளையில் சம்பள முரண்பாடுகளைத் தீர்க்கக் கோரும் பாடசாலை ஆசிரியர்களின் ஆர்ப்பாட்டத்தினால் அரசாங்கப் பாடசாலைகளின் கல்வி நடவடிக்கைகள் தொடர்ந்தும் பாதிக்கப்பட்டது. 2021 ஒத்தோபர் 21 முதல் அரசு பாடசாலைகளை படிப்படியாக திறக்க ஆரம்பித்துள்ளது.

2021இன் முதலரைப் பகுதியில் வவுனியாவிலும் கம்பஹாவிலும் தாபிக்கப்பட்டுள்ள வளாகங்களை பல்கலைக்கழக அந்தஸ்திற்குத் தரமுயர்த்துவதற்கான அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியது. இதற்கமைய, வவுனியா பல்கலைக்கழகத்தினதும் சுதேச மருத்துவத்தின் கம்பஹா விக்ரமாராச்சி பல்கலைக்கழகத்தினதும் இணைப்புடன் பொது உயர் கல்வி முறைமை விரிவடைந்தது.

கொவிட்-19 நோய்த்தொற்றிலிருந்தான பல்வேறு பின்னடைவுகளுக்கு மத்தியிலும் தொழில்நுட்ப மற்றும் தொழில்சார் கல்விப் பயிற்சித் துறை அதன் நடவடிக்கைகளைத் தொடர்ந்தும் முன்னெடுத்தது. 2021 யூன் இறுதியிலுள்ளவாறு 1,100 பயிற்சி நிறுவனங்கள் தொழிற்பட்டு வந்ததுடன் அவற்றில் 494 அரசாங்கத்தினால் தொழிற்படுத்தப்பட்டனவாகும். குறிப்பாக, இக்காலப்பகுதியில் ஏறத்தாழ 56,561 புதிய உள்ளெடுப்புக்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. 2021இன் முதலரைப் பகுதியில் மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழு மாணவர்களின் பயிற்சிச் செயலாற்றம் தொடர்பிலான தரவுகளைத் திரட்டுவதற்கான இணையவழி முறைமையொன்றினை அபிவிருத்தி செய்வதில் ஈடுபட்டிருந்தது. மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழு முன்னைய கற்றல் பிரயோகங்களின் அங்கீகாரச் செயன்முறையினை இலத்திரனிய மயப்படுத்துவதற்காக இலத்திரனியல் முன்னைய கற்றல் அங்கீகார முறைமையினையும் அங்குரார்ப்பணம் செய்துவைத்தது.

### வறுமை மற்றும் பாதுகாப்பு வலையமைப்புகள்

சமூகத்தின் தேவைகளுள்ள பிரிவினரின் மீதான கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்றின் விகிதாசாரமற்ற தாக்கத்தினைக் கருத்திற்கொண்டு அரசாங்கம் அதன் தற்போதுள்ள சமூக உதவி செயற்றிட்டங்களைத் தொடர்ந்தும் விரிவுபடுத்தியது. சமுர்த்தி உதவித்தொகைச் செயற்றிட்டத்தின் கீழ் 2021இன் முதலரைப் பகுதியில் 1.8 மில்லியன் பயன்பெறும் குடியிருப்பாளர்களுக்கு மத்தியில் சமுர்த்தி அபிவிருத்தித் திணைக்களத்தினால் ஏறத்தாழ ரூ. 25.9 பில்லியன் பகிர்ந்தளிக்கப்பட்டிருந்தது. மேலும், வாழ்வாதார அபிவிருத்தி, சந்தைப்படுத்தல் அபிவிருத்தி, சமூக அபிவிருத்தி அதேபோன்று நன்மைபெறும் குடும்பங்களின் வாழ்க்கை நிலைமைகளையும் வாழ்வாதாரத்தினையும் மேம்படுத்துவதற்கான சமூக அபிவிருத்திச் செயற்றிட்டங்கள் உள்ளடங்கலாக ஏனைய சமூகப் பொருளாதார அபிவிருத்திச் செயற்றிட்டங்களைச் சமுர்த்தி அபிவிருத்தித் திணைக்களம் தொடர்ந்தும் மேற்கொண்டது. சமுர்த்தி பாதுகாப்பு வலையமைப்பிற்கு மேலதிகமாக புதுவருட காலப்பகுதியில் சகல குறைந்த வருமானமீட்டும் மற்றும் பாதிப்படையக்கூடிய குடும்பங்களுக்கும் ரூ. 5,000 பெறுமதியான கொடுப்பனவொன்று வழங்கப்பட்டதுடன் அரசாங்கத்தின் ஏனைய உதவிகளெதுவும் கிடைக்கப்பெறாத ஏய்த்தநிலையுடைய குடும்பங்களுக்கு 2021 ஓகத்தில் விதிக்கப்பட்ட இயக்கக் கட்டுப்பாடுகளின் காரணமாக வாழ்வாதாரத்தினை இழந்த குடும்பங்களுக்கு ரூ. 2,000 பெறுதியான இன்னுமொரு கொடுப்பனவும் வழங்கப்பட்டது. உலகளாவிய ரீதியில் அவதானிக்கப்பட்டவாறு, கொவிட்-19 நோய்த்தொற்றின் பரவல் அதேபோன்று கட்டுப்படுத்தல் வழிமுறைகள் காரணமாக மெதுவடைந்த பொருளாதார நடவடிக்கைகள் நாட்டின் வறுமை மட்டங்களை அதகரிக்கச்செய்யும் தன்மைகொண்டுள்ளபோதிலும் தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்திலிருந்தான வறுமை அல்லது குடியிருப்புக்களின் வருமானங்கள் தொடர்பிலான இற்றைப்படுத்தப்பட்ட தரவுகள் கிடைக்கப்பெறவில்லை.

அட்டவணை 3.2

## வலு உருவாக்கத் துறையின் செயலாற்றம்

| மின் உருவாக்கம் மற்றும் நிறுவப்பட்ட இயலளவு | | | |
|---|---|---|---|
| விடயம் | 2020 சன-ஓகத் | 2021 சன-ஓகத் (அ) | மாற்றம் % |
| **நிறுவப்பட்ட இயலளவு (மெவா-கால இறுதியில்)** | **4,275** | **4,124** | **-3.5** |
| இலங்கை மின்சார சபை | 2,953 | 2,968 | 0.5 |
| தனியார் | 1,322 | 1,156 | -12.6 |
| **மொத்த வலு உருவாக்கம் (கிவாம)** | **10,406** | **10,946** | **5.2** |
| நீர்மின் (ஆ) | 2,322 | 3,215 | 38.5 |
| எரிபொருள் எண்ணெய் | 2,999 | 2,063 | -31.2 |
| நிலக்கரி | 3,960 | 4,020 | 1.5 |
| பாரம்பரியமற்ற புதுப்பிக்கத்தக்க வலு (இ) | 1,125 | 1,648 | 46.5 |
| **மொத்த வலு உருவாக்கத்தில் நீர்மின் வலுவின் பங்கு (%)** | 22 | 29 | 31.7 |
| மின்சார விற்பனை (கிவாம) | | | |
| விடயம் | 2020 சன-யூலை | 2021 சன-யூலை (அ) | மாற்றம் % |
| **இலங்கை மின்சார சபையின் மொத்த விற்பனைகள் (கிவாம)** | **8,218** | **8,753** | **6.5** |
| வீடு | 3,018 | 2,990 | -0.9 |
| வணக்கத்தலம் | 48 | 47 | -1.4 |
| கைத்தொழில் | 2,273 | 2,774 | 22.0 |
| பொதுப்பயன் | 1,643 | 1,688 | 2.7 |
| அரசு | 120 | 125 | 3.5 |
| விடுதி | 116 | 120 | 3.7 |
| இலங்கை மின்சார கம்பனிக்கு மொத்த விற்பனை | 936 | 950 | 1.6 |
| தெரு விளக்குகள் | 63 | 59 | -7.0 |
| சராசரி செலவு மற்றும் மின்சாரத்தின் சராசரித் தீர்வை (ரூ/கிவாம) | | | |
| **திரண்ட சராசரிச் செலவு (உருவாக்க மூலத்தில்)** | **14.01** | **11.56** | **-17.5** |
| இலங்கை மின்சார சபை - நீர்மின் | 2.73 | 1.86 | -31.9 |
| இலங்கை மின்சார சபை - நிலக்கரி | 8.53 | 8.51 | -0.2 |
| இலங்கை மின்சார சபை - எரிபொருள் எண்ணெய் | 29.73 | 28.05 | -5.7 |
| தனியார் | 24.65 | 21.18 | -14.1 |
| **திரண்ட சராசரிச் செலவு (விற்பனையில்)** | **20.08** | **17.29** | **-13.9** |
| **திரண்ட சராசரித் தீர்வை** | **16.79** | **16.26** | **-3.2** |

(அ) தற்காலிகமானது
(ஆ) சிறிய நீர் மின்வலு நிலையங்கள் நீங்கலாக
(இ) சிறிய நீர் மின்வலு நிலையங்கள் மற்றும் கூரையில் பொருத்தப்பட்ட சூரிய வலு உருவாக்கம் உள்ளடங்கலாக பாரம்பரியமற்ற புதுப்பிக்கத்தக்க வலுவைக் குறிக்கிறது.

*மூலம்:* இலங்கை மின்சார சபை

அட்டவணை 3.3

## இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் துறைவாரியான பெற்றோலிய உற்பத்திகளின் விற்பனை

| துறைகள் | 2020 சன-ஓகத் | | | 2021 சன-ஓகத் (அ) | | |
|---|---|---|---|---|---|---|
| | தொகை (மில் லீட்டர்கள்) | பங்கு (%) | ஆண்டுக்காண்டு வளர்ச்சி (%) | தொகை (மில் லீட்டர்கள்) | பங்கு (%) | ஆண்டுக்காண்டு வளர்ச்சி (%) |
| வலு உருவாக்கம் | 698 | 20.7 | -32.7 | 491 | 14.9 | -29.6 |
| போக்குவரத்து | 2,106 | 62.5 | -15.6 | 2,287 | 69.2 | 8.6 |
| வான்வழிப் போக்குவரத்து | 191 | 5.7 | -51.4 | 149 | 4.5 | -22.2 |
| கைத்தொழில்கள் | 61 | 1.8 | -33.1 | 100 | 3.0 | 63.9 |
| ஏனையவை | 311 | 9.2 | 60.5 | 279 | 8.5 | -10.1 |
| **மொத்தம்** | **3,367** | | **-20.0** | **3,307** | | **-1.8** |

(அ) தற்காலிகமானது

*மூலம்:* இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம்

அட்டவணை 3.4

## வான்வழிப் போக்குவரத்துத் துறையின் செயலாற்றம்

| பொருள் | 2021 சன-யூன் | 2021 சன-யூன் (அ) | மாற்றம் % |
|---|---|---|---|
| **பயணிகள் (எண்ணிக்கை) (ஆ)** | **2,229,347** | **292,173** | **-86.9** |
| சிறிலங்கன் எயர்லைன்ஸ் | 1,166,203 | 151,411 | -87.0 |
| பன்னாட்டு எயர்லைன்ஸ் | 1,063,144 | 140,762 | -86.8 |
| **சரக்குக் கையாளல் (மெ.தொ.)** | **69,437** | **79,310** | **14.2** |
| சிறிலங்கன் எயர்லைன்ஸ் | 30,513 | 39,425 | 29.2 |
| பன்னாட்டு எயர்லைன்ஸ் | 38,924 | 39,885 | 2.5 |
| **விமான நகர்வுகள் (எண்ணிக்கை) (இ)** | **15,321** | **9,462** | **-38.2** |
| பண்டாரநாயக்க பன்னாட்டு விமான நிலையம | 15,179 | 9,119 | -39.9 |
| மத்தளை இராஜபக்ச பன்னாட்டு விமான நிலையம் | 60 | 337 | 461.7 |
| யாழ்ப்பாண பன்னாட்டு விமான நிலையம் | 82 | 6 | -92.7 |

(அ) தற்காலிகமானது
(ஆ) இடைநிற் பயணிகள் நீங்கலாக
(இ) உள்நாட்டு விமான நகர்வுகள் உள்ளடங்கலாக

*மூலம்:* உள்நாட்டு சிவில் விமானப் போக்குவரத்து

4

# விலைகள் மற்றும் கூலிகள்

அலுவல்சார் விலைச் சுட்டெண்களினால் அளவிடப்பட்டவாறு, பொது விலை மட்டம் 2021 செத்தெம்பருடன் முடிவடைந்த ஒன்பது மாத காலப்பகுதியில் ஒட்டுமொத்த அதிகரித்த போக்கினைத் தொடர்ந்தது. உலகளாவிய ரீதியில் பண்ட விலைகள் அதிகரித்தமை மற்றும் உள்நாட்டு வழங்கல் பக்கத் தடைகள் என்பன உள்நாட்டு உணவு விலைகளின் மீது கணிசமானளவு தாக்கத்தினைக் கொண்டிருந்தன. உணவு வகையில், பொது விலை மட்டத்தில் காணப்பட்ட அதிகரிப்பிற்கான முக்கிய பங்களிப்பு 2021இல் அதிகரிப்புக்களைப் பெரும்பாலும் எடுத்துக்காட்டிய தளம்பலடையும் உணவு வகையிலுள்ள பொருட்களின் விலைகளிலிருந்து கிடைத்தது. தொடர்பான காலப்பகுதியில் உணவல்லா வகையிலுள்ள பொருட்களின் விலைகள் அதிகரித்த போதும், உணவு வகையுடன் ஒப்பிடுகையில், பொது விலை மட்டத்தின் மீது சிறியதொரு தாக்கத்தினையே உருவாக்கியிருக்கிறது. இவ்வபிவிருத்திகளைப் பிரதிபலிக்கின்ற விதத்தில், கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண் சனவரியின் 138.7 சுட்டெண் புள்ளிகளிலிருந்து 2021 செத்தெம்பரில் 144.1 சுட்டெண் புள்ளிகளுக்கு பொதுவாக அதிகரித்த போக்கொன்றினைக் காட்டியதுடன் சனவரியில் 142.1 சுட்டெண் புள்ளிகளைப் பதிவுசெய்த தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண் 2021 செத்தெம்பரில் 147.5 சுட்டெண் புள்ளிகளுக்கு அதிகரித்தது. இதன்படி, கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணிலும் தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண்ணிலும் ஏற்பட்ட ஆண்டிற்கு ஆண்டு மாற்றங்களினால் அளவிடப்பட்டவாறான முதன்மைப் பணவீக்கம் 2021இன் இதுவரையான காலப்பகுதியில் பொதுவான அதிகரித்துச் செல்லும் போக்கினைத் தொடர்ந்ததுடன், குறிப்பாக, இக்காலப்பகுதியின் இறுதிப்பகுதியில் உயர்வடைந்து காணப்பட்டது. அதேவேளை, 2021 ஓகத்துடன் முடிவடைந்த எட்டு மாத காலப்பகுதியில் முறைசாரா தனியார் துறையின் பெயரளவு மற்றும் உண்மைக் கூலி வீதச் சுட்டெண்கள் 2020இன் தொடர்பான காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் அதிகரித்தன. மேலும், கூலி நிர்ணய சபையினால் ஆளுகை செய்யப்படுகின்ற முறைசார்ந்த தனியார் துறை ஊழியர்களின் பெயரளவு மற்றும் உண்மைக் கூலி வீதச் சுட்டெண்கள், பெருந்தோட்டத் துறை வேலையாட்களின் குறைந்தபட்சக் கூலிகள் மேல் நோக்கித் திருத்தப்பட்டமையின் காரணமாக குறிப்பிடத்தக்க அதிகரிப்பொன்றினைப் பதிவுசெய்தன. அரச துறையில் பெயரளவு கூலி வீதச் சுட்டெண் மாற்றமின்றிக் காணப்பட்ட வேளையில், 2021 ஓகத்துடன் முடிவடைந்த எட்டு மாத காலப்பகுதியில் உண்மைக் கூலி வீதச் சுட்டெண் 2020இன் தொடர்பான காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் வீழ்ச்சியடைந்தன.

## 4.1 விலைகள்

### பொது விலை மட்டத்தின் அசைவுகள்

கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண் மற்றும் தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண்[1] ஆகிய இரண்டு நுகர்வோர் விலைச் சுட்டெண்களினாலும் அளவிடப்பட்ட பொது விலை மட்டம் 2021 செத்தெம்பர் வரையான இவ்வாண்டுப்பகுதியில் ஒட்டுமொத்த அதிகரித்த போக்கினைப் பின்பற்றியது. உணவு மற்றும் உணவல்லா வகைகள் இரண்டும் பொதுவான அதிகரித்த போக்கினைக் காட்டிய போதும், பொது விலை மட்டத்தின் மீது உணவல்லா வகையின் தாக்கம் உணவு வகையுடன் ஒப்பிடுகையில் சிறிதளவாகக் காணப்பட்டது. மேலும், உலகளாவிய விலை உயர்வுகள், உற்பத்திப் பற்றாக்குறை மற்றும் ஏற்பாட்டு ரீதியான தடைகள் என்பன பொது விலை மட்டத்தின் மீது கணிசமான தாக்கத்தினை ஏற்படுத்தியது.

> ***2021 சனவரியிலிருந்து செத்தெம்பர் வரையான காலப்பகுதியில் பொது விலை மட்டம் ஒட்டுமொத்தமாக அதிகரிக்கின்ற போக்கினைத் தொடர்ந்தமைக்கு உணவுப் பொருட்களின் விலைகள் முக்கியமாகப் பங்களித்தன...***

தளம்பலடையும் உணவு[2] வகையிலுள்ள பொருட்களின் விலைகள் 2021இன் இதுவரையான காலப்பகுதியில் அதிகரித்தன. 2021 சனவரியிலும் பெப்புருவரியிலும் தளம்பலடையும் உணவுப்பொருட்களின் விலைகள் அதிகரித்தமைக்கு அரிசி, தேங்காய் மற்றும் காய்கறிகளில் அவதானிக்கப்பட்ட விலை அதிகரிப்புக்களே முக்கிய காரணமாகும். எனினும், தளம்பலடையும் உணவு வகையிலுள்ள பொருட்களின் விலைகள் 2021 மாச்சிலும் ஏப்பிறலிலும் வீழ்ச்சியடைந்தமைக்கு தேங்காய், காய்கறிகள் மற்றும் உருளைக்கிழங்கு விலைகளில் அவதானிக்கப்பட்ட வீழ்ச்சிகளே காரணமாகும். அவதானிக்கப்பட்ட கீழ் நோக்கிய போக்கு அதன் பின்னர் யூனில் ஏற்பட்ட முனைப்பான அதிகரிப்புடன் மாற்றமடைந்தமைக்கு அரிசி, காய்கறிகள் மற்றும் உடன் மீனில் அவதானிக்கப்பட்ட விலை உயர்வுகள் பங்களித்தன. அதேவேளை, அரிசி, காய்கறிகள் மற்றும் உருளைக்கிழங்கில் காணப்பட்ட விலை வீழ்ச்சிகள் 2021 செத்தெம்பரில் பதிவுசெய்யப்பட்ட வீழ்ச்சிக்குப் பிரதானமாகப் பங்களித்தன. இவ்வாண்டுப்பகுதியில், 2020/2021 பெரும்போக அறுவடை சந்தைக்கு வந்த மாதங்கள் உட்பட 2021 யூலை வரை, அரிசி விலைகள் தொடர்ச்சியாக அதிகரித்தன. எனினும், அரசாங்கத்தினால் எடுக்கப்பட்ட பல்வேறு நடவடிக்கைகளுக்கு பதிலிறுத்தும் விதத்தில் 2021 ஓகத்திலும் செத்தெம்பரிலும் அரிசி விலைகள் குறைவடைந்தன. மேலும், சம்பா, நாடு, கெக்குளு வெள்ளை மற்றும் கெக்குளு சிவப்பு என்பனவற்றின் உயர்ந்தபட்ச சில்லறை விலைகள் 2021 செத்தெம்பர் 02ஆம் திகதியிலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் முறையே கி.கிறாமொன்றிற்கு ரூ.103, ரூ.98, ரூ.95 மற்றும் ரூ.95 இற்குத் திருத்தப்பட்டதுடன் இவை, சந்தையில் அரிசிப் பற்றாக்குறையினைத் தவிர்க்கும் பொருட்டு உயர்ந்தபட்ச சில்லறை விலைகள் மீதான வர்த்தமானி அறிவித்தல் இரத்துச் செய்யப்பட்ட 2021 செத்தெம்பர் 29 வரை நடைமுறையிலிருந்தன. கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்றின் காரணமாக விதிக்கப்பட்ட பயணத் தடைகளும் முக்கிய பொருளாதார மையங்களில் காணப்பட்ட மட்டுப்படுத்தப்பட்ட வர்த்தக நடவடிக்கைகளும் மற்றும் மோசமான வானிலை நிலைமைகளும் நிரம்பலில் இடையூறுகளை ஏற்படுத்தியதன் காரணமாக காய்கறிகளின் விலைகள் கலப்பான செயலாற்றமொன்றினை எடுத்துக்காட்டியமை மீது செல்வாக்கினைக் கொண்டிருந்தன. 2021இன் இதுவரையான காலப்பகுதியில் தெங்கு விலைகளில் அவதானிக்கப்பட்ட பொதுவான வீழ்ச்சியடைந்து செல்லும் போக்கின் விளைவாக 2021 யூன் 18 இலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் உயர்ந்தபட்ச சில்லறை விலை மீதான வர்த்தமானி அறிவித்தலை அரசாங்கம் இரத்துச் செய்தது. ஆய்விற்குரிய காலப்பகுதியில் கோழி இறைச்சியின் விலை கணிசமாக அதிகரித்தமைக்கு, சோளம் போன்ற கோழித்தீனின் மற்றும் நுண்ணுயிர் கொல்லிகளின் உயர்வடைந்த விலைகளிலிருந்து தோன்றிய உற்பத்திச் செலவுகளின் உயர்வு முக்கிய காரணமாக அமைந்தது. அதேவேளையில், மீனின் விலைகள் 2021 செத்தெம்பர் வரை தொடர்ந்தும் அதிகரித்துக் காணப்பட்டதுடன் சன்கென் எம்வி எக்ஸ்-பிறஸ் பேர்ள் சரக்குக் கப்பலினால் ஏற்பட்ட கடல் அனர்த்தத்தினால் பெரும்பாலும் பாதிப்பின்றியிருந்தது. மேலும், தொடர்பான காலப்பகுதியில் உருளைக்கிழங்கின் விலைகள் உறுதியாகக் காணப்பட்டமைக்கு இறக்குமதி செய்யப்பட்ட உருளைக்கிழங்கு மீதான சிறப்புப் பண்டத் தீர்வை 2021 பெப்புருவரி 12 இலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் கி.கிறாமிற்கு ரூ.55 இலிருந்து கி.கிறாமிற்கு ரூ.15 இற்குக் கீழ் நோக்கித் திருத்தப்பட்டமையே முக்கிய காரணமாகும். எனினும், சாதகமான உள்நாட்டு அறுவடை எதிர்பார்க்கப்பட்டமையினால் உள்ளூர் வேளாண்மையாளர்களின் நன்மை கருதி அறுவடைப் பருவ காலத்தில் இறக்குமதிகளை ஊக்கம் குன்றச் செய்வதற்காக 2021 ஏப்பிறல் 27 இலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் இத்தீர்வை ரூ.50 இற்கு மேல் நோக்கித் திருத்தப்பட்டது. அதேவேளை, ஆய்விற்குரிய காலப்பகுதியில் சின்ன வெங்காயம் மற்றும் பெரிய வெங்காயத்தின் விலைகள் பொதுவான வீழ்ச்சிகளை எடுத்துக்காட்டியது.

---

1 தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களமானது கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணினையும் (கொ.நுவிசு 2013=100) மற்றும் தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண்ணினையும் (தே.நுவிசு 2013=100) மாதாந்த அடிப்படையில் தொகுக்கின்றது.

2. தளம்பலடையும் உணவுகள் அரிசி, இறைச்சி, உடன் மீன் மற்றும் கடலுணவு, தேங்காய், உடன் பழவர்க்கங்கள், காய்கறிகள், உருளைக்கிழங்கு, வெங்காயம் மற்றும் குறிப்பிட்ட கறிச்சரக்கு வகைகளை உள்ளடக்குகின்றன.

> *2021இன் இதுவரையான காலப்பகுதியில், அரிசி, காய்கறிகள், உடன்மீன் மற்றும் தேங்காயின் விலைகள், தளம்பலடையும் உணவு வகையின் நடத்தையின் மீது கணிசமானளவு தாக்கத்தினை ஏற்படுத்தின...*

2021 செத்தெம்பருடன் முடிவடைந்த ஒன்பது மாத காலப்பகுதியில் தளம்பலடையும் உணவு தவிர்ந்த உணவுப்பொருட்களின் விலைகள் தொடர்ச்சியாக அதிகரித்தன. இதற்கமைய, பருப்பின் விலை இக்காலப்பகுதியில் தொடர்ச்சியாக அதிகரித்து 2020இன் தொடர்பான காலப்பகுதியில் அவதானிக்கப்பட்ட விலைகளுக்கு மேலே தொடர்ந்தும் காணப்பட்டமைக்கு உலகளாவிய சந்தையில் காணப்பட்ட விலை அதிகரிப்பு முக்கிய காரணமாக அமைந்தது. மேலும், உள்நாட்டு கருவாட்டு உற்பத்தியாளர்களை ஊக்குவிப்பதற்காக, 2021 ஓகத்து 12ஆம் திகதியிலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் கருவாட்டின் மீது கி.கிறாமிற்கு ரூ.100 கொண்ட சிறப்புப் பண்டத் தீர்வையைப் பேணும் விதத்தில் அரச வர்த்தமானி விடுக்கப்பட்டது. ஏப்பிறலுக்கும் ஓகத்திற்குமிடையில் அதிகரித்த சீனியின் விலைகள், பொதியிடப்படாத மற்றும் பொதியிடப்பட்ட வெள்ளைச் சீனியின் மீது 2021 செத்தெம்பர் 02 இலிருந்து விதிக்கப்பட்ட முறையே ரூ.122 மற்றும் ரூ.125 கொண்ட உயர்ந்தபட்ச சில்லறை விலைகளின் விளைவாக செத்தெம்பரில் குறைவடைந்தது. அதேவேளை, 2020 முழுவதிலும் மாற்றமின்றிக் காணப்பட்ட இறக்குமதி செய்யப்பட்ட பால்மாவின் விலை 2021 ஒத்தோபர் 9ஆம் திகதியிலிருந்து 400 கிறாம் பொதியொன்றின் விலை ரூ.100 இனால் அதிகரிக்கப்பட்டமைக்கு உலக சந்தையின் விலை அதிகரிப்புக்களும் உயர்ந்த சரக்குக் கட்டணங்களும் விலைக் கட்டுப்பாடுகள் தாராளமயமாக்கப்பட்டமையும் காரணங்களாக அமைந்தன. இதனுடன் இசைந்த செல்லும் விதத்தில் 400 கிறாம் உள்ளூர் பால்மாவின் விலையும் 2021 ஒத்தோபர் 15 இலிருந்து நடைமுறைக்கு வரும் விதத்தில் ரூ.90 இனால் அதிகரிக்கப்பட்டது. மேலும், கோதுமை மாவின் விலையும் 2021 ஒத்தோபர் 10 இலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் கி.கிறாமிற்கு ரூ.10 இனால் மேல் நோக்கித் திருத்தப்பட்டது. இதன் விளைவாக, மற்றைய வெதுப்பக உற்பத்திகளின் விலை உயர்வடைந்ததுடன் ஒத்தோபர் 11ஆம் திகதியிலிருந்து நடைமுறைக்குவரும் விதத்திலும் 450 கிறாம் பாணின் விலை ரூ.5 இனால் அதிகரிக்கப்பட்டது.

2021 செத்தெம்பருடன் முடிவடைந்த காலப்பகுதியில் உணவல்லா வகையிலுள்ள பொருட்களின் விலைகளும் அதிகரித்த போக்கினைக் கொண்டிருந்த போதும் உணவு வகையுடன் ஒப்பிடுகையில் பொது விலை மட்டத்தில் குறைந்தளவு தாக்கத்தினையே ஏற்படுத்தியிருந்தன. ஆய்விற்குரிய காலப்பகுதியில் பன்னாட்டுப் பாடசாலைக் கட்டணங்கள், தனியார் மருத்துவ ஆலோசனைக் கட்டணங்கள் மற்றும் தனியார் வைத்தியசாலைகளுக்கான கொடுப்பனவுகள் என்பன அதிகரித்தன. மேலும், உணவகங்கள் மற்றும் சுற்றுலாவிடுதிகள் துணை வகையிலுள்ள தயாரிக்கப்பட்ட உணவு வகைகளின் விலைகள் 2021 மாச்சிலும் யூலையிலும் அதிகரித்தன. மேலும், உலகளாவிய திரவப் பெற்றோலிய வாயு விலை அதிகரிப்புக்களை பின்பற்றும் விதத்தில் லிற்றோ காஸ் லங்கா லிமிடெட்டும் லாவ் காஸ் பிஎல்சியும் 12.5 கி.கிறாம் நிறையுடைய திரவ பெற்றோலிய வாயு உருளையின் விலையினை 2021 ஒத்தோபர் 10 இலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் கணிசமாக அதிகரித்தன. இத்திருத்தங்கள் தயாரிக்கப்பட்ட உணவின் உள்நாட்டு விலைகளின் மீது மேல் நோக்கிய திருத்தங்களை ஏற்படுத்தியது. மேலும், ஓராண்டிற்கும் மேலாக ஒரே மட்டத்தில் காணப்பட்ட உள்நாட்டு பெற்றோலிய விலைகளும் அதிகரித்தன. பெற்றோல் (92 ஒக்ரேன்), தன்னியக்க டீசல் மற்றும் மண்ணெண்ணெய் என்பனவற்றின் விலைகள் 2021 யூன் 12இலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் மேல் நோக்கித் திருத்தப்பட்டன. எனினும், உலகளாவிய நோய்த்தொற்றிற்கு முன்னர் அவதானிக்கப்பட்ட போக்கிற்கு மாறாக வீடுகளின் வாடகை இவ்வாண்டின் இதுவரையான காலப்பகுதியில் நிலையான மட்டத்தில் காணப்பட்டன.

**அட்டவணை 4.1**

**திரவ பெற்றோலிய வாயு மற்றும் எரிபொருள் என்பவற்றில் 2021 இல் விலைத் திருத்தங்கள்**

| விடயம் | அலகு | திருத்தப்பட்ட விலை (ரூபா) | நடைமுறைப்படுத்திய திகதி |
|---|---|---|---|
| திரவ பெற்றோலிய வாயு | | | |
| லிட்றோ காஸ் லங்கா லிமிடெட் | 9.6கி.கி | 1,150.00 | 25.07.2021 |
| | 12.5கி.கி | 2,675.00 | 10.10.2021 |
| லாவ் காஸ் பிஎல்சி | 12.5கி.கி | 1,856.00 | 12.08.2021 |
| | 12.5கி.கி | 2,840.00 | 10.10.2021 |
| எரிபொருள் | | | |
| பெற்றோல் (92 ஒக்ரேன்) | | | |
| இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம் மற்றும் லங்கா இந்தியன் ஒயில் கோப்பரேசன் | 1l | 157.00 | 12.06.2021 |
| லங்கா இந்தியன் ஒயில் கோப்பரேசன் | 1l | 162.00 | 22.10.2021 |
| தன்னியக்க டீசல் | | | |
| இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம் மற்றும் லங்கா இந்தியன் ஒயில் கோப்பரேசன் | 1l | 111.00 | 12.06.2021 |
| லங்கா இந்தியன் ஒயில் கோப்பரேசன் | 1l | 116.00 | 22.10.2021 |
| மண்ணெண்ணெய் | | | |
| இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம் மற்றும் லங்கா இந்தியன் ஒயில் கோப்பரேசன் | 1l | 77.00 | 12.06.2021 |

*மூலம்:* இலங்கை மத்திய வங்கி

*உணவல்லா விடயங்களின் விலைகளில் கணிசமான தாக்கத்தினை உருவாக்குகின்ற விதத்தில், 2020இலிருந்து மாற்றமின்றிக் காணப்பட்ட எரிபொருள் மற்றும் திரவப் பெற்றோலிய வாயுவின் விலைகள் 2021இன் பின்னரைப்பகுதியில் அதிகரித்தன...*

## நுகர்வோர் விலைச் சுட்டெண்கள்

### கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்


கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண் 2021 சனவரியிலிருந்து செத்தெம்பர் வரையான காலப்பகுதியில் ஒட்டுமொத்த அதிகரித்த போக்கினைக் கொண்டிருந்ததுடன் சனவரியில் 138.7 சுட்டெண் புள்ளிகளிலிருந்து 2021 செத்தெம்பரில் 144.1 சுட்டெண் புள்ளிக்கு அதிகரித்தது. 2021 சனவரியிலும் பெப்புருவரியிலும் மாதாந்த அதிகரிப்புக்கள் அவதானிக்கப்பட்டமைக்கு உணவு மற்றும் உணவல்லா வகை இரண்டிலுமுள்ள பொருட்களின் விலை அசைவுகள் காரணமாக அமைந்தன. எனினும், அடுத்து வந்த தொடர்ச்சியான இரண்டு மாதங்களிலும் கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணில் மாதாந்த வீழ்ச்சிகள் அவதானிக்கப்பட்டமைக்கு உணவு வகையில் ஏற்பட்ட விலை அசைவுகளே ஏக காரணமாக அமைந்தன. அதன் பின்னர் உணவு மற்றும் உணவல்லா வகைகள் இரண்டிலுமுள்ள பொருட்களின் விலை அசைவுகள் 2021 மே மற்றும் யூன் மாதங்களில் அவதானிக்கப்பட்ட விலை அதிகரிப்புக்களுக்குப் பங்களித்ததுடன் உயர்ந்தளவு பங்களிப்பு உணவு வகையிலிருந்து கிடைத்தது. 2021 யூலையில் அவதானிக்கப்பட்ட கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணில் ஏற்பட்ட அதிகரிப்பிற்கு உணவல்லா வகையிலுள்ள பொருட்களின் விலைகளில் ஏற்பட்ட அசைவுகளே முழுக் காரணமாக அமைந்த போதும் 2021 ஓகத்து மற்றும் செத்தெம்பர் இரண்டு மாதங்களிலும் அவதானிக்கப்பட்ட அதிகரிப்புக்களுக்கு உணவு மற்றும் உணவல்லா வகைகள் இரண்டிலுமுள்ள பொருட்களின் விலைகளே தூண்டுதலாக விளங்கின.

*2021 செத்தெம்பரில் முடிவடைந்த ஒன்பது மாத காலப்பகுதியில் கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண் மற்றும் தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண் என்பன பொதுவாக அதிகரிக்கும் போக்கினைத் தொடர்ந்தன...*

### தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண்


தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண், மாதாந்த வீழ்ச்சியைப் பதிவுசெய்த மாச்சு தவிர, சனவரியில் 142.1 சுட்டெண் புள்ளிகளைப் பதிவுசெய்து 2021 செத்தெம்பரில் 147.5 சுட்டெண் புள்ளிகளுக்குத் தொடர்ச்சியாக அதிகரித்தது. உணவு மற்றும் உணவல்லா விலைகள் இரண்டிலுமுள்ள பொருட்களின் விலை அசைவுகள் 2021 சனவரியிலும் பெப்புருவரியிலும் தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண்ணில் அவதானிக்கப்பட்ட அதிகரிப்புக்களுக்குப் பங்களித்தன. இவ்வதிகரித்த போக்கு, உணவு வகையில் காணப்பட்ட பொருட்களின் விலைகள் வீழ்ச்சியடைந்த ஒரே காரணத்தினால் 2021 மாச்சில் மாற்றமடைந்தது. எனினும், கொவிட்-19இன் மூன்றாவது அலை வெளிக்கிளம்பிய வேளையான ஏப்பிறலிலிருந்து, உணவு மற்றும் உணவல்லா வகை இரண்டிலுமுள்ள பொருட்களின் விலைகளில் அவதானிக்கப்பட்ட அதிகரிப்புக்களின் விளைவாக தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண் 2021 செத்தெம்பர் வரை அதிகரித்தது.

வரைபடம் 4.1
கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணின் மாதத்திற்கு மாத % மாற்றத்திற்கான பங்களிப்பு




*மூலங்கள்:* தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்
இலங்கை மத்திய வங்கி

வரைபடம் 4.2
தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண்ணின் மாதத்திற்கு மாத % மாற்றத்திற்கான பங்களிப்பு




*மூலங்கள்:* தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்
இலங்கை மத்திய வங்கி

### முதன்மைப் பணவீக்கம்


2021இன் முதல் ஒன்பது மாத காலப்பகுதியில், கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணின் ஆண்டிற்கு ஆண்டு மாற்றங்களினால் அளவிடப்பட்ட முதன்மைப் பணவீக்கம் அதிகரித்துச் செல்லும் போக்கினைக் கொண்டிருந்ததுடன் குறிப்பாக, இக்காலத்தின் பிற்பகுதியில் இலக்கிடப்பட்ட 4.0 - 6.0 சதவீத வீச்சின் மேல் எல்லையைச் சுற்றி, காணப்பட்டது. இதன்படி, சனவரியில் 3.0 சதவீதத்தில் காணப்பட்ட கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணினை அடிப்படையாகக் கொண்ட முதன்மைப் பணவீக்கம் 2021 ஏப்பிறலில் 3.9 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைவதற்கு முன்னர் மாச்சு வரை 4.1 சதவீதத்தினைப் பதிவுசெய்தது. அதன் பின்னர் கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்றின் மூன்றாவது அலையின் தோற்றம் காரணமாக தொடர்ச்சியாக அதிகரித்த முதன்மைப் பணவீக்கம் 2021 மேயிலிருந்து ஓகத்து வரையான காலப்பகுதியில் முறையே 4.5 சதவீதத்தினையும் 6.0 சதவீதத்தினையும் பதிவுசெய்தது. அதன் பின்னர், கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணில் ஏற்பட்ட ஆண்டிற்கு ஆண்டு மாற்றம் அதன் அதிகரித்துச் செல்லும் போக்கினை மாற்றி 2021 செத்தெம்பரில் 5.7 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது. அதேவேளை, காலம் முழுவதிலும் கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணினை அடிப்படையாகக் கொண்ட உணவு மற்றும் உணவல்லாப் பணவீக்கம் ஒட்டுமொத்த அதிகரிப்பொன்றினைத் தொடர்ந்த வேளையில் உணவுப் பணவீக்கம் பெரும்பாலும் இரட்டை இலக்க மட்டத்தில் காணப்பட்டது. தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண்ணினை அடிப்படையாகக் கொண்ட பணவீக்கம் 2021 செத்தெம்பருடன் முடிவடைந்த ஒன்பது மாத காலப்பகுதியில் கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணினை அடிப்படையாகக் கொண்ட முதன்மைப் பணவீக்கம் வீக்கத்திற்கு மேலாகத் தொடர்ந்தும் காணப்பட்டது. இதன் விளைவாக, சனவரியில் 3.7 சதவீதமாகக் காணப்பட்ட ஆண்டிற்கு ஆண்டு தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண் பணவீக்கம் தொடர்ச்சியாக அதிகரித்து யூலையில் 6.8 சதவீதத்தினை அடைந்ததுடன் அதன் பின்னர் போக்கு மாற்றமடைந்து 2021 செத்தெம்பரில் 6.2 சதவீதத்திற்கு அதிகரித்தது. தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண்ணினை அடிப்படையாகக் கொண்ட உணவு மற்றும் உணவல்லாப் பணவீக்கம் 2021இன் இதுவரையான காலப்பகுதியில் அதிகரித்ததுடன் உணவுப் பணவீக்கம் சனவரியின் 5.9 சதவீதத்திலிருந்து 2021 செத்தெம்பரில் 10.0 சதவீதத்திற்கு அதிகரித்தது.

> *முதன்மைப் பணவீக்கம் பெரும்பாலும் உயர் மட்டத்தில் காணப்பட்ட வேளையில் உணவுப் பணவீக்கம் பெரும்பாலும் இரட்டை இலக்க மட்டங்களில் காணப்பட்டது...*

### 4.2 கூலிகள்


முறைசாரா தனியார் துறை கூலி வீதச் சுட்டெண்ணினால் அளவிடப்பட்டவாறான (2012 = 100) முறைசாரா தனியார் துறை ஊழியர்களின் பெயரளவுக் கூலிகள், சிறுகைத்தொழில்களின் கூலிகளில் ஏற்பட்ட வீழ்ச்சியின் விளைவாக 2021 ஏப்பிறலில் பதிவுசெய்யப்பட்ட வீழ்ச்சி தவிர, 2021 ஓகத்துடன் முடிவடைந்த எட்டு மாத காலப்பகுதியில் பொதுவாக அதிகரித்துச் செல்லும் போக்கினைப் பின்பற்றியது. 2021 ஓகத்துடன் முடிவடைந்த எட்டு மாத காலப்பகுதியில் முறைசாரா தனியார் துறையின் பெயரளவுக் கூலி வீதச் சுட்டெண் 2020இன் இதே காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் 5.9 சதவீதத்தினால் அதிகரித்தது. 2021 ஓகத்துடன் முடிவடைந்த எட்டு மாத காலப்பகுதியில் துணை நடவடிக்கைகளான வேளாண்மை, கைத்தொழில் மற்றும் பணிகளின் நியதிகளில் பெயரளவுக் கூலி வீதச்

வரைபடம் 4.3
கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணை அடிப்படையாகக் கொண்ட பணவீக்கம் (ஆண்டுக்காண்டு % மாற்றம்)




மூலம்: தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்

வரைபடம் 4.4
தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண்ணை அடிப்படையாகக் கொண்ட பணவீக்கம் (ஆண்டுக்காண்டு % மாற்றம்)




மூலம்: தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்

சுட்டெண், 2020இன் இதே காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் முறையே 3.4 சதவீதத்தினாலும் 6.6 சதவீதத்தினாலும் மற்றும் 6.5 சதவீதத்தினாலும் அதிகரித்தது. அதேவேளை, 2021 ஓகத்துடன் முடிவடைந்த எட்டு மாத காலப்பகுதியில் முறைசாரா தனியார் துறை உண்மைக் கூலி வீதச் சுட்டெண் 2020இன் தொடர்பான காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் 0.4 சதவீதத்தினால் சிறிதளவால் அதிகரித்தது.

> *2021 ஓகத்துடன் முடிவடைந்த எட்டு மாத காலப்பகுதியில் முறைசாரா தனியார் துறையின் பெயரளவுக் கூலி வீதச் சுட்டெண் ஒட்டுமொத்த அதிகரித்த போக்கொன்றினைக் கொண்டிருந்தது...*

கூலி நிர்ணய சபையினால் ஆளுகை செய்யப்படும் கூலிகளையுடைய ஊழியர்களின் குறைந்த கூலி வீதச் சுட்டெண்ணினால்[3] (1978 திசெம்பர் = 100) அளவிடப்பட்டவாறான முறைசார்ந்த தனியார் துறையிலுள்ள ஊழியர்களின் பெயரளவுக் கூலிகள் 2020இன் இதே காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் 2021 ஓகத்துடன் முடிவடைந்த எட்டு மாத காலப்பகுதியில் 66.0 சதவீதத்தினால் குறிப்பிடத்தக்களவிற்கு அதிகரித்தன. இக்குறிப்பிடத்தக்க அதிகரிப்பிற்கு, தேயிலை மற்றும் இறப்பர் பயிர்ச்செய்கை மற்றும் தயாரிப்பு வர்த்தகத்திற்கான கூலி நிர்ணய சபைகளுக்கூடாக 2021 மாச்சு 05 இலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் தேயிலை மற்றும் இறப்பர் பெருந்தோட்ட தொழிலாளர்களின் நாளாந்த கூலிகள் ரூ.1,000 இற்கு அதிகரித்தமையே காரணமாகும். மேலும், 2016ஆம் ஆண்டின் 03ஆம் இலக்க தொழிலாளர் தேசிய குறைந்தபட்ச கூலிகளின் சட்டத்திற்கு 2021 ஓகத்து 16 இலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் செய்யப்பட்ட திருத்தங்களின் காரணமாக தனியார் துறையின் குறைந்தபட்ச மாதாந்த சம்பளம் ரூ.10,000 இலிருந்து ரூ.12,500 இற்கும் குறைந்தபட்ச நாளாந்தக் கூலிகள் ரூ.400 இலிருந்து ரூ.500 இற்கும் அதிகரிக்கப்பட்டன. இதற்கமைய, 2021 ஓகத்துடன் முடிவடைந்த எட்டு மாத காலப்பகுதியில் முறைசார்ந்த தனியார் துறையிலுள்ள ஊழியர்களின் உண்மைக் கூலி வீதச் சுட்டெண் முன்னைய ஆண்டின் தொடர்பான காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் 58.6 சதவீதத்தினால் குறிப்பிடத்தக்களவிற்கு அதிகரித்தது. அதேவேளை, கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்றின் காரணமாக வீட்டிலிருக்குமாறு கேட்டுக் கொள்ளப்பட்ட சுற்றுலாத் துறையிலுள்ள ஊழியர்களுக்கு கடைசியாகச் செலுத்தப்பட்ட அடிப்படைச் சம்பளத்தில் 50 சதவீதத்தினை அல்லது ரூ.14,500 இனை இதில் எது ஊழியர்களுக்குச் சாதகமானதோ அதனைச் செலுத்துவது தொடர்பான முத்தரப்பு உடன்படிக்கை 2021 திசெம்பர் வரை நீடிக்கப்பட்டது.

> *2021 ஓகத்துடன் முடிவடைந்த எட்டு மாத காலப்பகுதியில் முறைசார்ந்த தனியார் துறையின் பெயரளவுக் கூலி வீதச் சுட்டெண் குறிப்பாக, பெருந்தோட்டத் தொழிலாளர்களின் நாளாந்தக் கூலிகள் அதிகரித்தமையாலும் குறைந்தபட்ச நாளாந்தக் கூலியில் ஏற்பட்ட அதிகரிப்பாலும் மேல் நோக்கிய போக்கினைக் கொண்டிருந்தது...*

2021 ஓகத்துடன் முடிவடைந்த எட்டு மாத காலப்பகுதியில் அரச துறை கூலி வீதச் சுட்டெண்ணினால் அளவிடப்பட்டவாறு (2016=100) அரச துறை ஊழியர்களின் பெயரளவுக் கூலிகள் 2020இன் இதே காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் மாற்றமின்றிக் காணப்பட்டது. மறுபுறத்தில், இதே காலப்பகுதியில் அரச துறை ஊழியர்களின் உண்மைக் கூலி 2020இன் தொடர்பான காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் 5.2 சதவீதத்தினால் தேய்வடைந்திருக்கிறது.

---

3 கூலி நிர்ணய சபையினால் ஆளுகை செய்யப்படுகின்ற முறைசார்ந்த தனியார் துறை ஊழியர்களின் கூலிகள் தொழில் திணைக்களத்தினால் தொகுக்கப்படும் குறைந்தபட்ச கூலிச் சுட்டெண்ணினால் (1978 திசெம்பர்=100) அளவிடப்படுகின்றன.

# 5

# வெளிநாட்டுத் துறை அபிவிருத்திகள்

*பாரிய வெளிநாட்டு நாணயப் படுகடன் தீர்ப்பனவுக் கடப்பாடுகளுக்கு மத்தியில் வெளிநாட்டுச் செலாவணி உட்பாய்ச்சல்களைத் தளர்வுறச் செய்த கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்றின் தாக்கத்தினைப் பிரதிபலித்து 2021இல் வெளிநாட்டுத் துறை அதிகளவிலான சவால்களை எதிர்நோக்கியது. 2021இன் இதுவரையான காலப்பகுதியில் வணிகப்பொருள் ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தினைக் காட்டின. இறக்குமதிகள் மீதான செலவினமும் கூட கணிசமாக அதிகரித்து, பொருளாதார நடவடிக்கை மீட்சியுற்றமையினையும் உலகளாவிய பண்ட விலைகள் உயர்வடைந்தமையினையும் பிரதிபலித்தது. 2021 ஓகத்துடன் முடிவடைந்த எட்டு மாத காலப்பகுதியில் வணிகப்பொருள் வர்த்தகப் பற்றாக்குறை, 2020 மற்றும் 2019இன் இதே காலப்பகுதிகளுடன் ஒப்பிடுகையில் விரிவடைந்தது. பணிகளிலுள்ள வர்த்தகம், குறிப்பாக சுற்றுலாவிலிருந்தான வருவாய்கள், நோய்த்தொற்றினால் குறிப்பிடத்தக்களவிற்குப் பாதிக்கப்பட்டிருக்கின்றது. 2021 சனவரியிலிருந்து மே வரையான காலப்பகுதியில், ஆண்டிற்காண்டு அடிப்படையில், ஆரோக்கியமான வளர்ச்சியைப் பதிவுசெய்த தொழிலாளர் பணவனுப்பல்கள் அண்மைய மாதங்களில் மிதமடைந்து காணப்படுகின்றன. வட்டி மற்றும் பங்குலாபக் கொடுப்பனவுகள் ஓரளவு மிதமான தன்மையினைக் காட்டி முதலாந்தர வருமானக் கணக்கில் ஒப்பீட்டுரீதியில் குறைவான பற்றாக்குறையினைத் தோற்றுவித்தன. வெளிநாட்டு நடைமுறை கணக்கில் காணப்பட்ட பற்றாக்குறை விரிவடைந்து, வணிகப்பொருள் வர்த்தகப் பற்றாக்குறை விரிவடைந்தமையினையும் பணிகளிலுள்ள வர்த்தகம் மிதமடைந்தமையினையும் பிரதிபலித்தது. நிதியியல் கணக்கு தேறிய வெளிநாட்டு வெளிப்பாய்ச்சல்களைப் பதிவுசெய்ததுடன் மொத்த அலுவல்சார் ஒதுக்குகள் வீழ்ச்சியடைந்தன. 2021 செத்தெம்பருடன் முடிவடைந்த காலப்பகுதியில் சென்மதி நிலுவை குறிப்பிடத்தக்க திரண்ட பற்றாக்குறையொன்றினைப் பதிவுசெய்தது. எனினும், அரசாங்கத்தினதும் மத்திய வங்கியினதும் தற்போதைய முயற்சிகளின் காரணமாக முழுமையாகப் பயன்படுத்தப்படாத அல்லது உபாயரீதியற்ற சொத்துக்களை பணமாக்குதல் மூலம் கிடைக்கும் பெறுகைகள், இருபுடை பரஸ்பர பரிமாற்றல் ஏற்பாடுகள், கூட்டுக் கடன்கள், அரசாங்கத்திலிருந்து அரசாங்கத்திற்கான நிதியிடல் மற்றும் வெளிநாட்டு நேரடி முதலீட்டுப் பாய்ச்சல்கள் உட்பட அண்மிய காலத்தில் கணிசமானளவு வெளிநாட்டு உட்பாய்ச்சல்கள் எதிர்பார்க்கப்படுகின்றன. செலாவணி வீதம் ஆண்டின் இதுவரையான காலப்பகுதியில் இடையிடையே சில தளம்பல்களைக் காட்டிய வேளையில், அண்மிய வாரங்களில் ஒப்பீட்டுரீதியில் உறுதியாகக் காணப்பட்டது. செலாவணி வீதத்தில் காணப்பட்ட மிகையான தளம்பலைக் குறைப்பதற்காக மத்திய வங்கி உள்நாட்டு வெளிநாட்டுச் செலாவணி சந்தையில் தலையீடு செய்த வேளையில், குறிப்பிட்ட அத்தியாவசிய பண்டங்களின் இறக்குமதிகளின் கொடுப்பனவுகளைப் பூர்த்திசெய்வதற்காக வெளிநாட்டுச் செலாவணித் திரவத்தன்மையினையும் வழங்கியது.*

## 5.1 சென்மதி நிலுவை


### நடைமுறைக் கணக்கு

முதன்மை வருமானக் கணக்கு மற்றும் தொழிலாளர் பணவனுப்பல்களில் முன்னேற்றங்கள் காணப்பட்டமைக்குமிடையிலும் வணிகப்பொருள் வர்த்தகப் பற்றாக்குறை விரிவடைந்தமை, சுற்றுலாவிலிருந்தான குறைவடைந்த வருவாய்களுக்கு மத்தியில் பணிகளிலுள்ள வர்த்தகத்தின் மிகை மிதமடைந்தமை என்பனவற்றின் காரணமாக 2021இன் முதலரைப் பகுதியில் நடைமுறைக் கணக்குப் பற்றாக்குறை விரிவடைந்தது. இதன் விளைவாக, நடைமுறைக் கணக்கு 2020இன் முதலரைப்பகுதியின் ஐ.அ.டொலர் 1.1 பில்லியன் பற்றாக்குறையுடன் ஒப்பிடுகையில் 2021இன் முதலரைப்பகுதியில் ஐ.அ.டொலர் 1.5 பில்லியன் கொண்ட பற்றாக்குறையினைப் பதிவுசெய்தது.

### வர்த்தகக் கணக்கு


2021 ஓகத்தில் முடிவடைந்த எட்டு மாத காலப்பகுதியில் வணிகப்பொருள் வர்த்தகக் கணக்கின் பற்றாக்குறை முறையே 2020 மற்றும் 2019இன் தொடர்பான காலப்பகுதியில் பதிவுசெய்யப்பட்ட ஐ.அ.டொலர் 3.8 பில்லியன் மற்றும் ஐ.அ.டொலர் 4.9 பில்லியனிலிருந்து ஐ.அ.டொலர் 5.5 பில்லியனுக்கு விரிவடைந்தது. 2021 ஓகத்தில் முடிவடைந்த எட்டு மாத காலப்பகுதியில் ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் ஐ.அ.டொலர் 7.9 பில்லியனாக விளங்கி 2020இன் இதே காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் 22.6 சதவீதத்தினால் அதிகரித்தன. இறக்குமதிச் செலவினம் கடந்த ஆண்டின் சனவரி - ஓகத்து காலப்பகுதியில் பதிவு செய்த ஐ.அ.டொலர் 10.3 பில்லியனிலிருந்து 2021இன் இதே காலப்பகுதியில் ஐ.அ.டொலர் 13.4 பில்லியனுக்கு அதிகரித்து 30.7 சதவீதம் கொண்ட அதிகரிப்பினைப் பதிவுசெய்தது. ஏற்றுமதி மற்றும் இறக்குமதி அளவுச்

வரைபடம் 5.1
வெளிநாட்டு வர்த்தகச் செயலாற்றம்




*மூலங்கள்:* இலங்கை சுங்கம்
தேசிய இரத்தினகற்கள் மற்றும் ஆபரண அதிகாரசபை
இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம்
லங்கா ஐ.ஓ.சி.பி.எல்.சி
ஏனைய பெற்றோலிய ஏற்றுமதியாளர்கள்
இலங்கை மத்திய வங்கி

வரைபடம் 5.2
வர்த்தக மாற்று விகிதமும் வர்த்தக சுட்டெண்களும்




*மூலம்:* இலங்கை மத்திய வங்கி

சுட்டெண்கள் மற்றும் அலகுப் பெறுமதிச் சுட்டெண்கள் என்பவற்றின் அசைவுகளால் காட்டப்பட்டுள்ளவாறு ஏற்றுமதி அளவுகளில் ஏற்பட்ட அதிகரிப்பானது ஏற்றுமதி வருவாய்களில் ஏற்பட்ட அதிகரிப்பிற்குப் கணிசமாகப் பங்களித்திருக்கிறது. அளவு மற்றும் விலை மாற்றங்களின் தாக்கம் இறக்குமதிகளின் வேறுபட்ட வகைகளுக்கேற்ப வேறுபட்ட போதும் பொதுவாக, இறக்குமதிச் செலவினமானது அளவு மற்றும் விலை அதிகரிப்புக்கள் ஆகிய இரண்டினதும் செல்வாக்கிற்குட்பட்டிருந்தது.

> *ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் உலகளாவிய நோய்த்தொற்றிற்கு முன்னைய மட்டங்களுக்கு மீட்சியுற்றமைக்கு கொள்கை வழிமுறைகளின் ஆதரவும் உலகளாவிய நடவடிக்கைகள் படிப்படியாக வழமைக்குத் திரும்பியமையும் உதவிய வேளையில் இறக்குமதிகள் மீதான செலவினம் உள்நாட்டு நடவடிக்கை மீட்சியடைந்தமையினையும் உலகளாவிய பண்ட விலைகளில் ஏற்பட்ட அதிகரிப்பினையும் பிரதிபலித்தது...*

ஏற்றுமதிச் செயலாற்றம் 2020 உடன் ஒப்பிடுகையில் பரந்த அடிப்படையிலானதொரு முன்னேற்றத்தினைக் காண்பித்தது. கைத்தொழில், வேளாண்மை மற்றும் கனிப்பொருள் ஏற்றுமதிகளை உள்ளடக்கிய பெரும்பாலும் அனைத்து ஏற்றுமதித் துறைகளும் அதிகரிப்புக்களைப் பதிவுசெய்தன. கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்றின் தாக்கங்கள் உலகளாவிய ரீதியில் முழுமையாக மறைந்துவிடாத போதும், முன்னேற்றம் கண்ட பொருளாதாரங்களில்

ml;ltiz 5.1

## சர்வதேச வர்த்தக அபிவிருத்திகள்


ஐ.அ.டொ. மில்லியன்

| விடயம் | 2019 | 2020 (அ) | 2020 சன-ஒகத் (அ) | 2021 சன-ஒகத் (அ) | ஆண்டுக்காண்டு மாற்றம் % சன-ஒகத் 2020 /2021 | மாற்றத்திற்கான பங்களிப்பு % சன-ஒகத் 2021 |
|---|---|---|---|---|---|---|
| **ஏற்றுமதிகள்** | | | | | | |
| **வேளாண்மை ஏற்றுமதிகள;** | **2,461.9** | **2,336.2** | **1,516.0** | **1,765.5** | **16.5** | **22.3** |
| Njapiy | 1,346.4 | 1,240.9 | 805.6 | 882.4 | 9.5 | 11.2 |
| ,wg;gh; | 24.2 | 30.1 | 17.9 | 27.3 | 52.7 | 0.3 |
| njq;F | 329.5 | 345.2 | 221.5 | 276.9 | 25.0 | 3.5 |
| njq;F cs;sPl;L cw;gj;jpfs; | 161.1 | 163.1 | 101.4 | 125.6 | 23.9 | 1.6 |
| Vidait | 168.4 | 182.1 | 120.1 | 151.3 | 26.0 | 1.9 |
| thridj;jputpaq;fs; | 312.5 | 333.5 | 194.5 | 282.4 | 45.2 | 3.6 |
| kuf;fwpfs; | 32.0 | 36.6 | 26.1 | 18.4 | -29.7 | 0.2 |
| jahhpf;fg;glhj Gifapiy | 34.7 | 25.5 | 16.9 | 21.4 | 26.6 | 0.3 |
| rpW Ntshz;ik cw;gj;jpfs; | 120.0 | 134.7 | 100.3 | 91.1 | -9.1 | 1.2 |
| flYzT | 262.5 | 189.8 | 133.2 | 165.5 | 24.3 | 2.1 |
| **கைத்தொழில் ஏற்றுமதிகள்** | **9,426.3** | **7,672.0** | **4,905.5** | **6,093.2** | **24.2** | **77.1** |
| GlitfSk; MilfSk; | 5,596.5 | 4,423.1 | 2,853.1 | 3,434.8 | 20.4 | 43.5 |
| ,wg;gh; cw;gj;jpfs; | 866.1 | 786.1 | 488.9 | 681.7 | 39.4 | 8.6 |
| ngw;Nwhypa cw;gj;jpfs; | 521.1 | 373.6 | 268.1 | 294.9 | 10.0 | 3.7 |
| czT> Fbghdq;fs; kw;Wk; Gifapiy | 447.0 | 464.0 | 302.9 | 354.0 | 16.9 | 4.5 |
| nghwp kw;Wk; ,ae;jputpay; rhjdq;fs; | 400.0 | 337.5 | 209.5 | 329.1 | 57.1 | 4.2 |
| ,uj;jpdk;> ituk; kw;Wk; Mguzq;fs; | 305.7 | 181.5 | 102.7 | 178.0 | 73.4 | 2.3 |
| mbg;gil cNyhfq;fs; kw;Wk; nghUl;fs; | 176.5 | 110.9 | 76.0 | 100.1 | 31.8 | 1.3 |
| Nghf;Ftuj;Jr; rhjdq;fs; | 145.9 | 71.4 | 46.2 | 74.8 | 61.8 | 0.9 |
| ,urhad cw;gj;jpfs; | 176.3 | 172.7 | 107.7 | 143.7 | 33.4 | 1.8 |
| Njhy;> gazg; nghUl;fs; kw;Wk; fhyzp | 102.9 | 53.9 | 38.2 | 33.8 | -11.4 | 0.4 |
| mr;rply; ifj;njhopy; nghUl;fs; | 48.3 | 47.9 | 25.9 | 35.5 | 37.0 | 0.4 |
| gpshj;jpf;Ffs; kw;wk; mjd; nghUl;fs; | 73.5 | 176.3 | 72.6 | 50.7 | -30.2 | 0.6 |
| Vida ifj;njhopy; Vw;Wkjpfs; | 566.6 | 473.2 | 313.7 | 382.3 | 21.8 | 4.8 |
| **கனிம ஏற்றுமதிகள்** | **33.9** | **25.1** | **14.3** | **30.7** | **115.3** | **0.4** |
| **வகைப்படுத்தப்படாத ஏற்றுமதிகள்** | **17.9** | **14.1** | **9.3** | **13.6** | **45.5** | **0.2** |
| **மொத்த ஏற்றுமதிகள்** | **11,940.0** | **10,047.4** | **6,445.0** | **7,903.0** | **22.6** | **100.0** |
| **இறக்குமதிகள்** | | | | | | |
| **நுகர்வுப் பொருட்கள்** | **3,956.5** | **3,401.7** | **2,300.3** | **2,579.3** | **12.1** | **19.2** |
| czTk; Fbghdq;fSk; | 1,426.9 | 1,554.4 | 1,023.7 | 1,151.9 | 12.5 | 8.6 |
| mhprp | 12.8 | 10.5 | 6.3 | 8.4 | 34.2 | 0.1 |
| rPdp | 199.7 | 276.0 | 161.9 | 210.5 | 30.0 | 1.6 |
| ghy; cw;gj;jpfs; | 311.9 | 333.8 | 228.9 | 231.2 | 1.0 | 1.7 |
| gUg;G tif | 79.9 | 96.9 | 65.7 | 105.7 | 60.8 | 0.8 |
| Vidait | 822.7 | 837.2 | 560.8 | 596.1 | 6.3 | 4.4 |
| czty;yhj Efh;Tg; nghUl;fs; | 2,529.6 | 1,847.3 | 1,276.7 | 1,427.3 | 11.8 | 10.6 |
| jdpahs; thfdq;fs; | 815.7 | 282.9 | 280.8 | 7.8 | -97.2 | 0.1 |
| kUj;Jt kw;Wk; kUe;jhf;fy; nghUl;fs; | 552.6 | 595.5 | 385.3 | 532.0 | 38.1 | 4.0 |
| tPl;Lg; ghtidg; nghUl;fs; | 206.6 | 174.2 | 100.4 | 179.8 | 79.1 | 1.3 |
| Glitfs; kw;Wk; Jizg; nghUl;fs; | 275.1 | 200.7 | 137.6 | 138.7 | 0.8 | 1.0 |
| Vidait | 679.6 | 594.0 | 372.5 | 569.0 | 52.7 | 4.2 |
| **இடைநிலைப் பொருட்கள்** | **11,369.6** | **9,076.5** | **5,692.4** | **7,942.4** | **39.5** | **59.2** |
| எரிபொருள் | 3,891.6 | 2,542.6 | 1,691.2 | 2,395.9 | 41.7 | 17.9 |
| புடவைகள் மற்றும் புடவைப் பொருட்கள் | 2,909.4 | 2,335.1 | 1,457.2 | 1,943.7 | 33.4 | 14.5 |
| வைரங்கள், அருங்கற்கள் மற்றும் உலோகங்கள் | 201.4 | 117.2 | 57.4 | 81.7 | 42.3 | 0.6 |
| இரசாயன உற்பத்திகள் | 831.5 | 831.5 | 518.3 | 732.6 | 41.3 | 5.5 |
| கோதுமை மற்றும் சோளம் | 346.4 | 384.4 | 229.3 | 265.9 | 15.9 | 2.0 |
| வளமாக்கி | 221.4 | 258.9 | 124.3 | 104.0 | -16.4 | 0.8 |
| அடிப்படை உலோகங்கள் | 562.8 | 460.3 | 246.6 | 499.2 | 102.4 | 3.7 |
| பிளாத்திக்குகள் மற்றும் அதன் பொருட்கள் | 612.9 | 540.2 | 323.9 | 518.6 | 60.1 | 3.9 |
| ஏனைய இடைநிலைப் பொருட்கள் | 1,792.3 | 1,606.3 | 1,044.2 | 1,400.9 | 34.2 | 10.4 |
| **முதலீட்டுப் பொருட்கள்** | **4,602.6** | **3,563.2** | **2,253.2** | **2,882.3** | **27.9** | **21.5** |
| பொறியும் கருவியும் | 2,489.7 | 2,176.1 | 1,324.6 | 1,822.5 | 37.6 | 13.6 |
| கட்டடப் பொருட்கள் | 1,508.7 | 1,035.6 | 671.4 | 803.9 | 19.7 | 6.0 |
| போக்குவரத்துக் கருவிகள் | 596.6 | 348.3 | 255.3 | 252.1 | -1.2 | 1.9 |
| ஏனைய முதலீட்டுப் பொருட்கள் | 7.6 | 3.2 | 2.0 | 3.7 | 90.6 | 0.03 |
| **வகைப்படுத்தப்படாத இறக்குமதிகள்** | **8.3** | **14.0** | **11.4** | **7.6** | **-33.8** | **0.1** |
| **மொத்த இறக்குமதிகள்** | **19,937.1** | **16,055.4** | **10,257.4** | **13,411.5** | **30.7** | **100.0** |

(m) jw;fhypfkhdJ

*%yq;fs;:* ,yq;if Rq;fk;
Njrpa ,uj;jpdfw;fs; kw;Wk; Mguz mjpfhurig
,yq;if ngw;nwhypa $l;Lj;jhgdk;
yq;fh I.x.rp.gp.vy;.rp
Vida ngw;Nwhypa Vw;Wkjpahsu;fs;
,yq;if kj;jpa tq;fp

வரைபடம் 5.3
சனவரி முதல் ஓகத்து வரையிலான இருதரப்பு வர்த்தக நிலுவைகள்




*மூலம்:* இலங்கை மத்திய வங்கி

ஏற்பட்ட வளர்ச்சி உத்வேகம் இலங்கையின் ஏற்றுமதிகள் எதிர்பார்க்கப்பட்டதிலும் பார்க்க விரைவாக மீட்சியுற துணைபுரிந்தது. உள்நாட்டு ரீதியாக, அரசாங்கத்தினால் வழங்கப்பட்ட ஆதரவு உலகளாவிய நோய்த்தொற்றிற்கு மத்தியிலும் கைத்தொழில்களினால் எதிர்நோக்கப்பட்ட பிரச்சனைகளைக் கட்டுப்படுத்த உதவியதுடன் உட்கட்டமைப்பு வசதிகளினதும் ஆதரவுப் பணிகளினதும் தொடர்ச்சியான வழங்கல் வியாபாரங்கள் இவ்வளர்ச்சியைப் பதிவுசெய்வதனை இயலுமைப்படுத்தின.

2020இல் அரசாங்கத்தினால் விதிக்கப்பட்ட இறக்குமதிக் கட்டுப்பாடுகளில் சில தொடர்வதற்கு மத்தியிலும் இறக்குமதிச் செலவினம் வளர்ச்சியுற்றது. உலகளாவிய விலைகளில், குறிப்பாக, எரிபொருள் விலைகளில் ஏற்பட்ட அதிகரிப்புடன் சேர்ந்து, நடவடிக்கையின் மீட்சி நுகர்வுப்பொருட்கள், முதலீட்டுப்பொருட்கள் மற்றும் இடைநிலைப்பொருட்கள் ஆகிய அனைத்து முக்கிய துறைகளின் பேரிலான இறக்குமதிச் செலவினத்தில் அதிகரிப்பொன்றை பதிவு செய்யப் பங்களித்தது.


### பணிகள் கணக்கு

தகவல் தொழில்நுட்பம்/வெளியிலிருந்து வியாபாரப் பணிகளைப் பெற்றுக் கொள்ளல் துறையில் ஆரோக்கியமானதொரு வளர்ச்சி காணப்பட்டபோதும் பணிகள் துறை சுற்றுலாத் துறையிலிருந்தான வரையறுக்கப்பட்ட வருவாய்களுடன் 2021இன் முதலரைப்பகுதியில் மெதுவடைந்து காணப்பட்டது. சுற்றுலாத் துறை, மட்டுப்படுத்தப்பட்ட சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கையினை எடுத்துக்காட்டியது. 2021 சனவரியிலிருந்து செத்தெம்பர் வரையிலான காலப்பகுதியில் சுற்றுலாப்பயணிகளினது வருகைகளின் எண்ணிக்கை 37,924 ஆக விளங்கிய வேளையில், இதே காலப்பகுதியில் சுற்றுலாவிலிருந்தான வருவாய்கள் ஐ.அ.டொலர் 51 மில்லியனுக்கு மட்டுப்படுத்தப்பட்டிருந்தன. உலகளாவிய நோய்த்தொற்றின் தாக்கத்திலிருந்து பாதுகாப்பாக மீள்வதற்கு மத்திய வங்கி, அரசாங்கம் மற்றும் சுற்றுலா அதிகாரசபைகள் என்பன சுற்றுலாத் துறைக்கு கணிசமான ஆதரவினை வழங்கின. அவை, படுகடன் சட்ட இசைவுத்தாமதம், தொழிற்படு மூலதனக் கடன்கள், உரிமக் கட்டணங்களின் தள்ளுபடி, "டிஜிட்டல் நாடோடித்தன்மை" போன்ற புதிய சுற்றுலா போக்குகளுக்கு வசதியளித்தல், இலக்கிடப்பட்ட சந்தைகளில் ஊக்குவிப்புப் பிரச்சாரம், சுற்றுலாப் பயணிகளுக்கான செல்லிடத் தொலைபேசிச் செயலிகளின் அபிவிருத்தி, வன் மற்றும் மென் சுற்றுலா உட்கட்டமைப்பினை முன்னேற்றுதல் போன்றவற்றை உள்ளடக்கியிருந்தன.

> *பணிகளிலுள்ள வர்த்தகத்தின் மிகை மிதமடைந்தமையானது, சுற்றுலாவிலிருந்தான வருவாய்கள் குறைவடைந்தமையினை முக்கியமாகப் பிரதிபலித்தது...*

2021இன் முதலரைப்பகுதியில் கணனி மற்றும் தகவல் பணிகள் துணைத்துறை, பணிகளிலிருந்தான வருவாய்களுக்கு முக்கியமாகப் பங்களித்து உலகளாவிய நோய்த்தொற்றின் காரணமாக கிடைக்கத்தக்க அதிகரித்த

வரைபடம் 5.4
சென்மதி நிலுவை




*மூலம்:* இலங்கை மத்திய வங்கி

அட்டவணை 5.2
நடைமுறை மற்றும் மூலதனக் கணக்கு

ஐ.அ.டொ. மில்லியன்

| விடயம் | 2019 (அ) | 2020 (ஆ) | 2020 காl (ஆ) | 2021 காl (ஆ) |
|---|---|---|---|---|
| **வர்த்தக நிலுவை** | **-7,997** | **-6,008** | **-3,262** | **-4,316** |
| ஏற்றுமதிகள் | 11,940 | 10,047 | 4,413 | 5,699 |
| *tsHr;rp (%)* | *0.4* | *-15.9* | *-26.4* | *29.1* |
| இறக்குமதிகள் | 19,937 | 16,055 | 7,675 | 10,015 |
| *tsHr;rp (%)* | *-10.3* | *-19.5* | *-20.0* | *30.5* |
| **பணிகள் (தேறிய)** | **2,849** | **819** | **729** | **549** |
| பெறுவனவுகள் | 7,474 | 3,035 | 2,036 | 1,372 |
| *இதில்;* | | | | |
| போக்குவரத்து, தேறிய | 630 | 114 | 145 | 185 |
| *tsHr;rp (%)* | *-16.0* | *-81.8* | *-59.2* | *27.4* |
| Rw;Wyh kPjhd tUtha;fs; | 3,607 | 682 | 682 | 23 |
| *tsHr;rp (%)* | *-17.7* | *-81.1* | *-64.1* | *-96.7* |
| jfty; njhopy;El;gk; kw;Wk; ntspapypUe;J tpahghug; gzpfisg; ngw;Wf; nfhs;sy; | 899 | 971 | 486 | 576 |
| *tsHr;rp (%)* | *6.1* | *8.0* | *6.4* | *18.4* |
| கொடுப்பனவுகள் | 4,625 | 2,216 | 1,307 | 823 |
| **முதலாந்தர வருமானம் (தேறிய)** | **-2,462** | **-2,101** | **-1,101** | **-957** |
| பெறுவனவுகள் | 252 | 198 | 111 | 69 |
| கொடுப்பனவுகள் | 2,713 | 2,300 | 1,212 | 1,026 |
| **இரண்டாந்தர வருமானம் (தேறிய)** | **5,766** | **6,207** | **2,580** | **3,187** |
| *இதில்;* | | | | |
| தொழிலாளர் பணவனுப்பல்கள் | 6,717 | 7,104 | 2,980 | 3,324 |
| *tsHr;rp (%)* | *-4.3* | *5.8* | *-8.9* | *11.6* |
| **நடைமுறைக்கணக்கு மீதி** | **-1,843** | **-1,083** | **-1,054** | **-1,536** |
| **மூலதனக்கணக்கு (தேறிய)** | **23** | **28** | **16** | **11** |
| **நடைமுறை மற்றும் மூலதனக் கணக்கு (தேறிய)** | **-1,820** | **-1,055** | **-1,037** | **-1,525** |

(அ) திருத்தப்பட்டது
(ஆ) jw;fhypfkhdJ

%yk;: ,yq;if kj;jpa tq;fp

வியாபார வாய்ப்புக்களைப் பிரதிபலித்தது. அதேவேளை, மென்பொருள் அபிவிருத்திப் பணிகளுக்குப் புறம்பாக வெளியிலிருந்து வியாபாரப் பணிகளைப் பெற்றுக்கொள்ளுதல் மற்றும் வெளியிலிருந்து அறிவினைப் பெற்றுக் கொள்ளுதல் என்பவற்றை உள்ளடக்கிய தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் தொழில்முயற்சிகளுக்கான தீர்வுகளின் விரைவான விரிவாக்கம் இத்துறையின் ஆரோக்கியமான வளர்ச்சிக்குத் தொடர்ந்தும் பங்களித்தன. துறைமுகப் பணிகள் துணைத் துறையில் கொள்கலன் கையாளல் மற்றும் சரக்குக் கையாளல் என்பன இவ்வாண்டுப்பகுதியில் தொடர்ச்சியாக வளர்ச்சியடைந்தமையுடன் 2021இன் முதலரைப்பகுதியில் போக்குவரத்துத் துறையிலிருந்தான தேறிய வருவாய்கள் படிப்படியாக அதிகரித்தமைக்கு உலகளாவிய ரீதியிலும் உள்நாட்டு ரீதியிலும் அதிகரித்த பொருளாதார நடவடிக்கையும் சரக்குக் கையாளலுக்கான உயர்ந்த உலகளாவிய தீர்வை வீதங்களும் காரணங்களாக அமைந்தன.

## முதலாந்தர வருமான மற்றும் இரண்டாந்தர வருமானக் கணக்குகள்

நேரடி முதலீட்டுத் தொழில்முயற்சிகளின் பங்குலாபக் கொடுப்பனவுகள், அதேபோன்று வெளிநாட்டுக் கடன்கள் மீது அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்பட்ட வட்டிக் கொடுப்பனவுகள் என்பன 2020இன் முதலரைப்பகுதியில் பதிவுசெய்யப்பட்ட மட்டங்களுக்கு கீழே காணப்பட்டமையின் காரணமாக முதலாந்தர வருமானக் கணக்கின் பற்றாக்குறை சிறிதளவில் மிதமடைந்தது. வெளிநாட்டவர்களின் வசமிருந்த இலங்கை ரூபாவில் குறித்துரைக்கப்பட்ட அரச பிணையங்களிலுள்ள மட்டுப்படுத்தப்பட்ட வெளிநின்ற பொறுப்புக்கள் மற்றும் முதிர்ச்சியடைந்த நாட்டிற்கான பன்னாட்டு முறிகளின் மீள்கொடுப்பனவு என்பனவற்றின் காரணமாக வட்டிக் கொடுப்பனவுகள் வீழ்ச்சியடைந்தன.

> *2021 யூனிலிருந்து தொழிலாளர் பணவனுப்பல்கள் குறிப்பிடத்தக்களவில் மெதுவடைந்தமைக்கு முறைசாரா மார்க்கங்கள் அதிகரித்தளவில் பயன்படுத்தப்பட்டமையே ஓரளவிற்குக் காரணமாகும்...*

2021 மேயில் முடிவடையும் ஐந்து மாத காலப்பகுதியில் தொழிலாளர் பணவனுப்பல்களின் வளர்ச்சி ஒப்பீட்டு ரீதியில் ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில் உயர்வாக இருந்தமையின் மூலம் இரண்டாந்தர வருமானக் கணக்கிற்கு ஆதரவளிக்கப்பட்டது. எனினும், 2021 யூனிலிருந்து தொழிலாளர் பணவனுப்பல்கள், ஆண்டிற்காண்டு அடிப்படையில் மிதமடைந்து உள்நாட்டு வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையில் காணப்பட்ட அழுத்தங்களின் காரணமாக பணத்தினை அனுப்புவதற்கு முறைசாரா மார்க்கங்களைப் பயன்படுத்தும் சாத்தியம் அதிகரித்தமையினைப் பிரதிபலித்தது. எனினும், உலகளாவிய நோய்த்தொற்று படிப்படியாக மறைந்து வருவதன் காரணமாக இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியகத்துடன் பதிவுசெய்து கொள்கின்ற புலம்பெயர் தொழிலாளர்களின் எண்ணிக்கையில் ஏற்பட்ட மாதாந்த அதிகரிப்பு முன்னேற்றத்திற்கான சமிக்ஞைகளை எடுத்துக்காட்டியது. மேலும், வங்கித்தொழில் முறைமைக்குள் அதிகளவான தொழிலாளர் பணவனுப்பல்களைக் கவரும் நோக்கில் அரசாங்கம் உரிமம்பெற்ற வங்கிகளில் தொழிலாளர் பணவனுப்பல்களை இலங்கை ரூபாவிற்கு மாற்றுவதற்குச் சந்தை வீதத்திற்கு மேலதிகமாக ஐ.அ.டொலரொன்றிற்கு மேலதிக ரூ. 2 இனைத் தொடர்ந்தும் செலுத்தியது.

மேலும், உயர்ந்தளவான உள்முக பணவனுப்பல்களைக் கவரும் விதத்தில் 2020இல் அறிமுகப்படுத்தப்பட்ட சிறப்பு வைப்புக் கணக்குத் திட்டத்தின் தொடர்ச்சி நாட்டிற்கு மேலதிக வெளிநாட்டுச் செலாவணி உட்பாய்ச்சல்களை வலுப்படுத்துமென எதிர்பார்க்கப்படுகின்றது. வெளிநாட்டுத் தொழில் வாய்ப்புக்களை ஊக்குவிப்பதற்காக ஆர்வலர்களுடனான தீவிரமான ஈடுபாடு அதிகளவான வெளிநாட்டுத் தொழில் வாய்ப்புக்களைப் பெற்றுத்தருமென எதிர்பார்க்கப்படுவதுடன் எதிர்வரும் காலப்பகுதியில் தொழிலாளர் பணவனுப்பல்கள் வலுப்படுத்தப்படும்.

### நிதியியல் கணக்கு

2021இன் முதலரைப்பகுதியில் நிதியியல் கணக்கிற்கு மட்டுப்படுத்தப்பட்ட அளவிலான உட்பாய்ச்சல்களே பதிவுசெய்யப்பட்டன. நேரடி முதலீட்டு தொழில்முயற்சிகளுக்கான வெளிநாட்டுக் கடன்கள் உள்ளிட்ட வெளிநாட்டு நேரடி முதலீடுகள், 2020 மற்றும் 2021இன் முதலரைப்பகுதிகள் இரண்டிலும் மிதமான தன்மையினையே கொண்டிருந்தன. அரச பிணையங்கள் சந்தை மற்றும் கொழும்புப் பங்குப் பரிவர்த்தனை இரண்டிலும் வெளிநாட்டு முதலீடுகளின் நியதிகளில் படிப்படியான வெளிப்பாய்ச்சல்கள் பதிவுசெய்யப்பட்டன. ஆண்டின் முதலரைப்பகுதியில் காணப்பட்ட பிரதான நிதியியல் உட்பாய்ச்சல் யாதெனில் 2021 ஏப்பிறலில் சீன அபிவிருத்தி வங்கியிலிருந்தான கூட்டுக் கடன் வசதியின் பெறுகையாகும். அதன் பின்னர் சென்மதி நிலுவையின் நிதியியல் கணக்கானது ஓகத்தில் பன்னாட்டு நாணய நிதியத்திலிருந்தான சிறப்பு எடுப்பனவு உரிமை ஒதுக்குகளின் பெறுகை, ஓகத்தில் வங்காளதேச வங்கியுடனான இருபுடை பரஸ்பர பரிமாற்றல் வசதி மற்றும் சீன அபிவிருத்தி வங்கியிலிருந்தான கூட்டுக் கடனின் மீதிப் பங்கு கிடைத்தமை என்பனவற்றின் காரணமாக பெருமளவிற்கு அதிகரித்துக் காணப்பட்டது. மேலும், மத்திய வங்கி 2021 மாச்சில் சீன மக்கள் வங்கியுடன் ஏறத்தாழ ஐ.அ.டொலர் 1.5 பில்லியனிற்குச் சமமான இருபுடை பரஸ்பர பரிமாற்றல் வசதியொன்றை மேற்கொண்டதுடன் இது துணைநிலை ஏற்பாடொன்றாக காணப்படுகின்றது. நிதியியல் கணக்கிலிருந்தான வெளிப்பாய்ச்சல்கள் உட்பாய்ச்சல்களுடன் ஒப்பிடுகையில் குறிப்பிடத்தக்களவிற்கு உயர்வாகக் காணப்பட்டமைக்கு நாட்டின் வெளிநாட்டுப் படுகடன் தீர்ப்பனவுக் கடப்பாடுகள் முக்கிய காரணமாயமைந்தன. நாட்டிற்கான பன்னாட்டு முறியொன்றின் முதிர்ச்சியுட்பட குறிப்பிடத்தக்களவு வெளிநாட்டு படுகடன் தீர்ப்பனவுக் கொடுப்பனவுகள் 2021இன் இதுவரையிலான காலப்பகுதியில் மேற்கொள்ளப்பட்டன. நிதியியல் கணக்கிற்கு எதிர்காலத்தில் எதிர்பார்க்கப்படும் உட்பாய்ச்சல்களின் நியதிகளில், கொழும்பு துறைமுக நகர் செயற்றிட்டத்தில் கணிசமான முன்னேற்றங்கள் எதிர்பார்க்கப்படுகின்றன. அரசாங்கம் வலுத் துறைக்கு வெளிநாட்டு நேரடி முதலீட்டினை ஏற்கனவே பெற்றிருப்பதுடன் நகர அபிவிருத்தி அதிகாரசபையின் கீழ் பயன்படுத்தப்படாதுள்ள சொத்துக்களை உரித்து மாற்றம் செய்வதற்கான முயற்சிகளும் இடம்பெற்று வருகின்றன. மேலும், 2021 ஒத்தோபர் தொடக்கப்பகுதியில் வெளியிடப்பட்ட அடுத்த ஆறு மாதங்களுக்கான மத்திய வங்கியின் வழிகாட்டலில் விபரிக்கப்பட்டவாறு, அடுத்த ஆறு மாத காலப்பகுதியை வெற்றிகரமாக வழிநடத்தும் பொருட்டும் அதேபோன்று நடுத்தர காலத்திலும் நீண்ட காலத்திலும் வெளிநாட்டுத் துறையின் உறுதித்தன்மையினை நிச்சயப்படுத்தும் விதத்திலும் அரசாங்கமும் மத்திய வங்கியும் ஒரு தொகை எண்ணிக்கையான குறுங்கால நிதியிடல் மூலங்களையும் அதேபோன்று படுகடனை உருவாக்காத அல்லது குறைந்த செலவிலான நீண்ட கால நிதியிடல்களையும் அடையாளம் கண்டிருக்கின்றன. மேலும், பொருளாதார மீளெழுச்சிக்கும் வறுமை ஒழிப்புக்குமான சனாதிபதி செயலணிக்குழுவின் கீழ் தாபிக்கப்பட்ட வெளிநாட்டுச் செலாவணி உட்பாய்ச்சல்களை வலுப்படுத்துவதற்கான செயலணிக்குழு என்பது தெரிவுசெய்யப்பட்ட பண்ட மற்றும் பணிகள் ஏற்றுமதித் துறைகள், தொழிலாளர்

அட்டவணை 5.3

நிதியியல் கணக்கு

ஐ.அ.டொ. மில்லியன்

| விடயம் | 2019 (அ) | 2020 (ஆ) | 2020 கா1 (ஆ) | 2021 கா1 (ஆ) |
|---|---|---|---|---|
| நிதியியல் கணக்கு (Njwpa) | **-2,460** | **-260** | **-693** | **-1,920** |
| தேறிய கையேற்புச் சொத்துக்கள் | **514** | **-1,825** | **-1,566** | **-1,535** |
| Neub KjyPL | 77 | 15 | 7 | 9 |
| Vida KjyPL | 100 | -136 | -58 | 37 |
| ehzak; kw;Wk; itg;Gfs; | -93 | 64 | 22 | -52 |
| tu;j;jf nfhLfld; kw;Wk; Kw;gzq;fs; | -4 | -224 | -137 | 100 |
| ngw Ntz;ba Vida fzf;Ffs; | 196 | 24 | 58 | -11 |
| xJf;Fr; nrhj;Jf;fs; | 337 | -1,704 | -1,515 | -1,581 |
| தேறிய கையேற்புப் பொறுப்புகள் | **2,974** | **-1,566** | **-873** | **385** |
| Neub KjyPL | 743 | 434 | 242 | 302 |
| KjyPl;Lr; nrhj;Jg;gl;bay; | 2,313 | -2,383 | -771 | -84 |
| %yjdk; | -4 | -217 | -103 | -116 |
| gLfld; gpizaq;fs; | 2,317 | -2,166 | -669 | 32 |
| Vida KjyPL | -82 | 383 | -344 | 167 |
| ehzaKk; itg;Gf;fSk; | 167 | -15 | -636 | -177 |
| fld;fs; | -245 | 327 | 723 | -12 |
| tu;j;jff; nfhLfld; kw;Wk; Kw;gzq;fs; | -28 | 185 | -248 | 238 |
| nfhLf;f Ntz;ba Vida fzf;Ffs; | 24 | -114 | -183 | 118 |
| தவறுகளும் விடுபாடுகளும; | **-640** | **795** | **344** | **-395** |
| திரண்ட நிலுவை | **377** | **-2,328** | **-760** | **-1,261** |
| மொத்த அலுவல்சார் ஒதுக்குகள; | **7,642** | **5,664** | | **4,060** |
| ,wf;Fkjp khjq;fs; | 4.6 | 4.2 | | 2.6 |
| மொத்த வெளிநாட்டுச் சொத்துக்கள் | **10,402** | **8,521** | | **6,824** |
| ,wf;Fkjp khjq;fs; | 6.3 | 6.4 | | 4.5 |

(அ) திருத்தப்பட்டது
(ஆ) jw;fhypfkhdJ

*%yk;:* ,yq;if kj;jpa tq;fp


பணவனுப்பல்கள், வெளிநாட்டு முதலீடுகள் போன்றன உள்ளடங்கலாக அடையாளங்காணப்பட்ட துறைகளில் ஆர்வலர்களுக்குத் தொடர்ந்தும் வசதியளித்தது. இவ்வாறு அடையாளங்காணப்பட்ட துறைகள் தொடர்பிலான வெளிநாட்டு உட்பாய்ச்சல்கள் எதிர்வரும் காலப்பகுதியில் அதிகரிக்கப்படுமென எதிர்பார்க்கப்படுகின்றது. மேலும், பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுச் சட்டத்தின் சட்டவாக்கமானது வெளிநாட்டுப் பங்குரிமை மற்றும் சொத்துப்பட்டியல் முதலீடுகளைக் கவருமென எதிர்பார்க்கப்படுகின்றது.

## 5.2 திரண்ட நிலுவை மற்றும் மொத்த அலுவல்சார் ஒதுக்குகள்

சென்மதி நிலுவையின் திரண்ட நிலுவை, 2021 செத்தெம்பருடன் முடிவடைந்த ஒன்பது மாத காலப்பகுதியில் குறிப்பிடத்தக்க பற்றாக்குறையினைப் பதிவுசெய்தது. நடைமுறைக் கணக்குப் பற்றாக்குறை விரிவடைகின்றமை, நிதியியல் கணக்கிற்கான மட்டுப்படுத்தப்பட்ட உட்பாய்ச்சல்கள், மொத்த அலுவல்சார் ஒதுக்குகளின் எடுப்பனவின் மூலம் பகுதியளவிற்கு ஈடுசெய்யப்பட்ட பாரிய வெளிநாட்டுப் படுகடன் தீர்ப்பனவுக் கொடுப்பனவுகள் என்பன 2021 செத்தெம்பர் இறுதியில் மொத்த அலுவல்சார் ஒதுக்குகளை ஐ.அ.டொலர் 2.7 பில்லியனுக்கு மிதப்படுத்தக் காரணங்களாயின. இது 1.7 மாத இறக்குமதிகளுக்குச் சமமானதாகும். இந்த மொத்த அலுவல்சார் ஒதுக்குகளின் மட்டமானது சீன மக்கள் வங்கிக்கும் இலங்கை மத்திய வங்கிக்கும் இடையிலான ஏறத்தாழ ஐ.அ.டொலர் 1.5 பில்லியனிற்கு நிகரான 3 ஆண்டுகால இருபுடை நாணயப் பரஸ்பர வசதியினை உள்ளடக்கவில்லை. அதேவேளை, ஏற்றுமதிப் பெறுகைகளை மாற்றியமை மற்றும் தொழிலாளர் பணவனுப்பல்கள் என்பனவற்றின் பேரில் ஈர்த்துக் கொள்ளப்பட்ட வெளிநாட்டுச் செலாவணி படுகடனை

**வரைபடம் 5.5**

**மொத்த அலுவல்சார் ஒதுக்குகளும் இறக்குமதி மாதங்களும்**




*மூலம்* : இலங்கை மத்திய வங்கி

உருவாக்காத மூலங்களினூடாக மொத்த அலுவல்சார் ஒதுக்குகளைப் பயன்படுத்துவதற்கு மத்திய வங்கியை ஓரளவிற்கு இயலுமைப்படுத்தியது.

மொத்த அலுவல்சார் ஒதுக்குகளையும் வங்கித்தொழில் துறையின் வெளிநாட்டுச் சொத்துக்களையும் உள்ளடக்கிய மொத்தப் பன்னாட்டு ஒதுக்குகள் 2021 செத்தெம்பர் இறுதியில் ஐ.அ.டொலர் 6.1 பில்லியனாக விளங்கி 3.8 மாத இறக்குமதிகளுக்குப் போதுமானவையாகக் காணப்பட்டன.

## 5.3 பன்னாட்டு முதலீட்டு நிலைமை

2021 யூன் இறுதியில் பன்னாட்டு முதலீட்டு நிலைமை தேறிய பொறுப்பு நிலைமையில் அதிகரிப்பொன்றினைப் பதிவுசெய்தது. வதியாதோருடனான இலங்கையின் வெளிநாட்டுச் சொத்து நிலைமை ஆண்டின் ஆரம்பத்துடன் ஒப்பிடுகையில் 2021 யூன் இறுதியில் வீழ்ச்சியடைந்தது. வெளிநாட்டுச் சொத்துக்களின் இருப்பு நிலைமை முக்கியமாக குறைவடைந்தமைக்கு மொத்த அலுவல்சார் ஒதுக்குகளில் ஏற்பட்ட வீழ்ச்சியே காரணமாகும். 2021 யூன் இறுதியில் வதிவற்றோருக்கான இலங்கையின் மொத்தப் பொறுப்புக்களின் நிலைமை ஆண்டின் தொடக்கத்துடன் ஒப்பிடுகையில் அதிகரித்தமைக்கு இலங்கையில் வெளிநின்ற நாட்டிற்கான பன்னாட்டு முறிகளின் சந்தை விலைகளின் அதிகரிப்பே முக்கிய காரணமாகும். இவ்வாண்டுப்பகுதியில் வெளிநாட்டு நேரடி முதலீட்டுக் கம்பனிகளின் நேரடி முதலீட்டுப் பொறுப்பு நிலைமையும் சிறிதளவால் அதிகரித்தது. வைப்புக்களை ஏற்கின்ற கூட்டுத்தாபனங்களின் வெளிநாட்டுக் கடன் பொறுப்புக்கள் குறைவடைந்த வேளையில் அரசாங்கத்தின் வெளிநாட்டுக் கடன் பொறுப்புக்களும் தனியார் துறையினாலும் அரசிற்குச் சொந்தமான தொழில்முயற்சிகளாலும் பெறப்பட்ட வெளிநின்ற வர்த்தகக் கொடுகடன்களும் அதிகரித்தன. அதேவேளை, மத்திய வங்கியின் வெளிநின்ற பொறுப்புக்கள் வீழ்ச்சியடைந்தமைக்கு 2021 பெப்புருவரியில் இந்திய ஒதுக்கு வங்கியுடனான பரஸ்பர பரிமாற்றல் வசதி தீர்ப்பனவு செய்யப்பட்டமையே முக்கிய காரணமாகும்.

## 5.4 வெளிநாட்டுப் படுகடன் நிலைமை

இலங்கையின் மொத்த வெளிநின்ற வெளிநாட்டுப் படுகடன் நிலைமை 2020 இறுதியுடன் ஒப்பிடுகையில் 2021இன் முதலரைப்பகுதியில் அதிகரித்தமைக்கு இலங்கையின் வெளிநின்ற நாட்டிற்கான பன்னாட்டு முறிகளின் சந்தை விலைகளில் ஏற்பட்ட அதிகரிப்பே முக்கிய காரணமாகும். ஆண்டின் முதலரைப்பகுதியில் அரசாங்கத்தின் வெளிநின்ற வெளிநாட்டுக் கடன்களும் சிறிதளவில் அதிகரித்தன. மத்திய வங்கியினால் முகாமைப்படுத்தப்பட்ட ஆசிய தீர்ப்பனவு

அட்டவணை 5.4

வெளிநின்ற வெளிநாட்டுப் படுகடன் நிலைமை

ஐ.அ.டொ. மில்லியன்

| விடயம் | 2019 (அ) | 2020 (ஆ) | 2021 கா1 (ஆ) |
|---|---|---|---|
| **சந்தை விலையை அடிப்படையாகக் கொண்ட மொத்த வெளிநாட்டுப் படுகடன் நிலைமை** | **54,811** | **49,212** | **50,438** |
| பொது அரசாங்கம் | 34,249 | 28,187 | 29,670 |
| மத்திய வங்கி | 2,318 | 2,690 | 2,342 |
| வைப்புகளை ஏற்கும் கூட்டுத்தாபனங்கள் | 6,997 | 6,657 | 6,511 |
| ஏனைய துறைகள் | 6,469 | 6,676 | 6,768 |
| நேரடி முதலீடு: கம்பனிகளுக்கிடையிலான கடன்வழங்கல் | 4,778 | 5,001 | 5,148 |
| | | | |
| **ஞாபகார்த்த விடயங்கள்** | | | |
| முகப் பெறுமதியை அடிப்படையாகக் கொண்ட பொது அரசாங்கத்தின் மொத்த வெளிநாட்டுப் படுகடன் நிலைமை | 34,084 | 32,452 | 32,928 |

(அ) திருத்தப்பட்டது
(ஆ) jw;fhypfkhdJ

%yk;: ,yq;if kj;jpa tq;fp


ஒன்றியத்தின் பொறுப்புக்களும் அதிகரித்தன. நாணயம் மற்றும் வைப்புக்களில் அதிகரிப்புக் காணப்பட்ட போதும், வங்கித்தொழில் துறையின் வெளிநின்ற வெளிநாட்டுப் படுகடன் வீழ்ச்சியடைந்தமைக்கு வெளிநின்ற குறுங்காலக் கடன்களில் ஏற்பட்ட கணிசமான குறைப்பே காரணமாகும். அரசிற்குச் சொந்தமான தொழில்முயற்சிகளினால் பெறப்பட்ட வர்த்தகக் கொடுகடன்கள் மற்றும் முற்பணங்களில் ஏற்பட்ட அதிகரிப்புடன் தனியார் துறையினதும் அரசிற்குச் சொந்தமான தொழில்முயற்சிகளினதும் வெளிநின்ற வெளிநாட்டுப் படுகடன், அதிகரித்த போதும், தனியார் துறையினதும் அரசிற்குச் சொந்தமான தொழில்முயற்சிகளினதும் வெளிநின்ற வெளிநாட்டுப் படுகடன் சிறிதளவிற்கு வீழ்ச்சியடைந்தது. எனினும், நேரடி முதலீட்டு தொழில்முயற்சியின் கம்பனிகளுக்கிடையிலான கடன்பாடுகள் இவ்வாண்டின் முதலரைப்பகுதியில் அதிகரிப்பொன்றினைப் பதிவுசெய்தன. 2020 மற்றும் 2021இல் முதிர்ச்சியடைந்த நாட்டிற்கான பன்னாட்டு முறிகளின் மீள்கொடுப்பனவுடன் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் பங்காக நாட்டிற்கான பன்னாட்டு முறிகளின் வெளிநின்ற நிலுவை குறிப்பிடத்தக்களவு வீழ்ச்சியடைந்துள்ளது. அரசாங்கத்தின் நிதியிடல் உபாயத்திற்கேற்ப மொத்த உள்நாட்டு உற்பத்தியின் பங்காக வெளிநின்ற நாட்டிற்கான பன்னாட்டு முறிகளில் மேலுமொரு குறைப்பு எதிர்வரும் காலப்பகுதியில் எதிர்பார்க்கப்படுகின்றது.

## 5.5 செலாவணி வீத அசைவுகள்

உள்நாட்டு வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையில் காணப்பட்ட உயர் அழுத்தம் காரணமாக 2021 ஏப்ரலுடன் முடிவடைந்த நான்கு மாத காலப்பகுதியில் கணிசமானளவிற்கு தேய்வடைந்த இலங்கை ரூபா அதன்

வரைபடம் 5.6

செலாவணி வீத அசைவுகள்




*மூலம்*: இலங்கை மத்திய வங்கி

பின்னர் இடையிடையே காணப்பட்ட சில தளம்பல்களுக்கு மத்தியிலும் ஒப்பீட்டு ரீதியில் உறுதியான தன்மையினைக் காட்டியது. உள்நாட்டு வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையில் மத்திய வங்கியின் தலையீடு மற்றும் தார்மீகத் தூண்டுதல் போன்றவை ரூபாவின் மதிப்பை உறுதிப்படுத்த உதவியது. இதற்கமைய, வங்கிகளுக்கிடையிலான சந்தையில் சராசரி நிறையேற்றப்பட்ட உடன் செலாவணி வீதம் ஐ.அ.டொலரொன்றிற்கு ஏறத்தாழ ரூ.200இல் பரந்தளவிற்கு உறுதியாகக் காணப்பட்டது. இலங்கை ரூபா, 2021 செத்தெம்பர் இறுதியில் ஐக்கிய அமெரிக்க டொலருக்கெதிராக 6.8 சதவீதத்தினால் தேய்வடைந்தது. உள்நாட்டு வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையில் அவதானிக்கப்பட்ட அழுத்தங்கள் ஏற்றுமதிப் பெறுகைகளின் போதுமானதற்ற மாற்றல் என்பது பகுதியளவில் வகைகூறியிருக்கலாம். ஏற்றுமதிப் பெறுகைகளின் மாற்றல் தேவைப்பாட்டின் மீதான ஒழுங்குமுறைப்படுத்தலின் தொடர்ச்சியுடன் உள்நாட்டு சந்தையில் வெளிநாட்டுச் செலாவணித் திரவத்தன்மை நிலைமை எதிர்வரும் காலப்பகுதியில் ஓரளவு மேம்படுமென எதிர்பார்க்கப்படுகின்றது. மத்திய வங்கியின் ஆறு மாத கால வழிகாட்டலின் அறிவிப்பின் பின்னர் செலாவணி

அட்டவணை 5.5

செலாவணி வீத அசைவுகள;

| நாணயம் | கால முடிவிலுள்ளவாறான வீதங்கள் - வெளிநாட்டு நாணய அலகு ஒன்றிற்கான ரூபா | | மாற்றம்; % |
|---|---|---|---|
| | 2020 | செத் - 2021 | |
| யூரோ | 229.42 | 232.10 | -1.16 |
| இந்தியா ரூபா | 2.55 | 2.69 | -5.32 |
| யப்பானிய யென் | 1.81 | 1.79 | 1.10 |
| ஸ்டேர்லிங் பவுன் | 254.35 | 268.96 | -5.43 |
| ஐ.அ.டொலர் | 186.41 | 199.99 | -6.79 |
| சி.எ.உ | 268.48 | 281.75 | -4.71 |
| தாக்கமுள்ள செலாவணி வீதச் சுட்டெண்கள் (2017=100) | | | |
| பெ.தா.செ.வீ 24 - நாணயங்கள் | 83.12 | 78.76 | -5.25 |
| c.jh.nr.tP 24 - நாணயங்கள் | 88.37 | 83.99 | -4.95 |

%yk;: ,yq;if kj;jpa tq;fp

> *உண்மைத் தாக்கமுள்ள செலாவணி வீதச் சுட்டெண்களினால் பிரதிபலிக்கப்பட்டவாறு இலங்கை ரூபா தொடர்ந்தும் குறைத்து மதிப்பிடப்பட்டது...*

வீதத்தில் காணப்பட்ட முறையற்ற அழுத்தங்கள் பெருமளவு தணிந்துள்ளன. குறுக்கு நாணயச் செலாவணி வீத அசைவுகளைப் பிரதிபலிக்கின்ற விதத்தில் செத்தெம்பர் இறுதியில் இலங்கை ரூபாவானது ஸ்டேர்லிங் பவுண், யூரோ மற்றும் இந்திய ரூபாவிற்கெதிராக தேய்வடைந்த வேளையில் யப்பானிய யென்னுக்கெதிராக உயர்வடைந்தது.

கூடை நாணயங்களுக்கெதிராக இலங்கை ரூபாவின் அசைவுகளை மதிப்பிடுகின்ற பெயரளவுத் தாக்கமுள்ள செலாவணி வீத மற்றும் உண்மைத் தாக்கமுள்ள செலாவணி வீதச் சுட்டெண்கள் 2021 செத்தெம்பரில் முடிவடையும் ஒன்பது மாத காலப்பகுதியில் வீழ்ச்சியடைந்தன. ஒட்டுமொத்தமாக, உண்மைத் தாக்கமுள்ள செலாவணி வீதச் சுட்டெண்கள் அடிப்படை ஆண்டு மட்டத்திற்கு (2017 = 100) கீழேயே தொடர்ந்தும் காணப்பட்டு, செலாவணி வீதம் நாட்டின் வர்த்தக போட்டித்தன்மைக்குத் தொடர்ந்தும் ஆதரவாக விளங்கும் என்பதனை எடுத்துக்காட்டின.

# 6

# இறைக்கொள்கையும் அரச நிதியும்

அரசிறைத் திரட்டல் மிதமடைந்து அரசாங்கச் செலவினம் அதிகரித்தமையானது வரவுசெலவுத்திட்டப் பற்றாக்குறை விரிவடைவதற்கும் மத்திய அரசாங்கப் படுகடன் அதிகரிப்பதற்கும் வழிவகுத்திருந்ததுடன் கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்று 2021 யூலையில் முடிவடைந்த ஏழு மாத காலப்பகுதியில் இறைத்துறையின் செயலாற்றத்தின் மீது தொடர்ந்தும் அழுத்தங்களை ஏற்படுத்தியிருந்தது. தனிநபர்கள் மற்றும் பொருளாதாரம் என்பவற்றின் மீதான உலகளாவிய நோய்த்தொற்றின் தாக்கத்தினை வலுவிழக்கச் செய்வதற்கான இறைக்கொள்கையின் ஆதரவு இறைத் தொழிற்பாடுகளினுள் அழுத்தங்களைச் சேர்த்திருந்தது. அரசிறையானது முன்னைய ஆண்டின் உலகளாவிய நோய்த்தொற்றின் முதலாவது மற்றும் இரண்டாவது அலை காலப்பகுதியில் ஏற்பட்ட ஒப்பீட்டு ரீதியிலான பாரிய பொருளாதார இடையூறுகளுடன் ஒப்பிடுகையில் அதிகரித்த பொருளாதார நடவடிக்கைகளால் துணையளிக்கப்பட்டு 2021 சனவரி தொடக்கம் யூலை வரையான காலப்பகுதியில் ஆண்டிற்காண்டு அடிப்படையில் பெயரளவிலான அதிகரிப்பொன்றினைப் பதிவுசெய்திருந்தது. எனினும், அரசாங்கச் செலவினத்தின் அதிகரிப்பானது அரசிறையின் பெயரளவிலான அதிகரிப்பினை எதிரீடு செய்திருந்ததுடன் அரசிறை சேகரிப்பின் நிலையான மேம்பாடொன்றிற்கான தேவைப்பாட்டினை பிரதிபலித்திருந்தது. 2021 யூலையில் முடிவடைந்த ஏழு மாத காலப்பகுதியில் அரசாங்க செலவினத்தின் அதிகரிப்பிற்கு மூலதனச் செலவினம் மற்றும் முக்கியமாக கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்று விடயத்தின் மீதான மீண்டெழும் செலவினத்தினால் தூண்டப்பட்ட நேரடிச் செலவினத்தில் ஏற்பட்ட அதிகரிப்புடன் இணைந்ததான வட்டிக் கொடுப்பனவுகள் மற்றும் சம்பளங்களும் கூலிகளும் என்பவற்றின் மீதான செலவினங்களின் அதிகரிப்புக்கள் காரணங்களாக அமைந்திருந்தன. அதன்படி, முக்கிய இறை மீதிகள் 2021 சனவரி தொடக்கம் யூலை வரையான காலப்பகுதியில் 2020இன் தொடர்பான காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் மோசமடைந்திருந்ததுடன் வெளிநின்ற மத்திய அரசாங்க படுகடனில் குறிப்பிடத்தக்கதொரு அதிகரிப்பிற்கும் வழிவகுத்திருந்தது. வரவுசெலவுத்திட்டப் பற்றாக்குறைக்கான நிதியீட்டமானது உள்நாட்டு மூலங்களில் முழுமையாக தங்கியிருந்ததுடன் உலகளாவிய நிதியியல் சந்தைகளுக்கான மட்டுப்படுத்தப்பட்ட அணுகலினையும் நடுத்தர காலத்தில் வெளிநாட்டு நிதியீட்டத்தின் மீதான தங்கியிருத்தலை குறைப்பதற்கான அரசாங்கத்தின் நிதியியல் உபாயத்தினையும் எடுத்துக்காட்டியிருந்தது. வெளிநாட்டு நிதியீட்டமானது 2020இன் தொடர்புடைய காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் ஆய்விற்குட்பட்ட காலப்பகுதியில் தேறிய மீள்செலுத்தலொன்றை பதிவுசெய்திருந்ததுடன் 2021 யூலை இறுதியளவில் வெளிநாட்டுப் படுகடனின் சார்பளவிலான பங்கில் குறைவொன்றினை ஏற்படுத்துவதற்கும் வழிவகுத்திருந்தது. அதிகரித்த செலவினங்களின் தேவைப்பாட்டை நிறைவேற்றிக்கொள்ளும் பொருட்டு மத்திய வங்கியானது அரசாங்கத்திற்கு அதிவிசேட நிதியளித்தல் ஆதரவினை வழங்கியிருந்ததுடன் உலகளாவிய நோய்த்தொற்றின் ஆரம்பத்திலிருந்து இதுவரையான காலப்பகுதியில் கறைபடியாத படுகடன் பணிக் கொடுப்பனவுகளின் பதிவினையும் பேணியிருந்தது.

## 6.1 இறைக்கொள்கையின் போக்கும் வழிமுறைகளும்

மந்தமான பொருளாதாரத்தை புத்துயிர் பெறச் செய்வதற்காக 2019இன் பிந்திய காலப்பகுதியிலிருந்து ஆரம்பிக்கப்பட்ட குறைவான வரிக் கட்டமைப்பினூடான திரவத்தன்மை வழங்கல்களுக்கு மேலதிகமாக உலகளாவிய நோய்த்தொற்றின் ஆரம்பத்திலிருந்து மேற்கொள்ளப்பட்ட செலவீட்டு வழிமுறைகள் மற்றும் விட்டுக்கொடுக்கப்பட்ட அரசிறை வழிமுறைகள் போன்ற வடிவங்களின் ஊடாக மேற்கொள்ளப்பட்ட உடனடி இறை உந்துதல்கள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டிருந்தன. அரசாங்கம் உலகளாவிய நோய்த்தொற்றுப் பரவலைக் கட்டுப்பாட்டிற்குள் வைத்திருப்பதற்கும் பிரசைகளின் பாதுகாப்பினை உறுதிசெய்வதற்கும் காத்திரமான வழிமுறைகளை எடுத்திருந்த அதேவேளை ஏற்கனவே காணப்படுகின்ற சமூகப் பாதுகாப்பு வலையமைப்புகள், தனிமைப்படுத்தல் வழிமுறைகள் மற்றும் துரிதப்படுத்தப்பட்ட நாடளாவிய தடுப்பூசி நிகழ்ச்சித்திட்டம் என்பவற்றிற்கும் ஆதரவளித்திருந்தது. 2017ஆம் ஆண்டின் 24ஆம் இலக்க உண்ணாட்டரசிறைச் சட்டம் மற்றும் 2002ஆம் ஆண்டின் 14ஆம் இலக்க பெறுமதிச்சேர் வரிச் சட்டம் என்பன 2019இன் பிந்திய பகுதியிலிருந்து நடைமுறைப்படுத்தப்பட்ட வரித்திருத்தங்களை உள்ளடக்கி 2021இல் திருத்தம் செய்யப்பட்டன. உலகளாவிய நோய்த் தொற்றினால் பாதிக்கப்பட்ட மக்கள் மற்றும் வியாபாரங்கள் என்பவற்றிற்கு வெவ்வேறுபட்ட வரிச்சலுகைகள், நியதிச்சட்ட விகிதங்களின் குறைப்பு, சில வருமான வரி விலக்களிப்பு என்பன உள்ளடங்கலாக பல்வேறுபட்ட வரி விலக்களிப்புகளையும் வரி விடுமுறைகளையும் வழங்குவதற்கான வழிமுறைகளும் எடுக்கப்பட்டிருந்தன. 2021 வரவுசெலவுத்திட்டத்தில் அறிவிக்கப்பட்ட அனைத்தையும் உள்ளடக்கிய வரிக் கொள்கைப் பொதிக்கு ஏற்றவகையில் விசேட பொருட்கள் மற்றும் சேவைகள் வரியினைக் கொண்ட கூட்டு வரியொன்றினை அறிமுகப்படுத்துவதற்கான வழிமுறைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. அத்துடன், 2021ஆம் ஆண்டின் 18ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் வரி பொதுமன்னிப்புக்கான சட்டவாக்கம் ஒன்றினை இயற்றுவதற்கும் வழிமுறைகள் எடுக்கப்பட்டுள்ளன. ஏனையவற்றிற்கு மத்தியில் தம்மால் வெளிப்படுத்தப்படாத வரி விதிக்கத்தக்க வழங்குகள், வருமானம் மற்றும் சொத்துக்களை 2020 மாச்சு 31 அல்லது அதற்கு முன்னர் முடிவுற்ற ஏதேனும் வரிவிதிக்கத்தக்க காலப்பகுதிக்கு அல்லது 2020 மாச்சு 31 அல்லது அதற்கு முன்னர் முடிவுற்ற ஏதேனும் வரி மதிப்பீட்டு ஆண்டிற்கான வருமானத் திரட்டில் தன்னிச்சையாக அறிக்கையிடுவதற்கு ஆட்களுக்கு இது ஏற்பாடுசெய்கின்றது. வரியுடன் தொடர்புபட்ட அனைத்து மூல ஆவணங்களிலும் வரி அடையாள இலக்கத்தினைக் கட்டாயமாகப் பயன்படுத்துதல் மற்றும் அனைத்து வரையறுக்கப்பட்ட பொறுப்புக் கம்பனிகளுக்கும் இலத்திரனியல் ரீதியாக பூர்த்தி செய்வதனைக் கட்டாயமாக்கல் போன்ற பல்வேறுபட்ட மாற்றங்கள் வரி நிர்வாகச் செயன்முறைக்குள் மேற்கொள்ளப்பட்டன. மேலும், அரசாங்க முதலீட்டினை முதனிலைப்படுத்தி அரச துறையின் உற்பத்தித்திறனை மேம்படுத்துகின்ற அதேவேளை அரசாங்க செலவுகளைக் கட்டுப்படுத்துவதன் ஊடாக செலவினத்தை சீரமைக்கும் வழிமுறைகளும் தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டன. டிஜிட்டல்மயமாக்கல் மற்றும் நவீன நடைமுறைகள் அதேபோன்று உலகளாவிய விலை அசைவுகளுக்கு ஏற்ப உள்நாட்டுப் பெற்றோலிய உற்பத்திகள் மற்றும் திரவப் பெற்றோலிய வாயு என்பவற்றின் உள்நாட்டு விலைகளில் மேற்கொள்ளப்பட்ட திருத்தங்கள் உள்ளடங்கலாக அரசிற்குச் சொந்தமான தொழில் முயற்சிகளின் செயலாற்றத்தினை மேம்படுத்துவதற்கான முயற்சிகளின் ஊடாக அரச சேவை வழங்கலில் எதிர்பார்க்கப்படும் மேம்படுத்தல்கள் எதிர்வரும் காலங்களில் அரசாங்கத்தின் வரவுசெலவுத்திட்டம் மீதான நிதியியல் சுமையினை தளர்த்துவதற்கு உதவும். மேலும், முறைமைசார்ந்த விதமொன்றில் அரசுக்குச் சொந்தமான தொழில்முயற்சிகளின் நிதியியல் மற்றும் தொழிற்பாட்டு செயலாற்றத்தினைக் கண்காணிப்பதற்கு முகாமைத்துவத் தகவல் முறைமையினை நிறுவுதல் மற்றும் முதலீடுகள் மீதான அமைச்சரவை நியமித்த முகாமைத்துவக் குழுவினை நிறுவுதல் என்பனவும் அரசுக்குச் சொந்தமான தொழில்முயற்சிகளின் செயலாற்றத்தில் மேம்பாடொன்றினை வசதிப்படுத்துமென எதிர்பார்க்கப்படுகின்றது. அதேவேளை,

> *“வரையறுக்கப்பட்ட இறை இடைவெளிக்கு மத்தியில் உலகளாவிய நோய்த்தொற்றினால் தோற்றுவிக்கப்பட்ட பொருளாதார மற்றும் சமூக பேரழிவின் முன்னிலையில் வியாபாரங்கள் இடர்பாடின்றி காணப்படுவதற்கு உதவுவதற்கும் வீட்டுத்துறையினருக்கு ஆதரவளிப்பதற்கும் தொழில்நிலையினைப் பேணுவதற்கும் பொருளாதாரத்தினை மீட்டுக்கொள்வதற்கும் வரிகளையும் ஒழுங்குவிதிகளையும் குறைப்பதற்கான அரசாங்கத்தின் கொள்கைசார்ந்த வழிமுறைகள் நடைமுறைப்படுத்தப்பட்டன...*

மொத்த உள்நாட்டு உற்பத்திக்கான படுகடனின் இலக்கினை 2020இலிருந்து 2030இற்கு மாற்றுவதற்கும் அரசாங்கத்தினால் வழங்கப்படும் உத்தரவாதங்கள் மீதான வரையறையினை 10 சதவீதத்திலிருந்து 15 சதவீதத்திற்கு அதிகரிப்பதற்கும் 2003ஆம் ஆண்டின் 3ஆம் இலக்க நிதி முகாமைத்துவ (பொறுப்பு) சட்டத்திற்கு 2021 யூனில் திருத்தங்கள் அறிமுகப்படுத்தப்பட்டன. இறைத் தொழிற்பாடுகள்

மீதான உலகளாவிய நோய்த்தொற்றின் அதிகரித்த அழுத்தங்களை இனங்கண்டு, 2021ஆம் ஆண்டிற்கென ஏற்கனவே அனுமதிக்கப்பட்ட ரூ. 2,997.0 பில்லியன் கொண்ட கடன்பெறுதல் வரையறையினுள் கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்றுடன் தொடர்புடைய எதிர்பாராச் செலவினத்தை நிறைவேற்றிக் கொள்வதற்கு ரூ.200.0 பில்லியன் கொண்ட குறைநிரப்பு வரவுசெலவுத் திட்டத்திற்கு பாராளுமன்றம் ஒப்புதலளித்திருந்தது. அதேவேளை, குறிப்பாக தற்போது இடம்பெறுகின்ற உலகளாவிய நோய்த்தொற்று வழிமுறைகளின் காரணமாக உயர்வடைகின்ற செலவினம் மற்றும் அரசாங்க நிறுவனங்களின் வருவாய் இழப்பினைத் தொடர்ந்து மானியங்கள், மாற்றல்கள் மற்றும் ஏனைய செலவுகளுக்கான மேலதிக ஏற்பாடுகள் என்பவற்றை பரிசீலனையிற்கொண்டு 2021 செத்தெம்பரில் 2021இற்கு ரூ.3,397.0 பில்லியனுக்கு மொத்த கடன்பெறுதல் வரையறையினை ரூ.400.0 பில்லியனால் அதிகரிப்பதற்கு அரசாங்கத்தினால் ஒதுக்கீட்டு (திருத்தம்) சட்டமூலம் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. மேலும், 2021 யூனில் திறைசேரி உண்டியல்கள் மீதான வரையறைகளை ரூ.2,000.0 பில்லியன் கொண்ட முன்னைய வரையறைகளிலிருந்து ரூ.3,000.0 பில்லியனுக்கு அதிகரிப்பதற்கான தீர்மானத்திற்கு பாராளுமன்றம் ஒப்புதலளித்திருந்தது.

உலகளாவிய நோய்த்தொற்றின் மூலம் ஏற்பட்ட அதிகரித்த நிதியளித்தல் தேவைப்பாடுகளுக்கு மத்தியில் பன்னாட்டு கடன் தரப்படுத்தல் முகவராண்மைகள் மூலம் நாட்டுக்கான தரப்படுத்தலின் தரம் குறைக்கப்பட்டமையானது 2021 காலப்பகுதியில் வெளிநாட்டு நிதியளித்தலை சவால்மிக்கதாக்கியிருந்தது. 2021 யூலையில் "தரம் குறைப்பதற்கான மீளாய்வு" என இலங்கையின் தரப்படுத்தலைத் தரப்படுத்தியிருந்த மூடி இன்வெஸ்டர் சேர்விஸ் நிறுவனமானது 2021 ஒத்தோபரில் "Caa1" இலிருந்து "Caa2"இற்கு குறைத்திருந்தது. 2020 திசெம்பர் தொடக்கம் "CCC+" ஆக இலங்கையின் தரப்படுத்தலைப் பேணியிருந்த எஸ் என்ட் பீ குளோபல் ரேடிங் 2021 ஓகத்தில் தோற்றப்பாட்டினை நிலையான மட்டத்திலிருந்து எதிர்மறைக்கு மாற்றியிருந்தது. எனினும், பிட்ச் ரேடிங் 2021 ஒத்தோபர் இறுதி வரை ஆண்டு காலப்பகுதியில் அதன் கடன் தரப்படுத்தலை "CCC" ஆகப் பேணியிருந்தது. தரப்படுத்தல் முகவராண்மை நிறுவனங்களின் பாதகமான ஊகங்களுக்கு மத்தியில் மத்திய வங்கியின் உதவியுடன் இணைந்து அரசாங்கம் 2021 யூலையில் முதிர்ச்சியடைந்த ஐ.அ.டொலர் 1.0 பில்லியன் கொண்ட நாட்டிற்கான பன்னாட்டு முறி அடங்கலாக அனைத்து அதன் படுகடன் தீர்ப்பனவுகளையும் நிறைவேற்றியிருந்தது. இதனூடாக உரிய காலத்தில் படுகடனைத் தீர்ப்பனவுசெய்கின்ற அரசாங்கத்தின் கறைபடியாத பதிவினைப் பேணுகின்றது. ஒருங்கிணைக்கப்பட்ட முயற்சிகளின் ஊடாக எதிர்காலத்தில் நாட்டிற்கான தரப்படுத்தலை மேம்படுத்துவதற்காக அரசாங்கம் மற்றும் மத்திய வங்கி என்பன அவசியமான ஏற்பாடுகளை மேற்கொள்கின்ற செயன்முறையில் ஈடுபட்டு வருகின்றன.

## 6.2 அரசாங்க வரவுசெலவுத்திட்ட தொழிற்பாடுகள்[1]


### முக்கிய இறை மீதிகள்

இறைத்துறை மீதான உலகளாவிய நோய்த்தொற்றின் தாக்கத்தினைப் பிரதிபலித்து முக்கிய இறை மீதிகள், பெயரளவு நியதிகள் மற்றும் மதிப்பிடப்பட்ட மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சதவீதம் ஆகிய இரண்டிலும் அரசிறையின் அதிகரிப்பினை எதிரீடுசெய்த அரசாங்க செலவினத்தின் அதிகரிப்பினால் தூண்டப்பட்டு 2021 சனவரி தொடக்கம் யூலை வரையான காலப்பகுதியில் மோசமடைந்திருந்தன. வரவுசெலவுத்திட்டப் பற்றாக்குறையானது 2020இன் தொடர்புடைய காலப்பகுதியின் ரூ.872.6 பில்லியனிலிருந்து (மொ.உ.உற்பத்தியில் 5.8 சதவீதம்) 2021 சனவரியிலிருந்து யூலை வரையான காலப்பகுதியில் ரூ.1,014.5 பில்லியனிற்கு (மதிப்பிடப்பட்ட மொ.உ.உற்பத்தியின் 6.2 சதவீதம்) அதிகரித்திருந்தது. அரசாங்கத்தின் குறை சேமிப்பினை பிரதிபலிக்கின்ற நடைமுறைக் கணக்குப் பற்றாக்குறையானது 2020இன் அதேகாலப்பகுதியில் பதிவாகிய ரூ.694.5 பில்லியனிலிருந்து (மொ.உ.உற்பத்தின் 4.6 சதவீதம்) 2021 யூலையில் முடிவடைகின்ற ஏழு மாத காலப்பகுதியில் ரூ.779.1 பில்லியனுக்கு (மதிப்பிடப்பட்ட மொ.உ.உற்பத்தியில் 4.7 சதவீதம்) அதிகரித்திருந்தது. ஆரம்ப மீதியானது மீளாய்வுக்குட்பட்ட காலப்பகுதியில் ரூ.288.9 பில்லியன் கொண்ட (மொ.உ.உற்பத்தியின் 1.9 சதவீதம்) பற்றாக்குறையிலிருந்து ரூ.377.2 பில்லியனுக்கு (மதிப்பிடப்பட்ட மொ.உ.உற்பத்தியின் 2.3 சதவீதம்) அதன் பற்றாக்குறையை அதிகரித்திருந்தது.

### அரசிறை

அரசிறையானது பொருளாதார நடவடிக்கைகளின் மீட்சிக்கு மத்தியில் ஆண்டின் முன்னைய பகுதியுடன் ஒப்பிடுகையில் 2021 சனவரி தொடக்கம் யூலை வரையான காலப்பகுதியில் பெயரளவு நியதிகளில் பகுதியளவில் மீட்சியடைந்திருந்தது.

வரைபடம் 6.1
முக்கிய இறை மீதிகள்
(மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சதவீதமாக)




(அ) 2021 தரவுகள் மத்திய வங்கியின் மொ.உ.உ எறிவுகளை அடிப்படையாகக் கொண்டுள்ளன

*மூலங்கள்:* நிதி அமைச்சு
இலங்கை மத்திய வங்கி

1 மீள்குறிப்பிடப்பட்டதன் பின்னர் 2020இற்கான இறைத்துறைத் தரவுகளின் விரிவான வகைப்படுத்தல்கள் இல்லாத நிலையில், 2021இற்கான இறைத் துறைப் புள்ளிவிபரங்கள் மீள்குறிப்பிடலுக்குப் முன்னரான 2020இன் தொடர்புடைய தரவுகளுடன் ஒப்பிடப்பட்டுள்ளன.

அரசிறையானது 2021 யூலையில் முடிவடைந்த ஏழு மாதகாலப்பகுதியில் 2020இன் தொடர்புடைய காலத்தில் பதிவாகிய ரூ.763.2 பில்லியனிலிருந்து (மொ.உ.உற்பத்தியில் 5.1 சதவீதம்) ரூ.798.9 பில்லியனுக்கு (மதிப்பிடப்பட்ட மொ.உ.உற்பத்தியில் 4.9 சதவீதம்) 4.7 சதவீதத்தினால் அதிகரித்திருந்தது. பெறுமதிசேர் வரி, துறைமுகங்கள் மற்றும் விமான நிலைய அபிவிருத்தி தீர்வைகள் மற்றும் பண்ட ஏற்றுமதி உதவுதொகைத் திட்டம் (செஸ்) என்பனவற்றிலிருந்தான உயர்வான வரி சேகரிப்பிலிருந்து நன்மையடைந்து வரி அரசிறையானது 2020இன் தொடர்புடைய காலப்பகுதியின் ரூ.670.4 பில்லியனிலிருந்து மீளாய்வுக்குட்பட்ட காலப்பகுதியில் ரூ.716.7 பில்லியனுக்கு 6.9 சதவீதத்தினால் அதிகரித்திருந்தது. இக்காலப்பகுதியில் பொருளாதார நடவடிக்கைகள் படிப்படியாக இயல்புநிலைக்கு திரும்பியதன் காரணமாக பெறுமதிசேர் வரியிலிருந்தான அரசிறையானது 2020இன் தொடர்புடைய காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் 46.6 சதவீதத்தினால் குறிப்பிடத்தக்களவில் அதிகரித்திருந்தது. பிரதானமாக மோட்டார் வாகனங்களின் இறக்குமதிகளிலிருந்தான கலால் வரிகளில் ஏற்பட்ட வீழ்ச்சியின் காரணமாக கலால் வரிகளிலிருந்தான ஒட்டுமொத்த அரசிறையானது 7.1 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்திருந்தது. எனினும், குறிப்பாக பண்டிகைக் காலப்பகுதியில் அதிகரித்த மதுபான விற்பனைகளுடன் மதுபானம் மீதான கலால் வரிகள் முன்னைய ஆண்டினைக்காட்டிலும் மீளாய்வுக்குட்பட்ட காலப்பகுதியில் 30.1 சதவீதத்தினால் அதிகரித்திருந்தது. துறைமுகங்கள் மற்றும் விமான நிலைய அபிவிருத்தி அறவீடு மற்றும் செஸ் வரி என்பவற்றிலிருந்தான அரசிறைகளும் 2021 சனவரி தொடக்கம் யூலை வரையான காலப்பகுதியில் 2020இன் அதேகாலப்பகுதியைக் காட்டிலும் முறையே 27.7 சதவீதம் மற்றும் 62.5 சதவீதத்தினால் அதிகரித்திருந்தன. சில பொருட்களின் இறக்குமதிகள் குறிப்பாக சில முதலீட்டுப் பொருட்களின் இறக்குமதியில் ஏற்பட்ட அதிகரிப்பின் காரணமாக துறைமுகங்கள் மற்றும் விமான நிலையங்கள் அபிவிருத்திக்கான அறவீட்டு அரசிறையானது வளர்ச்சியடைந்திருந்த அதேவேளை சில இறக்குமதிப் பொருட்கள் மீதான மேல் நோக்கிய செஸ் சீராக்கலின் காரணமாக செஸ்ஸிலிருந்தான அரசிறையும் அதிகரித்திருந்தது. எனினும், பாதிக்கப்பட்ட தனிநபர்கள் மற்றும் வியாபாரங்களுக்கு வழங்கப்பட்ட சில வரி நிவாரண வழிமுறைகளை பிரதானமாகப் பிரதிபலித்து வருமான வரி மற்றும் பல இறக்குமதிகளுடன் தொடர்புடைய வரிகளிலிருந்தான அரசிறைச் சேகரிப்புக்கள் இக்காலப்பகுதியில் வீழ்ச்சியடைந்திருந்தன. 2021 யூலையில் முடிவடைந்த ஏழு மாத காலப்பகுயில் வாடகை, வட்டி வருமானம் மற்றும் கட்டணங்களும் அறவீடுகளும் என்பவற்றிலிருந்தான அரசிறைச் சேகரிப்புக்களில் ஏற்பட்ட குறைவின் பிரதான காரணமாக வரியல்லா

> ***வரி வருமானமானது பெயரளவு நியதிகளில் பெறுமதிசேர் வரி, துறைமுகங்கள் மற்றும் விமான நிலைய அறவீடு மற்றும் செஸ் போன்றவற்றிலிருந்தான உயர்ந்தளவான வரி சேகரிப்புக்கள் என்பவற்றிலிருந்தான நன்மைகளிலிருந்து அதிகரித்திருந்த அதேவேளை வரியல்லா வருமானம் வீழ்ச்சியடைந்திருந்தது...***

அட்டவணை 6.1

அரசிறையின் பொருளாதார பகுப்பாய்வு

ரூ.பில்


| விடயம் | 2019 | 2020 (அ) | 2020 சன - யூலை (அ) | 2021 சன - யூலை (அ) |
|---|---|---|---|---|
| **வரி வருமானம்** | **1,734.9** | **1,216.5** | **670.4** | **716.7** |
| வருமான வரி | 427.7 | 268.2 | 126.0 | 119.6 |
| பெறுமதிசேர் வரி | 443.9 | 233.8 | 119.3 | 174.9 |
| கலால் வரிகள் | 399.5 | 321.9 | 184.9 | 171.8 |
| இறக்குமதி தீர்வைகள் | 98.4 | 114.2 | 60.4 | 56.4 |
| துறைமுகங்கள் மற்றும் விமான நிலைய அபிவிருத்தி தீர்வைகள் | 112.2 | 115.4 | 62.4 | 79.7 |
| செஸ் | 50.7 | 49.3 | 28.1 | 45.6 |
| சிறப்புப் பண்டத் தீர்வை | 70.4 | 82.7 | 46.5 | 33.8 |
| ஏனைய வரிகள் | 132.2 | 30.9 | 42.8 | 34.9 |
| **வரியல்லா வருமானம்** | **156.0** | **151.4** | **92.8** | **82.2** |
| **மொத்த வருமானம்** | **1,890.9** | **1,368.0** | **763.2** | **798.9** |

(அ) தற்காலிகமானது

மூலம் : நிதி அமைச்சு

வரைபடம் 6.2

அரசிறையின் உள்ளடக்கம்




மூலங்கள் : நிதி அமைச்சு
இலங்கை மத்திய வங்கி

அரசிறையானது 2020இன் தொடர்புடைய காலப்பகுதியின் ரூ.92.8 பில்லியனிலிருந்து ரூ.82.2 பில்லியனுக்கு வீழ்ச்சியடைந்திருந்தது.

2021 யூலையில் முடிவடைந்த ஏழு மாத காலப்பகுதியில் வெளிநாட்டுக் கொடைகள் 2020இன் தொடர்புடைய காலப்பகுதியில் பதிவாகிய ரூ.2,146.7 மில்லியனுடன் ஒப்பிடுகையில் ரூ.898.2 மில்லியனிற்கு மட்டுப்படுத்தப்பட்டு இருந்தது.

### செலவினமும் தேறிய கடன்வழங்கலும்

2021 சனவரி தொடக்கம் யூலை வரையான காலப் பகுதியில் மீண்டெழும் மற்றும் மூலதனச் செலவினம் ஆகிய இரண்டிலும் ஏற்பட்ட அதிகரிப்பின் காரணமாக பெயரளவு நியதிகளில் மொத்த செலவினமும் தேறிய கடன்வழங்கலுமானது 2020இன் தொடர்புடைய காலப்பகுதியின் ரூ.1,637.9 பில்லியனிலிருந்து (மொ.உ.உற்பத்தியின் 10.9 சதவீதம்) ரூ.1,814.4 பில்லியனுக்கு (மதிப்பிடப்பட்ட மொ.உ.உற்பத்தியின் 11.0 சதவீதம்) 10.8 சதவீதத்தினால் அதிகரித்திருந்தது. மீளாய்வுக்குட்பட்ட காலப்பகுதியில் மீண்டெழும் செலவினமானது 2020இன் தொடர்புடைய காலப்பகுதியைக் காட்டிலும் ரூ.1,578.0 பில்லியனுக்கு 8.3 சதவீதத்தினால் அதிகரித்திருந்தது. மீண்டெழும் செலவினமானது சமூகத்தில் ஏழ்மையான வகுப்பினருக்கு வழங்கப்பட்ட நிவாரணம் மற்றும் வாழ்வாதார ஆதரவு அத்துடன் வைரஸ் பரவுவதைக் கட்டுப்படுத்துதலுடன் தொடர்புடைய வழிமுறைகள் மீதான செலவினம் என்பவற்றை உள்ளடக்கிய உலகளாவிய நோய்த் தொற்றுடன் தொடர்புடைய நேரடிச் செலவினத்தின் பிரதான காரணமாக அதிகரித்திருந்தது. மேலும், வட்டிக் கொடுப்பனவுகள், சம்பளங்கள் மற்றும் கூலிகள் மீதான செலவினம் என்பவற்றில் ஏற்பட்ட அதிகரிப்பும் மீண்டெழும் செலவினத்தின் அதிகரிப்பிற்கு பங்களித்திருந்தன.

**அட்டவணை 6.2**

**செலவினத்தின் பொருளாதார பகுப்பாய்வு**

ரூ.பில்

| விடயம் | 2019 (அ) | 2020 (ஆ) | 2020 சன - யூலை (ஆ) | 2021 சன - யூலை (ஆ) |
|---|---|---|---|---|
| **மீண்டெழும் செலவினம்** | **2,424.6** | **2,548.4** | **1,457.7** | **1,578.0** |
| பண்டங்கள் மற்றும் பணிகள் மீதான செலவினம் | 848.3 | 974.4 | 534.0 | 575.6 |
| இதில் சம்பளங்களும் கூலிகளும் | 686.5 | 794.2 | 451.4 | 490.8 |
| வட்டிக் கொடுப்பனவுகள் | 901.4 | 980.3 | 583.6 | 637.4 |
| வெளிநாட்டு | 234.0 | 266.7 | 170.8 | 157.8 |
| உள்நாட்டு | 667.4 | 713.6 | 412.8 | 479.6 |
| நடைமுறை மாற்றல்களும் மானியங்களும் | 551.5 | 717.1 | 340.1 | 365.1 |
| இதில் ஓய்வூதியங்கள் | 227.7 | 257.8 | 140.7 | 153.2 |
| சமுர்த்தி | 44.7 | 52.4 | 30.7 | 34.6 |
| உர மானியம் | 35.0 | 36.7 | 18.6 | 8.8 |
| **மூலதன செலவினமும் தேறிய கடன்வழங்கலும் (ஆ)** | **913.3** | **492.6** | **180.2** | **236.3** |
| **மொத்த செலவினமும் தேறிய கடன்வழங்கலும்** | **3,337.9** | **3,041.0** | **1,637.9** | **1,814.4** |


*மூலம்* : நிதி அமைச்சு

(அ) நிதியமைச்சானது 2019இலிருந்து கசியப்பட்ட நிலுவைக் கொடுப்பனவுகளை கருத்திற் கொண்டு 2020இன் அரச செலவினம் மற்றும் தேறிய கடன் வழங்களில் ரூ. 422.6 பில்லியனை 2019இற்கு நகர்த்தியிருந்தது. அதன்படி, 2020ல் உறப்பட்ட மீண்டெழும் செலவினத்தின் ரூ. 123.4 பில்லியன் 2019இற்கு நகர்த்தப்பட்டதுடன் 2020இல் உறப்பட்ட மூலதனச் செலவினம் மற்றும் தேறிய கடன்வழங்கலின் ரூ. 299.2 பில்லியன் பெறுமதியானது 2019இற்கு நகர்த்தப்பட்டுள்ளது.

(ஆ) தற்காலிகமானது

**வரைபடம் 6.3**

**அரச செலவினத்தின் உள்ளடக்கம்**




*மூலங்கள் :* நிதி அமைச்சு
இலங்கை மத்திய வங்கி

> *அதிகரித்த மீண்டெழும் செலவினம் அரச செலவினத்தின் அதிகரிப்பிற்கு பெருமளவில் பங்களித்திருந்தது...*

அரச துறையின் வருடாந்த சம்பள அதிகரிப்புக்களின் சேர்த்தல் அத்துடன் தொழிலற்ற பட்டதாரிகள் மற்றும் குறைந்த வருமானம் பெறுகின்ற குடும்பங்களிலிருந்து தேர்ச்சியற்றவர்களின் ஆட்சேர்ப்பு உள்ளடங்கலாக அரசாங்கத் துறைக்கான புதிய ஆட்சேர்ப்புக்கள் என்பவற்றைப் பிரதிபலித்து சம்பளங்கள் மற்றும் கூலிகள் மீதான செலவினமானது 2021 சனவரி தொடக்கம் யூலை வரையான காலப்பகுதியில் 2020இன் அதேகாலப்பகுதியை காட்டிலும் ரூ.490.8 பில்லியனுக்கு 8.7 சதவீதத்தினால் அதிகரித்திருந்தது. வட்டிச் செலவினமானது மொத்த அரசிறையில் 79.8 சதவீதத்தினை ஈர்த்திருந்ததுடன் கருத்திற்கொள்ளப்பட்ட காலப்பகுதியில் ரூ.637.4 பில்லியனுக்கு 9.2 சதவீதத்தினால் அதிகரித்திருந்தது. வட்டிச் செலவினத்தின் இவ்வதிகரிப்பிற்கு

உள்நாட்டுக் கடன்பாடுகளில் குறிப்பாக திறைசேரி உண்டியல்கள் மற்றும் திறைசேரி முறிகள் மீதான அதிகரித்த வட்டிக் கொடுப்பனவுகள் பிரதான காரணமாக அமைந்திருந்தன. 2021 சனவரி தொடக்கம் யூலை வரையான காலப்பகுதியில் மானியங்கள் மற்றும் மாற்றல் கொடுப்பனவுகள் 2020இன் தொடர்பான காலப்பகுதியைக் காட்டிலும் ரூ.365.1 பில்லியனுக்கு 7.3 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்திருந்தன. மூலதனச் செலவினம் மற்றும் தேறிய கடன் வழங்கலானது 2021 சனவரி தொடக்கம் யூலை வரையான காலப்பகுதியில் 2020இன் தொடர்புடைய காலப்பகுதியின் ரூ.180.2 பில்லியனிலிருந்து ரூ.236.3 பில்லியனுக்கு 31.1 சதவீதத்தினால் அதிகரித்திருந்தது.

### வரவுசெலவுத்திட்டப் பற்றாக்குறைக்கு நிதியீட்டம் செய்தல்

வரவுசெலவுத்திட்டப் பற்றாக்குறையானது 2021 யூலையில் முடிவடைந்த ஏழு மாத காலப்பகுதியில் முழுமையாகவே உள்நாட்டு மூலங்களின் ஊடாக நிதியீட்டம் செய்யப்பட்டிருந்ததுடன் உலகளாவிய மூலதனச் சந்தைகளுக்கான மட்டுப்படுத்தப்பட்ட அனுகல் மற்றும் வெளிநாட்டுப் படுகடனின் சதவீதத்தை குறைப்பதற்கான அரசாங்கத்தின் முன்னுரிமை என்பவற்றை வெளிக்காட்டியிருந்தது. 2021 யூலையில் முடிவடைந்த ஏழு மாத காலப்பகுதியில் தேறிய உள்நாட்டு நிதியீட்டமானது 2020இன் தொடர்பான காலப்பகுதியின் ரூ.1,067.0 பில்லியனுடன் ஒப்பிடுகையில் ரூ.1,204.6 பில்லியனாக காணப்பட்ட அதேவேளை தேறிய வெளிநாட்டு மீள்கொடுப்பனவானது 2020இன் தொடர்புடைய காலப்பகுதியில் பதிவாகிய ரூ.194.5 பில்லியன் கொண்ட தேறிய வெளிநாட்டு மீள்கொடுப்பனவுடன் ஒப்பிடுகையில் ரூ.190.1 பில்லியனாக காணப்பட்டது. தேறிய உள்நாட்டு நிதியளித்தலில் திறைசேரி முறிகள் பாரிய பங்கிற்கு வகைகூறியிருந்ததுடன் 2021 யூலையில் முடிவடைந்த ஏழுமாத காலப்பகுதியில் முன்னைய ஆண்டின் அதேகாலப்பகுதியில் பதிவாகிய ரூ.867.0 பில்லியனுடன் (மொத்த உள்நாட்டு கடன்பெறுதலின் 81.3 சதவீதம்) ஒப்பிடுகையில் உள்நாட்டு வங்கித்தொழில் துறையிலிருந்து ரூ.932.5 பில்லியனை (மொத்த உள்நாட்டு கடன்பெறுதலின் 77.4 சதவீதம்) திரட்டியிருந்தது. மத்திய வங்கியிடமிருந்தான தேறிய நிதியளித்தலும் முன்னைய ஆண்டின் தொடர்பான காலப்பகுதியின் ரூ.187.0 பில்லியனிலிருந்து 2021 யூலையில் முடிவடைந்த ஏழு மாத காலப்பகுதியில் ரூ.549.1 பில்லியனிற்கு கணிசமாக அதிகரித்திருந்தது. எனினும், முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2021 யூலையில் முடிவடைந்த ஏழு மாத காலப்பகுதியில் வர்த்தக வங்கித்தொழில் துறையிலிருந்தான நிதியிடலில் குறிப்பிடத்தக்கதொரு வீழ்ச்சி (43.6 சதவீதம்) பதிவாகியிருந்தது. அதேவேளை, வங்கியல்லா துறையில் இருந்தான கடன்பெறுதலானது மொத்த உள்நாட்டு நிதியளித்தல் தேவைப்பாட்டின் 22.6 சதவீதத்திற்கு வகைகூறியிருந்ததுடன் 2021 யூலையில் முடிவடைந்த ஏழு மாத காலப்பகுதியில் முன்னைய ஆண்டின் தொடர்பான காலப்பகுதியின் ரூ.200.0 பில்லியனிலிருந்து ரூ.272.1 பில்லியனுக்கு அதிகரித்திருந்தது.

**அட்டவணை 6.3**

**வரவுசெலவுத்திட்டப் பற்றாக்குறைக்கான நிதியீட்டல் மூலங்கள்**

ரூ.பில்


| விடயம் | 2020 சன - யூலை (அ) | 2021 சன - யூலை (அ) |
|---|---|---|
| **உள்நாட்டு நிதியிடல் (ஆ)** | **1,067.0** | **1,204.6** |
| வங்கி | 867.0 | 932.5 |
| வங்கியல்லா | 200.0 | 272.1 |
| **வெளிநாட்டு நிதியிடல்** | **-194.5** | **-190.1** |
| கடன்கள் | -140.3 | -86.0 |
| வர்த்தக கடன்கள் | 29.2 | -99.9 |
| திறைசேரி முறிகள் (இ) | -63.4 | -3.8 |
| திறைசேரி உண்டியல்கள் (இ) | -20.0 | -0.4 |
| **மொத்த நிதியிடல்** | **872.6** | **1,014.5** |

(அ) தற்காலிகமானது
(ஆ) அரசிற்குச் சொந்தமான வியாபார தொழில் முயற்சிகளின் மீள்கட்டமைப்பிற்கான முறிகளின் ஊடாக பெற்றுக்கொள்ளப்பட்ட நிதியங்கள் நீங்கலாக
(இ) வதியாதோர் வசமுள்ள அரச பிணையங்கள் உள்ளடங்கலாக.

*மூலங்கள்:* நிதி அமைச்சு
இலங்கை மத்திய வங்கி

**வரைபடம் 6.4**

**பற்றாக்குறைக்கான நிதியீட்டம் மூலங்கள் (மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சதவீதமாக)(அ)**




*மூலங்கள் :* நிதி அமைச்சு
இலங்கை மத்திய வங்கி

(அ) 2021இற்கான தரவுகள் மத்திய வங்கியின் மொத்த உள்நாட்டு உற்பத்தி மதிப்பீட்டு எறிவுகளை அடிப்படையாகக் கொண்டுள்ளன.

> *வரவு செலவுத்திட்ட பற்றாக்குறையானது 2021 யூலையில் முடிவடைந்த ஏழு மாத காலப்பகுதியில் உள்நாட்டு மூலங்களின் ஊடாக நிதியீட்டம் செய்யப்பட்டிருந்த அதேவேளை வெளிநாட்டு நிதியீட்டமானது தேறிய மீள் கொடுப்பனவொன்றினைப் பதிவுசெய்திருந்தது...*

மொத்த வெளிநாட்டு நிதியீட்டமானது 2021 யூலையில் முடிவடைந்த ஏழு மாத காலப்பகுதியில் தேறிய மீள் கொடுப்பனவொன்றினைப் பதிவு செய்திருந்தது. தேறிய வெளிநாட்டு நிதியீட்டமானது நாட்டிற்கான பன்னாட்டு

முறிகளின் ரூ.199.9 பில்லியன் கொண்ட தேறிய மீள்கொடுப்பனவு, வெளிநாட்டுக் கருத்திட்டம் மற்றும் நிகழ்ச்சித்திட்டக் கடன்களின் ரூ.86.0 பில்லியன், வெளிநாட்டு வசமுள்ள திறைசேரி உண்டியல்கள் மற்றும் திறைசேரி முறிகளின் ரூ.4.1 பில்லியன் மற்றும் வெளிநாட்டு நாணய தவணை நிதியளித்தல் வசதிகள் கணக்கின் ரூ.100.0 பில்லியன் கொண்ட தேறிய கடன் பெறுகை என்பவற்றை உள்ளடக்குகின்றது. உலகளாவிய நோய்தொற்றுடன் தொடர்புபட்ட நிச்சயமின்மைக்கு மத்தியில் உலகளவிலான இறுக்கமான நிதியியல் நிலைமைகள் காரணமாகவும் அதேபோன்று நாட்டிற்கான கடன் தரப்படுத்தலின் தரம் குறைக்கப்பட்டமை காரணமாகவும் வெளிநாட்டு மூலதனச் சந்தைகளுக்கான அனுகுந்தன்மையானது வரையறுக்கப்பட்டிருந்தது.

## அரசாங்கப் படுகடன் மற்றும் படுகடன் பணிக் கொடுப்பனவுகள்

### அரசாங்கப் படுகடன்

2020இன் இறுதியில் ரூ.15,117.2 பில்லியனாகவிருந்த மத்திய அரசாங்கப் படுகடன் 2021 யூலை இறுதியளவில் ரூ.16,751.7 பில்லியனுக்கு அதிகரித்திருந்தது. மொத்த உள்நாட்டுப் படுகடன் ரூ.10,317.5 பில்லியனுக்கு ரூ.1,252.4 பில்லியன் கொண்ட அதிகரிப்பொன்றை அவதானித்திருந்த அதேவேளை வெளிநாட்டுப் படுகடனின் ரூபாய் பெறுமதியானது 2020 இறுதியில் பதிவாகிய மட்டங்களிலிருந்து ரூ.6,434.2 பில்லியனுக்கு ரூ.382.0 பில்லியனால் அதிகரித்திருந்தது. 2021 யூலையில் முடிவடைந்த ஏழு மாத காலப்பகுதியில் வரவுசெலவுத்திட்டப் பற்றாக்குறையில் ஏற்பட்ட விரிவாக்கத்தின் காரணமாக தேறிய நிதியிடலின் அதிகரிப்பானது மத்திய அரசாங்கப் படுகடனின் இவ்வதிகரிப்பிற்கு பிரதானமாக பங்களித்திருந்தது. செலாவணி வீத தேய்வடைதலும் 2021 யூலை இறுதியளவில் வெளிநின்ற படுகடனின் ரூபாய் பெறுமதியில் ரூ.577.9 பில்லியன் கொண்ட அதிகரிப்பொன்றைத் தோற்றுவித்திருந்தது. மத்திய அரசாங்கத்தின் வெளிநின்ற வெளிநாட்டுப் படுகடனின் சார்பளவுப் பங்கானது 2020 இறுதியில் பதிவாகிய 40.0 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2021 யூலை இறுதியில் மொத்த மத்திய அரசாங்கப் படுகடனில் 38.4 சதவீதமாகக் காணப்பட்டது.

*"2021 யூலையில் முடிவடைந்த ஏழு மாத காலப்பகுதியில் விரிவடைந்த வரவு செலவுத்திட்டப் பற்றாக்குறையின் காரணமாக அதிகரித்த தேறிய நிதியிடல் அதனுடன் இணைந்ததான செலாவணி வீதத்தின் தேய்வு என்பன ரூபா பெறுமதியிலான வெளிநின்ற படுகடனின் அதிகரிப்பிற்குப் பங்களித்திருந்தன...*

**அட்டவணை 6.4**

**வெளிநின்ற மத்திய அரசாங்கப் படுகடன் (அ)**

ரூ.பில்

| விடயம் | 2019 | 2020 (ஆ) | 2020 யூலை இறுதி (ஆ) | 2021 யூலை இறுதி (ஆ) |
|---|---|---|---|---|
| **உள்நாட்டு படுகடன் (இ)** | **6,830.3** | **9,065.1** | **7,708.0** | **10,317.5** |
| முதிர்ச்சி காலப்பகுதியின்படி | | | | |
| குறுங்காலம் | 1,270.4 | 2,197.6 | 1,860.2 | 2,997.1 |
| நடுத்தர மற்றும் நீண்டகாலம் | 5,559.9 | 6,867.5 | 5,847.8 | 7,320.4 |
| நிறுவனங்களின்படி (ஈ) | | | | |
| வங்கிகள் | 2,888.5 | 4,735.7 | 3,663.6 | 5,580.4 |
| வாங்கியல்லாதுறை | 3,941.8 | 4,329.3 | 4,044.3 | 4,737.1 |
| **வெளிநாட்டு படுகடன்** | **6,201.3** | **6,052.2** | **6,553.1** | **6,434.2** |
| சலுகைக் கடன்கள் | 2,767.5 | 2,988.1 | 2,911.6 | 3,124.2 |
| சலுகையல்லாக் கடன்கள் | 3,433.8 | 3,064.1 | 3,641.4 | 3,310.0 |
| **மொத்த அரச படுகடன்** | **13,031.5** | **15,117.2** | **14,261.0** | **16,751.7** |

*மூலங்கள்:* நிதி அமைச்சு
இலங்கை மத்திய வங்கி

(அ) பன்னாட்டு நாணய நியத்தினால் 2014இல் வெளியிடப்பட்ட அரச நிதிப் புள்ளிவிபரங்கள் கையேட்டின் அரச படுகடன் புள்ளிவிபரங்களை கொடுத்தல் தொடர்பான வழிகாட்டலளுக்கு அமைய வதியாதோர் வசமுள்ள வெளிநின்ற இலங்கை அபிவிருத்தி முறியானது வெளிநாட்டு படுகடனின்கீழ் வகைப்படுத்தப்பட்டுள்ளதுடன் வதிவோர் வசமுள்ள இலங்கை அரசாங்கத்தின் வெளிநின்ற நாட்டிற்கான பன்னாட்டு முறியானது உள்நாட்டுப் பாடுகடனின்கீழ் வகைப்படுத்தப்பட்டுள்ளது.

(ஆ) தற்காலிகமானது

(இ) 2012 சனவரியில் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்கு வெளியிடப்பட்ட ரூ.78,441 மில்லியன் (இதில் ரூ.21,778 மில்லியன் 2017 சனவரி 01 இல் முதிர்ச்சியடைந்திருந்ததுடன் தற்போது உள்ளவாறான வெளிநின்ற பெறுமதியானது ரூ.56,662 மில்லியன்) பெறுமதி கொண்ட அரசாங்க திறைசேரி முறிகள் என்பவற்றை உள்ளடக்குகின்றது.

(ஈ) வியாபாரங்கள் மற்றும் தனிநபர்கள் வசமுள்ள இலங்கை அபிவிருத்தி முறிகளின் மீதான சீராக்கங்கள் காரணமாக வங்கித்தொழில் மற்றும் வாங்கியலாத் தொழில்துறை என்பவற்றின் வசமுள்ள உள்நாட்டு படுகடனின் உள்ளமைப்பானது 2017இலிருந்து திருத்தப்பட்டுள்ளது.

மொத்த மத்திய அரசாங்கப் படுகடனில் குறுகியகால உள்நாட்டுப் படுகடனின் பங்கானது 2020 இறுதியுடன் ஒப்பிடுகையில் அதிகரித்திருந்த அதேவேளை 2021 யூலை இறுதியில் நடுத்தர மற்றும் நீண்டகால உள்நாட்டுப் படுகடனின் இருப்பு மட்டமானது குறைவடைந்திருந்தது அதிகரித்த நீடிப்பு இடர்நேர்வினை எடுத்துக்காட்டியிருந்தது. மொத்த உள்நாட்டுப் படுகடனின் சதவீதமாக குறுகியகால படுகடனின் பங்கு 2020 திசெம்பர் இறுதியில் காணப்பட்ட 24.2 சதவீதத்திலிருந்து 2021 யூலை இறுதியில் 29.0 சதவீதத்திற்கு அதிகரித்தமைக்கு குறுகியகால உள்நாட்டுப் படுகடன் சாதனங்களை நோக்கிய சந்தை முன்னுரிமைக்கு மத்தியில் திறைசேரி உண்டியல்களூடாக உயர்வான கடன் பெறுதல்களும் அரச வங்கிகளுடனான அரசாங்கத்தின் மேலதிகப்பற்று நிலுவைகளின் அதிகரிப்பும் முக்கிய காரணங்களாக அமைந்திருந்தன. அதன் விளைவாக, நடுத்தரகால மற்றும் நீண்டகால படுகடனின் பங்கானது 2020 இறுதியின் 75.8 சதவீதத்திலிருந்து 2021 யூலை இறுதியில் 71.0 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்திருந்தது.

வெளிநாட்டு நாணயத்தில் குறித்துரைக்கப்பட்ட வெளிநின்ற உள்நாட்டுப் படுகடனானது கரைகடந்த வங்கித்தொழில் பிரிவுகள் மற்றும் இலங்கை அபிவிருத்தி முறிகள் கணக்கு என்பவற்றின் மீதான தேறிய நிதிக்


கொடுப்பனவுகளின் காரணமாக 2020 இறுதியில் ரூ.719.3 பில்லியனிலிருந்து ரூ.673.1 பில்லியனுக்கு குறைவடைந்திருந்தது. அதற்கமைய, இலங்கை அபிவிருத்தி முறிகளின் வெளிநின்ற பெறுமதியானது 2021 யூலை இறுதியில் ரூ.467.6 பில்லியனாக (ஐ.அ.டொ. 2,339.3 மில்லியன்) காணப்பட்ட அதேவேளை கரைகடந்த வங்கித்தொழில் பிரிவுகள் மீதான வெளிநின்ற படுகடனானது ரூ.205.5 பில்லியன் (ஐ.அ.டொலர் 1,028.0 மில்லியன்) பெறுமதியாகவிருந்தது. மொத்த உள்நாட்டுப் படுகடனில் வெளிநாட்டு நாணயத்தில் குறித்துரைக்கப்பட்ட உள்நாட்டுப் படுகடனின் பங்கானது 2020 திசெம்பர் இறுதியில் 7.9 சதவீதத்திலிருந்து 2021 யூலை இறுதியில் 6.5 சதவீதத்திற்கு குறைவடைந்திருந்தது.

மத்திய அரசாங்கத்தின் மொத்த வெளிநாட்டுப் படுகடனில் சலுகையல்லாப் படுகடனின் பங்கானது 2020இன் இறுதியில் 50.6 சதவீதத்திலிருந்து 2021 யூலை இறுதியளவில் 51.4 சதவீதத்திற்கு அதிகரித்திருந்தது. பெயரளவு நியதிகளில், மத்திய அரசாங்கத்தின் சலுகையல்லா படுகடனின் வெளிநின்ற நிலுவை 2020 இறுதியில் ரூ.3,064.1 பில்லியனிலிருந்து 2021 யூலை இறுதியில் ரூ.3,310.0 பில்லியனுக்கு அதிகரித்திருந்தது.

## படுகடன் பணிக்கொடுப்பனவுகள்

2021 யூலையில் முடிவடைந்த ஏழு மாத காலப்பகுதியில் மொத்தப் படுகடன் பணிக்கொடுப்பனவுகள் 2020இன் அதேகாலப்பகுதியில் பதிவாகிய ரூ.1,191.0 பில்லியனிலிருந்து ரூ.1,455.1 பில்லியனுக்கு அதிகரித்திருந்தது. 2021 யூலையில் முடிவடைந்த ஏழு மாத காலப்பகுதியில் கடன் தீர்ப்பனவு கொடுப்பனவுகள் பிரதானமாக நாட்டுக்கான பன்னாட்டு முறிகள், இலங்கை அபிவிருத்தி முறிகள் மற்றும் திறைசேரி முறிகள் என்பவற்றிற்கான மீள்கொடுப்பனவுகளுடன் 2020இன் தொடர்புடைய காலப்பகுதியின் ரூ.607.3 பில்லியனிலிருந்து ரூ.817.7 பில்லியனிற்கு அதிகரித்திருந்தது. பிரதானமாக உள்நாட்டுப் படுகடன் கொடுப்பனவுகளுக்கான உயர்வான வட்டிக் கொடுப்பனவுகளின் காரணமாக வட்டிக் கொடுப்பனவுகள் 2021 யூலையில் முடிவடைந்த முதல் ஏழு மாத காலப்பகுதியில் 2020இன் தொடர்புடைய காலப்பகுதியின் ரூ.583.6 பில்லியனிலிருந்து ரூ.637.4 பில்லியனுக்கு அதிகரித்திருந்தன. இவ்வதிகரிப்பானது குறிப்பாக திறைசேறி உண்டியல்கள் மற்றும் திறைசேரி முறிகள் என்பவற்றின் காரணமாக ஏற்பட்ட மத்திய அரசாங்கத்தின் உள்நாட்டுப் படுகடனின் அதிகரிப்பிற்கு இசைவாகக் காணப்பட்டது. 2021 யூலையில் முடிவடைந்த ஏழு மாத காலப்பகுதியில், வெளிநின்ற மத்திய அரசாங்க படுகடன் மீதான மொத்த உள்நாட்டுப் படுகடன் பணிக்கொடுப்பனவுகள் 2020இன் தொடர்புடைய காலப்பகுதியின் ரூ.783.3 பில்லியனுடன் ஒப்பிடுகையில் ரூ.892.3 பில்லியன் பெறுமதியாகவிருந்த அதேவேளை மத்திய அரசாங்கத்தின் வெளிநின்ற வெளிநாட்டுப் படுகடன் மீதான படுகடன் பணிக் கொடுப்பனவுகள் முன்னைய ஆண்டின் தொடர்புடைய காலப்பகுதியின் ரூ.407.7 பில்லியனுடன் ஒப்பிடுகையில் ரூ.562.8 பில்லியன் பெறுமதியாகவிருந்தது.

**வரைபடம் 6.5**
**அரச படுகடன் பணிக்கொடுப்பனவுகள் எதிர் அரசிறை (மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சதவீதமாக) (அ)**




(அ) 2021ஆம் ஆண்டிற்கான தரவுகள் மத்திய வங்கியின் மொத்த உள்நாட்டு உற்பத்தி மதிப்பீட்டு எறிவுகளை அடிப்படையாகக் கொண்டுள்ளன.

*மூலங்கள் :* நிதி அமைச்சு
இலங்கை மத்திய வங்கி

> *கடன் தீர்ப்பனவு கொடுப்பனவுகள் 2021 யூலையில் நிறைவடைந்த ஏழு மாத காலப்பகுதியில் பிரதானமாக இலங்கை அபிவிருத்தி முறிகள், நாட்டிற்கான பன்னாட்டு முறிகள் மற்றும் திறைசேரி முறிகள் என்பவற்றின் மீதான மீள்கொடுப்பனவுகளின் காரணமாக 2020இன் தொடர்புடைய காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் அதிகரித்திருந்தன...*

# 7

# நாணயக்கொள்கை, வட்டி வீதங்கள், பணம் மற்றும் கொடுகடன்

மத்திய வங்கியானது 2020இன் தொடக்கத்தில் தோற்றம்பெற்ற உலகளாவிய நோய்த்தொற்று காலப்பகுதியிலிருந்து 2021 ஓகத்து நடுப்பகுதிவரையான காலப்பகுதியில் மிகவும் தளர்த்தப்பட்ட நாணயக்கொள்கை நிலையினைப் பேணியிருந்தது. அத்தகைய தளர்த்தப்பட்ட கொள்கையானது வட்டி வீதங்கள் வரலாற்றிலேயே குறைந்த மட்டங்களுக்கு வீழ்ச்சியடைவதற்கு உதவியிருந்ததுடன் உள்நாட்டு பணச்சந்தைக்கு போதுமான திரவத்தன்மையினை வழங்கியதனூடாக உலகளாவிய நோய்த்தொற்றினால் பாதிக்கப்பட்ட தனிநபர்களுக்கும் வியாபாரங்களுக்கும் உதவியிருந்தது. அதேவேளை, உலகளாவிய நோய்த்தொற்றின் பாதகமான தாக்கங்களிலிருந்து பொருளாதார நடவடிக்கைகள் மீட்சிபெறுவதற்கும் இது துணையளித்திருந்தது. உலகளாவிய நோய்த்தொற்று காரணமாக அரசாங்க காசுப்பாய்ச்சல்களுக்கு இடையூறுகள் ஏற்பட்டிருந்த போதிலும் மத்திய வங்கியானது அரசாங்கத்திற்கு குறிப்பிடத்தக்களவான நிதியிடல் ஆதரவினை வழங்கியிருந்தது. குறைந்தளவான நிதியிடல் செலவினங்கள் மற்றும் உள்நாட்டு பணச்சந்தையின் உயர்ந்தளவான திரவத்தன்மை மட்டங்கள் என்பவற்றினால் ஆதரவளிக்கப்பட்டு தனியார் துறைக்கு வழங்கப்பட்ட கொடுகடனானது கணிசமாக விரிவடைந்திருந்தது. இது அரசாங்கத் துறைக்கான கொடுகடனின் விரிவாக்கத்துடன் இணைந்து 2021இன் இதுவரையான காலப்பகுதியில் உள்நாட்டு கொடுகடன் மற்றும் பண நிரம்பல் என்பவற்றில் வளர்ச்சியொன்றினைத் தோற்றுவித்திருந்தது. பொருளாதார நடவடிக்கைகள் படிப்படியாக வழமைக்குத் திரும்புவதுடன் நடுத்தரகாலத்தில் ஏற்படக்கூடிய சாத்தியமான பணவீக்க அழுத்தங்களுடன் மத்திய வங்கியானது 2021 ஓகத்து நடுப்பகுதியில் அதன் நாணயக்கொள்கை நிலையினை இறுக்கப்படுத்தியிருந்த அதேவேளை வெளிநாட்டுத்துறை மீதான அதிகரித்த அழுத்தங்களுக்கு மத்தியில் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு நாணய வைப்புகளுக்கிடையில் அவதானிக்கப்பட்ட வட்டி வீதங்களில் சில ஒழுங்கற்ற போக்கினையும் சீர்படுத்தியிருந்தது. நாணயக்கொள்கை நிலையினை இறுக்கமாக்கியதன் பின்னர், குறுங்கால பணச்சந்தை வீதங்கள் மேல் நோக்கி சீர்செய்யப்பட்டிருந்ததுடன் ஏனைய சந்தை வட்டி வீதங்களும் உயர்வான மட்டங்களுக்கு அதிகரிக்குமெனவும் பின்னர் உயர்ந்த மட்டத்தில் நிலைநிறுத்தப்படுமெனவும் எதிர்பார்க்கப்படுகின்றது.

## 7.1 மத்திய வங்கியின் நாணயக்கொள்கை நிலை


தனிநபர்கள் மற்றும் வியாபாரங்கள் அதேபோன்று ஒட்டுமொத்த பொருளாதார நடவடிக்கைகள் என்பவற்றின் மீதான உலகளாவிய நோய்த்தொற்றின் முன்னொருபோதுமல்லாத மோசமான தாக்கங்கள் நீண்ட காலப்பகுதியொன்றிற்கு கடுமையானளவில் தளர்த்தப்பட்ட நாணயக்கொள்கை நிலையினை பேணவேண்டியதனை தேவைப்படுத்தியிருந்தது. உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளின் அனைத்து ரூபா வைப்புப் பொறுப்புக்கள் மீதும் ஏற்புடைத்தான நியதி ஒதுக்கு விகிதத்துடன் இணைந்ததான கொள்கை வட்டி வீதங்களை அதாவது துணைநில் வைப்பு வசதி வீதம், துணைநில் கடன்வழங்கல் வசதி வீதம் மற்றும் வங்கி வீதம் என்பவற்றை மத்திய வங்கி வரலாற்றிலேயே அவற்றின் குறைந்த மட்டங்களிற்கு குறைத்திருந்த அதேவேளை உள்நாட்டு பணச்சந்தைக்கு பாரியளவான திரவத்தன்மையையும் வழங்கியிருந்தது. அதன்விளைவாக, ஒட்டுமொத்த வட்டி வீதக் கட்டமைப்பும் குறிப்பிடத்தக்களவு வீழ்ச்சியடைந்திருந்ததுடன் இதன் ஊடாக தனியார் துறை மற்றும் அரசாங்கத் துறை ஆகிய இரண்டிற்கும் குறைந்த செலவில் நிதியங்கள் கிடைக்கப்பெறச்செய்திருந்தன. மேலும், 2020இல் அறிமுகப்படுத்தப்பட்ட படுகடனை காலம்தாழ்த்திச் செலுத்தும் வசதி மற்றும் சலுகைக் கடன் திட்டங்கள் என்பனவும் உலகளாவிய நோய்த்தொற்றினால் பாதிக்கப்பட்ட தனிநபர்கள் மற்றும் வியாபாரங்கள் என்பவற்றிற்கு மேலும் ஆதரவளித்திருந்தன.

> *மத்திய வங்கியானது கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்று பரவலுடன் 2020இன் ஆரம்ப காலப்பகுதிகளிலிருந்து முன்னொருபோதுமில்லாத நாணயக்கொள்கை தளர்த்தளினை தொடங்கியிருந்ததுடன் 2021 ஒகத்து நடுப்பகுதியில் அதன் நாணயக்கொள்கை நிலையினை இறுக்கப்படுத்தியிருந்தது...*

மேலும், உலகளாவிய நோய்த்தொற்றிற்கு மத்தியில் அரசாங்கத்தின் காசுப்பாய்ச்சல் இடர்பாடுகளைக் கருத்திற்கொண்டு, மத்திய வங்கியானது அரசாங்கத்திற்கு முன்னொருபோதுமல்லாத நிதியியல் ஆதரவினை வழங்கியிருந்தது. எவ்வாறாயினும், மத்திய வங்கியானது வெளிநாட்டுத்துறை மற்றும் நிதியியல் சந்தை என்பவற்றில் காணப்பட்ட சமமின்மைகளை தீர்ப்பதனை இலக்காகக் கொண்டு 2021 ஒகத்து நடுப்பகுதியில் நாணயக்கொள்கை நிலையினை இறுக்கமாக்கியதன் ஊடாக நாணய ரீதியிலான ஆதரவினை மீளப்பெற்றுக்கொண்ட அதேவேளை மேம்பட்ட

**வரைபடம் 7.1**

**முதன்மை மற்றும் மையப் பணவீக்கத்தின் அசைவுகள் (ஆண்டிற்காண்டு)**




*மூலம்:* தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்

வளர்ச்சி எதிர்பார்க்கைகளுக்கு மத்தியில் நடுத்தர காலத்தில் ஏதேனும் மிதமிஞ்சிய பணவீக்க அழுத்தங்கள் கட்டியெழுப்பப்படுவதனை முன்கூட்டியே தடுத்திருந்தது. நாணயக்கொள்கை இறுக்கப்படுத்தலைத் தொடர்ந்து உள்நாட்டு பணச்சந்தையின் திரவத்தன்மையானது பற்றாக்குறை மட்டங்களுக்கு வீழ்ச்சியடைந்திருந்ததுடன் அது குறுங்கால சந்தை வட்டி வீதங்களின் மேல்நோக்கிய சீராக்கங்களுக்கும் வழிவகுத்திருந்தது. ரூபாய் வைப்புக்கள் மீதான வட்டி வீதங்களை அதிகரிப்பதற்கு மத்திய வங்கி அனுமதித்திருந்த அதேவேளை சந்தையில் ரூபாய் மற்றும் வெளிநாட்டு நாணய வடிவிலான வைப்புக்களுக்கான வட்டி வீதங்களுக்கிடையிலான வேறுபாடுகளை தீர்க்குமுகமாக 2021 ஒகத்தில் உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகள் மற்றும் தேசிய சேமிப்பு வங்கி போன்றவற்றின் வெளிநாட்டு நாணய வடிவிலான வைப்புக்களின் மீது உச்ச வட்டி வீதமொன்றினை விதித்திருந்தது.

> *அண்மைய மாதங்களில் பணவீக்கமானது உலகளாவிய நோய்த்தொற்று அத்துடன் பாதகமான வானிலை நிலைமைகள் என்பவற்றின் காரணமாக ஏற்பட்ட நிரம்பல்பக்க இடையூறுகள் அதேபோன்று படிப்படியான கேள்வி அழுத்தங்கள் என்பவற்றின் ஊடாக பிரதானமாகத் தூண்டப்பட்டு மேல்நோக்கிய போக்கொன்றினைத் தொடர்ந்திருந்தது...*

2021இன் ஆரம்ப மாதங்களில் இலக்கிடப்பட்ட வீச்சின் தாழ்வான எல்லைக்குள் நன்கு கட்டுப்படுத்தப்பட்டிருந்த ஆண்டிற்காண்டு முதன்மைப் பணவீக்கத்தின் அடிப்படையிலமைந்த கொழும்பு நுகர்வோர் விலைச்

சுட்டெண் (2013=100) அதன் பின்னர் உணவு விலைகளின் அதிகரிப்பினால் பிரதானமாகத் தூண்டப்பட்டு படிப்படியாக அதிகரித்திருந்தது. உலகளாவிய பண்ட விலைகளின் உயர்விற்கு ஏற்றவகையில் நிர்வாக ரீதியாக நிர்ணயிக்கப்பட்ட விலைகளின் மேல்நோக்கிய திருத்தங்களும் பணவீக்கத்தினை தூண்டியிருந்தன.

> *நாணயக்கொள்கையின் குறிக்கோள் பணவீக்கத்தினை நடுத்தர காலத்தில் நடுஒற்றை இலக்கத்தில் தொடர்ந்தும் பேணுகின்ற அதேவேளை பொருளாதாரம் அதன் சாத்தியமிக்க வளர்ச்சிப்பாதையினை அடைந்துகொள்வதற்கு ஆதரவளிக்கும்...*


இதனையொத்த போக்கினை பின்பற்றி தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண் (2013=100) மூலம் அளவிடப்பட்ட ஆண்டிற்காண்டு முதன்மைப் பணவீக்கமும் உணவு வகைக்கு ஒதுக்கப்பட்ட பாரியளவிலான நிறையிடலின் காரணமாக அதன் பின்னர் விரைவடைந்திருந்ததுடன் ஒப்பீட்டு ரீதியில் உயர்வாகக் காணப்பட்டது. ஆண்டின் முதலரைப்பகுதியில் குறைவாக காணப்பட்ட மையப் பணவீக்கமானது பிரதானமாக பல்வேறு உணவுப் பொருட்கள் அதேபோன்று உணவல்லா வகைகளான கல்வி, சுகாதாரம், உணவகங்கள் மற்றும் விடுதிகள் போன்ற துறைகளுடன் தொடர்புடைய அடிக்கடி மேற்கொள்ளப்படாத விலைத் திருத்தங்களின் காரணமாக ஆண்டின் இரண்டாமரைப்பகுதியில் படிப்படியாக அதிகரித்திருந்தது. பொருளாதார நடவடிக்கைகள் படிப்படியாக இயல்பு நிலைக்கு திரும்பியமை மூலம் பணவீக்கம் மீதான கேள்வி அழுத்தங்களும் அண்மைய மாதங்களில் பணவீக்கத்தின் போக்குகளில் பிரதிபலித்திருந்தன.

மத்திய வங்கி நெகிழ்ச்சிவாய்ந்த பணவீக்க இலக்கிடல் கட்டமைப்பின் கீழ் தொடர்ந்தும் நாணயக்கொள்கையினை நடாத்தியிருந்ததுடன் இங்கு சராசரி நிறையேற்றப்பட்ட அழைப்புப்பண வீதமானது (ச.நி.அ.ப.வீ) தொழிற்பாட்டு இலக்காக செயற்படுவதுடன் நடுத்தரகாலத்தில் 4-6 சதவீதம் கொண்ட இலக்கினுள் பணவீக்கத்தினைப் பேணுகின்ற அதேவேளை பொருளாதாரத்தின் நிலையான வளர்ச்சிக்கு ஆதரவளிக்கின்ற மத்திய வங்கியின் குறிக்கோளுக்கமைவாக விரும்பப்பட்ட மட்டங்களில் பேணப்படுகின்றது. நாணயக்கொள்கை தொடர்பூட்டலைப் பொறுத்தமட்டில், குறிப்பாக குறுங்காலத்தில் பொருளாதாரத்தினை நிலைநிறுத்துவதற்கு முன்மொழியப்பட்ட கட்டமைப்பு பற்றி அனைத்து ஆர்வலர்களுக்கும் அறிவிக்கும் பொருட்டு 2021 ஒத்தோபரில் "பேரண்டப் பொருளாதாரம் மற்றும் நிதியியல் முறைமை உறுதிப்பாட்டினை நிச்சயப்படுத்துவதற்கான ஆறு மாத வழிகாட்டல்" இனை மத்திய வங்கி வெளியிட்டிருந்தது. நாணயக்கொள்கை நிலை மீதான கிரமமான ஊடக அறிக்கைகளுக்கு மேலதிகமாக முக்கிய பேரண்டப் பொருளாதார மாறிகளின் எதிர்காலப் பயணப்பாதை பற்றி ஆர்வலர்களுக்கு மிகுந்த தெளிவினை வழங்குவதற்கு 2022இன் ஆரம்பப்பகுதியிலிருந்து அனைத்தையுமுள்ளடக்கிய நாணயக்கொள்கை அறிக்கையொன்றின் வெளியீட்டினை மத்திய வங்கி தொடங்கவுள்ளது.

## 7.2 சந்தைத் திரவத்தன்மையும் வட்டி வீதங்களின் அசைவுகளும்

உள்நாட்டுப் பணச்சந்தையில் 2021 நடுப்பகுதி வரைக்கும் கணிசமான மிகைநிலை மட்டங்களில் காணப்பட்ட ரூபாவின் திரவத்தன்மையானது 2021 செத்தெம்பர் ஆரம்பத்தில் மேற்கொள்ளப்பட்ட நியதி ஒதுக்கு விகிதத்தின் அதிகரிப்பினூடாக கணிசமானளவு குறைக்கப்பட்டிருந்தது. 2021 காலப்பகுதியில் காணப்பட்ட மிகையான திரவத்தன்மைக்கு முதலாந்தரச் சந்தை ஏலங்களில் அரசாங்கப் பிணையங்களை கொள்வனவு செய்வதன் ஊடாக மத்திய வங்கியினால் வழங்கப்பட்ட கணிசமான திரவத்தன்மை மற்றும் நேரடி பகிர்ந்தளிப்பு என்பன முக்கிய காரணங்களாக அமைந்திருந்தன. எனினும், மொத்த அலுவல்சார் ஒதுக்குகளைப் பயன்படுத்தி அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்பட்ட வெளிநாட்டு கடன் மீள்கொடுப்பனவுகள், வங்கித்தொழில் முறைமையிலிருந்து பொதுமக்களால் மேற்கொள்ளப்பட்ட பாரியளவிலான பணம் மீளெடுப்பு மற்றும் உள்நாட்டு வங்கிகளுடனான வெளிநாட்டு நாணய கொள்வனவு-விற்பனை பரஸ்பர பரிமாற்றல் ஒப்பந்தங்களின் முதிர்ச்சி என்பன 2021இல் ஓகத்து நடுப்பகுதியில் உள்நாட்டு பணச்சந்தையில் திரவத்தன்மை மிகச்சிறிய பற்றாக்குறை மட்டங்களுக்கு வீழ்ச்சியடைவதற்கு வழிவகுத்திருந்தது. நாணயக்கொள்கை


**வரைபடம் 7.2**
**முக்கிய கொள்கை வீதங்கள், சராசரி நிறையேற்றப்பட்ட அழைப்பு பணவீதம் மற்றும் ஓரிரவு பணச்சந்தை திரவத்தன்மை**




*மூலம்* : இலங்கை மத்திய வங்கி

**வரைபடம் 7.3**

**தெரிவு செய்யப்பட்ட சந்தை வட்டி வீதங்களின் அசைவுகள்**




*மூலம்:* இலங்கை மத்திய வங்கி

நிலைமையின் இறுக்கமாக்களானது 2021 செத்தெம்பர் தொடக்கம் சந்தையில் ரூபாவின் திரவத்தன்மையில் மேலும் வீழ்ச்சியொன்றினை ஏற்படுத்தியிருந்தது. திரவத்தன்மை மட்டங்களில் சமச்சீரற்ற திரவத்தன்மை மற்றும் திரவத்தன்மை மட்டங்களின் தளம்பல் என்பவற்றை கருத்திற்கொண்டு மத்திய வங்கி திறந்த சந்தை நடவடிக்கைகளை நடாத்துவதற்குத் தொடங்கியிருந்த அதேவேளை சந்தையில் ரூபா திரவத்தன்மையில் பற்றாக்குறை மட்டங்களை பேணியிருந்தது. வங்கிகளினுள் சமச்சீரற்ற திரவத்தன்மை பரம்பலுக்கு மத்தியில் சராசரி நிறையேற்றப்பட்ட அழைப்பு பண வீதத்தினை விரும்பத்தக்க மட்டங்களில் வழிநடாத்தும் நோக்குடன் ஓரிரவு மற்றும் தவணை மீள்கொள்வனவு ஒப்பந்த ஏலங்கள் ஆகிய இரண்டும் நடாத்தப்பட்டன. குறிப்பிட்ட சில வங்கிகளால் மத்திய வங்கியின் துணைநில் கடன் வழங்கல் வசதிக்கான அவ்வப்போதான அணுகலுக்கு தீர்வுகாணும் வகையில் திரவத்தன்மையினை உட்செலுத்துவதற்காக அவ்வப்போது நேர்மாற்று மீள்கொள்வனவு ஏலங்களையும் மத்திய வங்கி நடாத்தியிருந்தது. திரவத்தன்மை நிலைமைகளுக்கு பதிலிறுத்தும் வகையில் மீளாய்வுக்குட்பட்ட காலப்பகுதியில் சராசரி நிறையேற்றப்பட்ட அழைப்புப்பண வீதமானது கொள்கை வீத வீச்சின் உயர் எல்லையினை நோக்கி படிப்படியாக மேல்நோக்கி சீராக்கம் செய்யப்பட்டிருந்தது.

> ***நியதி ஒதுக்கு விகிதத்தின் 2 அடிப்படைப் புள்ளி அதிகரிப்பானது உள்நாட்டு பணச் சந்தையிலிருந்து ஏறத்தாழ ரூ.170 பில்லியன் திரவத்தன்மையினை ஈர்த்திருந்தது...***

தளர்த்தப்பட்ட நாணயக்கொள்கை நிலைமைகளின் காரணமாக கீழ்நோக்கிய போக்கில் காணப்பட்ட பெரும்பாலான சந்தை வட்டி வீதங்கள் 2021 ஓகத்து நடுப்பகுதியில் மேற்கொள்ளப்பட்ட நாணயக்கொள்கை இறுக்கப்படுத்தலினைத் தொடர்ந்து மாற்றமடைந்திருந்தன. உள்நாட்டு பணச்சந்தையில் போதிய திரவத்தன்மைக்கு மத்தியில் முன்னொருபோதுமல்லாத நாணயத்தளர்த்தல் மட்டமானது சில்லறை சந்தை வட்டி வீதங்களை குறைவான மட்டங்களில் பேணுவதற்கு உதவியிருந்தது. 2020இல் அவதானிக்கப்பட்ட போக்கு தொடர்ந்தமையின் மூலம் சந்தை வைப்பு வீதங்கள் 2021 யூன் வரையிலும் ஒட்டுமொத்தமான குறைவொன்றினைக் காண்பித்திருந்தன. சந்தை கடன்வழங்கல் வீதங்களும் 2021 காலப்பகுதியில் வரலாற்றிலேயே அவற்றின் குறைவான மட்டங்களைப் பதிவுசெய்திருந்தன. குறிப்பாக, உலகளாவிய நோய்த்தொற்றினால் கடுமையாகப் பாதிக்கப்பட்ட சிறிய, நுண்பாக மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகளுக்கான கடன்கள் மீதான வட்டி வீதங்களும், சந்தை கடன்வழங்கல் வீதங்களில் ஒட்டுமொத்த போக்கிற்கிசைவாக சராசரியாக கணிசமானளவில் வீழ்ச்சியடைந்திருந்தன. எனினும், தெரிவுசெய்யப்பட்ட உற்பத்திகள் மற்றும் துறைகள் மீதான குறிப்பாக பிணையளிக்கப்படாத கடன்கள் மற்றும் முதன்மை வாடிக்கையாளர்கள் அல்லாதவர்களுக்கான கடன்கள் மீதான கடன்வழங்கல் வீதங்கள் ஓரளவு உயர்வாகவே காணப்பட்டன. மேலும், சந்தை வட்டி வீதங்கள் குறைவான மட்டங்களுக்கு வீழ்ச்சியடைந்தமையுடன் வைப்புகள் மீதான குறிப்பாக சேமிப்பு வைப்புகள் மற்றும் குறுகியகால நிலையான வைப்புக்கள் மீதான உண்மை வருவாய்கள் எதிர்மறையாகத் திரும்பலடைந்திருந்தன. இருந்தபோதிலும், நாணயக்கொள்கை நிலைமைகள் படிப்படியாக இறுக்கமாக்கப்பட்டதன் மூலம் புதிய வைப்பு வீதங்கள் அதிகரிக்கத் தொடங்கியிருந்த அதேவேளை புதிய சந்தை கடன்வழங்கல் வீதங்கள் படிப்படியாக மேல்நோக்கி நகர்வடைவதற்குத் தொடங்கியிருந்தன.

அதேவேளை, 2020 காலப்பகுதியில் குறிப்பிடத்தக்களவில் வீழ்ச்சியடைந்த அரசாங்கப் பிணையங்கள் மீதான விளைவுகளும் அரசாங்கப் பிணையங்களின் முதலாந்தர ஏலங்களில் ஏற்றுக்கொள்ளுதலுக்கான உயர்ந்தபட்ச விளைவு வீதங்களுக்கான சரிப்படுத்தல்களுடன் இணைந்து 2020இன் பிந்திய பகுதியிலிருந்து படிப்படியாக மேல்நோக்கி சீராக்கம் செய்யப்பட்டு அரசாங்கத்தின் அதிகரித்த கடன்பெறுதல் தேவைப்பாட்டினைப் பிரதிபலித்திருந்தது. விரிவடைந்த வரவுசெலவுத் திட்டப் பற்றாக்குறை மற்றும் அரசாங்கத்திற்கான குறைவடைந்த வெளிநாட்டு நாணய

உட்பாய்ச்சல்களும் அரசாங்கப் பிணையங்கள் மீதான விளைவுகளில் மேல்நோக்கிய அழுத்தங்களினைத் தோற்றுவித்திருந்தன. 2021 ஓகத்து நடுப்பகுதியில் மேற்கொள்ளப்பட்ட நாணயக்கொள்கை இறுக்கமாக்கள் மற்றும் சந்தை முன்னுரிமைகளை சிறப்பாக பிரதிபலிப்பதற்கு 2021 செத்தெம்பர் நடுப்பகுதியில் முதலாந்தர ஏலங்களில் ஏற்றுக்கொள்ளுதலுக்கான உயர்ந்தபட்ச விளைவு வீதங்களின் நீக்கல் என்பவற்றினைத் தொடர்ந்து அரசாங்கப் பிணையங்கள் மீதான விளைவுகள் தொடர்ந்தும் மேல்நோக்கி சீராக்கம் செய்யப்பட்டன.

உள்நாட்டு வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையில் தடைப்பட்ட திரவத்தன்மைக்கு மத்தியில் வெளிநாட்டுச் செலாவணியைத் திரட்டுவதற்கான வங்கிகளுக்கிடையிலான போட்டியினைப் பிரதானமாக பிரதிபலித்து வெளிநாட்டு நாணய வைப்புக்கள் மீதான வட்டி வீதங்கள் குறிப்பிடத்தக்களவில் அதிகரித்திருந்தன. உள்நாட்டு நாணய மற்றும் வெளிநாட்டு நாணய நிதியியல் சாதனங்களுக்கிடையில் கட்டியெழுப்பப்பட்ட வட்டி வீத வேறுபாடுகளை நீக்கும் பொருட்டு 2021 ஓகத்தின் பிந்திய பகுதியில் உரிமம்பெற்ற வங்கிகளில் மேற்கொள்ளப்பட்ட வெளிநாட்டு நாணய வைப்புக்கள் மீது உயர்ந்தபட்ச வட்டி வீதமொன்று விதிக்கப்பட்டது.

## 7.3 பணம் மற்றும் கொடுகடன்

2021 ஓகத்து இறுதியளவில் ரூ.10.5 றில்லியனுக்கு அதிகரித்த விரிந்த பணத்தின் ஒட்டுமொத்த கையிருப்புடன் விரிந்த பணத்தின் ($M_{2b}$) வளர்ச்சியானது 2020 ஒத்தோபரிலிருந்து 20 சதவீதத்திற்கும் மேற்பட்ட அளவில் காணப்பட்டது. தனியார் துறை மற்றும் அரசாங்கத் துறை ஆகிய இரண்டிற்குமான உள்நாட்டு கொடுகடனில் குறிப்பிடத்தக்க அதிகரிப்பினைத் தோற்றுவித்த முன்னொருபோதுமல்லாத மட்டமொன்றிற்கு நாணயக்கொள்கை நிலைமையினைத் தளர்த்தியமை விரிந்த பணநிரம்பலின் அதிகரிப்பிற்கு பங்களித்திருந்தது.

விரிந்த பணநிரம்பலின் ($M_{2b}$) சொத்துப் பக்க நியதிகளில், பணத்தின் விரிவாக்கமானது ஒட்டுமொத்தமாக வங்கித்தொழில் முறைமையின் தேறிய உள்நாட்டு சொத்துக்களில் ஏற்பட்ட அதிகரிப்பினால் தூண்டப்பட்டிருந்த

**அட்டவணை 7.1**

**நாணயக்கூட்டுக்களின் அபிவிருத்திகள் (அ)**

ரூ.பில்

| | ஓகத் - 21 | மாற்றம் (ஆண்டின் இற்றைவரையான மாற்றம்) |
|---|---|---|
| $M_{2b}$ | 10,513.6 | 1,107.9 |
| தேறிய வெளிநாட்டு சொத்துக்கள் | - 701.0 | - 491.5 |
| தேறிய உள்நாட்டு சொத்துக்கள் | 11,214.6 | 1,599.4 |
| அரசிற்கான தேறிய கொடுகடன் | 5,682.1 | 1,134.1 |
| அரசிற்குச் சொந்தமான வியாபார தொழில் முயற்சிகள் | 1,136.9 | 134.7 |
| தனியார் துறைக்கான கொடுகடன் | 6,795.5 | 624.6 |

அ. தற்காலிகமானது


*மூலம்:* இலங்கை மத்திய வங்கி

> மத்திய வங்கியினால் பின்பற்றப்பட்ட தளர்த்தப்பட்ட நாணயக்கொள்கை வழிமுறைகள் மற்றும் அரசாங்க கடன்பெறுகைத் தேவைப்பாட்டின் மிதமிஞ்சிய நாணய நிதியிடல் என்பன 2020 நடுப்பகுதியிலிருந்து 2021 ஓகத்து வரையான காலப்பகுதியில் விரிந்த பணநிரம்பலின் விரைவான விரிவாக்கத்திற்கு இட்டுச்சென்றிருந்தது...

அதேவேளை மத்திய வங்கியின் தேறிய வெளிநாட்டுச் சொத்துக்களில் ஏற்பட்ட வீழ்ச்சியின் பிரதான காரணமாக வங்கித்தொழில் முறைமையின் தேறிய வெளிநாட்டு சொத்துக்கள் குறிப்பிடத்தக்களவு சுருக்கமடைந்திருந்தன. உலகளாவிய நோய்த்தொற்று மற்றும் பன்னாட்டு மூலதனச் சந்தைகளுக்கான மட்டுப்படுத்தப்பட்ட அனுகுவழி என்பவற்றுக்கு மத்தியில் அரசாங்கத்தின் அதிகரித்த நிதித் தேவைப்பாடானது பாரியளவில் வங்கித்தொழில் முறைமையினூடாக பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தது. அதற்கமைய, 2020இல் அவதானிக்கப்பட்ட தொடர்ச்சியான போக்குடன் வங்கித்தொழில் முறைமை மூலமான அரசாங்கத்திற்கான தேறிய கொடுகடன் 2021 சனவரி தொடக்கம் ஓகத்து வரையான காலப்பகுதியில் குறிப்பிடத்தக்களவு அதிகரித்திருந்தது. இது திறைசேரி உண்டியல்களை கொள்வனவு செய்வதன் ஊடாக மத்திய வங்கியினால் அரசாங்கத்திற்கு வழங்கப்பட்ட குறிப்பிடத்தக்க நிதியியல் ஆதரவினையும் உள்ளடக்குகின்றது. அதற்கமைய, மத்திய வங்கியிடமிருந்தான அரசாங்கத்திற்கான தேறிய கொடுகடனானது 2021 ஓகத்தில் முடிவடைந்த எட்டு மாத காலப்பகுதியில் குறிப்பிடத்தக்களவு அதிகரித்திருந்தது. கொள்கை வட்டி வீதங்களின் அதிகரிப்பு மற்றும்

**வரைபடம் 7.4**

**விரிந்த பணத்தின் ($M_{2b}$) ஆண்டிற்காண்டு வளர்ச்சிக்கான பங்களிப்பு**





*மூலம்:* இலங்கை மத்திய வங்கி

2021 செத்தெம்பர் நடுப்பகுதியில் மேற்கொள்ளப்பட்ட ஏற்றுக்கொள்ளலுக்கான உயர்ந்தபட்ச விளைவு வீதங்களை அகற்றுதல் என்பவற்றைத் தொடர்ந்து அரசாங்கப் பிணையங்கள் மீதான விளைவுகளில் குறிப்பிடத்தக்க அதிகரிப்புடன் அரசாங்கப் பிணையங்களின் முதலாந்தரச் சந்தை ஏலங்களில் மத்திய வங்கியின் அங்கத்துவ தேவைப்பாடானது எதிர்வரும் காலங்களில் படிப்படியாக தளர்வடையுமென எதிர்பார்க்கப்படுகின்றது. ரூபா மற்றும் வெளிநாட்டு நாணய நியதிகள் ஆகிய இரண்டிலும் உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளிடமிருந்து அரசிற்குச் சொந்தமான வியாபார தொழில்முயற்சிகளினால் பெற்றுக்கொள்ளப்பட்ட கொடுகடன் 2021 சனவரி தொடக்கம் ஓகத்து வரையான காலப்பகுதியில் விரிவாக்கமடைந்திருந்ததுடன் இது அநேகமாக உலகளாவிய நோய்த்தொற்று பரவல் மூலம் மோசமடையச்செய்திருந்த அரசாங்கத்திற்குச் சொந்தமான தொழில்முயற்சிகளின் நலிவான நிதியியல் நிலைமையினை பரந்தளவில் பிரதிபலித்திருந்தது.

> *அரசிற்குச் சொந்தமான வியாபார தொழில்முயற்சிகளுக்கான பாரியளவான கொடுகடன் பாய்ச்சல்களுடன் அரசாங்கத்திற்கான தேறிய கொடுகடனின் முன்னொருபோதுமல்லாத விரிவடைதலானது தொடர்ந்திருந்த அதேவேளை தனியார் துறைக்கு வழங்கப்பட்ட கொடுகடன் வளர்ச்சியும் 2021இன் இதுவரையான காலப்பகுதியில் குறிப்பிடத்தக்களவு அதிகரித்திருந்தது...*


தனியார் துறைக்கு வழங்கப்பட்ட கொடுகடனானது 2021 ஓகத்து இறுதியளவில் ஆண்டிற்கு ஆண்டு 15.1 சதவீதம் கொண்ட வளர்ச்சியினைப் பதிவுசெய்திருந்தது. இதற்கு மிகக் குறைந்தளவான சந்தை வட்டி வீதங்கள், சலுகைக் கடன் திட்டங்கள், பொருளாதார நடவடிக்கை படிப்படியாக மீட்சியடைவதுடன் இணைந்ததான இறக்குமதிக் கட்டுப்பாடுகளின் மீதான தளர்த்தல்கள் என்பன முக்கியமாகத் துணையளித்திருந்தன. தனியார் துறைக்கு வழங்கப்பட்ட கொடுகடன் 2020 காலப்பகுதியின் ரூ.374.1 பில்லியன் கொண்ட வருடாந்த அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் 2021 ஓகத்தில் முடிவடைந்த எட்டு மாதகாலப்பகுதியில் ரூ.624.6 பில்லியனால் கணிசமானளவில் விரிவாக்கமடைந்திருந்தது. உலகளாவிய நோய்த்தொற்றினால் பாதிக்கப்பட்ட வியாபாரங்கள் மற்றும் தனிநபர்களுக்கு ஆதரவளிப்பதற்காக அறிவிக்கப்பட்ட பல்வேறு கொடுகடன் திட்டங்களின் ஆதரவுடன் நுண்பாக, சிறிய, மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகள் உள்ளடங்கலாக பொருளாதாரத்தின் உற்பத்தித்திறன்மிக்க துறைகளை நோக்கி வங்கித்தொழில் துறையிலிருந்து ஆண்டின் இதுவரையான காலப்பகுதியில் குறிப்பிடத்தக்கதொரு கொடுகடன் அதிகரிப்பு அவதானிக்கப்பட்டிருந்தது.

**வரைபடம் 7.5**
**வங்கித் தொழில் முறைமையிலிருந்தான அரசிற்கான தேறிய கொடுகடனின் வருடாந்த மாற்றம்**




*மூலம் :* இலங்கை மத்திய வங்கி

**வரைபடம் 7.6**
**உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளால் தனியார் துறைக்கு வழங்கப்பட்ட கொடுகடன்**




*மூலம்:* இலங்கை மத்திய வங்கி

அட்டவணை 7.2

## வட்டி வீதங்களின் அசைவுகள்

வருடாந்த %

| வட்டி வீதம் | 2018 இறுதியில் | 2019 இறுதியில் | 2020 இறுதியில் | 2021 செத் இறுதியில் |
|---|---|---|---|---|
| **முக்கிய கொள்கை வீதங்கள்** | | | | |
| துணைநில் வைப்பு வசதி வீதம் | 8.00 | 7.00 | 4.50 | 5.00 |
| துணைநில் கடன்வழங்கல் வசதி வீதம் | 9.00 | 8.00 | 5.50 | 6.00 |
| **சராசரி நிறையேற்றப்பட்ட அழைப்புப்பண வீதம்** | 8.95 | 7.45 | 4.55 | 5.94 |
| **அரச பிணையங்கள் மீதான விளைவு வீதங்கள்** | | | | |
| **முதலாந்தரச் சந்தை (அ)** | | | | |
| **திறைசேரி உண்டியல்கள்** | | | | |
| 91-நாள் | 10.01 | 7.51 | 4.69 | 6.70 |
| 182-நாள் | 9.99 | 8.02 | 4.80 | 6.99 |
| 364-நாள் | 11.20 | 8.45 | 5.05 | 7.01 |
| **திறைசேரி முறிகள்** | | | | |
| 2-வருடம் | - | 9.79 | 5.65 | 8.12 |
| 3-வருடம் | 11.88 | 9.65 | 5.99 | 8.10 |
| 4-வருடம் | - | - | 6.32 | 8.55 |
| 5-வருடம் | 11.69 | 9.87 | 6.79 | 7.31 |
| 10-வருடம் | 10.20 | 10.23 | 9.99 | 8.86 |
| **இரண்டாந்தரச் சந்தை** | | | | |
| **திறைசேரி உண்டியல்கள்** | | | | |
| 91-நாள் | 9.67 | 7.52 | 4.63 | 6.48 |
| 182-நாள் | 9.96 | 7.88 | 4.73 | 6.59 |
| 364-நாள் | 10.91 | 8.36 | 4.98 | 6.72 |
| **திறைசேரி முறிகள்** | | | | |
| 2-வருடம் | 11.16 | 8.60 | 5.56 | 7.37 |
| 3-வருடம் | 11.42 | 9.08 | 5.96 | 8.17 |
| 4-வருடம் | 11.54 | 9.46 | 6.40 | 8.92 |
| 5-வருடம் | 11.58 | 9.67 | 6.65 | 9.31 |
| 10-வருடம் | 11.87 | 10.05 | 7.55 | 10.15 |
| **உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள் (ஆ)** | | | | |
| ***வைப்புக்கள் மீதான வட்டி வீதங்கள்*** | | | | |
| சேமிப்பு வைப்புக்கள் | 0.50-8.50 | 0.20-7.50 | 0.10-7.00 | 0.10-6.00 (இ) |
| 1 ஆண்டு நிலையான வைப்புக்கள் (ஈ) | 4.53-15.00 | 3.55-15.00 | 0.25-15.00 | 0.25-15.00 (இ) |
| சராசரி நிறையேற்றப்பட்ட வைப்பு வீதம் (உ) | 8.81 | 8.20 | 5.80 | 4.75 |
| சராசரி நிறையேற்றப்பட்ட நிலையான வைப்பு வீதம் (உ) | 10.85 | 10.05 | 7.14 | 5.64 |
| சராசரி நிறையேற்றப்பட்ட புதிய வைப்பு வீதம் (உ) | 10.94 | 8.89 | 4.93 | 5.19 (இ) |
| சராசரி நிறையேற்றப்பட்ட புதிய நிலையான வைப்பு வீதம் (உ) | 11.27 | 9.17 | 5.08 | 5.35 (இ) |
| ***கடன்வழங்கல் மீதான வட்டி வீதங்கள்*** | | | | |
| சராசரி நிறையேற்றப்பட்ட முதன்மை கடன் வழங்கல் வீதம் - மாதாந்தம் | 11.94 | 10.00 | 5.74 | 6.39 |
| சராசரி நிறையேற்றப்பட்ட கடன் வழங்கல் வீதம் | 14.40 | 13.59 | 10.29 | 9.38 (இ) |
| சராசரி நிறையேற்றப்பட்ட புதிய கடன் வழங்கல் வீதம் | 14.54 | 12.80 | 8.38 | 8.04 (இ) |
| **ஏனைய நிதியியல் நிறுவனங்கள் (ஊ)** | | | | |
| ***வைப்புக்கள் மீதான வட்டி வீதங்கள்*** | | | | |
| தேசிய சேமிப்பு வங்கி | | | | |
| சேமிப்பு வைப்புக்கள் | 4.00 | 4.00 | 3.50 | 3.50 |
| 1 ஆண்டு நிலையான வைப்புக்கள் | 10.50 | 9.83 | 5.25 | 5.50 |
| உரிமம் பெற்ற நிதிக் கம்பனிகள் (எ) | | | | |
| சேமிப்பு வைப்புக்கள் | 5.21-7.77 | 5.14-7.10 | 3.40-4.74 | 3.26-4.50 (இ) |
| 1 ஆண்டு நிலையான வைப்புக்கள் | 11.63-13.21 | 10.98-11.97 | 6.56-7.21 | 6.64-7.61 (இ) |
| ***கடன்வழங்கல் மீதான வட்டி வீதங்கள்*** | | | | |
| தேசிய சேமிப்பு வங்கி | 6.75-16.25 | 12.00-14.50 | 7.00-10.00 | 7.50-11.50 |
| அரச ஈட்டு முதலீட்டு வங்கி (ஏ) | 10.50-20.00 | 10.25-18.00 | 8.73-12.50 | 7.50-12.50 |
| உரிமம் பெற்ற நிதிக்கம்பனிகள் (எ) | | | | |
| நிதிக் குத்தகை | 16.17-28.80 | 14.75-27.40 | 14.31-28.97 | 13.26-27.00 (இ) |
| வாடகைக் கொள்வனவு | 15.16-18.65 | 13.40-24.82 | 13.71-20.05 | 21.28-25.26 (இ) |
| மெய் ஆதனங்களுக்கு எதிரான கடன்கள் | 18.94-19.21 | 15.53-16.71 | 19.95-22.30 | - |
| அசையா சொத்துக்களுக்கெதிரான கடன்கள் (ஐ) | - | - | - | 13.89-16.50 (இ) |
| **கம்பனி படுகடன் சந்தை** | | | | |
| தொகுதிக் கடன்கள் | 12.00-14.75 | 12.30-15.50 | 9.00-13.25 | 8.00-12.00 |
| வர்த்தகப் பத்திரம் | 13.10-15.00 | 13.00-16.25 | 6.50-15.50 | 6.25-11.50 (இ) |

(அ) இறுதியாகக் கிடைக்கப்பெற்ற ஏலத்தில் உள்ளவாறான சராசரி நிறையேற்றப்பட்ட விளைவு வீதங்கள்

(ஆ) வர்த்தக வங்கிகளால் குறித்துரைக்கப்பட்ட வீதங்களை அடிப்படையாகக் கொண்டது

(இ) 2021 ஓகத்து இறுதியில்

(ஈ) உயர்ந்தபட்ச வீதமானது குறிப்பிட்ட வர்த்தக வங்கிகளால் வழங்கப்பட்ட சிறப்பு வீதமாகும்.

(உ) 2018 யூலையிலிருந்து அரசினால் வழங்கப்பட்ட மூத்த பிரசைகளுக்கான சிறப்பு வைப்பு வட்டி வீதத்தின் தாக்கத்தினை நீக்குவதற்காக சிறப்பு வட்டி வீதமான 15 சதவீதத்திற்கு பதிலாக தொடர்புடைய சந்தை வட்டி வீதங்களைப் பயன்படுத்தி சராசரி நிறையேற்றப்பட்ட வைப்பு வீதமும் சராசரி நிறையேற்றப்பட்ட நிலையான லைப்பு வீதமும் கணிப்பிடப்பட்டுள்ளது. 2018 யூனிலிருந்து சராசரி நிறையேற்றப்பட்ட புதிய வைப்பு வீதமும் சராசரி நிறையேற்றப்பட்ட புதிய நிலையான வைப்பு வீதமும் கணிப்பிடுவதற்கு இதே முறை பிரயோகிக்கப்பட்டுள்ளது

(ஊ) ஏனைய தேர்ந்தெடுக்கப்பட்ட நிதியியல் நிறுவனங்களினால் குறிக்கப்பட்ட வீதங்களின் அடிப்படையில்

(எ) தொடர்புடைய மாதங்களுக்காகத் திரட்டப்பட்ட வைப்புக்கள் மற்றும் கடன் வழங்கல்கள் மீது பிரயோகிக்கப்படும் வட்டி வீதங்களின் எல்லையானது உரிமம் பெற்ற நிதிக்கம்பனிகளினால் குறிக்கப்பட்ட வீதங்களின் அடிப்படையில் தொடர்புடைய மாதங்களுக்காகத் திரட்டப்பட்ட வைப்புக்கள் மற்றும் கடன் வழங்கல்கள் மீது பிரயோகிக்கப்படும் வட்டி வீதங்களின் எல்லையானது உரிமம் பெற்ற நிதிக்கம்பனிகளால் குறிக்கப்பட்ட சராசரி உயர்ந்தபட்ச மற்றும் குறைந்தபட்ச வீதங்களை அடிப்படையாகக் கொண்டது. 2021இற்கான தரவுகள் தற்காலிகமானவை.

(ஏ) வீடமைப்பு நோக்கங்களுக்கான கடன்வழங்கல் மட்டும்

(ஐ) 2021 யூலையிலிருந்து "மெய் ஆதனங்களுக்கு எதிரான கடன்கள்" என்ற குறிகாட்டியானது "அசையா சொத்துக்களுக்கு எதிரான கடன்கள்" என்பதாக மாற்றியமைக்கப்பட்டுள்ளது.

*மூலங்கள்:* தொடர்புடைய நிதியியல் நிறுவனங்கள
கொழும்பு பங்குப் பரிவர்த்தனை
இலங்கை மத்திய வங்கி

அட்டவணை 7.3
நாணயக்கூட்டுக்களின் அபிவிருத்திகளும் அடிப்படைக் காரணிகளும்

ரூ.பில்.

| விடயம் | 2018 திசெ. | 2019 திசெ. (அ) | 2020 திசெ. | 2021 ஓகத் (ஆ) |
|---|---|---|---|---|
| **1. ஒதுக்குப் பணம்** | **961.1** | **932.6** | **964.4** | **1,089.3** |
| (ஆண்டுக்காண்டு % மாற்றம்) | 2.3 | -3.0 | 3.4 | 23.8 |
| மத்திய வங்கியின் தேறிய வெளிநாட்டுச் சொத்துக்கள் | 750.5 | 896.0 | 526.8 | -83.9 |
| மத்திய வங்கியின் தேறிய உள்நாட்டு சொத்துக்கள் | 210.6 | 36.6 | 437.7 | 1,173.1 |
| **2. குறுகிய பணம் ($M_1$)** | **830.8** | **865.5** | **1,177.2** | **1,355.2** |
| (ஆண்டுக்காண்டு % மாற்றம்) | 4.7 | 4.2 | 36.0 | 28.0 |
| **3. விரிந்த பணம் ($M_{2b}$)** | **7,128.3** | **7,624.1** | **9,405.7** | **10,513.6** |
| (ஆண்டுக்காண்டு % மாற்றம்) | 13.0 | 7.0 | 23.4 | 21.0 |
| 3.1 தேறிய வெளிநாட்டுச் சொத்துக்கள் | -67.0 | 100.7 | - 209.5 | - 701.0 |
| நாணய அதிகாரசபைகள் (இ) | 750.5 | 896.0 | 526.8 | - 83.9 |
| உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகள் | -817.5 | - 795.3 | - 736.2 | - 617.1 |
| 3.2 தேறிய உள்நாட்டுச் சொத்துக்கள் | 7,195.3 | 7,523.4 | 9,615.2 | 11,214.6 |
| உள்நாட்டுக் கொடுகடன் | 8,833.4 | 9,410.7 | 11,721.2 | 13,614.5 |
| அரசிற்கான தேறிய கொடுகடன் | 2,516.7 | 2,795.9 | 4,548.1 | 5,682.1 |
| மத்திய வங்கி | 472.8 | 363.0 | 868.9 | 1,534.4 |
| உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகள் | 2,043.9 | 2,432.9 | 3,679.2 | 4,147.7 |
| அரச கூட்டுத்தாபனங்கள் /அரசிற்கு சொந்தமான வியாபார தொழில் முயற்சிகளுக்கான கொடுகடன் | 755.4 | 818.0 | 1,002.2 | 1,136.9 |
| தனியார் துறைக்கான கொடுகடன் | 5,561.4 | 5,796.9 | 6,170.9 | 6,795.5 |
| (ஆண்டுக்காண்டு % மாற்றம்) | 15.9 | 4.2 | 6.5 | 15.1 |
| ஏனைய விடயங்கள் (தேறிய) | -1,638.1 | -1,887.3 | -2,106.0 | -2,399.9 |
| **4. விரிந்த பணம் ($M_4$)** | **8,729.6** | **9,444.5** | **11,461.9** | **12,790.1** |
| (ஆண்டுக்காண்டு % மாற்றம்) | 12.0 | 8.2 | 21.4 | 20.2 |
| 4.1 தேறிய வெளிநாட்டு சொத்துக்கள் | -133.7 | 88.8 | -217.1 | -712.9 |
| நாணய அதிகாரசபைகள் (இ) | 750.5 | 896.0 | 526.8 | -83.9 |
| உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகள் | -817.5 | -795.3 | -736.2 | -617.1 |
| உரிமம்பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகள் | -66.7 | -11.9 | -7.6 | -12.0 |
| 4.2 தேறிய உள்நாட்டு சொத்துக்கள் | 8,863.3 | 9,355.8 | 11,679.0 | 13,503.0 |
| அரசிற்கான தேறிய கொடுகடன் | 3,100.0 | 3,483.0 | 5,365.7 | 6,594.6 |
| மத்திய வங்கி | 472.8 | 363.0 | 868.9 | 1,534.4 |
| உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகள் | 2,043.9 | 2,432.9 | 3,679.2 | 4,147.7 |
| உரிமம்பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகள் | 518.6 | 613.9 | 742.2 | 825.8 |
| உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள் | 64.8 | 73.2 | 75.5 | 86.6 |
| அரச கூட்டுத்தாபனங்கள் / அரசிற்கு சொந்தமான வியாபார தொழில் முயற்சிகளுக்கான கொடுகடன் (உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளால்) | 755.4 | 818.0 | 1,002.2 | 1,136.9 |
| தனியார் துறைக்கான கொடுகடன் | 7,501.1 | 7,793.3 | 8,284.5 | 9,033.1 |
| (ஆண்டுக்காண்டு % மாற்றம்) | 14.9 | 3.9 | 6.3 | 13.6 |
| உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகள் | 5,561.4 | 5,796.9 | 6,170.9 | 6,795.5 |
| உரிமம்பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகள் | 753.8 | 814.2 | 936.5 | 1,035.6 |
| உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள் | 1,185.9 | 1,182.2 | 1,177.1 | 1,202.0 |
| ஏனைய விடயங்கள் (தேறிய) | -2,493.3 | -2,738.4 | -2,973.4 | -3,261.6 |
| ஞாபகார்த்த விடயங்கள்: | | | | |
| பணப்பெருக்கி ($M_{2b}$) | 7.42 | 8.18 | 9.75 | 9.65 |
| சுற்றோட்டம் ($M_{2b}$ சராசரி) (ஈ) | 2.11 (அ) | 2.04 | 1.76 | - |

(அ) திருத்தப்பட்டது

(ஆ) தற்காலிகமானது

(இ) இது மத்திய வங்கியின் தேறிய வெளிநாட்டுச் சொத்துக்கள் அதே போன்று அரச கணக்கீட்டு திணைக்களத்தால் அறிக்கையிடப்பட்ட அரசிற்கான அரச முகவர் நிலுவைகள் என்பவற்றை உள்ளடக்குகின்றது.

(ஈ) தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தின் மொ.உ.உ. மதிப்பீடுகளை அடிப்படையாகக் கொண்டது.

*மூலம்:* இலங்கை மத்திய வங்கி

## வரைவிலக்கணங்கள்

1 சராசரி நிறையேற்றப்பட்ட வைப்பு வீதமானது (ச.நி.வை.வீ) உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகள் வசமுள்ள வட்டியை உழைக்கும் அனைத்து வெளிநின்ற ரூபா வைப்புக்களுடன் தொடர்புடைய வட்டி வீதங்களின் அசைவுகளை வெளிப்படுத்துகின்றது.

2 சராசரி நிறையேற்றப்பட்ட நிலையான வைப்பு வீதமானது (ச.நி.நி.வை.வீ) உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகள் வசமுள்ள வட்டியை உழைக்கும் அனைத்து வெளிநின்ற ரூபா தவணை வைப்புக்களுடன் தொடர்புடைய வட்டி வீதங்களை அடிப்படையாகக் கொண்டுள்ளது.

3 சராசரி நிறையேற்றப்பட்ட கடன்வழங்கல் வீதமானது (ச.நி.க.வீ) உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளால் வழங்கப்படுகின்ற வெளிநின்ற அனைத்து ரூபா கடன்கள் மற்றும் முற்பணங்களுக்கான வட்டிவீதங்களை அடிப்படையாகக் கொண்டுள்ளது.

4 சராசரி நிறையேற்றப்பட்ட புதிய வைப்பு வீதமானது (ச.நி.பு.வை.வீ) குறிப்பிட்டதொரு மாத காலப்பகுதியில் உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளால் பெற்றுக்கொள்ளப்பட்ட வட்டியை உழைக்கும் அனைத்து புதிய ரூபா வைப்புக்களுடன் தொடர்புடைய வட்டி வீதங்களை அடிப்படையாகக் கொண்டுள்ளது.

5 சராசரி நிறையேற்றப்பட்ட புதிய நிலையான வைப்பு வீதமானது (ச.நி.பு.நி.வை.வீ) குறிப்பிட்டதொரு மாத காலப்பகுதியில் உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளால் பெற்றுக்கொள்ளப்பட்ட வட்டியை உழைக்கும் அனைத்து புதிய ரூபா தவணை வைப்புக்களுடன் தொடர்புடைய வட்டி வீதங்களை அடிப்படையாகக் கொண்டுள்ளது.

6 சராசரி நிறையேற்றப்பட்ட புதிய கடன்வழங்கல் வீதமானது (ச.நி.பு.க.வீ) குறிப்பிட்டதொரு மாத காலப்பகுதியில் உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளால் வழங்கப்பட்ட அனைத்து புதிய ரூபா கடன்கள் மற்றும் முற்பணங்களுக்கான வட்டி வீதங்களை உள்ளடக்குகின்றது.

7 சராசரி நிறையேற்றப்பட்ட புதிய நுண்பாக கடன்வழங்கல் வீதமானது (ச.நி.பு.நு.க.வீ) குறிப்பிட்டதொரு மாத காலப்பகுதியில் உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளால் நுண், சிறிய மற்றும் நடுத்தரளவிலான தொழில் முயற்சிகளுக்காக வழங்கப்பட்ட அனைத்து புதிய ரூபா கடன்கள் மற்றும் முற்பணங்களுக்கான வட்டி வீதங்களை உள்ளடக்குகின்றது.

8 சராசரி நிறையேற்றப்பட்ட முதன்மைக் கடன்வழங்கல் வீதமானது (ச.நி.மு.க.வீ) குறிப்பிட்டதொரு வார காலப்பகுதியில் உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளால் அவற்றின் முதன்மை வாடிக்கையாளர்களுக்காக வழங்கப்பட்ட குறுங்கால ரூபா கடன்கள் மற்றும் முற்பணங்கள் என்பவற்றிற்கு பிரயோகிக்கத்தக்க வட்டி வீதங்களை அடிப்படையாகக் கொண்டுள்ளது.

9 சராசரி நிறையேற்றப்பட்ட நுண்பாக கடன்வழங்கல் வீதமானது (ச.நி.நு.க.வீ) உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளால் நுண், சிறிய மற்றும் நடுத்தரளவிலான தொழில் முயற்சிகளுக்காக வழங்கப்பட்ட அனைத்து வெளிநின்ற ரூபா கடன்கள் மற்றும் முற்பணங்களுக்கான வட்டி வீதங்களை அடிப்படையாகக் கொண்டுள்ளது.

8

# நிதியியல் துறைச் செயலாற்றமும் முறைமை உறுதிப்பாடும்

*நிதியியல் முறைமையானது 2021 ஓகத்துடன் முடிவடைந்த எட்டு மாத காலப்பகுதியில், சவால்மிக்க உள்நாட்டு மற்றும் உலகளாவிய பேரண்டப் பொருளாதார நிலைமைகளுக்கு மத்தியிலும் தொடர்ந்து தாக்குப்பிடிக்கும் தன்மையினைக் கொண்டிருந்தது. வங்கித்தொழில் துறை, முதன்மைக் குறிகாட்டிகளின் நியதிகளில், போதுமான மூலதன மட்டங்களுடன் விரிவாக்கத்தினை எடுத்துக்காட்டியது. உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள் துறையின் செயலாற்றம் மொத்தச் சொத்துக்களினதும் கொடுகடன் சொத்துப்பட்டியலினதும் சிறிதளவு அதிகரிப்புடன் தொடர்ந்தும் மிதமான நிலையில் காணப்பட்டது. 2021இன் முதலரைப்பகுதியில் தொடர்ந்தும் மிகையான மட்டமொன்றில் காணப்பட்ட உள்நாட்டு பணச் சந்தையின் திரவத்தன்மை 2021 யூலை நடுப்பகுதியில் கணிசமாக வீழ்ச்சியடைந்து 2021 ஓகத்து நடுப்பகுதியிலிருந்து எதிர்க்கணியமான நிலைக்கு மாற்றமடைந்தது. கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்று தாக்கங்களின் காரணமாக ஏற்பட்ட மட்டுப்படுத்தப்பட்ட உட்பாய்ச்சல்களுடன் ஒப்பிடுகையில், வெளிநாட்டு நாணயப் படுகடன் தீர்ப்பனவுக் கொடுப்பனவுகளின் தேவைப்பாடுகள் தொடர்ச்சியாகக் காணப்பட்டமையின் காரணமாக உள்ளூர் வெளிநாட்டுச் செலாவணிச் சந்தை அழுத்தத்திற்குள்ளானது. கணிசமான தளம்பல்களுக்கு மத்தியிலும் கொழும்புப் பங்குப் பரிவர்த்தனை வரவேற்கத்தக்க செயலாற்றமொன்றினைப் பதிவுசெய்தது. தொடர்ச்சியான தேறிய வெளிநாட்டு வெளிப்பாய்ச்சலுக்கு மத்தியிலும் விலைச்சுட்டெண்கள், சந்தை மூலதனமயமாக்கல் மற்றும் உள்நாட்டு முதலீட்டாளர்களினால் தூண்டப்பட்ட நாளாந்த மொத்தப் புரள்வு ஆகியவற்றின் நியதிகளில் கொழும்புப் பங்குப் பரிவர்த்தனை கணிசமான முன்னேற்றத்தினைப் பதிவுசெய்தது. உலகளாவிய நோய்தொற்றின் காரணமாக உயர்ந்த நிச்சயமற்ற தன்மைகளின் போதிலும், நிதியியல் துறையின் சீரான தொழிற்பாட்டினை நிதியியல் உட்கட்டமைப்பு உறுதிப்படுத்தியது.*

## 8.2 நிதியியல் நிறுவனங்கள்

### வங்கித்தொழில் துறை

கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்றின் காரணமாக உள்நாட்டு மற்றும் உலகளாவிய பொருளாதாரத்தில் பொருளாதார நடவடிக்கைகள் கட்டுப்படுத்தப்பட்டிருந்த போதும் 2021 ஓகத்துடன் முடிவடைந்த எட்டு மாத காலப்பகுதியில் முதன்மைக் குறிகாட்டிகளின் நியதிகளில் வங்கித்தொழில் துறை விரிவாக்கத்திற்கான சமிக்ஞைகளை எடுத்துக் காட்டியது. 2021 ஓகத்துடன் முடிவடைந்த எட்டு மாத காலப்பகுதியில் வெளிநாட்டு நாணய திரவத்தன்மை நியதிகளில் துறையினால் தொடர்ச்சியான அழுத்தங்கள் எதிர்நோக்கப்பட்டமைக்கிடையிலும் வங்கித்தொழில் துறையானது போதுமான மூலதன மட்டங்கள், நியதிச் சட்ட ரீதியான திரவச் சொத்து விகிதங்கள் மற்றும் ஒதுக்குப் பாதுகாப்பு விகிதங்கள் என்பனவற்றுடன் தொடர்ச்சியாகத் தொழிற்பட்டது. மேலும், இலாபங்கள் பிடித்துவைக்கப்பட்டமை மற்றும் அதிகரிக்கப்பட்ட குறைந்தபட்ச மூலதனத் தேவைப்பாடுகளைப் பூர்த்தி செய்வதற்காக புதிய மூலதனங்கள் திரட்டப்பட்டமை என்பனவற்றின் காரணமாக மூலதன விகிதங்கள் மேம்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. எனினும், கொடுகடன் சொத்துப்பட்டியலில் கணிசமான விகிதம் சட்ட இசைவுத்தாமதத்தின் கீழ் இருப்பதனால் வங்கிகளின் திரவத்தன்மை மிக நெருக்கமாகக் கண்காணிக்கப்படுவது அவசியமாகும். கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்றின் காரணமாக உலகளாவிய மற்றும் உள்நாட்டுப் பொருளாதாரத்தின் பொருளாதார நடவடிக்கைகள் குறைவடைந்தமை பொருளாதார வளர்ச்சிக்கு முட்டுக் கட்டையாக அமைந்தமையினால், வங்கித்தொழில் துறை படுகடன் இசைவுத்தாமதத்தின் தாக்கத்துடன் சேர்ந்து மெதுவடைந்த பொருளாதாரத்தின் நேரடி மற்றும் மறைமுக தாக்கங்கள் பற்றி எச்சரிக்கையுடன் இருக்க வேண்டியது அவசியமாகும்.

> *2021 ஓகத்துடன் முடிவடைந்த எட்டு மாத காலப்பகுதியில் பேரண்டப் பொருளாதார நிலைமைகளிலிருந்து பின்னடைவொன்று காணப்பட்டமைக்கிடையிலும் வங்கித்தொழில் துறையின் செயலாற்றம் மேம்பட்டது...*

2021 ஓகத்துடன் முடிவடைந்த எட்டு மாத காலப்பகுதியில் வங்கித்தொழில் துறையின் சொத்துக்களினது வளர்ச்சி 2020இன் தொடர்பான காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் மேம்பட்டிருக்கிறது. 2021 ஓகத்துடன் முடிவடைந்த எட்டு மாத காலப்பகுதியில் வங்கித்தொழில் துறையின் மொத்தச் சொத்துக்கள் 2020 ஓகத்துடன் முடிவடைந்த எட்டு மாத காலப்பகுதியின் 10.5 சதவீத (ரூ.1.3 றில்லியன்) வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் ரூ.16.4 றில்லியனுக்கு 12.1 சதவீதத்தினால் (1.8 றில்லியன்) விரிவடைந்தன.

2019 இறுதியில் 5.6 சதவீதத்திற்குக் குறைவடைந்த ஆண்டிற்கு ஆண்டு கொடுகடன் வளர்ச்சி 2020 இறுதியில் 11.9 சதவீதத்திற்கு அதிகரித்ததுடன் 2021 ஓகத்துடன் முடிவடைந்த எட்டு மாத காலப்பகுதியில் மேலும் அதிகரித்து 2021 ஓகத்து இறுதியளவில் 18.0 சதவீதத்தினை அடைந்தது. 2021 ஓகத்துடன் முடிவடைந்த் எட்டு மாத காலப்பகுதியில் மொத்தக் கடன்களும் முற்பணங்களும் ரூ.1.3 றில்லியன் (14.8 சதவீதம்) கொண்ட அதிகரிப்பைப் பதிவுசெய்ததுடன் 2021 ஓகத்து இறுதியில் இது 2020இல் தொடர்பான காலப்பகுதியின் ரூ.725.6 பில்லியன் (8.9 சதவீதம்) கொண்ட அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் ரூ.10.4 றில்லியனை அடைந்தது.

பரிசீலனைக்குரிய காலப்பகுதியில் முதலீடுகளின் வளர்ச்சியில் வீழ்ச்சி அவதானிக்கப்பட்டிருக்கிறது. 2021 ஓகத்துடன் முடிவடைந்த எட்டு மாத காலப்பகுதியில் வங்கித்தொழில் துறையின் முதலீடுகள் ரூ.253.9 பில்லியனால் (6.0 சதவீதம்) அதிகரித்ததுடன் இது கடந்த ஆண்டின் தொடர்பான காலப்பகுதியில் ரூ.598.3 பில்லியனாக (19.8 சதவீதம்) பதிவுசெய்யப்பட்ட முதலீட்டின் வளர்ச்சியை விடக் குறைவானதாகக் காணப்பட்டது.

வங்கித்தொழில் துறையின் விரிவாக்கம் வைப்புக்களினூடாகப் பெருமளவிற்கு நிதியிடப்பட்டதுடன் 2021 ஓகத்து இறுதியிலுள்ளவாறு மொத்தச் சொத்துக்களில் 75.8 சதவீதத்திற்கு இது பங்களித்தது. வங்கித்தொழில் துறையின் வைப்புத் தளம் ரூ.1.3 றில்லியனால் (12.0 சதவீதம்) அதிகரித்தமைக்கு ரூபா வைப்புக்களின் வளர்ச்சியே முக்கிய காரணமாகும். 2021 ஓகத்துடன் முடிவடைந்த எட்டு மாத காலப்பகுதியில் வங்கித்தொழில் துறையின் மொத்தக் கடன்பாடுகள் ரூ.285.8 பில்லியனால் (16.9 சதவீதம்) அதிகரித்தமைக்கு அதிகரித்த ரூபாக் கடன்பாடுகளே முக்கிய காரணமாகும்.

செயற்படாக் கடன்களினது விகிதத்தின் நியதிகளில் அளவிடப்பட்ட துறையின் சொத்துத் தரம் வீழ்ச்சியைக் காட்டியதெனினும் முகாமைப்படுத்தத்தக்கதாகவே தொடர்ந்தும் காணப்பட்டது. செயற்படாக் கடன்கள் 2020 இறுதியின் ரூ.448.1 பில்லியனிலிருந்து 2021 ஓகத்து இறுதியில் ரூ.494.9 பில்லியனுக்கு ரூ.46.9 பில்லியனால் (10.5 சதவீதம்) அதிகரித்தது. எனினும், கொடுகடனில் ஏற்பட்ட உயர்ந்த வளர்ச்சியின் காரணமாக செயற்படாக் கடன் விகிதம் 2020 திசெம்பர் இறுதியில் பதிவுசெய்யப்பட்ட 4.9 சதவீதத்திலிருந்து 2021 ஓகத்து இறுதியில் 4.7 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது. சட்ட இசைவுத்தாமதம்

அட்டவணை 8.1

வங்கித் தொழில்துறை - தெரிவு செய்யப்பட்ட குறிகாட்டிகள்

| விடயம் | 2019 ஓகத் முடிவில் | 2020 ஓகத் முடிவில்(இ) | 2020 திசெ முடிவில் | 2021 ஓகத் முடிவில்(அ) | ஆண்டுக்காண்டு மாற்றம்(%) | |
|---|---|---|---|---|---|---|
| | | | | | 2020 ஓகத் (இ) | 2021 ஓகத்(அ) |
| மொத்தச் சொத்துக்கள் (ரூ.பில்.) | 12,072 | 13,834 | 14,666 | 16,446 | 14.6 | 18.9 |
| கடன்களும் முற்பணங்களும் (ரூ.பில்.) | 7,796 | 8,848 | 9,092 | 10,440 | 13.5 | 18.0 |
| முதலீடுகள் (ரூ.பில்.) | 2,952 | 3,625 | 4,228 | 4,482 | 22.8 | 23.6 |
| வைப்புக்கள் (ரூ.பில்.) | 8,836 | 10,344 | 11,141 | 12,473 | 17.1 | 20.6 |
| கடன்பெறுகைகள் (ரூ.பில்.) | 1,621 | 1,737 | 1,692 | 1,978 | 7.1 | 13.9 |
| மூலதன நிதிகள் (ரூ.பில்.) | 1,096 | 1,206 | 1,254 | 1,401 | 10.0 | 16.2 |
| அடுக்கு 1 மூலதனப் போதுமாந்தன்மை விகிதம் (%)(ஆ) | 13.5 | 13.2 | 13.6 | 13.0 | | |
| மொத்த மூலதனப் போதுமாந்தன்மை விகிதம் (%)(ஆ) | 16.7 | 16.5 | 17.1 | 16.3 | | |
| திரண்ட செயற்படாக் கடன்கள் விகிதம் (%) | 4.9 | 5.4 | 4.9 | 4.7 | | |
| தேறிய செயற்படாக் கடன்கள் விகிதம் (%) | 3.1 | 3.1 | 2.4 | 2.2 | | |
| சொத்துக்கள் மீதான வருவாய் (வரிக்கு முன்) (%) | 1.5 | 1.3 | 1.4 | 1.8 | | |
| பங்குரிமை மூலதனம் மீதான வருவாய் (வரிக்குப் பின்) (%) | 10.8 | 10.6 | 11.4 | 15.9 | | |
| நியதித் திரவச்சொத்துக்களின் விகிதம் (உள்நாட்டு வங்கிப் பிரிவு) (%) | 31.2 | 38.6 | 37.3 | 36.1 | | |
| மொத்தச் சொத்துக்களுக்கான திரவச்சொத்துக்கள் (%) | 29.3 | 34.6 | 33.7 | 31.4 | | |

(அ) தற்காலிகமானது
(ஆ) யூன் முடிவில் உள்ளவாறு
(இ) திருத்தப்பட்டது

*மூலம்:* இலங்கை மத்திய வங்கி

நிறுத்தப்படுவதனைத் தொடர்ந்து செயற்படாக் கடன்கள் அதிகரிப்பதற்கான சாத்தியம் காணப்படுகின்ற போதும், மதிப்பிழப்பின் ஊடாக சட்ட இசைவுத்தாமதத்தின் சாத்தியமான தாக்கத்தின் கணிசமானளவு பங்கினை வங்கிகள் ஏற்கனவே ஈர்த்துக் கொண்டுள்ளன என்பது கவனிக்கத்தக்கதாகும்.

வங்கித்தொழில் துறை குறைந்தபட்ச ஒழுங்கு முறைப்படுத்தல் தேவைப்பாடான 20 சதவீதத்திற்கும் மேலாக போதுமான திரவத்தன்மை தாங்கிருப்புடனேயே தொழிற்பட்டது. உள்நாட்டு வங்கித்தொழில் பிரிவினதும் கரைகடந்த வங்கித்தொழில் பிரிவினதும் நியதி திரவச் சொத்து விகிதங்கள் முறையே 36.1 சதவீதமாகவும் 32.6 சதவீதமாகவும் காணப்பட்டன.

வங்கித்தொழில் துறையின் வெளிநாட்டு நாணய வெளிப்படுத்துகையின் தேறிய நீண்ட நிலைமை 2020 யூன் இறுதியின் ஐ.அ.டொலர் 33.7 மில்லியன் கொண்ட நீண்ட நிலைமையுடன் ஒப்பிடுகையில் 2021 யூன் இறுதியில் ஐ.அ.டொலர் 84.8 மில்லியன் கொண்ட குறுகிய நிலைமைக்கு வீழ்ச்சிடைந்தமைக்கு வெளிநாட்டு நாணயச் சொத்துக்களில் ஏற்பட்ட அதிகரிப்பிலும் வெளிநாட்டு நாணயப் பொறுப்புக்களில் ஏற்பட்ட அதிகரிப்பு கூடுதலாக இருந்தமையே காரணமாகும். 2021 யூன் இறுதியில் வங்கித்தொழில் துறை 2020 யூன் இறுதியில் காணப்பட்ட ரூ.6.3 பில்லியன் இலங்கை ரூபாவிற்குச் சமமான நீண்ட நிலைமையுடன் ஒப்பிடுகையில் ரூ.17.2 பில்லியனுக்குச் சமமான குறுகிய வெளிநாட்டு நாணய நிலைமையினைப் பதிவுசெய்தது. 2021இன் முதலரைப் பகுதியில் வெளிநாட்டு நாணய மீள்மதிப்பீடு மீதான தேறிய இலாபம் 2020இன் தொடர்பான காலப்பகுதியின் ரூ.12.8 பில்லியனுடன் ஒப்பிடுகையில் ரூ.18.8 பில்லியனாகக் காணப்பட்டது.

துறையானது முதலீடுகள் மீது குறைந்த மூலதன இலாபங்களையே பதிவுசெய்தது. 2021 ஓகத்துடன் முடிவடைந்த எட்டு மாத காலப்பகுதியில் திறைசேரி முறிகள் மீதான மூலதன இலாபம் ரூ.4.5 பில்லியனாக அமைந்து 2020இன் தொடர்பான காலப்பகுதியில் பதிவுசெய்யப்பட்ட ரூ.7.7 பில்லியன் கொண்ட இலாபத்திலும் பார்க்கக் குறைவாக விளங்கியது. இதற்கு உயர்ந்த கொடுகடன் வளர்ச்சியின் காரணமாக ஒப்பீட்டு ரீதியில் அரச பிணையங்களை நோக்கி குறைந்த நிதியங்கள் வழிப்படுத்தப்பட்டமையே பெருமளவிற்குக் காரணமாகும்.

பரிசீலனைக்குரிய காலப்பகுதியில் துறையின் இலாபம் அதிகரித்தது. 2021 ஓகத்துடன் முடிவடைந்த எட்டு மாத காலப்பகுதியில் வங்கித்தொழில் துறையின் வரிக்கு முன்னரான இலாபம், 2020இன் தொடர்பான காலப்பகுதியின் ரூ.111.8 பில்லியன் கொண்ட இலாபத்துடன் ஒப்பிடுகையில் ரூ.178.7 பில்லியனாகக் காணப்பட்டது. இது, ரூ.66.9 பில்லியன் கொண்டதொரு அதிகரிப்பாகும். இலாபத்தில் ஏற்பட்ட அதிகரிப்பிற்கு தேறிய வட்டி வருமானம் (ரூ.73.4 பில்லியன்), வட்டியல்லா வருமானம் (ரூ.23.5 பில்லியன்) அதிகரித்தமையும் கடன் இழப்பிற்கான குறைந்த ஒதுக்கமும் (ரூ.11.3 பில்லியன்) காரணங்களாக அமைந்தன. 2021 ஓகத்து இறுதியில் வரிக்கு முன்னரான சொத்துக்கள் மீதான வருவாயும் பங்குரிமை மூலதனத்தின் மீதான வருவாயும் 2020 ஓகத்து இறுதியில் முறையே 1.3 சதவீதத்திலிருந்தும் 10.6 சதவீதத்திலிருந்தும் முறையே 1.8 சதவீதத்திற்கும் 15.9 சதவீதத்திற்கும் அதிகரித்தன.

மோசமான ஏதேனும் அதிர்வுகளை ஈர்த்துக் கொள்ளும் பொருட்டு, 2021இன் முதலரைப் பகுதியில் வங்கித்தொழில் துறை போதுமான மூலதனத்தினைப் பேணியது. 2021 யூன் இறுதியில் வங்கித்தொழில் துறை, 13.0 சதவீதம் கொண்ட அடுக்கு I மூலதன விகிதத்துடனும் 16.3 சதவீதம் கொண்ட மொத்த மூலதன விகிதத்துடனும் பாசல் III தேவைப்பாடுகளுக்கு மிக மேலாகத் தொழிற்பட்டது.

2021இன் முதலரைப்பகுதியில் கிளை வலையமைப்பு மேலும் விரிவடைந்து நாட்டின் நிதியியல் வசதிக்குட்படுத்தலுக்கு வசதியளித்தது. இதன்படி, 2021இன் முதலரைப்பகுதியில், 137 தன்னியக்கக் கூற்றுப் பொறிகள் நிறுவப்பட்டு 02 கிளைகள் திறக்கப்பட்ட வேளையில் 10 தன்னியக்கக் கூற்றுப் பொறிகளும் 01 கிளையும் மூடப்பட்டன.

நெருக்கமான கண்காணிப்புக் குழுக்கள் நிறுவப்பட்டமை, திரவத்தன்மை மற்றும் உரிமம்பெற்ற வங்கிகளின் மூலதனம் என்பன மீதான முக்கிய இடர்நேர்வுகளின் தாக்கத்தினை மதிப்பிடுவதற்கான நாளாந்தம் “நேரகாலத்துடன் எச்சரிக்கை விடுக்கும் குறிகாட்டிகளின் அறிக்கையினைப்” பெற்றுக்கொள்ளுதல், அழுத்தப் பரீட்சிப்புக் கணிப்புக்கள், வெளிநாட்டுச் செலாவணிக் கடன்பாடுகள், இலங்கை நிதியியல் அறிக்கையிடல் நியமம் 9இன் நியதிகளில் கடன் மதிப்பிழப்பு அட்டவணைகள், கொவிட்-19 தொடர்பான சட்ட இசைவுத்தாமதம் / சலுகைகள் என்பனவற்றின் விபரங்களைப் பெற்றுக்கொள்வதற்காக ஏனைய காலாந்தர அறிக்கைகளைக் கவனித்தல் என்பனவற்றினூடாக மேற்பார்வை நடவடிக்கைகள் இடம்பெற்று வருகின்றன. மேலும், தலத்திலான பரீட்சிப்புக்களை நடத்துவதற்கு காணப்படும் வரையறைகளை வெற்றி கொள்ளும் விதத்தில் தூர இருந்து மேற்கொள்ளப்படும் அடிப்படையிலான பரீட்சிப்பு முறையியல் பின்பற்றப்பட்டு வருகின்ற வேளையில் வங்கிகளின் மூத்த அலுவலர்களுடனான கூட்டங்கள், கலந்துரையாடல்களுக்காக மெய்நிகர் தளங்களை நோக்கி நகர்கின்ற வேளையில் பாதுகாப்பான முறையில் தரவுகளைப் பகிர்ந்து கொள்ளும் தீர்வுகளூடாக காகிதங்களற்ற தொடர்புறுத்தல் முறைகள் தொடர்ந்தும் இடம்பெற்று வருகின்றன.

### உரிமம் பெற்ற நிதிக் கம்பனிகள் துறை

2021 ஓகத்துடன் முடிவடைந்த எட்டு மாத காலப்பகுதியில் உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள் துறையின் செயலாற்றம் மொத்தச் சொத்துக்கள் மற்றும் கொடுகடன் சொத்துப்பட்டியலில் ஏற்பட்ட சிறிதளவு அதிகரிப்புடன் மிதமான செயலாற்றமொன்றில் தொடர்ந்தும் காணப்பட்டது. எட்டு மாத காலப்பகுதியில் துறையின் மொத்தச் சொத்துத் தளம் ரூ.9.5 பில்லியனால் (0.7 சதவீதம்) அதிகரித்து 2021 ஓகத்து இறுதியில் ரூ.1,377.4 பில்லியான விளங்கியது. மொத்தச் சொத்துக்களின் பெரும் பங்கினை பிரசன்னப்படுத்துகின்ற கடன்கள் மற்றும் முற்பணங்களின் சொத்துப்பட்டியல் 2021 ஓகத்துடன் முடிவடைந்த எட்டு மாத காலப்பகுதியில் ரூ.29.1 பில்லியனால் (2.9 சதவீதம்) சிறிதளவால் அதிகரித்தது.

2021 ஓகத்துடன் முடிவடைந்த எட்டு மாத காலப்பகுதியில் துறையானது வைப்புக்கள் மற்றும் மூலதனத்தில் அதிகரிப்பினைப் பதிவுசெய்த அதேவேளையில் கடன்பாடுகளில் வீழ்ச்சியொன்று அவதானிக்கப்பட்டது. துறையின் மொத்தக் கடன்பாடுகள் ரூ.32.5 பில்லியன் (10.4 சதவீதம்) கொண்ட வீழ்ச்சியைக் காட்டியது. துறையின் வைப்புத் தளம் ரூ.765.9 பில்லியனாக விளங்கி ரூ.17.3 பில்லியனால் (2.3 சதவீதம்) அதிகரித்தது. குறைந்தபட்ச மூலதனத் தேவைப்பாடுகள் அதிகரிக்கப்பட்டமை மற்றும் பல பாரிய உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளினால் இலாபம் பதிவுசெய்யப்பட்டமை என்பனவற்றின் காரணமாக ரூ.22.5 பில்லியன் (11.0 சதவீதம்) கொண்ட அதிகரித்த மூலதனத்துடன் ஒட்டுமொத்த மூலதன நிலைமை குறிப்பிடத்தக்களவிற்கு மேம்பட்டது. துறையின் திரவத்தன்மை நிலைமை தொடர்ந்தும் திருப்திகரமாகக் காணப்பட்டது.

> *மோசமான பேரண்டப் பொருளாதார நிலைமைகளின் காரணமாக 2021 ஓகத்துடன் முடிவடைந்த எட்டு மாத காலப்பகுதியில் உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள் துறையின் செயலாற்றம் மிதமானதாகக் காணப்பட்டது...*

2021 ஓகத்துடன் முடிவடைந்த எட்டு மாத காலப்பகுதியில் துறையானது முன்னைய ஆண்டின் தொடர்பான காலப்பகுதியில் பதிவுசெய்யப்பட்ட ரூ.2.2 பில்லியன் கொண்ட வரிக்குப் பின்னரான இலாபத்துடன் ஒப்பிடுகையில் ரூ.33.0 பில்லியன் கொண்ட வரிக்குப் பின்னரான இலாபத்தினைப் பதிவுசெய்தது. தேறிய வட்டி வருமானமும் வட்டியல்லா வருமானமும் முறையே ரூ.15.2 பில்லியனாலும் ரூ.12.8 பில்லியனாலும் அதிகரித்ததுடன் ஒதுக்கங்கள் ரூ.16.6 பில்லியனாலும் வீழ்ச்சியடைந்து இலாபத்தன்மை அதிகரிப்பதற்குப் பங்களித்தன. பரிசீலனைக்குரிய காலப்பகுதியில் இத்தொழில்துறை இலாபத்தில் அதிகரிப்புக்களைப் பதிவுசெய்த போதும் 10 உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள் நட்டங்களை பதிவுசெய்துள்ளன.

**அட்டவணை 8.2**
**உரிமம் பெற்ற நிதிக் கம்பனிகள் துறையின் பிரதான செயல்திறன் குறிகாட்டிகள்**

| பிரதான செயல்திறன் குறிகாட்டிகள் | % | |
|---|---|---|
| | 2020 திசெ. முடிவில் | 2021 ஓகத் முடிவில் |
| திரண்ட செயற்படாக் கடன்கள் விகிதம் | 13.9 | 12.5 |
| தேறிய செயற்படாக் கடன்கள் விகிதம் | 4.2 | 3.2 |
| அடுக்கு 1 மூலதனப் போதுமாந்தன்மை விகிதம் | 13.9 | 15.2 |
| மொத்த மூலதனப் போதுமாந்தன்மை விகிதம் | 15.1 | 16.7 |
| தேறிய வட்டி இலாபம் | 6.9 | 8.1 |
| சொத்துக்கள் மீதான வருவாய் | 1.6 | 3.2 |
| பங்கு மூலதனம் மீதான வருவாய் | 5.2 | 12.4 |
| வருமானத்திற்கான செலவு விகிதம் | 90.3 | 80.3 |

*மூலம்:* இலங்கை மத்திய வங்கி

துறையின் சொத்துத் தரம் சிறிதளவால் அதிகரித்துள்ளது. 2021 ஓகத்து இறுதியில் மொத்தச் செயற்படாக் கடன் விகிதம் 2020 திசெம்பர் இறுதியின் 13.9 சதவீதம் கொண்ட விகிதத்துடன் ஒப்பிடுகையில் 12.5 சதவீதத்திற்குக் குறைவடைந்தமைக்கு செயற்படாக் கடன்கள் ரூ.11.9 பில்லியனால் (7.6 சதவீதம்) வீழ்ச்சியடைந்தமையும் கடன்கள் மற்றும் முற்பணங்களின் சொத்துப்பட்டியல் ரூ.31.6 பில்லியனால் (2.8 சதவீதம்) அதிகரித்தமையுமே முக்கிய காரணமாகும். தேறிய செயற்படாக் கடன் விகிதமும் ஒதுக்குப் பாதுகாப்பு விகிதமும் 2020 திசெம்பர் இறுதியில் பதிவுசெய்யப்பட்ட 4.2 சதவீதம் மற்றும் 58.9 சதவீதம் கொண்ட விகிதங்களுடன் ஒப்பிடுகையில் முறையே 3.2 சதவீதமாகவும் 64.5 சதவீதமாகவும் காணப்பட்டன. எனினும், சட்ட இசைவுத்தாமதத்தின் கீழான கொடுகடன் வசதிகள் வகைப்படுத்தல் மற்றும் மதிப்பிழப்பு தன்மைக்குட்பட்டிருக்காமையின் காரணமாக துறையின் செயற்படாக் கடன்கள் உயர்வாக இருக்கக்கூடும்.

மத்திய வங்கி, உரிமம்பெற்ற நிறுவனங்கள் தொடர்பில் சட்ட ரீதியான பரீட்சிப்புக்களையும் (தலத்திலான மேற்பார்வை), தொடர்ச்சியான கண்காணிப்புக்களையும் (தலத்திற்கு வெளியேயான மேற்பார்வை) தொடர்ச்சியாக மேற்கொண்ட வேளையில் ஒழுங்குமுறைப்படுத்தல் தொழிற்பாடுகள் முன்மதியுடைய ஒழுங்குவிதிகளை விடுத்தல், ஒழுங்குமுறைப்படுத்தல் ஒப்புதல்களை வழங்குதல் மற்றும் அதிகாரமில்லாமல் நிதியியல் வியாபாரங்களை மேற்கொள்கின்ற கம்பனிகளைப் புலன் விசாரணை செய்தல் என்பனவற்றுடன் தொடர்புபட்டனவாகக் காணப்பட்டன. இம்முக்கிய தொழிற்பாடுகளுக்குப் புறம்பாக, துறையின் இயலாற்றலைக் கட்டியெழுப்புதல், நீதிமன்ற வழக்காடல்களுக்கு வசதியளித்தல் மற்றும் பொதுமக்களின் முறைப்பாடுகளைக் கவனித்தல் என்பனவும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

### சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகள்

இத்துறையின் மொத்தச் சொத்துக்கள் 2021 ஓகத்துடன் முடிவடைந்த எட்டு மாத காலப்பகுதியில் ரூ.0.9 பில்லியனால் (2.6 சதவீதம்) சிறிதளவால் அதிகரித்து 2021 ஓகத்து இறுதியில் ரூ.34.6 பில்லியனாகக் காணப்பட்டது. கடன்களும் முற்பணங்களும் ரூ.28.2 பில்லியனாக அமைந்து ரூ.1.4 பில்லியனால் (4.8 சதவீதம்) சுருக்கமடைந்தன. 2021 ஓகத்து இறுதியில் மொத்த மூலதனம் ரூ.3.1 பில்லியனால் (20.2 சதவீதம்) அதிகரித்து ரூ.18.2 பில்லியனாக விளங்கியது. 2021 ஓகத்துடன் முடிவடைந்த எட்டு மாத காலப்பகுதியில் துறையானது வரிக்குப் பின்னரான இலாபமாக, 2020ஆம் ஆண்டின் தொடர்பான காலப்பகுதியின் வரிக்குப் பின்னரான இலாபமான ரூ.0.7 பில்லியனுடன் ஒப்பிடுகையில் ரூ.0.8 பில்லியனைப் பதிவுசெய்தது. 2021 ஓகத்து இறுதியில் மொத்த மற்றும் தேறிய செயற்படாக் கடன் விகிதம் முறையே 15.0 சதவீதமாகவும் 4.7 சதவீதமாகவும் காணப்பட்ட வேளையில் ஒதுக்குப் பாதுகாப்பு விகிதம் 68.9 சதவீதமாகக் காணப்பட்டது. ஒப்பிடுகையில் 2020 திசெம்பர் இறுதியில் இவை 13.6 சதவீதமாகவும் 5.3 சதவீதமாகவும் 61.3 சதவீதமாகவும் காணப்பட்டன.

### முதனிலை வணிகர் கம்பனிகள்

முதனிலை வணிகர் கம்பனிகள் துறை 2021 ஓகத்துடன் முடிவடைந்த எட்டு மாத காலப்பகுதியில் முதன்மைக் குறிகாட்டிகளின் நியதிகளில் சுருக்கத்திற்கான சமிக்ஞைகளை எடுத்துக்காட்டியது. 2021 ஓகத்துடன் முடிவடைந்த எட்டு மாத காலப்பகுதியில், முதனிலை வணிகர்கள் தொழில் துறையின் மொத்தச் சொத்துக்கள் ரூ.61.6 பில்லியனாக விளங்கி 29.3 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்ததுடன் முதனிலை வணிகர் கம்பனிகள் வசமிருந்த அரச பிணையங்களின் மொத்தச் சொத்துப்பட்டியல் ரூ.49.0 பில்லியனாக விளங்கி 38.8 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தன. அனைத்து செயற்படுகின்ற முதனிலை வணிகர் கம்பனிகளும் 2021 ஓகத்து இறுதியில் ரூ.1.0 பில்லியன் கொண்ட குறைந்தபட்ச மூலதனத் தேவைப்பாடுகளுக்கு மிக மேலேயே தமது மைய மூலதனத்தினைப் பேணின. முதனிலை வணிகர் கம்பனிகளின் இடர்நேர்வு நிறையேற்றப்பட்ட மூலதனப் போதுமை விகிதம், குறைந்தபட்ச இடர்நேர்வு நிறையேற்றப்பட்ட மூலதனப் போதுமை விகிதமான 10 சதவீதத்திற்கு மேலாகக் காணப்பட்டதுடன் 2021 ஓகத்து இறுதியில் இது 43.0 சதவீதமாக விளங்கியது. கடந்த எட்டு மாத காலப்பகுதியில் முதனிலை வணிகர் கம்பனிகள் 2020இல் தொடர்பான காலப்பகுதியில் பதிவுசெய்யப்பட்ட ரூ.4.7 பில்லியன் கொண்ட இலாபத்துடன் ஒப்பிடுகையில் வரிக்குப் பின்னரான இழப்பாக ரூ.95.2 மில்லியனைப் பதிவுசெய்தன.

### உரிமம்பெற்ற நுண்பாக நிதிக் கம்பனிகள்

2021 ஓகத்து இறுதியில் உரிமம்பெற்ற நுண்பாக நிதிக் கம்பனிகளின் மொத்தச் சொத்துக்கள் ரூ.7.5 பில்லியனாக விளங்கியதுடன் இதில் 70 சதவீதம் கடன்களையும் முற்பணங்களையும் உள்ளடக்கியிருந்தது. இதற்கமைய, பரிசீலனைக்குரிய காலப்பகுதியில், உரிமம்பெற்ற நுண்பாக நிதிக் கம்பனிகளின் மொத்தக் கடன்களும் முற்பணங்களும் ரூ.5.9 பில்லியனாக அமைந்து 4.0 சதவீதம் கொண்ட சிறிதளவு அதிகரிப்பினை எடுத்துக்காட்டின. 2021 ஓகத்து இறுதியில் உரிமம்பெற்ற நுண்பாக நிதிக் கம்பனிகளின் செயற்படாக் கடன் விகிதம், 2020 திசெம்பர் இறுதியின் 8.7 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 10.2 சதவீதத்திற்கு அதிகரித்தது. துறையானது 2021 ஓகத்துடன் முடிவடைந்த முதல் எட்டு மாத காலப்பகுதியில் ரூ.166 மில்லியன் இழப்பினைப் பதிவுசெய்திருக்கிறது.

### காப்புறுதித் துறை

2021இன் முதலரைப்பகுதியில் காப்புறுதித் துறை கலப்பான செயலாற்றமொன்றினைப் பதிவுசெய்திருக்கிறது. 2021 யூன் இறுதியில், ஆயுள் காப்புறுதித் துணைத் துறையின் மொத்தச் சொத்துக்கள் மற்றும் மொத்த எழுதப்பட்ட கட்டுப்பணம் ஆகிய நியதிகளில் ஆண்டிற்கு ஆண்டு அதிகரிப்பிற்குக் குறிப்பிடத்தக்களவில் பதிவு செய்த வேளையில் பொதுக்

காப்புறுதித் துணைத் துறை மொத்தச் சொத்துக்களிலும் மொத்த எழுதப்பட்ட காப்புறுதிக் கட்டுப்பணத்திலும் ஆண்டிற்கு ஆண்டு வீழ்ச்சியைப் பதிவுசெய்தது. காப்புறுதித் துறையின் மொத்தச் சொத்துக்களும் மொத்த எழுதப்பட்ட கட்டுப்பணமும் முறையே 7.9 சதவீதத்தினாலும் 10.7 சதவீதத்தினாலும் வளர்ச்சியடைந்தன. எனினும், 2021இன் முதலரைப்பகுதியில் துறையின் வரிக்கு முன்னரான இலாபம் 2020இன் தொடர்பான காலப்பகுதியில் பதிவுசெய்யப்பட்ட ரூ.18.2 பில்லியனுடன் ஒப்பிடுகையில் வீழ்ச்சியுற்று ரூ.14.5 பில்லியனைப் பதிவுசெய்தது.

### கூறு நம்பிக்கைகள்

2021 யூன் இறுதியில் கூறு நம்பிக்கைகள் துறையின் செயலாற்றம் 2020இன் தொடர்பான காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் கணிசமானளவு முன்னேற்றத்தினை எடுத்துக்காட்டியது. 2021 யூன் இறுதியில் தொழில் துறையின் தேறிய சொத்துப் பெறுமதி ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில் ரூ.222.0 பில்லியனுக்கு 95.7 சதவீதத்தினால் உயர்வடைந்ததுடன் கூறு உடமையாளர்களின் எண்ணிக்கை 16.2 சதவீதத்தினால் 55,651 இற்கு அதிகரித்தது. துறையின் முதலீடுகள் ரூ.222.7 பில்லியனுக்கு ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில் 94.8 சதவீதம் கொண்ட கணிசமான வளர்ச்சியைப் பதிவுசெய்தன. 2021 யூன் இறுதியில் கூறு நம்பிக்கைகள் துறை தேறிய சொத்துப் பெறுமதியின் சதவீதமாக 2020 யூன் இறுதியில் காணப்பட்ட 7.5 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் அரச பிணையங்களில் 10.6 சதவீதத்தினை முதலீடு செய்தது.

### பங்குத்தரகர் கம்பனிகள்

2021 யூன் இறுதியில் பங்குத்தரகர் கம்பனிகள் அவற்றின் ஒட்டுமொத்த செயலாற்றத்தில் முன்னேற்றமொன்றினைப் பதிவுசெய்தமைக்கு 2021இன் முதலரைப்பகுதியில் கொழும்புப் பங்குப் பரிவர்த்தனையின் சந்தை நடவடிக்கைகள் 2020இன் தொடர்பான காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் விரிவடைந்தமையே முக்கிய காரணமாகும். 2021இன் முதலரைப்பகுதியில், பங்குத்தரகர்களின் சராசரி மொத்தப் புரள்வு ரூ.1,553.0 மில்லியனுக்கு 250.6 சதவீதத்தினால் அதிகரித்த வேளையில் துறையின் வரிக்கு முன்னரான இலாபம் ரூ.910.0 மில்லியனுக்கு 476.0 சதவீதத்தினால் அதிகரித்தது.

### ஓய்வூகால நிதியங்கள்

இலங்கையின் பாரிய ஓய்வுகால நிதியமான ஊழியர் சேமலாப நிதியம் 2021 ஓகத்து இறுதியில் ரூ.3.1 றில்லியன் சொத்துத் தளத்துடன் தொழிற்பட்டது. 2020 திசெம்பர் இறுதியில் ஊ.சே. நிதியத்தின் உறுப்பினர் கணக்குகளின் மொத்த எண்ணிக்கை 19.8 மில்லியனை அடைந்தது. 2021 ஓகத்துடன் முடிவடைந்த எட்டு மாத காலப்பகுதியில் மொத்த உறுப்பினர்களின் பங்களிப்பு ரூ.101.8 பில்லியனுக்கு 2.3 சதவீதத்தினால் அதிகரித்தவிடத்து மீளளிப்புக் கொடுப்பனவுகள் முன்னைய ஆண்டின் தொடர்பான காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் ரூ.72.1 பில்லியனுக்கு 2.3 சதவீதத்தினால் குறைவடைந்தன. ஒப்பிடுகையில் மொத்த உறுப்பினர்களின் பங்களிப்பு மற்றும் மீளளிப்புக் கொடுப்பனவுகள் 2020இன் தொடர்பான காலப்பகுதியில் முறையே ரூ99.5 பில்லியன், ரூ.73.8 பில்லியனாகவும் காணப்பட்டன. இதற்கமைய ஆய்விற்குரிய காலப்பகுதியில் தேறிய பங்களிப்பு ரூ.29.7 பில்லியனாகக் காணப்பட்டது.

ஊ.சே.நிதியத்தின் மொத்த முதலீடு ரூ.3,037.9 பில்லியனாகக் காணப்பட்டது. முதலீட்டுச் சொத்துப்பட்டியல் முக்கியமாக அரச பிணையங்களில் செய்யப்பட்ட முதலீடுகளை உள்ளடக்கியிருந்ததுடன் இது மொத்த முதலீடுகளில் 93.7 சதவீதத்தினைப் பிரசன்னப்படுத்தியது. 2021 ஓகத்துடன் முடிவடைந்த எட்டு மாத காலப்பகுதியில் நிதியத்தின் மதிப்பிடப்பட்ட மொத்த முதலீட்டு வருமானம் ரூ.211.2 பில்லியனாகக் காணப்பட்டதுடன், இது, 2020இன் தொடர்பான காலப்பகுதியின் ரூ.172.5 பில்லியனுடன் ஒப்பிடுகையில் 22.4 சதவீதம் கொண்ட அதிகரிப்பாகக் காணப்பட்டது.

அதேவேளை, 2021 யூன் இறுதியில் ஊழியர் நம்பிக்கை நிதியத்தின் மொத்தச் சொத்துக்கள் ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில் 9.8 சதவீதத்தினால் அதிகரித்து ரூ.398.2 பில்லியனாக அறிக்கையிடப்பட்டது. 2021இன் முதல் ஆறு மாதங்களில் மொத்த உறுப்பினர் பங்களிப்புக்கள் 8.3 சதவீதத்தினால் ரூ.14.3 பில்லியனுக்கு அதிகரித்த வேளையில் மீளளிப்புக் கொடுப்பனவுகள், முன்னைய ஆண்டின் தொடர்பான காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் ரூ.10.4 பில்லியனுக்கு 25.3 சதவீதத்தினால் அதிகரித்தன. ஒப்பிடுகையில் மொத்த உறுப்பினர் பங்களிப்புக்கள் மற்றும் மீளளிப்புக் கொடுப்பனவுகள் 2020இன் தொடர்பான காலப்பகுதியில் முறையே ரூ.13.2 பில்லியனாகவும் ரூ.8.3 பில்லியனாகவும் விளங்கின. 2021 யூன் இறுதியில் நிதியத்தினால் செய்யப்பட்ட முதலீடுகள் ஆண்டிற்கு ஆண்டு

அட்டவணை 8.3
ஊழியர் சேமலாப நிதியம் - தெரிவு செய்யப்பட்ட குறிகாட்டிகள்

| விடயம் | 2020 ஓகத் முடிவில் (அ) | 2021 ஓகத் முடிவில் (அ) | மாற்றம் (%) |
|---|---|---|---|
| மொத்தப் பங்களிப்புக்கள் (ரூ.பில்) (ஆ) | 99.5 | 101.8 | 2.3 |
| மொத்த மீளளிப்புக்கள் (ரூ.பில்) (ஆ) | 73.8 | 72.1 | - 2.3 |
| மொத்தச் சொத்துக்கள் (ரூ.பில்) | 2,714.4 | 3,062.0 | 12.8 |
| மொத்த முதலீடுகளின் சொத்துப்பட்டியல் (ரூ.பில்) | 2,711.9 | 3,037.9 | 12.0 |
| இதில், அரச பிணைங்கள் (%) | 93.7 | 93.7 | - |
| திரண்ட வருமானம் (ரூ.பில்) (ஆ) | 172.5 | 211.2 | 22.4 |

(அ) தற்காலிகமானது
(ஆ) குறிப்பிட்ட ஆண்டின் ஓகத்துடன் முடிவடைந்த எட்டு மாத காலப்பகுதியில்

*மூலம்:* இலங்கை மத்திய வங்கி

அட்டவணை 8.4
ஊழியர் நம்பிக்கை நிதியம் - தெரிவு செய்யப்பட்ட குறிகாட்டிகள்

| விடயம் | 2020 யூன் முடிவில் | 2021 யூன் முடிவில் (அ) | மாற்றம் (%) |
|---|---|---|---|
| மொத்தப் பங்களிப்புக்கள் (ரூ.பில்) (ஆ) | 13.2 | 14.3 | 8.3 |
| மொத்த மீளளிப்புக்கள் (ரூ.பில்) (ஆ) | 8.3 | 10.4 | 25.3 |
| மொத்தச் சொத்துக்கள் (ரூ.பில்) | 362.7 | 398.2 | 9.8 |
| மொத்த முதலீடுகளின் சொத்துப்பட்டியல் (ரூ.பில்) | 343.1 | 377.0 | 9.9 |
| இதில் அரச பிணையங்கள் (%) | 80.3 | 83.4 | 3.9 |
| திரண்ட வருமானம் (ரூ.பில்) (ஆ) | 16.9 | 17.1 | 1.4 |

மூலம்: ஊழியர் நம்பிக்கை நிதியச் சபை

(அ) தற்காலிகமானது
(ஆ) காலப்பகுதியில்

அடிப்படையில் 9.9 சதவீதம் கொண்ட ஆரோக்கியமான வளர்ச்சியைப் பதிவுசெய்ததுடன் மொத்த முதலீடுகளில் அரச பிணையங்கள் 83.4 சதவீதத்தினை உள்ளடக்கியிருந்தன.

2021 யூன் இறுதியில் 72,083 ஊழியர்களுடன் 117 தனியான முறையில் முகாமைப்படுத்தப்படும் ஒப்புதலளிக்கப்பட்ட சேமலாப நிதியங்கள் காணப்பட்டன. ஒப்புதலளிக்கப்பட்ட சேமலாப நிதியங்களின் மொத்தச் சொத்துக்கள் ரூ.169.6 பில்லியனாகக் காணப்பட்ட வேளையில் ஒப்புதலளிக்கப்பட்ட சேமலாப நிதியம் 2021 யூன் இறுதியில் ரூ.144.7 பில்லியனை முதலீடு செய்தது. அரச பணிகள் ஓய்வுகால நிதியத்தின் மொத்தச் சொத்துக்கள் ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில் ரூ.80.9 பில்லியனுக்கு 12.8 சதவீதத்தினால் அதிகரித்தன. 2021 யூன் இறுதியில், அரச பணிகள் ஓய்வுகால நிதியத்தினால் மேற்கொள்ளப்பட்ட மொத்த முதலீடுகள் ரூ.77.6 பில்லியனாக விளங்கியதுடன் உறுப்பினர் நிலுவைகள் மீதான வருவாய் வீதம் பரிசீலனைக்குரிய காலப்பகுதியில் 8.0 சதவீதமாகக் காணப்பட்டது.

## 8.3 நிதியியல் சந்தைகள்


### உள்நாட்டுப் பணச் சந்தை

2020ஆம் ஆண்டுப்பகுதியிலும் 2021இன் முதலரைப்பகுதியிலும் விடாப்பிடியாக மிகையான மட்டத்தில் தொடர்ச்சியாகக் காணப்பட்ட உள்நாட்டுப் பணச் சந்தையின் திரவத்தன்மை 2021இன் யூலை நடுப்பகுதியில் கணிசமானளவிற்கு வீழ்ச்சியடைந்து 2021 ஓகத்து நடுப்பகுதியிலிருந்து எதிர்க்கணியமான நிலைமைக்கு மாறியது. திரவத்தன்மை மிகை வீழ்ச்சியடைந்தமைக்கு வெளிநாட்டுக் கடன் மீள்கொடுப்பனவுகளின் தாக்கம், நாணய எடுப்பனவுகள் அதேபோன்று திறைசேரி முறிகளின் முதிர்ச்சிகள் மற்றும் மத்திய வங்கியின் வெளிநாட்டு நாணயப் பரஸ்பர பரிமாற்றல் கொடுக்கல்வாங்கல்கள் என்பன முக்கிய காரணங்களாக அமைந்தன.

*2021இன் ஆரம்பத்தில் மிகையான மட்டத்தில் காணப்பட்ட உள்நாட்டுப் பணச் சந்தையின் ரூபாத் திரவத்தன்மை யூலை நடுப்பகுதியில் வீழ்ச்சியடைந்து 2021 ஓகத்து நடுப்பகுதிலிருந்து பற்றாக்குறைக்குத் திரும்பியது...*

2021 செத்தெம்பர் 01 தொடக்கம் ஆரம்பமான ஒதுக்குப்பேணல் காலத்திலிருந்து நடைமுறைக்கு வந்த நியதி ஒதுக்குத் தேவைப்பாடுகள் 2.00 சதவீதப் புள்ளியினால் 4.00 சதவீதத்திற்கு அதிகரித்தமையின் காரணமாக ரூ.170 பில்லியன் பெறுமதியான திரவத்தன்மை சந்தையிலிருந்து ஈர்த்துக் கொள்ளப்பட்டது. இதற்கமைய, 2020 இறுதியில் ரூ.206.7 பில்லியனாகக் காணப்பட்ட திரவத்தன்மை மிகை 2021 செத்தெம்பர் இறுதியளவில் ரூ.119.6 பில்லியன் கொண்ட பற்றாக்குறையினைப் பதிவுசெய்தது. நாணயக் கொள்கை நிலையினால் வழிகாட்டப்பட்டவாறு, நாணயத் தொழிற்பாடுகளினூடாக ஓரிரவுத் திரவத்தன்மையில் பற்றாக்குறையொன்று பேணப்பட்டது. எனினும், குறிப்பிட்ட வங்கிகளில் காணப்பட்ட திரவத்தன்மை அழுத்தத்தினைத் தளர்த்துவதற்காக 2021 செத்தெம்பர் இறுதிப்பகுதியில் மத்திய வங்கியினால் ஒரே தடவையிலான நேர்மாற்று மீள்கொள்வனவு ஏலங்கள் நடத்தப்பட்டன. அரசாங்கத்துடனான மத்திய வங்கியின் கொடுக்கல்வாங்கல்களின் விளைவாக திரவத்தன்மை நிலைமை ஓரளவிற்கு மேம்பட்டமையின் காரணமாக, மத்திய வங்கி திரவத்தன்மையினை ஈர்த்துக் கொள்வதற்காக 2021 ஒத்தோபர் தொடக்கத்திலிருந்து மீள்கொள்வனவு ஏலங்களை நடத்தியது. 2020இல் துணைநில் வீத வீச்சின் கீழ் எல்லையில் பேணப்பட்ட நாணயக் கொள்கைக் கட்டமைப்பின் தொழிற்பாட்டு இலக்காகக் காணப்படும்

வரைபடம் 8.1
துணைநில் வீத வீச்சு, பகிரங்க சந்தை நடவடிக்கைகள், சந்தைத் திரவத்தன்மை மற்றும் சராசரி நிறையேற்றப்பட்ட அழைப்புப் பண வீதம்




மூலம்: இலங்கை மத்திய வங்கி

சராசரி நிறையேற்றப்பட்ட அழைப்புப் பண வீதமானது 2021இல் சந்தைத் திரவத்தன்மையில் காணப்பட்ட வீழ்ச்சியடைந்து செல்லும் போக்கு 2021 ஓகத்தில் கொள்கை வட்டி வீதத்தில் செய்யப்பட்ட மேல் நோக்கிய சீராக்கம் என்பனவற்றின் காரணமாக துணைநில் வீத வீச்சின் மேல் எல்லையை நோக்கிச் சீராக்கப்பட்டது. இக்காலப்பகுதியில் சராசரி நிறையேற்றப்பட்ட மீள்கொள்வனவு வீதமும் சராசரி நிறையேற்றப்பட்ட அழைப்புப் பணவீதத்துடன் இசைந்து செல்லும் விதத்தில் நகர்ந்தது. 2021 செத்தெம்பர் இறுதியில் சராசரி நிறையேற்றப்பட்ட அழைப்புப் பணவீதமும் சராசரி நிறையேற்றப்பட்ட மீள்கொள்வனவு வீதமும் முறையே 5.94 சதவீதத்திலும் 5.93 சதவீதத்திலும் காணப்பட்டன.

### உள்ளூர் வெளிநாட்டுச் செலாவணிச் சந்தை

2021 சனவரியிலிருந்து செத்தெம்பர் வரையிலான காலப்பகுதியில் இலங்கை ரூபா ஐ.அ.டொலருக்கெதிராக 6.8 சதவீதத்தினால் தேய்வடைந்தது. ஆண்டின் தொடக்கத்தில் ரூ.186 மட்டங்களினைச் சுற்றி ஊசலாடிக் கொண்டிருந்த ஐ.அ.டொலருக்கு எதிரான செலாவணி வீதமானது கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்று மற்றும் ஏற்றுமதியாளர்களின் வெளிநாட்டுச் செலாவணி மாற்றல்கள் குறைவாகக் காணப்பட்டமை என்பனவற்றின் தாக்கம் காரணமாக ஏற்பட்ட மட்டுப்படுத்தப்பட்ட வழங்கலுடன் ஒப்பிடுகையில், உயர்ந்த இறக்குமதிச் செலவினம் மற்றும் தொடர்ச்சியான வெளிநாட்டு நாணயப் படுகடன் தீர்ப்பனவுக் கொடுப்பனவுத் தேவைப்பாடுகள் என்பனவற்றின் முக்கிய காரணமாக வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையில் காணப்பட்ட அதிகரித்த கேள்வியுடன் முதல் நான்கு மாத காலப்பகுதியில் அழுத்தங்களுக்குள்ளானது. எனினும், இக்கடுமையான தேய்வின் அழுத்தம், மத்திய வங்கியினால் மேற்கொள்ளப்பட்ட வெளிநாட்டுச் செலாவணி திரவத்தன்மை வழங்கலின் மூலமும் மத்திய வங்கியினாலும் அரசாங்கத்தினாலும் வழங்கப்பட்ட கொள்கைப் பணிப்புரைகள் மற்றும் வழிகாட்டலின் மூலமும் கட்டுப்படுத்தப்பட்டதன் காரணமாக அதன் பின்னர் ஏற்பட்ட தற்காலிகமான சில கடுமையான நகர்வுகள் தவிர, குறிப்பாக, 2021 ஓகத்து இறுதிப்பகுதியில், ஐ.அ.டொலருக்கெதிராக செலாவணி வீதம் ரூ.200 - 203 இற்கிடையில் ஊசலடைந்து காணப்பட்டது. அதேவேளை, 2021 சனவரி - செத்தெம்பர் காலப்பகுதியில் இலங்கை ரூபா யப்பானிய யென்னுக்கெதிராக உயர்வடைந்ததெனினும் ஸ்டேர்லிங் பவுண், அவுஸ்திரேலிய டொலர், யூரோ மற்றும் இந்திய ரூபாவிற்கெதிராக தேய்வடைந்தது.

2021 செத்தெம்பர் இறுதி வரையான இவ்வாண்டுப்பகுதியில் மத்திய வங்கி உள்நாட்டு வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையில் தேறிய விற்பனையாளராக விளங்கியது. ஏற்றுமதிப் பெறுகைகளினது ஒரு பகுதியை விற்பதற்கும் தொழிலாளர் பணவனுப்பல்களினை இலங்கை ரூபாவிற்கு மாற்றுவதற்கும் உரிமம்பெற்ற வங்கிகளைக் கட்டாயப்படுத்தியதன் மூலம் கடன்பாடற்ற மூலங்களினூடான நாட்டின் மொத்த அலுவல்சார் ஒதுக்குகளுக்கு ஆதரவளிக்கும் விதத்தில் வெளிநாட்டுச் செலாவணியினை ஈர்த்துக் கொள்வதற்காக மத்திய வங்கி பல்வேறு வழிமுறைகளை மேற்கொண்ட போதும், உள்நாட்டு வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையின் திரவத்தன்மை நிலைமை நாட்டின் அத்தியாவசிய இறக்குமதிகளுக்கு நிதியிடுகின்ற நோக்குடன் 2021 ஓகத்திலிருந்து ஐ.அ.டொலரை நிரம்பல் செய்ய வேண்டிய தேவையை மத்திய வங்கிக்கு ஏற்படுத்தியது. இதற்கமைய, 2021 சனவரியிலிருந்து செத்தெம்பர் இறுதி வரையான காலப்பகுதியில் மத்திய வங்கி ஐ.அ.டொலர் 331.8 மில்லியனை ஈர்த்து ஐ.அ.டொலர் 342.6 மில்லியனை நிரம்பல் செய்தமையின் மூலம் ஐ.அ.டொலர் 10.7 மில்லியன் கொண்ட தேறிய விற்பனை மிகை தோன்றியது.

> *மட்டுப்படுத்தப்பட்ட வெளிநாட்டு நாணய உட்பாய்ச்சல் மற்றும் வெளிநாட்டு நாணயக் கடன் மீள்கொடுப்பனவு போன்ற பிரதான காரணங்களினால் உள்ளூர் வெளிநாட்டுச் செலாவணிச் சந்தை மோசமான நிலைமையினை எதிர்நோக்கியமையானது சந்தையில் மத்திய வங்கியின் ஈடுபாட்டினை அவசியமாக்கியது...*

2020 செத்தெம்பர் இறுதி வரையான ஒன்பது மாத காலப்பகுதியில் உள்நாட்டு வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையில் வர்த்தகப்படுத்தலின் அளவுகள் கணிசமாக வீழ்ச்சியடைந்தன. இதற்கமைய, பரிசீலனைக்குரிய காலப்பகுதியில் வங்கிகளுக்கிடையிலான வெளிநாட்டுச் சந்தையில் காணப்பட்ட நாளாந்தச் சராசரி வர்த்தகப்படுத்தலின் அளவுகள் 2020இன் இதே காலப்பகுதியில் பதிவுசெய்யப்பட்ட ஐ.அ.டொலர் 79.4 மில்லியனுடன் ஒப்பிடுகையில் ஐ.அ.டொலர் 51.8 மில்லியனுக்கு 34.7 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தன.

### அரச பிணையங்கள் சந்தை


2020இன் நடுப்பகுதியிலிருந்து தொடர்ச்சியாக 2021இன் தொடக்கப்பகுதி வரை திறைசேரி உண்டியல்கள் மற்றும் திறைசேரி முறிகள் சந்தை முழுவதிலும் விளைவு வீதங்கள் வரலாற்றிலேயே மிகக் குறைந்தளவில் அவதானிக்கப்பட்டதெனினும் அதன் பின்னர் அவை மேல் நோக்கிய அசைவொன்றினைப் பதிவுசெய்யத் தொடங்கின. தூண்டுதலளிக்கும் ஒட்டுமொத்த சந்தைத் திரவத்தன்மை நிலைமைகள், வள கிடைப்பனவுகளுக்கு ஏற்புடைத்தான வழங்கல் முறைமைகள், 2020இன் நடுப்பகுதியிலிருந்து நிலவிய ஆதரவளிக்கும் நாணயக் கொள்கை நிலை மற்றும் முதலாந்தர மற்றும் இரண்டாந்தரச் சந்தை ஏலங்களுக்காக ஏற்றுக்கொள்ளப்படுகின்ற உயர்ந்தபட்ச விளைவு வீதம் அறிவிக்கப்பட்டமை என்பனவற்றின்

காரணமாக அரச பிணையங்களுக்கான முதலாந்தரச் சந்தை மற்றும் இரண்டாந்தரச் சந்தை விளைவு வீதங்கள் இரண்டும் 2021இன் தொடக்கப்பகுதி வரை அதன் தாழ்ந்த விளைவு வீத அமைப்பினைத் தொடர்ந்தும் கொண்டிருந்தன. விளைவு வீதங்கள், மிதமான முறையிலேனும் விளைவு வீத வழிகாட்டலின் அடிப்படையில் 2021 ஓகத்து வரை மேல் நோக்கிய சீராக்கத்தினை எடுத்துக்காட்டின. 2021 ஓகத்து நடுப்பகுதியில் நாணயக் கொள்கைத் தீர்மானங்கள் மற்றும் அரசாங்கத்தின் உறுதியான நிதியிடல் தேவைப்பாட்டுச் சூழலொன்றில் திறைசேரி உண்டியல் மற்றும் திறைசேரி முறிகளின் முதலாந்தர ஏலங்களுக்கான ஏற்றுக்கொள்ளலின் உயர்ந்தபட்ச விளைவு வீதத்தினை அறிவிப்பதிலிருந்தும் விலகுவது என்ற தீர்மானம் 2021 செத்தெம்பர் தொடக்கப்பகுதியிலிருந்து அரச பிணையங்களின் விளைவு வீதங்கள் மேல் நோக்கிச் சீராக்கப்படுவதனை அனுமதித்தன. இதன்படி 2021 செத்தெம்பர் இறுதியில், 91 நாள், 182 நாள் மற்றும் 364 நாள் திறைசேரி உண்டியல்களின் இரண்டாந்தரச் சந்தை விளைவு வீதங்கள் 2020 இறுதியில் நிலவிய விளைவு வீதங்களுடன் ஒப்பிடுகையில் முறையே 185 அடிப்படைப் புள்ளிகளினாலும் 186 அடிப்படைப் புள்ளிகளினாலும் 174 அடிப்படைப் புள்ளிகளினாலும் அதிகரித்தன. அதேவேளையில், 2 இலிருந்து 8 ஆண்டுகள் வரையிலான முதிர்ச்சி வீச்சுடன் கூடிய தீவிரமாக வர்த்தகப்படுத்தப்படும் முறிகளின் சந்தை விளைவு வீதங்கள் 2021 சனவரியிலிருந்து செத்தெம்பர் வரையான காலப்பகுதியில் 181 இலிருந்து 285 வரையான அடிப்படைப் புள்ளிகளின் வீச்சில் அதிகரித்தன.

> *அரச பிணையங்கள் மீதான முதலாந்தர மற்றும் இரண்டாந்தர சந்தை விளைவுகள், அதிகரித்த கடன் பெறுகை தேவைப்பாடுகள் மற்றும் இறுக்கமான நாணய நிலைமைகளினால் அதிகரித்தன...*

அதேவேளை, கடுமையான நீண்ட கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்றிற்கு மத்தியிலும் அரசாங்கத்தின் கணிசமான நிதியிடல் தேவைப்பாடுகளுக்கு வசதியளிக்கப்பட்ட வேளையில், அரச பிணையங்களின் முதலாந்தர வழங்கல் செய்முறையில் காத்திரமான தன்மையினையும் வெளிப்படையான தன்மையினையும் பின்பற்றுகின்ற விதத்தில் முன்னெடுக்கப்பட்ட பல்வேறு ஏற்பாடுகள் அரச பிணையங்கள் சந்தையில் அரசின் கொள்கைப் பணிப்புரைகளுடன் இசைந்து செல்லும் விதத்தில் தொடர்ந்தும் மேற்கொள்ளப்பட்டன. இதற்கமைய, திறைசேரி உண்டியல் ஏலங்களில் 364 நாள் முதிர்ச்சிக்கு அறிவிக்கப்பட்ட விளைவு வீதத்திலுள்ள 364 நாள் முதிர்ச்சியை மட்டும் ஏற்றுக்கொள்வதற்காகவும் அத்துடன் 91 நாள் மற்றும் 182 நாள் முதிர்ச்சியைக் கடன் வசதியளித்தலுடன் ஏற்றுக்கொள்வதற்காகவும்

**வரைபடம் 8.2**
**அரச பிணையங்களின் இரண்டாந்தர சந்தை விளைவு வலையியின் நகர்வுகள்**




மூலம்: இலங்கை மத்திய வங்கி


உயர்ந்த விளைவினை 2021 பெப்புருவரி 03இலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் வெளியிடுவதற்கு வழிமுறைகள் எடுக்கப்பட்டுள்ள வேளையில், அனைத்து திறைசேரி முறிகளுக்குமான முதிர்ச்சிகளுக்கும் ஏற்றுக்கொள்ளலுக்குமான உயர்ந்தபட்ச விளைவு வீதம் தொடர்ந்தும் வெளியிடப்படும். அதனைத் தொடர்ந்து, அதிகரித்த நிதியிடல் தேவைப்பாடுகள் காத்திரமான சந்தை உதவுதொகைகளினூடாக வசதிப்படுத்தப்படுவதனை உறுதிப்படுத்துவதற்காக, 2021 செத்தெம்பர் 22இலிருந்து நடைமுறைக்கு வரும் வகையில் திறைசேரி உண்டியல்கள் மற்றும் திறைசேரி முறிகள் இரண்டிற்குமான உயர்ந்தபட்ச விளைவு வீதங்களை அறிவிக்காமல் அரச பிணையங்களின் வழங்கலுக்கு வசதியளிக்கப்பட்டது. திறைசேரி முறிகளின் ஏலங்களைப் பொறுத்தவரையில், கட்டம் III இனை நிறைவேற்றுவதற்காக கட்டம் I இன் குறைந்தபட்ச ஏற்றுக்கொள்ளல் 5 ஆண்டுகள் அல்லது அதற்கும் குறைவான எஞ்சிய முதிர்ச்சிகளுடன் கூடிய முறிகளுக்காக மாத்திரம் திறைசேரி முறி வழங்கலின் கட்டம் III இனை நிறைவேற்றுவதற்கான மட்டுப்படுத்தல்களுடன் சேர்த்து தீர்ப்பனவு செய்யப்பட்ட விலை / விளைவு சந்தையினை நிறுவுவதனை மேலும், உறுதிப்படுத்துவதற்காக முன்வைக்கப்பட்ட தொகைகள் 2021 செத்தெம்பர் 23ஆம் திகதியிலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் 70 சதவீதத்திலிருந்து 80 சதவீதத்திற்கு அதிகரிக்கப்பட்டது. மேற்குறிப்பிட்ட அபிவிருத்திகளுக்குப் புறம்பாக, திறைசேரி உண்டியல்களுக்காக புதிய வெப்தளத்தினை அடிப்படையாகக் கொண்ட வழங்கல் முறைமையொன்றினை 2021 இறுதியில் நடைமுறைப்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்படுகிறது. திறைசேரி காசுப்பாய்ச்சல் முகாமைத்துவத்திற்கு மேலும் வசதியளிப்பதற்காகவும் தக்க நேரங்களில் சாதகமான நியதிகளில் நிதிகளைத் திரட்டிக் கொள்வதற்காகவும் கட்டம் I இல் முழுமையாக ஏற்றுக்கொள்ளப்பட்ட முன்வைக்கப்பட்ட தொகையுடன் ஏதேனும் திறைசேரி முறித் தொடர்களிலிருந்து ஏலங்களுக்கு பின்னர் முன்வைக்கப்பட்ட தொகையில் 20 சதவீதமானவற்றைத் திரட்டுவதற்காகவும் திறைசேரி முறிகளுக்காக “நேரடி வழங்கல் நிலையம்” ஒன்று 2021 ஓகத்திலிருந்து அறிமுகப்படுத்தப்பட்டது.

### பங்குச் சந்தை

குறிப்பிடத்தக்களவு தளம்பல்கள் அவதானிக்கப்பட்டமைக்கு மத்தியிலும் 2021 செத்தெம்பருடன் முடிவடைந்த ஒன்பது மாத காலப்பகுதியில் கொழும்புப் பங்குப் பரிவர்த்தனை வரவேற்கத்தக்க செயலாற்றமொன்றினைப் பதிவுசெய்தது. 2021 செத்தெம்பர் இறுதியில் அனைத்துப் பங்கு விலைச் சுட்டெண் மற்றும் ஸ்டான்டட் அன்ட் புவர் இலங்கை 20 சுட்டெண் என்பன முறையே 39.6 சதவீதம் மற்றும் 34.0 சதவீதம் கொண்ட ஆண்டிற்கு ஆண்டு வளர்ச்சியைப் பதிவுசெய்தன. 2021 செத்தெம்பர் இறுதியில் சந்தை மூலதனமயமாக்கல் ரூ.4,215.6 பில்லியனாக அமைந்து 42.4 சதவீதம் கொண்ட ஆண்டிற்குரிய வளர்ச்சியைப் பதிவுசெய்தது. 2021 செத்தெம்பரில் முடிவடைந்த ஒன்பது மாத காலப்பகுதியில் சராசரி நாளாந்த மொத்தப் புரள்வு, 2020இன் தொடர்பான காலப்பகுதியில் பதிவுசெய்யப்பட்ட ரூ.1.5 பில்லியனிலிருந்து ரூ.4.5 பில்லியனுக்கு குறிப்பிடத்தக்களவிற்கு அதிகரித்தது. எனினும், பங்குச் சந்தையின் செயலாற்றம் உள்நாட்டு முதலீடுகளினாலேயே தூண்டப்பட்டது. மொத்தப் புரள்விற்கான வெளிநாட்டுப் பங்களிப்பு குறிப்பிடத்தக்களவிற்கு குறைவான மட்டத்தில் காணப்பட்டதுடன் 2021 செத்தெம்பரில் சந்தை ரூ.44.9 பில்லியன் (ஐ.அ.டொலர் 226.2 மில்லியன்) வெளிப்பாய்ச்சல்களைப் பதிவுசெய்தது.

2021 செத்தெம்பரில் முடிவடைந்த ஒன்பது மாத காலப்பகுதியில் கொழும்புப் பங்குப் பரிவர்த்தனையின் சந்தை உட்கட்டமைப்பு தொடர்பில் குறிப்பிடத்தக்க முன்னேற்றங்கள் அவதானிக்கப்பட்டன. 2021ஆம் ஆண்டின் 19ஆம் இலக்க இலங்கைப் பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுச் சட்டத்தின் சட்டவாக்கம், எண்ணிம மயப்படுத்தலின் இரண்டாம் கட்டத்தின் நடைமுறைப்படுத்தல், கொழும்புப் பங்குப் பரிவர்த்தனையில் வழங்கல் எதிர் கொடுப்பனவுப் பொறிமுறையின் நடைமுறைப்படுத்தல் மற்றும் உள்நாட்டுக் கம்பனிகள் டொலரில் குறித்துரைக்கப்பட்ட படுகடன் மற்றும்

வரைபடம் 8.3
பங்குச் சந்தை குறிகாட்டிகளின் நகர்வுகள்




மூலம்: கொழும்புப் பங்குப் பரிவர்த்தனை

கொழும்புப் பங்குப் பரிவர்த்தனையிலுள்ள பங்குரிமை மூலதனம் என்பனவற்றை திரட்டுவதனை அனுமதிக்கும் விதத்தில் ஆரம்ப நடவடிக்கைகள் எடுக்கப்பட்டமை என்பன இக்காலப்பகுதியில் இடம்பெற்ற முக்கிய அபிவிருத்திகளாக விளங்கின.

### கூட்டாண்மைப் படுகடன் பிணையங்கள் சந்தை

2021 செத்தெம்பரில் முடிவடைந்த ஒன்பது மாத காலப்பகுதியில் கம்பனி முறிச் சந்தை குறிப்பிடத்தக்க வளர்ச்சியைப் பதிவுசெய்திருக்கிறது. பரிசீலனைக்குரிய இக்காலப்பகுதியில் பதின்மூன்று நிறுவனங்கள் தொகுதிக் கடன்களை வழங்கியதன் மூலம் 2020இன் தொடர்பான காலப்பகுதியில் நான்கு நிறுவனங்களினால் திரட்டப்பட்ட ரூ.16.4 பில்லியனுடன் ஒப்பிடுகையில் ரூ.76.3 பில்லியன் திரட்டப்பட்டது. ஆய்விற்குரிய காலப்பகுதியில் தொகுதிக் கடன்களின் நிலையான வட்டி வீதங்கள் 2020இன் தொடர்பான காலப்பகுதியில் அவதானிக்கப்பட்ட 9.50 - 13.25 சதவீத வட்டி வீதங்களுடன் ஒப்பிடுகையில் 8.00 - 12.00 சதவீத வீச்சில் காணப்பட்டன. எனினும், வர்த்தகப்பத்திரச் சந்தை முன்னைய ஆண்டினைப் போன்றே 2021இன்

அட்டவணை 8.5
பங்குச் சந்தை - தெரிவு செய்யப்பட்ட குறிகாட்டிகள்

| விடயம் | 2019 முடிவில் | 2020 செத். | 2020 முடிவில் | 2021 செத். |
|---|---|---|---|---|
| அனைத்துப் பங்கு விலைச் சுட்டெண் (1985=100) | 6,129.2 | 5,984.8 | 6,774.2 | 9,459.9 |
| திகதி வரையிலான மாற்றம் (%) | 1.3 | - 2.4 | 10.5 | 39.6 |
| எஸ் அன்ட் பீ இலங்கை 20 சுட்டெண் (2004=1,000) | 2,937.0 | 2,463.3 | 2,638.1 | 3,534.8 |
| திகதி வரையிலான மாற்றம் (%) | - 6.3 | - 16.1 | - 10.2 | 34.0 |
| சந்தை மூலதனமாக்கல் (ரூ. பில்) | 2,851.3 | 2,595.8 | 2,960.6 | 4,215.6 |
| மொ.உ.உ.யின் சதவீதமாக (%) (அ) | 19.0 | 17.3 | 19.8 | 28.2 |
| சந்தை விலை உழைப்பு விகிதம் | 10.8 | 10.1 | 11.2 | 11.5 |
| சராசரி நாளாந்தப் புரள்வு (ரூ.மில்) | 711.2 | 1,481.6 | 1,899.0 | 4,455.0 |
| தேறிய ஒன்று சேர்ந்த வெளிநாட்டு கொள்வனவுகள் (ரூ.பில்) | - 11,735.3 | - 39,856.6 | - 51,091.0 | - 44,862.0 |
| பட்டியலிடப்பட்ட கம்பனிகளின் எண்ணிக்கை | 289 | 285 | 283 | 287 |

(அ) 2020 இற்கான மொத்த உள்நாட்டு உற்பத்தியை அடிப்படையாகக் கொண்டது (ரூ.14,973 பில்லியன்)

*மூலம்:* கொழும்பு பங்குப் பரிவர்த்தனை

முதல் ஆறு மாத காலப்பகுதியில் ஒப்பீட்டு ரீதியில் குறைந்த செயற்பாடுகளுடன் காணப்பட்டது. வர்த்தகப் பத்திரங்கள் மீதான வட்டி வீதங்களும் 2020 யூனில் பதிவுசெய்யப்பட்ட 11.50 சதவீதத்திலிருந்து 15.75 சதவீதம் வரையான வீச்சிலிருந்து 2021இன் முதலரைப் பகுதியில் 6.25 சதவீதத்திலிருந்து 11.5 சதவீத வீச்சிற்கு மேலும் வீழ்ச்சியடைந்தன. மேலும், பிணையங்கள் பரிவர்த்தனை ஆணைக்குழு, கொழும்புப் பங்குப் பரிவர்த்தனையுடன் சேர்ந்து, இவ்வாண்டுப்பகுதியில் படுகடன் பிணையங்கள் மீதான மீள்கொள்வனவு கொடுக்கல்வாங்கல்களை நடத்துவதற்காக புதிய கருமபீடத் தளமொன்றினை நடைமுறைப்படுத்தியது.

> ***தனிப்பட்டவர்களினதும் நிறுவனங்களினதும் கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவுத் தேவைகளை காத்திரமான முறையில் நிறைவேற்றுகின்ற அதேவேளையில் எண்ணிம கொடுப்பனவு சூழல் முறைமையின் ஆர்வலர்களினால் எதிர்நோக்கப்பட்ட இடர்நேர்வுகளை முன்மதியுடைய விதத்தில் கட்டுப்படுத்தியதனூடாக தேசிய கொடுப்பனவு உட்கட்டமைப்பு நாட்டின் பொருளாதார நடவடிக்கைகளுக்கு தொடர்ந்தும் வசதியளித்தது...***

## 8.4 நிதியியல் உட்கட்டமைப்பின் அபிவிருத்திகள்

### கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு முறைமைகள்

இலங்கையில் எண்ணிம கொடுப்பனவுகளை மேம்படுத்துவதனையும் தேசிய கொடுப்பனவு உட்கட்டமைப்பினை அபிவிருத்தி செய்வதனையும் நோக்காகக் கொண்டு 2021ஆம் ஆண்டுப்பகுதியில் மத்திய வங்கி, ஜஸ்ட்பேயின் உயர்ந்தபட்ச கொடுக்கல்வாங்கல் வரையறையினை ரூ.50,000 இற்கு அதிகரித்தல், பொதுவான இலத்திரனியல் நிதிய மாற்றல் ஆளி கொடுக்கல்வாங்கல் கட்டணத்தினை கொடுக்கல்வாங்கலொன்றிற்கு ரூ.50 இலிருந்து ரூ.30 இற்குக் குறைத்தல், முன்னெடுக்கப்பட்ட லங்காகியூஆர் கொடுக்கல்வாங்கல்களுக்கான 0.5 சதவீதம் கொண்ட உயர்ந்தபட்ச வணிகர் கழிவிடல் வீத கட்டணம் குறைக்கப்பட்டமை மற்றும் எண்ணிம கொடுப்பனவுச் சாதனங்களை பாதுகாப்பாக பயன்படுத்துவது தொடர்பில் பொதுமக்களுக்கு அறிவூட்டுவதற்கான பல விழிப்புணர்வுப் பிரச்சாரங்கள் எனப் பல்வேறு விடயங்களை உள்ளடக்கி ஆனால் அவற்றிற்கு மட்டுமே மட்டுப்படுத்தப்படாத விதத்தில் பல்வேறு வழிமுறைகளையும் மேற்கொண்டது. மத்திய வங்கி மற்றும் நிதியியல் நிறுவனங்கள் இரண்டினாலும் நடத்தப்பட்ட தொடர்ச்சியான பிரச்சாரங்கள் மற்றும் ஊக்குவிப்புக்களின் காரணமாக லங்காகியூஆர் இனை அடிப்படையாகக் கொண்ட கொடுக்கல்வாங்கல்களில் கணிசமான வளர்ச்சியொன்று அவதானிக்கப்பட்டதுடன் 2021இன் முதல் ஆறுமாத காலப்பகுதியில் லங்காகியூஆர் குறியீடுகளின் வழங்குநர்களதும் வணிகர்களினதும் எண்ணிக்கையினை முறையே 17 இற்கும் 255,874 இற்கும் மேலும் அதிகரித்தது. எண்ணிம கொடுக்கல்வாங்கல்களின் அனைத்து மாதிரிகளினதும் அளவுகளும் பெறுமதிகளும், குறிப்பாக இணையத்தளம், கொடுகடன் அட்டைகள் மற்றும் லங்காகியூஆர் என்பன ஊடாக நடத்தப்பட்ட கொடுக்கல்வாங்கல்கள் குறிப்பிடத்தக்களவிற்கு வளர்ச்சியடைந்துள்ளன. மேலும், மத்திய வங்கியிலிருந்து கிடைத்த ஒப்புதலுடன் லங்காகிளியர் (பிறைவேற்)

**அட்டவணை 8.6**
**முதல் ஆறுமாத காலப்பகுதியில் கொடுப்பனவு முறையினூடான கொடுக்கல் வாங்கல்கள்**

| கொடுப்பனவு முறைமை | 2020 | | 2021 (அ) | | வளர்ச்சி (%) | |
|---|---|---|---|---|---|---|
| | எண்ணிக்கை ('000) | பெறுமதி (ரூ.பில்.) | எண்ணிக்கை ('000) | பெறுமதி (ரூ.பில்.) | எண்ணிக்கை | பெறுமதி |
| **உயர் பெறுமதி வாய்ந்த கொடுப்பனவு முறைமை** | | | | | | |
| அதேநேர மொத்தத் தீர்ப்பனவு முறைமை | 192.0 | 61,505.0 | 202.9 | 93,672.4 | 5.6 | 52.3 |
| **சில்லறை பெறுமதிவாய்ந்த கொடுப்பனவு முறைமை** | | | | | | |
| முக்கிய காசோலை தீர்ப்பனவு முறைமை | 15,822.2 | 3,450.5 | 16,838.6 | 4,015.3 | 6.4 | 16.4 |
| இலங்கை வங்கிகளுக்கிடையிலான கொடுப்பனவு முறைமை | 17,905.9 | 1,045.9 | 19,952.4 | 1,331.6 | 11.4 | 27.3 |
| கடனட்டைகள் | 20,519.5 | 101.8 | 23,349.0 | 126.2 | 13.8 | 24.0 |
| வரவு அட்டைகள் | 31,269.9 | 87.1 | 48,411.9 | 137.8 | 54.8 | 58.2 |
| இணையத்தள வங்கித்தொழில் | 24,643.2 | 1,958.2 | 49,179.8 | 2,750.5 | 99.6 | 40.5 |
| தொலைபேசி வங்கித்தொழில் (ஆ) | 11,871.8 | 232.7 | 16,390.6 | 263.2 | 38.1 | 13.1 |
| **மொத்தம்** | **122,224.5** | **68,381.2** | **174,325.2** | **102,297.0** | **42.6** | **49.6** |

(அ) தற்காலிகமானது
(ஆ) செல்லிட மற்றும் தொலைபேசி வங்கித்தொழில்

*மூலம்:* இலங்கை மத்திய வங்கி

அட்டவணை 8.7
முதல் ஆறுமாத காலப்பகுதியில் லங்காகியூஆர் கொடுக்கல் வாங்கல்கள் (அ)

| கட்டண அமைப்பு | 2020 | | 2021 | |
|---|---|---|---|---|
| | எண்ணிக்கை | பெறுமதி ('000) | எண்ணிக்கை | பெறுமதி ('000) |
| லங்காகியூஆர் கொடுக்கல் வாங்கல்கள் | 131 | 844 | 590,660 | 1,017,222 |
| வணிகப் பதிவுகள் (கால இறுதியில்) | 28,832 | - | 255,874 | - |

(அ) தற்காலிகமானது

*மூலம்:* இலங்கை மத்திய வங்கி

லிமிடெட் இலங்கை போக்குவரத்துச் சபை, தேசிய போக்குவரத்து ஆணைக்குழு போன்ற தொடர்பான ஆர்வலர்களுடன் சேர்ந்து தேசிய போக்குவரத்து அட்டையினை அறிமுகப்படுத்துவதற்குத் திட்டமிட்டு வருகின்றது. மத்திய வங்கியினால் ஆரம்பிக்கப்பட்ட பேரேட்டு தொழில்நுட்பத்தினை அடிப்படையாகக் கொண்ட பகிரப்பட்ட உங்கள் வாடிக்கையாளரைத் தெரிந்து கொள்ளுங்கள் வசதியின் கோட்பாட்டு நிரூபணத்தினை அபிவிருத்திச் செய்து பிரயோகிப்பதற்கும் மற்றும் பரிசீலிப்பதற்குமான முன்மொழிவு, பல்வேறு நிதியியல் சேவைகளில் புத்தாக்கங்களை செயற்படுத்துவதற்காக பேரேட்டு தொழில்நுட்பத்தின் ஆற்றலை வெளிப்படுத்தும் விதமாக வெற்றிகரமாக நிறைவேற்றப்பட்டது.

மத்திய வங்கி தேசிய அட்டைத் திட்டத்தின் கீழ் கொடுப்பனவு அட்டைகளை வழங்குவதனை ஊக்குவிப்பதற்கு திட்டமிட்டு வருவதுடன் லங்காகியூஆர் மாதிரியினை மேற்கொண்டு வருகின்ற நிதியியல் நிறுவனங்களின் முன்னேற்றத்தினையும் கண்காணித்து வருகின்றது. மேலும், இ-பண வலட்டுக்களூடாக நிதியியல் நிறுவனங்களின் கணக்கிற்கு நிதியங்களை வைப்புச் செய்வது போன்ற அண்மையில் வழங்கப்பட்ட பணி மேம்பாடுகள் உட்பட, இ-பண முறைமை தொழிற்பாட்டாளர்களினால் வழங்கப்பட்ட பணிகளின் பாதுகாப்பினையும் காத்திரமான தன்மையினையும் உறுதிப்படுத்துவதற்காக மத்திய வங்கி செல்லிடத் தொலைபேசியை அடிப்படையாகக் கொண்ட இ-பண முறைமைகளின் தொழிற்பாடுகளை தொடர்ச்சியாகக் கண்காணித்து மேற்பார்வை செய்துவரும். மேலும், மத்திய வங்கி பொதுமக்களை நிதியியல் மோசடிகள் மற்றும் ஏமாற்றுக்களிலிருந்து பாதுகாப்பதற்காக எண்ணிம கொடுப்பனவு உபகரணங்களின் பாதுகாப்பான பாவனையைப்பற்றி அறிவூட்டும் விதமாக பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டது.

## வெளிநாட்டுச் செலாவணியின் ஒழுங்குவிதிகள் மற்றும் மேற்பார்வை

ஆர்வலர்களின் பல்வேறுபட்ட கரிசனைகளையும் கட்டுப்படுத்துவதற்காகவும் அவற்றின் தெளிவான தன்மையினை மேம்படுத்துவதற்காகவும் 2017ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் கீழ் விடுக்கப்பட்ட ஒழுங்குவிதிகள், பணிப்புரைகள் மற்றும் கட்டளைகள் திருத்தப்பட்ட வேளையில் நாட்டின் வெளிநாட்டுச் செலாவணிக் கொடுக்கல்வாங்கல்களுக்கு மேலும் வசதியளிக்கப்பட்டது.

சந்தைத் திரவத்தன்மையினை மேம்படுத்தி அதன் மூலம் தற்பொழுது நிலவுகின்ற செலாவணி வீதங்களை உறுதிப்படுத்துவதற்கு ஆதரவளிக்கும் நோக்குடன் 1949ஆம் ஆண்டின் 58ஆம் இலக்க நாணய விதிச் சட்டத்தின் கீழ், ஏற்றுமதித் திகதியிலிருந்து 180 நாட்களைக் கொண்ட குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதிக்குள் ஏற்றுமதி பெறுகைகளைக் கட்டாயம் தாய்நாட்டிற்கு கொண்டு வருவதற்கும் அத்தகைய பெறுகைகளில் ஒரு பகுதியை இலங்கை ரூபாவிற்கு மாற்றுவதற்கும் பொருட்களின் ஒவ்வொரு ஏற்றுமதியாளர்களையும் கேட்டுக் கொள்கின்ற ஒழுங்குவிதிகள் விடுக்கப்பட்டன. இவ்விதிகள் 2021 பெப்புருவரி தொடக்கத்தில் விடுக்கப்பட்டதுடன் மேலும் நான்கு விதிகள் உள்நாட்டு வெளிநாட்டுச் செலாவணிச் சந்தை நிலைமைகளைப் பரிசீலனையில் கொண்டு விடுக்கப்பட்டன.

அதேநேரம், நாட்டின் வெளிநாட்டுச் செலாவணி ஒதுக்குகளைப் பேணுவதற்காகவும் சந்தையிலிருந்து திடீரென ஏற்படும் வெளிப்பாய்ச்சல்களைத் தவிர்ப்பதற்காகவும் புலம்பெயர் படிகளின் கீழ் நிதிகளை வெளிநாடுகளுக்கு அனுப்புவது உட்பட வெளிமுக மூலதனக் கொடுக்கல்வாங்கல்கள் தொடர்பிலான பணவனுப்பல்கள் மீது வரையறைகள்/ இடைநிறுத்தல்களை விதிக்கும் விதத்தில் வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் 22ஆம் பிரிவின் கீழ் கட்டளையொன்று விடுக்கப்பட்டது. உட்பாய்ச்சலை ஊக்குவிக்கும் பொருட்டும் நாட்டின் வெளிநாட்டுச் செலாவணியினை பிடித்துவைத்திருக்கும் விதத்திலும் சிறப்பு வைப்புக் கணக்குகளை அத்தகைய வைப்புக்கள் ஆரம்பத்தில் மேற்கொள்ளப்பட்டதிலிருந்து உயர்ந்தபட்சம் 24 மாதங்கள் வரையில் 6 மாதம் மற்றும் 12 மாத காலப்பகுதிக்கு மீண்டும் மீண்டும் பயன்படுத்துவதற்கு அனுமதிக்கின்ற விதத்தில் வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் விடுக்கப்பட்டன.

மேலும், பெருமளவில் நாட்டின் முதலீடுகளை உத்வேகப்படுத்துகின்ற வெளிநாட்டுச் செலாவணி பணவனுப்பல்கள்/ உட்பாய்ச்சல்களின் நியதிகளில் எதிர்பார்க்கப்படுகின்ற சாதகமான பொருளாதார நன்மைகளைப் பரிசீலனையில் கொண்டு, இலங்கைக்கு வெளியே வதியும் ஆட்களினால் இலங்கையில் செய்யப்படும் மூலதனக் கொடுக்கல்வாங்கல்களுக்கு ஏற்புடைத்தான விதத்திலும் கொழும்புப் பங்குப் பரிவர்த்தனையில் உள்நாட்டுக் கம்பனிகளினால் வழங்கப்பட்ட வெளிநாட்டு நாணயத்தில் குறித்துரைக்கப்பட்ட பங்குகளையும் படுகடன் பிணையங்களையும் பட்டியலிடவும் வர்த்தகப்படுத்தவும் அனுமதிக்கின்ற விதத்திலும் ஒழுங்குவிதிகள் திருத்தப்பட்டன. மேலும், இலங்கையில் கூட்டிணைக்கப்பட்ட கம்பனிகள் (நிதி வியாபாரங்களில் ஈடுபட்டுள்ள கம்பனிகள் நீங்கலாக) அவற்றின் வெளிநாட்டுக் கடன்பாடுகளைப் பயன்படுத்தி இரண்டாந்தரச் சந்தையில் நாட்டிற்கான பன்னாட்டு முறிகளைக் கொள்வனவு செய்வதற்கு வசதியளிக்கின்ற விதத்தில் வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் கீழ் புதிய ஒழுங்குவிதிகளும் விடுக்கப்பட்டன.

### பணம் தூயதாக்கலுக்கெதிரான மற்றும் பயங்கரவாதத்திற்கு நிதியளித்தலை ஒழித்தல்

கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்றிற்கு மத்தியிலும் நிதியியல் உளவறிதல் பிரிவு அறிக்கையிடுகின்ற நிறுவனங்களின் நாட்டின் பணம் தூயதாக்கல் மற்றும் பயங்கரவாதத்திற்கு நிதியளித்தலை ஒழித்தல் அமைப்பினை வலுப்படுத்துவதற்கும் காத்திரமான மேற்பார்வை மற்றும் நடைமுறைக்கிடும் நடவடிக்கைகளூடாக அறிக்கையிடுவதற்கான இணங்குவிப்புக்களை உறுதிப்படுத்துவதற்குமாக அதன் தொழிற்பாடுகளைத் தொடர்ந்தும் மேற்கொண்டது. கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்றின் விளைவாக மேற்கொள்ளப்பட்ட கட்டுப்பாடுகளின் காரணமாக 2021 செத்தெம்பரில் முடிவடைந்த முதல் ஒன்பது மாத காலப்பகுதியில் தலத்திலான மேற்பார்வைகளை மேற்கொள்வதற்கான இயலுமை மட்டுப்படுத்தப்பட்டிருந்த போதும் துறை சார்ந்த ஆய்வுகள் மற்றும் தலத்திற்கு வெளியேயான கண்காணிப்பு என்பன நிதியியல் நிறுவனங்கள் மீதும் அதேபோன்று குறித்துரைக்கப்பட்ட நிதியல்லா வியாபாரங்கள் மற்றும் தொழில்சார் துறைகளின் மீதும் அவற்றின் இணங்குவிப்புக்களை உறுதிப்படுத்துவதற்காக மேற்கொள்ளப்பட்டன. 2021இன் செத்தெம்பரில் முடிவடைந்த ஒன்பது மாத காலப்பகுதியில் நிதியியல் உளவறிதல் பிரிவு 2006ஆம் ஆண்டின் 6ஆம் இலக்க நிதிசார் கொடுக்கல் வாங்கல்களை அறிக்கையிடல் மற்றும் வாடிக்கையாளர் உரிய விழிப்புக்கவன சட்டத்தின் கீழ் இணங்கிக் கொள்ளாமைக்காக 9 நிதியியல் நிறுவனங்களின் மீது மொத்தமாக ரூ.10.5 மில்லியனைத் தண்டமாக விதித்தது.

பணம் தூயதாக்கலுக்கெதிரான/ பயங்கரவாதத்திற்கு நிதியளித்தலை ஒழித்தலுடன் தொடர்பான சட்டங்கள், விதிகள் மற்றும் ஒழுங்குவிதிகள் பற்றிய நிறுவன ரீதியான இணங்குவிப்புக்களை வலுப்படுத்தும் நோக்குடன் நிதியியல் உளவறிதல் பிரிவு அறிக்கையிடும் நிறுவனங்களுக்கு தொடர்ந்தும் வழிகாட்டல்களை வழங்கியதுடன் பணம் தூயதாக்கலுக்கெதிரான/ பயங்கரவாதத்திற்கு நிதியளித்தலை ஒழித்தல் வழிமுறைகள் மற்றும் கடப்பாடுகள் மீதான ஆர்வலர்களின் விழிப்புணர்வினை அதிகரிப்பதற்கான நிகழ்ச்சித்திட்டங்களையும் மேற்கொண்டது. இதன்படி, 2021 செத்தெம்பரில் ஒன்பது மாத காலப்பகுதியில் நிதியியல் உளவறிதல் பிரிவு “சந்தேகத்திற்குரிய கொடுக்கல்வாங்கல் அறிக்கையினை அறிக்கையிடுகின்ற தரத்தினை உயர்த்துதல்”, “பணம் தூயதாக்கலுக்கெதிரான/ பயங்கரவாதத்திற்கு நிதியளித்தலை ஒழித்தலுக்கான நோக்கங்களைக் கொண்ட மூடப்பட்ட சுற்றோட்ட தொலைக்காட்சித் தொழிற்பாடுகள்” மற்றும் “சந்தேகத்திற்குரிய கொடுக்கல்வாங்கல்கள் மீதான வழிகாட்டல்” என்பன தொடர்பில் நிதியியல் நிறுவனங்களுக்கு 3 வழிகாட்டல்களை விடுத்தது. மேலும், நிதியியல் உளவறிதல் பிரிவு அண்மைக் காலத்தில் அவதானிக்கப்பட்ட போக்குகள் தொடர்பில் 4 சுற்றறிக்கைகளை விடுத்தது.

2021ஆம் ஆண்டுப்பகுதியில், நிதியியல் உளவறிதல் பிரிவு நிதியியல் நடவடிக்கைச் செயலணிக் குழுவின் பரிந்துரையில் உலக வங்கியிலிருந்தான தொழில்நுட்ப உதவியுடன் பணம் தூயதாக்கல்/ பயங்கரவாதத்திற்கு நிதியளித்தலை ஒழித்தல் மீதான தேசிய இடர்நேர்வு மதிப்பீட்டினை இற்றைப்படுத்துவதற்கான முயற்சிகளை மேற்கொண்டது. இலங்கைக்கான முதலாவது தேசிய இடர்நேர்வு மதிப்பீடு 2014இல் மேற்கொள்ளப்பட்டதுடன் அந்நேரத்தில் நாட்டின் பணம் தூயதாக்கல்/ பயங்கரவாதத்திற்கு நிதியளித்தல் இடர்நேர்வு மட்டம் நடுத்தரத்தில் காணப்படுவதாக மதிப்பிடப்பட்டது. தேசிய இடர்நேர்வு மதிப்பீட்டினை இற்றைப்படுத்துவது பல்வேறு காரணங்களின் காரணமாக முன்னைய ஆண்டுகளில் பிற்போடப்பட்டது. 2021இல் தேசிய இடர்நேர்வு மதிப்பீடு 2014இல் மதிப்பிடப்பட்டிராத 4 புதிய மாதிரிகள் உட்பட 13 மாதிரிகளை உள்ளடக்கியிருந்தது. 60 இற்கும் மேற்பட்ட அரச மற்றும் தனியார் நிறுவனங்களிலிருந்து கலந்து கொண்ட ஏறத்தாழ 120 அலுவலர்களிடம் ஒவ்வொரு துறையிலுமுள்ள பணம் தூயதாக்கல்/ பயங்கரவாதத்திற்கு நிதியளித்தல் இடர்நேர்வுகளை அடையாளம் காண்பதற்கும் மதிப்பிடுவதற்குமாக இம்மாதிரிகள் ஒதுக்கீடு செய்யப்பட்டன. இந்நடவடிக்கையானது 2022இன் முதலரையாண்டில் நிறைவடையுமென எதிர்பார்க்கப்படுவதுடன் இதிலிருந்து கிடைக்கும் பெறுபேறுகளின் அடிப்படையில் இலங்கையின் தேசிய பணம் தூயதாக்கலுக்கெதிரான/ பயங்கரவாதத்திற்கு நிதியளித்தலை ஒழித்தல் கொள்கை மீளாய்வு செய்யப்படும்.

### தீர்மானம் மற்றும் நடைமுறைப்படுத்தல்

மத்திய வங்கி, இலங்கை வைப்புக் காப்புறுதி மற்றும் திரவத்தன்மை ஆதரவுத் திட்டத்தின் கீழ், ஆறு உரிமம் இரத்துச் செய்யப்பட்ட/ வியாபாரம் இடைநிறுத்தப்பட்ட நிதிக் கம்பனிகளின் வைப்பாளர்களுக்கு இழப்பீட்டுக் கொடுப்பனவுகளைத் தொடர்ந்தும் வழங்கியது. அதேவேளை, மத்திய வங்கியின் நாணயச் சபை, இலங்கை வைப்புக் காப்புறுதி மற்றும் திரவத்தன்மை ஆதரவுத் திட்டத்தின் கீழ் செலுத்தத்தக்க உயர்ந்தபட்ச இழப்பீட்டினை ரூ.600,000 இலிருந்து ரூ.1,100,000 இற்கு அதிகரிப்பதற்குத் தீர்மானித்தது. இதன்படி, இழப்பீட்டுக் கொடுப்பனவுகள் 2021 ஏப்பிறல் 09ஆம் நாள் தொடக்கம் உயர்ந்தபட்சக் கொடுப்பனவுத் தொகையான ரூ.1,100,000 இற்கு அதிகரிக்கப்பட்டன.

இலங்கை வைப்புக் காப்புறுதி மற்றும் திரவத்தன்மை ஆதரவுத்திட்டத்தின் தொழிற்பாட்டு நடைமுறைகளை மேலும் ஒழுங்குமுறைப்படுத்தும் நோக்குடனும் இலங்கை வைப்புக் காப்புறுதி மற்றும் திரவத்தன்மை ஆதரவுத்திட்டத்திற்கு ஏற்புடைத்தான ஒழுங்குமுறைப்படுத்தல் கட்டமைப்பினை பலப்படுத்துவதற்காகவும் அதனைத் தொடர்ந்து வந்த ஒழுங்குவிதிகளினால் திருத்தப்பட்டவாறு 2020ஆம் ஆண்டின் 01ஆம் இலக்க வைப்புக் காப்புறுதி மற்றும் திரவத்தன்மை ஆதரவுத் திட்டத்தின் முற்போந்த ஒழுங்குவிதிகள் இரத்துச் செய்யப்பட்டதன் பின்னர் அதற்கு பதிலாக 2021ஆம் ஆண்டின் 02ஆம் இலக்க இலங்கை வைப்புக் காப்புறுதி மற்றும் திரவத்தன்மை ஆதரவுத் திட்ட ஒழுங்குவிதிகளின் கீழ் 2021 ஓகத்து 6ஆம் திகதியிலிருந்து நடைமுறைக்கு வரும் வகையில் புதிய ஒழுங்குவிதிகள் விடுக்கப்பட்டன.

கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்றினால் தோன்றிய வரையறுக்கப்பட்ட சூழ்நிலைக்கு மத்தியிலும் இலங்கை மத்திய வங்கி வானொலி/ தொலைக்காட்சி நிகழ்ச்சித்திட்டங்களில் பங்குபற்றியமை, செய்தித்தாள் விளம்பரங்களையும் பொதுமக்களுக்கான அறிவித்தல்களையும் வெளியிட்டமை, சமூக வலைத்தளங்களினூடாக விழிப்புணர்வு தொடர்களை நடத்தியமை போன்ற பல்வேறு தொடர்பூட்டல் வழிமுறைகளைப் பயன்படுத்தி, தடைசெய்யப்பட்ட திட்டங்களில் முதலீடு செய்வதிலுள்ள இடர்நேர்வுகள் பற்றி பொதுமக்களுக்கு தொடர்ச்சியாக அறிவூட்டியது. மேலும், தடைசெய்யப்பட்ட திட்டங்களை ஒழிப்பது தொடர்பில் இலங்கை மத்திய வங்கி ஆய்வரங்குகளை நடத்தியது. பொலிஸ் மற்றும் சட்டமா அதிபர் திணைக்களத்தின் ஒத்துழைப்புடன் தடைசெய்யப்பட்ட திட்டங்கள் தொடர்பில் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டன. பொதுமக்களிடமிருந்தும் ஏனைய பல்வேறு தரப்பினர்களிடமிருந்தும் கிடைத்த முறைப்பாடுகளை அடிப்படையாகக் கொண்டு விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

பிரச்சனைக்குரிய நிதியியல் நிறுவனங்கள் தொடர்பான தீர்மானத்தினை வலுப்படுத்தும் பொருட்டு, தற்போதுள்ள சட்டக் கட்டமைப்பிற்குள் மத்திய வங்கியினால் ஒழுங்குமுறைப்படுத்தப்பட்டு மேற்பார்வை செய்யப்பட்டு வரும் உரிமம்பெற்ற வங்கிகள் மற்றும் உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளுக்கான தீர்மானக் கட்டமைப்பின் அபிவிருத்தியை நிறைவு செய்வதற்குத் திட்டமிடப்பட்டிருக்கிறது. தரவு அறிக்கையிடலின் தரத்தினையும் துல்லியமான தன்மையினையும் அதிகரித்தல், தரவுப் பாதுகாப்புடன் இணைந்து காணப்படும் இடர்நேர்வுகளைக் குறைத்தல் ஆகிய நோக்கங்களுடன் இலங்கை வைப்புக் காப்புறுதி மற்றும் திரவத்தன்மை ஆதரவுத்திட்டத்தின் அனைத்து உறுப்பினர் நிறுவனங்களுக்குமாக வைப்பாளர் ரீதியான தரவுச் சேகரிப்பு முறைமையொன்றினை அபிவிருத்தி செய்வதற்கு மத்திய வங்கி எதிர்பார்க்கிறது. இதற்கமைய ஒவ்வொரு வைப்பாளர்களுக்குமான தனித்துவமான அடையாள இலக்கத்தினை அனைத்து உறுப்பினர் நிறுவனங்களும் கட்டாயமாகப் பதிவுசெய்ய வேண்டுமெனக் எதிர்பார்க்கப்படுகிறது.

### அபிவிருத்தி நிதி மற்றும் நிதியியல் வசதிகளைப் பெற்றுக்கொள்ளுதல்

2021 செத்தெம்பரில் முடிவடைந்த ஒன்பது மாத காலப்பகுதியில், மத்திய வங்கி பல்வேறு மீள்நிதியிடல், வட்டி உதவுதொகை மற்றும் கொடுகடன் உத்தரவாதத் திட்டங்களை இணைத்து, வசதியளித்து நடைமுறைப்படுத்தியதுடன் பரந்த வீச்சிலான கொடுகடன் துணைநிரப்புப் பணிகளையும் வழங்கியது. 2021 செத்தெம்பரில் முடிவடைந்த ஒன்பது மாத காலப்பகுதியில் மத்திய வங்கி 7 உதவுதொகையளிக்கப்பட்ட மீள்நிதியிடல் கடன் திட்டங்கள் 2 வட்டி உதவுதொகை மற்றும் கொடுகடன் உத்தரவாதத் திட்டங்கள் என்பனவற்றின் கீழ் பங்கேற்கின்ற நிதியியல் நிறுவனங்களினூடாக 50,238 நன்மைபெறுநர்களுக்கு ரூ.15,229 மில்லியன் கொண்ட மொத்தத் தொகையினைப் பகிர்ந்தளித்தது.

கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்றினால் பாதிக்கப்பட்ட வியாபாரங்கள் மற்றும் தனிப்பட்டவர்களுக்கு சலுகைகளை வழங்குவதற்காக மத்திய வங்கி அதிவிசேட கொள்கை வழிமுறைகளை நடைமுறைப்படுத்துவதில் தீவிரமாக ஈடுபட்டிருந்தது. இதன்படி, சுற்றுலாத் துறையிலுள்ள கடன்பாட்டாளர்களுக்கு மீள்கொடுப்பனவுக் காலத்தினை 24 மாதங்களிலிருந்து 36 மாதங்களுக்கு நீடித்த வேளையில் இச்சலுகைகளுக்காக கோரிக்கை விடுத்த நன்மைபெறுநர்களுக்கு 2021 செத்தெம்பர் 30 வரையில் சலுகைக் காலம் நீடிக்கப்பட்டமை உட்பட, சௌபாக்கியா கொவிட்-19 புத்துயிரளித்தல் வசதியின் நன்மைபெறுநர்களுக்காக மேலும் சலுகைகள்

வழங்கப்பட்டன. மேலும், அநேகக் கடன் திட்டங்களுக்காக சலுகைக் காலம்/ படுகடன் சட்ட இசைவுத் தாமதத்தினை வழங்கும் விதத்தில் வழிகாட்டல்கள் விடுக்கப்பட்டன. அரிசி ஆலைச் சொந்தக்காரர்களுக்கான கடன் தொடர்பான கொடுகடன் உத்தரவாதத் திட்டம் மற்றும் பாற்பண்ணை அபிவிருத்தி மற்றும் நுண்பாக சிறிய நடுத்தர தொழில்முயற்சி அபிவிருத்திக்கான வட்டி உதவுதொகைத் திட்டம் என்பன நடைமுறைப்படுத்தப்படவுள்ளன. மேலும், மத்திய வங்கி தெரிவுசெய்யப்பட்ட மூன்று பெறுமதிச் சங்கிலிகளூடாக (பாற்பண்ணை, காய்கறிகள், வாசனைத்திரவியங்கள்) உள்நாட்டு வேளாண்மை அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்ட முன்னோடிக் கட்டத்தினை நடைமுறைப்படுத்தியது. இது அரசாங்கத்தின் ஆதரவுடன் தேசிய நிகழ்ச்சித்திட்டமொன்றாக நாடளாவிய ரீதியில் பத்து வேளாண்மை பெறுமதிச் சங்கிலியினூடாக நடைமுறைப்படுத்தப்படவுள்ள முக்கியமான உள்நாட்டு வேளாண்மை அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தினை வடிவமைப்பதற்கு உதவும்.

மத்திய வங்கி 2021 மார்ச்சில் இலங்கை தேசிய நிதியியல் வசதிக்குட்படுத்தல் உபாயத்தினை வெற்றிகரமாக ஆரம்பித்தது. நாடு முழுவதிலும் நிதியியல் வசதிக்குட்படுத்தலை அடையாளம் காணவும் ஊக்குவிப்பதற்குமாக தேசிய நிதியியல் வசதிக்குட்படுத்தலை நடைமுறைப்படுத்தி தொழிற்படுத்துவதற்காக அநேக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மேலும், பசுமை முன்னெடுப்புக்களை அறிமுகப்படுத்தி, இயற்கை மூலவளங்களை வினைத்திறனுடன் பயன்படுத்தப்படுவதற்கு இம்முன்னெடுப்புக்களைப் பயன்படுத்துவதனை ஊக்குவிப்பதன் மூலம் மக்களின் வாழ்க்கைத்தரத்தினை அதிகரிப்பதற்கும் சூழல் தரம் குறைந்து போவதனைக் குறைப்பதற்கும் பசுமை உற்பத்திகளை அதிகரிக்கின்ற வேளையில் "பசுமையினை நோக்கி" பயணித்தல் என்ற மனோபாவத்தினை உள்ளூர் சமூகங்களிடையே ஊக்குவிப்பதற்குமாக மத்திய வங்கியினால் புதிய செயற்றிட்டமொன்று அறிமுகப்படுத்தப்பட்டிருக்கிறது.

இலங்கை மத்திய வங்கியானது 2021 செத்தெம்பரில் முடிவடைந்த ஒன்பது மாத காலப்பகுதியில் முறைசார் நிதியியல் துறையில் உள்ளடங்காதவர்களை நோக்கில் கொண்டு 8 பயிற்சியாளர்களின் பயிற்சி நிகழ்ச்சிகள் 18 வானொலி மற்றும் தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் மற்றும் 200க்கும் மேற்பட்ட விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை நிதியியல் அறிவுத்திறன் மற்றும் நிதியியல் வசதிக்குட்படுத்தல் என்பவற்றை மேம்படுத்துவதற்காக நடாத்தியது. இவற்றுள் பெரும்பாலான நிகழ்ச்சிகள் கொவிட்-19 உலகளாவிய தொற்றுநோய் பரவலின் காரணமாக ஏற்பட்ட வரையறைகளுக்கு மத்தியில் புதிதாக உருவாக்கப்பட்ட இணையவழி சார்ந்த கற்பித்தல் சாதனங்களை உபயோகித்து இணையவழியினூடாக மேற்கொள்ளப்பட்டன.

### நிதியியல் வாடிக்கையாளர் தொடர்புகள்

2020 ஓகத்து மாதம் முதல் மத்திய வங்கியின் அதிகாரவரம்பின் கீழ் இருக்கும் நிறுவனங்கள் தொடர்பில் மத்திய வங்கி 8,000 இற்கும் மேற்பட்ட முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகளை செயன்முறைப்படுத்தியதுடன் அதன் தொடர்பு நிலையத்தினூடாக பொதுமக்களிடமிருந்து பெறப்பட்ட 60,000 இற்கும் மேற்பட்ட தொலைபேசி அழைப்புக்களுக்கும் பதிலிறுத்திருக்கிறது. இதுவரை பெறப்பட்ட முறைப்பாடுகளில் பெரும்பாலான முறைப்பாடுகள் படுகடன் சட்ட இசைவுத்தாமதம், கடன்களை மீள அட்டவணைப்படுத்தல், உயர்ந்த வட்டி வீதம், சொத்துக்களை மீள உடமையாக்கிக் கொள்ளுதல் மற்றும் உரிய காலத்திற்கு முன்பே கொடுகடன் வசதிகளைத் தீர்ப்பனவு செய்தல் என்பன தொடர்பில் கொவிட்-19 இனால் பாதிக்கப்பட்ட வியாபாரங்கள் மற்றும் தனிப்பட்டவர்களிடமிருந்தும் பெறப்பட்டிருந்தன.

# முக்கிய பொருளாதாரக் கொள்கை வழிமுறைகள்

## முக்கிய பொருளாதாரக் கொள்கை வழிமுறைகள்[1]

### நாணயக் கொள்கை

2021 ஓகத்து 19 - துணைநில் வைப்பு வசதி வீதம் மற்றும் துணைநில் கடன்வழங்கல் வசதி வீதம் இரண்டும் 50 அடிப்படைப் புள்ளிகளினால் முறையே 5.00 சதவீதத்திற்கும் 6.00 சதவீதத்திற்கும் அதிகரிக்கப்பட்டன. வங்கி வீதம் தன்னியக்கமாகவே 8.50 சதவீதத்திலிருந்து 9.00 சதவீதத்திற்கு அதிகரித்தது.

- உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளின் அனைத்து ரூபா வைப்புப் பொறுப்புக்களின் மீதும் பிரயோகிக்கத்தக்க நியதி ஒதுக்கு விகிதம் 2021 செத்தெம்பர் 01இல் ஆரம்பமாகின்ற ஒதுக்குப் பராமரிப்பு காலத்திலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் 2.00 சதவீதத்திலிருந்து 4.00 சதவீதத்திற்கு 2 சதவீதப் புள்ளிகளினால் அதிகரிக்கப்பட்டது.

### சிறப்புக் கடன் திட்டங்கள்

2021 மாச்சு 04 - இலங்கையின் தேசிய நிதியியல் வசதிக்குட்படுத்தல் உபாயம் "சிறந்த வாழ்க்கைக்கான சிறந்த தரமான வசதிக்குட்படுத்தல்" என்ற தொலைநோக்கு அபிலாசைகளுடன் ஆரம்பிக்கப்பட்டது.

2021 மாச்சு 24 - சுற்றுலாத் துறையுடன் தொடர்பாக கொடுகடன் வசதிகளைப் பெற்றுக்கொண்டவர்களுக்கு 2021 செத்தெம்பர் 30 வரை சலுகைக் காலத்தினையும் 36 மாதங்கள் வரையிலான மீள்கொடுப்பனவுக் காலத்தினையும் வழங்குவதற்காக சௌபாக்கியா கொவிட்-19 புத்தியரளித்தல் வசதியின் தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள் திருத்தப்பட்டன.

2021 மே 04 - தெரிவுசெய்யப்பட்ட வேளாண்மை பெறுமதிச் சங்கிலிகளில் தொழிற்படுகின்றவர்களின் நிதியியல் தேவைப்பாடுகளுக்கு வசதியளிப்பதற்கு பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களை இயலுமைப்படுத்துவதற்காக உள்நாட்டு வேளாண்மை அபிவிருத்தி முன்னோடிச் செயற்றிட்டம் என்ற பெயரில் புதிய மீள்நிதியிடல் திட்டத்தினை அறிமுகப்படுத்தி நடைமுறைப்படுத்துவதற்காக தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள் விடுக்கப்பட்டன.

2021 யூன் 09 - அனைத்துத் துறைகளுக்கும் வழங்கப்பட்ட தொழிற்படு மூலதனக் கடன்களுக்காக 2021 செத்தெம்பர் 30 வரை சலுகைக் காலத்தினையும் 36 மாதங்கள் வரையான மீள்கொடுப்பனவுக் காலத்தினையும் வழங்குவதற்காக சௌபாக்கியா கொவிட்-19 புத்துயிரளித்தல் வசதியின் தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள் திருத்தப்பட்டன.

2021 யூன் 16 - பின்வருவனவற்றிற்காக நாணயச் சபையின் ஒப்புதல் பெறப்பட்டது:

- நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தரளவு தொழில்முயற்சிகள் துறை அபிவிருத்திக்காக கொடுகடன் உத்தரவாதம் மற்றும் வட்டி உதவுதொகைத் திட்டத்தினை அறிமுகப்படுத்துவதற்கு
- நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தரளவு பாற்பண்ணைத் துறை அபிவிருத்திக்காக கொடுகடன் உத்தரவாதம் மற்றும் வட்டி உதவுதொகைத் திட்டத்தினை அறிமுகப்படுத்துவதற்கு
- முக்கியமாக, வடமேல் மாகாணத்திலுள்ள குருநாகல் மற்றும் புத்தளம் மாவட்டங்களின் நடவடிக்கைகளை உள்ளடக்குவதற்காக குருநாகலில் புதிய பிரதேச அலுவலகத்தினை நிறுவுவதற்கு

2021 செத்தெம்பர் 01 - இலங்கையிலுள்ள நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தரளவு அரிசி ஆலைச் சொந்தக்காரர்களுக்குப் பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களினால் வழங்கப்படவுள்ள கடன்களுக்கான கொடுகடன் உத்தரவாதத் திட்டத்தினை நடைமுறைப்படுத்துவதற்காக தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள் விடுக்கப்பட்டன.

1 2021 ஒத்தோபர் 21 வரை நடைமுறைப்படுத்தப்பட்ட முக்கிய பொருளாதாரக் கொள்கை வழிமுறைகளையும் அதேபோன்று அண்மைய எதிர்காலத்தில் நடைமுறைப்படுத்தப்படவிருக்கும் கொள்கை வழிமுறைகளையும் உள்ளடக்குகிறது.

2021 செத்தெம்பர் 30 - தொழிற்படு மூலதனத் தேவைப்பாடுகளைப் பூர்த்தி செய்வதன் மூலமும் அரசிற்குச் சொந்தமான தொழில்முயற்சிகளின் நியதிச் சட்டக் கடப்பாடுகளைத் தீர்ப்பனவு செய்வதன் மூலமும் அரசிற்குச் சொந்தமான தொழில்முயற்சிகளுக்கு மீள்வலுவூட்டுவதற்கான மீள்நிதியிடல் திட்டமொன்றாக "சௌபாக்கியா கொவிட்-19 புத்துயிரளித்தல் வசதி கட்டம் - IV" இனை அறிமுகப்படுத்துவதற்காக நாணயச் சபையின் ஒப்புதல் பெறப்பட்டது.

## நிதியியல் துறை

### உரிமம்பெற்ற வங்கிகள்

2021 சனவரி 13 - உலகளாவிய நோய்த்தொற்றுக்கு மத்தியில் காரணமாக சிறிய மற்றும் நடுத்தரளவு நெல் ஆலையாளர்களுக்கு உதவியளிக்கின்ற அரசாங்கத்தின் முன்னெடுப்புக்களைப் பரிசீலனையில் கொண்டு சிறிய மற்றும் நடுத்தரளவு நெல் ஆலையாளர்களுக்கெதிரான அறவிடல் நடவடிக்கைகளை ஆறு மாத காலப்பகுதிக்கு இடைநிறுத்துவதற்கு உரிமம்பெற்ற வங்கிகளை அறிவுறுத்துகின்ற சுற்றறிக்கையொன்று விடுக்கப்பட்டது.

2021 சனவரி 19 - உரிமம்பெற்ற வங்கிகளின் தற்றுணிபுக் கொடுப்பனவுகள் மீதான கட்டுப்பாடுகளைத் தளர்த்துவதற்காக வங்கித்தொழில் சட்டப் பணிப்புரைகள் விடுக்கப்பட்டன. இதன்படி, உரிமம்பெற்ற வங்கிகள் காசு பங்குலாபங்களைச் செலுத்துவதற்கும் 2020 ஆண்டிற்கான நிதியியல் கூற்றுக்களின் கணக்காய்வு முடிவடைந்த பின்னர் இலாபத்தினை வெளிநாட்டிற்கு அனுப்புவதற்கும் அனுமதிக்கப்பட்டன. மேலும், உரிமம்பெற்ற வங்கிகள் பங்குகளை மீண்டும் வாங்குவதிலிருந்தும் அத்தியாவசியமல்லாச் செலவுகளை அதிகரிப்பதிலிருந்தும் விலகியிருக்குமாறு கேட்டுக் கொள்ளப்பட்ட வேளையில், 2021 யூன் 30 வரை மூலதனச் செலவினத்தினை மேற்கொள்ளும் போது தீவிரமான உரிய விழிப்புக் கவனத்துடனும் முன்மதியுடனும் நடந்து கொள்ள வேண்டும் எனக் கேட்டுக் கொள்ளப்பட்டன.

2021 சனவரி 25 - இலங்கை கணக்கீட்டு நியமங்கள் - இ.நி.அ.நியமம் 9: இனைப் பின்பற்றுவது தொடர்பில் 2021ஆம் ஆண்டிற்கான எதிர்பார்க்கப்பட்ட இழப்புக்களைக் கணிக்கும் போது இலங்கை அரசாங்கத்தினால் விடுக்கப்பட்ட வெளிநாட்டு நாணயத்தில் குறித்துரைக்கப்பட்ட வெளிப்படுத்துகை தொடர்பில் ஏற்புடைத்தான இழப்புக்களை ஏற்படுத்தும் செலுத்தத் தவறுகைகளை 10 சதவீதத்திற்குக் குறைக்கின்ற நிதியியல் சாதனங்கள் பற்றிய வழிகாட்டல்களுக்குத் திருத்தங்களை அறிமுகப்படுத்துகின்ற சுற்றறிக்கையொன்று விடுக்கப்பட்டது.

- 2021ஆம் ஆண்டிற்கான மத்திய அரசாங்கத்தின் வெளிநாட்டுக் கோரல்கள் மீது ஏற்புடைத்தான இடர்நேர்வு நிறையினை 20 சதவீதத்திலிருந்து 10 சதவீதத்திற்குக் குறைப்பதற்கும் ஈட்டினால் உத்தரவாதப்படுத்தப்பட்ட வதிவிட வீடமைப்புக் கடன்களுக்கு ஏற்புடைத்தான இடர்நேர்வு நிறையினை 50 சதவீதத்திலிருந்து 35 சதவீதத்திற்குக் குறைப்பதற்குமாக வங்கித்தொழில் சட்டப் பணிப்புரைகள் விடுக்கப்பட்டன.

- வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையின் மிகையான தளம்பலையும் வங்கிகளின் இடர்நேர்வு முகாமைத்துவத்தின் மீதான தாக்கத்தினையும் தவிர்க்கும் பொருட்டு உடனடியாக நடைமுறைக்குவரும் விதத்தில் மூன்று மாத காலப்பகுதிக்கு வெளிநாட்டுச் செலாவணியின் முன்னோக்கிய ஒப்பந்தங்களை மேற்கொள்வதிலிருந்தும் விலகியிருக்குமாறு உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளுக்கு அறிவிக்கின்ற வங்கித்தொழில் சட்டப் பணிப்புரைகள் விடுக்கப்பட்டன.

2021 மாச்சு 10 - பயணிகள் போக்குவரத்துப் பணிகளில் ஈடுபட்டுள்ள கொவிட்-19 இனால் பாதிக்கப்பட்ட வியாபாரங்கள் மற்றும் தனிப்பட்டவர்களினால் பெற்றுக்கொள்ளப்பட்ட குத்தகைக்குவிடும் வசதிகளுக்கு 2021 ஏப்பிறல் 01 இலிருந்து ஆரம்பமாகின்ற ஆறு மாதங்களுக்கு சலுகைகளை வழங்குமாறு உரிமம்பெற்ற வங்கிகளை அறிவுறுத்துகின்ற சுற்றறிக்கையொன்று விடுக்கப்பட்டது.

2021 மாச்சு 18 - வங்கிகளிலிருந்து வெளிநாட்டுச் செலாவணி பாரியளவில் வெளிப்பாயும் சாத்தியத்தினையும் வங்கிகளின் இடர்நேர்வு முகாமைத்துவத்தின் மீதும் செலாவணி வீதத்தின் மீதும் அவற்றின் தாக்கத்தினையும் பரிசீலனையில் கொண்டு 2021 மாச்சு 23இலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் 2021 ஏப்பிறல் 09

வரை இலங்கை நாட்டிற்கான பன்னாட்டு முறிகளைக் கொள்வனவு செய்வதனை இடைநிறுத்துமாறு உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளுக்கும் தேசிய சேமிப்பு வங்கிகளுக்கும் வங்கித்தொழில் சட்டப் பணிப்புரைகள் விடுக்கப்பட்டன.

2021 மாச்சு 19 - சுற்றுலாத் துறையிலுள்ள கொவிட்-19 இனால் பாதிக்கப்பட்ட வியாபாரங்களுக்கும் தனிப்பட்டவர்களுக்கும் வழங்கப்பட்ட படுகடன் சட்ட இசைவுத்தாமதத்தினை 2021 ஏப்பிறல் 01 இலிருந்து ஆரம்பமாகின்ற மற்றுமொரு ஆறு மாத காலப்பகுதிக்கு நீடிப்பதற்கு உரிமம்பெற்ற வங்கிகளுக்கு சுற்றறிக்கையொன்று விடுக்கப்பட்டது. நீடிக்கப்பட்ட சட்ட இசைவுத்தாமத காலப்பகுதி முடிவடைவதற்கு முன்னதாக அவர்களது கொடுகடன் வசதிகளை நீண்டதொரு காலப்பகுதிக்கு மறுசீரமைப்புச் செய்வதற்கான முன்மொழிவுகளுடன் கடன்பாட்டாளர்கள் முன்வருதற்குப் போதுமான கால அவகாசத்தினை வழங்குவதற்காகவே நீடிப்பு வழங்கப்பட்டது.

2021 ஏப்பிறல் 09 - வங்கிகளிலிருந்து வெளிநாட்டுச் செலாவணியின் கணிசமான தொகை வெளிப்பாயும் சாத்தியத்தினை/வாய்ப்பினையும் வங்கிகளின் இடர்நேர்வு முகாமைத்துவத்தின் மீதும் செலாவணி வீதத்தின் மீதும் அவை கொண்டிருக்கக்கூடிய தாக்கத்தினையும் பரிசீலனையில் கொண்டு 2021 ஏப்பிறல் 23 வரை இலங்கையின் நாட்டிற்கான பன்னாட்டு முறிகளின் கொள்வனவினை இடைநிறுத்துமாறு உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளுக்கும் தேசிய சேமிப்பு வங்கிக்கும் வங்கித்தொழில் சட்டப் பணிப்புரைகள் விடுக்கப்பட்டன.

2021 ஏப்பிறல் 21 - நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகள் துறையிலுள்ள தனிப்பட்டவர்களுக்கும் வியாபாரங்களுக்கும் உரிமம்பெற்ற வங்கிகளினால் வழங்கப்பட்ட கொடுகடன் மீது முன்னுரிமைத் துறை கடன்வழங்கல் இலக்கு ஒன்றினை அறிமுகப்படுத்துகின்ற விதத்தில் நாணய விதிச் சட்டக் கட்டளையொன்று விடுக்கப்பட்டது. இதன்படி, உரிமம்பெற்ற வங்கிகள் நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகள் துறையிலுள்ள தனிப்பட்டவர்களுக்கும் வியாபாரங்களுக்குமான அவற்றின் கொடுகடனை ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில், முன்னைய ஆண்டின் இறுதியில் காணப்பட்ட நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிக்கான வெளிநின்ற கடன்வழங்கல் இருப்பிற்கு மேலாக ஆண்டிற்கு 20 சதவீதத்திற்கு குறையாத அதிகரிப்பொன்றினை வழங்குதல் வேண்டும்.

2021 ஏப்பிறல் 23 - வங்கிகளிலிருந்து வெளிநாட்டுச் செலாவணியின் கணிசமான தொகை வெளிப்பாயும் சாத்தியத்தினை/வாய்ப்பினையும் வங்கிகளின் இடர்நேர்வு முகாமைத்துவத்தின் மீதான அதன் தாக்கத்தினையும் செலாவணி வீதத்தின் மீதான அழுத்தத்தினை விடுவிப்பதனையும் பரிசீலனையில் கொண்டு மறுஅறிவித்தல் வரை இலங்கையின் நாட்டிற்கான பன்னாட்டு முறிகளின் கொள்வனவினை இடைநிறுத்துமாறு உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளுக்கும் தேசிய சேமிப்பு வங்கிக்கும் வங்கித்தொழில் சட்டப் பணிப்புரைகள் விடுக்கப்பட்டன.

2021 ஏப்பிறல் 25 - வெளிநாட்டுச் செலாவணியின் மிகையான தளம்பலையும் வங்கிகளின் இடர்நேர்வு முகாமைத்துவத்தின் மீதான அதன் தாக்கத்தினையும் தவிர்க்கும் நோக்குடன், மறுஅறிவித்தல் வரை, நிபந்தனைகளுக்குட்பட்டு உடன் திகதிக்கு அப்பாலுள்ள பெறுமதித் திகதியில் வெளிநாட்டுச் செலாவணியின் முன்னோக்கிய ஒப்பந்தங்களை மேற்கொள்வதிலிருந்தும் விலகியிருக்குமாறு உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளைக் கோருகின்ற விதத்தில் வங்கித்தொழில் சட்டப் பணிப்புரைகள் விடுக்கப்பட்டன.

2021 மே 25 - உண்மைப் பொருளாதாரத்திற்குள் மூலதன உருவாக்கத்தினைத் தூண்டும் பொருட்டும் நாட்டின் வெளிநாட்டு நாணயத் தேவைகளைத் துணைநிரப்பும் பொருட்டும் உரிமம்பெற்ற வங்கிகளின் வெளிநாட்டு நாணயக் கடன்பாடுகளின் ஓராண்டிற்கான குறுங்காலக் கடன்பாடுகள் மீதான மாற்றத்தக்க வரையறைகளின் மீதும் அதேவேளை மொத்த வெளிநாட்டு நாணயக் கடன்பாடுகளின் வரையறையினை 10 சதவீதம் வரையில் பேணுவதன் மீதுமான வங்கித்தொழில் சட்டப் பணிப்புரைகள் தொடர்பில் திருத்தமொன்று விடுக்கப்பட்டது.

- கொவிட்-19இன் மூன்றாவது அலையின் பரவல் காரணமாக மோசமாகப் பாதிக்கப்பட்ட வியாபாரங்களுக்கும் தனிப்பட்டவர்களுக்கும் நிவாரண வழிமுறைகளையும் சலுகைகளை நீடிப்பதனையும் அறிவிக்கின்ற சுற்றறிக்கையொன்று உரிமம்பெற்ற வங்கிகளுக்கு விடுக்கப்பட்டது. தொற்றினால் மோசமாகப் பாதிக்கப்பட்ட வங்கியின் கடன்பாட்டாளர்கள் மீதான சுமையினைத் தளர்த்தும் நோக்குடன் அனைத்து

உரிமம்பெற்ற வங்கிகளிடையேயும் திட்டம் தொடர்பில் ஒரே விதமான காத்திரமான தன்மையினை வழங்குவதற்காக சுற்றிக்கை விடுக்கப்பட்டது.

2021 யூன் 07 - கொவிட்-19 பரவலைக் கட்டுப்படுத்துவதற்காக விதிக்கப்பட்ட பயணக் கட்டுப்பாடுகளின் கீழ் வங்கித்தொழில் பணிகளை வழங்குவது தொடர்பில் விடுக்கப்பட்ட அனைத்து தொடர்பான பாதுகாப்பு வழிமுறைகளையும் வழிகாட்டல்களையும் கடுமையாகப் பின்பற்றி இன்றியமையாத வங்கித்தொழில் பணிகளை மேற்கொள்வது பற்றி உரிமம்பெற்ற வங்கிகளுக்கு அறிவிப்பதற்காக சுற்றிக்கையொன்று விடுக்கப்பட்டது.

2021 யூன் 16 - நிறுவனங்களுக்கே உரித்தான அழுத்தங்கள், சந்தை அடிப்படையிலான அழுத்தங்கள் அல்லது இவையிரண்டும் இணைந்த அழுத்தங்களிலிருந்து தோன்றக்கூடிய மூலதனத் திரவத்தன்மை மற்றும் ஏனைய அனைத்து அம்சங்களுடனும் தொடர்பான அதிர்வுகளைக் கையாளக்கூடிய மீட்சித் திட்டங்களைப் பேணுவது பற்றி உரிமம்பெற்ற வங்கிகளுக்கு அறிவிப்பதற்காக வங்கித்தொழில் சட்டப் பணிப்புரைகள் வளிடுக்கப்பட்டன.

- இலங்கை அபிவிருத்தி முறிகள் மற்றும் நாட்டிற்கான பன்னாட்டு முறிகள் ஒவ்வொன்றினதும் 50 சதவீதப் பங்கினை வெளிநாடுகளிலிருந்து புதிய கடன்பாடுகளினூடான திரட்டப்பட்ட மூலங்களிலிருந்து நிதியிட வேண்டுமென்ற நிபந்தனைகளுக்குட்பட்டு மற்றைய விடயங்களுடன் இரண்டாந்தரச் சந்தையில் நாட்டிற்கான பன்னாட்டு முறிகளைக் கொள்வனவு செய்வதற்கு உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளையும் தேசிய சேமிப்பு வங்கியினை அனுமதிக்கின்ற விதத்தில் வங்கித்தொழில் சட்டப் பணிப்புரைகள் விடுக்கப்பட்டன.

2021 யூன் 18 - 2011ஆம் ஆண்டின் 01ஆம் இலக்க வங்கித்தொழில் (கரைகடந்த வங்கித்தொழில் வியாபாரத் திட்டம்) கட்டளையிலுள்ள அட்டவணையினை அகற்றுகின்ற, வங்கித்தொழிலின் கீழ் (கரைகடந்த வங்கித்தொழில் வியாபாரத் திட்டம்) குறித்துரைக்கப்பட்ட வெளிநாட்டு நாணயமொன்றாக தாய் பாத் இனை ஏற்றுக்கொள்ளும் தீர்மானம் பற்றி அறிவிக்கும் விதத்தில் வங்கித்தொழில் சட்டப் பணிப்புரையொன்று விடுக்கப்பட்டது.

2021 யூலை 13 - உரிமம்பெற்ற வங்கிகளின் தற்றுணிபுக் கொடுப்பனவுகளைக் கட்டுப்படுத்துகின்ற வங்கித்தொழில் சட்டப் பணிப்புரைகள் விடுக்கப்பட்டன. இதன்படி, உரிமம்பெற்ற வங்கிகள் காசுப் பங்குலாபக் கொடுப்பனவுகளையும் இலாபங்களை வெளிநாட்டிற்கு அனுப்புவதனையும் 2021ஆம் ஆண்டிற்கான நிதியியல் கூற்றுக்களின் கணக்காய்வு நிறைவடையும் வரை பிற்போடுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டன. மேலும், மூலதனச் செலவினங்களை மேற்கொள்கின்ற போது கடுமையான உரிய விழிப்புக் கவனத்தினையும் முன்மதியுடைய தன்மையினையும் பின்பற்றுகின்ற வேளையில் பங்குகளை மீண்டும் வாங்குவதில் ஈடுபடுவதனையும் அத்தியாவசியமற்ற செலவுகளை அதிகரிப்பதனையும் 2021 திசெம்பர் 31 வரை தவிர்த்துக் கொள்ளுமாறும் கேட்டுக் கொள்ளப்பட்டன.

2021 ஓகத்து 21 - 2021 ஓகத்து 20 இலிருந்து 2021 ஓகத்து 30 வரையான தனிமைப்படுத்தல் ஊரடங்கு காலப்பகுதியில் அனுமதிக்கப்பட்ட தொழிற்பாடுகளைக் குறிப்பிடுகின்ற சுகாதாரப் பணிகள் பணிப்பாளர் நாயகத்தின் அறிவித்தலுக்கிணங்க தடங்கலற்ற அத்தியாவசிய வங்கித்தொழில் பணிகளை மேற்கொள்வதற்கு விடுக்கப்பட்ட அனைத்து தொடர்பான பாதுகாப்பு வழிமுறைகளையும் வழிகாட்டல்களையும் கடுமையாகப் பின்பற்றுமாறு உரிமம்பெற்ற வங்கிகளுக்கு அறிவிக்கின்ற சுற்றறிக்கையொன்று விடுக்கப்பட்டது.

2021 ஓகத்து 24 - ரூபா மற்றும் வெளிநாட்டு நாணய வைப்புக்களின் மீது உரிமம்பெற்ற வங்கிகளினால் முன்வைக்கப்பட்ட மற்றும் செலுத்தப்பட்ட வட்டி வீதங்களில் காணப்படும் முரண்பாடுகளைப் பரிசீலனையில் கொண்டு, உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகள் மற்றும் தேசிய சேமிப்பு வங்கியின் அனைத்து வெளிநாட்டு நாணய வைப்புக்களின் மீது முன்வைக்கப்படக்கூடிய அல்லது செலுத்தப்படக்கூடிய உயர்ந்தபட்ச ஆண்டு பயனுறுதி வாய்ந்த வட்டி வீதம் 5.00 சதவீதம் வரையில் இருத்தல் வேண்டுமென்பதனை அறிவுறுத்துகின்ற நாணய விதிச் சட்டக் கட்டளையொன்று அனைத்து உரிமம்பெற்ற வங்கிகளுக்கும் தேசிய சேமிப்பு வங்கிக்கும் விடுக்கப்பட்டன. வெளிநாட்டு நாணயத்திலமைந்த சிறப்பு வைப்புக் கணக்குகளைப் பொறுத்தவரையில் முன்வைக்கப்படக்கூடிய அல்லது செலுத்தப்படக்கூடிய மேலதிக வட்டி வீதம் மேலே குறிப்பிடப்பட்ட வட்டி வீதங்களை விடக் கூடுதலாகவும் மேலாகவும் இருக்கலாம்.

2021 செத்தெம்பர் 01 - உலகளாவிய நோய்த்தொற்றின் அதிகரிப்பு மற்றும் அதன் விளைவாக வியாபாரங்களுக்கும் தனிப்பட்டவர்களுக்கும் ஏற்பட்ட இடர்ப்பாடுகள் என்பனவற்றைப் பரிசீலனையில் கொண்டு, கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்றினால் பாதிக்கப்பட்ட கடன்பாட்டாளர்களுக்கு முன்னர் வழங்கப்பட்ட சலுகைகளை (2021 ஓகத்து 31 வரை) 2021 திசெம்பர் 31 வரை நீடிப்பதற்கு உரிமம்பெற்ற வங்கிகளுக்கு சுற்றறிக்கையொன்று விடுக்கப்பட்டது. செயற்படுகின்ற மற்றும் செயற்படா வகைகள் இரண்டிலுமுள்ள தகைமையுடைய கடன்பாட்டாளர்களுக்கு ஒவ்வொரு விடயமாக ஆராய்ந்து இச்சலுகைகள் கிடைக்கச் செய்யப்படும்.

2021 செத்தெம்பர் 08 - உள்நாட்டு வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையில் செலாவணி வீதத்தினதும் திரவத்தன்மையினதும் உறுதிப்பாட்டினைப் பேணும் நோக்குடன் உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகள் மற்றும் தேசிய சேமிப்பு வங்கியுடனான நாணயக் கடிதம் மற்றும் ஏற்றுக்கொள்ளல் நியதிகளுக்கெதிராக தெரிவுசெய்யப்பட்ட அவசியமல்லாத பொருட்களின் இறக்குமதிகளுக்கெதிராக 100 சதவீத காசு அளவுத் தேவைப்பாடு உடனடியாக நடைமுறைக்குவரும் விதத்தில் விதிக்கப்பட்டது.

- உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளின் குறிப்பிட்ட அத்தியாவசியமல்லாத மற்றும் அவசியமற்றப் பொருட்களின் இறக்குமதிகள் மீதான நாணயக் கடிதங்களுக்கெதிராக வட்டியற்ற 100 சதவீத காசு வைப்புத் தேவைப்பாட்டினைப் பேணுவதன் மீது கட்டளையொன்று விடுக்கப்பட்டது.

- உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகள் மற்றும் உரிமம்பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளுக்கான பாசல் III இன் கீழான மூலதனத் தேவைப்பாடுகள் மற்றும் உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகள் மற்றும் உரிமம்பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகள் தொடர்பான ஏனைய விடயங்களின் ஒழுங்குமுறைப்படுத்தல் தேவைப்பாடுகள் மீதான 2016ஆம் ஆண்டின் 01ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டப் பணிப்புரையின் நோக்கத்திற்காக லங்கா றேடிங் ஏஜென்சி லிமிடெட்டினை ஏற்றுக்கொள்ளத்தக்க வெளிநாட்டுக் கொடுகடன் மதிப்பீட்டு நிறுவனமாக அங்கீகரிக்கும் விதத்தில் சுற்றறிக்கையொன்று விடுக்கப்பட்டது.

2021 செத்தெம்பர் 13 - சுற்றுலாத் துறையிலுள்ள கொவிட்-19 இனால் பாதிக்கப்பட்ட வியாபாரங்களுக்கும் தனிப்பட்டவர்களுக்கும் வழங்கப்பட்ட படுகடன் சட்ட இசைவுத்தாமதத்தினை 2021 ஒத்தோபர் 01இல் ஆரம்பமாகின்ற மற்றொரு ஒன்பது மாதங்களுக்கு நீடிப்பது தொடர்பில் உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளுக்கு சுற்றறிக்கையொன்று விடுக்கப்பட்டது.

2021 செத்தெம்பர் 14 - இலங்கை கணக்கீட்டு நியமம், 'இ.நி.அ.நியமம் 9: நிதியியல் சாதனங்கள்' மற்றும் வங்கித்தொழில் தொழில் துறையில் நிலையானதும் முன்மதியுடையதுமான நடைமுறைகளை நிறுவுதலுக்கிணங்க உரிமம்பெற்ற வங்கிகளிலுள்ள கொடுகடன் வசதிகள் தவிர்ந்த, கொடுகடன் வசதிகளையும் நிதியியல் சொத்துக்களையும் வகைப்படுத்தல், அங்கீகரித்தல் மற்றும் அளவிடல் மீதான ஒழுங்குமுறைப்படுத்தல் கட்டமைப்பினை மேலும் வலுப்படுத்தி இணங்குவிக்கும் நோக்குடன் வங்கித்தொழில் சட்டப் பணிப்புரைகள் விடுக்கப்பட்டன.

2021 செத்தெம்பர் 30 - இலங்கை கணக்கீட்டு நியமம், இ.நி.அ.நியமம் 9: கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்றுக்கு மத்தியில் உரிமம்பெற்ற வங்கிகளின் நிதியியல் சாதனங்களை நிலையான மற்றும் முன்மதியுடைய விதத்தில் பின்பற்றுவதனை நிறுவுகின்ற நோக்குடன் உரிமம்பெற்ற வங்கிகளிலுள்ள கொடுகடன் வசதிகள் தவிர்ந்த கொடுகடன் வசதிகளையும் நிதியியல் சொத்துக்களையும் வகைப்படுத்தல், அங்கீகரித்தல் மற்றும் அளவிடல் தொடர்பான 2021ஆம் ஆண்டின் 13ஆம் இலக்க மற்றும் 2021ஆம் ஆண்டின் 14ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டப் பணிப்புரைகளுக்கு பிற்சேர்ப்பு சுற்றறிக்கையொன்று விடுக்கப்பட்டது.

2021 ஒத்தோபர் 01 - உரிமம்பெற்ற வங்கிகளின் குறிப்பிட்ட அத்தியாவசியமல்லாத மற்றும் அவசியமற்றப் பொருட்களின் இறக்குமதி மீதான நாணயக் கடிதத்திற்கெதிராக வட்டியற்ற 100 சதவீத காசு வைப்புத் தேவைப்பாட்டினைப் பேணுவது மீது விடுக்கப்பட்ட கட்டளை புறக்கீடு செய்யப்பட்டது.

- இறக்குமதிகளுக்கெதிரான அளவுத் தேவைப்பாடுகள் மீதான 2021ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டப் பணிப்புரையினை நீக்குகின்ற விதத்தில் வங்கித்தொழில் சட்டப் பணிப்புரைகள் விடுக்கப்பட்டன.

| | | |
|---|---|---|
| 2021 ஒத்தோபர் 05 | - | சுற்றுலாத் துறை உள்ளிட்ட, பயணிகள் போக்குவரத்துப் பணிகளில் ஈடுபட்டுள்ள கொவிட்-19 இனால் பாதிக்கப்பட்ட வியாபாரங்களுக்கும் தனிப்பட்டவர்களுக்கும் வழங்கப்பட்ட சலுகைகளை நீடிப்பதற்கு உரிமம்பெற்ற வங்கிகளுக்கு சுற்றறிக்கையொன்று விடுக்கப்பட்டது. இதற்கமைய, கொவிட்-19 இனால் பாதிக்கப்பட்ட பொது மற்றும் தனிப்பட்ட பயணிகள் போக்குவரத்துப் பணிகளை வழங்குகின்ற வியாபாரங்களினாலும் தனிப்பட்டவர்களினாலும் பெறப்பட்ட குத்தகை வசதிகளுக்கான கோரிக்கைகளை 2021ஆம் ஆண்டின் 08ஆம் இலக்கச் சுற்றறிக்கையின் கீழும் சுற்றுலாத் துறையிலுள்ள அத்தகைய வியாபாரங்கள் மற்றும் தனிப்பட்டவர்களுக்கான கோரிக்கைகளை 2021இன் 10ஆம் இலக்கச் சுற்றறிக்கையின் கீழும் வழங்குமாறு உரிமம்பெற்ற வங்கிகள் கோரப்பட்டன. |
| இனிவரவிருப்பவை | - | புதிய வங்கித்தொழில் சட்டத்தினை வரைதல் |
| | - | தொழில்நுட்பவியல் இடர்நேர்வு முகாமைத்துவம் மற்றும் உரிமம்பெற்ற வங்கிகளில் காணப்படும் தாக்குப்பிடிக்குத் தன்மை என்பனவற்றிற்கான ஒழுங்குமுறைப்படுத்தல் கட்டமைப்பினை நிறுவுதல் |
| | - | நீடித்து நிலைத்திருக்கும் நிதியினை நோக்கிய வங்கித்தொழில் துறை முன்னெடுப்புக்களுக்கு வசதியளித்தல் |
| | - | வியாபாரத் தொழிற்பாடுகளை வெளியிலிருந்து பெற்றுக்கொள்ளுதல் மீதான திருத்தியமைக்கப்பட்ட ஒழுங்குமுறைப்படுத்தல் கட்டமைப்பு |

## உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள், சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகள், உரிமம்பெற்ற நுண்பாக நிதிக் கம்பனிகள் மற்றும் முதனிலை வணிகர் கம்பனிகள்

| | | |
|---|---|---|
| 2021 சனவரி 01 | - | மதிப்பீட்டாளர்களின் தகைமைப் பிரமாணங்களைத் திருத்துகின்ற விதத்தில் உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள் மற்றும் சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகளின் அசையாச் சொத்துக்களின் மதிப்பீடு தொடர்பான பணிப்புரைகளுக்கு திருத்தமொன்று விடுக்கப்பட்டது. |
| 2021 பெப்புருவரி 17 | - | முதல் பதிவிற்குப் பின்னர் ஓராண்டிற்கும் கூடுதலான காலம் இலங்கையில் பயன்படுத்தப்பட்டு வருகின்ற பதிவுசெய்யப்பட்ட ஊர்திகள் தொடர்பில், 80 சதவீத திருத்தப்பட்ட வீதத்துடன் வழங்கப்பட்ட கொடுகடன் வசதிகளுக்காக உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள் மற்றும் சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகளின் பெறுமதிக்கான கடன் விகிதம் தொடர்பான பணிப்புரைகளுக்கு திருத்தமொன்று விடுக்கப்பட்டது. |
| 2021 மாச்சு 12 | - | கொவிட்-19 இனால் பாதிக்கப்பட்ட பயணிகள் போக்குவரத்துப் பணிகளில் ஈடுபட்டிருக்கின்ற வியாபாரங்களுக்கும் தனிப்பட்டவர்களுக்கும் 2021 ஏப்பிறல் 01ஆம் நாளிலிருந்து ஆரம்பமாகின்ற ஆறு மாத காலப்பகுதிக்கு சலுகைகளை வழங்குமாறு கோருகின்ற சுற்றறிக்கையொன்று உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளுக்கும் சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகளுக்கும் விடுக்கப்பட்டது. |
| 2021 மாச்சு 19 | - | 2020 செத்தெம்பர் 30ஆம் நாளன்று விடுக்கப்பட்ட 2020ஆம் ஆண்டின் 09ஆம் இலக்கச் சுற்றறிக்கையின் கீழ் சுற்றுலாத் துறைக்கு வழங்கப்பட்ட படுகடன் சட்ட இசைவுத்தாமதத்தினை 2021 ஏப்பிறல் 01 இலிருந்து ஆரம்பமாகின்ற மேலுமொரு ஆறு மாத காலப்பகுதிக்கு நீடிக்குமாறு உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளையும் சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகளையும் கோருகின்ற சுற்றறிக்கையொன்று விடுக்கப்பட்டது. |
| 2021 மாச்சு 31 | - | கொடுகடன் வசதிகளை வகைப்படுத்தல் மற்றும் அளவிடுதல் மீதான 2020ஆம் ஆண்டின் 01ஆம் இலக்கப் பணிப்புரையினை நடைமுறைப்படுத்துவதனை மூன்று மாத காலப்பகுதிக்குப் பிற்போடுவது தொடர்பில் உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளுக்கும் சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகளுக்கும் அறிவிக்கப்பட்டது. |
| | - | கொவிட்-19 உலகளாவிய நோய்தொற்றின் கடுமையான தாக்கம் காரணமாக சவால்மிக்க தொழிற்பாட்டுச் சூழ்நிலையினைக் பரிசீலனையில் கொண்டு ஏற்பட்டுள்ள திரவத்தன்மை அழுத்தத்தினை வெற்றி கொள்வதில் உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளுக்கும் சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகளுக்கும் வசதிகளை வழங்கும் பொருட்டு, 2020 செத்தெம்பர் 30ஆம் நாள் விடுக்கப்பட்ட |

| | | |
|---|---|---|
| | | திரவச் சொத்துக்கள் மீதான பணிப்புரைகளைத் திருத்துவது தொடர்பான பணிப்புரை 2021 யூன் 30 வரையான மூன்று மாத காலப்பகுதிக்கு மேலும் நீடிக்கப்பட்டது. |
| 2021 ஏப்பிறல் 01 | - | இலங்கை வைப்புக் காப்புறுதி மற்றும் திரவத்தன்மை ஆதரவுத் திட்டத்தின் கீழ் உயர்ந்தபட்ச இழப்பீட்டுக் கொடுப்பனவினை ரூ.1,100,000 வரை அதிகரிப்பதற்காக 2021ஆம் ஆண்டின் 01ஆம் இலக்க ஒழுங்குவிதி விடுக்கப்பட்டது. |
| 2021 ஏப்பிறல் 09 | - | உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளின் வெளிநாட்டு நிதியிடலின் இடர்நேர்விற்குள்ளாகும் தன்மையினால் உருவாகும் ஏதேனும் நிதியியல் தளம்பல்களை உறுதிப்படுத்துதல், வெளிநாட்டு நாணயக் கடன்பாடுகளின் இடர்நேர்வு முகாமைத்துவத்தை வழங்குதல் மற்றும் உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளின் வெளிநாட்டு நாணயக் கடன்பாடுகளுக்கான ஒழுங்குமுறைப்படுத்தல் கட்டமைப்பொன்றினை நிறுவுதல் ஆகிய குறிக்கோள்களுடன் வெளிநாட்டு நாணயக் கடன்பாடுகளின் மீது புதிய பணிப்புரையொன்று விடுக்கப்பட்டது. |
| 2021 யூன் 04 | - | உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளின் வெளிநாட்டு நாணயக் கடன்பாடுகள் தொடர்பில் முன்னர் விடுக்கப்பட்ட பணிப்புரைகளுக்கு மேலதிகமாக, நிதியியல் மற்றும் நிதியியல்லாத நிறுவனங்களின் வெளிநாட்டு நாணயக் கடன்பாடுகளுக்கு மேலும் ஓராண்டு காலப்பகுதிக்கு வசதியளிப்பதற்கு உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளுக்கு அறிவிக்கப்பட்டது. |
| 2021 யூன் 09 | - | கொவிட்-19 இனால் பாதிக்கப்பட்ட வியாபாரங்கள் மற்றும் தனிப்பட்டவர்களுக்கான சலுகைகள் தொடர்பில் சுற்றறிக்கை விடுக்கப்பட்டது. இதற்கமைய, மூன்றாவது அலையின் காரணமாக வியாபாரங்களினாலும் தனிப்பட்டவர்களினாலும் எதிர்நோக்கப்பட்ட சவால்களை ஈடுசெய்யும் நோக்குடன் பாதிக்கப்பட்ட தரப்பினர்களுக்கான சலுகைகளை மேலும் நீடிக்குமாறு உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளும் சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகளும் கேட்டுக் கொள்ளப்பட்டன. |
| 2021 யூலை 05 | - | உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளும் சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகளும் கடன்பாட்டாளர்களின் நிதியியல் இடர்ப்பாடுகளைப் பரிசீலனையில் கொண்ட பின்னர், உலகளாவிய நோய்த்தொற்றினால் பாதிக்கப்பட்ட வாடிக்கையாளர்களின் கொடுகடன் வசதிகள் தொடர்பில் ஊர்திகளைப் பறிமுதல் செய்து மீள உடமைப்படுத்துவதனைக் குறைந்தபட்சம் அடுத்த மூன்று மாத காலப்பகுதிக்கு (2021 செத்தெம்பர் 30 வரை) நிலுவைகளுடன் நிறுத்தி வைக்குமாறு கேட்டுக் கொள்ளப்பட்டன. |
| 2021 யூலை 07 | - | 2020ஆம் ஆண்டின் 01ஆம் இலக்க நிதித்தொழில் சட்டப் (கொடுகடன் வசதிகளின் வகைப்படுத்தல் மற்றும் அளவிடல்) பணிப்புரையின் நடைமுறைக்குவரும் நாள் பிற்போடப்பட்டது. மாதாந்த அடிப்படையிலோ அல்லது அதற்கும் கூடுதலான அடிப்படையிலோ மீளச் செலுத்தத்தக்க கொடுகடன் வசதிகளுக்கான பெறுமதி இழப்பின் கீழ் விசேடமாகக் குறிப்பிடுகின்ற வகையினையும் நிலை 3 வகையினையும் வகைப்படுத்துகின்ற போது உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள் முறையே 2022 ஏப்பிறல் 01 மற்றும் 2023 ஏப்பிறல் 01 இலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் 120 நாட்கள் மற்றும் 90 நாட்கள் கடந்தும் நிலுவையிலுள்ள நடைமுறையினைப் பின்பற்ற வேண்டுமென அறிவிக்கப்பட்டன. |
| 2021 யூலை 09 | - | ஒவ்வொரு முதனிலை வணிகர் கம்பனியும் 2021 திசெம்பர் 31 வரை ரூ.1.0 பில்லியனுக்கும் குறையாத மட்டமொன்றில் மைய மூலதனத்தினைப் பேண வேண்டுமெனவும் அதன் பின்னர் 2022 சனவரி 01 இலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் ரூ.2.0 பில்லியனுக்கும் 2023 சனவரி 01 இலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் ரூ.2.5 பில்லியன் வரையிலும் அதனை அதிகரிக்க வேண்டுமென்பதனை விபரிக்கின்ற குறைந்தபட்ச மூலதனத் தேவைப்பாடு தொடர்பில் முதனிலை வணிகர் கம்பனிகளுக்குப் பணிப்புரையொன்று விடுக்கப்பட்டது. பணிப்புரையானது விசேட இடர்நேர்வு ஒதுக்கு, மூலதன மதிப்பீடு மற்றும் திட்டமிடல் செய்முறை என்பனவற்றை பற்றி விபரிக்கிறது. |
| 2021 ஓகத்து 06 | - | இலங்கை வைப்புக் காப்புறுதி மற்றும் திரவத்தன்மை ஆதரவுத் திட்டத்தின் கீழ் 2010ஆம் ஆண்டின் 01ஆம் இலக்க ஒழுங்குவிதி திருத்தப்பட்டதுடன் 2021ஆம் ஆண்டின் 02ஆம் இலக்க புதிய ஒழுங்குவிதி விடுக்கப்பட்டது. |

| | | |
|---|---|---|
| 2021 செத்தெம்பர் 10 | - | கொவிட்-19 இனால் பாதிக்கப்பட்ட வியாபாரங்கள் மற்றும் தனிப்பட்டவர்களுக்கான சலுகைகளை 2021 செத்தெம்பர் 30 வரை மேலும் நீடிக்குமாறு உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளையும் சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகளையும் கேட்டுக் கொள்ளும் விதத்தில் 2021 யூன் 09ஆம் திகதியிடப்பட்ட சுற்றறிக்கைக்கு திருத்தமொன்று விடுக்கப்பட்டது. |
| 2021 செத்தெம்பர் 24 | - | லங்கா றேட்டிங் ஏஜன்சி லிமிடெட் மத்திய வங்கியினால் குறித்துரைக்கப்பட்ட நோக்கங்களுக்காக ஏற்றுக்கொள்ளத்தக்க கொடுகடன் தரமிடல் முகவரொன்றாக அங்கீகரிக்கப்பட்டிருக்கின்றமையினை உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளுக்கும் சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகளுக்கும் அறிவிக்கின்ற சுற்றறிக்கையொன்று விடுக்கப்பட்டது. |
| 2021 ஒத்தோபர் 06 | - | தொடர்பான தரப்பினர்களிடமிருந்தும் அரச அதிகாரிகளிடமிருந்தும் கிடைத்த பல கோரிக்கைகளைப் பரிசீலனையில் கொண்டு, கொவிட்-19 இனால் பாதிக்கப்பட்ட வியாபாரங்கள் மற்றும் தனிப்பட்டவர்களுக்கு வழங்கப்பட்ட சலுகைகளை 2022 மாச்சு 31 வரை நீடிக்குமாறும் அறவிடல் நடவடிக்கைகளை இடைநிறுத்துமாறு உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளையும் சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகளையும் கேட்டுக் கொள்கின்ற சுற்றறிக்கையொன்று விடுக்கப்பட்டது. |
| இனிவரவிருப்பவை | - | நிதித்தொழில் சட்டத்தின் மீளாய்வு |
| | - | வங்கியல்லா நிதியியல் நிறுவனங்கள் துறையின் ஒழுங்குமுறைப்படுத்தல் கட்டமைப்பின் மீளாய்வு |

## காப்புறுதி

| | | |
|---|---|---|
| 2021 மாச்சு 10 | - | பரிசீலனைக்குரிய பணிப்புரையில் குறித்துரைக்கப்பட்டுள்ள நியதிகள் மற்றும் நிபந்தனைகளின்படியான உறுதிப்படுத்தலை இலங்கை காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தல் ஆணைக்குழுவிற்குச் சமர்ப்பிப்பதனைக் காப்புறுதிக் கம்பனிகளின் பணிப்பாளர் சபைக்கு அறிவுறுத்துகின்ற விதத்தில் பங்குலாபம் பிரகடனப்படுத்தல் மற்றும் பகிர்ந்தளித்தல் மீதான 2021ஆம் ஆண்டின் 01ஆம் இலக்கப் பணிப்புரை விடுக்கப்பட்டது. |
| 2021 மாச்சு 23 | - | காப்புறுதிக் கம்பனிகள் அவர்களது சாதனங்கள்/ பூட்கைப் படிவங்கள் இலங்கை காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தல் ஆணைக்குழுவின் கருத்துப்படி நியாயமானவை மற்றும் ஒப்புரவானவை என இலங்கை காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தல் ஆணைக்குழுவினால் உறுதிப்படுத்தப்பட்ட பின்னர் மாத்திரமே அச்சாதனங்களை அறிமுகப்படுத்தலாம் என்பதனை அவர்களுக்கு அறிவிப்பதற்காக 2021ஆம் ஆண்டின் 01ஆம் இலக்க சுற்றறிக்கை விடுக்கப்பட்டது. |
| 2021 மாச்சு 24 | - | குறியீடுகளை வழங்குவது மற்றும் குறியீடுகளை மாற்றுவது மீதான கட்டுப்பாடுகள் தொடர்பில் காப்புறுதிக் கம்பனிகளுக்கும் காப்புறுதித் தரகுக் கம்பனிகளுக்கும் 2021ஆம் ஆண்டின் 02ஆம் இலக்கப் பணிப்புரை விடுக்கப்பட்டது. |
| 2021 ஏப்பிறல் 08 | - | 3ஆம் தரப்பு உந்து ஊர்தி காப்புறுதியை ஊக்குவித்தல்/ விளம்பரப்படுத்தலைத் தடைசெய்வது தொடர்பில் அனைத்துப் பொதுக் காப்புறுதிக் கம்பனிகளுக்கும் 2021ஆம் ஆண்டின் 02ஆம் இலக்கச் சுற்றறிக்கை விடுக்கப்பட்டது. |
| 2021 யூலை 29 | - | நிதியியல் கையாடல் அல்லது மோசடிக் காரணங்களுக்காக பணி முடிவுறுத்தப்பட்ட ஆட்களை தொழிலுக்கமர்த்துவதிலிருந்தும் விலகியிருக்குமாறு அனைத்துக் காப்புறுதியாளர்கள், தரகர்கள் மற்றும் இழப்புக்களைச் சீரமைப்போரை பணிக்கின்ற விதத்தில் 2021ஆம் ஆண்டின் 03ஆம் இலக்கப் பணிப்புரை விடுக்கப்பட்டது. |
| 2021 ஓகத்து 30 | - | எதிர்பாராத பொறுப்புக்களைக் கட்டுப்படுத்துவதற்கும் பங்கிலாபங்களைப் பிரகடனப்படுத்தும் சந்தர்ப்பத்திலும் காப்புறுதியாளர்களின் பகிர்ந்தளிப்பின் போதும் தொடர்பான கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்கியொழுகும் விதத்தில் 2021ஆம் ஆண்டின் 01ஆம் இலக்கப் பணிப்புரை திருத்தப்பட்டது. |
| 2021 செத்தெம்பர் 06 | - | தொலைத்தொடர்பூட்டல் பணி வழங்குவோரின் தளத்தினையும் (செல்லிடத் தொலைபேசிக் காப்புறுதி) அவற்றுடன் தொடர்பான விடயங்களையும் பயன்படுத்துவதனை முடிவுறுத்துகின்றமை தொடர்பாக 2021ஆம் ஆண்டின் 04ஆம் இலக்கப் பணிப்புரை விடுக்கப்பட்டது. |

| | | |
|---|---|---|
| இனிவரவிருப்பவை | - | உலக வங்கியின் நிதியியல் துறை நவீனமயப்படுத்தல் செயற்றிட்டத்தின் 11ஆவது கூறு மீதான அறிக்கையினை இறுதிப்படுத்தல் |
| | - | உள்ளூர் காப்புறுதித் தொழில் துறையில் மிகச் சிறந்த பன்னாட்டு நடைமுறைகளைப் பின்பற்றச் செய்யும் நோக்குடன் இலங்கை காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தல் ஆணைக்குழு காப்புறுதி விளம்பரங்கள் மீதான வழிகாட்டலை இறுதிப்படுத்தும் செய்முறையில் ஈடுபட்டிருக்கிறது |
| | - | உலக வங்கியின் உதவியுடன் காப்பறுதித் தொழில் துறைச் சட்டத்தின் தற்போதைய ஒழுங்குவிதிகளை வலுப்படுத்தல் |

## மூலதனச் சந்தை

| | | |
|---|---|---|
| 2021 சனவரி | - | கொழும்பு பங்குப் பரிவர்த்தனையின் ஆலோசனையுடன் பங்குத் தரகுக் கம்பனிகளுக்காக அனைத்தையுமுள்ளடக்கிய வழிகாட்டல்களின் தொகுதியொன்று அபிவிருத்தி செய்யப்பட்டது. |
| 2021 மாச்சு | - | பங்குச் சந்தையின் முதலீட்டாளர் தளத்தினை பரந்த அடிப்படையில் விரிவாக்குவதற்காக டிஜிட்டல் தளத்திற்கு வசதியளிக்கப்பட்டது. |
| | - | கொழும்புப் பங்குப் பரிவர்த்தனையிலுள்ள கருமபீடத் தளத்தினூடாக தங்க பத்திரத்தினை அறிமுகப்படுத்துவதற்கு கொள்கை ரீதியாக ஒப்புதல் வழங்கப்பட்டது. |
| 2021 ஏப்பிறல் | - | சிறப்பு நோக்கங்களுக்கான கையேற்றல் கம்பனிகளைப் பட்டியல்படுத்துவதை வசதியளிப்பதற்கான முன்மொழிவுக்கு கொள்கை ரீதியாக ஒப்புதல் வழங்கப்பட்டது. |
| 2021 யூன் | - | கொழும்புப் பங்குப் பரிவர்த்தனையின் கருமபீடத் தளம் தொடர்பில் கம்பனிப் படுகடன் பிணையங்கள் மீதான மீள்கொள்வனவு உடன்படிக்கை கொடுக்கல்வாங்கல்களுக்கு வசதியளிப்பதற்காக மத்திய வைப்பக முறைமை விதிகள் திருத்தப்பட்டன. |
| | - | விதிகளை வழங்குதல் மற்றும் கடன்வழங்கல் மாதிரியினை திருத்தியமைத்தல் மூலம் கொழும்புப் பங்குப் பரிவர்த்தனையில் கடன்வழங்கல் முறைமையினையும் வழங்கல் எதிர் கொடுப்பனவுப் பொறிமுறையினையும் மேம்படுத்தும் விதத்தில் அவற்றை நடைமுறைப்படுத்துவதற்கு வசதியளிக்கப்பட்டது. |
| | - | இஸ்லாமிய மூலதனச் சந்தைச் சாதனங்களை அறிமுகப்படுத்துவதற்கு கொள்கை ரீதியாக ஒப்புதல் வழங்கப்பட்டது. |
| | - | கட்டமைக்கப்பட்ட ஆணைச்சீட்டுகளினை அறிமுகப்படுத்துவதற்கு கொள்கை ரீதியாக ஒப்புதல் வழங்கப்பட்டது. |
| | - | பசுமை முறிகளை அறிமுகப்படுத்துவதற்கு கொள்கை ரீதியாக ஒப்புதல் வழங்கப்பட்டது. |
| | - | நிதிகளை உருவாக்குவது போன்ற இணையவழித் தளங்களினூடாக நிதிகளைத் திரட்டுவதற்கு வசதியளிப்பதற்காக கொள்கை ரீதியாக ஒப்புதல் வழங்கப்பட்டது. |
| | - | பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுவின் புதிய மசோதாவினை இயற்றுவது தொடர்பில் வர்த்தமானி அறிவித்தலொன்று வெளியிடப்பட்டது. |
| 2021 யூலை | - | பங்குச் சந்தைத் தொழிற்பாடுகளை டிஜிட்டல் மயப்படுத்தும் கட்டம் 2 ஆரம்பிக்கப்பட்டது. |
| இனிவரவிருப்பவை | - | இடையேற்பாட்டு விதிகளைப் புதுப்பிப்பது தொடர்பில் பணிப்புரைகள் விடுக்கப்படல் |
| | - | பிணையங்கள் கடன்படுதல் மற்றும் கடன்வழங்கலூடாக பாதுகாப்பற்ற சாதனங்களை விற்பனை செய்வதனை அறிமுகப்படுத்துவதற்கு வசதியளித்தல் |

## கொடுப்பனவுகள் மற்றும் தீர்ப்பனவுகள்

2021 யூன் 09 - லங்காகியூஆர் முன்னெடுப்புக்களில் இணைவதற்கு கூடுதலான வணிகர்களை ஊக்குவிப்பதற்கான தேவையினைப் பரிசீலனையில் கொண்டு, லங்காகியூஆர் கொடுக்கல்வாங்கல்களுக்காக உயர்ந்தபட்சம் 0.5 சதவீதம் கொண்ட வணிகர் கழிவிடல் வீதத்தினைப் பேணுகின்ற காலம் 2021 திசெம்பர் 31 வரையான மேலும் ஆறு மாத காலப்பகுதிக்கு நீடிக்கப்பட்டது.

இனிவரவிருப்பவை - இலங்கையிலுள்ள பணம் அல்லது பெறுமதி மாற்றல் பணி வழங்குவோரின் நடவடிக்கைகளை ஒழுங்குமுறைப்படுத்தவும் மேற்பார்வை செய்வதற்குமாக 2005ஆம் ஆண்டின் 28ஆம் இலக்கக் கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு முறைமைகள் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதியொன்று விடுக்கப்படவுள்ளது.

## பணம் தூயதாக்கலைத் தடைசெய்தல் மற்றும் பயங்கரவாதத்திற்கு நிதியளித்தலை ஒழித்தல்

2021 ஏப்பிறல் 27 - இணையவழிக் கொடுப்பனவுத் தளங்களுடன் தொடர்புபட்டுள்ள தரப்பினர் மீது பணம் தூயதாக்கலுக்கெதிரான/ பயங்கரவாதத்திற்கு நிதியளித்தலை ஒழித்தல் வழிமுறைகளை நடைமுறைப்படுத்தல் தொடர்பில் 2021ஆம் ஆண்டின் 01ஆம் இலக்கச் சுற்றறிக்கை விடுக்கப்பட்டது.

2021 ஏப்பிறல் 28 - தன்னியக்கக் கூற்றுப் பொறிகளூடாக வெளிநாட்டு நாணய வெளிப்பாய்ச்சல் போக்குகள், வெளிநாடுகளில் காசு எடுப்பனவுகள் தொடர்பில் வாடிக்கையாளர்களை இணைத்துக் கொள்கின்ற நேரத்திலும் கொடுக்கல்வாங்கல்களை மேற்கொள்கின்ற வேளையிலும் 2016ஆம் ஆண்டின் 1ஆம் இலக்க நிதியியல் நிறுவனங்கள் வாடிக்கையாளர் உரிய விழிப்புக் கவன ஒழுங்குவிதிகளினால் தேவைப்படுத்தப்பட்டவாறு வாடிக்கையாளர் உரிய விழிப்புக்க வன வழிமுறைகளைச் செயற்படுத்துமாறு ஆலோசனை வழங்குவதற்காக 2021ஆம் ஆண்டின் 02ஆம் இலக்கச் சுற்றறிக்கை விடுக்கப்பட்டது.

2021 மே 04 - கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்றின் மூன்றாம் அலைக் காலப்பகுதியில் தோற்றம் பெற்று வந்த பணம் தூயதாக்கலுக்கெதிரான/ பயங்கரவாதத்திற்கு நிதியளித்தல் இடர்நேர்வுகளைத் தணிப்பதற்கான மேலதிக வழிமுறைகளின் மீது 2021ஆம் ஆண்டின் 03ஆம் இலக்கச் சுற்றறிக்கை விடுக்கப்பட்டது.

2021 யூன் 08 - சந்தேகத்திற்குரிய கொடுக்கல்வாங்கல்கள் அறிக்கைகளை தரமான முறையில் அறிக்கையிடுவதனை அதிகரிக்கும் விதத்தில் நிதியியல் நிறுவனங்களுக்கு 2021ஆம் ஆண்டின் 01ஆம் இலக்க வழிகாட்டல் விடுக்கப்பட்டது.

2021 யூலை 20 - பணம் தூயதாக்கலுக்கெதிரான/ பயங்கரவாதத்திற்கு நிதியளித்தலை ஒழித்தல் நோக்கங்களுக்காக மூடப்பட்ட சுற்றோட்ட தொலைக்காட்சி (சிசிரிவி கமரா) தொழிற்பாடுகள் தொடர்பான நிதியியல் நிறுவனங்களுக்காக 2021ஆம் ஆண்டின் 2ஆம் இலக்க வழிகாட்டல் விடுக்கப்பட்டது.

2021 ஓகத்து 12 - 2006ஆம் ஆண்டின் 6ஆம் இலக்க நிதியியல் கொடுக்கல்வாங்கல் அறிக்கையிடல் சட்டத்தின் பிரிவு 15(2)இன் கீழ் சந்தேகத்திற்குரிய கொடுக்கல்வாங்கல் தொடர்பில் நிதியியல் நிறுவனங்களுக்கு 2021ஆம் ஆண்டின் 03ஆம் இலக்க வழிகாட்டல்கள் விடுக்கப்பட்டன.

2021 ஒத்தோபர் 04 - 2021ஆம் ஆண்டின் 18ஆம் இலக்க நிதித்தொழில் சட்டத்தின் கீழ் செய்யப்பட்ட வைப்புக்கள் தொடர்பில் உரிமம்பெற்ற வங்கிகளுக்கு 2021ஆம் ஆண்டின் 04ஆம் இலக்கச் சுற்றறிக்கை விடுக்கப்பட்டது.

## வெளிநாட்டுச் செலாவணி முகாமைத்துவம் மற்றும் பன்னாட்டுத் தொழிற்பாடுகள்

2021 சனவரி 01 - "உள்முக தொழிலாளர் பணவனுப்பல்கள் மீதான ஊக்குவிப்புத் திட்டம்" தொடர்பில் உரிமம்பெற்ற வங்கிகளுக்கு விடுக்கப்பட்ட தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள் திருத்தப்பட்டன. இதன்படி, உரிமம்பெற்ற வங்கிகள் ஊக்குவிப்புத் திட்டத்தின் கீழ் தகைமையுடையவர்களின் செயற்பரப்பினை இலங்கையில் வதிகின்ற இலங்கையர்களினால் புரியப்படும் தொழிலொன்றினூடாக ஈட்டப்படுகின்ற வெளிநாட்டு நாணய வருமானம் மற்றும் வெளிநாட்டிலுள்ள தொழிலின் தன்மையைப் பொறுத்து வழங்கப்படும் பணிகளுக்காகப் பெறப்படும் வெளிநாட்டு நாணயத்திலான வருமானம் என்பனவற்றிற்கு விரிவாக்குமாறும், 2020 திசெம்பர் 28 அன்றோ அல்லது அதற்குப் பின்னரோ செய்யப்பட்ட அனைத்து வெளிநாட்டு

நாணய வருமான மாற்றல்களுக்கும் ஊக்குவிப்புத் திட்டத்தினைப் பிரயோகிக்குமாறும் உரிமம்பெற்ற வங்கிகள் அறிவுறுத்தப்பட்டன.

2021 சனவரி 15 - நிபந்தனைகளுக்குட்பட்டு, வெளிநாட்டு நாணயக் கடன்களின் மீள்கொடுப்பனவுகளுடன் தொடர்பான வெளிநாட்டுச் செலாவணி இடர்நேர்வுகளிலிருந்து உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளைப் பாதுகாப்பதற்காக தற்காலிக சிறப்பு வெளிநாட்டு நாணயக் கணக்குகளைத் திறப்பதற்கும் பேணி வருவதற்கும் அனுமதிக்கின்ற விதத்தில் அதிகாரம்பெற்ற வணிகர்களுக்கு 2021ஆம் ஆண்டின் 01ஆம் இலக்கப் பணிப்புரைகள் விடுக்கப்பட்டன.

2021 சனவரி 27 - வெளிநாட்டுச் செலாவணி ஒதுக்குகளைக் கட்டியெழுப்பும் பொருட்டு, மாற்றப்பட்ட தொழிலாளர் பணவனுப்பல்களில் 10 சதவீதத்தினைக் கட்டாய அடிப்படையில் மத்திய வங்கிக்கு விற்பனை செய்வதற்காக உரிமம்பெற்ற வங்கிகளுக்கு அறிமுகப்படுத்தப்பட்ட திட்டம் தொடர்பாக தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள் விடுக்கப்பட்டன.

2021 பெப்புருவரி 03 - உள்நாட்டு வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையில் பெருமளவு வினைத்திறனை எய்தும் நோக்குடன் அதிகாரம்பெற்ற வணிகர்களினதும் ஏனைய ஆர்வலர்களினதும் நடைமுறைப் பிரச்சனைகளையும் கரிசனைகளையும் கட்டுப்படுத்துகின்ற விதத்தில் தற்போதுள்ள தொடர்பான ஒழுங்குவிதிகளையும் கட்டளைகளையும் இரத்துச் செய்வதன் மூலம் பின்வரும் ஒழுங்குவிதிகளும் கட்டளைகளும் 2021 மாச்சு 22 இலிருந்து தொழிற்பாட்டிற்கு வரும் விதத்தில் விடுக்கப்பட்டன:

- இலங்கையில் வதியும் ஆட்களினால் இலங்கைக்கு வெளியே மேற்கொள்ளப்படுகின்ற மூலதனக் கொடுக்கல்வாங்கல்களின் வகுப்புக்களுக்கு ஏற்புடைத்தான ஒழுங்குவிதிகள் 2021ஆம் ஆண்டின் 01ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணி ஒழுங்குவிதிகள் மீது (2213/34ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல்) விடுக்கப்பட்டன.

- இலங்கைக்கு வெளியே வதியும் ஆட்களினால் இலங்கையில் மேற்கொள்ளப்படுகின்ற மூலதனக் கொடுக்கல்வாங்கல்களின் வகுப்புக்களுக்கு ஏற்புடைத்தான ஒழுங்குவிதிகள் மீது 2021ஆம் ஆண்டின் 02ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணி ஒழுங்குவிதிகள் (2213/35ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல்) விடுக்கப்பட்டன.

- புலம்பெயர்ந்தவர்களினால் மேற்கொள்ளப்படும் நிதி அனுப்பல்களுக்கு ஏற்புடைத்தான ஒழுங்குவிதிகள் மீது 2021ஆம் ஆண்டின் 03ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணி ஒழுங்குவிதிகள் (2213/36ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல்) விடுக்கப்பட்டன.

- பல்வேறு விதமான மூலதனக் கொடுக்கல்வாங்கல்களின் வகுப்புக்களுக்கு ஏற்புடைத்தான ஒழுங்குவிதிகள் மீது 2021ஆம் ஆண்டின் 04ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணி ஒழுங்குவிதிகள் (2213/37ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல்) விடுக்கப்பட்டன.

- வெளிநாட்டுச் செலாவணிக் கொடுக்கல்வாங்கல்களில் ஈடுபடும் நோக்கங்களுக்காக கணக்குகளைத் திறப்பதற்கும் பேணுவதற்கும் ஏற்புடைத்தான ஒழுங்குவிதிகள் மீது 2021ஆம் ஆண்டின் 05ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணி ஒழுங்குவிதிகள் (2213/38ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல்) விடுக்கப்பட்டன.

- இலங்கையிலுள்ள அல்லது இலங்கையில் வதிகின்ற ஆளொருவரினால் மேற்கொள்ளப்படும் வெளிநாட்டு நாணயம் அல்லது இலங்கை நாணயத்தின் ஏற்றுமதி அல்லது இறக்குமதி மீதான 2020ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் பிரிவு 8இன் கீழான கட்டளை (2213/39ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல்) விடுக்கப்பட்டது.

- "இலங்கையில் வதிகின்ற ஆட்களின்" தீர்மானம் மீது வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் 31ஆம் பிரிவின் கீழான கட்டளை (2213/40ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல்) விடுக்கப்பட்டது.

2021 பெப்புருவரி 18 - ஏற்றுமதிப் பெறுகைகளை இலங்கைக்குக் கொண்டு வருவது மற்றும் அத்தகைய ஏற்றுமதிப் பெறுகைகளை இலங்கை ரூபாவிற்கு மாற்றுவது தொடர்பில் விதிகளுக்குத் திருத்தம் விடுக்கப்பட்டது.

இதற்கமைய, பொருட்களின் ஒவ்வொரு ஏற்றுமதியாளரும் இலங்கையில் பெறப்பட்ட மொத்த ஏற்றுமதிப் பெறுகைகளிலிருந்து 25 சதவீதத்தினை உரிமம்பெற்ற வங்கியொன்றினூடாக இலங்கை ரூபாவிற்கு மாற்றிக் கொள்ளுதல் வேண்டும் (2215/39ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல்).

- 1949ஆம் ஆண்டின் 58ஆம் இலக்க நாணய விதிச் சட்டத்தின் கீழ் 2021 பெப்புருவரி 18ஆம் நாளன்று விடுக்கப்பட்ட அரச வர்த்தமானி மற்றும் விதிகளின் கீழ், இலங்கை ரூபாவிற்கு மாற்றுவது கட்டாயமாக இருக்கின்றவிடத்து மாற்றல் செய்யப்பட்ட ஏற்றுமதிப் பெறுகைகளின் 25 சதவீதத்தில் 50 சதவீதத்தினை வெளிநாட்டுச் செலாவணி ஒதுக்குகளைக் கட்டியெழுப்பும் பொருட்டு மத்திய வங்கிக்கு உரிமம்பெற்ற வங்கிகள் விற்பனை செய்வதற்கான திட்டத்தினை அறிமுகப்படுத்துவது தொடர்பில் தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள் விடுக்கப்பட்டன.

2021 மாச்சு 09 - மாற்றிக் கொள்வதற்கு ஏற்புடைத்தான காலப்பகுதியை 14 நாட்கள் வரை நீடித்துக் கொள்ளும் விதத்தில் நாணய விதிச் சட்டத்தின் கீழ் 2021ஆம் ஆண்டின் 2ஆம் இலக்க ஏற்றுமதிப் பெறுகைகளை இலங்கைக்குள் கொண்டுவருவதற்கான விதிகள் 2218/38ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் மூலம் விடுக்கப்பட்டன.

2021 மாச்சு 17 - இக்காலப்பகுதியில் நிலவிய சந்தை நிலைமைகளைப் பரிசீலனையில் கொண்டு, மாற்றப்பட்ட தொழிலாளர் பணவனுப்பல்களில் 10 சதவீதத்தினை மத்திய வங்கிக்கு விற்பனை செய்வதற்கான தேவைப்பாட்டினைத் தற்காலிகமாக இடைநிறுத்தும் விதத்தில் "உள்முகப் பணவனுப்பல்கள் மீதான ஊக்குவிப்புத் திட்டம்" தொடர்பில் உரிமம்பெற்ற வங்கிகளுக்கு விடுக்கப்பட்ட தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள் திருத்தப்பட்டன.

- இக்காலப்பகுதியில் நிலவிய சந்தை நிலைமைகளைப் பரிசீலனையில் கொண்டு கட்டாயமாக மாற்றப்பட்ட ஏற்றுமதிப் பெறுகைகளின் 25 சதவீதத்தில் 50 சதவீதத்தினை மத்திய வங்கிக்கு விற்பனை செய்வது தொடர்பான தேவைப்பாடுகளைத் தற்காலிகமாக இடைநிறுத்தும் விதத்தில் "ஏற்றுமதிப் பெறுகைகளை இலங்கைக்குள் கொண்டு வருதல்" தொடர்பில் உரிமம்பெற்ற வங்கிகளுக்கு தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள் விடுக்கப்பட்டன.

2021 மாச்சு 18 - 2021 பெப்புருவரி 03ஆம் நாள் விடுக்கப்பட்ட ஒழுங்குவிதிகள் மற்றும் கட்டளைகளுடன் இசைந்து செல்லும் விதத்தில் அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களுக்குப் பின்வரும் பணிப்புரைகள் (2021 மாச்சு 22இலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில்) விடுக்கப்பட்டன:

- இலங்கையிலுள்ள அல்லது இலங்கையில் வதிகின்ற ஆளொருவரின் சார்பில் வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் 6ஆம் பிரிவின் கீழ் அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களினால் நடைமுறைக் கொடுக்கல்வாங்கல்களை மேற்கொள்வதற்கு, நடைமுறைக் கொடுக்கல்வாங்கல்கள் தொடர்பில் 2021ஆம் ஆண்டின் 02ஆம் இலக்கப் பணிப்புரைகள் விடுக்கப்பட்டன.

- இலங்கைக்கு வெளியே வதிகின்ற ஆட்களுக்கு வெளிநாட்டுச் செலாவணியில் கொடுப்பனவுகளைச் செய்வதற்காக இலங்கையிலுள்ள அல்லது இலங்கையில் வதிகின்ற ஆட்களினால் இலத்திரனியல் நிதிய மாற்றல் அட்டைகளைப் பயன்படுத்துவதற்காக இலத்திரனியல் நிதிய மாற்றல் அட்டைகள் தொடர்பில் 2021ஆம் ஆண்டின் 03ஆம் இலக்கப் பணிப்புரைகள் விடுக்கப்பட்டன.

- தகைமையுடைய வதியும்/ வதியாத தனிப்பட்டவர்களினால் திறந்து பேணப்பட்டு வருகின்ற வெளிநாட்டு நாணயக் கணக்குகளுக்காகத் தனிப்பட்ட வெளிநாட்டு நாணயக் கணக்குகளின் மீது 2021ஆம் ஆண்டின் 04ஆம் இலக்கப் பணிப்புரைகள் விடுக்கப்பட்டன.

- வதியும் வெளிநாட்டுச் செலாவணியை ஈட்டுவோர்களினால் திறந்து பேணப்பட்டு வருகின்ற வெளிநாட்டு நாணயக் கணக்குகளுக்காக வியாபார வெளிநாட்டு நாணயக் கணக்குகளின் மீது 2021ஆம் ஆண்டின் 05ஆம் இலக்கப் பணிப்புரைகள் விடுக்கப்பட்டன.

- இராசதந்திர தூதரகங்கள்/ பணியாட்களினால் திறந்து பேணப்பட்டு வருகின்ற வெளிநாட்டு நாணய மற்றும் இலங்கை ரூபாக் கணக்குகளுக்காக இராசதந்திர வெளிநாட்டு நாணயக் கணக்குகள் மற்றும் இராசதந்திர ரூபாக் கணக்குகள் மீது 2021ஆம் ஆண்டின் 06ஆம் இலக்கப் பணிப்புரைகள் விடுக்கப்பட்டன.

- 55 வயதிற்கு மேற்பட்ட மற்றும் “இலங்கை - எனது கனவு இல்ல நிகழ்ச்சித்திட்டம்” இன் கீழ் வதியும் விசாவில் இலங்கையில் நீண்ட காலம் தங்கியிருக்க விரும்புகின்ற மூத்த வெளிநாட்டு பிரசைகளினால் திறந்து பேணப்பட்டு வருகின்ற (சிறப்புக் கணக்குகள்) கணக்குகளுக்காக மூத்த வெளிநாட்டுப் பிரசைகளின் மீது 2021ஆம் ஆண்டின் 07ஆம் இலக்கப் பணிப்புரைகள் விடுக்கப்பட்டது.

- குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களத்தினால் நடைமுறைப்படுத்தப்படுகின்ற “வதியும் விருந்தினர் திட்டம்” என்பதன் கீழ் இலங்கைக்கு வருகை தரும் முதலீட்டாளர்கள் மற்றும் தொழில்சார் நிபுணர்களாக வரக்கூடியவர்களினால் திறந்து பேணப்பட்டுவரும் கணக்குகளுக்காக (சிறப்புக் கணக்குகள்) வதியும் விருந்தினர் திட்டத்தின் மீது 2021ஆம் ஆண்டின் 08ஆம் இலக்கப் பணிப்புரைகள் விடுக்கப்பட்டன.

- வியாபார வெளிநாட்டு நாணய கணக்கு உடமையாளர்களாகவுள்ள, வெளிநாட்டுச் செலாவணியினை ஈட்டுகின்றவர்களுக்கு அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள் வெளிநாட்டு நாணயத்தில் கடன்களை வழங்குவதற்காக வெளிநாட்டு வியாபார வெளிநாட்டு நாணயக் கணக்குகளின் உடமையாளர்களுக்கான கடன் வசதிகளின் மீது 2021ஆம் ஆண்டின் 09ஆம் இலக்கப் பணிப்புரைகள் விடுக்கப்பட்டன.

- வெளிநாட்டில் தொழில்புரியும் இலங்கைப் பிரசைகளுக்கு வெளிநாட்டு நாணயத்திலும் இலங்கை நாணயத்திலும் குறித்துரைக்கப்படட கடன்களை/ முற்பணங்களை அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள் வழங்குவதற்காக, வெளிநாட்டில் தொழில்புரியும் இலங்கையர்களுக்கு (புலம்பெயர்ந்தவர்கள் தவிர) கடன்களையும் முற்பணங்களையும் வழங்குவதன் மீது 2021ஆம் ஆண்டின் 10ஆம் இலக்கப் பணிப்புரைகள் விடுக்கப்பட்டன.

- மற்றொரு நாட்டில் வதிவதற்கான நிரந்தர வதிவிட விசாவினை வைத்திருக்கின்றவர்களுக்கும் இரட்டைப் பிரசாவுரிமை உடையவர்களுக்கும் வெளிநாட்டு நாணயத்திலும் இலங்கை ரூபாவிலும் குறித்துரைக்கப்பட்ட கடன்களை அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள் வழங்குவதற்காக மற்றொரு நாட்டில் நிரந்தர வதிவிட விசாவில் இலங்கைக்கு வெளியே வதிகின்ற இலங்கையர்களுக்கும் இரட்டைப் பிரசாவுரிமையுடைவர்களுக்குமான கடன்கள் மீது 2021ஆம் ஆண்டின் 11ஆம் இலக்கப் பணிப்புரைகள் விடுக்கப்பட்டன.

- இலங்கை அரசாங்கத்தினால் வழங்கப்பட்ட இலங்கை அபிவிருத்தி முறிகளைக் கொள்வனவு செய்வதற்கும் சந்தைப்படுத்துவதற்குமாக அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களுக்கும் குறித்துரைக்கப்பட்ட முகவர்களாக இலங்கை மத்திய வங்கியின் பொதுப் படுகடன் திணைக்களக் கண்காணிப்பாளரினால் நியமிக்கப்பட்டுள்ள முதனிலை வணிகர்களுக்கும் அனுமதியினை வழங்குவதற்காக இலங்கை அபிவிருத்தி முறிகளின் மீது 2021ஆம் ஆண்டின் 12ஆம் இலக்கப் பணிப்புரைகள் விடுக்கப்பட்டன.

- அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களின் அறிக்கையிடும் தேவைப்பாடுகளுக்காக வெளிநாட்டுச் செலாவணி விற்பனை (படிவம் 1) வெளிநாட்டுச் செலாவணிக் கொள்வனவு (படிவம் 2) மீது 2021ஆம் ஆண்டின் 13ஆம் இலக்க பணிப்புரைகள் விடுக்கப்பட்டன.

- இலங்கைக்கு வெளியேயான மூலதனக் கொடுக்கல்வாங்கல்கள் தொடர்பில் பணவனுப்பல்களை மேற்கொள்வதற்காக வதியும் ஆட்களினால் திறந்து பேணப்பட்டுவரும் கணக்குகளுக்காக வெளிமுக முதலீட்டுக் கணக்குகளின் மீது 2021ஆம் ஆண்டின் 14ஆம் இலக்கப் பணிப்புரைகள் விடுக்கப்பட்டன.

- இலங்கையில் மேற்கொள்ளப்படும் மூலதனக் கொடுக்கல்வாங்கல்கள் தொடர்பில் உள்முகப் பணவனுப்பல்களை வழிப்படுத்துவதற்காக வதியாத முதலீட்டாளர்களினால் திறந்து பேணிவரும் கணக்குகளுக்காக உள்முக முதலீட்டுக் கணக்குகளின் மீது 2021ஆம் ஆண்டின் 15ஆம் இலக்கப் பணிப்புரைகள் விடுக்கப்பட்டன.

- புலம்பெயர் படிகளை வழிப்படுத்துவதற்காக புலம்பெயர்ந்தவர்களினால் திறந்து பேணப்படுகின்ற நாணயங்களுக்காக மூலதனக் கொடுக்கல்வாங்கல் ரூபாக் கணக்குகளின் மீது 2021ஆம் ஆண்டின் 16ஆம் இலக்கப் பணிப்புரைகள் விடுக்கப்பட்டன.

- ஒழுங்குமுறைப்படுத்தல் தேவைப்பாடுகளுக்குட்பட்டு, இலங்கையில் பெறப்பட்ட நடைமுறை வருமானத்தினை வெளிநாட்டிற்கு அனுப்புவதற்காக புலம்பெயர்ந்தவர்களினால் திறந்து பேணப்பட்டுவரும் கணக்குகளுக்காக புலம்பெயர்ந்தவரின் அனுப்பத்தக்க வருமானக் கணக்குகளின் மீது 2021ஆம் ஆண்டின் 17ஆம் இலக்கப் பணிப்புரைகள் விடுக்கப்பட்டன.

- இலங்கையில் அல்லது இலங்கைக்கு வெளியே வதிகின்ற புலம்பெயர்ந்தவர்களினாலும் இலங்கைக்கு வெளியே நிறுவப்பட்டுள்ள/ கூட்டிணைக்கப்பட்டுள்ள நிறுவனங்கள்/ கம்பனிகளினாலும் திறந்து பேணப்பட்டு வரும் இலங்கை ரூபாக் கணக்குகளுக்காக வதிவற்றோர் ரூபாக் கணக்குகள் மீது 2021ஆம் ஆண்டின 18ஆம் இலக்கப் பணிப்புரைகள் விடுக்கப்பட்டன.

- வெளிநாட்டுக் கடன்வழங்குநர்களிடமிருந்து பெறப்பட்ட கடன் பெறுகைகளை வரவு வைப்பதற்காக, இலங்கையில் கூட்டிணைக்கப்பட்ட கம்பனிகளினால் திறந்து பேணப்பட்டு வருகின்ற கணக்குகளுக்காக வெளிநாட்டு வர்த்தகக் கடன்பாடுகள் கணக்கின் மீது 2021ஆம் ஆண்டின் 19ஆம் இலக்கப் பணிப்புரைகள் விடுக்கப்பட்டன.

- நடைமுறை மற்றும் மூலதனக் கொடுக்கல்வாங்கல்கள் தொடர்பில் உத்தரவாதங்களை வழங்குதல் மற்றும் புதுப்பித்தலுக்கு ஏற்புடைத்தான குறித்துரைக்கப்பட்ட பணிப்புரைகள், உத்தரவாதங்கள் மீது 2021ஆம் ஆண்டின் 20ஆம் இலக்கப் பணிப்புரைகள் விடுக்கப்பட்டன.

2021 மாச்சு 26 - வதிவோர் வசமுள்ள வெளிநாட்டு நாணயத்தினை முறைசார்ந்த வழிப்படுத்தல்களுக்குள் கவர்ந்து கொள்கின்றதொரு வழிமுறையாக, அவர்களது உள்நாட்டுச் சுற்றுலாவிடுதி செலவுகளைச் வெளிநாட்டு நாணயத்தில் செலுத்துவதற்கு வசதியொன்றினை அவர்களுக்கு வழங்குவதன் மூலம் வெளிநாட்டு நாணயத்தினைத் தமது உடைமையில் வைத்திருக்கும் இலங்கையில் வதியும் ஆட்களிடமிருந்து வெளிநாட்டு நாணயத்தினை ஏற்றுக்கொள்வதற்கு, இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபையுடன் பதிவுசெய்துள்ள சுற்றுலாவிடுதிகளை அனுமதிக்கும் விதத்தில் வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் 4ஆம் பிரிவின் கீழான கட்டளையொன்றாக இல.2220/69ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் விடுக்கப்பட்டது.

2021 ஏப்பிறல் 07 - தகைமையுடைய ஆட்களினால் சிறப்பு வைப்புக் கணக்குகளைத் திறப்பதற்கான காலப்பகுதி 2020 ஏப்பிறல் 08 இலிருந்து மேலும், 24 மாத காலப்பகுதிக்கு நீடிப்பதற்கான ஒழுங்குவிதிகளாக 2222/37ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் விடுக்கப்பட்டது.

- சிறப்பு வைப்புக் கணக்குகளைத் திறத்தல் மற்றும் பேணுதல், அனுமதிக்கப்பட்ட பற்றுக்கள், வரவுகள் மற்றும் ஏனைய தேவைப்பாடுகளைக் கொண்ட பிரமாணங்களை அதிகாரம்பெற்ற வணிகர்களுக்கு குறித்துரைக்கின்ற விதத்தில் 2021ஆம் ஆண்டின் 21ஆம் இலக்கப் பணிப்புரைகள் விடுக்கப்பட்டன.

2021 ஏப்பிறல் 09 - நாணய விதிச் சட்டத்தின் கீழ் விடுக்கப்பட்ட ஏற்றுமதிப் பெறுகைகளை இலங்கைக்குள் கொண்டு வருதல் தொடர்பாக விடுக்கப்பட்ட விதிகளை இலங்கை ரூபாவிற்கு மாற்றிக் கொள்வதற்கான ஏற்புடைத்தான காலப்பகுதியை 30 நாட்கள் வரை நீடிக்கும் விதத்திலும் மாற்றிக்கொள்ளும் தேவைப்பாட்டினை 10 சதவீதம் வரை குறைத்துக் கொள்ளும் விதத்திலும் மேலும் திருத்திக் கொள்வதற்காக 2021ஆம் ஆண்டின் 3ஆம் இலக்க இலங்கைக்குள் ஏற்றுமதிப் பெறுகைகளைக் கொண்டுவரும் விதிகளாக 2222/60ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் விடுக்கப்பட்டது.

2021 மே 04 - இலங்கை சுற்றுலா அபிவிருத்திச் சபையுடன் பதிவுசெய்யப்பட்ட சுற்றுலாவிடுதிகள் தாம் வழங்கிய பணிகள் தொடர்பில் இலங்கையில் வதியும் ஆட்களிடமிருந்து வெளிநாட்டு நாணயங்களை ஏற்றுக்கொள்வதனை அனுமதிக்கின்ற விதத்தில் 2021ஆம் ஆண்டின் 22ஆம் இலக்கப் பணிப்புரைகள் விடுக்கப்பட்டன.

2021 மே 25 - 2007ஆம் ஆண்டின் 7ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் கீழ் இலங்கையில் கூட்டிணைக்கப்பட்ட கம்பனிகள், வெளிநாட்டுச் செலாவணியினை ஈட்டுகின்றவர்களாகவுள்ள இலங்கையில் கூட்டிணைக்கப்பட்டுள்ள அவர்களின் துணை நிறுவனங்களுக்கு இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபையினது முன்னொப்புதலுடன் ஏதேனும் குறித்துரைக்கப்பட்ட வெளிநாட்டு நாணயத்தில் கடன்களை வழங்குவதற்கு அனுமதிக்கின்ற விதத்தில் வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் 4ஆம் பிரிவின் கீழ் கட்டளையொன்றாக 2229/5ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் விடுக்கப்பட்டது.

2021 மே 28 - இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபை அதன் தற்றுணிபிற்கிணங்க 10 சதவீதத்திற்குக் குறையாத பகுதியளவு விதிவிலக்கல்களை வழங்கலாம் என்ற ஏற்பாட்டுடன் கூடிய விதத்தில் இலங்கை ரூபாவில் மாற்றும் தேவைப்பாட்டினை 25 சதவீதம் வரை உயர்த்துகின்ற விதத்தில் 2021ஆம் ஆண்டின் 4ஆம் இலக்க இலங்கைக்குள் ஏற்றுமதிப் பெறுகைகளைக் கொண்டுவரும் விதிகளாக 2229/9ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் விடுக்கப்பட்டது.

- "உள்முகப் பணவனுப்பல்கள் மீதான ஊக்குவிப்புத் திட்டம்" தொடர்பில் உரிமம்பெற்ற வங்கிகளுக்கு தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள் 2021 சனவரி 27ஆம் நாள் மீண்டும் கொண்டு வரப்பட்டன.

- "ஏற்றுமதிப் பெறுகைகளை இலங்கைக்குள் கொண்டு வருதல்" தொடர்பில் உரிமம்பெற்ற வங்கிகளுக்கு விடுக்கப்பட்ட தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள் 2021 பெப்புருவரி 18ஆம் நாளன்று மீண்டும் கொண்டு வரப்பட்டன.

2021 யூன் 11 - அனுமதிக்கப்பட்ட பற்றொன்றாக, கணக்குடமையாளரின் உள்நாட்டுச் செலவுகளுக்காக வெளிநாட்டு நாணயத்தின் எடுப்பனவுகள் செய்வது உட்பட இராஜதந்திர வெளிநாட்டு நாணயக் கணக்குகள் மற்றும் இராஜதந்திர ரூபாக் கணக்குகள் மீது 2021ஆம் ஆண்டின் 23ஆம் இலக்கப் பணிப்புரைகள் விடுக்கப்பட்டன.

2021 யூன் 17 - 2021ஆம் ஆண்டின் 05ஆம் இலக்கப் பணிப்புரைகளின் இணைப்பு I இனைத் திருத்துகின்ற விதத்தில் வியாபார வெளிநாட்டு நாணயக் கணக்கு தொடர்பில் 2021ஆம் ஆண்டின் 24ஆம் இலக்கப் பணிப்புரைகள் விடுக்கப்பட்டன.

2021 யூன் 30 - ஒழுங்குவிதிகளின் கீழ், ஆறு மாத மற்றும் பன்னிரண்டு மாத காலப்பகுதிகளுடன் திறக்கப்பட்ட சிறப்பு வைப்புக் கணக்குகளை அத்தகைய சிறப்பு வைப்புக் கணக்குகளை ஒன்றுசேர்க்கின்ற காலம் அத்தகைய வைப்புக்கள் செய்யப்பட்ட ஆரம்பத் திகதியிலிருந்து உயர்ந்தபட்சம் 24 மாதங்களை விஞ்சக்கூடாது என்ற நிபந்தனைக்குட்பட்டு, அக்கணக்குகளை மீண்டும் மீண்டும் பயன்படுத்துவதனை அனுமதிக்கின்ற விதத்திலான ஒழுங்குவிதிகள் 2234/19ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் விடுக்கப்பட்டது.

- வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் நியதிகளுக்கிணங்க, இலங்கை அரசாங்கத்தினால் வெளியிடப்பட்ட நாட்டிற்கான பன்னாட்டு முறிகளை இரண்டாந்தரச் சந்தையிலிருந்து கொள்வனவு செய்வதற்காக இலங்கைக்கு வெளியே வதியும் ஆட்களிடமிருந்து வெளிநாட்டு நாணயத்தினைக் கடன்பட்டிருக்கின்ற, இலங்கையிலுள்ள 2007ஆம் ஆண்டின் 7ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் கீழ் இலங்கையில் கூட்டிணைக்கப்பட்ட கம்பனிகளை நியதிகள் மற்றும் நிபந்தனைகளுக்குட்பட்டு, குறிப்பிட்ட கடன்பாட்டில் 50 சதவீதத்தினைப் பயன்படுத்துவதற்கு அனுமதிக்கின்ற ஒழுங்குவிதிகள் 2234/20ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலில் விடுக்கப்பட்டன.

2021 யூலை 02 - ஆறு மாத காலப்பகுதிக்கு வெளிமுகப் பணவனுப்பல்கள் மீது பின்வரும் வழிமுறைகளை விதிக்கின்ற விதத்தில் வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் 22ஆம் பிரிவின் கீழ் கட்டளையொன்றாக 2234/49ஆம் இலக்க அதிவிசேட அரச வர்த்தமானி அறிவித்தல் விடுக்கப்பட்டது:

- புலம்பெயர் படியின் கீழ் உடனடி குடும்ப உறுப்பினரொருவரிடமிருந்து (அதாவது புலம்பெயர்ந்தவரின் பெற்றோர், பாட்டன், பாட்டி, பெற்றோரில் ஒருவருக்குப் பிறந்த பிள்ளை மற்றும் வாழ்க்கைத் துணை) புலம்பெயர்ந்தவரினால் நாணய நன்கொடையாகப் பெறப்பட்ட நிதிகளை வெளியில் அனுப்புவதை இடைநிறுத்தல்.
- பொதுவான அனுமதியின் கீழ், புலம்பெயர் படிகளை ஏற்கனவே கோரியுள்ள புலம்பெயர்ந்தவரின் மூலதனக் கொடுக்கல்வாங்கல்கள் கணக்குகளினூடான புலம்பெயர் படிகளின் கீழான நிதிகளின் அனுப்புதல்களை உயர்ந்தபட்சம் ஐ.அ.டொலர் 10,000 இற்கு அல்லது அதற்குச் சமமான வேறு ஏதேனும் குறித்துரைக்கப்பட்ட வெளிநாட்டு நாணயத் தொகை வரை மட்டுப்படுத்தல்.
- பொதுவான அனுமதியின் கீழ், முதற்றடவையாக புலம்பெயர் படிகளைக் கோருகின்ற புலம்பெயர்ந்தவர்களுக்கான தகைமையுடைய புலம்பெயர் படிகளை உயர்ந்தபட்சம் ஐ.அ.டொலர்

30,000 அல்லது அதற்குச் சமமான வேறு ஏதேனும் குறித்துரைக்கப்பட்ட வெளிநாட்டு நாணயத் தொகை வரை மட்டுப்படுத்தல்.

- பொதுவான அனுமதியின் கீழ், மூலதனக் கொடுக்கல்வாங்கல் ரூபாக் கணக்குகள் அல்லது புலம்பெயர்ந்தவர்களின் பணவனுப்பத்தக்க வருமானக் கணக்குகளினூடாக புலம்பெயர்ந்தவர்களால் மேற்கொள்ளப்படும் எந்தவொரு நடைமுறை வருமானம் அல்லது ஒன்றுசேர்ந்த நடைமுறை வருமானத்தினை (ஊழியர் சேமலாப நிதியம், ஊழியர் நம்பிக்கை நிதியம், பணிக் கொடை, ஓய்வூதியம் அல்லது வேறு ஏதேனும் ஓய்வுகால நன்மைகள் உள்ளடங்கலாக) உயர்ந்தபட்சம் ஐ.அ.டொலர் 30,000 அல்லது அதற்குச் சமமான வேறு ஏதேனும் குறித்துரைக்கப்பட்ட வெளிநாட்டு நாணயத் தொகை வரை மட்டுப்படுத்தல்.

- இலங்கையில் அல்லது இலங்கைக்கு வெளியே வதிகின்றவரும் மற்றொரு நாட்டின் தற்காலிக விசாவினைப் பெற்றுக் கொண்டிருப்பவருமாகிய தனிப்பட்ட ஆளின் இக்குறிப்பிட்ட வகையான விசா அவ்வாளினை அந்நாட்டில் எதிர்காலத் திகதியொன்றில் நிரந்தர வதிவிட அந்தஸ்தினை அல்லது பிரசாவுரிமையைப் பெற்றுக்கொள்ளத் தகைமையுடையதாக்குமிடத்து அத்தகைய ஆளுக்கான வெளிமுகப் பணவனுப்பல்களை அல்லது வெளிநாட்டுச் செலாவணி வழங்கலை உயர்ந்தபட்சம் ஐ.அ.டொலர் 20,000 அல்லது அதற்குச் சமமான வேறு ஏதேனும் குறித்துரைக்கப்பட்ட நாணயத் தொகை வரை மட்டுப்படுத்தல்.

- மற்றொரு நாட்டின் தற்காலிக வதிவிட விசாவின் கீழ் இலங்கையை விட்டுச்செல்ல எண்ணியுள்ள இலங்கையில் வதியும் எவரேனுமாளுக்கான வெளிநாட்டுச் செலாவணி வழங்கலை உயர்ந்தபட்சம் ஐ.அ.டொலர் 10,000 இற்கு அல்லது அதற்குச் சமமான வேறு ஏதேனும் குறித்துரைக்கப்பட்ட வெளிநாட்டு நாணயத் தொகை வரை மட்டுப்படுத்தல்.

- பின்வருவன நீங்கலாக, இலங்கையில் வதிகின்ற ஆட்களினால் வெளிநாடுகளில் முதலீடு செய்யும் நோக்கத்திற்காக வெளிமுக முதலீட்டுக் கணக்குகளினூடாக வெளிமுகப் பணவனுப்பல்களை செய்வதற்கு வழங்கப்பட்ட பொதுவான அனுமதி இடைநிறுத்தப்படுகிறது:

  - வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ், இலங்கைக்கு வெளியே வதிகின்ற ஆளொருவரிடமிருந்து முதலீட்டாளரினால் பெறப்பட்ட வெளிநாட்டு நாணயக் கடன்களிலிருந்து நிதியிடப்படவுள்ள முதலீடுகள், அல்லது;

  - தற்போதுள்ள சட்டத்தின் ஏற்பாடுகள் அல்லது இரத்துச் செய்யப்பட்ட செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்திற்கு இணங்கியொழுகும் விதத்தில், ஏற்கனவே செய்யப்பட்ட முதலீடுகள் மீது பிரயோகிக்கத்தக்க முதலீட்டினைப் பெறுபவரின் நாட்டிலுள்ள ஒழுங்குமுறைப்படுத்தல் தேவைப்பாடுகளை நிறைவேற்றும் விதத்தில் அந்நாட்டிலுள்ள கம்பனியொன்றில் அல்லது இணை அலுவலகத்தில் செய்யப்படவுள்ள மேலதிக முதலீடுகள், அல்லது;

  - தற்போதுள்ள சட்டத்தின் அல்லது இரத்துச் செய்யப்பட்டுள்ள செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்குட்பட்டு, வெளிநாடுகளில் ஏற்கனவே கூட்டிணைக்கப்பட்டுள்ள/ நிறுவப்பட்டுள்ள துணை நிறுவனங்கள் அல்லது கிளை நிறுவனங்களில் தகைமையுடைய வதியும் கம்பனிகளினால் முதலீட்டினைப் பெறுகின்றவரின் தொழிற்படு மூலதனத் தேவைப்பாட்டு நோக்கங்களுக்காகச் செய்யப்படவுள்ள மேலதிக முதலீடுகள்/ நிதிய உள்ளீடுகளை (ஏற்புடைத்தானவாறு) உயர்ந்தபட்சம் ஐ.அ.டொலர் 15,000 அல்லது அதற்குச் சமமான வேறு ஏதேனும் குறித்துரைக்கப்பட்ட வெளிநாட்டு நாணயத் தொகை வரை மட்டுப்படுத்தல், அல்லது;

  - தற்போதுள்ள சட்டத்தின் அல்லது இரத்துச் செய்யப்பட்ட செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்குட்பட்டு, தகைமையுடைய வதியும் கம்பனிகளினால், வெளிநாடுகளில் ஏற்கனவே நிறுவப்பட்டுள்ள தொடர்பு அலுவலகங்கள், சந்தைப்படுத்தல், முகவர், செயற்றிட்டம், பிரதிநிதிகள் அல்லது ஏதேனும் அதையொத்த அலுவலகங்களைப் பேணுகின்ற நோக்கத்திற்காக உயர்ந்தபட்சம் ஐ.அ.டொலர் 30,000 அல்லது அதற்குச்

சமமான வேறு ஏதேனும் குறித்துரைக்கப்பட்ட வெளிநாட்டு நாணயம் வரையிலான பணவனுப்பல்கள்.

- இக்கட்டளை நடைமுறையிலிருக்கும் காலப்பகுதியில் இலங்கையில் வதியும் ஆளொருவரினால் வைத்திருக்கப்படும் வியாபார வெளிநாட்டு நாணயக் கணக்குகள் அல்லது/ அத்துடன் தனியாள் வெளிநாட்டு நாணயக் கணக்குகளூடாக மேற்கொள்ளப்படும் மூலதனக் கொடுக்கல்வாங்கல்கள் மீதான வெளிமுகப் பணவனுப்பல்களை உயர்ந்தபட்சம் ஐ.அ.டொலர் 20,000 அல்லது அதற்குச் சமமான வேறு ஏதேனும் வெளிநாட்டு நாணயத் தொகை வரை மட்டுப்படுத்தல்.

- பின்வரும் நிபந்தனைகளுக்குட்பட்டு, 2021ஆம் ஆண்டின் 1ஆம் இலக்க ஒழுங்குவிதிகளுக்கிணங்க, பொதுவான அனுமதியில் குறித்துரைக்கப்பட்ட வகைகளை விஞ்சுகின்ற முதலீடுகளுக்கு வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் பிரிவு 7(10) இன் நியதிகளில் ஒவ்வொரு விடயமாக ஆராய்ந்து அனுமதியினை வழங்குவதற்கான அதிகாரத்தினை நாணயச் சபை கொண்டிருக்கிறது:

  - வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ், இலங்கைக்கு வெளியே வதியும் ஆளொருவரிடமிருந்து முதலீட்டாளரினால் பெறப்பட்ட வெளிநாட்டு நாணயக் கடனிலிருந்து நிதியிடப்படவுள்ள உத்தேச முதலீடு, அல்லது;

  - தற்போதுள்ள சட்டத்தின் அல்லது இரத்துச் செய்யப்பட்ட செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்கியொழுகும் விதத்தில், முதலீட்டினைப் பெறுபவரின் நாட்டிலுள்ள கம்பனியொன்றில் அல்லது கிளை அலுவலகத்தில் ஏற்கனவே செய்யப்பட்ட முதலீடுகளுக்கு ஏற்புடைத்தான விதத்தில், அந்நாட்டின் ஒழுங்குமுறைப்படுத்தல் தேவைப்பாட்டினைப் பூர்த்திசெய்யும் விதத்தில் மேற்கொள்ளப்படவுள்ள உத்தேச முதலீடு.

2021 யூலை 06 - 2021ஆம் ஆண்டின் 02ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணி (இலங்கைக்கு வெளியே வதிகின்ற ஆட்களினால் மேற்கொள்ளப்பட்ட கொடுக்கல்வாங்கல்களின் வகுப்புக்கள் ஒழுங்குவிதிகளை (இல.2213/35 அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல்) இலங்கை ரூபாவிலும் கொழும்புப் பங்குப் பரிவர்த்தனையில் பட்டியலிடப்பட்டுள்ள ஏதேனும் குறித்துரைக்கப்பட்ட நாணயத்திலுள்ள படுகடன் பிணையங்களிலும் முதலீடு செய்வது தொடர்பில் ஏற்பாடுகளை உள்ளீடு செய்தல் மற்றும் நீக்குதல் தொடர்பில் திருத்துவதற்கு வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் 7ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படுவதான 29ஆம் பிரிவின் கீழ் கட்டளையொன்றாக இல.2235/22 கொண்ட அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் விடுக்கப்பட்டது.

2021 யூலை 08 - சிறப்பு வைப்புக் கணக்குகளைத் திறத்தல் மற்றும் பேணுதல் தொடர்பான பிரமாணங்கள் அனுமதிக்கப்பட்ட பற்றுக்கள், வரவுகள், ஏனைய தேவைப்பாடுகள் மற்றும் 2021ஆம் ஆண்டின் 21ஆம் இலக்கப் பணிப்புரைகளை இரத்துச் செய்தல் என்பனவற்றைக் குறித்துரைக்கின்ற விதத்தில் அதிகாரம்பெற்ற வணிகர்களுக்கு 2021ஆம் ஆண்டின் 25ஆம் இலக்கப் பணிப்புரைகள் விடுக்கப்பட்டன.

2021 யூலை 30 - கொழும்புப் பங்குப் பரிவர்த்தனையில் வெளிநாட்டு நாணயத்தில் குறித்துரைக்கப்பட்ட முதலீடுகளுக்கு வசதியளிப்பதற்காக சிறப்பு வெளிநாட்டு நாணயக் கணக்குகளைத் திறத்தல் மற்றும் பேணி வருதல், அனுமதிக்கப்பட்ட பற்றுக்கள், வரவுகள் மற்றும் ஏனைய தேவைப்பாடுகளின் பிரமாணங்களைக் குறித்துரைக்கும் விதத்தில் அதிகாரம்பெற்ற வணிகர்களுக்கு 2021ஆம் ஆண்டின் 26ஆம் இலக்கப் பணிப்புரைகள் விடுக்கப்பட்டன.

- வியாபார வெளிநாட்டு நாணயக் கணக்கு தொடர்பில் 2021 மாச்சு 18ஆம் திகதியிடப்பட்ட 2021ஆம் ஆண்டின் 05ஆம் இலக்கப் பணிப்புரையில் குறித்துரைக்கப்பட்ட பற்றுக்களுக்கு மேலதிகமாக, கணக்குடமையாளர்களினால் 2021ஆம் ஆண்டின் 26ஆம் இலக்கப் பணிப்புரைகளின் கீழ் திறக்கப்பட்ட சிறப்பு வெளிநாட்டு நாணயக் கணக்குகளுக்கான வெளிநாட்டுச் செலாவணியிலமைந்த வருவாய்களின் மாற்றலை உள்ளடக்கிய வியாபார வெளிநாட்டு நாணயக் கணக்கிற்கான அனுமதிக்கப்பட்ட பற்றாக கொழும்புப் பங்குப் பரிவர்த்தனையில் குறித்துரைக்கப்பட்ட வெளிநாட்டு நாணயத்தில் பட்டியலிடப்பட்ட பங்குகள் அல்லது படுகடன் பிணையங்கள் தொடர்பில் செய்யப்பட்ட முதலீடுகள் காரணமாக கிடைத்த ஏதேனும் வருமானம் அல்லது முதிர்ச்சிப் பெறுகைகள் தொடர்பில் அங்கீகரிக்கப்பட்ட வணிகர்களுக்கு 2021ஆம் ஆண்டின் 27ஆம் இலக்க பணிப்புரைகள் விடுக்கப்பட்டன.

2021 ஓகத்து 06 - "ஏற்றுமதியாளர்களின் தொடர்பான வெளிநாட்டு நாணய கணக்குகளுக்கு ஏற்றுமதிப் பெறுகைகளை வரவு வைத்தல்" மீது உரிமம்பெற்ற வங்கிகளுக்கு தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள் விடுக்கப்பட்டன. இதற்கமைய, அனைத்து உரிமம்பெற்ற வங்கிகளும் ஆவணப்படுத்தல்கள் நிறைவடையும் வரை எடுப்பனவுகள் அத்துடன்/ அல்லது மாற்றல்கள் மீதான நிபந்தனைகளுக்குட்பட்டு, வங்கியில் பேணப்படும் ஏற்றுமதியாளரின் வெளிநாட்டு நாணயக் கணக்கிற்கு(களுக்கு) உடனடியாக ஏற்றுமதிப் பெறுகைகளை வரவு வைக்குமாறு அறிவுறுத்தப்பட்டன.

## இறக்குமதி ஏற்றுமதிக் கட்டுப்பாட்டுத் திணைக்களத்தின் ஒழுங்குவிதிகள்

2021 சனவரி 05 - 2020ஆம் ஆண்டின் 04ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) ஒழுங்குவிதிகளினால் குறித்துரைக்கப்பட்டவாறு இறக்குமதித் தடைகளின் கீழுள்ள டயர் இறக்குமதிகள் தொடர்பான பொருட்களின் பட்டியல்களைத் திருத்துவது தொடர்பாக 2021ஆம் ஆண்டின் 01ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாடு) ஒழுங்குவிதிகள் விடுக்கப்பட்டன (2209/18ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டது).

2021 பெப்புருவரி 11 - 2020ஆம் ஆண்டின் 04ஆம் இலக்க இறக்குமதிகள் மற்றும் ஏற்றுமதிகள் (கட்டுப்பாட்டு) ஒழுங்குவிதிகளினால் குறித்துரைக்கப்பட்டவாறு கட்டுப்பாடுகளின் கீழுள்ள மட்பாண்ட உற்பத்திகள் மற்றும் சேலைகள் தொடர்பான பொருட்களின் பட்டியல்களைத் திருத்துவது தொடர்பாக 2021ஆம் ஆண்டின் 03ஆம் இலக்க இறக்குமதிகள் மற்றும் ஏற்றுமதிகள் (கட்டுப்பாட்டு) ஒழுங்குவிதிகள் விடுக்கப்பட்டன (2214/56 இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டது).

2021 ஏப்பிறல் 06 - 2020ஆம் ஆண்டின் 04ஆம் இலக்க இறக்குமதிகள் மற்றும் ஏற்றுமதிகள் (கட்டுப்பாட்டு) ஒழுங்குவிதிகளினால் குறித்துரைக்கப்பட்டவாறு கட்டுப்பாடுகளின் கீழுள்ள தாவர எண்ணெய் தொடர்பான பொருட்களின் பட்டியல்களைத் திருத்துவது தொடர்பாக 2021ஆம் ஆண்டின் 04ஆம் இலக்க இறக்குமதிகள் மற்றும் ஏற்றுமதிகள் (கட்டுப்பாட்டு) ஒழுங்குவிதிகள் விடுக்கப்பட்டன (2222/31ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டது).

2021 ஏப்பிறல் 23 - 2020ஆம் ஆண்டின் 05ஆம் இலக்க இறக்குமதிகள் மற்றும் ஏற்றுமதிகள் (கட்டுப்பாட்டு) ஒழுங்குவிதிகளினால் குறித்துரைக்கப்பட்டவாறு, கட்டுப்பாடுகளின் கீழுள்ள நடமாடும் செயலமர்வுகளுடன் தொடர்பான பொருட்களின் பட்டியல்களைத் திருத்துவது தொடர்பாக 2021ஆம் ஆண்டின் 05ஆம் இலக்க இறக்குமதிகள் மற்றும் ஏற்றுமதிகள் (கட்டுப்பாட்டு) ஒழுங்குவிதிகள் விடுக்கப்பட்டன (2224/43ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டது).

- 2020ஆம் ஆண்டின் 04ஆம் இலக்க இறக்குமதிகள் மற்றும் ஏற்றுமதிகள் (கட்டுப்பாட்டு) ஒழுங்குவிதிகளினால் குறித்துரைக்கப்பட்டவாறு கட்டுப்பாடுகளின் கீழுள்ள நடமாடும் செயலமர்வுகளுடன் தொடர்பான பொருட்களின் பட்டியல்களைத் திருத்துவது தொடர்பாக 2021ஆம் ஆண்டின் 06ஆம் இலக்க இறக்குமதிகள் மற்றும் ஏற்றுமதிகள் (கட்டுப்பாட்டு) ஒழுங்குவிதிகள் விடுக்கப்பட்டன (2224/44ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டது).

2021 மே 06 - கனிப்பொருள் அல்லது இரசாயன வளமாக்கியின் சில விடயங்களின் இறக்குமதியைத் தடை செய்வதற்கும் மற்றையவற்றிற்கு இறக்குமதிக் கட்டுப்பாட்டினை விதிப்பதன் மீதும் 2021ஆம் ஆண்டின் 07ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) ஒழுங்குவிதிகள் விடுக்கப்பட்டன (2226/48ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டது).

2021 யூன் 11 - தங்கம் மற்றும் முகக் கவசங்கள் மீது இறக்குமதிக் கட்டுப்பாட்டு உரிமத்தினை விதிக்கின்ற 2021ஆம் ஆண்டின் 08ஆம் இலக்க இறக்குமதிகள் மற்றும் ஏற்றுமதிகள் (கட்டுப்பாட்டு) ஒழுங்குவிதிகள் விடுக்கப்பட்டன (2231/16ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டது).

- ஒட்சிசன் மற்றும் சுவாசப் பரிசோதனைக் கருவிகளின் ஏற்றுமதி மீது கட்டுப்பாடுகளை விதிக்கும் விதத்தில் 2021ஆம் ஆண்டின் 09ஆம் இலக்க இறக்குமதிகள் மற்றும் ஏற்றுமதிகள் (கட்டுப்பாட்டு) ஒழுங்குவிதிகள் விடுக்கப்பட்டன (2231/17ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டது)

- 2020ஆம் ஆண்டின் 04ஆம் இலக்க இறக்குமதிகள் மற்றும் ஏற்றுமதிகள் (கட்டுப்பாட்டு) ஒழுங்குவிதிகளினால் குறித்துரைக்கப்பட்டவாறு, கட்டுப்பாடுகளின் கீழான பொருட்களின் பட்டியல்களைத் திருத்துவது தொடர்பாக 2021ஆம் ஆண்டின் 10ஆம் இலக்க ஏற்றுமதிகள் மற்றும் இறக்குமதிகள் (கட்டுப்பாட்டு) ஒழுங்குவிதிகள் விடுக்கப்பட்டன (2231/18ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி வெளியிடப்பட்டது).

2021 யூலை 31 - கனிப்பொருள் அல்லது இரசாயன இறக்குமதிகளை "தடை செய்யப்பட்ட" வகையிலிருந்து "இறக்குமதிக் கட்டுப்பாட்டு உரிமத்தின்" கீழ் கொண்டு வருவதற்காக 2021ஆம் ஆண்டின் 11ஆம் இலக்க இறக்குமதிகள் மற்றும் எற்றுமதிகள் (கட்டுப்பாட்டு) ஒழுங்குவிதி விடுக்கப்பட்டது (2238/45ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டது).

## விலைத் திருத்தங்கள்

பல்வேறு பொருட்களின் அதியுச்ச சில்லறை விலைகள் பின்வருமாறு திருத்தப்பட்டுள்ளன:

| திகதி | விடயம் | திருத்தம் |
|---|---|---|
| 2021.02.08 | வெள்ளைச் சீனி, உலர்த்திய மிளகாய் (நொருக்கப்படாதவை அல்லது அரைக்கப்படாதவை), உருளைக்கிழங்கு (இறக்குமதி செய்யப்பட்டது), கீரி சம்பா | உயர்ந்தபட்ச சில்லறை விலைகள் நீக்கப்பட்டன. |
| 2021.06.18 | தேங்காய் (13 அங்குலத்திற்கு மேல் சுற்றளவு கொண்டவை, 12இற்கும் 13 அங்குலத்திற்குமிடையிலான சுற்றளவு கொண்டவை, 12 அங்குலத்திற்குக் குறைவான சுற்றளவு கொண்டவை) | உயர்ந்தபட்ச சில்லறை விலைகள் நீக்கப்பட்டன. |
| 2021.07.25 | திரவப் பெற்றோலிய வாயு (எல்பி) 18 லீற்றர் உருளை (9.6 கி.கிறாம்) | மாவட்ட அடிப்படையிலான உயர்ந்தபட்ச சில்லறை விலைகள் விதிக்கப்பட்டன. |
| 2021.08.12 | பொலிமரேஸ் செயின் றியக்ஷன் (பிசிஆர்) | பரிசோதனை மற்றும் அறிக்கைக்கு உயர்ந்தபட்ச சில்லறை விலையாக ரூ.6,500 விதிக்கப்பட்டது. |
| | விரைந்த அன்ரியன் பரிசோதனை (ஆர்ஏரி) | பரிசோதனை மற்றும் அறிக்கைக்கு உயர்ந்தபட்ச சில்லறை விலையாக ரூ.2,000 விதிக்கப்பட்டது. |
| 2021.09.02 | வெள்ளைச் சீனி | இறக்குமதியாளரின் உயர்ந்தபட்ச மொத்த விற்பனை விலை கி.கிறாமொன்றிற்கு ரூ.116 விதிக்கப்பட்டது. |
| | வெள்ளைச் சீனி (பொதியிடப்படாதது) | உயர்ந்தபட்ச சில்லறை விலை கி.கிறாமொன்றிற்கு ரூ.122 விதிக்கப்பட்டது. |
| | வெள்ளைச் சீனி (பொதியிடப்பட்டது) | உயர்ந்தபட்ச சில்லறை விலை கி.கிறாமொன்றிற்கு ரூ.125 விதிக்கப்பட்டது. |
| | மண்ணிற அல்லது சிவப்புச் சீனி (பொதியிடப்படாதது) | உயர்ந்தபட்ச சில்லறை விலை கி.கிறாமொன்றிற்கு ரூ.125 விதிக்கப்பட்டது. |
| | மண்ணிற அல்லது சிவப்புச் சீனி (பொதியிடப்பட்டது) | உயர்ந்தபட்ச சில்லறை விலை கி.கிறாமொன்றிற்கு ரூ.128 விதிக்கப்பட்டது. |
| | கீரி சம்பா | உயர்ந்தபட்ச சில்லறை விலை கி.கிறாமொன்றிற்கு ரூ.120 இலிருந்து ரூ.125 இற்கு அதிகரிக்கப்பட்டது. |
| | வெள்ளை/ சிவப்பு சம்பா - நீராவியில்/ அவிக்கப்பட்டது (சூதுறு சம்பா நீங்கலாக) | உயர்ந்தபட்ச சில்லறை விலை கி.கிறாமொன்றிற்கு ரூ.98 இலிருந்து ரூ.103 இற்கு அதிகரிக்கப்பட்டது. |
| | வெள்ளை/ சிவப்பு சம்பா - நீராவியில்/ அவிக்கப்பட்டது (மொட்டைக் கறுப்பன் மற்றும் ஆட்டக்காரி நீங்கலாக) | உயர்ந்தபட்ச சில்லறை விலை கி.கிறாமொன்றிற்கு ரூ.96 இலிருந்து ரூ.98 இற்கு அதிகரிக்கப்பட்டது. |
| | வெள்ளை/ சிவப்பு பச்சை அரிசி | உயர்ந்தபட்ச சில்லறை விலை கி.கிறாமொன்றிற்கு ரூ.93 இலிருந்து ரூ.95 இற்கு அதிகரிக்கப்பட்டது. |

| திகதி | விடயம் | திருத்தம் |
|---|---|---|
| 2021.09.04 | விரல் நுனியில் நாடித் துடிப்பை அளக்கும் கருவி | உயர்ந்தபட்ச சில்லறை விலையாக அலகிற்கு ரூ.3,000 விதிக்கப்பட்டது. |
| 2021.09.29 | கீரி சம்பா, வெள்ளை/ சிவப்பு சம்பா - நீராவியில்/ அவிக்கப்பட்டது (சூதுறு சம்பா நீங்கலாக), வெள்ளை/ சிவப்பு நாடு - நீராவியில்/ அவிக்கப்பட்டது (மொட்டைக் கறுப்பன் மற்றும் ஆட்டக்காரி நீங்கலாக), வெள்ளை/ சிவப்புப் பச்சை அரிசி மற்றும் வெள்ளை/ சிவப்புப் பச்சை சம்பா | உயர்ந்தபட்ச சில்லறை விலைகள் நீக்கப்பட்டன. |
| 2021.10.08 | பால்மா (முழு ஆடைப் பால்மா, கொழுப்புச் சத்து நீக்கிய பால்மா மற்றும் குழந்தைகளுக்கான பால்மா), சிமெந்து, திரவ பெற்றோலிய வாயு (எல்பி) மற்றும் கோதுமை மா | உயர்ந்தபட்ச சில்லறை விலைகள் நீக்கப்பட்டன. |

## வரித் திருத்தங்கள்

### வருமான வரிகள்

2021 மே 13 - 2017ஆம் ஆண்டின் 24ஆம் இலக்க உள்நாட்டு இறை வரிச் சட்டம் 2021ஆம் ஆண்டின் 10ஆம் இலக்க உள்நாட்டு இறை வரிச் (திருத்தச்) சட்டத்தினால் திருத்தப்பட்டதன் மூலம் முக்கியமாக 2020 நவெம்பரில் அறிவிக்கப்பட்ட வரவு செலவுத்திட்ட முன்மொழிவுகளும் 2020 சனவரியிலும் 2021 ஏப்பிறலிலும் செய்யப்பட்ட ஏனைய அறிவிப்புக்களும் சட்டத்திற்குள் கொண்டு வரப்பட்டன.

### பெறுமதிசேர் வரி

2021 பெப்புருவரி 01 - ஏற்றுமதி சார்ந்த முதலீட்டுச் சபை தொழில்முயற்சிகளின் குறிப்பிட்ட ஆடைகளின் உள்ளூர் நிரம்பல் மீது துண்டு அடிப்படையில் பிரயோகிக்கத்தக்க பெறுமதிசேர் வரி (இணங்குவிப்புக் குறியீடு அத்தியாயம் 61, 62 மற்றும் 63இன் கீழ் வகைப்படுத்தப்பட்டது) 2021 சனவரி 01 இலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் ரூ.100 இலிருந்து ரூ.25 இற்குக் குறைக்கப்பட்டது (உள்நாட்டு இறை வரித் திணைக்களப் பொது அறிவித்தல் - PN/VAT/2021-01).

2021 மே 13 - 2002ஆம் ஆண்டின் 14ஆம் இலக்க பெறுமதிசேர் வரிச் சட்டம் 2021ஆம் ஆண்டின் 9ஆம் இலக்க பெறுமதிசேர் வரி (திருத்தச்) சட்டத்தினால் திருத்தப்பட்டமையின் மூலம் 2019 திசெம்பரிலிருந்து நடைமுறைக்கு வந்த பெறுமதிசேர் வரிக் குறைப்பும் 2020 சனவரியிலிருந்து நடைமுறைக்குவந்த பெறுமதிசேர் வரியினைப் பதிவுசெய்வதற்கான ஆரம்ப மட்டத்தின் அதிகரிப்பும் முக்கியமாக சட்டத்திற்குள் கொண்டு வரப்பட்டன.

### கலால் தீர்வை

2021 சனவரி 01 - சுற்றுலாவிடுதி உரிமம் (எவ்எல்/7), சுற்றுலாச் சபை ஒப்புதலளித்த மற்றும் அறைகள் 5 அல்லது கூடுதலான சுற்றுலாச் சபையல்லாத ஒப்புதலளிக்கப்பட்ட சுற்றுலாவிடுதிகள், சுற்றுலாவிடுதி குடிபானச்சாலை உரிமம் (எவ்எல்/8), உணவக உரிமம் (சுற்றுலாச் சபையினால் ஒப்புதலளிக்கப்பட்ட/ ஒப்புதலளிக்கப்படாத உணவகங்களுக்கானவை) (எவ்எல்/11), வாடிவீட்டு உரிமம் (எவ்எல்/12) மற்றும் பணிமனைகளிலான நுகர்வு (எவ்எல்/22பீ) (சுற்றுலாச் சபையினால் ஒப்புதலளிக்கப்பட்ட/ ஒப்புதலளிக்கப்படாத பணிமனைகளுக்கானவை) (2208/35 இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல்).

2021 சனவரி 07 - இலங்கையில் நிறுவப்பட்டுள்ள ஏதேனும் உரிமம் வழங்கப்பட்ட தொழிற்சாலையில் தயாரிக்கப்பட்டு போத்தலில் அடைக்கப்பட்டு வழங்கப்படும் கள்ளின் மீதான கலால் தீர்வை லீற்றரொன்றிற்கு ரூ.50 இலிருந்து லீற்றரொன்றிற்கு ரூ.25 இற்குக் குறைக்கப்பட்டது (2209/42 இலக்க அதிவிசேட அரச வர்த்தமானி அறிவித்தல்).

2021 சனவரி 11 - 2021ஆம் ஆண்டிற்கான குடிவகையின் பயன்பாட்டிற்காகப் பிரயோகிக்கப்படுகின்ற மூன்றாண்டுகளுக்கான உறுதிச்சான்றுக் கட்டணத்தின் கொடுப்பனவிலிருந்து சில சுற்றுலாவிடுதிகள் விலக்களிக்கப்பட்டன (2210/2 இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல்).

2021 மாச்சு 23 - எதையில் மதுசாரம் மீதான கலால் வரி பின்வருமாறு திருத்தப்பட்டது (2220/40 இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல்):

| விடயம் | உள்ளூரில் நிரம்பல் செய்யப்பட்டவை/ இறக்குமதி செய்யப்பட்டவை மாதமொன்றிற்கு லீற்றர் | 2020.06.09 இலிருந்து நடைமுறையிலுள்ள வரி (தொகை வடிவிலான லீற்றர் ஒன்றிக்கு ரூ.) | | 2021.03.23 இலிருந்து வரித் திருத்தம் (தொகை வடிவிலான லீற்றர் ஒன்றிக்கு ரூ.) | |
|---|---|---|---|---|---|
| | | உள்ளூரில் நிரம்பல் செய்யப்பட்டவை | இறக்குமதி செய்யப் பட்டவை | உள்ளூரில் நிரம்பல் செய்யப்பட்டவை | இறக்குமதி செய்யப் பட்டவை |
| உற்பத்தியில் பயன்படுத்தப்பட்ட எதையில் மதுசாரம்: | | | | | |
| (அ) உள்ளூர் விற்பனைகளுக்கான தொற்றுநீக்கி | 500 லீற்றர்கள் வரை | வரி இல்லை | 200 | வரி இல்லை | 200 |
| | 501 லீற்றர்களிலிருந்து 10,000 லீற்றர்கள் வரை | | 700 | | 700 |
| | 10,001 லீற்றர்களிலிருந்து 20,000 லீற்றர்கள் வரை | | 800 | | 800 |
| | 20,000 லீற்றர்களுக்கு மேல் | | 1,200 | - | - |
| | 20,001 லீற்றர்களுக்கு மேல் 100,000 லீற்றர்கள் வரை | - | - | வரி இல்லை | 1,200 |
| | 100,000 லீற்றர்களுக்கு மேல் | - | - | 100 | 1,200 |
| (ஆ) ஏற்றுமதிகளுக்கான தொற்றுநீக்கி | ஒவ்வொரு லீற்றருக்கும் | வரி இல்லை | 25 | 25 | 25 |

## கலால் தீர்வை (சிறப்பு ஏற்பாடுகள்)

2021 ஏப்பிறல் 05 - திறைசேரிச் செயலாளரின் ஒப்புதலுக்குட்பட்டு, இலங்கைப் பொலிசிற்குப் பொறுப்பான தொடர்பான அமைச்சின் செயலாளரது விதந்துரைப்புக்களின் மீது இலங்கை பொலிசாருக்குக் கொள்வனவு செய்யப்பட்ட 2,000 முச்சில்லு வண்டிகளுக்கு கலால் தீர்வையிலிருந்து விலக்களிக்கப்பட்டது (2222/2 இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல்).

- ஊர்திகளைத் தயாரித்தல்/ பொருத்துதல் கைத்தொழில் மற்றும் ஊர்திகளின் பாகங்களைத் தயாரிக்கின்ற கைத்தொழில்களுக்கான நியம தொழிற்பாட்டு நடைமுறைகளை நடைமுறைப்படுத்துவதுடன் இசைந்து செல்லும் விதத்தில் உள்ளூரில் பொருத்தப்பட்ட/ தயாரிக்கப்பட்ட உந்து ஊர்திகள் மற்றும் உந்து ஈருருளிகள் மீது புதிய தீர்வை அமைப்பு அறிமுகப்படுத்தப்பட்டது (2222/3 இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல்).

2021 ஏப்பிறல் 22 - நடமாடும் செயலமர்வு ஊர்திகளின் மீதான கலால் தீர்வை வீதங்கள் திருத்தப்பட்டன (2224/24 இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல்).

2021 ஓகத்து 03 - திறைசேரிச் செயலாளரின் ஒப்புதலுக்குட்பட்டு தேசிய வரவு செலவுத்திட்ட திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தின் விதந்துரைப்பின் மீது இன்றியமையாத கள நடவடிக்கைகளுக்கான 52 நீர்த்தாங்கிகள் மற்றும் 62 இரட்டை அறை ஊர்திகளின் இறக்குமதிகளுக்கு கலால் வரியிலிருந்து விலக்களிக்கப்பட்டது (2239/16 இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல்).

## சுங்கத் தீர்வை

பெற்றோல் மற்றும் டீசல் இறக்குமதிகள் மீதான சுங்கத் தீர்வை பின்வருமாறு திருத்தப்பட்டது:

| விடயம் | திகதி | சுங்க இறக்குமதித் தீர்வை (லீற்றரொன்றிற்கு ரூ.) | சுங்கத் தீர்வை விலக்கல் (லீற்றரொன்றிற்கு ரூ.) | ஏற்புடைத்தான தீர்வை (லீற்றரொன்றிற்கு ரூ.) |
|---|---|---|---|---|
| பெற்றோல் (92 ஒக்ரேன்) | 2020.12.31 | 50.00 | 18.00 | 32.00 |
| | 2021.02.02 | 50.00 | 29.00 | 21.00 |
| | 2021.03.25 | 50.00 | 45.00 | 5.00 |
| பெற்றோல் (95 ஒக்ரேன்) | 2020.12.31 | 50.00 | 16.00 | 34.00 |
| | 2021.02.02 | 50.00 | 8.00 | 42.00 |
| | 2021.03.25 | 50.00 | 24.00 | 26.00 |
| தன்னியக்க டீசல் | 2020.12.31 | 25.00 | 20.00 | 5.00 |
| | 2021.02.02 | 25.00 | 14.00 | 11.00 |
| | 2021.03.25 | 25.00 | 25.00 | 0.00 |
| சிறப்பு டீசல் | 2020.12.31 | 25.00 | 15.00 | 10.00 |
| | 2021.02.02 | 25.00 | - | 25.00 |
| | 2021.03.25 | 25.00 | 10.00 | 15.00 |

குறிப்பு: 2020 நவெம்பர் 24 இலிருந்து நடைமுறைக்கு வந்த மூன்று மாத காலப்பகுதிக்காக விதிக்கப்பட்ட மேலதிகக் கட்டணம் 2021 பெப்புருவரி 02 அன்று இரத்துச் செய்யப்பட்டது.

## பண்ட ஏற்றுமதி உதவுதொகைத் திட்டம் (செஸ்)

2021 சனவரி 12 - முதலீட்டுச் சபையுடன் உடன்படிக்கையொன்றினைச் செய்துள்ளதும் சுங்க உற்பத்தி முறித் திட்டத்தின் கீழ் அல்லது ஏற்றுமதிச் செயன்முறைத் திட்டத்திற்கான தற்காலிக இறக்குமதிகளின் கீழ் பதிவுசெய்யப்பட்டதுமான தொழில்முயற்சியொன்றினால் ஏற்றுமதி செய்யப்படவுள்ள பொருட்களின் தயாரிப்புச் செய்முறையூடாக உருவாக்கப்பட்ட கழிவு/ விரைய ஏற்றுமதிகளுக்கும் இறக்குமதி செய்யப்பட்ட பொருட்களிலிருந்து அத்தொழில்முயற்சியினால் மேற்கொள்ளப்பட்டுள்ள திருத்தம்/ பேணல் வேலைகளின் செயன்முறையினூடாக உருவாக்கப்பட்ட பொருட்களுக்கும் செஸ் வரியிலிருந்து விலக்களிக்கப்பட்டது (2210/09 இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல்).

2021 மாச்சு 15 - ஓடுகள் மற்றும் சுகாதாரப் பொருட்களின் இறக்குமதி மீதான செஸ் தீர்வை திருத்தப்பட்டது (2219/15 இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல்).

2021 மாச்சு 17 - 2019 மாச்சு 06 அன்றோ அல்லது அதற்குப் பின்னரோ, செயற்றிட்டத்தின் ஒவ்வொரு கட்டத்திலும் ஐ.அ.டொலர் 50 மில்லியனை அல்லது அதற்கும் கூடுதலான தொகையினை முதலீடு செய்கின்ற உபாய அபிவிருத்திச் செயற்றிட்டங்களுக்காக ஏதேனும் தொழில்முயற்சியினால் இறக்குமதி செய்யப்பட்ட ஏதேனும் பொருட்களுக்குச் செயற்றிட்டத்தின் நடைமுறைப்படுத்தல் காலத்தின் போது அல்லது குறிப்பிட்ட செயற்றிட்டத்தின் நிருமாணக் காலத்தின் போது ஆனால் வர்த்தகத் தொழிற்பாடுகள் ஆரம்பிப்பதற்கு முன்னதாக இறக்குமதி செய்யப்பட்ட பொருட்களுக்கு செஸ்ஸிலிருந்து விலக்களிக்கப்பட்டது (2219/36 இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல்).

## சிறப்புப் பண்டத் தீர்வை

பல பொருட்களின் இறக்குமதி மீதான சிறப்புப் பண்டத் தீர்வை பின்வருமாறு திருத்தப்பட்டது:

| திகதி | விடயம் | திருத்தம் |
|---|---|---|
| 2021.01.13 | பெரிய வெங்காயம், சிவப்பு மற்றும் மஞ்சள் பருப்பு (முழு மற்றும் உடைத்தவை), பீற் மற்றும் கரும்புச்சீனி, சீனி (சுவை அல்லது நிறமூட்டப்பட்டவை) மற்றும் வெள்ளைப் பளிங்குருவான கரும்பு மற்றும் பீற் சீனி | சிறப்புப் பண்டத் தீர்வையின் விதிப்பு மூன்று மாத காலப்பகுதிக்கு நீடிக்கப்பட்டது (2210/16 இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல்). |
| 2021.01.18 | துருவப்பட்ட அல்லது மாவாக்கப்பட்ட சீஸ், கொத்தமல்லி, மஞ்சள் (நொருக்கப்படாதவை அல்லது அரைக்கப்படாதவை மற்றும் ஏனையவை) உழுத்தம்மா | சிறப்புப் பண்டத் தீர்வையின் விதிப்பு ஆறு மாத காலப்பகுதிக்கு நீடிக்கப்பட்டது (2211/8 இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல்). |
| 2021.02.11 | நெத்தலி | சிறப்புப் பண்டத் தீர்வை கி.கிறாமொன்றிற்கு ரூ.1 இலிருந்து கி.கிறாமொன்றிற்கு ரூ.100 இற்கு ஆறு மாத காலப்பகுதிக்கு அதிகரிக்கப்பட்டது (2214/58 இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல்). |
| | கருவாடு, உருளைக்கிழங்கு | சிறப்புப் பண்டத் தீர்வை ஆறு மாத காலப்பகுதிக்கு குறைக்கப்பட்டது (2214/58 இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல்). |
| 2021.03.03 | மெக்கரல், ஜக் மற்றும் கோஸ் மக்கரல், உழுந்து, தட்டைப்பயறு, தினை மற்றும் குரக்கன் | சிறப்புப் பண்டத் தீர்வை விதிப்பு ஓராண்டு காலப்பகுதிக்கு நீடிக்கப்பட்டது (2217/23 இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல்). |
| 2021.04.13 | பெரிய வெங்காயம், சிவப்பு மற்றும் மஞ்சள் பருப்பு (முழு மற்றும் உடைத்தவை), பீற் மற்றும் கரும்புச்சீனி, சீனி (சுவை அல்லது நிறமூட்டப்பட்டவை) மற்றும் வெள்ளைப் பளிங்குருவான கரும்பு மற்றும் பீற் சீனி | சிறப்புப் பண்டத் தீர்வை விதிப்பு ஆறு மாத காலப்பகுதிக்கு நீடிக்கப்பட்டது (2223/2 இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல்). |
| 2021.04.26 | மீன் (உடன், குளிரூட்டப்பட்டவை அல்லது உறைய வைக்கப்பட்டவை), மாசிக் கருவாடு, பயறு, மங்குஸ்தான் (உடன் மற்றும் உலர்த்தியவை) மற்றும் கிவிப்பழம் | சிறப்புப் பண்டத் தீர்வை விதிப்பு ஓராண்டு காலப்பகுதிக்கு நீடிக்கப்பட்டது (2225/1 இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல்). |
| 2021.04.27 | தேங்காய்த்துருவல்கள் | கி.கிறாமொன்றிற்கு ரூ.300 கொண்ட சிறப்புப் பண்டத் தீர்வை மூன்று மாத காலப்பகுதிக்கு விதிக்கப்பட்டது (2225/8 இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல்). |
| | உருளைக்கிழங்கு | சிறப்புப் பண்டத் தீர்வை கி.கிறாமொன்றிற்கு ரூ.15 இலிருந்து கி.கிறாமொன்றிற்கு ரூ.50 இற்கு ஆறு மாத காலப்பகுதிக்கு அதிகரிக்கப்பட்டது (2225/13 இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல்). |
| 2021.05.17 | யோகட், சின்ன வெங்காயம், உள்ளி, பீஸ் (முழு மற்றும் உடைத்தவை), சிக்பீஸ் (முழு மற்றும் உடைத்தவை) பேரீச்சம்பழம் (உடன் மற்றும் உலர்த்தியவை), தோடம்பழம் (உடன் மற்றும் உலர்த்தியவை), எலுமிச்சம்பழம் (உடன் மற்றும் உலர்த்தியவை), திராட்சை (உடன் மற்றும் உலர்த்தியவை), அப்பிள், குயின்ஸஸ், மிளகாய் (உலர்த்தியவை, நொருக்கப்படாதவை), மிளகாய் (நொருக்கப்பட்டவை அல்லது அரைக்கப்பட்டவை), சீரகம், வெந்தயம், சோளம், நிலக்கடலை (கோதுடன்), மாஜரின், தகரத்திலடைக்கப்பட்ட மீன் மற்றும் முகக் கவசம் | சிறப்புப் பண்டத் தீர்வை ஓராண்டு காலப்பகுதிக்கு நீடிக்கப்பட்டது (2228/3 இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல்). |

| திகதி | விடயம் | திருத்தம் |
|---|---|---|
| 2021.06.14 | கிளமன்ரைன்ஸ் (உடன் மற்றும் உலர்த்தியவை), போமலஸ் (உடன் மற்றும் உலர்த்தியவை) உட்பட திராட்சைப்பழம், பியர்ஸ், அப்பிறிகோட், புளிப்பான செறிஸ் (புறுனஸ் செறஸஸ்) செறிஸ் (ஏனையவை), பீச்சஸ் (நெக்ரறன்ஸ் உட்பட), உலர் திராட்சை மற்றும் சுலோஸ், மரக்கறிக் கொழுப்பு மற்றும் எண்ணெய் அவற்றின் பிரிவுகள் மற்றும் மாஜரின் (ஏனையவை) | சிறப்புப் பண்டத் தீர்வை ஓராண்டு காலப்பகுதிக்கு நீடிக்கப்பட்டது (2232/3 இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல்). |
| 2021.07.18 | துருவப்பட்ட அல்லது மாவாக்கப்பட்ட சீஸ், கொத்தமல்லி, மஞ்சள் (நொருக்கப்படாதவை அல்லது அரைக்கப்படாதவை மற்றும் ஏனையவை) உழுத்தம்மா | சிறப்புப் பண்டத் தீர்வை ஓராண்டு காலப்பகுதிக்கு நீடிக்கப்பட்டது (2236/66 இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல்). |
| 2021.08.10 | நெத்தலி, கருவாடு, வெண்ணெய்க் கட்டி, பூசுகின்ற பாற்பொருட்கள், மதே விதைகள், குரக்கன் மா, கடுகு மற்றும் உப்பு | சிறப்புப் பண்டத் தீர்வை ஓராண்டு காலப்பகுதிக்கு நீடிக்கப்பட்டது (2240/20 இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல்). |
| 2021.09.07 | பெரிய வெங்காயம் | சிறப்புப் பண்டத் தீர்வை கி.கிறாமொன்றிற்கு 25 சதத்திலிருந்து கி.கிறாமொன்றிற்கு ரூ.40 இற்கு ஆறு மாத காலப்பகுதிக்கு அதிகரிக்கப்பட்டது (2244/8 இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல்). |
| 2021.10.11 | பச்சை அரிசி (கெக்குலு), நாட்டரிசி (சிவப்பு அல்லது வெள்ளை) மற்றும் சம்பா அரிசி (சிவப்பு அல்லது வெள்ளை) | கி.கிறாமொன்றிற்கு ரூ.65 கொண்ட சிறப்புப் பண்டத் தீர்வை நான்கு மாத காலப்பகுதிக்கு விதிக்கப்பட்டது (2249/3 இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல்). |
| 2021.10.13 | உருளைக்கிழங்கு, சிவப்பு அல்லது மஞ்சள் பருப்பு (முழு மற்றும் உடைக்கப்பட்டவை), பீற் மற்றும் கரும்புச் சீனி, சீனி (சுவையூட்டப்பட்டவை அல்லது நிறமூட்டப்பட்டவை) மற்றும் வெள்ளைப் பளிங்குருவான கரும்பு மற்றும் பீற் சீனி | சிறப்புப் பண்டத் தீர்வை ஆறு மாத காலப்பகுதிக்கு நீடிக்கப்பட்டது (2249/16 இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல்). |

## துறைமுக மற்றும் விமானநிலைய அபிவிருத்தித் தீர்வை

2021 பெப்புருவரி 22 - பால் மற்றும் கிறீம், செறிவூட்டப்பட்ட அல்லது சீனி அல்லது ஏனைய இனிப்பு வகை சேர்க்கப்பட்டவை (இணங்குவிப்புக் குறியீடுகள் 0402.10.00, 0402.21.00 மற்றும் 0402.29.00 கீழுள்ள உற்பத்திகள்) மீதான துறைமுக மற்றும் வானூர்திநிலைய அபிவிருத்தி தீர்வை 10 சதவீதத்திலருந்து 2.5 சதவீதத்திற்குக் குறைக்கப்பட்டது (அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் இல.2216/3).

2021 மாச்சு 09 - 2008ஆம் ஆண்டின் 14ஆம் இலக்க வர்த்தகமைய ஒழுங்குவிதிகள் மற்றும் உபாய அபிவிருத்தி செயற்றிட்ட அபிவிருத்திச் சட்டத்தின் கீழ் ஒப்புதலளிக்கப்பட்ட ஏதேனும் செயற்றிட்டம் தவிர்ந்த வர்த்தக தொழிற்பாடுகள் ஆரம்பிப்பதற்கு முன்னர் செயற்றிட்டம் நடைமுறைப்படுத்தப்படுகின்ற அல்லது நிருமாண காலப்பகுதியில் ஐ.அ.டொலர் 50 மில்லியனுக்கு குறைவான கட்டம் கட்டமான மூலதன முதலீட்டினைக் கொண்டுள்ள அத்தகைய தொழில்முயற்சிகளின் ஏதேனும் செயற்றிட்டத்தில் பயன்படுத்துவதற்காக இலங்கை முதலீட்டுச் சபையுடன் உடன்படிக்கையொன்றினை செய்து கொண்டுள்ள ஏதேனும் நிறுவனத்தினால் செயற்றிட்டம் தொடர்பான மூலதனப்பொருட்களின் இறக்குமதிகளுக்கு துறைமுக மற்றும் வானூர்திநிலைய அபிவிருத்தித் தீர்வையிலிருந்து விலக்களிக்கப்பட்டது (அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் இல.2218/51).

2021 மாச்சு 19 - சுங்கப் பணிப்பாளர் நாயகத்தின் ஒப்புதலுக்குட்பட்டு பெற்றோலியத் துறைக்குப் பொறுப்பான அமைச்சின் செயலாளரின் விதந்துரைப்புக்களின் மீது, குறிப்பாக பிற்றுமன் உற்பத்திக்காக இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தினால் இறக்குமதி செய்யப்படும் உலை எண்ணெய் மீதான துறைமுக மற்றும் விமானநிலையத் தீர்வையிலிருந்து விலக்களிக்கப்பட்டது (அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் இல.2219/68).

2021 ஏப்பிறல் 19 - பன்னாட்டு திரவப் பெற்றோலிய வாயுவின் விலைகள் மெ.தொன்னொன்றிற்கு ஐ.அ.டொலர் 325 இனை அடையும் வரை, திரவப் பெற்றோலிய வாயு மீதான 7.5 சதவீதமான துறைமுக மற்றும் வானூர்திநிலையத் தீர்வை திரவப் பெற்றோலிய வாயு மீது 7.5 சதவீதமாக அல்லது மெ.தொன்னொன்றிற்கு ரூ.2,000 ஆக இதில் எது குறைவானதோ அதற்குத் திருத்தப்பட்டது (அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் இலக்கம் 2224/8).

2021 யூன் 11 - கொக்கோபீன்ஸ், முழுமையானது அல்லது உடைக்கப்பட்டவை, பச்சை அல்லது வறுக்கப்பட்டவை மீதான துறைமுக மற்றும் வானூர்திநிலைய அபிவிருத்தித் தீர்வை 10 சதவீதத்திலிருந்து 5 சதவீதத்திற்குக் குறைக்கப்பட்டது (அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் இலக்கம் 2231/19).

2021 ஓகத்து 11 - பால் மற்றும் கிறீம், செறிவூட்டப்பட்ட அல்லது சீனி அல்லது வேறு ஏதேனும் இனிப்பு விடயங்கள் சேர்க்கப்பட்ட (இணங்குவிப்புக் குறியீடுகள் 0402.10.00, 0402.21.00 மற்றும் 0402.29.00 கீழுள்ள உற்பத்திகள்) பொருட்களுக்குத் துறைமுக விமானநிலைய அபிவிருத்தித் தீர்வையிலிருந்து விலக்களிக்கப்பட்டன (அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் இலக்கம் 2240/21).

## ஏனைய வரிகளும் தீர்வைகளும்

2021 சனவரி 05 - பாராளுமன்ற அலுவல்களுக்குப் பொறுப்பான அமைச்சின் செயலாளரினால் வழங்கப்பட்ட அனுமதிப்பத்திரத்தின் கீழ் 8ஆவது பாராளுமன்றத்தின் உறுப்பினரொருவரால் இறக்குமதி செய்யப்படும் உந்து ஊர்திக்கு ஆடம்பர வரியிலிருந்தும் விலக்களிக்கப்பட்டது (அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் இலக்கம் 2209/23).

2021 பெப்புருவரி 09 - தொலைக்காட்சி நாடகங்கள், படங்கள் மற்றும் வர்த்தக ரீதியாக ஒளிபரப்பப்படும் வெளிநாட்டு தொலைக்காட்சி நாடகங்கள் மற்றும் படங்கள் மீது தீர்வை மீண்டும் விதிக்கப்பட்டது (அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் இலக்கம் 2214/25).

2021 மே 10 - தொலைக்காட்சி நாடகங்கள், படங்கள் மற்றும் வர்த்தக ரீதியான விடயங்களின் கீழான வர்த்தகத் தயாரிப்புக்கள் தொடர்பில் செலுத்தத்தக்க தீர்வை பின்வருமாறு திருத்தப்பட்டது (அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் இலக்கம் 2227/2):

| காலம் | 2017.11.08 இலிருந்து நிலவுகின்ற வரி (ரூ) | 2021.05.11 இலிருந்து நிலவுகின்ற வரி (ரூ.) |
|---|---|---|
| ஏதேனும் உரிமம்பெற்ற நிறுவனத்தினால் பின்வரும் காலப்பகுதியில் மேற்கொள்ளப்பட்ட ஏதேனும் எண்ணிக்கையிலான ஒளிபரப்புக்கள்: | | |
| • இசைவுச்சான்றிதழ் திகதியிலிருந்து 30 நாட்கள் கொண்ட காலப்பகுதி | - | 100,000 |
| • இசைவுச்சான்றிதழ் திகதியிலிருந்து 183 நாட்கள் கொண்ட காலப்பகுதி | 500,000 | 500,000 |
| • இசைவுச்சான்றிதழ் திகதியிலிருந்து 365 நாட்கள் கொண்ட காலப்பகுதி | 1,000,000 | 1,000,000 |

2021 செத்தெம்பர் 15 - குறிப்பிட்ட சட்டங்களின் கீழ் வெளிப்படுத்துமாறு கேட்டுக் கொள்ளப்பட்ட வரி விதிக்கத்தக்க பொருட்கள், வருமானம் மற்றும் சொத்துக்களை ஆட்கள் தன்னிச்சையாக வெளிப்படுத்துவதனை அனுமதிக்கின்ற விதத்தில் 2021ஆம் ஆண்டின் 18ஆம் இலக்க நிதிச் சட்டம் இயற்றப்பட்டதுடன் அத்தகைய வரி விதிக்கத்தக்கப் பொருட்கள், வருமானம் மற்றும் சொத்துக்களின் தன்னிச்சையான வெளிப்படுத்துகை மீது வரி விதிக்கப்படும்.

## ஏனையவை

2021 சனவரி 05 - அம்பாந்தோட்டை, அறபொக்காவில் சிறப்பு மருந்தாக்கல் தயாரிப்பு வலயத்தினை ஏற்படுத்துதல் (அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் இலக்கம் 2209/22).

2021 மாச்சு 05 - “சிலோன் ரயர் மனுபைச்சறிங் கம்பனி (பிறைவேற்) லிமிடெட்” தொடர்பான தகவல்கள் வெளியிடப்பட்டன (அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் இலக்கம் 2217/40).

| | | |
|---|---|---|
| 2021 மாச்சு 23 | - | கொழும்பு பன்னாட்டு நிதியியல் மையம் கலப்பு அபிவிருத்திச் செயற்றிட்டத்துடன் தொடர்பான தகவல்கள் வெளியிடப்பட்டன (அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் இலக்கம் 2220/30). |
| 2021 ஏப்பிறல் 19 | - | சிறப்பு மருந்தாக்கல் தயாரிப்பு வலயத்தின் ஒவ்வொரு தொழில்முயற்சிக்குமான உட்கட்டமைப்புத் தேவைப்பாடுகள் பிரகடனப்படுத்தப்பட்டு ஊக்குவிப்புக்கள் வழங்கப்படுகின்றன (அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் இலக்கம் 2224/2). |
| 2021 ஏப்பிறல் 20 | - | சிறப்புப் புடவை தயாரிப்பு வலயத்தின் ஒவ்வொரு தொழில்முயற்சிகளுக்குமான உட்கட்டமைப்பு தேவைப்பாடுகள் பிரகடனப்படுத்தப்பட்டு ஊக்குவிப்புக்கள் வழங்கப்படுகின்றன (அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் இலக்கம் 2224/9). |
| 2021 மே 21 | - | திறந்த சந்தைத் தொழிற்பாடுகள் மற்றும் துணைநில் வசதிகள் தொடர்பான விடயங்கள் பற்றி பங்கேற்கும் நிறுவனங்களுக்கு "சந்தைத் தொழிற்பாடுகள் மீதான திரட்டப்பட்ட தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள்" தொடர்பாக 2021ஆம் ஆண்டின் 01ஆம் இலக்கச் சுற்றறிக்கை விடுக்கப்பட்டது. |
| 2021 மே 24 | - | "வெல்கம்ஹோட்டல் லங்கா (பிறைவேற்) லிமிடெட்" செயற்றிட்டத்தினை நடைமுறைப்படுத்துவதற்கு வழங்கப்பட்ட காலம் 2022 சனவரி 01ஆம் நாளிலிருந்து மேலும் 18 மாத காலப்பகுதிக்கு நீடிக்கப்பட்டிருக்கிறது (அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் இலக்கம் 2229/2). |
| | - | "ஏவிஜசி இன்ரநஷனல் ஹோட்டல் லங்கா லிமிடெட்" செயற்றிட்டத்தினை நடைமுறைப்படுத்துவதற்காக வழங்கப்பட்ட காலம் 2020 மாச்சு 25இலிருந்து 19 மாதங்களுக்கு மேலும் நீடிக்கப்பட்டிருக்கிறது (அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் இலக்கம் 2229/3). |
| 2021 மே 27 | - | கொழும்புத் துறைமுக நகர சிறப்புப் பொருளாதார வலயத்தினையும் கொழும்புத் துறைமுக நகர பொருளாதார ஆணைக்குழுவினையும் நிறுவுவதற்காக, பாராளுமன்றத்தினால் 2021ஆம் ஆண்டின் 11ஆம் இலக்க கொழும்புத் துறைமுக நகர பொருளாதார ஆணைக்குழுச் சட்டத்திற்கு ஒப்புதலளிக்கப்பட்டது. |
| 2021 செத்தெம்பர் 06 | - | "வோட்டர்புறொன்ட் பொறப்பட்டீஸ் (பிறைவேற்) லிமிடெட்" செயற்றிட்டத்தினை நடைமுறைப்படுத்துவதற்கு வழங்கப்பட்ட காலம் 2021 ஒத்தோபர் 12இலிருந்து 14 மாதங்களும் 20 நாட்களும் கொண்ட மேலதிக காலத்தினால் நீடிக்கப்பட்டது (அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் இலக்கம் 2244/3). |

## அரச செலவினம்

| | | |
|---|---|---|
| 2021 யூன் 23 | - | ரூ.200 பில்லியன் கொண்ட துணைநிரப்பு ஒதுக்கிற்கு பாராளுமன்றம் ஒப்புதலளித்திருக்கிறது (பாராளுமன்றத்தின் 80ஆம் இலக்க கட்டளைப் பத்திரம்). |
| 2021 ஓகத்து 05 | - | ரூ.11.8 பில்லியன் கொண்ட துணைநிரப்பு ஒதுக்கொன்றிற்குப் பாராளுமன்றம் ஒப்புதலளித்திருக்கிறது (பாராளுமன்றத்தின் 89ஆம் இலக்க கட்டளைப் பத்திரம்). |
| 2021 ஓகத்து 13 | - | நிதி அமைச்சினால் ரூ.19 பில்லியன் கொண்ட சிறப்பு சட்ட ஆணையொன்றிற்கு ஒப்புதலளித்திருக்கிறது. |
| 2021 ஓகத்து 16 | - | எந்தவொரு தொழில் துறையிலும் அல்லது பணியிலுமுள்ள அனைத்துத் தொழிலாளர்களுக்குமான தேசிய குறைந்தபட்ச மாதாந்தக் கூலியை ரூ.10,000 இலிருந்து ரூ.12,500 இற்கு அதிகரிப்பதற்கும் தொழிலாளர்களின் தேசிய குறைந்தபட்ச நாளாந்தக் கூலியை ரூ.400 இலிருந்து ரூ.500 இற்கு அதிகரிப்பதற்குமாக 2016ஆம் ஆண்டின் 3ஆம் இலக்க தொழிலாளரின் தேசிய குறைந்தபட்ச கூலிச் சட்டம் 2021ஆம் ஆண்டின் 16ஆம் இலக்க தொழிலாளர் தேசிய குறைந்தபட்சக் கூலி (திருத்தச்) சட்டத்தின் மூலம் திருத்தப்பட்டது. |
| 2021 ஒத்தோபர் 07 | - | 2022ஆம் ஆண்டிற்கான ஒதுக்கீட்டுச் சட்ட மூலம் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது. |
| | - | 2020ஆம் ஆண்டின் 7ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தினால் ஒப்புதலளிக்கப்பட்ட ரூ.2,997 பில்லியன் கொண்ட கடன்பாட்டு வரையறையினை ரூ.400 பில்லியனால் ரூ.3,397 பில்லியனுக்கு அதிகரிப்பதற்காக ஒதுக்கீட்டு (திருத்த) சட்ட மூலமொன்று விடுக்கப்பட்டது. |

## படுகடன் முகாமைத்துவம்

2021 சனவரி 26 - சந்தை நிலைமைகள் வழமைக்குத் திரும்பும் வரை, பொது திறைசேரியின் வெளிநாட்டு நாணய நிதியிடல் தேவைப்பாடுகளுக்கு வசதியளிப்பதற்காகவும் அத்துடன் பன்னாட்டு மூலதனச் சந்தைகளில் நிதிகளைத் திரட்டுவதற்கு அரசாங்கத்திற்குத் தூண்டுதலளிப்பதற்காகவும் பிணையமயப்படுத்தப்பட்ட நிதியிடல் ஏற்பாடுகளினூடாக அத்துடன் அல்லது வெளிநாட்டு நாணய நிலைமைகளின் மூலங்களை வழங்குவதனூடாக வங்கிகளுக்கான இலங்கை அபிவிருத்தி முறிகளை நேரடியாக வைப்புச் செய்யும் விதத்தில் வசதியளிப்பதற்கு வழிமுறைகள் மேற்கொள்ளப்பட்டன.

2021 பெப்புருவரி 03 - 364-நாள் முதிர்ச்சிக்காக மாத்திரம் ஏற்றுக்கொள்ளலுக்கான உயர்ந்தபட்ச விளைவு வீதத்தினை வெளியிடுவதற்கும் 91-நாள் மற்றும் 182-நாள் முதிர்ச்சிகளுக்கான ஏற்றுக்கொள்ளலை திறைசேரி உண்டியல் ஏலங்களில் 364-நாள் முதிர்ச்சிக்காக அறிவிக்கப்பட்ட விளைவு வீதங்களுக்குள் உள்ளடக்குகின்ற வேளையில் அனைத்துத் திறைசேரி முறி முதிர்ச்சிகளுக்குமான ஏற்றுக்கொள்ளலுக்காக உயர்ந்தபட்ச விளைவு வீதத்தினைத் தொடர்ந்து வெளியிடுவதற்கும் வழிமுறைகள் மேற்கொள்ளப்பட்டன.

2021 மாச்சு 26 - இரண்டாந்தரச் சந்தை வர்த்தகப்படுத்தல் நடைமுறைகளை அதிகரித்து வலுப்படுத்துவதற்காகவும் வர்த்தகப்படுத்தலின் நம்பகத்தன்மையினை மேம்படுத்துவதற்காகவும் முதலீட்டாளர் பாதுகாப்பினையும் நம்பிக்கையினையும் அதிகரிப்பதற்காகவும் வர்த்தகத் திகதியன்று அரச பிணையங்களின் அனைத்து இரண்டாந்தரச் சந்தை வர்த்தகங்களையும் பதிவுசெய்வதற்கு வழிமுறைகள் மேற்கொள்ளப்பட்டன. இதற்கமைய, லங்காசெட்டில் முறைமையிலுள்ள அனைத்துப் பங்கேற்பாளர்களும் 2021 ஏப்பிறல் 01இலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் மத்திய வங்கிக்கான அனைத்து வர்த்தகங்களையும் அறிக்கையிடுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டனர்.

2021 மே 24 - வாராந்த முதிர்ச்சியடைகின்ற மத்திய வங்கியின் உடைமைகள் அல்லது திறைசேரி உண்டியல்களின் ரூ.5.0 பில்லினை அல்லது 50 சதவீதத்தினை இதில் எது உயர்வானதோ அதனைப் பிடித்துவைத்திருப்பதற்கும் மாற்றல் செய்வதற்கும் மற்றும் சீராக்கப்பட்ட தேவைப்பாடுகளைச் சந்தைக்கு முன்வைப்பதற்கும் வழிமுறைகள் மேற்கொள்ளப்பட்டன.

2021 யூன் 07 - கரைகடந்த கடன்பாடுகளின் வெளிநாட்டுச் செலாவணி இடர்நேர்வுகளைப் பாதுகாப்பதற்காக, தனியார் துறையினர் தமது பலத்தினைப் பயன்படுத்தி கரைகடந்த நிதியிடல்களைத் திரட்டுவதற்குரிய வழிகளைத் தொடருவதற்கும் அத்தகைய நிதியினை இலங்கை அபிவிருத்தி முறிகளில் நிதியிட ஊக்குவிப்பதற்கும் வழிமுறைகள் மேற்கொள்ளப்பட்டன.

2021 யூன் 09 - நாட்டில் முதலீட்டு வாய்ப்புக்களை ஊக்குவிப்பதற்கும் வெளிநாட்டு நாணய உட்பாய்ச்சல்களை மேலும் அதிகரிப்பதற்காகவும் உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளும் தேசிய சேமிப்பு வங்கியும் ஐ.அ.டொலரில் குறித்துரைக்கப்பட்ட நாட்டிற்கான பன்னாட்டு முறி மற்றும் இலங்கை அபிவிருத்தி முறிகளிலுள்ள வெளிநாட்டு மூலவளங்களினைச் சமமாகப் பிரித்து நாட்டிற்கான பன்னாட்டு முறிகளிலும் இலங்கை அபிவிருத்தி முறிகளிலும் முதலீடு செய்வதற்கு வசதியளிப்பதற்கு வழிமுறைகள் மேற்கொள்ளப்பட்டன.

2021 யூன் 14 - உள்நாட்டு உற்பத்திக்குப் படுகடன் இலக்கை 2020 இலிருந்து 2030 இற்கு நகர்த்துவதற்கும் அரசாங்கத்தினால் வெளியிடப்பட்ட உத்தரவாதங்களின் வரையறையை 10 சதவீதத்திலிருந்து 15 சதவீதத்திற்கு அதிகரிப்பதற்குமாக 2003ஆம் ஆண்டின் 3ஆம் இலக்க இறை முகாமைத்துவ (பொறுப்பாண்மை) சட்டம், 2021ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க இறை முகாமைத்துவம் (பொறுப்பாண்மை) (திருத்தச்) சட்டத்தினால் திருத்தப்பட்டது.

2021 யூன் 23 - திறைசேரி உண்டியகளின் வரையறையை முன்னைய மட்டமான ரூ.2,000 பில்லியனிலிருந்து ரூ.3,000 பில்லியனுக்கு அதிகரிப்பதற்கான ஒரு தீர்மானம் பாராளுமன்றத்தால் ஒப்புதலளிக்கப்பட்டது (பாராளுமன்றத்தின் 80ஆம் இலக்க கட்டணப் பத்திரம்).

2021 யூலை 08 - இலங்கையில் கூட்டிணைக்கப்பட்ட கம்பனிகள் இலங்கைக்கு வெளியே வதியும் ஆட்களிடமிருந்து கடன்பட்ட வெளிநாட்டு நாணயத்தில் 50 சதவீதத்தினைப் பயன்படுத்தி நாட்டிற்கான பன்னாட்டு

முறியில் முதலீடு செய்வதற்கும் அத்தகைய கடன்பட்ட நிதியில் மீதி 50 சதவீதத்தினை இலங்கை அபிவிருத்தி முறிகளில் முதலீடு செய்வதற்கும் அனுமதிப்பதற்கு வழிமுறைகள் மேற்கொள்ளப்பட்டன.

2021 செத்தெம்பர் 22 - 2021 செத்தெம்பர் 22 திகதியன்று நடைபெற்ற திறைசேரி உண்டியல் ஏலத்திலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் திறைசேரி உண்டியல் ஏலங்களில் 364-நாள் முதிர்ச்சிக்கான உயர்ந்தபட்ச ஏற்றுக்கொள்ளல் விளைவு வீதத்தினை வெளியிடுவதனை நிறுத்துவதற்கு வழிமுறைகள் மேற்கொள்ளப்பட்டன.

2021 செத்தெம்பர் 23 - வெப்தளத்தினை அடிப்படையாகக் கொண்ட திறைசேரி முறி வழங்கல் முறைமையின் கட்டம் IIIஇனை நிறைவேற்றுவதற்கு கட்டம் Iஇல் குறைந்தபட்ச ஏற்றுக்கொள்ளலானது கட்டம் Iஇல் முன்வைக்கப்பட்ட தொகையிலிருந்து 80 சதவீதம் வரை அதிகரிக்கப்பட்டது. மேலும், திறைசேரி முறி வழங்கல் செய்முறையின் கட்டம் IIIஇனை நிறைவேற்றலானது திறைசேரி முறியின் முதிர்ச்சிகளுக்கு மட்டுப்படுத்தப்பட்டது; இதில் எஞ்சிய முதிர்ச்சி 5 ஆண்டுகள் அல்லது அதற்கும் குறைவானது.

# புள்ளிவிபரப் பின்னிணைப்பு

# புள்ளிவிபரப் பின்னிணைப்பு

## வரைவிலக்கணங்கள் மற்றும் விளக்கக் குறிப்புக்கள்

பின்வரும் பொதுவான குறிப்புக்கள் தனிப்பட்ட அட்டவணைகள் கீழ் காட்டப்பட்டுள்ள அடிக்குறிப்புக்களை பிரதிநிதித்துவப்படுத்துகின்றது.

1. மூலவளங்களைக் காலத்திற்கு ஏற்ற வகையில் கொண்டு வருவதற்கான முயற்சி, சில அட்டவணைகளில் தற்காலிகமான தரவுகள் உள்ளடக்கப்பட்டுள்ளன.
2. சில அட்டவணைகளில் உள்ள தரவுகள் அதனது அண்மைய இலக்கங்களிற்கு மட்டந்தட்டப்பட்டுள்ளன. இதனால் மொத்தத் தொகைக்கும் அதன் கூறுகளினது கூட்டுத்தொகைக்கும் இடையில் சிறிதளவு வேறுபாடு காணப்படக்கூடும்.
3. முன்னர் வெளியிடப்பட்ட தரவுகளுடன் ஒப்பிடும் போது ஏற்பட்ட வேறுபாடுகளிற்கு பின்னர் செய்யப்பட்ட திருத்தங்களே காரணமாகும்.
4. பின்வரும் குறியீடுகள் பயன்படுத்தப்பட்டுள்ளன:-

| | | |
|---|---|---|
| ... | = | புறக்கணிக்கக்கூடியது |
| - | = | இல்லை/ விபரம் கிடைக்கவில்லை/ தொகுக்கப்படவில்லை |
| வே.எ.கு | = | வேறு எங்கும் குறிப்பிடப்படாதவை |

## அட்டவணை 1

### கைத்தொழில் மூலங்களின்படி நடைமுறைச் சந்தை விலைகளில் மொத்த உள்நாட்டு உற்பத்தி (அ)

ரூ. மில்லியன்

| பொருளாதார நடவடிக்கை | 2018 (ஆ) | 2019 (ஆ)(இ) | 2020 (இ) | 2021 முதலரை (இ) | % மாற்றம் 2018/19 (ஆ)(இ) | 2019/20 (இ) | 2020/21 முதலரை (இ) |
|---|---|---|---|---|---|---|---|
| **வேளாண்மை, காடாக்கல் மற்றும் மீன்பிடி** | 1,146,672 | 1,132,065 | 1,251,921 | 659,919 | -1.3 | 10.6 | 18.5 |
| 1. தானியங்களின் வளர்ச்சி (அரிசி நீங்கலாக) | 19,551 | 19,616 | 37,501 | 26,325 | 0.3 | 91.2 | 74.7 |
| 2. அரிசியின் வளர்ச்சி | 140,057 | 136,071 | 168,512 | 66,296 | -2.8 | 23.8 | 18.2 |
| 3. காய்கறிகளின் வளர்ச்சி | 103,590 | 100,535 | 133,317 | 71,821 | -2.9 | 32.6 | 8.9 |
| 4. கரும்பு, புகையிலை மற்றும் ஏனைய குறுங்காலப் பயிர்களின் வளர்ச்சி | 3,378 | 3,473 | 4,567 | 2,421 | 2.8 | 31.5 | 2.2 |
| 5. பழவகைகளின் வளர்ச்சி | 98,811 | 109,541 | 116,135 | 63,360 | 10.9 | 6.0 | 12.4 |
| 6. எண்ணெய் பசையுள்ள பழவகைகளின் வளர்ச்சி (தேங்காய், இளநீர், எண்ணெய் தாவரம்) | 110,736 | 81,481 | 109,612 | 77,034 | -26.4 | 34.5 | 61.7 |
| 7. தேயிலையின் வளர்ச்சி (பச்சை இலைகள்) | 109,175 | 99,341 | 108,544 | 62,262 | -9.0 | 9.3 | 22.5 |
| 8. ஏனைய குடிபானப் பயிர்களின் வளர்ச்சி (கோப்பி, கொக்கோ போன்றவை) | 3,285 | 2,121 | 3,864 | 2,617 | -35.4 | 82.2 | 50.2 |
| 9. வாசனைத்திரவியம், நறுமணப்பயிர்கள், மருந்து மற்றும் மருந்துற்பத்திப் பயிர்களின் வளர்ச்சி | 87,443 | 84,718 | 94,892 | 58,572 | -3.1 | 12.0 | 23.9 |
| 10. இறப்பரின் வளர்ச்சி | 23,134 | 15,772 | 17,422 | 15,174 | -31.8 | 10.5 | 88.9 |
| 11. ஏனைய நீண்ட காலப் பயிர்களின் வளர்ச்சி | 24,323 | 27,556 | 32,545 | 14,921 | 13.3 | 18.1 | 5.8 |
| 12. விலங்கு உற்பத்தி | 123,174 | 134,295 | 139,961 | 73,640 | 9.0 | 4.2 | 25.5 |
| 13. தாவர இனவிருத்தி மற்றும் வேளாண்மைக்கான உதவி நடவடிக்கைகள் | 13,963 | 13,356 | 13,178 | 7,093 | -4.3 | -1.3 | 9.2 |
| 14. காடாக்கலும் குத்திகளும் | 106,736 | 107,202 | 105,760 | 38,979 | 0.4 | -1.3 | -8.4 |
| 15. கடல் மீன்பிடி மற்றும் கடல் நீரியல் மூலவளங்கள் | 152,549 | 169,976 | 135,409 | 64,955 | 11.4 | -20.3 | -7.5 |
| 16. நன்னீர் மீன்பிடி மற்றும் நன்னீரியல் மூலவளங்கள் | 26,766 | 27,013 | 30,702 | 14,449 | 0.9 | 13.7 | 6.2 |
| **கைத்தொழில்கள்** | 3,752,368 | 4,114,102 | 3,930,042 | 2,197,372 | 9.6 | -4.5 | 21.0 |
| 17. சுரங்கமகழ்தலும் கல்லுடைத்தலும் | 350,649 | 374,931 | 329,334 | 172,507 | 6.9 | -12.2 | 15.9 |
| 18. உணவு, குடிபானங்கள் மற்றும் புகையிலை உற்பத்திகளின் தயாரிப்பு | 898,826 | 897,829 | 945,658 | 524,826 | -0.1 | 5.3 | 11.6 |
| 19. புடவைகள், அணியும் ஆடை மற்றும் தோல் உற்பத்திகளின் தயாரிப்பு | 656,612 | 727,383 | 686,347 | 441,301 | 10.8 | -5.6 | 41.1 |
| 20. தளபாடம் தவிர்ந்த மர மற்றும் தக்கை உற்பத்திகளின் தயாரிப்பு | 28,381 | 27,699 | 25,794 | 13,479 | -2.4 | -6.9 | 17.8 |
| 21. தாள் உற்பத்திகளின் தயாரிப்பு, அச்சிடல் மற்றும் ஊடக உற்பத்திகளின் மீள் உற்பத்தி | 53,117 | 63,176 | 58,876 | 35,884 | 18.9 | -6.8 | 21.1 |
| 22. நிலக்கரி மற்றும் சுத்திகரிக்கப்பட்ட பெற்றோலிய உற்பத்திகளின் தயாரிப்பு | 45,277 | 83,917 | 63,060 | 40,740 | 85.3 | -24.9 | 14.8 |
| 23. இரசாயன உற்பத்திகள் மற்றும் அடிப்படை மருந்துற்பத்திகளின் தயாரிப்பு | 74,163 | 115,077 | 114,430 | 64,441 | 55.2 | -0.6 | 19.8 |
| 24. இறப்பர் மற்றும் பிளாத்திக்கு உற்பத்திகளின் தயாரிப்பு | 91,498 | 101,898 | 95,989 | 56,499 | 11.4 | -5.8 | 65.6 |
| 25. ஏனைய உலோகமல்லாத கனிப்பொருள் உற்பத்திகளின் தயாரிப்பு | 128,271 | 166,363 | 155,581 | 92,149 | 29.7 | -6.5 | 29.5 |
| 26. அடிப்படை உலோகங்கள் மற்றும் உருவமைக்கப்பட்ட உலோக உற்பத்திகளின் தயாரிப்பு | 58,770 | 68,917 | 66,775 | 40,910 | 17.3 | -3.1 | 38.7 |
| 27. பொறிகள் மற்றும் கருவிகளின் தயாரிப்பு | 61,387 | 73,356 | 78,934 | 38,889 | 19.5 | 7.6 | 29.1 |
| 28. தளபாடத் தயாரிப்பு | 52,007 | 65,298 | 64,850 | 42,245 | 25.6 | -0.7 | 31.9 |
| 29. ஏனைய தயாரிப்புக்கள் மற்றும் பொறிகள் மற்றும் கருவிகளின் பழுது பார்த்தலும் நிறுவுதலும் | 56,969 | 65,924 | 70,080 | 44,769 | 15.7 | 6.3 | 40.5 |
| 30. மின்வலு, வாயு, நீராவி மற்றும் குளிரூட்டல் வழங்கல் | 106,774 | 118,653 | 116,710 | 57,691 | 11.1 | -1.6 | 3.4 |
| 31. நீர் சேகரிப்பு, சுத்திகரிப்பு மற்றும் வழங்கல் | 19,078 | 19,675 | 19,288 | 9,042 | 3.1 | -2.0 | -5.1 |
| 32. சாக்கடை, கழிவு, சுத்திகரிப்பு மற்றும் அகற்றல் நடவடிக்கைகள் | 20,163 | 22,346 | 22,566 | 10,839 | 10.8 | 1.0 | -3.2 |
| 33. கட்டடவாக்கம் | 1,050,428 | 1,121,659 | 1,015,772 | 511,161 | 6.8 | -9.4 | 14.1 |
| **பணிகள்** | 8,191,090 | 8,723,236 | 8,933,737 | 4,495,145 | 6.5 | 2.4 | 9.1 |
| 34. மொத்த விற்பனை மற்றும் சில்லறை வர்த்தகம் | 1,533,760 | 1,647,971 | 1,747,637 | 955,834 | 7.4 | 6.0 | 5.2 |
| 35. களஞ்சியப்படுத்தல் உள்ளடங்கலாக பொருட்கள் மற்றும் பயணிகளின் போக்குவரத்து | 1,632,761 | 1,715,466 | 1,616,861 | 681,892 | 5.1 | -5.7 | 8.5 |
| 36. அஞ்சல் மற்றும் கூரியர் பணி நடவடிக்கைகள் | 5,162 | 5,589 | 5,761 | 3,024 | 8.3 | 3.1 | 4.8 |
| 37. தங்குமிடம், உணவு மற்றும் குடிபான பணி நடவடிக்கைகள் | 228,259 | 227,231 | 143,839 | 71,981 | -0.5 | -36.7 | -10.1 |
| 38. நிகழ்ச்சிப்படுத்தல் மற்றும் ஒலிபரப்பு நடவடிக்கைகளும் ஒலி ஒளி உற்பத்திகளும் | 4,062 | 4,099 | 4,036 | 2,121 | 0.9 | -1.5 | 4.6 |
| 39. தொலைத்தொடர்பூட்டல் | 76,271 | 89,158 | 98,885 | 56,885 | 16.9 | 10.9 | 17.9 |
| 40. தகவல் தொழில்நுட்ப நிகழ்ச்சிப்படுத்தல் ஆலோசனை மற்றும் அதனுடன் தொடர்பான நடவடிக்கைகள் | 22,216 | 26,215 | 30,147 | 17,692 | 18.0 | 15.0 | 24.9 |
| 41. நிதியியல் பணி நடவடிக்கைகளும் துணை நிதியியல் பணிகளும் | 575,756 | 622,398 | 721,891 | 458,577 | 8.1 | 16.0 | 41.0 |
| 42. காப்புறுதி, மீள்காப்புறுதி மற்றும் ஓய்வூதிய நிதியங்கள் | 141,637 | 166,314 | 206,288 | 101,540 | 17.4 | 24.0 | 1.3 |
| 43. குடியிருப்புக்களின் உடமை உள்ளடங்கலாக உண்மைச் சொத்து நடவடிக்கைகள் | 834,398 | 891,455 | 920,882 | 468,290 | 6.8 | 3.3 | 8.7 |
| 44. தொழில்சார் பணிகள் | 244,015 | 260,735 | 265,223 | 133,038 | 6.9 | 1.7 | 7.3 |
| 45. பொது நிர்வாகம் மற்றும் பாதுகாப்பு; கட்டாய சமூகப் பாதுகாப்பு | 920,922 | 897,143 | 945,576 | 462,697 | -2.6 | 5.4 | 6.6 |
| 46. கல்வி | 281,628 | 336,126 | 371,356 | 182,900 | 19.4 | 10.5 | 10.4 |
| 47. மனித சுகாதார நடவடிக்கைகள், வதிவோர் மீதான அக்கறை மற்றும் சமூக தொழில் நடவடிக்கைகள் | 306,853 | 358,947 | 413,482 | 214,468 | 17.0 | 15.2 | 6.9 |
| 48. ஏனைய தனியாள் பணி நடவடிக்கைகள் | 1,383,391 | 1,474,390 | 1,441,873 | 684,208 | 6.6 | -2.2 | 4.4 |
| **அடிப்படை விலையில் மொத்தப் பெறுமதி கூட்டப்பட்டவைக்குச் சமமானவை** | 13,090,131 | 13,969,403 | 14,115,701 | 7,352,437 | 6.7 | 1.0 | 13.2 |
| (+) உற்பத்திகள் மீதான மானியங்களை கழித்த வரிகள் | 1,200,776 | 1,043,551 | 857,294 | 447,822 | -13.1 | -17.8 | 24.7 |
| **சந்தை விலையில் மொத்த உள்நாட்டு உற்பத்திற்குச் சமமானவை** | 14,290,907 | 15,012,953 | 14,972,995 | 7,800,259 | 5.1 | -0.3 | 13.8 |

(அ) தரவுகள் 2010 அடியாண்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் மதிப்பீடுகளை அடிப்படையாகக் கொண்டவை

(ஆ) திருத்தப்பட்டது

(இ) தற்காலிகமானது

*மூலம்:* தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்

## அட்டவணை 2

### கைத்தொழில் மூலங்களின்படி நிலையான விலைகளில் (2010) மொத்த உள்நாட்டு உற்பத்தி (அ)

ரூ. மில்லியன்

| பொருளாதார நடவடிக்கை | 2018 (ஆ) | 2019 (ஆ)(இ) | 2020 (இ) | 2021 முதலரை (இ) | % மாற்றம் 2018/19 (ஆ)(இ) | % மாற்றம் 2019/20 (இ) | % மாற்றம் 2020/21 முதலரை (இ) |
|---|---|---|---|---|---|---|---|
| **வேளாண்மை, காடாக்கல் மற்றும் மீன்பிடி** | **679,702** | **686,412** | **669,802** | **327,846** | **1.0** | **-2.4** | **7.1** |
| 1. தானியங்களின் வளர்ச்சி (அரிசி நீங்கலாக) | 11,829 | 10,582 | 14,957 | 8,316 | -10.5 | 41.3 | 21.0 |
| 2. அரிசியின் வளர்ச்சி | 70,380 | 74,169 | 78,417 | 26,371 | 5.4 | 5.7 | -5.6 |
| 3. காய்கறிகளின் வளர்ச்சி | 55,230 | 53,248 | 58,606 | 29,248 | -3.6 | 10.1 | 4.2 |
| 4. கரும்பு, புகையிலை மற்றும் ஏனைய குறுங்காலப் பயிர்களின் வளர்ச்சி | 1,820 | 2,000 | 2,339 | 1,259 | 9.9 | 17.0 | 2.8 |
| 5. பழவகைகளின் வளர்ச்சி | 55,654 | 60,399 | 64,156 | 32,304 | 8.5 | 6.2 | 6.7 |
| 6. எண்ணெய் பசையுள்ள பழவகைகளின் வளர்ச்சி (தேங்காய், இளநீர், எண்ணெய் தாவரம்) | 57,577 | 67,742 | 60,804 | 32,461 | 17.7 | -10.2 | 10.2 |
| 7. தேயிலையின் வளர்ச்சி (பச்சை இலைகள்) | 67,170 | 66,329 | 61,621 | 35,610 | -1.3 | -7.1 | 23.5 |
| 8. ஏனைய குடிபானப் பயிர்களின் வளர்ச்சி (கோப்பி, கொக்கோ போன்றவை) | 1,592 | 1,181 | 1,437 | 708 | -25.8 | 21.6 | -1.5 |
| 9. வாசனைத்திரவியம், நறுமணப் பயிர்கள், மருந்து மற்றும் மருந்துற்பத்திப் பயிர்களின் வளர்ச்சி | 66,914 | 66,223 | 68,437 | 35,188 | -1.0 | 3.3 | 4.8 |
| 10. இறப்பரின் வளர்ச்சி | 25,158 | 22,779 | 23,831 | 13,257 | -9.5 | 4.6 | 15.8 |
| 11. ஏனைய நீண்ட காலப் பயிர்களின் வளர்ச்சி | 16,303 | 16,380 | 16,681 | 8,009 | 0.5 | 1.8 | -1.6 |
| 12. விலங்கு உற்பத்தி | 63,418 | 64,744 | 61,566 | 30,602 | 2.1 | -4.9 | 11.1 |
| 13. தாவர இனவிருத்தி மற்றும் வேளாண்மைக்கான உதவி நடவடிக்கைகள் | 9,258 | 8,404 | 8,363 | 4,602 | -9.2 | -0.5 | 11.6 |
| 14. காடாக்கலும் குத்திகளும் | 58,920 | 58,846 | 54,066 | 23,489 | -0.1 | -8.1 | 4.9 |
| 15. கடல் மீன்பிடி மற்றும் கடல் நீரியல் மூலவளங்கள் | 102,175 | 96,589 | 75,593 | 37,611 | -5.5 | -21.7 | -0.9 |
| 16. நன்னீர் மீன்பிடி மற்றும் நன்னீரியல் மூலவளங்கள் | 16,304 | 16,797 | 18,930 | 8,810 | 3.0 | 12.7 | 16.1 |
| **கைத்தொழில்கள்** | **2,541,186** | **2,608,211** | **2,427,844** | **1,262,468** | **2.6** | **-6.9** | **12.1** |
| 17. சுரங்கமகழ்தலும் கல்லுடைத்தலும் | 225,505 | 231,893 | 202,873 | 99,995 | 2.8 | -12.5 | 9.9 |
| 18. உணவு, குடிபானங்கள் மற்றும் புகையிலை உற்பத்திகளின் தயாரிப்பு | 559,356 | 574,888 | 599,902 | 307,491 | 2.8 | 4.4 | 5.7 |
| 19. புடவைகள், அணியும் ஆடை மற்றும் தோல் உற்பத்திகளின் தயாரிப்பு | 324,565 | 326,803 | 287,844 | 165,915 | 0.7 | -11.9 | 22.0 |
| 20. தளபாடம் தவிர்ந்த மர மற்றும் தக்கை உற்பத்திகளின் தயாரிப்பு | 34,233 | 31,178 | 28,725 | 14,820 | -8.9 | -7.9 | 15.3 |
| 21. தாள் உற்பத்திகளின் தயாரிப்பு, அச்சிடல் மற்றும் ஊடக உற்பத்திகளின் மீள் உற்பத்தி | 32,884 | 30,803 | 30,094 | 17,989 | -6.3 | -2.3 | 17.0 |
| 22. நிலக்கரி மற்றும் சுத்திகரிக்கப்பட்ட பெற்றோலிய உற்பத்திகளின் தயாரிப்பு | 27,312 | 33,694 | 30,026 | 10,988 | 23.4 | -10.9 | -29.0 |
| 23. இரசாயன உற்பத்திகள் மற்றும் அடிப்படை மருந்துற்பத்திகளின் தயாரிப்பு | 97,851 | 100,511 | 101,312 | 53,848 | 2.7 | 0.8 | 16.3 |
| 24. இறப்பர் மற்றும் பிளாத்திக்கு உற்பத்திகளின் தயாரிப்பு | 85,933 | 83,009 | 68,334 | 35,424 | -3.4 | -17.7 | 44.3 |
| 25. ஏனைய உலோகமல்லாத கனிப்பொருள் உற்பத்திகளின் தயாரிப்பு | 81,764 | 85,341 | 81,844 | 46,312 | 4.4 | -4.1 | 26.6 |
| 26. அடிப்படை உலோகங்கள் மற்றும் உருவமைக்கப்பட்ட உலோக உற்பத்திகளின் தயாரிப்பு | 48,491 | 46,328 | 45,017 | 25,245 | -4.5 | -2.8 | 19.2 |
| 27. பொறிகள் மற்றும் கருவிகளின் தயாரிப்பு | 51,697 | 52,578 | 51,285 | 24,441 | 1.7 | -2.5 | 20.0 |
| 28. தளபாடத் தயாரிப்பு | 92,997 | 100,797 | 87,299 | 55,957 | 8.4 | -13.4 | 24.9 |
| 29. ஏனைய தயாரிப்புக்கள் மற்றும் பொறிகள் மற்றும் கருவிகளின் பழுதுபார்த்தலும் நிறுவுதலும் | 76,589 | 75,040 | 69,623 | 35,289 | -2.0 | -7.2 | 11.2 |
| 30. மின்வலு, வாயு, நீராவி மற்றும் குளிரூட்டல் வழங்கல் | 100,382 | 104,437 | 102,758 | 53,719 | 4.0 | -1.6 | 7.5 |
| 31. நீர் சேகரிப்பு, சுத்திகரிப்பு மற்றும் வழங்கல் | 14,351 | 15,139 | 15,866 | 8,132 | 5.5 | 4.8 | 3.4 |
| 32. சாக்கடை, கழிவு, சுத்திகரிப்பு மற்றும் அகற்றல் நடவடிக்கைகள் | 30,207 | 32,403 | 32,078 | 15,225 | 7.3 | -1.0 | -5.7 |
| 33. கட்டடவாக்கம் | 657,070 | 683,371 | 592,963 | 291,677 | 4.0 | -13.2 | 9.9 |
| **பணிகள்** | **5,555,325** | **5,678,485** | **5,595,469** | **2,715,766** | **2.2** | **-1.5** | **5.1** |
| 34. மொத்த விற்பனை மற்றும் சில்லறை வர்த்தகம் | 1,040,360 | 1,071,847 | 1,086,937 | 580,605 | 3.0 | 1.4 | 2.3 |
| 35. களஞ்சியப்படுத்தல் உள்ளடங்கலாக பொருட்கள் மற்றும் பயணிகளின் போக்குவரத்து | 1,034,755 | 1,048,825 | 978,455 | 397,172 | 1.4 | -6.7 | 8.1 |
| 36. அஞ்சல் மற்றும் கூரியர் பணி நடவடிக்கைகள் | 4,485 | 4,752 | 4,975 | 2,422 | 5.9 | 4.7 | 4.0 |
| 37. தங்குமிடம், உணவு மற்றும் குடிபான பணி நடவடிக்கைகள் | 154,794 | 147,671 | 89,452 | 43,438 | -4.6 | -39.4 | -13.4 |
| 38. நிகழ்ச்சிப்படுத்தல் மற்றும் ஒலிபரப்பு நடவடிக்கைகளும் ஒலி ஒளி உற்பத்திகளும் | 2,519 | 2,639 | 2,702 | 1,384 | 4.8 | 2.4 | 3.5 |
| 39. தொலைத்தொடர்பூட்டல் | 45,830 | 53,695 | 61,990 | 36,788 | 17.2 | 15.4 | 19.3 |
| 40. தகவல் தொழில்நுட்ப நிகழ்ச்சிப்படுத்தல் ஆலோசனை மற்றும் அதனுடன் தொடர்பான நடவடிக்கைகள் | 15,072 | 17,044 | 18,752 | 10,659 | 13.1 | 10.0 | 19.9 |
| 41. நிதியியல் பணி நடவடிக்கைகளும் துணை நிதியியல் பணிகளும் | 687,918 | 701,891 | 778,258 | 431,359 | 2.0 | 10.9 | 13.8 |
| 42. காப்புறுதி, மீள்காப்புறுதி மற்றும் ஓய்வூதிய நிதியங்கள் | 112,515 | 117,446 | 118,134 | 45,016 | 4.4 | 0.6 | 12.9 |
| 43. குடியிருப்புக்களின் உடைமை உள்ளடங்கலாக உண்மைச் சொத்து நடவடிக்கைகள் | 566,078 | 579,601 | 572,799 | 282,797 | 2.4 | -1.2 | 4.6 |
| 44. தொழில்சார் பணிகள் | 165,550 | 169,523 | 164,949 | 80,286 | 2.4 | -2.7 | 3.2 |
| 45. பொது நிர்வாகம் மற்றும் பாதுகாப்பு; கட்டாய சமூகப் பாதுகாப்பு | 428,022 | 437,065 | 443,960 | 205,119 | 2.1 | 1.6 | 1.2 |
| 46. கல்வி | 179,524 | 185,116 | 186,712 | 92,262 | 3.1 | 0.9 | 0.9 |
| 47. மனித சுகாதார நடவடிக்கைகள், வதிவோர் மீதான அக்கறை மற்றும் சமூக தொழில் நடவடிக்கைகள் | 179,356 | 182,777 | 190,706 | 88,404 | 1.9 | 4.3 | 3.6 |
| 48. ஏனைய தனியாள் பணி நடவடிக்கைகள் | 938,547 | 958,592 | 896,688 | 418,056 | 2.1 | -6.5 | 2.2 |
| **அடிப்படை விலையில் மொத்தப் பெறுமதி கூட்டப்பட்டவைக்குச் சமமானவை** | **8,776,212** | **8,973,108** | **8,693,114** | **4,306,080** | **2.2** | **-3.1** | **7.2** |
| (+) உற்பத்திகள் மீதான மானியங்களை கழித்த வரிகள் | 889,166 | 910,242 | 837,491 | 257,894 | 2.4 | -8.0 | 22.0 |
| **சந்தை விலையில் மொத்த உள்நாட்டு உற்பத்திக்குச் சமமானவை** | **9,665,379** | **9,883,350** | **9,530,606** | **4,563,974** | **2.3** | **-3.6** | **8.0** |

(அ) தரவுகள் 2010 அடியாண்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் மதிப்பீடுகளை அடிப்படையாகக் கொண்டவை
(ஆ) திருத்தப்பட்டது
(இ) தற்காலிகமானது

*மூலம்:* தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்

## அட்டவணை 3
### முக்கிய வேளாண்மைப் பயிர்களின் போக்குகள்

| வகை | அலகு | 2017 | 2018 | 2019 (அ) | 2020 (ஆ) | முதலரை 2020 (ஆ) | முதலரை 2021 (ஆ) |
|---|---|---|---|---|---|---|---|
| 1. தேயிலை | | | | | | | |
| 1.1 உற்பத்தி | கி.கி.மில் | 307 | 304 | 300 | 279 | 130 | 162 |
| 1.2 நிலப்பரப்பு (இ) | எக்டேயார்கள்'000 | 201 | 200 | 200 | 200 | 200 | - |
| 1.3 சராசரி விலை | | | | | | | |
| கொழும்பு ஏலம் | ரூ./கி.கி | 620.44 | 581.58 | 546.67 | 633.85 | 635.03 | 629.70 |
| ஏற்றுமதி (க.ஏ.க) | ரூ./கி.கி | 807.44 | 820.75 | 822.25 | 866.70 | 854.92 | 933.18 |
| 2. இறப்பர் | | | | | | | |
| 2.1 உற்பத்தி | கி.கி.மில் | 83 | 83 | 75 | 78 | 38 | 44 |
| 2.2 நிலப்பரப்பு | எக்டேயார்கள்'000 | 137 | 137 | 138 | 138 | 138 | - |
| 2.3 சராசரி விலை | | | | | | | |
| கொழும்பு ஏலம் (RSS 1) | ரூ./கி.கி | 336.72 | 281.36 | 288.51 | 351.46 | 309.24 | 446.31 |
| ஏற்றுமதி (க.ஏ.க) | ரூ./கி.கி | 343.56 | 363.93 | 332.29 | 353.84 | 360.68 | 495.09 |
| 3. தெங்கு | | | | | | | |
| 3.1 உற்பத்தி | மில்.காய் | 2,450 | 2,623 | 3,086 | 2,792 | 1,350 | 1,491 |
| 3.2 நிலப்பரப்பு | எக்டேயார்கள் '000 | 452 | 499 | 503 | 506 | 504 | 504 |
| 3.3 சராசரி ஏற்றுமதி விலை (க.ஏ.க) (ஈ) | ரூ./காய் | 62.03 | 68.29 | 37.47 | 52.61 | 47.67 | 65.86 |
| 4. நெல் (உ) | | | | | | | |
| 4.1 உற்பத்தி | மெ.தொன் '000 | 2,383 | 3,930 | 4,592 | 5,121 | 3,197 | 3,061 |
| பெரும்போகம் | மெ.தொன் '000 | 1,474 | 2,397 | 3,073 | 3,197 | 3,197 | 3,061 |
| சிறுபோகம் | மெ.தொன் '000 | 909 | 1,533 | 1,519 | 1,924 | - | - |
| 4.2 பரப்பு | | | | | | | |
| விதைக்கப்பட்டது | எக்டேயார்கள் '000 | 792 | 1,041 | 1,117 | 1,208 | 752 | 770 |
| அறுவடை செய்யப்பட்டது | எக்டேயார்கள் '000 | 555 | 885 | 958 | 1,066 | 663 | 682 |
| 4.3 வளமாக்கி வழங்கல்கள் (ஊ) | மெ.தொன் '000 | - | 111 | 299 | 353 | 193 | 251 |
| 4.4 எக்டேயரொன்றிற்கான விளைச்சல் (எ) | கி.கி/எக்டேயார் | 4,297 | 4,443 | 4,795 | 4,802 | 4,821 | 4,492 |

(க.ஏ.க. - கப்பல் ஏற்றுமதி கட்டணம்)
(அ) திருத்தப்பட்டது
(ஆ) தற்காலிகமானது
(இ) பெருந்தோட்ட அமைச்சினால் வெளியிடப்பட்ட பெருந்தோட்டப் பயிர்களின் புள்ளிவிபர தகவல்களின் அடிப்படையில் திருத்தப்பட்டது
(ஈ) மூன்று முக்கிய தெங்கு உள்ளீட்டு உற்பத்திகள் மட்டும்
(உ) பயிர்ச்செய்கையாண்டு அடிப்படையில் (பெரும்போகமானது ஆண்டின் முதல் அரைப்பகுதியில் இடம்பெறுகின்றது)
(ஊ) 2016 சிறுபோகத்திலிருந்து முன்னைய நேரடி வளமாக்கி உதவுதொகைத் திட்டத்திற்குப் பதிலாக நேரடிக் காசுக்கொடையொன்று வழங்கப்பட்டது. இதன்படி 2017இற்கான பகிர்ந்தளிக்கப்பட்ட தொகை ரூ.10,304 மில்லியன் ஆகும். மேலும், 2017/2018 பெரும்போகத்திற்காக ரூ.8,002 மில்லியன் பகிர்ந்தளிக்கப்பட்டது. 2018இன் சிறுபோகத்திலிருந்து இந்நேரடி வளமாக்கி உதவுதொகைத் திட்டம் நிறுத்தப்பட்டதுடன் 2018இன் வளமாக்கி வழங்கல்கள் தரவானது 2018இன் சிறுபோகத்திற்கு மட்டமானதாகும்.
(எ) எக்டேயரொன்றிற்கான விளைச்சலானது உற்பத்தியை தேறிய நிலப்பரப்பால் பிரிப்பதன் மூலம் கணிப்பிடப்பட்டது.

*மூலங்கள்:* இலங்கை தேயிலைச் சபை
இறப்பர் அபிவிருத்தித் திணைக்களம்
தெங்கு பயிர்ச்செய்கை சபை
தெங்கு அபிவிருத்தி அதிகார சபை
பெருந்தோட்ட அமைச்சு
தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்
தேசிய வளமாக்கிச் செயலகம்
இலங்கைச் சுங்கம்
இலங்கை மத்திய வங்கி

## அட்டவணை 4

### துறை ரீதியாக முதலீட்டுச் சபை நிறுவனங்களின் வெளிநாட்டு நேரடி முதலீடு (அ)

ஐ.அ.டொ. மில்லியன்

| துறை | 2017 | 2018 | 2019 | 2020 (ஆ) | முதலரை | |
|---|---|---|---|---|---|---|
| | | | | | 2020 (ஆ) | 2021 (ஆ) |
| **தயாரிப்பு** | | | | | | |
| உணவு, குடிபானங்கள் மற்றும் புகையிலை உற்பத்திகள் | 62.6 | 22.3 | 26.1 | 6.6 | 3.4 | 5.3 |
| புடவைகள், அணியும் ஆடை மற்றும் தோல் உற்பத்திகள் | 78.2 | 90.6 | 104.9 | 78.1 | 42.1 | 49.1 |
| மரம் மற்றும் மர உற்பத்திகள் | 2.3 | 4.9 | 7.2 | 9.0 | 6.9 | 8.2 |
| தாள், தாள் உற்பத்திகள், அச்சுப்பதிப்பு மற்றும் வெளியிடுதல் | 7.9 | 9.0 | 1.3 | 1.2 | 0.7 | 0.6 |
| இரசாயனம், பெற்றோலியம், நிலக்கரி, இறப்பர் மற்றும் பிளாத்திக்கு உற்பத்திகள் | 105.0 | 97.3 | 108.4 | 61.2 | 32.1 | 24.8 |
| உலோகமல்லாக் கனிப்பொருள் உற்பத்திகள் | 28.1 | 21.0 | 7.5 | 2.6 | 0.5 | 2.6 |
| உருவமைக்கப்பட்ட உலோகம், பொறி மற்றும் போக்குவரத்து இயந்திரங்கள் | 9.0 | 7.8 | 9.5 | 3.4 | 1.7 | 2.3 |
| வேறெங்கும் குறிப்பிடப்படாத தயாரிக்கப்பட்ட உற்பத்திகள் | 54.5 | 38.6 | 54.6 | 29.7 | 20.7 | 9.7 |
| **வேளாண்மை** | 1.4 | 0.5 | 1.3 | 0.8 | 0.5 | 0.1 |
| **பணிகள்** | | | | | | |
| விடுதிகள் மற்றும் உணவகங்கள் | 252.6 | 223.4 | 153.9 | 66.0 | 36.7 | 40.8 |
| தகவல் தொழில்நுட்பம் மற்றும் வெளிமூலங்களிலிருந்தான வியாபாரச் செயன்முறைகள் | 25.0 | 58.7 | 40.0 | 26.4 | 16.3 | 15.9 |
| ஏனைய பணிகள் | 40.1 | 19.2 | 30.3 | 18.6 | 3.5 | 3.2 |
| **உட்கட்டமைப்பு** | | | | | | |
| வீடமைப்பு, சொத்து அபிவிருத்தி மற்றும் கடை அலுவலகம் | 540.6 | 397.8 | 455.3 | 256.1 | 135.4 | 108.5 |
| தொலைபேசி மற்றும் தொலைத்தொடர்பூட்டல் வலையமைப்பு | 209.0 | 522.2 | 138.1 | 117.6 | 44.3 | 114.5 |
| வலு உருவாக்கம், எரிபொருள், வாயு, பெற்றோலிய மற்றும் ஏனையவை | 1.1 | 3.7 | 3.1 | 1.5 | 0.9 | 0.4 |
| துறைமுக கொள்கலன் முனைக்கோடிகள் | 292.8 | 850.0 | 47.2 | 8.2 | 5.4 | 3.1 |
| **மொத்தம்** | 1,710.3 | 2,366.9 | 1,188.7 | 687.0 | 351.2 | 389.0 |

(அ) முதலீட்டுச் சபையுடன் பதியப்படாததும் கொழும்பு பங்குப் பரிவர்த்தனையில் பட்டியலிடப்பட்ட கம்பனிகளின் நேரடி முதலீடுகள் மற்றும் முதலீட்டுச்சபை கம்பனிகள் அல்லாதவற்றிற்கான உட்பாய்ச்சல்கள் நீங்கலாக கடன்களை உள்ளடக்குகின்றது

(ஆ) தற்காலிகமானது

*மூலம்:* இலங்கை முதலீட்டுச் சபை

## அட்டவணை 5

### பொருளாதார உட்கட்டமைப்பில் ஏற்பட்ட அபிவிருத்திகள்

| துறை | 2017 | 2018 | 2019 (அ) | 2020 (ஆ) | 2020 (ஆ) காலத்திற்கானது | 2021 (ஆ) காலத்திற்கானது |
|---|---|---|---|---|---|---|
| 1. மின்சாரம் | | | | | சன-ஒக | சன-ஒக |
| நிறுவப்பட்ட இயளலவு (மெ.வா. - காலமுடிவில்) | 4,138 (அ) | 4,046 (அ) | 4,217 | 4,263 | 4,275 | 4,124 |
| மொத்த வலு உருவாக்கம் (ஜி.வா.ம) (இ) | 14,671 | 15,286 (அ) | 15,922 | 15,714 | 10,406 | 10,946 |
| மொத்த வலு உருவாக்கத்தில் நீர் மின்வலுவின் பங்கு(%) (ஈ) | 21 | 34 | 24 | 25 | 22 | 29 |
| 2. போக்குவரத்து | | | | | சன-யூன் | சன-யூன் |
| 2.1 இலங்கை போக்குவரத்துச் சபை | | | | | | |
| தொழிற்பட்ட கிலோ மீற்றர்கள் (மில்.) | 448 | 446 | 431 | 309 | 137 | 136 |
| பயணிகள் கிலோ மீற்றர்கள் (மில்.) | 15,810 | 15,541 | 12,012 | 9,725 | 4,324 | 4,345 |
| தொழிற்பட்ட பேரூந்துக்களின் சராசரி எண்ணிக்கை | 5,266 | 5,227 | 5,079 | 4,045 | 3,618 | 3,591 |
| மொத்த வருமானம் (ரூ.மில்.) | 42,163 | 44,103 | 43,490 | 31,233 | 15,006 | 13,080 |
| தொழிற்பாட்டுச் செலவுகள் (ரூ.மில்.) | 40,081 | 41,935 | 41,934 | 33,565 | 15,165 | 15,615 |
| தொழிற்பாட்டு இலாபம்/ (நட்டம்) (ரூ.மில்.) | 2,081 | 2,168 | 1,556 | - 2,331 | - 158 | - 2,534 |
| 2.2 இலங்கை புகையிரதம் | | | | | | |
| தொழிற்பட்ட கிலோ மீற்றர்கள் ('000) | 11,679 | 11,640 | 11,700 | 7,990 | 3,740 | 2,430 |
| பயணிகள் கிலோ மீற்றர்கள் (மில்.) | 7,495 | 7,710 | 7,310 | 3,906 | 1,980 | 1,211 |
| சரக்குத் தொன் கிலோ மீற்றர்கள் (மில்.) | 145 | 120 | 116 | 114 | 42 | 57 |
| மொத்த வருமானம் (ரூ.மில்.) | 6,477 | 7,413 | 7,901 | 4,567 | 2,230 | 1,607 |
| தொழிற்பாட்டுச் செலவுகள் (ரூ.மில்.) | 14,081 | 14,381 | 15,464 | 14,618 | 6,728 | 7,797 |
| தொழிற்பாட்டு இலாபம்/ (நட்டம்) (ரூ.மில்.) | - 7,604 | - 6,968 | - 7,562 | - 10,051 | - 4,498 | - 6,189 |
| 2.3 உந்து ஊர்திகளின் புதிய பதிவுகள் | | | | | சன-செத் | சன-செத் |
| பேருந்துகள் | 3,331 | 2,957 | 1,613 | 578 | 507 | 237 |
| உந்து ஊர்திகள் | 39,182 | 80,776 | 38,232 | 21,021 | 20,048 | 2,905 |
| முச்சக்கர வண்டிகள் | 23,537 | 20,063 | 15,490 | 7,150 | 7,040 | 2,080 |
| இரட்டை நோக்கங்களுக்கான ஊர்திகள் | 16,742 | 16,931 | 13,459 | 9,532 | 9,092 | 594 |
| உந்து ஈருருளிகள் | 344,380 | 339,763 | 284,301 | 151,634 | 144,399 | 6,031 |
| சரக்கு கொண்டு செல்வதற்கான ஊர்திகள் | 11,432 | 9,371 | 5,223 | 3,941 | 3,102 | 3,241 |
| நில ஊர்திகள் | 13,049 | 10,282 | 7,666 | 8,302 | 5,790 | 10,415 |
| நான்கு சில்லு வண்டி மற்றும் மோட்டார் மனை | - | 656 | 1,319 | 470 | 464 | 2 |
| மொத்த பதிவு செய்யப்பட்ட வாகனங்கள் | 451,653 | 480,799 | 367,303 | 202,628 | 190,442 | 25,505 |
| 3. துறைமுகப் பணிகள் | | | | | சன-செத் | சன-செத் |
| இலங்கைத் துறைமுகத்திற்கு வருகை தந்த கப்பல்கள் (உ) | 4,879 | 4,874 | 4,707 | 4,337 | 3,321 | 3,146 |
| கையாளப்பட்ட மொத்தச் சரக்குகள் ('000 மெ.தொன்) (உ) | 93,857 | 104,935 | 106,979 | 102,908 | 76,675 | 82,267 |
| கையாளப்பட்ட மொத்தக் கொள்கலன்கள் ('000 இ.ச.அ) (ஊ) | 6,209 | 7,047 | 7,228 | 6,855 | 5,190 | 5,370, |
| மாற்றிக் கப்பலேற்றல் ('000 இ.ச.அ) (ஊ) (எ) | 4,826 | 5,704 | 5,955 | 5,765 | 4,384 | 4,475 |
| 4. தொலைத்தொடர்பூட்டல் பணிகள் | | | | | யூன் இறுதியில் | யூன் இறுதியில் |
| நிலையான இணைப்புக்கள் (எண்.) | 2,603,178 | 2,484,616 | 2,299,767 | 2,613,140 | 2,328,082 | 2,870,036 |
| கையடக்கத் தொலைபேசிகள் (எண்.) | 28,199,083 | 32,528,104 | 32,884,099 | 28,739,277 | 27,678,977 | 29,048,708 |
| இணையத்தள தொடர்புகள் (எண்.) | 6,747,154 | 10,562,675 | 13,408,403 | 17,524,048 | 13,295,306 | 20,628,897 |
| நிலையான தொலைபேசி அடர்த்தி (ஏ) | 12 | 11 | 11 | 12 | 11 | 13 |
| செல்லிடத் தொலைபேசி அடர்த்தி (ஏ) | 132 | 150 | 151 | 131 | 126 | 131 |

(இ.ச.அ. - இருபது அடிக்குச் சமமான கொள்கலன்களின் அலகுகள்)

(அ) தற்காலிகமானது
(ஆ) திருத்தப்பட்டது
(இ) 2018இல் இருந்து கூரையில் பொருத்தப்பட்ட சூரிய மின்வலுவையும் உள்ளடக்குகின்றது
(ஈ) சிறிய நீர்மின் உற்பத்தி நீங்கலாக
(உ) கொழும்பு துறைமுகத்திற்கான தரவுகளை மட்டும் உள்ளடக்கியுள்ளது
(ஊ) கொழும்பு, காலி, அம்பாந்தோட்டை மற்றும் திருகோணமலை துறைமுகங்களிலிருந்தான தரவுகளை உள்ளடக்கியுள்ளது
(எ) பாதுகாப்பாக வைத்திருக்கப்படும் கொள்கலன் உள்ளடங்கலாக
(ஏ) ஒவ்வொரு 100 நபர்களுக்குமான இணைப்புக்கள்
குறிப்பு: மொத்த தொலைபேசி அடர்த்தி = நிலையான தொலைபேசி அடர்த்தி + செல்லிடத் தொலைபேசி அடர்த்தி

*மூலங்கள்:* இலங்கை மின்சார சபை
இலங்கைப் போக்குவரத்துச் சபை
இலங்கைப் புகையிரதம்
உந்து ஊர்திகள் போக்குவரத்துத் திணைக்களம்
இலங்கை துறைமுக அதிகாரசபை
இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு
தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்
இலங்கை மத்திய வங்கி

## அட்டவணை 6

### நுகர்வோர் விலைச் சுட்டெண்கள் - தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண்

2013 = 100

| காலம் | | சுட்டெண் | | ஆண்டுக்கு ஆண்டு மாற்றம் (%) | | ஆண்டுச் சராசரி மாற்றம் (%) | |
|---|---|---|---|---|---|---|---|
| | | தே.நு.வி.சு | மைய தே.நு.வி.சு | தே.நு.வி.சு | மைய தே.நு.வி.சு | தே.நு.வி.சு | மைய தே.நு.வி.சு |
| 2017 | திசெம்பர் | 126.6 | 123.8 | 7.3 | 2.7 | 7.7 | 4.9 |
| 2018 | திசெம்பர் | 127.1 | 127.6 | 0.4 | 3.1 | 2.1 | 2.4 |
| 2019 | திசெம்பர் | 135.0 | 134.2 | 6.2 | 5.2 | 3.5 | 5.7 |
| 2020 | சனவரி | 137.0 | 135.3 | 7.6 | 3.9 | 4.1 | 5.6 |
| | பெப்புருவரி | 137.0 | 135.8 | 8.1 | 3.4 | 4.5 | 5.5 |
| | மாச்சு | 135.2 | 136.0 | 7.0 | 3.2 | 4.9 | 5.2 |
| | ஏப்பிறல் | 134.8 | 136.9 | 5.9 | 3.2 | 5.1 | 5.0 |
| | மே | 135.4 | 137.9 | 5.2 | 3.7 | 5.2 | 4.8 |
| | யூன் | 137.3 | 138.9 | 6.3 | 4.4 | 5.6 | 4.6 |
| | யூலை | 137.3 | 139.4 | 6.1 | 4.5 | 5.9 | 4.5 |
| | ஓகத்து | 137.8 | 139.9 | 6.2 | 4.6 | 6.1 | 4.4 |
| | செத்தெம்பர் | 138.9 | 140.4 | 6.4 | 4.8 | 6.2 | 4.3 |
| | ஒத்தோபர் | 139.1 | 140.5 | 5.5 | 4.5 | 6.2 | 4.2 |
| | நவெம்பர் | 139.8 | 140.6 | 5.2 | 4.5 | 6.3 | 4.2 |
| | திசெம்பர் | 141.2 | 140.5 | 4.6 | 4.7 | 6.2 | 4.1 |
| 2021 | சனவரி | 142.1 | 141.0 | 3.7 | 4.2 | 5.8 | 4.2 |
| | பெப்புருவரி | 142.8 | 141.3 | 4.2 | 4.1 | 5.5 | 4.2 |
| | மாச்சு | 142.1 | 141.8 | 5.1 | 4.3 | 5.3 | 4.3 |
| | ஏப்பிறல் | 142.2 | 142.5 | 5.5 | 4.1 | 5.3 | 4.4 |
| | மே | 143.6 | 143.7 | 6.1 | 4.2 | 5.4 | 4.4 |
| | யூன் | 145.7 | 144.6 | 6.1 | 4.1 | 5.4 | 4.4 |
| | யூலை | 146.6 | 145.6 | 6.8 | 4.4 | 5.4 | 4.4 |
| | ஓகத்து | 147.1 | 146.5 | 6.7 | 4.7 | 5.5 | 4.4 |
| | செத்தெம்பர் | 147.5 | 147.2 | 6.2 | 4.8 | 5.5 | 4.4 |

தே.நு.வி.சு - தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண்
மைய தே.நு.வி.சு - மைய தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண்

*மூலம்:* தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்

## அட்டவணை 7

### நுகர்வோர் விலைச் சுட்டெண்கள் - கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்

2013 = 100

| காலம் | | சுட்டெண் | | ஆண்டுக்கு ஆண்டு மாற்றம் (%) | | ஆண்டுச் சராசரி மாற்றம் (%) | |
|---|---|---|---|---|---|---|---|
| | | கொ.நு.வி.சு | மைய கொ.நு.வி.சு | கொ.நு.வி.சு | மைய கொ.நு.வி.சு | கொ.நு.வி.சு | மைய கொ.நு.வி.சு |
| 2017 | திசெம்பர் | 122.9 | 124.9 | 7.1 | 4.3 | 6.6 | 5.9 |
| 2018 | திசெம்பர் | 126.3 | 128.8 | 2.8 | 3.1 | 4.3 | 3.5 |
| 2019 | திசெம்பர் | 132.4 | 135.0 | 4.8 | 4.8 | 4.3 | 5.5 |
| 2020 | சனவரி | 134.6 | 136.5 | 5.7 | 3.0 | 4.5 | 5.3 |
| | பெப்புருவரி | 134.6 | 136.9 | 6.2 | 3.2 | 4.6 | 5.1 |
| | மாச்சு | 133.4 | 136.9 | 5.4 | 2.9 | 4.7 | 4.9 |
| | ஏப்பிறல் | 133.6 | 137.2 | 5.2 | 3.1 | 4.8 | 4.7 |
| | மே | 134.2 | 138.1 | 4.0 | 2.9 | 4.7 | 4.4 |
| | யூன் | 135.3 | 138.6 | 3.9 | 3.1 | 4.7 | 4.2 |
| | யூலை | 135.4 | 138.9 | 4.2 | 3.2 | 4.8 | 4.0 |
| | ஓகத்து | 135.4 | 138.9 | 4.1 | 3.2 | 4.8 | 3.8 |
| | செத்தெம்பர் | 136.3 | 139.1 | 4.0 | 2.9 | 4.7 | 3.6 |
| | ஒத்தோபர் | 136.5 | 139.2 | 4.0 | 3.0 | 4.6 | 3.4 |
| | நவெம்பர் | 137.1 | 139.6 | 4.1 | 3.0 | 4.6 | 3.2 |
| | திசெம்பர் | 138.0 | 139.7 | 4.2 | 3.5 | 4.6 | 3.1 |
| 2021 | சனவரி | 138.7 | 140.2 | 3.0 | 2.7 | 4.3 | 3.1 |
| | பெப்புருவரி | 139.1 | 140.4 | 3.3 | 2.6 | 4.1 | 3.0 |
| | மாச்சு | 138.9 | 141.1 | 4.1 | 3.1 | 4.0 | 3.0 |
| | ஏப்பிறல் | 138.8 | 141.3 | 3.9 | 3.0 | 3.9 | 3.0 |
| | மே | 140.3 | 142.5 | 4.5 | 3.2 | 3.9 | 3.0 |
| | யூன் | 142.4 | 143.1 | 5.2 | 3.2 | 4.1 | 3.0 |
| | யூலை | 143.1 | 144.1 | 5.7 | 3.7 | 4.2 | 3.1 |
| | ஓகத்து | 143.5 | 144.6 | 6.0 | 4.1 | 4.3 | 3.2 |
| | செத்தெம்பர் | 144.1 | 146.0 | 5.7 | 5.0 | 4.5 | 3.3 |

கொ.நு.வி.சு - கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்
மைய கொ.நு.வி.சு - மைய கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்

*மூலம்:* தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்

## அட்டவணை 8

### கூலி வீதச் சுட்டெண்கள்

| காலம் | | சுட்டெண் | | | ஆண்டுக்காண்டு மாற்றம் (%) | | | ஆண்டுச் சராசரி மாற்றம் (%) | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | கூலிநிர்ணய சபைகளிலுள்ள தொழிலாளர்கள் (அ) | பொதுத்துறை ஊழியர்கள் (ஆ) | முறைசாரா தனியார்துறை ஊழியர்கள் (இ) | கூலிநிர்ணய சபைகளிலுள்ள தொழிலாளர்கள் | பொதுத்துறை ஊழியர்கள் | முறைசாரா தனியார்துறை ஊழியர்கள் | கூலிநிர்ணய சபைகளிலுள்ள தொழிலாளர்கள் | பொதுத்துறை ஊழியர்கள் | முறைசாரா தனியார்துறை ஊழியர்கள் |
| 2017 | திசெம்பர் | 4,129.0 | 100.0 | 160.2 | 0.0 | 0.0 | 11.9 | 0.0 | 0.0 | 9.5 |
| 2018 | திசெம்பர் | 4,213.9 | 100.2 | 176.4 | 2.1 | 0.2 | 10.1 | 0.6 | 0.2 | 13.2 |
| 2019 | திசெம்பர் | 4,281.5 | 108.4 | 184.6 | 1.6 | 8.2 | 4.6 | 2.9 | 4.7 | 6.2 |
| 2020 | திசெம்பர் | 4,282.2 | 114.6 | 188.6 | 0.0 | 5.7 | 2.1 | 0.2 | 9.2 | 3.3 |
| 2021 | சனவரி | 4,282.4 | 114.6 | 189.9 | 0.0 | 0.0 | 5.0 | 0.0 | 8.1 | 3.5 |
| | பெப்புருவரி | 4,282.4 | 114.6 | 193.0 | 0.0 | 0.0 | 3.4 | 0.0 | 7.0 | 3.4 |
| | மாச்சு | 8,020.7 | 114.6 | 195.1 | 87.3 | 0.0 | 4.5 | 7.3 | 5.9 | 3.3 |
| | ஏப்பிறல் | 8,020.6 | 114.6 | 194.7 | 87.3 | 0.0 | 4.3 | 14.6 | 4.8 | 3.2 |
| | மே | 8,020.7 | 114.6 | 195.5 | 87.3 | 0.0 | 7.2 | 21.8 | 3.8 | 3.6 |
| | யூன் | 8,020.8 | 114.6 | 199.3 | 87.3 | 0.0 | 7.9 | 29.1 | 2.8 | 4.1 |
| | யூலை | 8,021.0 | 114.6 | 199.6 | 87.3 | 0.0 | 7.1 | 36.4 | 2.3 | 4.4 |
| | ஓகத்து | 8,192.5 | 114.6 | 201.1 | 91.3 | 0.0 | 8.0 | 44.0 | 1.8 | 4.9 |

(அ) இச்சுட்டெண்ணானது 1978 திசெம்பர் 31இலுள்ளவாறான தொழிலாளர்களின் எண்ணிக்கையின் நிலையான நிறைகளின் அடிப்படையில் தொழில் திணைக்களத்தினால் கணிக்கப்படுகின்றது. சுட்டெண்களின் கணிப்பீட்டிற்குப் பயன்படுத்தப்பட்ட கூலி வீதங்களானது கூலி நிர்ணய சபையினால் ஒவ்வொரு வகையான வர்த்தகங்களிற்கும் தீர்மானிக்கப்பட்ட மிகக் குறைந்த கூலிகளாகும்.

(ஆ) 2016 பெப்புருவரி 25ஆம் நாளன்று பொது நிருவாகம் மற்றும் முகாமைத்துவ அமைச்சினால் விடுக்கப்பட்ட பொது நிருவாகச் சுற்றறிக்கை இல. 03/2016இல் பொதுத் துறை சம்பளக் கட்டமைப்பில் அறிமுகப்படுத்தப்பட்ட மாற்றங்களை உள்ளடக்குவதற்கு பொதுத் துறை கூலி வீதச் சுட்டெண் 2016இற்கு (2012 இலிருந்து) மீள்தளப்படுத்தப்பட்டது. 2016 நவெம்பரில் தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தினால் நடாத்தப்பட்ட அரச மற்றும் அரசசார் துறை தொழில் அளவீடுகளிலிருந்து தொழில் கட்டமைப்பின் அடியாண்டு பெறப்பட்டது.

(இ) இச்சுட்டெண்ணானது நாடு முழுவதுமான தரவுச் சேகரிப்பு முறைமையின் மூலம் சேகரிக்கப்பட்ட முறைசாரா தனியார் துறையின் கூலித் தரவுகளைப் பயன்படுத்தி கணிக்கப்படுகின்றது. 2012இல் தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தினால் நடாத்தப்பட்ட காலாண்டு தொழிற்படை அளவீடுகளிலிருந்து தொழில் கட்டமைப்பின் அடியாண்டு பெறப்பட்டது.

*மூலங்கள்:* தொழில் திணைக்களம்
இலங்கை மத்திய வங்கி

## அட்டவணை 9

### நியம பன்னாட்டு வர்த்தக வகைப்படுத்தலின் அடிப்படையிலான வெளிநாட்டு வர்த்தகத்தின் அபிவிருத்திகள் (அ)

ஐ.அ.டொ. மில்லியன்

| வகை | 2017 (ஆ) | 2018 (ஆ) | 2019 (ஆ) | 2020 (ஆ) | 2020 சன-ஓகத் (ஆ) | 2021 சன-ஓகத் (ஆ) | ஆண்டிற்கு ஆண்டு வளர்ச்சி % சன-ஓகத் 2020/21 |
|---|---|---|---|---|---|---|---|
| **ஏற்றுமதிகள்** | | | | | | | |
| 0. உணவு மற்றும் உயிருள்ள விலங்குகள் | 2,730.4 | 2,633.2 | 2,541.9 | 2,409.3 | 1,582.3 | 1,795.6 | 13.5 |
| 1. குடிபானங்கள் மற்றும் புகையிலை | 140.9 | 164.8 | 162.3 | 116.6 | 74.0 | 89.9 | 21.5 |
| 2. எரிபொருள் தவிர்ந்த பண்படுத்தப்படாத மூலப்பொருட்கள், உண்ணத்தகாதவை | 346.9 | 348.4 | 343.1 | 368.6 | 230.1 | 284.5 | 23.6 |
| 3. கனிம எரிபொருட்கள், மசகெண்ணெய் மற்றும் அவைசார்ந்த பொருட்கள் | 434.3 | 622.1 | 521.1 | 373.6 | 268.1 | 294.9 | 10.0 |
| 4. விலங்கு மற்றும் மரக்கறி எண்ணெய்கள், கொழுப்புகள் மற்றும் மெழுகுகள் | 94.9 | 88.8 | 73.9 | 96.6 | 56.1 | 83.0 | 48.1 |
| 5. இரசாயனங்கள் மற்றும் அவைசார்ந்த தயாரிப்புக்கள், வே.எ.கு | 197.2 | 214.6 | 223.5 | 224.0 | 140.4 | 187.8 | 33.8 |
| 6. பொருட்களால் பிரதானமாக வகைப்படுத்தப்பட்ட உற்பத்தி செய்யப்பட்ட பொருட்கள் | 1,417.5 | 1,599.2 | 1,627.9 | 1,344.0 | 868.8 | 1,095.4 | 26.1 |
| 7. இயந்திரங்கள் மற்றும் போக்குவரத்துக் கருவிகள் | 521.6 | 541.1 | 531.9 | 396.1 | 246.5 | 392.8 | 59.4 |
| 8. ஏனைய உற்பத்தி செய்யப்பட்ட பொருட்கள் | 5,475.8 | 5,677.4 | 5,914.3 | 4,718.6 | 2,978.8 | 3,678.7 | 23.5 |
| 9. நியம பன்னாட்டு வர்த்தக வகைப்பாடுகளில் வகைப்படுத்தப்படாத பொருட்கள் மற்றும் பரிமாற்றங்கள் | 0.8 | ... | ... | 0.1 | 0.01 | 0.3 | 5,829.1 |
| **மொத்த ஏற்றுமதிகள்** | **11,360.4** | **11,889.6** | **11,940.0** | **10,047.4** | **6,445.0** | **7,903.0** | **22.6** |
| **இறக்குமதிகள்** | | | | | | | |
| 0. உணவு மற்றும் உயிருள்ள விலங்குகள் | 2,397.8 | 2,173.4 | 1,958.2 | 2,107.6 | 1,385.5 | 1,534.0 | 10.7 |
| 1. குடிபானங்கள் மற்றும் புகையிலை | 116.0 | 161.2 | 147.0 | 93.8 | 67.4 | 51.0 | -24.3 |
| 2. எரிபொருள் தவிர்ந்த பண்படுத்தப்படாத மூலப்பொருட்கள், உண்ணத்தகாதவை | 510.3 | 487.5 | 465.7 | 436.2 | 301.0 | 380.5 | 26.4 |
| 3. கனிம எரிபொருட்கள், மசகெண்ணெய் மற்றும் அவை சார்ந்த பொருட்கள் | 3,427.9 | 4,151.9 | 3,891.6 | 2,542.6 | 1,691.2 | 2,395.9 | 41.7 |
| 4. விலங்கு மற்றும் மரக்கறி எண்ணெய்கள், கொழுப்புகள் மற்றும் மெழுகுகள் | 187.7 | 184.6 | 111.2 | 195.4 | 111.2 | 211.3 | 90.1 |
| 5. இரசாயனங்கள் மற்றும் அவை சார்ந்த தயாரிப்புக்கள், வே.எ.கு | 2,079.0 | 2,372.4 | 2,210.5 | 2,192.4 | 1,330.4 | 1,860.4 | 39.8 |
| 6. பொருட்களால் பிரதானமாக வகைப்படுத்தப்பட்ட உற்பத்தி செய்யப்பட்ட பொருட்கள் | 5,767.2 | 5,896.2 | 5,828.8 | 4,474.3 | 2,750.0 | 3,787.3 | 37.7 |
| 7. இயந்திரங்கள் மற்றும் போக்குவரத்துக் கருவிகள் | 4,585.6 | 5,232.7 | 4,292.3 | 3,204.4 | 2,105.0 | 2,563.1 | 21.8 |
| 8. ஏனைய உற்பத்தி செய்யப்பட்ட பொருட்கள் | 1,227.0 | 1,111.7 | 1,011.8 | 790.2 | 505.7 | 619.3 | 22.5 |
| 9. நியம பன்னாட்டு வர்த்தக வகைப்பாடுகளில் வகைப்படுத்தப்படாத பொருட்கள் மற்றும் பரிமாற்றங்கள் | 681.3 | 461.0 | 19.9 | 18.5 | 10.2 | 8.7 | -14.1 |
| **மொத்த இறக்குமதிகள்** | **20,979.8** | **22,232.7** | **19,937.1** | **16,055.4** | **10,257.4** | **13,411.5** | **30.7** |

(அ) 2006இல் வெளியிடப்பட்ட நியம பன்னாட்டு வர்த்தக வகைப்பாட்டின் திருத்தம் 4இன் பிந்திய பதிப்பினை அடிப்படையாகக் கொண்டு தரவுகள் தொகுக்கப்பட்டுள்ளன
(ஆ) தற்காலிகமானது

*மூலங்கள்:* இலங்கைச் சுங்கம்
இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம்
லங்கா ஐ.ஓ.சி. பிஎல்சி
ஏனைய பெற்றோலிய ஏற்றுமதியாளர்கள்
தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரண அதிகாரசபை
இலங்கை மத்திய வங்கி

## அட்டவணை 10

### சென்மதி நிலுவை (அ)

ஐ.அ.டொ. மில்லியன்

| விடயம் | 2019 (ஆ) | 2020 (இ) | முதலரை | |
|---|---|---|---|---|
| | | | 2020 (இ) | 2021(இ) |
| **நடைமுறை கணக்கு மீதி** | **-1,843** | **-1,083** | **-1,054** | **-1,536** |
| **வர்த்தக நிலுவை** | **-7,997** | **-6,008** | **-3,262** | **-4,316** |
| ஏற்றுமதிகள் | 11,940 | 10,047 | 4,413 | 5,699 |
| இறக்குமதிகள் | 19,937 | 16,055 | 7,675 | 10,015 |
| **பணிகள் (தேறிய)** | **2,849** | **819** | **729** | **549** |
| பெறுவனவுகள் | 7,474 | 3,035 | 2,036 | 1,372 |
| கொடுப்பனவுகள் | 4,625 | 2,216 | 1,307 | 823 |
| **முதலாந்தர வருமானம் (தேறிய)** | **-2,462** | **-2,101** | **-1,101** | **-957** |
| பெறுவனவுகள் | 252 | 198 | 111 | 69 |
| கொடுப்பனவுகள் | 2,713 | 2,300 | 1,212 | 1,026 |
| **இரண்டாந்தர வருமானம் (தேறிய)** | **5,766** | **6,207** | **2,580** | **3,187** |
| இரண்டாந்தர வருமானம்: வரவு | 6,726 | 7,117 | 2,987 | 3,327 |
| இரண்டாந்தர வருமானம்: பற்று | 960 | 910 | 407 | 140 |
| **மூலதனக் கணக்கு (தேறிய)** | **23** | **28** | **16** | **11** |
| மூலதனக் கணக்கு: வரவு | 51 | 51 | 29 | 25 |
| மூலதனக் கணக்கு: பற்று | 28 | 23 | 12 | 14 |
| **நடைமுறை மற்றும் மூலதனக் கணக்கு (தேறிய)** | **-1,820** | **-1,055** | **-1,037** | **-1,525** |
| **நிதியியல் கணக்கு (தேறிய) (ஈ)** | **-2,460** | **-260** | **-693** | **-1,920** |
| **நேரடி முதலீடு: சொத்துக்கள்** | **77** | **15** | **7** | **9** |
| **நேரடி முதலீடு: பொறுப்புக்கள்** | **743** | **434** | **242** | **302** |
| **முதலீட்டுச் சொத்துப்பட்டியல்: சொத்துக்கள்** | **-** | **-** | **-** | **-** |
| **முதலீட்டுச் சொத்துப்பட்டியல்: பொறுப்புக்கள்** | **2,313** | **-2,383** | **-771** | **-84** |
| மூலதனம் மற்றும் முதலீட்டு நிதியப் பங்குகள் | -4 | -217 | -103 | -116 |
| படுகடன் பிணையங்கள் | 2,317 | -2,166 | -669 | 32 |
| **நிதியியல் பெறுகைகள்** | **-** | **-** | **-** | **-** |
| **ஏனைய முதலீடு: சொத்துக்கள்** | **100** | **-136** | **-58** | **37** |
| நாணயமும் வைப்புக்களும் | -93 | 64 | 22 | -52 |
| வர்த்தகக் கொடுகடன் மற்றும் முற்பணங்கள் | -4 | -224 | -137 | 100 |
| பெற வேண்டிய ஏனைய கணக்குகள் | 196 | 24 | 58 | -11 |
| **ஏனைய முதலீடு: பொறுப்புக்கள்** | **-82** | **383** | **-344** | **167** |
| நாணயமும் வைப்புக்களும் | 167 | -15 | -636 | -177 |
| கடன்கள் | -245 | 327 | 723 | -12 |
| வர்த்தகக் கொடுகடன் மற்றும் முற்பணங்கள் | -28 | 185 | -248 | 238 |
| கொடுக்க வேண்டிய ஏனைய கணக்குகள் | 24 | -114 | -183 | 118 |
| சிறப்பு எடுப்பனவு உரிமை | - | - | - | - |
| **ஒதுக்குச் சொத்துக்கள்** | **337** | **-1,704** | **-1,515** | **-1,581** |
| **தேறிய தவறுகளும் விடுபாடுகளும்** | **-640** | **795** | **344** | **-395** |
| **திரண்ட நிலுவை** | **377** | **-2,328** | **-760** | **-1,261** |

(அ) இந்த வெளிப்பாடானது பன்னாட்டு நாணய நிதியத்தின் சென்மதி நிலுவை மற்றும் பன்னாட்டு முதலீட்டு நிலைமைக் கைநூலின் மிகப் பிந்திய பதிப்பிற்கு (ஆறாவது) ஒத்திசைவான சுருக்கமொன்றாகும்.
(ஆ) திருத்தப்பட்டது
(இ) தற்காலிகமானது
(ஈ) சொத்துக்கள் - பொறுப்புக்கள்

*மூலம்:* இலங்கை மத்திய வங்கி

## அட்டவணை 11
### பன்னாட்டு முதலீட்டு நிலைமை

ஐ.அ.டொ. மில்லியன்
(கால இறுதியிலுள்ள நிலைமை)

| விடயம் | 2020 (அ) | | 2021 யூன் (அ) | |
|---|---|---|---|---|
| | சொத்துக்கள் | பொறுப்புக்கள் | சொத்துக்கள் | பொறுப்புக்கள் |
| **நேரடி முதலீடு (ஆ)** | **1,509** | **13,832** | **1,515** | **13,884** |
| பங்கு மூலதனம் மற்றும் முதலீட்டு நிதிப் பங்குகள் | 1,473 | 8,831 | 1,477 | 8,735 |
| படுகடன் கருவிகள் | 36 | 5,001 | 38 | 5,148 |
| **முதலீட்டுச் சொத்துப்பட்டியல்** | **0.1** | **8,420** | **0.1** | **9,688** |
| பங்கு மூலதனம் மற்றும் முதலீட்டு நிதிப் பங்குகள் | | 708 | | 900 |
| படுகடன் பிணையங்கள் (இ) | 0.1 | 7,712 | 0.1 | 8,787 |
| வைப்புக்களை ஏற்கும் கூட்டுத்தாபனங்கள் | 0.1 | | 0.1 | |
| பொது அரசாங்கம் | | 7,616 | | 8,669 |
| ஏனைய துறைகள் | | 96 | | 118 |
| **ஏனைய முதலீடுகள்** | **3,710** | **36,499** | **3,747** | **36,503** |
| **நாணயம் மற்றும் வைப்புக்கள்** | **835** | **1,734** | **784** | **1,556** |
| மத்திய வங்கி | | 400 | | 0.9 |
| வைப்புக்களை ஏற்கும் கூட்டுத்தாபனங்கள் | 835 | 1,333 | 784 | 1,555 |
| **கடன்கள்** | | **31,512** | | **31,343** |
| மத்திய வங்கி | | 1,378 | | 1,316 |
| வைப்புக்களை ஏற்கும் கூட்டுத்தாபனங்கள் | | 5,324 | | 4,956 |
| பொது அரசாங்கம் | | 20,570 | | 21,001 |
| ஏனைய துறைகள் (ஈ) | | 4,240 | | 4,071 |
| **வர்த்தக கொடுகடன் மற்றும் முற்பணங்கள்** | **954** | **2,341** | **1,054** | **2,579** |
| வைப்புக்களை ஏற்கும் கூட்டுத்தாபனங்கள் | 101 | | 71 | |
| ஏனைய துறைகள் (உ) | 853 | 2,341 | 983 | 2,579 |
| **பெற வேண்டிய/ கொடுக்க வேண்டிய ஏனைய கணக்குகள்** | **1,920** | **343** | **1,909** | **461** |
| மத்திய வங்கி (ஊ) | | 343 | | 461 |
| வைப்புக்களை ஏற்கும் கூட்டுத்தாபனங்கள் | 1,920 | | 1,909 | |
| **சிறப்பு எடுப்பனவு உரிமைகள்** | | **570** | | **564** |
| **ஒதுக்குச் சொத்துக்கள்** | **5,664** | | **4,060** | |
| நாணயத் தங்கம் | 409 | | 381 | |
| சிறப்பு எடுப்பனவு உரிமைகள் | 3 | | 9 | |
| பன்னாட்டு நாணய நிதியத்தில் ஒதுக்கு நிலைமை | 69 | | 68 | |
| ஏனைய ஒதுக்குச் சொத்துக்கள் | 5,184 | | 3,602 | |
| நாணயம் மற்றும் வைப்புக்கள் | 2,210 | | 2,986 | |
| படுகடன் பிணையங்கள் | 2,974 | | 616 | |
| **மொத்த சொத்துக்கள்/ பொறுப்புக்கள்** | **10,883** | **58,750** | **9,322** | **60,074** |
| **தேறிய பன்னாட்டு முதலீட்டு நிலைமை** | | **-47,868** | | **-50,752** |
| **பமுநி - முதிர்ச்சி அடிப்படையிலான வகைப்படுத்தல்** | | | | |
| குறுகிய காலம் | 6,184 | 8,902 | 7,143 | 9,297 |
| நீண்ட காலம் | 4,699 | 49,848 | 2,179 | 50,778 |

*மூலம்:* இலங்கை மத்திய வங்கி

(அ) தற்காலிகமானது
(ஆ) முதலீட்டுச் சபை, கொழும்பு பங்குப் பரிவர்த்தனை மற்றும் ஏனைய தனியார் கம்பனிகளின் நேரடி முதலீட்டு இருப்பு நிலைமைகளினை உள்ளடக்குகின்றது
(இ) வெளிநாட்டு நாணயப் படுகடன் வழங்கல் சந்தைப் பெறுமதியை அடிப்படையாகக் கொண்டுள்ள அதேவேளை உள்நாட்டு நாணய வழங்கல் புத்தகப் பெறுமதியை அடிப்படையாகக் கொண்டுள்ளது
(ஈ) அரசிற்குச் சொந்தமான தொழில் முயற்சிகள் மற்றும் தனியார்துறைக் கம்பனிகளால் பெறப்பட்ட கடன்களின் வெளிநின்ற கடன் நிலைமைகளை உள்ளடக்குகின்றது
(உ) இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் மற்றும் ஏனைய தனியார் துறை கம்பனிகளின் வெளிநின்ற வர்த்தகக் கொடுகடன் நிலைமையை உள்ளடக்குகின்றது
(ஊ) மத்திய வங்கியினால் முகாமைத்துவம் செய்யப்படும் ஆசிய தீர்ப்பனவு ஒன்றியப் பொறுப்புக்களின் வெளிநின்ற நிலைமை

## அட்டவணை 12

### வெளிநின்ற வெளிநாட்டுப் படுகடன் நிலைமை

ஐ.அ.டொ. மில்லியன்
(கால இறுதியிலுள்ள நிலைமை)

| விடயம் | 2019 (அ) | 2020 (ஆ) | 2021 யூன் (ஆ) |
|---|---|---|---|
| பொது அரசாங்கம் | 34,249 | 28,187 | 29,670 |
| குறுங்காலம் | 119 | 4 | 3 |
| படுகடன் பிணையங்கள் (திறைசேரி உண்டியல்கள்) (இ) | 119 | 4 | 3 |
| நீண்ட காலம் | 34,130 | 28,183 | 29,667 |
| படுகடன் பிணையங்கள் | 14,513 | 7,613 | 8,666 |
| திறைசேரி முறிகள் (இ) | 406 | 31 | 9 |
| இலங்கை அபிவிருத்தி முறிகள் (ஈ) | 5 | 27 | 27 |
| நாட்டுக்கான பன்னாட்டு முறிகள் (உ) | 14,102 | 7,555 | 8,630 |
| கடன்கள் | 19,617 | 20,570 | 21,001 |
| மத்திய வங்கி | 2,318 | 2,690 | 2,342 |
| குறுங்காலம் | 456 | 343 | 462 |
| நாணயம் மற்றும் வைப்புக்கள் | 0.3 | 0.3 | 0.9 |
| கொடுக்க வேண்டிய ஏனைய கணக்குகள் (ஆசிய தீர்ப்பனவு ஒன்றிய பொறுப்புக்கள்) | 456 | 343 | 461 |
| நீண்ட காலம் | 1,862 | 2,348 | 1,880 |
| சிறப்பு எடுப்பனவு உரிமை ஒதுக்குகள் | 547 | 570 | 564 |
| நாணயம் மற்றும் வைப்புக்கள் | - | 400 | - |
| கடன்கள் (ப.நா.நி - துணைநில் ஒழுங்குபடுத்தல் மற்றும் விரிவாக்கப்பட்ட நிதி வசதிகள்) | 1,315 | 1,378 | 1,316 |
| வைப்புக்களை ஏற்கும் கூட்டுத்தாபனங்கள் | 6,997 | 6,657 | 6,511 |
| குறுங்காலம் | 5,519 | 5,507 | 5,353 |
| நாணயம் மற்றும் வைப்புக்கள் (ஊ) | 1,748 | 1,333 | 1,555 |
| கடன்கள் | 3,771 | 4,174 | 3,797 |
| நீண்ட காலம் | 1,478 | 1,150 | 1,158 |
| கடன்கள் | 1,478 | 1,150 | 1,158 |
| ஏனைய துறைகள் (எ) | 6,469 | 6,676 | 6,768 |
| குறுங்காலம் | 2,156 | 2,341 | 2,579 |
| வர்த்தகக் கொடுகடன் மற்றும் முற்பணங்கள் (ஏ) | 2,156 | 2,341 | 2,579 |
| நீண்ட காலம் | 4,313 | 4,335 | 4,189 |
| படுகடன் பிணையங்கள் (உ) | 174 | 96 | 118 |
| கடன்கள் | 4,139 | 4,240 | 4,071 |
| தனியார்துறை கூட்டுத்தாபனங்கள் | 2,235 | 2,458 | 2,365 |
| அரசிற்குச் சொந்தமான தொழில் முயற்சிகளும் அரச கூட்டுத்தாபனங்களும் | 1,904 | 1,781 | 1,706 |
| நேரடி முதலீடு: கம்பனிகளுக்கிடையிலான கடன் வழங்கல் (ஐ) | 4,778 | 5,001 | 5,148 |
| மொத்த வெளிநாட்டுப் படுகடன் நிலைமை | 54,811 | 49,212 | 50,438 |
| மொ.உ.உ. சதவீதமாக | | | |
| மொத்த வெளிநாட்டுப் படுகடன் | 65.3 | 60.7 | 60.4 |
| குறுங்கால படுகடன் | 9.8 | 10.1 | 10.0 |
| நீண்ட கால படுகடன் | 55.5 | 50.6 | 50.3 |

*மூலம்:* இலங்கை மத்திய வங்கி

(அ) திருத்தப்பட்டது
(ஆ) தற்காலிகமானது
(இ) புத்தகப் பெறுமதியை அடிப்படையாகக் கொண்டது
(ஈ) முகப் பெறுமதியை அடிப்படையாகக் கொண்டது
(உ) சந்தை விலைகளின் அடிப்படையிலானவை. பொது அரசின் வெளிநாட்டுப் படுகடனின் முகப் பெறமதி இந்த அறிக்கையின் அத்தியாயம் 5இல் அட்டவணை 5.4இல் அறிக்கையிடப்படுவதுடன் இந்த அறிக்கையின் அத்தியாயம் 6இல் அட்டவணை 6.4இல் அறிக்கையிடப்படும் மத்திய அரசின் வெளிநின்ற அரச படுகடன் முகப் பெறுமதியின் அடிப்படையிலானது.
(ஊ) வெளிநாட்டு நாணயக் கணக்குகளை வைத்திருக்கும் வதிவற்றோரின் வைப்புக்களை உள்ளடக்கியுள்ளது
(எ) தனியார்துறை மற்றும் அரசிற்குச் சொந்தமான தொழில் முயற்சிகளை உள்ளடக்கியுள்ளது
(ஏ) இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் மற்றும் தனியார்துறைக் கம்பனிகளின் வெளிநின்ற வர்த்தகக் கொடுகடனை உள்ளடக்கியுள்ளது
(ஐ) முதலீட்டுச் சபையில் பதிவுசெய்யப்பட்ட கம்பனிகளின் மீதான கம்பனிகளுக்கிடையிலான கடன் பெறுகைகள் மற்றும் பங்குதாரர் முற்பணங்களை உள்ளடக்கியுள்ளது

## அட்டவணை 13

### செலாவணி வீத அசைவுகள் (வெளிநாட்டு நாணயங்களின் ஒரு அலகுக்கான ரூபாய்கள்)

| காலம் | | கால முடிவிலுள்ளவாறான வீதங்கள் | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | ஐ.அ.டொலர் | ஸ்டேலிங் பவுண் | யூரோ | யப்பான் யென் | இந்திய ரூபா | சி.எ.உ (அ) |
| | 2016 | 149.8000 | 184.0443 | 157.8742 | 1.2867 | 2.2056 | 201.3810 |
| | 2017 | 152.8548 | 205.5362 | 182.4857 | 1.3559 | 2.3854 | 217.6860 |
| | 2018 | 182.7499 | 231.8639 | 208.9928 | 1.6547 | 2.6132 | 253.5110 |
| | 2019 | 181.6340 | 238.4582 | 203.6662 | 1.6717 | 2.5467 | 251.1689 |
| | 2020 | 186.4082 | 254.3540 | 229.4219 | 1.8081 | 2.5467 | 268.4781 |
| 2020 | சனவரி | 181.5857 | 237.8682 | 200.2799 | 1.6648 | 2.5308 | 250.0344 |
| | பெப்புருவரி | 181.8071 | 234.3221 | 199.7878 | 1.6628 | 2.5373 | 249.6721 |
| | மாச்சு | 188.6236 | 232.6672 | 207.9575 | 1.7381 | 2.5013 | 257.4335 |
| | ஏப்பிறல் | 192.8500 | 240.1754 | 209.5508 | 1.8071 | 2.5567 | 264.0656 |
| | மே | 186.2865 | 229.5515 | 206.5079 | 1.7343 | 2.4598 | 255.5888 |
| | யூன் | 186.2292 | 229.1830 | 209.4054 | 1.7293 | 2.4674 | 256.1955 |
| | யூலை | 185.6769 | 243.8309 | 220.7048 | 1.7815 | 2.4351 | 262.3745 |
| | ஓகத்து | 186.1578 | 248.4183 | 221.6674 | 1.7651 | 2.5461 | 264.1412 |
| | செத்தெம்பர் | 185.5224 | 238.7302 | 217.9703 | 1.7553 | 2.5152 | 261.1358 |
| | ஒத்தோபர் | 184.2769 | 239.4494 | 216.6451 | 1.7645 | 2.4825 | 260.1971 |
| | நவெம்பர் | 184.9601 | 246.7090 | 221.4157 | 1.7806 | 2.5017 | 264.5096 |
| | திசெம்பர் | 186.4082 | 254.3540 | 229.4219 | 1.8081 | 2.5467 | 268.4781 |
| 2021 | சனவரி | 194.3948 | 266.5444 | 235.3343 | 1.8609 | 2.6636 | 280.0840 |
| | பெப்புருவரி | 194.0119 | 274.3037 | 235.9476 | 1.8300 | 2.6827 | 280.6673 |
| | மாச்சு | 199.0377 | 273.2290 | 233.0931 | 1.7987 | 2.6103 | 282.0782 |
| | ஏப்பிறல் | 199.5437 | 278.3136 | 241.8270 | 1.8348 | 2.6929 | 286.5428 |
| | மே | 199.5000 | 283.2800 | 243.3900 | 1.8194 | 2.7551 | 288.2117 |
| | யூன் | 201.1381 | 278.7372 | 239.4851 | 1.8204 | 2.7071 | 286.9074 |
| | யூலை | 199.9000 | 278.9505 | 237.5312 | 1.8257 | 2.6910 | 285.6111 |
| | ஓகத்து | 210.0000 | 289.0650 | 247.9470 | 1.9116 | 2.8606 | 299.0946 |
| | செத்தெம்பர் | 199.9857 | 268.9608 | 232.1034 | 1.7884 | 2.6897 | 281.7539 |

(அ) பன்னாட்டு நாணய நிதியத்தின் அலகுக் கணக்கான சிறப்பு எடுப்பனவு உரிமைகள் (சி.எ.உ.)

*மூலம்:* இலங்கை மத்திய வங்கி

## அட்டவணை 14

### அரசின் இறைத் தொழிற்பாடுகள்

| விடயம் | 2017 | 2018 | 2019 (அ) | 2020 (ஆ) | 2020 சன - யூலை (ஆ) (இ) | 2021 சன - யூலை (ஆ) |
|---|---|---|---|---|---|---|
| ரூ. மில்லியன் | | | | | | |
| **மொத்த அரசிறையும் கொடைகளும்** | 1,839,562 | 1,932,459 | 1,898,808 | 1,373,308 | 765,393 | 799,806 |
| மொத்த அரசிறை | 1,831,531 | 1,919,973 | 1,890,899 | 1,367,960 | 763,246 | 798,908 |
| வரி அரசிறை | 1,670,178 | 1,712,318 | 1,734,925 | 1,216,542 | 670,410 | 716,704 |
| வரியல்லா அரசிறை | 161,353 | 207,656 | 155,974 | 151,417 | 92,836 | 82,204 |
| கொடைகள் | 8,031 | 12,486 | 7,909 | 5,348 | 2,147 | 898 |
| **செலவினமும் தேறிய கடன்வழங்கலும்** | 2,573,056 | 2,693,228 | 3,337,896 | 3,040,996 | 1,637,947 | 1,814,353 |
| மீண்டெழும் | 1,927,693 | 2,089,713 | 2,424,582 | 2,548,359 | 1,457,727 | 1,578,030 |
| மூலதனமும் தேறிய கடன்வழங்கலும் | 645,363 | 603,515 | 913,314 | 492,638 | 180,220 | 236,323 |
| இதில் அரச முதலீடு | 657,386 | 624,970 | 631,235 | 811,i773 | 192,328 | 242,703 |
| **நடைமுறைக் கணக்கு மீதி** | -96,162 | -169,740 | -533,683 | -1,180,399 | -694,481 | -779,122 |
| **ஆரம்பக் கணக்கு மீதி** | 2,071 | 91,421 | -537,736 | -687,386 | -288,937 | -377,195 |
| **திரண்ட இறை மீதி** | -733,494 | -760,769 | -1,439,088 | -1,667,688 | -872,554 | -1,014,547 |
| **மொத்த நிதியிடல்** | 733,494 | 760,769 | 1,439,088 | 1,667,688 | 872,554 | 1,014,547 |
| வெளிநாட்டு நிதியிடல் | 439,243 | 323,535 | 542,641 | -83,199 | -194,475 | -190,072 |
| செயற்றிட்டக் கடன்கள் | 779 | 7,672 | - | - | -140,347 | -86,008 |
| வர்த்தகக் கடன்கள் | 381,200 | 456,921 | - | - | 29,204 | -99,947 |
| திறைசேரி உண்டியல்கள்/முறிகளில் வதிவற்றோர் முதலீடு | 57,264 | -141,058 | - | - | -83,331 | -4,117 |
| உள்நாட்டு நிதியிடல் | 294,251 | 437,234 | 896,448 | 1,750,887 | 1,067,028 | 1,204,619 |
| சந்தைக் கடன் பெறுகைகள் | 249,574 | 329,351 | - | - | 1,038,496 | 1,209,672 |
| வங்கியல்லாவை | 61,841 | 219,885 | - | - | 171,490 | 277,150 |
| வங்கி | 187,733 | 109,466 | - | - | 867,006 | 932,522 |
| சந்தையல்லா மூலங்கள் | 44,677 | 107,883 | - | - | 28,532 | -5,053 |
| மொ.உ.உற்பத்தியின் சதவீதமாக (ஈ) | | | | | | |
| **மொத்த அரசிறையும் கொடைகளும்** | 13.8 | 13.5 | 12.6 | 9.2 | 5.1 | 4.9 |
| மொத்த அரசிறை | 13.7 | 13.4 | 12.6 | 9.1 | 5.1 | 4.9 |
| வரி அரசிறை | 12.5 | 12.0 | 11.6 | 8.1 | 4.5 | 4.4 |
| வரியல்லா அரசிறை | 1.2 | 1.5 | 1.0 | 1.0 | 0.6 | 0.5 |
| கொடைகள் | 0.1 | 0.1 | 0.1 | 0.04 | 0.01 | 0.01 |
| **செலவினமும் தேறிய கடன் வழங்கலும்** | 19.3 | 18.8 | 22.2 | 20.3 | 10.9 | 11.0 |
| மீண்டெழும் | 14.5 | 14.6 | 16.1 | 17.0 | 9.7 | 9.6 |
| மூலதனமும் தேறிய கடன் வழங்கலும் | 4.8 | 4.2 | 6.1 | 3.3 | 1.2 | 1.4 |
| இதில் அரச முதலீடு | 4.9 | 4.4 | 4.2 | 5.4 | 1.3 | 1.5 |
| **நடைமுறைக் கணக்கு மீதி** | -0.7 | -1.2 | -3.6 | -7.9 | -4.6 | -4.7 |
| **ஆரம்பக் கணக்கு மீதி** | 0.0 | 0.64 | -3.6 | -4.6 | -1.9 | -2.3 |
| **திரண்ட இறை மீதி** | -5.5 | -5.3 | -9.6 | -11.1 | -5.8 | -6.2 |
| **மொத்த நிதியிடல்** | 5.5 | 5.3 | 9.6 | 11.1 | 5.8 | 6.2 |
| வெளிநாட்டு நிதியிடல் | 3.3 | 2.3 | 3.6 | -0.6 | -1.3 | -1.2 |
| செயற்றிட்டக் கடன்கள் | 0.01 | 0.1 | - | - | -0.9 | -0.5 |
| வர்த்தகக் கடன்கள் | 2.9 | 3.2 | - | - | 0.2 | -0.6 |
| திறைசேரி உண்டியல்கள்/முறிகளில் வதிவற்றோர் முதலீடு | 0.4 | -1.0 | - | - | -0.6 | -0.02 |
| உள்நாட்டு நிதியிடல் | 2.2 | 3.1 | 4.7 | 6.0 | 7.1 | 7.3 |
| சந்தைக் கடன் பெறுகைகள் | 1.9 | 2.3 | - | - | 6.9 | 7.3 |
| வங்கியல்லாவை | 0.5 | 1.5 | - | - | 1.1 | 1.7 |
| வங்கி | 1.4 | 0.8 | - | - | 5.8 | 5.7 |
| சந்தையல்லா மூலங்கள் | 0.3 | 0.8 | - | - | 0.2 | -0.03 |

(அ) நிதி அமைச்சின்படி, 2020 இற்கான வரவு செலவுத்திட்ட உரையின் போது அறிவிக்கப்பட்டுள்ளாவாறு இறைத் துறையின் 2019இன் புள்ளிவிபரங்கள் திருத்தப்பட்டுள்ளன.

(ஆ) தற்காலிகமானது

(இ) 2020இல் மீள்குறிப்பிடப்பட்டதற்குப் பின்னரான இறைத் துறைத் தரவுகளின் விபரமான தரப்படுத்தல் இல்லாத நிலையில், 2021இற்கான இறைத் துறைப் புள்ளிவிபரங்கள் மீள்குறிப்பிடலுக்குப் முன்னரான 2020இன் தொடர்புடைய தரவுகளுடன் ஒப்பிடப்பட்டுள்ளன.

(ஈ) 2018 மற்றும் 2019 இற்கான இறைத் துறை புள்ளிவிபரங்கள் 2021 மாச்சு 16 அன்று தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தினால் வெளியிடப்பட்ட 2018 மற்றும் 2019 ஆண்டுக்கான திருத்தப்பட்ட மொ.உ.உற்பத்தி மதிப்பீடுகளை அடிப்படையாகக் கொண்டுள்ள அதேவேளை, 2021 இற்கான பெறுமதிகள் மத்திய வங்கியின் மொ.உ.உற்பத்தி எறிவுகளை அடிப்படையாகக் கொண்டுள்ளன.

*மூலங்கள்:* நிதி அமைச்சு
இலங்கை மத்திய வங்கி

## அட்டவணை 15

### வர்த்தக வங்கிகளினால் தனியார்துறைக்கு வழங்கப்பட்ட கடன்களும் முற்பணங்களும் (அ)(ஆ)

| வகை | 2020 யூன் முடிவில் | | 2021 யூன் முடிவில் (இ) | | மாற்றம் % |
|---|---|---|---|---|---|
| | தொகை (ரூ. மில்) | மொத்தத்தின் % மாக | தொகை (ரூ. மில்) | மொத்தத்தின் % மாக | |
| 1. வேளாண்மையும் மீன்பிடியும் | 468,657 | 7.7 | 529,706 | 7.7 | 13.0 |
| *இதில்* | | | | | |
| தேயிலை | 94,406 | 1.6 | 107,890 | 1.6 | 14.3 |
| இறப்பர் | 24,253 | 0.4 | 36,564 | 0.5 | 50.8 |
| தெங்கு | 26,531 | 0.4 | 32,439 | 0.5 | 22.3 |
| நெல் | 40,637 | 0.7 | 42,710 | 0.6 | 5.1 |
| மரக்கறி, பழவகை உற்பத்திகளும் சிறு வேளாண்மைப் பயிர்களும் | 26,342 | 0.4 | 29,784 | 0.4 | 13.1 |
| கால்நடையும் பாற்பண்ணையும் | 26,899 | 0.4 | 28,870 | 0.4 | 7.3 |
| மீன்பிடி | 20,681 | 0.3 | 21,154 | 0.3 | 2.3 |
| 2. கைத்தொழில் | 2,487,208 | 40.9 | 2,768,377 | 40.4 | 11.3 |
| *இதில்* | | | | | |
| கட்டடவாக்கம் | 1,231,226 | 20.2 | 1,449,403 | 21.1 | 17.7 |
| *இதில்* | | | | | |
| கொள்வனவு/கட்டடவாக்கம்/திருத்தங்கள் உள்ளடங்கலாக தனிப்பட்ட வீடமைப்பு | 573,097 | 9.4 | 681,061 | 9.9 | 18.8 |
| பணியாளர் வீடமைப்பு | 87,999 | 1.4 | 95,924 | 1.4 | 9.0 |
| உணவும் குடிபானங்களும் | 147,609 | 2.4 | 173,753 | 2.5 | 17.7 |
| புடவைகளும் அணியும் ஆடைகளும் | 252,119 | 4.1 | 265,743 | 3.9 | 5.4 |
| தளபாடங்கள் உள்ளடங்கலாக மரம் மற்றும் மர உற்பத்திகள் | 21,410 | 0.4 | 24,001 | 0.3 | 12.1 |
| தாள் மற்றும் தாள் உற்பத்திகள் | 18,715 | 0.3 | 20,907 | 0.3 | 11.7 |
| இரசாயனம், பெற்றோலியம், மருந்தாக்கல் மற்றும் நலக் கவனிப்பு, மற்றும் இறப்பர் மற்றும் பிளாத்திக்கு உற்பத்திகள் | 124,393 | 2.0 | 147,145 | 2.1 | 18.3 |
| உலோகமல்லாக் கனிப்பொருள் உற்பத்திகள் | 23,707 | 0.4 | 13,553 | 0.2 | -42.8 |
| அடிப்படை உலோக உற்பத்திகள் | 46,622 | 0.8 | 53,988 | 0.8 | 15.8 |
| உருவமைக்கப்பட்ட உலோக உற்பத்திகள், பொறி மற்றும் போக்குவரத்து கருவிகள் | 166,941 | 2.7 | 145,337 | 2.1 | -12.9 |
| ஏனைய தயாரிக்கப்பட்ட உற்பத்திகள் | 23,429 | 0.4 | 26,522 | 0.4 | 13.2 |
| 3. பணிகள் | 1,723,867 | 28.3 | 1,882,564 | 27.5 | 9.2 |
| *இதில்* | | | | | |
| மொத்த மற்றும் சில்லறை வர்த்தகம் | 478,059 | 7.9 | 558,006 | 8.1 | 16.7 |
| சுற்றுலா | 252,306 | 4.1 | 284,610 | 4.2 | 12.8 |
| நிதியியல் மற்றும் வியாபாரப் பணிகள் | 370,358 | 6.1 | 366,473 | 5.3 | -1.0 |
| போக்குவரத்து | 89,205 | 1.5 | 79,906 | 1.2 | -10.4 |
| தொடர்பூட்டல் மற்றும் தகவல் தொழில்நுட்பம் | 62,799 | 1.0 | 73,517 | 1.1 | 17.1 |
| அச்சிடலும் வெளியீடும் | 26,564 | 0.4 | 29,082 | 0.4 | 9.5 |
| கல்வி | 14,981 | 0.2 | 20,900 | 0.3 | 39.5 |
| நலம் | 55,535 | 0.9 | 59,719 | 0.9 | 7.5 |
| கப்பலேற்றல், வான் போக்குவரத்து மற்றும் சரக்கு அனுப்புதல் | 22,419 | 0.4 | 23,875 | 0.3 | 6.5 |
| 4. தனிப்பட்ட கடன்களும் முற்பணங்களும் (ஈ) | 1,405,232 | 23.1 | 1,677,224 | 24.5 | 19.4 |
| *இதில்* | | | | | |
| நீண்டகால பாவனைப் பொருட்கள் | 223,718 | 3.7 | 348,013 | 5.1 | 55.6 |
| அடகுபிடித்தல் | 220,940 | 3.6 | 268,402 | 3.9 | 21.5 |
| கடன் அட்டைகள் | 126,170 | 2.1 | 128,820 | 1.9 | 2.1 |
| தனிப்பட்ட கல்வி | 9,141 | 0.2 | 11,366 | 0.2 | 24.3 |
| தனிப்பட்ட நலக் கவனிப்பு | 3,210 | 0.1 | 1,996 | 0.0 | -37.8 |
| 5. மொத்தம் (உ) | 6,084,964 | 100.0 | 6,857,871 | 100.0 | 12.7 |

*மூலம்:* இலங்கை மத்திய வங்கி

(அ) தனியார் துறைக்கு வர்த்தக வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்கள் மற்றும் முற்பணங்கள் காலாண்டு அளவீட்டினை அடிப்படையாகக் கொண்டதுடன் வர்த்தக வங்கிகளின் உள்நாட்டு வங்கித்தொழில் பிரிவுகளினதும் கரைகடந்த வங்கித்தொழில் பிரிவுகளினதும் கடன்கள் மற்றும் முற்பணங்களையும் இது உள்ளடக்குகிறது

(ஆ) கடன்கள், மேலதிகப் பற்றுக்கள், கழிவிடப்பட்டதும் கொள்வனவு செய்யப்பட்டதுமான உண்டியல்களை உள்ளடக்குவதுடன் சேகரிப்புச் செயல்முறையிலுள்ள காசு விடயங்களை உள்ளடக்கவில்லை

(இ) தற்காலிகமானது

(ஈ) “கைத்தொழிலின்” கீழுள்ள “கட்டவாக்கத்தினுள்” உள்ளடக்கப்பட்டுள்ள தனிநபர் வீடமைப்புக் கடன்கள் நீங்கலாகவும் பாதுகாப்பு வலையமைப்பு திட்டத்துடன் தொடர்புள்ள கடன்கள் உள்ளடங்கலாக

(உ) காலாண்டு அளவீடுகளின்படி தனியார் துறைக்கான மொத்தக் கொடுகடன் நாணய அளவீடுகளிலிருந்து வேறுபடுவதற்கு கணிப்பீடு முறைகளிலுள்ள வேறுபாடுகளே காரணமாகும்

## அட்டவணை 16

### வங்கித்தொழில் நடவடிக்கைகளின் விரிவாக்கம் (அ)

| வகை | 2017 | 2018 | 2019 (ஆ) | 2020 (இ) | 2021 (இ) சன - யூன் |
|---|---|---|---|---|---|
| 1. வங்கிகளின் எண்ணிக்கை | 32 | 33 | 32 | 30 | 30 |
| 2. வங்கிக் கிளைகளின் எண்ணிக்கை (இ) (ஈ) | 3,549 | 3,576 | 3,607 | 3,619 | 3,620 |
| 3. தன்னியக்கக் கூற்றுப் பொறிகளின் எண்ணிக்கை | 4,206 | 4,618 | 5,023 | 4,252 | 4,231 |
| 4. வழங்கப்பட்ட கடன் அட்டைகளின் எண்ணிக்கை (உ) | 290,264 | 338,692 | 353,826 | 235,310 | 133,956 |
| 5. பாவனையிலுள்ள கடன் அட்டைகளின் எண்ணிக்கை | 1,486,545 | 1,710,671 | 1,854,103 | 1,984,525 | 2,045,716 |
| 6. வழங்கப்பட்ட வரவு அட்டைகளின் எண்ணிக்கை (உ) | 3,650,045 | 3,371,569 | 4,773,541 | 3,673,644 | 2,641,505 |
| 7. பாவனையிலுள்ள வரவு அட்டைகளின் எண்ணிக்கை | 19,702,875 | 22,329,928 | 23,068,813 | 17,803,673 | 17,767,516 |
| 8. தொலைபேசி மூலமான வங்கித்தொழில் கொடுக்கல்வாங்கல்களின் எண்ணிக்கை (உ) | 3,808,692 | 8,176,223 | 17,435,204 | 26,701,436 | 16,390,592 |
| 9. இணையத்தளம் மூலமான கொடுக்கல்வாங்கல்களின் எண்ணிக்கை (உ) | 23,065,638 | 26,930,397 | 36,674,832 | 57,860,661 | 49,179,771 |
| 10. வங்கித் தொழில் அடர்த்தி (ஊ) | 16.6 | 16.5 | 16.5 | 16.5 | 16.3 |

(அ) காலமுடிவில்
(ஆ) திருத்தப்பட்டது
(இ) தற்காலிகமானது
(ஈ) மாணவர் சேமிப்பு பிரிவுகள் நீங்கலாக
(உ) காலப்பகுதியில்
(ஊ) ஒவ்வொரு 100,000 நபர்களுக்கான கிளைகளின் எண்ணிக்கை

*மூலம்:* இலங்கை மத்திய வங்கி

## அட்டவணை 17

### பணம் மற்றும் மூலதனச் சந்தை அபிவிருத்திகள்

ரூ. மில்லியன்

| வகை | 2017 | 2018 | 2019 | 2020 | 2021 (அ) சன-செத் |
|---|---|---|---|---|---|
| **பணச் சந்தை** | | | | | |
| **அழைப்புப் பணச் சந்தை** | | | | | |
| மொத்தப் புரள்வு | 3,900,444 | 4,196,244 | 4,755,160 | 3,234,306 | 4,771,982 |
| **திறைசேரி உண்டியல் சந்தை** | | | | | |
| வழங்கப்பட்ட மொத்தத் தொகை (ஆ) | 1,624,266 | 1,653,259 | 1,719,327 | 2,590,539 | 2,534,917 |
| மொத்த வெளிநின்றவை (ஆ) (இ) (ஈ) | 724,706 | 758,796 | 897,670 | 1,621,375 | 2,106,125 |
| **மூலதனச் சந்தை** | | | | | |
| **திறைசேரி முறிகள் சந்தை** | | | | | |
| வழங்கப்பட்ட மொத்தத் தொகை (ஆ) | 548,815 | 763,020 | 798,000 | 1,332,069 | 1,035,355 |
| மொத்த வெளிநின்றவை (ஆ) (இ) (ஈ) | 4,187,467 | 4,344,238 | 4,686,526 | 5,719,504 | 6,444,543 |
| **பட்டியலிடப்பட்ட கம்பனி முறிகள் சந்தை** | | | | | |
| வழங்கப்பட்ட மொத்தத் தொகை | 20,000 | 55,918 | 57,914 | 21,940 | 77,312 |
| மொத்த வழங்கல்கள் (எண்ணிக்கை) | 5 | 11 | 15 | 8 | 14 |
| மொத்தப் புரள்வு (இரண்டாந்தரச் சந்தை) | 3,593 | 4,541 | 5,677 | 5,856 | 1,150 |
| சந்தை மூலதனவாக்கம் (இ) | 282,282 | 288,558 | 284,926 | 243,220 | 294,538 |
| **பங்குச் சந்தை** | | | | | |
| அனைத்துப் பங்கு விலைச் சுட்டெண் (1985=100) (இ) | 6,369 | 6,052 | 6,129 | 6,774 | 9,460 |
| எஸ் அன்ட் பி எஸ்எல் 20 (2004=1,000) (இ) | 3,672 | 3,135 | 2,937 | 2,638 | 3,535 |
| மொத்தப் புரள்வு | 220,591 | 200,069 | 171,408 | 396,882 | 792,998 |
| தேறிய வெளிநாட்டுக் கொள்வனவுகள் | 17,655 | -23,239 | -11,735 | -51,356 | -44,906 |
| சந்தை மூலதனவாக்கம் (இ) | 2,899,290 | 2,839,450 | 2,851,310 | 2,960,648 | 4,215,634 |

(அ) தற்காலிகமானது
(ஆ) முகப்பெறுமதி
(இ) கால முடிவில்
(ஈ) வெளிநாட்டு உடமைகள் உள்ளடங்கலாக

*மூலங்கள்:* இலங்கை மத்திய வங்கி
கொழும்புப் பங்குப் பரிவர்த்தனை

அட்டவணை 18

## காப்புறுதி, நம்பிக்கைக் கூறு, பங்குதரகர்கள் - தெரிவு செய்யப்பட்ட குறிகாட்டிகள்

| வகை | 2019 யூன் முடிவில் | 2020 யூன் முடிவில் | 2020 திசெ முடிவில் | 2021 யூன் முடிவில் (அ) | ஆண்டிற்கு ஆண்டு மாற்றம் (%) 2020 யூன் | 2021 யூன் (அ) |
|---|---|---|---|---|---|---|
| **காப்புறுதித் துறை** | | | | | | |
| மொத்த சொத்துக்கள் (ரூ.பில்லியன்) | 668.3 | 755.2 | 790.1 | 814.6 | 13.0 | 7.9 |
| **மொத்த வருமானம் (ரூ.பில்லியன்) (ஆ)** | **123.8** | **120.9** | **264.4** | **133.3** | **-2.3** | **10.2** |
| திரண்ட எழுதப்பட்ட தவணைக் கட்டண வருமானம் (ரூ.பில்லியன்) (ஆ) | 97.9 | 95.2 | 208.6 | 105.3 | -2.8 | 10.7 |
| முதலீட்டு வருமானம் (ரூ.பில்லியன்) (ஆ) | 25.9 | 25.8 | 55.7 | 28.0 | -0.5 | 8.7 |
| வரிக்கு முன்னரான இலாபம் (ரூ.பில்லியன்) (ஆ) | 13.7 | 18.2 | 38.6 | 14.5 | 32.7 | -20.1 |
| **மூலதன போதுமாந்தன்மை விகிதம் (%)** | | | | | | |
| நீண்டகால காப்புறுதி | 293.0 | 308.0 | 352.0 | 351.0 | - | - |
| பொதுக் காப்புறுதி | 203.0 | 238.0 | 246.0 | 224.0 | - | - |
| **பிடித்துவைத்தல் விகிதம் (%)** | | | | | | |
| நீண்டகால காப்புறுதி | 96.1 | 95.1 | 95.4 | 95.5 | - | - |
| பொதுக் காப்புறுதி | 78.5 | 75.9 | 77.6 | 71.6 | - | - |
| **கோரல் விகிதம் (%)** | | | | | | |
| நீண்டகால காப்புறுதி | 42.0 | 40.6 | 38.6 | 38.7 | - | - |
| பொது காப்புறுதி | 64.6 | 47.2 | 49.3 | 54.8 | - | - |
| **இணைந்த தொழிற்பாட்டு விகிதம் (%)** | | | | | | |
| நீண்டகால காப்புறுதி | 92.9 | 88.2 | 83.7 | 82.1 | - | - |
| பொது காப்புறுதி | 101.4 | 87.3 | 88.3 | 98.2 | - | - |
| **சொத்துக்கள் மீதான வருவாய் (%)** | | | | | | |
| நீண்டகால காப்புறுதி | 2.6 | 3.2 | 3.0 | 3.0 | - | - |
| பொது காப்புறுதி | 5.8 | 7.7 | 8.6 | 8.7 | - | - |
| **பங்குரிமை மூலதனம் மீதான வருவாய் (%) பொதுக் காப்புறுதி** | 12.0 | 16.2 | 17.8 | 18.4 | - | - |
| ஒப்புறுதி விகிதம் (%) - பொதுக் காப்புறுதி | 17.9 | 33.3 | 33.0 | 24.5 | - | - |
| **கூறு நம்பிக்கைத் துறை** | | | | | | |
| மொத்தச் சொத்துக்கள் (ரூ.பில்லியன்) | 75.5 | 114.4 | 201.6 | 222.7 | 51.6 | 94.6 |
| தேறிய சொத்துப் பெறுமதி (ரூ.பில்லியன்) | 75.2 | 113.4 | 200.9 | 222.0 | 50.7 | 95.7 |
| முதலீடுகள் (ரூ.பில்லியன்) | 75.3 | 114.4 | 201.6 | 222.7 | 51.9 | 94.7 |
| மூலதனம் | 8.0 | 8.1 | 14.1 | 15.6 | 0.7 | 92.6 |
| அரச பிணையங்கள் | 4.0 | 8.6 | 25.3 | 23.6 | 115.1 | 174.4 |
| ஏனையவை (உ-ம்: வர்த்தகப் பத்திரம், தொகுதிக்கடன்கள், நம்பிக்கைச் சான்றிதழ்கள் மற்றும் வங்கி வைப்புக்கள்) | 63.3 | 97.7 | 162.2 | 183.5 | 54.4 | 87.8 |
| தேறிய சொத்துப் பெறுமதியின் % ஆக பங்குரிமை மூலதனத்தில் முதலீடுகள் | 10.7 | 7.2 | 7.0 | 7.0 | - | - |
| தேறிய சொத்துப் பெறுமதியின் % ஆக அரச பிணையங்களில் முதலீடுகள் | 5.3 | 7.5 | 12.6 | 10.6 | - | - |
| தேறிய சொத்துப் பெறுமதியின் % ஆக ஏனைய முதலீடுகள் | 84.1 | 86.1 | 80.8 | 82.7 | - | - |
| கூறு வைத்திருப்போரின் மொத்த எண்ணிக்கை | 44,224 | 47,903 | 52,402 | 55,651 | - | - |
| வழங்கலிலுள்ள கூறுகளின் எண்ணிக்கை (பில்லியன்) | 3.6 | 5.4 | 8.0 | 7.0 | - | - |
| நம்பிக்கைக் கூறுகளின் எண்ணிக்கை | 75 | 72 | 75 | 76 | - | - |
| **பங்குத் தரகுத் துறை** | | | | | | |
| மொத்தச் சொத்துக்கள் (ரூ.பில்லியன்) | 7.5 | 13.5 | 19.9 | 21.0 | 78.4 | 55.9 |
| மொத்தப் பொறுப்புக்கள் (ரூ.பில்லியன்) | 2.5 | 8.4 | 12.9 | 12.1 | 232.7 | 44.8 |
| தேறிய மூலதனம் (ரூ.பில்லியன்) | 5.0 | 5.1 | 6.0 | 7.7 | 1.5 | 50.7 |
| வருமானம் (ரூ.பில்லியன்) (ஆ) | 239.6 | 443.0 | 2,085.0 | 1,553.0 | 84.9 | 250.6 |
| வரிக்கு முன்னரான தேறிய இலாபம்/(நட்டம்) (ரூ.பில்லியன்) (ஆ) | -184.1 | 157.9 | 1,184.0 | 910.0 | 185.8 | 476.4 |

(அ) தற்காலிகமானது
(ஆ) காலப்பகுதியில்

*மூலங்கள்:* இலங்கைக் காப்பீட்டு ஒழுங்குமுறை ஆணையம்
பிணையங்கள் பரிவர்த்தனை ஆணைக்குழு
இலங்கை நம்பிக்கைக் கூறுகள் சங்கம்

**அட்டவணை 19**

**கொவிட்-19இனால் பாதிக்கப்பட்ட கடன்பெற்றோருக்கு வழங்கப்பட்ட சலுகைகள் (அ)** (2021 யூலை 31 அன்று)

| காலம் தாழ்த்திச் செலுத்தும் வசதியின் கட்டங்கள் | உரிமம்பெற்ற வங்கிகள் | | | | வங்கியல்லா நிதியியல் நிறுவனங்கள் | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | பெறப்பட்ட விண்ணப் பங்களின் எண்ணிக்கை | ஒப்புதலளிக்கப் பட்ட விண்ணப் பங்களின் எண். | ஒப்புதலளிக்கப் பட்ட விண்ணப் பங்களின் % ஆக | வெளிநின்ற மூலதனம் (ரூ. பில்.) | பெறப்பட்ட விண்ணப் பங்களின் எண்ணிக்கை | ஒப்புதலளிக்கப் பட்ட விண்ணப் பங்களின் எண். | ஒப்புதலளிக்கப் பட்ட விண்ணப் பங்களின் % ஆக | வெளிநின்ற மூலதனம் (ரூ. பில்.) |
| கொவிட் - 19 (1ஆம் அலை) | 1,435,119 | 1,336,136 | 93.10 | 2,280.7 | 985,063 | 847,491 | 86.03 | 355.3 |
| கொவிட் - 19 (2ஆம் அலை) | 136,184 | 121,530 | 89.24 | 726.9 | 143,382 | 111,038 | 77.44 | 62.1 |
| கொவிட் - 19 (3ஆம் அலை) | 171,511 | 154,841 | 90.28 | 552.4 | 393,893 | 356,634 | 90.54 | 106.4 |
| மொத்தம் | 1,742,814 | 1,612,507 | 92.52 | - | 1,522,338 | 1,315,163 | 86.39 | - |

(அ) இதே கடன்பெற்றோர் வேறு திட்டங்கள்/ கட்டங்களில் சலுகைகளைப் பெற்றிருக்கலாம்

*மூலம்:* இலங்கை மத்திய வங்கி

**அட்டவணை 20**

**கொவிட்-19இனால் பாதிக்கப்பட்ட கடன்பெற்றோருக்கு வழங்கப்பட்ட சலுகைகள் (அ)** (2021 யூலை 31 அன்று)

| காலம் தாழ்த்திச் செலுத்தும் வசதியின் கட்டங்கள் | உரிமம்பெற்ற வங்கிகள் | | | | வங்கியல்லா நிதியியல் நிறுவனங்கள் | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | பெறப்பட்ட விண்ணப் பங்களின் எண்ணிக்கை | ஒப்புதலளிக்கப் பட்ட விண்ணப் பங்களின் எண். | ஒப்புதலளிக்கப் பட்ட விண்ணப் பங்களின் % ஆக | வெளிநின்ற மூலதனம் (ரூ. பில்.) | பெறப்பட்ட விண்ணப் பங்களின் எண்ணிக்கை | ஒப்புதலளிக்கப் பட்ட விண்ணப் பங்களின் எண். | ஒப்புதலளிக்கப் பட்ட விண்ணப் பங்களின் % ஆக | வெளிநின்ற மூலதனம் (ரூ. பில்.) |
| குத்தகை வசதிகள் | 883 | 809 | 91.62 | 3.2 | 122,591 | 116,276 | 94.85 | 33.4 |

(அ) இதே கடன்பெற்றோர் வேறு திட்டங்கள்/ கட்டங்களில் சலுகைகளைப் பெற்றிருக்கலாம்

*மூலம்:* இலங்கை மத்திய வங்கி

**அட்டவணை 21**

**கொவிட்-19இனால் பாதிக்கப்பட்ட கடன்பெற்றோருக்கு வழங்கப்பட்ட சலுகைகள் (அ)** (2021 யூலை 31 அன்று)

| காலம் தாழ்த்திச் செலுத்தும் வசதியின் கட்டங்கள் | உரிமம்பெற்ற வங்கிகள் | | | | வங்கியல்லா நிதியியல் நிறுவனங்கள் | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | பெறப்பட்ட விண்ணப் பங்களின் எண்ணிக்கை | ஒப்புதலளிக்கப் பட்ட விண்ணப் பங்களின் எண். | ஒப்புதலளிக்கப் பட்ட விண்ணப் பங்களின் % ஆக | வெளிநின்ற மூலதனம் (ரூ. பில்.) | பெறப்பட்ட விண்ணப் பங்களின் எண்ணிக்கை | ஒப்புதலளிக்கப் பட்ட விண்ணப் பங்களின் எண். | ஒப்புதலளிக்கப் பட்ட விண்ணப் பங்களின் % ஆக | வெளிநின்ற மூலதனம் (ரூ. பில்.) |
| கொவிட் - 19 (1ஆம் அலை) | 5,919 | 4,258 | 71.94 | 113.9 | 1,441 | 1,389 | 96.39 | 3.6 |
| கொவிட் - 19 (2ஆம் அலை) | 6,903 | 5,961 | 86.35 | 214.0 | 6,485 | 5,792 | 89.31 | 5.6 |
| கொவிட் - 19 (3ஆம் அலை) | 7,318 | 6,351 | 86.79 | 220.1 | 1,266 | 1,080 | 85.31 | 1.8 |

(அ) இதே கடன்பெற்றோர் வேறு திட்டங்கள்/ கட்டங்களில் சலுகைகளைப் பெற்றிருக்கலாம்

*மூலம்:* இலங்கை மத்திய வங்கி

ISBN 978-624-5917-04-4
9 786245 917044
Rs. 200.00

**ISBN 978-624-5917-04-4**

இலங்கை மத்திய வங்கியினால் வெளியிடப்பட்டது